பவானந்தர் கழக வெளியீடு, 3.

பொன்பற்றி காவலர்

புத்தமித்திரனார் இயற்றிய

வீரசோழியம்

மூலமும்

பெருந்தேவனார் இயற்றிய

உரையும்

பதிப்பாசிரியர் :

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,

மாஜித் தலைமைத் தமிழாசிரியர்,

பச்சையப்பன் கல்லூரி உயர்கலாசாலை, சென்னை.

பவானந்தர் கழகம்

வேப்பேரி :: சென்னை

பதிப்புரிமை] 1942 [விலை ரூபா 3

பவானந்தர் கழக ஸ்தாபகர்

திவான் பகதூர் ச. பவானந்தம் பிள்ளையவர்கள்,

I. S. O., O. B. E.,

M. R. A. S. (London), F. R. H. S. (London)

ஓம்

வீரசோழியம்

பாயிரம்

கட்டளைக் கலித்துறை

1. மிக்கவன், போதியின் மேதக்
கிருந்தவன், மெய்த்தவத்தால்
தொக்கவன், யார்க்குந் தொடரவொண்
ணாதவன், தூயனெனத்
தக்கவன் பாதந் தலைமேற்
புனைந்து தமிழுரைக்கப்
புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி
மன்புத்த மித்திரனே.

2. ஆயுங் குணத்தவ லோகிதன்
பக்க லகத்தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய
தண்டமி ழீங்குரைக்க
நீயு முளையோ வெனிற்கரு
டன்சென்ற நீள்விசும்பில்
ஈயும் பறக்கு மிதற்கென்
கொலோசொல்லு மேந்திழையே.

3. நாமே வெழுத்துச்சொ னற்பொருள்
யாப்பலங் காரமெனும்
பாமேவு பஞ்ச வதிகார
மாம்பரப் பைச்சுருக்கித்
தேமே வியதொங்கற் றேர்வீர
சோழன் றிருப்பெயராற்
பூமே லுரைப்பன் வடநூன்
மரபும் புகன்றுகொண்டே.

முதலாவது

எழுத்ததிகாரம்[1]

சந்திப் படலம்[2]

கட்டளைக் கலித்துறை

1. உயிரெழுத்து, ஆய்தவெழுத்து, மெய்யெழுத்து, மூவினமெய்
அறிந்த வெழுத்தம் முன் பன்னிரண் டாவிக ளான; கம்முன்
பிறந்த பதினெட்டு மெய்; நடு வாய்தம்; பெயர்த்திடையா
முறிந்தன யம்முத லாறும்; ஙஞண நமனவென்று
செறிந்தன மெல்லினம்; செப்பாத வல்லினம்; தேமொழியே!

(இதன் பொருள்) *அறிந்த எழுத்து அம்முன் பன்னிரண்டு ஆவிகளான* - அறிந்து சொல்லப்படாநின்றவெழுத்துக்களுக்குள்ளே அகரமுதல் ஔகாரவீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டெழுத்தும் உயிரெழுத்தென்னும் பெயரவாம்; [3]*கம்முன் பிறந்த பதினெட்டு மெய்* - ககரவொற்று முதல் னகரவொற்றீறாகச் சொல்லப்பட்ட பதினெட்டெழுத்தும் மெய்யெழுத்தென்னும் பெயரவாம்: *நடு ஆய்தம்* - உயிரெழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் நடு

---

1. இஃது எழுத்திலக்கணத்தைக் கூறும் அதிகாரம் என்றும்.

2. இது சந்தியைக் கூறும் படலம் என்றும். சந்தி - புணர்ச்சி. ஈண்டுப் படலம் என்றது அதிகாரத்திற்கு உட்பட்ட சிறு பிரிவை. இப் படலத்தில் எழுத்திலக்கணமுங் கூறப்படுகின்றதாயினும், மிகுதியாகக் கூறப்படுவது சந்தியிலக்கணமாகலின், இது சந்திப் படலம் எனப்பட்டது.

3. மெய்யெனினும், உடம்பு எனினும், உறுப்பு எனினும், ஒற்று எனினும் ஒக்கும். மெய்யெழுத்துக்களின் மேலேறி நின்ற அகரம் எழுத்துச் சாரியை. அது மெய்யெழுத்துக்களை உச்சரித்தற் பொருட்டு வந்தது.

வாந் தன்மையாயிருக்கிற அஃகேனம் என்னுந் தனிநிலை எழுத்தானது ஆய்தவெழுத்தென்னும் பெயரதாம்; பெயர்த்து இடையா முறிந்தன ய முதல் ஆறும்-முன் சொன்ன பதினெட்டு மெய்களுக்குள்ளும் ய ர ல வ ழ ளவென்னும் ஆறெழுத்தும் இடையினவெழுத்தென்னும் பெயரவாம்; ங ஞ ண ந ம ன என்று செறிந்தன மெல்லினம் - ங ஞ ண ந ம னவென்னும் ஆறெழுத்தும் மெல்லினவெழுத்தென்னும் பெயரவாம்; செப்பாத வல்லினம் - இவற்றுட்சொல்லாதொழிந்த க ச ட த ப றவென்னும் ஆறெழுத்தும் வல்லினவெழுத்தென்னும் பெயரவாம் (எ-று.)

'தேமொழியே!' என்பது மகடூஉ முன்னிலை. (க)

2. குறில், நெடில், உயிரளபெடை, வர்க்கவெழுத்து, குற்றியலுகரம்

இறுதிமெய் நீங்கிய வீராறி லைந்து குறில்;நெடில்ஏழ்
பெறுவரி யான்;நெடு நீர்மை யளபு; பிணைந்தவர்க்கம்
மறுவறு வல்லோற்று மெல்லோற்று மாம்;வன்மை மேலுகரம்
உறுவது நையுந் தொடர்மொழிப் பின்னு நெடிற்பின்னுமே.

(இ-ள்.) இறுதிமெய் நீங்கிய ஈராறில் ஐந்து குறில் நெடில் ஏழ் பெறுவரியான் - [1]வருக்கங்கடோறும் இறுதியெழுத்து நீங்கலாக மற்றப் பன்னிரண்டு எழுத்துக்களுக்குள்ளும் ஐந்தெழுத்துக் குற்றெழுத்தென்னும் பெயரவாம்; ஏழெழுத்து நெட்டெழுத்தென்னும் பெயரவாம்; [2]நெடு நீர்மை அளபு - உயிரளபெடையானது நெடுஞ்சீர்மையுடைத்து; பிணைந்த வர்க்கம் மறு அறு வல்

1. அவை அ, இ, உ, எ, ஒ எனவும்; ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும்; க, கி, கு, கெ, கொ எனவும்; கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ எனவும் வரும். ஒழிந்த வருக்கங்களிலும் இவ்வாறே கண்டு கொள்க.

2. உயிர் எழுத்துக்களுள் நெட்டெழுத்து எழும் அளபெடுக்கும். அங்ஙனம் அளபெடுக்கையில் ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும், மற்றை நெட்டெழுத்துக்களுக்கு அவற்றவற்றின் குற்றெழுத்துக்களும் அறிகுறியாக அயலில் எழுதப்படும். உயிரளபெடையானது தனிநிலையளபெடை, முதனிலையளபெடை, இடைநிலையளபெடை, இறுதிநிலையளபெடை என நான்கு வகையாம் என ஒருசாராசிரியரும், முதனிலையளபெடை, இடைநிலையளபெடை, இறுதிநிலையளபெடை என மூவகையாம் என ஒருசாராசிரியருங் கூறுவர்.

முதலாவது

எழுத்ததிகாரம்[1]

சந்திப் படலம்[2]

கட்டளைக் கலித்துறை

1. உயிரெழுத்து, ஆய்தவெழுத்து, மெய்யெழுத்து, மூவினமெய்

அறிந்த வெழுத்தம் முன் பன்னிரண் டாவிக ளான;கம் முன்
பிறந்த பதினெட்டு மெய்;நடு வாய்தம்; பெயர்த்திடையா
முறிந்தன யம்முத லாறும்; ஙஞண நமனவென்று
செறிந்தன மெல்லினம்; செப்பாத வல்லினம்; தேமொழியே!

(இதன் பொருள்) *அறிந்த எழுத்து அம்முன் பன்னிரண்டு ஆவிகளான*-அறிந்து சொல்லப்படாநின்றவெழுத்துக்களுக்குள்ளே அகரமுதல் ஔகாரமீறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டெழுத்தும் உயிரெழுத்தென்னும் பெயரவாம்; [3]*கம்முன் பிறந்த பதினெட்டு மெய்* - ககரவொற்று முதல் னகரவொற்றீறாகச் சொல்லப்பட்ட பதினெட்டெழுத்தும் மெய்யெழுத்தென்னும் பெயரவாம்: *நடு ஆய்தம்* - உயிரெழுத்திற்கும் மெய்யெழுத்திற்கும் நடு

---

1. இஃது எழுத்திலக்கணத்தைக் கூறும் அதிகாரம் என்றும்.

2. இது சந்தியைக் கூறும் படலம் என்றும். சந்தி - புணர்ச்சி. ஈண்டுப் படலம் என்றது அதிகாரத்திற்கு உட்பட்ட சிறு பிரிவை. இப் படலத்தில் எழுத்திலக்கணமுங் கூறப்படுகின்றதாயினும், மிகுதியாகக் கூறப்படுவது சந்தியிலக்கணமாகலின், இது சந்திப் படலம் எனப்பட்டது.

3. மெய்யெனினும், உடம்பு எனினும், உறுப்பு எனினும், ஒற்று எனினும் ஒக்கும். மெய்யெழுத்துக்களின் மேலேறி நின்ற அகரம் எழுத்துச் சாரியை. அது மெய்யெழுத்துக்களை உச்சரித்தற் பொருட்டு வந்தது.

வாந் தன்மையாயிருக்கிற அஃகேனம் என்னுந் தனிநிலை எழுத்தானது ஆய்தவெழுத்தென்னும் பெயரதாம்; பெயர்த்து இடையா முறிந்தன ய முதல் ஆறும்-முன் சொன்ன பதினெட்டு மெய்களுக்குள்ளும் ய ர ல வ ழ ளவென்னும் ஆறெழுத்தும் இடையினவெழுத்தென்னும் பெயரவாம்; ங ஞ ண ந ம ன என்று செறிந்தன மெல்லினம் - ங ஞ ண ந ம னவென்னும் ஆறெழுத்தும் மெல்லினவெழுத்தென்னும் பெயரவாம்; செப்பாத வல்லினம் - இவற்றுட்சொல்லாதொழிந்த க ச ட த ப றவென்னும் ஆறெழுத்தும் வல்லினவெழுத்தென்னும் பெயரவாம் (எ-று.)

'தேமொழியே!' என்பது மகடூஉ முன்னிலை. (க)

2. குறில், நெடில், உயிரளபெடை, வர்க்கவெழுத்து, குற்றியலுகரம்

இறுதிமெய் நீங்கிய வீராறி லைந்து குறில்;நெடில்ஏழ்
பெறுவரி யான்;நெடு நீர்மை யளபு; பிணைந்தவர்க்கம்
மறுவறு வல்லோற்று மெல்லோற்று மாம்;வன்மை மேலுகரம்
உறுவது நையுந் தொடர்மொழிப் பின்னு நெடிற்பின்னுமே.

(இ-ள்.) இறுதிமெய் நீங்கிய ஈராறில் ஐந்து குறில் நெடில் ஏழ் பெறுவரியான் - [1]வருக்கங்கடோறும் இறுதியெழுத்து நீங்கலாக மற்றப் பன்னிரண்டு எழுத்துக்களுக்குள்ளும் ஐந்தெழுத்துக் குற்றெழுத்தென்னும் பெயரவாம்; ஏழெழுத்து நெட்டெழுத்தென்னும் பெயரவாம்; [2]நெடு நீர்மை அளபு - உயிரளபெடையானது நெடுஞ்சீர்மையுடைத்து; பிணைந்த வர்க்கம் மறு அறு வல்

1. அவை அ, இ, உ, எ, ஒ எனவும்; ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனவும்; க, கி, கு, கெ, கொ எனவும்; கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ எனவும் வரும். ஒழிந்த வருக்கங்களிலும் இவ்வாறே கண்டு கொள்க.

2. உயிர் எழுத்துக்களுள் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அங்ஙனம் அளபெடுக்கையில் ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும், மற்றை நெட்டெழுத்துக்களுக்கு அவற்றவற்றின் குற்றெழுத்துக்களும் அறிகுறியாக அயலில் எழுதப்படும். உயிரளபெடையானது தனிநிலையளபெடை, முதனிலையளபெடை, இடைநிலையளபெடை, இறுதிநிலையளபெடை என நான்கு வகையாம் என ஒருசாராசிரியரும், முதனிலையளபெடை, இடைநிலையளபெடை, இறுதிநிலையளபெடை என மூவகையாம் என ஒருசாராசிரியருங் கூறுவர்.

லொற்றும் மெல்லொற்றும் ஆம் - வல்லொற்றும் மெல்லொற்றும் இணைந்து வருவது வர்க்கவெழுத்தென்னும் பெயரதாம்; வன்மைமேல் உகரம் உறுவது நையும் தொடர் மொழி[1] பின்னும் நெடில் பின்னுமே - தனி நெடிற்பின்னும் பல எழுத்துக்கள் தொடருமொழிக்கண்ணும் ஈற்றிலே க ச ட த ப ற என்னும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அந்த உகரமானது குறுகிக் குற்றியலுகரம் என்னும் பெயரதாம் (எ-று.) (உ)

3. எழுத்துப் போலி, இறுதி வினு, புள்ளி பெறும் எழுத்துக்கள், சுட்டு, குற்றியலிகரம்

அகரம் வகரத்தி னேடியைந் தௌவாம்; யகரத்தினே
டகர மியைந்தைய தாகும்;ஆ ஏஓ வினுவந்தமாம்;
எகர ஒகரமெய் யிற்புள்ளி மேவும்;அ இஉச்சுட்டாம்;
இகரங் குறுகி வருங்குற் றுகரம்பின் யவ்வரினே.

(இ-ள்.) அகரம் வகரத்தினேடு இயைந்து ஔவாம் - அகரமானது வகரத்தோடுங்கூடி ஔகாரமாம்; யகரத்தினேடு அகர மியைந்து ஐயதாகும் - பின்னும் அகரமானது யகரத்தோடுங் கூடி ஐகாரமாம்; ஆ ஏ ஓ வினு அந்தமாம் - ஆ ஏ ஓ என்னும் மூன்றெழுத்தும் மொழியினது ஈற்றிலே நின்று வினுவெழுத்து என்

---

1. ஈண்டுத் 'தொடர்மொழி' என்றது இரண்டின் மிக்க எழுத்துக்களையுடைய மொழியை. இஃது இரண்டின் மிக்கவை பல என்னும் வடமொழி நடை பற்றியது. ஒன்றின் மிக்கவை பல என்பது தமிழ்நடை என்க. குற்றியலுகரத்தைப் பற்றி,

"நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே."

(தொல். எழுத்து. மொழிமரபு, சூ. 3.)

என ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறியது காண்க.

குற்றியலுகரம் ஈற்றுக்கு அயலெழுத்தை நோக்கி, நெடிற்றெடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், வன்றெடர், மென்றெடர், இடைத்தொடர் என அறுவகையாம்.

மூவின மெய்யையும் ஒற்றென்னும் ஒரு வகையினடக்கிக் குற்றியலுகரம் நான்கு வகையாம் என்பாரும் உளர்.

னும் பெயரவாம்; ஏகரம் ஒகரம் மெய்யில் புள்ளி மேவும் - எ ஒகரங்களும், மெய்கள் பதினெட்டும் மேலே புள்ளி பெற்ற புள்ளியெழுத்தென்னும் பெயரவாம்; அ இ உ சுட்டாம் - அ இ உ என்னும் மூன்றெழுத்தும் மொழிக்கு முதலிலே சுட்டெழுத் தென்னும் பெயரவாம்; இகரம் குறுகி வரும் குற்றுகரம் பின் யவ் வரினே - குற்றியலுகரத்தின் பின்னர் யகரம் வந்து புணர்ந்தால் இகரமாம்; அந்த இகரமானது குறுகிக் குற்றியலிகரம் என்னும் பெயரதாம் (எ-று.)

4. சொன்முன்வரும் வினு, எழுத்துக்கள் பிறக்கும் ஒலி முயற்சியின் வகை, இடைநிலை மயக்கம்

ஏயாஎச் சொன்முன் வினு;எடுத் தல்படுத் தல்நலிதல்
ஓயா துரப்பல் எனநால் வகையிற் பிறக்குமெய்கள்
சாயா மயக்கந்தம் முன்னர்ப் பிறவொடு தாமும்வந்து
வீயாத ஈரோற்று மூவோற் றுடனிலை வேண்டுவரே.

(இ-ள். ஏ யா எ சொல் முன் வினு - எகர ஏகாரங்களும் யாவும் மொழியினது முதலிலே நின்றவினுவெழுத்தென்னும் பெயரவாம்; எடுத்தல் படுத்தல் நலிதல் ஓயாது உரப்பல் என நால்வகையில் பிறக்கும் மெய்கள் சாயா மயக்கம் தம் முன்னர் பிறவொடு தாமும் வந்து வீயாத ஈரொற்று மூவொற்று உடனிலை வேண்டுவரே - எடுத்தும் படுத்தும் நலிந்தும் உரப்பியுஞ் சொல்லுதலாகிய நால்வகையினுலேயும் பிறக்குமெழுத்துக்களானவை[1] தம் முன்னர்த் தாம் வந்து மயங்கியும் தம்முன்னர்ப் பிறவெழுத்துக்கள் வந்து மயங்கியும் ஈரொற்றுடனிலையாயும் மூவொற்றுடனிலையாயும் வரப்பெறும் என்று சொல்லுவர்கள் மேலாகிய புலவர்கள் (எ-று.)

---

1. மெய்கள் தம்முன் தாம் வந்து மயங்குதல் உடனிலைமெய்ம் மயக்கம் எனப்படும்; தம்முன் பிற வந்து மயங்குதல் வேற்றுநிலைமெய்ம் மயக்கம் எனப்படும். ஈண்டு ஈரொற்றுடனிலையாயும், மூவொற்றுடனிலை யாயும் என்றவற்றிற்கு ஈரொற்று ஒன்று கூடியும், மூவொற்று ஒன்று கூடியும் என்பன பொருள்.

சக்கிரி, அண்ணம், அல்லி—உடனிலை
கற்க, கங்கன், தெவ்யாது—வேற்றுநிலை } ஈரொற்று

வேய்ங்குழல், பாழ்ங்கிணறு—வேற்றுநிலை
வேய்க்குறை, வேர்க்குறை—இவை இருநிலை
யானும் மயங்கின } மூவொற்று

5. மாத்திரையும், பின் வரும் உயிர் ஒற்றுடன் கூடும் என்பதும்

குற்றெழுத் தொன்(று);ஒன் றரையாகு மையௌ இரண்டுநெடில்;
ஒற்றெழுத் தாய்தமிஇ உஅரை; மூன்றள(பு); ஓங்குயிர்மெய்
மற்றெழுத் தன்றுயிர் மாத்திரை யேபெறும்; மன்னுகின்ற
ஒற்றெழுத் தின்பின் னுயிர்வரின் ஏறும் ஒளியிழையே!

(இ-ள்.) குற்றெழுத்து ஒன்று - குற்றெழுத்தொரு மாத்திரை பெறும்; ஒன்றரையாகும் ஐ ஔ - ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஒன்றரை மாத்திரை பெறும்; இரண்டு நெடில் - நெட்டெழுத்து இரண்டுமாத்திரை பெறும்; ஒற்றெழுத்து ஆய்தம் இ உ அரை - ஒற்றெழுத்தும் ஆய்தவெழுத்தும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆகிய நான்கும் ஒவ்வொன்று அரை மாத்திரை பெறும்; மூன்று அளபு - உயிரளபெடையானது மூன்று மாத்திரை பெறும்;ஓங்கு உயிர்மெய் மற்றெழுத்துஅன்று உயிர் மாத்திரையே பெறும் - உயிர்மெய்யெழுத்தானது வேறேயெழுத்தன்று, உயிர் மாத்திரையே பெறும் (ஏறிய உயிரினளவே உயிர்மெய்க்கும் அளவெனக் கொள்க.); மன்னுகின்ற ஒற்றெழுத்தின் பின் உயிர் வரின் ஏறும் - நிலைமொழியினது ஈற்றொற்றின் பின்னர் வருமொழி உயிர் முதலாகிய மொழி வந்து புணர்ந்தால் வந்த உயிரானது ஒற்றின் மேலேறி நடக்கும் (எ - று.)

'ஒளியிழையே!' என்பது மகடூஉ முன்னிலை. (ரு)

6. எழுத்துக்கள் பிறத்தற்குக் காரணமாகிய இடமும் முயற்சியும்

உந்தி முதலெழுங் காற்றுப் பிறந்துர முஞ்சிரமும்
பந்த மலிகண் டமுமூக்கும் உற்றண்ணம் பல்லுடனே
முந்து மிதழ்நா மொழியுறுப் பாகு முயற்சியினால்
வந்து நிகழு மெழுத்தென்று சொல்லுவர் வாணுதலே!

(இ-ள்.) நாபிக் கமலத்தினின்று எழாநின்ற வாயுவானது மார்பின் இடமாகவும் சிரத்தின் இடமாகவும் கண்டத்தின் இடமாகவும் மூக்கின் இடமாகவும் பொருந்தி வெளியே புறப்படும்போது அண்ணம், பல், இதழ், நாவென்று சொல்லப்படாநின்ற அவயவங்களின் முயற்சியினால் வெவ்வேறெழுத்தொலியாய்ப் பிறக்குமென்று சொல்லுவர் மேலாகிய புலவர் (எ-று.)

'வாணுதலே!' என்பது மகடூஉ முன்னிலை. (சா)

இவற்றுள் உரத்தை வல்லினமும், சிரத்தை ஆய்தமும், கண்டத்தை உயிரும் இடையினமும், மூக்கை மெல்லினமும் பொருந்துமெனக்கொள்க. முயற்சியுள் ஒரெழுத்திற்குப் பல முயற்சியுளவாதலின், எழுத்தெழுத்தாய் முயற்சி கூறின் ஈண்டுப் பெருகும் என விடுத்தனம் என்க.

7. முதனிலை (மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள்)

ஆவி யனைத்துங் கசத நபமவ் வரியும்வவ்வில்
ஏவிய எட்டும்யவ் வாறும்ஞந் நான்கும்எல் லாவுலகும்
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரரா சேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுதல் நன்னுதலே!

(இ - ள்) உயிரெழுத்துப் பன்னிரண்டும், ககார சகார தகார நகார பகார மகார வர்க்கங்களும், வகார வர்க்கத்தில் உ ஊ ஒ ஓ அல்லாத எட்டெழுத்தும், யகார வர்க்கத்தில் அ ஆ உ ஊ ஒ ஔவாகிய ஆறெழுத்தும், ஞகார வர்க்கத்தில் அ ஆ எ ஒ ஆகிய நான்கெழுத்தும் ஆகிய இவையனைத்தும் எல்லா உலகுந் தன் வெண் கொற்றக்குடை நிழற்கீழ் ஆளாநின்ற வீரசோழ மகாராசாவினுடைய நாவினிடமாகச் சொல்லப்பட்ட செந்தமிட்சொல்லுக்கு மொழிக்கு முதலாகிய எழுத்துக்களாம் (எ-று.)

'நன்னுதலே!' என்பது மகடூஉ முன்னிலை. (எ)

8. இறுதிநிலை (மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள்)

ஈறும் மகர ணகரங்க டாமும் இடையினத்தில்
ஏறும் வகாம் ஒழிந்தைந்தும் ஈரைந் தெழிலுயிரும்
வீறு மலிவேங் கடங்கும ரிக்கிடை மேவிறறென்று
கூறுந் தமிழினுக் கீற்றெழுத் தாமென்பர் கோல்வளையே!

(இ-ள்.) பதினெட்டாமெய்யாகிய னகரவொற்றும், மகார ணகாரவொற்றுக்களும், இடையினவெழுத்தில் வகர ஒற்றொழிந்த மற்ற ஐந்தொற்றும், உயிரெழுத்துக்களுள் எகர ஒகர மொழிந்த மற்றப் பத்தெழுத்தும் ஆகிய இவையனைத்தும் குண கடல் குமரி குடகம் வேங்கடம் என்னும் இந்நான்கு எல்லைக்குள்ளும் வழங்காநின்ற செந்தமிட்சொல்லுக்கு மொழிக்கீறாகிய எழுத்துக்களாம் (எ-று.)

'கோல்வளையே!' என்பது மகடூஉ முன்னிலை. (அ)

9. இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

நின்றசொல் லீறும் வருஞ்சொன் முதலும் நிரவித்தம்முள்
ஒன்றிடும் போதும் ஒரோமொழிக் கண்ணு முலகிற்கொப்பி
னன்றிய மும்மை விகாரம்வந் தெய்திடுமே; நன்கியல்பிற்
குன்றுத லின்றி வருதலு முண்டென்று கூறுவரே.

(இ-ள்) நின்ற சொல்லீறும் வருஞ்சொன்முதலும் நிரவித் தம்முள் ஒன்றிடும் போதும் ஒரோ மொழிக்கண்ணும் உலகிற்கொப்பினன்றிய மும்மை விகாரம் வந்தெய்திடும் - நிலைமொழியினது ஈறும் வருமொழியினது முதலும் ஒன்றோடொன்று கலந்து புணருமிடத்தும் ஒரோவிடத்துத் தனிமொழிக்கண்ணும் உலகத்துக்கு ஒப்பாகத் தோன்றல் திரிதல் கெடுதல் என்னு மூன்று விகாரம் வரப்பெறும்; நன்கியல்பிற் குன்றுதலின்றி வருதலும் உண்டென்று கூறுவர்-ஒரோவிடத்து விகாரப்பாடில்லாமல் நிலைமொழியினதீறும் வருமொழியினது முதலும் திரியாமல் இயல்பாய் முடிதலும் உண்டென்று சொல்லுவர் மேலாகிய புலவர் (எ-று.) (௯)

10. வடமொழிக்கண் வரும் விகாரப் புணர்ச்சி

ஆன்று முலோபத்தோ டாகம மாதேச மாரியத்துள்
மூன்று மொழியோ டெழுத்து விகாரம் முதனடுவீ
றேன்றும் வகையொன்ப தாகலு முண்(டு); அவை யெவ்விடத்துந்
தோன்று வுலகத் தவர்க்கொத்த போதன்றித் தூமொழியே!

(இ-ள்) ஆன்றும் உலோபத்தொடு ஆகமம் ஆதேசம் ஆரியத்துள் மூன்றும் மொழியொடு எழுத்து விகாரம் - வடமொழிக்கண் ஒரு சொல்லினிடமாகவும் ஒரெழுத்தினிடமாகவும் [1]உலோபம் என்றும் ஆகமம் என்றும் ஆதேசம் என்றும் மூன்று விகாரம் வரப்பெறும்; முதல் நடு ஈறு ஏன்றும் வகையொன்பது ஆகலும் உண்டு - பின்னும் விகாரங்களானவை மொழியினது முதலிலேயும் மொழியினதிடையிலேயும் மொழியினது கடையிலேயும் என மும்மூன்றாக விகற்பிக்க ஒன்பது விகாரமாம்; எழுத்தினு மொழியினு மாகப் பதினெட்டாம். அவை யெவ்விடத்தும் தோன்று வுலகத்தவர்க்கொத்த போதன்றி - பின்னும் விகாரங்களானவை உலகத்தார்க்கொத்த போதன்றி மற்றெவ்விடத்தும் வரப்பெறா எனக் கொள்க (எ-று.)

'தூமொழியே!' என்பது மகடூஉ முன்னிலை. (௧௦)

1. உலோபம் - கெடுதல், ஆகமம் - தோன்றல், ஆதேசம் - திரிதல்.

11. வடமொழியில் எதிர்மறைப் பொருளில் வரும் நகாரமும், ஏ, ஓ என்பவற்றின் திரிபும்.

சொன்ன மொழிப்பொரு ணீக்கு நகாரம்;அச் சொன்முன்மெய்யேல்
அந்நிலை யாக வுடல்கெடும்; ஆவிமுன் ஞகிலது
தன்னிலை மாற்றிடும்; ஏஓ இரண்டும் தனிமொழிமுன்
மன்னிய ஐஔவு மாகும் வடமொழி வாசகத்தே.

(இ-ள்.) *சொன்ன மொழிப் பொருள் நீக்கும் நகாரம் - வடமொழிக்கண் ஒரு சொல்லிற்குரித்தாகிய பொருளை நீக்குதற் பொருட்டாக அச்சொல்லின் முன்னர் ஒரு நகாரம் வரப்பெறும்;* [1] *அச்சொல் முன் மெய்யேல் அந்நிலையாக உடல் கெடும் - பின்னுமந்தச் சொல்லானது மெய்ம்முதன்மொழியாகில் அச்சொல்லின் முன் நகாரத்தின் மேனின்ற உயிர் நிற்க உடல்கெடும்;* [2] *ஆவி முன் ஞகில் அது தன் நிலை மாற்றிடும் - பின்னுமந்தச் சொன்ன சொல்லானது உயிர் முதன்மொழியாகில் அச்சொல்லின் முன் நின்ற நகாரத்தின் மேனின்ற உயிர் பிரிந்து தன்னிலையை மாற்றி உயிர் முன்னும் ஒற்றுப் பின்னுமாக நிற்கும்; ஏஓ இரண்டும் தனிமொழி முன் மன்னிய ஐஔவும் ஆகும் வடமொழி வாசகத்தே - மொழி முதற்கணின்ற ஏகார ஓகாரங்களிரண்டும் தமிழில் வரும்போது ஐகார ஔகாரங்களாகவும் வரும்* (எ-று.) (கக)

12. வடமொழிச் சந்தி

ஆவும் அகரக் கிகரத்துக் கையும்ஔ வும்உகரக்
கேவும் இருவினுக் காரும் விருத்தி; எழிலுகரக்
கோவும் இக்ரத்திற் கேயுங் குணமென் றுரைப்ப;வந்து
தாவும் இவைதத்தி தத்தினுந் தாதுப் பெயரினுமே.

---

1. *ந + நாதன் = அநாதன்*

இதில் எதிர்மறைப் பொருள் தர வந்த நகரத்தின் மெய் கெட்டு அகர உயிர் நின்றது.

2. *ந + உசிதன் = அநுசிதன்*

இதில் எதிர்மறைப் பொருள் தரவந்த நகரத்தினின்று அகர உயிர் பிரிந்து முன்னிற்க, நகரமெய் அதன் பின் நின்றது. வந்த உயிர் அம்மெய் யுடன் கூடிற்று.

(இ-ள்.) ஆவும் அகரக்கு இகரத்துக்கு ஐயும் ஔவும் உகரக்கு ஏவும் இருவினுக்கு ஆரும் விருத்தி - [1]அகரத்திற்கு ஆகாரமும் இகரத்திற்கு ஐகாரமும் உகரத்திற்கு ஔகாரமும் இருவென்பதற்கு ஆரென்பதும் ஆதேசமாய் வந்து விருத்தியெனப்படும்; எழில் உகரக்கு ஓவும் இகரத்திற்கு ஏயுங் குணம் என்றுஉரைப்ப-[2]உகரத்திற்கு ஓகாரமும் இகரத்திற்கு ஏகாரமும் ஆதேசமாய் வந்து குணமெனப்படும் என்று சொல்லுவர் மேலாகிய புலவர்; வந்து தாவும் இவை தத்திதத்தினும் தாதுப் பெயரினுமே - இந்த விருத்தியுங் குணமுந் தத்திதப்பெயர் முடிக்கும் இடத்தும் தாதுப் பெயர் முடிக்கும் இடத்தும் வரப்பெறும் (எ-று.) (கஉ)

13. (தமிழ்ச் சந்தி) உயிர்முன் உயிர் வருதலும், சில நிலைமொழிகளின் ஈறழிதலும்

மூன்றோடு நான்கோன்ப தாமுயிர்ப் பின்னுயிர் முந்தினடு
ஆன்ற யகாரம்வந் தாகம மாகும்;அல் லாவுயிருக்
கேன்ற வகாரம்;எட் டேற்கும் இரண்டும்; இறுதிகெட்டுத்
தோன்று நிலையும் ஒரோவிடத் தாமென்பர் தூமொழியே!

---

1. விருத்தி சந்தி

(i) தத்திதம்:—

தசரதன் பிள்ளை = தாசரதி-அ, ஆவாயிற்று. விதர்ப்ப நாட்டரசன் = வைதர்ப்பன் - இ, ஐயாயிற்று. குசிகன் மரபிற் பிறந்தவன் = கௌசிகன் - உ, ஔவாயிற்று. மிருகண்டுவின் பிள்ளை = மார்க்கண்டேயன் - இரு, ஆர் ஆயிற்று.

(ii) தாதுப் பெயர்:—

தாதுப் பெயர் - தொழிற்பெயர்
வஸ் = வாஸம்-அ, ஆவாயிற்று
இஷ = ஐஷ - இ, ஐயாயிற்று
கிரு = காரியம் - இரு, ஆர்ஆயிற்று

வாசம் - வசித்தல்; ஐஷ - விருப்பம்; காரியம் - செயல்

2. குண சந்தி

தாதுப் பெயர்:—

புத் = போதம் - உ, ஓவாயிற்று. போதம் - அறிவு
பிரவிஶ் = பிரவேசம் - இ, ஏயாயிற்று.

(இ-ள்.) மூன்றொடு நான்கு ஒன்பது ஆம் உயிர்பின் உயிர் முந்தின் நடு ஆன்ற யகாரம் வந்து ஆகமமாகும் - [1]இகர ஈகார ஐகார உயிரீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர், வருமொழி உயிர்முதலாகிய மொழி வந்து புணர்ந்தால், இடையே யகரவொற்று வந்து ஆகமமாம்; அல்லா உயிருக்கு ஏன்ற வகாரம் - [2]இவையல்லாத மற்ற உயிரீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி உயிர் முதலாகிய மொழி வந்து புணர்ந்தால் இடையே வகரவொற்று வந்து ஆகமமாம்; எட்டு ஏற்கும் இரண்டும் - [3]ஏகாரவீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி உயிர் முதலாகிய மொழி வந்து புணர்ந்தால் யகார வகாரவொற்றுக்கள் இரண்டும் வந்து ஆகமமாம்; இறுதி கெட்டு தோன்றும் நிலையும் ஒரோவிடத்து ஆம் என்பர்-[4]ஒரோவிடத்து நிலைமொழியினது ஈற்றின் நின்ற பதமாதல்,

1. மணி + அழகிது = மணியழகிது.
நீ + அறி = நீயறி.
பனை + ஓலை = பனையோலை
2. பல + அணி = பலவணி
பலா + அது = பலாவது.
கொடு + என்றான் = கொடுவென்றான்.
பூ + அழகிது = பூவழகிது.
நொ + அது = நொவ்வது.
கோ + அழகு = கோவழகு
3. ஏ + எறிந்தான் = ஏவெறிந்தான்.
அவனே + அறிந்தான் = அவனேயறிந்தான்.
சே + அடி = சேயடி, சேவடி
4. ஒருபது + ஆன் + ஒன்று = ஒருபானொன்று-இதில் நிலைமொழி ஈற்றுப் பதங் கெட்டது.
வாழிய + சாத்தா = வாழி சாத்தா-இதில் நிலைமொழி ஈற்றுயிர் மெய் கெட்டது.
பனை + காய் = பனங்காய்—நிலைமொழி ஈற்றுயிர் கெட்டது.
மரம் + அடி = மரவடி—நிலைமொழி ஈற்று ஒற்றுக் கெட்டது.

இவற்றுக்குச் செய்யுள் விகாரங்களை உதாரணமாகக் காட்டுதல் ஆகாது; அவை செய்யுள் நோக்கி வருதலாலும், சந்தி காரியம் பண்ணப் படுவன அல்லவாதலாலும் என்க.

மரூஉ மொழிகளை உதாரணமாகக் காட்டுதலுமாகாது; அவை சந்தி காரியம் பண்ணப்படுவன அல்லவாகலின் என்க.

உயிர்மெய்யாதல், உயிராதல், ஒற்றுதல் அழிந்து சந்தி காரியம் பண்ணப்படும் என்று சொல்லுவர் மேலாகிய புலவர் (எ-று.)

'தூமொழியே!' என்பது மகடூஉ முன்னிலை. (கங)

14. ணகர மெய்யின் முன் தகர நகரம் புணர்தலும், குற்றொற்றின் பின் உயிர் புணர்தலும், ய ர ழ ஒற்றின் முன் வல்லினம் புணர்தலும்

ஆறு முடலின்பின் தவ்வரின் ஆங்கதைந் தாமுடலாம்;
கூறுர்ந்த நவ்வரின் முன்பின தாம்;குறிற் பின்புமெய்கள்
ஏறு வுயிர்பின் வரவிரண் டாகும்;யவ் வோடுரழ
ஈறு வரில்வன்மை பின்பில்வர்க் கத்தோற் றிடைப்படுமே.

(இ-ள்.) ஆறும் உடலின் பின் தவரின் ஆங்கது ஐந்தாம் உடலாம் - [1] ணகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால் வந்த தகாரமானது டகாரமாம்; கூறுர்ந்த நவரின் முன்பினதாம் - ணகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் நகாரம் வந்து புணர்ந்தால் வந்த நகாரமும் ணகாரமாம்; [2] குறில் பின்பு மெய்கள் ஏறு உயிர் பின் வர இரண்டாகும் - குற்றெழுத்தின் பின்னின்ற ஒற்றுக்களானவை வருமொழி உயிர் முதலாகிய மொழி வந்து புணர்ந்தால், இடையே அவ்வொற்று இரட்டித்து நிற்கும்; யவ்வோடு ரழ ஈறு வரில் வன்மை பின்பில் வர்க்கத்து ஒற்று இடைப்படுமே - [3] யகார ரகார ழகார ஒற்று ஈற்று நிலை

---

1. மண் + தீது = மண்டீது.
மண் + நன்று = மண்ணன்று.
2. கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.
பொன் + அழகிது = பொன்னழகிது.
3. நாய் + கால் = நாய்க்கால்
தேர் + தலை = தேர்த்தலை
பூழ் + செவி = பூழ்ச்செவி
} வல்லொற்று மிக்கன.

ஈண்டு 'வருக்க ஒற்று' என்றது, வல்லினத்துக்கு இனமாகிய மெல்லொற்றை.

ஈர் + கோதை = ஈர்ங்கோதை—மெல்லொற்று மிக்கது.
வேய் + குழல் = வேய்க்குழல்
வேய்ங்குழல்
ஆர் + கோடு = ஆர்க்கோடு
ஆர்ங்கோடு
} உறழ்ச்சி

மொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், இடையே [1]. அவ்வவ்வந்த வல்லொற்றும் வல்லின வருக்கவொற்றும் மிக்கு முடியும் (எ-று.) (கச)

15. இ, ஈ, ஐ என்பவற்றுடன் நகரம் புணர்தலும், ழகர ளகர மெய்களுடன் தகரம் புணர்தலும்

நான்கொடு மூன்றோன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமேல்
ஏன்ற ஞகாரம தாகும்; பதினைந்தோ(டு) எண்ணிரண்டாய்த்
தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண் டுந்தொடர்பால்
ஆன்றவைந் தாமுடல் ஆம்;முன்பி லொற்றுக் கழிவுமுண்டே.

(இ-ள்.) நான்கொடு மூன்று ஒன்பதாம் உயிரின் பின்பு நவருமேல் ஏன்ற ஞகாரமதாகும் - [2] இகர ஈகார ஐகார உயிரீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் நகரம் வந்து புணர்ந்தால், வந்த நகாரமானது ஞகாரமாம்; [3] பதினைந்தொடு எண்ணிரண்டாய் தோன்று உடல் பின்னர் தகாரம் வரின் இரண்டும் தொடர்பால் ஆன்ற ஐந்தாம் உடலாம் - ழகார ளகார ஒற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால், நிலைமொழியீறும் வருமொழி முதலும் திரிந்து தனித்தனி இரண்டும் டகாரமாம்; [4]முன்பில் ஒற்றுக்கு

---

1. 'வல்லொற்றும் வல்லின வருக்க ஒற்றும் மிக்கு முடியும்' என்பதற்கு, வல்லொற்று மிக்கு முடியும், மெல்லொற்று மிக்கு முடியும், வல்லொற்றும் மெல்லொற்றும் உறழ்ந்து மிக்கு முடியும் என்று பொருள் கொள்க.

2. கவி + நன்று = கவி ஞன்று.
தீ + நன்று = தீ ஞன்று.
பனை + நன்று = பனை ஞன்று.
(இம்மூன்று உதாரணங்களும் வேறு பிரதியிலுள்ளவை)

'செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே!'
(அப்பர் தேவாரம் - கோயில் திருவிருத்தம்—5-ஆம் பாடல்)

3. பாழ் + தீமை = பாட்டீமை
நாள் + தீமை = நாட்டீமை } நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் டகரமாகத் திரிந்தன

4. பாழ் + தீமை = பாடீமை
நாள் + தீமை = நாடீமை } நிலைமொழி ஈறு கெட்டது.
(பாட்டீமை முதலிய நான்கும் வேறு பிரதியில் உள்ள உதாரணம்)

அழிவுமுண்டே - பின்னும் அவ்விலக்கணத்துள் நிலைமொழி ஈற்றிற்கு அழிவுமுண்டு (எ-று.) (கரு)

16. ளகரமெய் வல்லினத்தோடும் நகர மகரங்களோடும் புணர்தலும், தனி நெடிற்பின் வரும் ளகரமெய் தகரத்தோடு புணர்தலும்

எண்ணிரண் டாமொற்று வன்மைவந் தாற்பின் பியைந்தவைந்தா
நண்ணிய வொற்றும். நகரம் வரின்முன்மெய் ணவ்வதுவாம்;
தண்ணிய மவ்வந் திடினு மஃதே; தனிநெடிற்பின்
பண்ணிய வொற்றுப்பின் றன்வரப் போமொரு காற்பயின்றே.

(இ-ள்.) எண்ணிரண்டாம் ஒற்று வன்மை வந்தால் பின்பு இயைந்த ஐந்தா நண்ணிய ஒற்றும் - [1]ளகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், அந்த ளகாரமானது டகாரமாம்;[2] நகரம் வரின் முன் மெய் ணவ்வதுவாம் - ளகர வொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் நகாரம் வந்து புணர்ந்தால், அந்த ளகாரமானது ணகாரமாம்; தண்ணிய மவ்வந்திடினும் அஃதே - [3]ளகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் மகாரம் வந்து புணர்ந்தால், அந்த ளகாரமானது ணகாரமாம்; தனி நெடில் பின் பண்ணிய ஒற்றுப் பின் [4] தான் வரப் போம் ஒருகால் பயின்றே - [5]தனி நெடிற்கீழ் நின்ற ளகரவொற்றின் பின்னர் வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால், ஆதேசமான டகாரங்களுள் தனிநெடிற்கீழ் வந்த டகாரம் கெடும் (எ-று.)

17. லகரமெய் நகரத்தோடும் யகரத்தோடும் வல்லினத்தோடும் புணர்தலும், யகரமெய் நகரத்தோடு புணர்தலும்

பன்மூன்ற தாமுடல் நப்பின் வருமெனி னீறெழுத்தாம்;
பன்னேழ தாம்வன்மை பின்வரின்; ஆயிடைத் தவ்வுமஃதாம்;

---

1. முள் + குறை = முட்குறை
2. முள் + நன்மை = முண்ணன்மை
[முள் + நன்று = முண்ணன்று.
3. முள் + முனை = முண்முனை]
முள் + மடிந்தது = முண்மடிந்தது.
4. ஈண்டு, 'தவ்வர' என்றிருப்பின் பொருள் பொருந்தும்
5. வாள் + தீது = வாடீது.
வேள் + தீயன் = வேடீயன்.

பின்னு மிகார மதுபன்னொன் றுமுடல் பின்வருமேல்;
சொன்னா ரியவின்பின் றோன்று நகார ஞகாரமென்றே.

(இ-ள்.) பன்மூன்றதாம் உடல் நபின் வருமெனின் ஈற்றெழுத்தாம் - [1]லகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் நகாரம் வந்து புணர்ந்தால், அந்த லகாரமானது னகாரமாம்; பன்னேழதாம் வன்மை பின்வரின் - [2]வருமொழிமுதல் வல்லினம் வந்து புணர்ந்தால் அந்த லகாரமானது றகாரமாம்; ஆயிடை தவ்வுமஃதாம் - [3]புணர்ந்த வல்லினம் தகாரமாயின் வந்த தகாரமும் றகாரமேயாம்; பின்னும் இகாரமது பன்னொன்றும் உடல் பின் வருமேல் - [4]லகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் யகாரம் வந்து புணர்ந்தால், இடையே ஓர் இகரம் வரப்பெறும்; சொன்னார் இயவின் பின் தோன்றும் நகாரம் ஞகாரமென்றே - [5]யகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் நகாரம் வந்து புணர்ந்தால், வந்த நகாரமானது ஞகாரமாம் என்று சொல்லுவர் புலவர் (எ-று.) (கள)

18. ழகரமெய் வல்லினத்தோடும் நகரத்தோடும் மகரத்தோடும் புணர்தலும். இயல்பு சந்தியும்

ஐம்மூன்ற தாமுடல் வன்மைபின் வந்திடில் ஆறொடைந்தாம்
மெய்ம்மாண்ப தாம்;நவ் வரின்முன் னழிந்துபின் மிக்கணவ்வாம்;
மம்மேல் வரினிரு மூன்று முடல்;மற் றியல்புசந்தி
தம்மா சகலங் கிடப்பின்க ளாமென்ப தாழ்குழலே!

(இ-ள்.) ஐம்மூன்றதாம் உடல் வன்மை பின் வந்திடில் ஆறொடு ஐந்தாம் மெய் மாண்பதாம் - [6]ழகாரவொற்றீற்று நிலைமொழிப்

---

1. கல் + நன்று = கன்னன்று.
   கல் + நன்மை = கன்னன்மை
2. கல் + குறை = கற்குறை
3. கல் + தீது = கற்றீது.
   கல் + தீமை = கற்றீமை
4. வேல் + யாது = வேலியாது (வேறு பிரதியில் உள்ள உதாரணம்)
5. செய் + நின்ற = செய்ஞ்ஞின்ற } முன்காட்டிய அப்பர் தேவாரம்
   நெய் + நின்ற = நெய்ஞ்ஞின்ற }
6. பாழ் + செய் = பாண்செய் (வேறு பிரதியிலுள்ள உதாரணம்)
   தமிழ் + சொல் = தமிட்சொல் (இந்நூல் செ. 7.)

பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், அந்த ழகாரமானது ணகாரமும் டகாரமுமாம்; நவரின் முன்னழிந்து பின் மிக்க ணவ்வாம் - [1]வருமொழி முதல் நகாரம் வந்து புணர்ந்தால், அந்த ழகாரமானது கெட்டு வந்த நகாரம் ணகாரமாம்; மமேல் வரின் இரு மூன்றும் உடல் - [2] வருமொழிமுதல் மகாரம் வந்து புணர்ந்தால், அந்த ழகாரமானது ணகாரமாம்; [3]மற்றியல்பு சந்தி தம் மாசகலங்கிடப்பின்களாம் என்ப - இயல்பு சந்தியாவன தத்தங்கிடப்பிலே கிடக்கும் என்று சொல்லுவர் மேன்மையுடைய புலவர் (எ-று.)

'தாழ்குழலே!' என்பது மகடூஉ முன்னிலை. (கஅ)

19. மகரமெய் வல்லின மெல்லினங்களோடு புணர்தலும், அது வகரம் வரக் குறுகுதலும், வகரமெய் தகரத்தோடு புணர்தலும்

வன்மைவந் தாற்பின்பு பத்தா முடல்வன்மை யின்வருக்கத்
தன்மையொற் றாகும்; ஞநமக்கள் பின்வரிற் சாற்றுமப்போம்;
முன்வயிற் கால்வவ் வரின்;பதின் மூன்று முடலழியும்
பின்வயின் தவ்வரின் தவ்வுங் கடைவன்மைப் பேறுறுமே.

(இ-ள்.) வன்மை வந்தால் பின்பு பத்தாம் உடல் வன்மையின் வருக்கத் தன்மையொற்றாகும் - [4]மகரவொற்றீற்று நிலைமொழிப்

1. பாழ் + நன்று = பாணன்று.
2. பாழ் + மேலது = பாண்மேலது.
(இவை வேறு பிரதியில் உள்ள உதாரணம்)
முகிழ் + முலை = முகிண்முலை
3. பொன் + மலை = பொன்மலை
புகழ் + அழகிது = புகழழகிது.
4. மரம் + குரங்கு = மரக்குரங்கு
மரம் + செப்பு = மரச்செப்பு
மரம் + தறி = மரத்தறி
மரம் + பாவை = மரப்பாவை
மரம் + குறிது = மரங்குறிது.
மரம் + சிறிது = மரஞ்சிறிது.
மரம் + தண்ணிது = மரந்தண்ணிது.
(இவை வேறு பிரதியில் உள்ள உதாரணங்கள்.)
குளம் + கரை = குளக்கரை, குளங்கரை
என வரும் உறழ்ச்சி முடிபுங் கொள்க.

பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், அந்த மகரமானது அவ்வவ்வந்த வல்லொற்றும் வல்லின வர்க்க ஒற்றுமாம்; ஞ ந மக்கள் பின் வரில் சாற்று ம போம் - [1]வருமொழி முதல் ஞ ந மக்கள் வந்து புணர்ந்தால், அந்த மகார மானது கெடும்; முன் வயின் கால் வ வரின் - [2]வருமொழி முதல் வகரம் வந்து புணர்ந்தால், அந்த மகரமானது குறுகிக் கால் மாத்திரையாய் உட்புள்ளி பெறும்; பதின்மூன்றும் உடல் அழியும் பின் வயின் த வரின் தவ்வும் கடைவன்மை பேறுறுமே - [3]லகார ஒற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால், அந்த லகாரமானது கெட்டு வந்த தகாரமும் றகாரமாகப் பெறும் (எ-று.) (கக)

20. னகரமெய் நகரத்தோடும் தகரத்தோடும் புணர்தலும், உயிர் வல்லினத்தோடு புணர்தலும்

ஈற்றின்பின் நவ்வரி னீற்றெழுத் தாம்;எழில் தவ்வரில்தவ்
வேற்றுப் பதினேழ தாமுட லாம்;எய்தும் ஆவியின்பின்
ஆற்றுந் திறல்வல் லினம்வந் திடிலவற் றின்வருக்கம்
போற்று மிவையென்ற வல்லோற்று மெல்லோற்றும் புக்கிடுமே.

(இ-ள்.) ஈற்றின் பின் ந வரின் ஈற்றெழுத்தாம் - [4]னகர ஒற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் நகாரம் வந்து புணர்ந்தால், வந்த நகாரமும் அப்பதினெட்டாம் உடலாகிய னகாரமாம்; எழில் த வரில் த வேற்றுப் பதினேழதாம்

---

1. தாம் + ஞாலத்தார் = தாஞாலத்தார்.
தாம் + நன்னெறியார் = தாநன்னெறியார்.
தாம் + மேலோர் = தாமேலோர்.
(இவை வேறு பிரதியில் உள்ள உதாரணங்கள்.)
மரம் + நார் = மர நார்
மரம் + நீண்டது = மர நீண்டது.
வட்டம் + நேமி = வட்ட நேமி
2. மரம் + வள்ளிது = மரம் வள்ளிது.
(இது வேறு பிரதியில் உள்ள உதாரணம்.)
தரும் + வளவன் = தரும் வளவன்
3. தோன்றல் + தீயன் = தோன்றறீயன்.
4. பொன் + நன்று = பொன்னன்று.

உடலாம் - [1]வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால், வந்த தகாரமானது றகாரமாம்; எய்தும் ஆவியின் பின் ஆற்றும் திறல் வல்லினம் வந்திடில் அவற்றின் வருக்கம் போற்றும் இவையென்ற வல்லொற்றும் மெல்லொற்றும் புக்கிடுமே- [2]உயிரீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், இடையே அவ்வவ்வந்த வல்லொற்றும் வல்லின வருக்கவொற்றும் மிக்கு முடியும் (எ-று.) .(உ௦)

21. குற்றியலுகரம் உயிர்வரக் கெடுதலும், குற்றியலுகரத்தின் அயல் மெல்லொற்று வல்லொற்றதலும், அவற்றின் முன் வல்லொற்று மிகுதலும், சில முற்றியலுகரங்களும் உயிர் வரக் கெடுதலும்

ஆவிபின் றோன்றக் கெடுங்குற் றுகரம்; அவற்றின்மேல்லொற்
றேவிய வாறெழில் வல்லொற்று மாம்:இனி வன்மையொற்று
மேவி யதன்முன் விளைதலும் வேண்டுவர்; ஆவிவந்தாற்
பாவிய முற்றுக ரத்தின் சிதைவும் பகர்ந்தனரே.

(இ-ள்.) ஆவி பின் தோன்றக் கெடும் குற்றுகரம் - [3] நிலைமொழியீற்றுக் குற்றியலுகரத்தின் பின்னர் வருமொழி உயிர்முதலாகிய மொழி வந்து புணர்ந்தால், அந்நிலைமொழியீற்றுக் குற்றியலுகரமானது தனக்கு ஆதாரமாகிய மெய்யைவிட்டுத் தான் கெடும்;

---

1. பொன் + தண்ணிது = பொன்றண்ணிது.
(பொன்னன்று முதலிய இரண்டும் வேறு பிரதியில் உள்ள உதாரணங்கள்.)

வல்லொற்று

2. விள + குறிது = விளக்குறிது.
தாரா + கடிது = தாராக் கடிது.
விள + கோடு = விளக்கோடு
பலா + காய் = பலாக்காய்

மெல்லொற்று

விள + காய் = விளங்காய்
மா + சோலை = மாஞ்சோலை (வேறு பிரதியின் உதாரணங்கள்)
மா + தளிர் = மாந்தளிர்
காயா + பூ = காயாம்பூ

3. நாகு + அரிது = நாகரிது.
நாகு + அருமை = நாகருமை

அவற்றின் மெல்லொற்று ஏவியவாறு எழில் வல்லொற்றுமாம் - [1]பின்னும் அந்நிலைமொழியீற்றுக் குற்றியலுகரத்தின் முன்னர் நின்ற மெல்லொற்றானது வல்லொற்றாதலுமாம்; இனி வன்மையொற்று மேவி அதன் முன் விளைதலும் வேண்டுவர் - [2]பின்னும் அந்நிலைமொழியினது ஈற்றுக் குற்றியலுகரத்தின் முன்னர் ஒருவல்லொற்று வரப்பெறலுமாமென்பர்; ஆவி வந்தால் பாவிய முற்றுகரத்தின் சிதைவும் பகர்ந்தனரே-[3]வருமொழி உயிர்முதலாகிய மொழி வந்து புணர்ந்தால், நிலைமொழியீற்று முற்றியலுகரமுங் கெடும் என்று சொல்லுவர் மேலாகிய புலவர் (எ-று.) (உக)

22. **லகரமெய் மகர தகரங்களோடு புணர்தலும், னகரமெய்யும் ணகரமெய்யும் வல்லினத்தோடு புணர்தலும், உயிரோடு கூடிய ழகரம் உயிர் முதல் மொழியோடு புணர்தலும்**

ஈறும் லகார மதவந் தெதிர்ந்திடில்; ஈற்றெழுத்தேல்
ஆறுங் கடைவன்மை யாம்வன்மை தோன்றில்;ஐந் தாமுட
ஆறு முடல்வல் லினம்வரின்; ஆவிமு னாவியோடுங் [லாம்
கூறு ழகார மழிந்து டகாரங் குறுகிடுமே.

(இ-ள்.) *ஈறும் லகாரம் ம த வந்தெதிர்ந்திடில்-[4]லகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் மகார தகாரங்கள் வந்து புணர்ந்தால், அந்த லகாரமானது னகாரமாம்; ஈற்றெழுத்தேல் ஆறும் கடை வன்மையாம் வன்மை தோன்றில் - [5]னகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், அந்த னகாரமானது ஆறும் வல்லினவெழுத்தாகிய றகாரமாம்; ஐந்தாம் உடலும் ஆறும் உடல்*

---

1. *கன்று + ஆ = கற்று*
சுரும்பு + நாண் = சுருப்பு நாண்
கரும்பு + வில் = கருப்பு வில்
2. *மருந்து + பை = மருத்துப் பை*
குரங்கு + கால் = குரக்குக் கால்
(இது வேறு பிரதியில் உள்ள உதாரணம்)
3. *கதவு + அழகிது = கதவழகிது.*
4. *நெல் + முனை = நென்முனை*

நிலைமொழியீற்று லகரம், தகரம் வர னகரமாகத் திரிதற்கு உதாரணம் வந்தவழிக் காண்க.

5. *பொன் + தகடு = பொற்றகடு*

வல்லினம் வரின் - [1] ணகரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், அந்த ணகாரமானது டகாரமாம்; ஆவி முன் ஆவியொடும் கூறு ழகாரம் அழிந்து டகாரங் குறுகிடுமே - [2] வருமொழி உயிர்முதலாகிய மொழிவந்து புணர்ந்தால், நிலைமொழியினது ஈற்றில் நின்ற ழகாரமானது தன் முன்னின்ற உயிரோடும் அழிந்து ஐந்தாம் உடலாகிய டகாரமாம் (எ-று). (உஉ)

23. ஒன்று முதல் பத்தீறகிய எண்களும், நூறு என்னும் எண்ணும் அடையும் விகாரங்கள்

ஒன்றுக் கொருவோர் இருவீர் இரண்டுக்கு மூன்றுமும்மூ
அன்றுற்ற நாலுக்கு நான்கைந்தை யாறறு ஏழெழுவாம்;
தோன்றுற்ற எட்டுக்கெண் ணென்பதோன் பானொடு தோண்
[டோள்ளும்;பான்
பன்றுற்ற நூறு பதுபஃது பத்து;நூ றுயிரமே.

(இ-ள்.) ஒன்றுக்கு ஒரு ஓர் - [3] ஒன்றென்னும் எண்ணுக்கு ஒரு என்பதும் ஓர் என்பதும் ஆதேசமாம்; இரு ஈர் இரண்டுக்கு - இரண்டென்னும் எண்ணுக்கு இரு என்பதும் ஈரென்பதுமாதேசமாம்; மூன்று மு மூ - மூன்றென்னும் எண்ணுக்கு மு என்பதும் மூ என்பதும் ஆதேசமாம்; அன்றுற்ற நாலுக்கு நான்கு - நாலென்னுமெண்ணுக்கு நான்கென்பது ஆதேசமாம்; ஐந்தை - ஐந்தென்னுமெண்ணுக்கு ஐயென்பதாதேசமாம்; ஆறு அறு = ஆறென்னும் எண்ணுக்கு அறுவென்பது ஆதேசமாம்; ஏழ் எழுவாம் - ஏழென்னும் எண்ணுக்கு எழுவென்பது ஆதேசமாம்; தொன்றுற்ற எட்டுக்கு எண் - எட்டென்னும் எண்ணுக்கு எண்

---

1. சிறு கண் + களிறு = சிறுகட்களிறு
2. நாழி + உரி = நாடுரி
3. ஒன்று + குன்று = ஒரு குன்று
   ஒன்று + ஆகம் = ஓராகம்
   இரண்டு + குன்று = இரு குன்று
   இரண்டு + இலை = ஈரிலை
   மூன்று + குணம் = முக்குணம்
   மூன்று + நீர் = முந்நீர்
   மூன்று + ஆண்டு = மூவாண்டு
   நால் + மலை = நான்கு மலை
   நால் + தோள் = நான்கு தோள்

என்பது ஆதேசமாம்; ஒன்பது ஒன்பானொடு தொண்டொள்ளும் - [1] ஒன்பதென்னும் எண்ணுக்கு ஒன்பான் என்பதும் தொண் என்பதும் தொள் என்பதும் ஆதேசமாம்; பான் பன் துற்ற நூறு பது பஃது பத்து - பத்தென்னும் எண்ணுக்குப் பான் என்பதும் பன் என்பதும் நூறென்பதும் பது என்பதும் பஃது என்பதும் ஆதேசமாம்; நூறு ஆயிரமே - நூறென்னும் எண்ணுக்கு ஆயிரம் என்பது ஆதேசமாம் (எ-று.) (உந)

24. உயிர்க்குற்றெழுத்து ஞ ந ம வ என்பவற்றுடனும் யகரத்துடனும் புணர்தலும், டகரம் ணகரமாதலும், ஒரோவிடத்து ஒற்றுத்தோன்றுதலும், சில மொழிகளின் ஈற்று ஆகாரம் குறுகி அந்நேடு உகரம் பெறுதலும்

ஆவிக் குறிற்பின் ஞநமவத் தோன்றிலவ் வோற்றிடையாம்;
மேவிய பன்னொன்று தோன்றில்வவ் வாம்;மெய்யில் ஐந்திருமூன்
றுவது முண்(டு);ஒற் றொரோவழித் தோன்றிடும்; ஆவுமவ்வாய்த்
தாவிய வைந்தா முயிர்பின் பெறுவன தாமுமுண்டே.

(இ-ள்.) ஆவி குறில் பின் ஞ ந ம வ தோன்றில் அவ்வொற்றிடையாம் - [2] உயிர்க்குற்றெழுத்தின் பின்னர் வருமொழி முதல்

ஐந்து + தலை = ஐந்தலை
ஆறு + முகம் = அறு முகம்
எழு + கிரி = எழு கிரி
எட்டு + திசை = எண் டிசை

1. ஒன்பது + ஒடு = ஒன்பானொடு (நன்-சூ. 194.)
ஒன்பது + பத்து = தொண்ணூறு

இதில் ஒன்பது என்பது தொண் என்றும், பத்து என்பது நூறு என்றுந் திரிந்தமை அறிக.

ஒன்பது + நூறு = தொள்ளாயிரம்

இதில் ஒன்பது தொள் எனவும், நூறு ஆயிரம் எனவும் திரிந்தமை அறிக.

ஒன்று + பத்து = ஒருபான்
பத்து + இரண்டு = பன்னிரண்டு
நால் + பத்து = நாற்பது, நாற்பஃது

(ஒன்று முதலிய எண்ணுப் பெயருக்குக் காட்டியவை வேறு பிரதியிலுள்ள உதாரணங்கள்.)

2. அ + ஞாலம் = அஞ்ஞாலம்
அ + நூல் = அந்நூல்
அ + மணி = அம்மணி

ஞ ந ம வக்கள் வந்து புணர்ந்தால், இடையே அவ்வவ்வந்த ஒற்று மிக்கு முடியும்; மேவிய பன்றொன்று தோன்றில் வ ஆம் - [1] பின்னும் அவ்வுயிர்க்குற்றெழுத்தின் பின்னர் வருமொழி முதல் யகாரம் வந்து புணர்ந்தால், இடையே வகரவொற்று வந்து ஆகமமாம். மெய்யில் ஐந்து இரு மூன்று ஆவதும் உண்டு - [2] ஒரோவிடத்து மெய்களுக்குள் டகாரமானது ணகாரமாதலுமாம்; ஒற்று ஒரோ வழி தோன்றிடும் - [3] ஒரோவிடத்து ஒற்று வந்து தோன்றுதலு முண்டு; ஆவும் அ ஆய்த் தாவிய ஐந்தாம் உயிர் பின் பெறுவனதாமு முண்டே - [4] ஒரோவிடத்து நிலைமொழியினது ஈற்றில் நின்ற ஆகாரமானது அகரமாகக் குறுகி அக்குறுகலுடனே ஐந்தாம் உயிர் பெறுதலும் உண்டு (எ-று.) (உச)

அ + வளை = அவ்வளை
இ + ஞாலம் = இஞ்ஞாலம்
இ + நூல் = இந்நூல்
இ + மணி = இம்மணி
இ + வளை = இவ்வளை
உ + ஞாலம் = உஞ்ஞாலம்
உ + நூல் = உந்நூல்
உ + மணி = உம்மணி
உ + வளை = உவ்வளை
எ + ஞாலம் = எஞ்ஞாலம் ?
எ + நூல் = எந்நூல் ?
எ + மணி = எம்மணி ?
எ + வளை = எவ்வளை ?

(இவை வேறு பிரதியில் உள்ள உதாரணங்கள்.)

1. அ + யானை = அவ்யானை
இ + யானை = இவ்யானை
உ + யானை = உவ்யானை
எ + யானை = எவ்யானை ?

2. வேட்கை + அவா = வேணவா

இதில் ஈற்றுயிர்மெய் கெட்டு இடையிலுள்ள டகரம் ணகரமாயிற்று.

(இதுவும் வேறு பிரதியில் உள்ள உதாரணமே.)

3. முன் + இல் = முன்றில்

இதில் இல் முன் என்பது முன் இல் என மாறி நின்று, இடையில் ஒற்று வரப்பெற்றது. (இதுவும் வேறு பிரதியில் உள்ள உதாரணமே.)

4. நிலா + கதிர் = நிலவுக்கதிர்
சுறா + தலை = சுறவுத்தலை

(இவையும் வேறு பிரதியில் உள்ள உதாரணங்களே.)

25. சில நிலைமொழி ஈற்றொற்றும் ஈற்றயல் அகரமும் உயிராதல் உயிர்மெய்யாதல் வரின் அடையும் விகாரமும், சிலவிடத்து வருமொழி முதலுயிர் கெடுதலும், நிலைமொழி ஈற்றுயிர் கெடுதலும், ல ன ள ண ம னக்கள் ஒன்றுக்கொன்றாய் வருதலும்

நின்றசொல் லீற்றுமெய்ம் முன்னு முதலுயிர் நீண்டுமெய்யும்
போன்று முயிரோ டுயிர்மெய்வந் தால்;வந்த ஆவியும்போய்க்
குன்று மோரோவழி: கூறிய ஆவி யோரோவழிப்போம்;
அன்றி லனளண மனக்க ளொன்றுக்கொன் றாவனவே.

(இ-ள்.) *நின்ற சொல் ஈற்றுமெய் முன்னு முதலுயிர் நீண்டு மெய்யும் பொன்றும் உயிரொடு உயிர்மெய் வந்தால்* - [1] *வருமொழிக்கு முதலாக உயிராதல் உயிர்மெய்யாதல் வந்து புணர்ந்தால், நிலைமொழியீற்றயலில் நின்ற அகாரமானது ஆகாரமாக நீண்டு நிலைமொழியினது ஈறுங்கெடும்; வந்த ஆவியும் போய் குன்றும் ஓரோ வழி* - *ஓரோவிடத்து வருமொழி முதல் உயிர் கெடுதலுமுண்டு; கூறிய ஆவி ஓரோ வழி போம்* - [2] *ஓரோவிடத்து நிலைமொழியினது ஈற்றயலுயிர் கெடுதலுமுண்டு; அன்றி ல ன ள ண ம*

வழக்கில், உதித்தது நிலவு, உதித்தது நிலா என ஆகாரங் குறுகி அதனுடன் உகரம் பெற்றும் இயல்பாகியும் வரும் எனவும், செய்யுளில், 'நிலவிரி கானல்வாய்' என ஆகாரங் குறுகுதல் மாத்திரம் பெற்றும், 'இறவுப் புறத்தன்ன' என ஆகாரங் குறுகுதலுடன் உகரம் பெற்றும், 'நிலா வணங்கும் வெண்மணன்மேல்' என இயல்பாகியும் வரும் எனவும் கொள்க.

1 *மரம் + அடி = மராடி*
குளம் + ஆம்பல் = குளாம்பல்
கோணம் + கோணம் = கோணாகோணம்

இவற்றுள், முதலிரண்டில் ஈற்றயல் உயிர் நீண்டு, ஈற்றொற்றும் வருமொழி முதலுயிருங்கெட்டன. மூன்றாவதில் ஈற்றயல் நீண்டு ஒற்றுக் கெட்டது.

2. *போன்ம், மருண்ம்*

போலும், மருளும் என்னும் செய்யும்என் வாய்பாட்டு முற்றுச் சொற்கள் ஈற்றயல் உயிர்கெட்டு, மகரத்தை நோக்கி லகர ளகர மெய்கள், னகர ணகர மெய்களாய்த் திரிந்து இவ்வாறு நின்றன என்றறிக.

னக்கள் ஒன்றுக்கொன்று ஆவனவே - [1] இவையல்லாமலும் லகாரத்துக்கு னகாரமும் ளகாரத்துக்கு ணகாரமும் மகாரத்துக்கு னகாரமும் ஒன்றுக்கொன்று ஆதேசமாம் (எ-று.) (உரு)

26. சுட்டுப்பெயர் அடையும் வேறுபாடுகள்

கூறிய சுட்டின்பின் ஞய்தமுங் கூடும்;சுட் டீற்றுகரம்
மாறி யுயிரிரண் டாவது மாம்;வந்த சுட்டோருகால்
வீறுடை நெட்டெழுத் தாகும்; அளபும் விரிந்துநிற்கும்;
நூறுடை வெள்ளிதட் டாமரைக் கோயி லுடங்கிடையே!

(இ-ள்.) கூறிய சுட்டின் பின் ஆய்தமுங் கூடும் - [2] நிலைமொழிச் சுட்டெழுத்தின் பின்னர் ஆய்தமும் வரப்பெறும்; சுட்டீற்று உகரம் மாறி உயிர் இரண்டாவதுமாம் - [3] நிலை மொழிச் சுட்டினது ஈற்றின் நின்ற உகரமானது கெட்டு இரண்டாம் உயிர் பெறுதலும் உண்டு; வந்த சுட்டு ஒருகால் வீறுடை நெட்டெழுத்தாகும் - [4] ஓரோவிடத்து வருமொழிச் சுட்டு நீளுதலும் உண்டு; அளபும் விரிந்து நிற்கும் - அந்நீளுதலுடனே அளபெடுத்தலுமுண்டு (எ-று.)

---

1. நிலம் = நிலன், நலம் = நலன்.

லகரத்துக்கு னகரமும், ளகரத்துக்கு ணகரமும் வருதற்கு உதாரணங்கள் வந்தவழிக் காண்க.

2. அது = அஃது
இது = இஃது
உது = உஃது

3. அது + அன்று = அதான்று

முன் சூத்திரத்தில் 'வந்த ஆவியும் போய்க் குன்றும்' என்றமையால், வருமொழியாகிய அன்று என்பதன் முதலில் உள்ள அகர உயிர் கெட்டது. (இது வேறு பிரதியில் உள்ள உதாரணம்.)

4. அங்கு = ஆங்கு
இங்கு = ஈங்கு
உங்கு = ஊங்கு

வட + அது = வடாஅது
குட + அது = குடாஅது
குண + அது = குணாஅது

(இவையும் வேறு பிரதியில் உள்ள உதாரணம்.)

'நூறுடை வெள்ளிதட் டாமரைக் கோயி னுடங்கிடையே!' என்பது மகடூஉ முன்னிலை. (உகூ)

27. பெயர் வேற்றுமையேற்றுச் சாரியையோடு கூடுகையில் உளவாம் விகாரங்கள்

துப்பார் பெயர்வேற் றுமையி னகத்துந் தொகையின்கண்ணுஞ்
செப்பார் மொழிமுதற் பின்சாரி யையவரிற் றோர்ந்தவற்றுள்
ஒப்பார் மொழியீ றுயிரோடும் போமொரு காலுடல்போம்;
தப்பா வுயிர்மெய் கெடுமொரு காலென்பர் தாழ்குழலே!

(இ-ள்.) [1]பெயர் வேற்றுமை முடிக்கும் இடத்தும் தொகை வேற்றுமை முடிக்கும் இடத்தும் மொழிமுதற்பின் சாரியைச் சொற்கள் வந்து புணர்ந்தால், ஒரோவிடத்து நிலைமொழியினது ஈறும் ஈற்றயலுயிருங் கெடுதலும், [2]ஒரோவிடத்து நிலைமொழியினது ஈற்றொற்றுக் கெடுதலும், [3]ஒரோவிடத்து நிலைமொழியினது

---

1. மரம் + அத்து + கு = மரத்துக்கு
(இதுவும் வேறு பிரதியில் உள்ள உதாரணமே.)

இந்நூலின் இவ்விதியின்படி மரம் என்பதன் ஈற்றில் உள்ள ஒற்றும் அதன் அயல் நின்ற அகர உயிரும் நீங்கின என்று கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியர் தொல்காப்பியனாரும், நன்னூலாசிரியரும் மகரவொற்றின் அயலிலுள்ள அகரங் கெட்டது என்னாமல், அத்துச் சாரியையின் அகரங் கெட்டது என்பர்.

"அத்தின் அகரம் அகரமுனை யில்லை" (தொல். எழுத்து—சூ. 125.)
(நன். எழுத்து—சூ. 252.)

இது நன்னூலில் ஆசிரிய வசனமாகக் கொள்ளப்பட்டது.

மரம் + அத்து + இலை = மரத்திலை
இது பொருட்புணர்ச்சி

2. ஆன் + இன் + ஐ = ஆவினை

3. அவை + அற்று + ஐ = அவற்றை
(இவையும் வேறு பிரதியில் உள்ள உதாரணங்களே)

ஆன் + இன் + கால் = ஆவின்கால்
அவை + அற்று + கோடு = அவற்றுக்கோடு

இந்நூலில் இவ்விதியின்படி, 'அவற்றை' என்பதில் நிலைமொழியின் ஈற்று உயிர்மெய் கெட்டு வகர உடம்படுமெய் தோன்றிற்று எனல் வேண்டும். வற்று என்பதே சாரியை எனக் கொள்ளின், வகர உடம்படு மெய் தோன்றிற்று எனல் வேண்டா.

ஈற்றுயிர்மெய் கெடுதலும் உண்டு என்று சொல்லுவர் மேலாகிய புலவர் (எ-று)

'தாழ்குழலே!' என்பது மகடூஉ முன்னிலை. (உஎ)

28. ளகர லகர மெய்கள் தகரத்தோடு புணர்தலும் இப்படலத்தின் புறனடையும்

எண்ணிரண் டாமோற்றுப் பன்மூன்று மெய்நின் றிவற்றின்
அண்ணிய தவ்வரின் தட்டற வாம்;அவை யாய்தமுமாம்; [பின்னே
பண்ணிய சந்தி பகரா தனவும்; பகர்ந்தவற்றாற்
கண்ணி யுரைக்க மதியால் வனசக் கனங்குழையே!

(இ-ள்.) எண்ணிரண்டாம் ஒற்று பன்மூன்று மெய் நின்று இவற்றின் பின்னே அண்ணிய த வரின் த ட ற ஆம் - [1] ளகார லகாரவொற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் தகாரம் வந்து புணர்ந்தால், வந்த தகாரமானது முறையே டகார றகாரங்களாம்; அவை ஆய்தமுமாம் - [2] பின்னுமந்த ளகார லகாரங்கள் ஆய்தமாதலுமாம்; பண்ணிய சந்தி பகராதனவும் பகர்ந்தவற்றால் கண்ணி உரைக்க மதியால் - இச்சந்திகளுட் சொல்லாத சந்திகளுளவெனினும், இச்சொன்ன சூத்திரங்களா னடக்கி முடிக்க (எ-று.)

'வனசக் கனங்குழையே!' என்பது மகடூஉ முன்னிலை. (உஅ)

சந்திப்படலம் முற்றும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் இச்சாரியையை, 'வற்று' என்றே கொண்டனர்; நன்னூலாசிரியர் 'அற்று' என்று கொண்டனர். அவற்றை அடியில் வரும் சூத்திரங்களால் அறிக.

'அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே' (தொல். எழுத்து - சூ. 119.)
'அன்ஆன் இன்அல் அற்றுஇற்று அத்துஅம்' (நன். சூ. 244.)

'பெயர் வேற்றுமையின் அகத்தும், தொகையின்கண்ணும்' என்பதற்குப் பெயர்ச்சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏற்கும் இடத்தும், வேற்றுமைத் தொகையிலும் என்பது கருத்து எனக் கொள்க. அவை உருபு புணர்ச்சியும், வேற்றுமைப் பொருட்புணர்ச்சியுமாம்.

1. முள் + தீது = முட்டீது.
முள் + தீது = முஃடீது.

2. கல் + தீது = கற்றீது.
கல் + தீது = கஃறீது.

அஃறிணை, பஃறொடை என்பவற்றையுங் கொள்க.

இரண்டாவது
சொல்லதிகாரம்[1]

க. வேற்றுமைப் படலம்[2]

29. வேற்றுமையின் தொகையும், காரகத்தின் தொகையும்

எட்டாம் எழுவாய் முதற்பெயர் வேற்றுமை; ஆறுளவாம்
கட்டார் கருத்தா முதற்கா ரகம்;அவை கட்டுரைப்பின்
ஒட்டார் கருத்தா கருமங் கரணமோண் கோளியோடும்
சிட்டா ரவதியோ டாதாரம் என்றறி தேமொழியே!

(இ-ள்.) எழுவாய் வேற்றுமை முதலாகப் பெயர் வேற்றுமை எட்டுளவாம்; அவைதாம் எழுவாய் வேற்றுமையும், இரண்டாம் வேற்றுமையும், மூன்றும் வேற்றுமையும், நான்காம் வேற்றுமையும், ஐந்தாம் வேற்றுமையும், ஆறும் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும், விளி வேற்றுமையும் எனக்கொள்க; [3]கருத்தா முதற் காரகம் ஆறுளவாம்; அவை சொல்லும் பக்கத்துக் கருத்தாக் காரகம், கருமக் காரகம், கரணக் காரகம், கோளிக் காரகம், அவதிக் காரகம், ஆதாரக் காரகம் என ஆறு வகைப்படும் (எ-று.)

'தேமொழியே!' என்பது மகடூஉ முன்னிலை. (க)

30. பாலும் சிறப்பும் சார்ந்து பெயர்ச்சொற்கள் இவ்வளவினவாம் என்பதும், முதல் வேற்றுமையின் உருபும்

ஒருவ னொருத்தியொன் றுஞ்சிறப் போடுபல் லோர்பலவைக்
கருது முறையிற் கலப்பன வேற்றுமை காண்முதல்சு
மருவும்அர் ஆர்அர்கள் ஆர்கள்கள் மார்முதல் வேற்றுமையின்
உருவம் விளிவேற் றுமையொழித் தேங்கு முறப்பெறுமே.

(இ-ள்.) ஒருவனைக் கருதின சொல்லும், ஒருத்தியைக் கருதின சொல்லும், பலரைக் கருதின சொல்லும், ஒன்றைக் கருதின சொல்லும், பலவைக் கருதின சொல்லும், ஒருவனைச் சிறப்பித்த சொல்லும், ஒருத்தியைச் சிறப்பித்த சொல்லும், ஒன்றைச் சிறப்பித்த சொல்லும் எனப் பெயர்ச்சொல்லெல்லாம் எட்டு வகைப்

---

1. இது சொல்லிலக்கணத்தைக் கூறும் அதிகாரம் என்றும்.
2. இது வேற்றுமையைக் கூறும் படலம் என்றும்.
3. கருத்தா - செய்பவன் (முதல் வேற்றுமை); கருமம் - செயப்படுபொருள் (இரண்டாம் வேற்றுமை); கரணம் - கருவி.

பட்ட பிரகிருதியாம்; அவற்றுள் சுவ்வும் அர்ரும் ஆரும் அர்களும் ஆர்களும் கள்ளும் மாரும் என இவையேழும் முதல் வேற்றுமைக் குருபுகளாம்; இவை எட்டாம் வேற்றுமையொழித்தொழிந்த வேற்றுமை ஆறின் முன்பு நிற்கவும் பெறும் ஓரோவிடத்து (எ-று.)

'எங்கும்' என்ற உம்மையான், விளிவேற்றுமைக்கு முன்னும் சிறுபான்மை வரப்பெறும். (உ)

31. எண்வகைப் பெயரும், எட்டு வேற்றுமையுங் கூடிக் காரக பதங்கள் அறுபத்து நான்காம் என்பது

ஒருவ னொருத்தி பலரோன் றேடுபல வுஞ்சிறப்பின்
உருபுகண் மூன்று முடன்வைத்துப் பின்னெட்டு வேற்றுமையும்
மருவ நிறுவி யுறழ்தர வாங்கா ரகபதங்கள்
உருவு மலியு மறுபத்து நான்குள ஒண்டொடியே!

(இ - ள்.) முன் சொல்லப்பட்ட எட்டுப் பிரகிருதியை முறையானே நிறுத்தி, அவையிற்றின் பின்னாக எழுவாய் வேற்றுமை முதலாகிய எட்டு வேற்றுமையையும் அடைவே வைத்துறழ அவை அறுபத்து நான்கு காரக பதமாம் (எ - று.)

வரலாறு:—சாத்தன், கொற்றன் - ஒருவனைக் கருதின சொல்.

சாத்தி, கொற்றி - ஒருத்தியைக் கருதின சொல்.

நாட்டார், ஊரார் - பலரைக் கருதின சொல்.

யானை, மரம் - ஒன்றைக் கருதின சொல்.

யானைகள், மரங்கள் - பலவைக் கருதின சொல்.

இவை கள்ளென்னும் பிரத்தியம் அழிந்து யானைபல, மரம்பல எனவும் வரும்.

சாத்தனார், கொற்றனார் - ஒருவனைச் சிறப்பித்த சொல்.

இராமர், கண்ணர் என அர் என்னும் பிரத்தியமீறாய் வரவும் பெறும்.

சாத்தியார், கொற்றியார் - ஒருத்தியைச் சிறப்பித்த சொல்.

அம்மைகள், அவ்வைகள் எனக் கள்ளென்னும் பிரத்தியமீறாய் வரவும் பெறும்.

நரியனார், நாரையார் - ஒன்றைச் சிறப்பித்த சொல்.

இச்சொல்லெட்டும் வேற்றுமை எட்டினுங் கூடிக் காரக பதங்கள் அறுபத்து நாலாமாறு காண்க.

வரலாறு:—சாத்தன், சாத்தனை, சாத்தனால், சாத்தனுக்கு, சாத்தன்பக்கலினின்று, சாத்தனுடைய, சாத்தன்பக்கல், சாத்தனே எனவும்; கொற்றி, கொற்றியை, கொற்றியால், கொற்றிக்கு, கொற்றி பக்கலினின்று, கொற்றியுடைய, கொற்றிபக்கல், கொற்றீ எனவும்;

நாட்டார், நாட்டாரை, நாட்டாரால், நாட்டாருக்கு, நாட்டார் பக்கலினின்று, நாட்டாருடைய, நாட்டார்பக்கல், நாட்டீர் எனவும்;

யானை, யானையை, யானையால், யானைக்கு, யானைபக்கலினின்று, யானையுடைய, யானைபக்கல், யானாய் எனவும்;

மரங்கள், மரங்களை, மரங்களால், மரங்களுக்கு, மரங்கள்பக்கலினின்று, மரங்களுடைய, மரங்கள்பக்கல், மரங்காள் எனவும்;

சாத்தனார், சாத்தனாரை, சாத்தனாரால், சாத்தனாருக்கு, சாத்தனார்பக்கலினின்று, சாத்தனாருடைய, சாத்தனார்பக்கல், சாத்தனாரே எனவும்;

கொற்றியார், கொற்றியாரை, கொற்றியாரால், கொற்றியாருக்கு, கொற்றியார்பக்கலினின்று, கொற்றியாருடைய, கொற்றியார்பக்கல், கொற்றியாரே எனவும்;

யானையார், யானையாரை, யானையாரால், யானையார்க்கு, யானையார்பக்கலினின்று, யானையாருடைய, யானையார் பக்கல், யானையாரே எனவும் வரும். (௩)

32. வடமொழியிற் காரக பதங்கள் இவ்வளவினவாம் என்பது

ஆதியி லாண்பெ ணலியென்று நாட்டி யதினருகே
ஓதிய வேற்றுமை யேழையுஞ் சேர்வித் தொருங்கதன்பின்
வாதிய லொன்றோ டிரண்டு பலவென வைத்துறழ்த்
தீதிய லாத வறுபத்து மூன்றுறுந் தேர்ந்தறியே.

(இ-ள்.) வடமொழிக் காரக பதம் வருமாறு—ஆண் பெண் அலி என்று வைத்து, அவையிற்றின் பின் எழுவாய் வேற்றுமை முதலாக ஏழாம் வேற்றுமை இறுதியாக ஏழு வேற்றுமையும் சேர்த்து ஏக வசனம் துவி வசனம் பகு வசனமென்னும் மூன்று வசனத்தையும் கூட்டியுறழ அறுபத்து மூன்று காரக பதமாம்; பின்னையும், உயிரிறுதியும் ஒற்றிறுதியுமாகக் கூறுவார்க்கு நூற்றிரு பத்தாறும்; அவையெல்லாம் வடமொழியிற் கண்டுகொள்க. (௪)

33. முதல்வேற்றுமை முதலிய வேற்றுமையுருபுகள்

கூறிய சொற்பின் பொருண்மாத் திரத்திற் குலவெழுவாய்
வீறுடை வேற்றுமை யெய்து மொருவ னொருத்தியொன்றின்
ஏறிய சுப்பல விற்சுவ்வுங் கள்ளுமெங் கும்மழியும்
ஊறிய சுச்சிறப் புப்பல ரிற்கள் ளொழிந்தனவே.

(இ-ள்.) முன் சொன்ன எட்டுப் பிரகிருதிக்கும் பின்னாகச் சொல்லின் பொருண் மாத்திரத்தை விளக்குதற் பொருட்டாகச்

அர் ஆர் அர்கள் ஆர்கள் கள் மார் என்று சொல்லப்பட்ட எழுவாய் வேற்றுமைப் பிரத்தியமேழும் வரும்;[1] வருமிடத்து ஒருவனைக் கருதின சொல்லின் பின்னும் ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்னும் ஒன்றைக் கருதின சொல்லின் பின்னும் சு என்னும் பிரத்தியமொன்றே வரும்; பலவைக் கருதின சொல்லின் பின்பு சு கள் என்னும் பிரத்தியமிரண்டும் வரும்; எல்லா இடத்தும் சு என்னும் பிரத்தியமழிந்தே வரும்.

எல்லாவிடத்தும் அழியுமாயின் வருதற்குக் காரணமென்னெனின், வடமொழியுடையான் வாரியென்னுஞ் சொல்லை வைத்து முதல் வேற்றுமை ஏகவசனத்தைப் பொருள் விளக்குதற்பொருட்டு எவ்வண்ணம் இட்டழித்தான், இவனும் அதுபோல ஆக்கி அழித்தாலல்லாது பதமாகாதென்று இட்டழித்தான் என்க. ஒருவனைச் சிறப்பித்த சொல்லின் பின்பும் ஒருத்தியைச் சிறப்பித்த சொல்லின் பின்பும் ஒன்றைச் சிறப்பித்த சொல்லின் பின்பும் அர் ஆர் அர்கள் ஆர்கள் கள் மார் என்னும் ஆறு பிரத்தியமும் வரும். இவை எல்லாவிடத்துமாவனவல்ல. பலரைக் கருதின சொல்லின் பின்பு ஆறு பிரத்தியமுமாம் (எ-று.)

சாத்தன்-கொற்றன் என ஒருவனைக் கருதின சொல்லின் பின்பும், சாத்தி-கொற்றி என ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்பும், யானை-குதிரை என ஒன்றைக் கருதின சொல்லின் பின்பும், சு - என்னும் எழுவாய் வேற்றுமைப் பிரத்தியம் நிறுத்துக. நிறுத்தவே, சொல்லின் பொருண்மாத்திரத்தை விளக்கிற்றும். சொல்லாவது, சாத்தனென்றுச்சரிக்கப்படாநின்ற சொல். அதன் பொருளாவது, கரசரணாதியவயவங்களை உடையதொரு பிண்டமாய் 'சாத்தனுவான் எவன்?' என்று வினவினார்க்கு 'இவன்' என நின்றுற்சொல்லப்படுகின்றான் யாவன், அவன் எனக் கொள்க. 'எங்குமழியுமேறிய சு' என்பதனால், அச்சொற்களின் பின்பு நின்ற சுவ்வை உலோபித்துச் சாத்தன், கொற்றனென்று உச்சரித்துக் கொள்க.

---

1. "பெயர்க்கு ரூப பேதங் காட்டும் வேற்றுமையுருபு வடமொழிக்கல்லது தமிழ் மொழிக்கு இல்லாமை கண்டு, 'எழுவாய் விபத்தி திரிபில் பெயரே' என்றும்" என்பது பிரயோக விவேகம். (சூ. 8 விசேட உரை.) இதனால், தமிழில் முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை என்பது அந்நூலின் கருத்தாதல் அறிக.

'பலவிற் சுவ்வும் கள்ளும்' என்பதனுல் சுவ்வென்னும் பிரத்தியத்தைக் கொடுத்து மரம் நின்ற எனவும், கள்ளென்னும் பிரத்தியத்தைக் கொடுத்து மரங்கள் நின்ற எனவுமுடிக்க. 'சிறப்புப் பலவிற் கள்ளொழிந்தன' என்பதனுல், பிரகிருதிகளின் பின்பு அர் ஆர் அர்கள் ஆர்கள் கள் மார் என்னும் ஆறு பிரத்தியங்களுங் கொடுத்துப் பன்மையாக்கி, இவர்கள் சிலர் வேளாளர், இவர்கள் சிலர் பார்ப்பனர்கள், இவர்கள் சிலர் குறத்திகள், இவர்கள் சிலர் நம்பிமார்கள் என முடிக்க. கள் என்னும் பிரத்தியம் மார் என்னும் பிரத்தியத்தின் முன்னும் பின்னும் வரப்பெறும் இவை எல்லாம் வேண்டுமிடத்து இறுதி சிதைத்து முடித்துக்கொள்க.

'குலவெழுவாய்' என்று சிறப்பித்தவதனுல், எழுவாய் வேற்றுமைப் பிரத்தியங்களிற் சுவ்வென்னும் பிரத்தியம் ஒழித்து ஒழிந்த ஆறு பிரத்தியமும், இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை ஈருக ஆறு வேற்றுமைப் பிரத்தியங்களின் முன்பும் தொகையின்கண்ணும் ஓரோவழி வந்து நிற்கவும் பெறுமென்க. விழுமியான் விழுமியாள் விழுமியோர் என்ருகனுமுண்டு. (ரு)

34. இதுவும் அது—

ஐயென் பதுகரு மத்திரண் டாவ ததுவோருகாற்
பைய வழிதரும் மூன்றேடோ டாலாம் பகர்கருத்தா
வைய நிகழ்கர ணத்தின் வரும்;குப் பொருட்டென்பது
மேய்திகழ் வேற்றுமை நான்காவ தாமிக்க கோளியிலே.

(இ-ள்.) ஐ என்பது இரண்டாம் வேற்றுமைப் பிரத்தியம்; அது கருமத்தின் காரகமாம்; அஃது ஓரோவழி அழிந்து நிற்றலுமுண்டு; அழிந்தாலும், எழுவாய் வேற்றுமையிற் சுவ்வேபோலத் தன் வேற்றுமைப் பொருளே விளக்கும். மூன்ரும் வேற்றுமைக்கு ஓடு ஒடு ஆல் என மூன்று பிரத்தியமுள; அவை கருத்தாவினுங் கரணத்தினும் வரும்; நான்காம் வேற்றுமைக்குக் கு பொருட்டு என்னுமிரண்டு பிரத்தியமுள; அவை கோளியென்னுங் காரகத்தின் வரும் (எ-று.)

வரலாறு:—சாத்தனே அழைத்தான், கொற்றியைக் கொடுத்தான், கடலே நீந்தினுன் என்பன இரண்டாம் வேற்றுமையிற் கருமக் காரகமாம்.

'அது ஒருகாற் பைய வழிதரும்' என்பதனுல், சோறுண்டான் - நீர் குடித்தான் என வேற்றுமைப் பிரத்தியமழிந்தும் வரும்.

[1] 'முதல் வேற்றுமையினுருவம் விளிவேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே.' என்பதனல், வேளாளரை, நாட்டாரை, வேளாளர்களை, நாட்டார்களை, தவசிகளை, நம்பிமாரை என்புழி இரண்டாம் வேற்றுமையின் முன்பு எழுவாய் வேற்றுமையினுருபுகள் வந்தவாறு காண்க.

'மூன்று ஓடு ஒடு ஆலாம் பகர் கருத்தா வையகிகழ் கரணத்தின் வரும்' என்பதனல், தச்சனலெடுக்கப்பட்டது வீடு தட்டானற்செய்யப்பட்டது தாலி எனவும், வாய்ச்சியாற் செதுக்கப்பட்டது மரம், எழுத்தாணியா லெழுதப்பட்டது ஏடு எனவும் வருவன முறையே மூன்றும் வேற்றுமையில் கருத்தாக் காரகமும் கரணக் காரகமுமாம்.

சாத்தனொடு உண்டான், சாத்தனோடு உண்டான், ஊரோடு கலந்தான் என்பவற்றில் ஒடு, ஓடு என்னும் பிரத்தியங்கள் மூன்றும் வேற்றுமையிற் கிரியா பதத்தோடுங் கூடி முடிந்தவாறு கண்டுகொள்க.

தொல்காப்பியனர், ஒடு என்னும் பிரத்தியமொன்றே மூன்றும் வேற்றுமைக்கு உருபாகச் சொன்னர். 'ஆலும் ஆனும் மூன்றனுருபே' என்றார் அவிநயனர்.

> [2] "சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
> கலத்துணீர் பெய்திரீஇ யற்று."

என்புழி ஆலென்னு மூன்றும் வேற்றுமை உருபு வந்தவாறு காண்க.

> "வாரம் புலர்ந்த மனத்தார் மணிக்குறங்கின்
> ஈரம் புலர்ந்தாலு மேகாரிவ்—வீரர்
> அகிலோடு காவிரிநீ ராடி வருவார்
> துகிலோடு சுற்றிச் சுழன்று."

எனவும்,

> "பொன்னுர மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
> உன்னேனென் றாழுலக்கை பற்றினேற்—கன்னே
> மனனேடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
> புனனுடன் பேரே வரும்."

எனவும்,

> [3] "சுழியோ டெறிபுனற் பொன்னிநன் னுடன் சுரர்குருவின்
> வழியோ னமலன் மயிலையன் னீர்மணி வாயினின்றும்

1. இந்நூலின் 30 ஆம் - சூ
2. திருக்குறள், 660.
3. யாப்பருங்கல விருத்தி, சூ-12. உரை மேற்கோள்,

மொழியோ தெரிந்தில கொங்கையுஞ் செய்ய முகத்திரண்டு
விழியோ படுகொலை யோவிலங் கோவந்து நின்றதுவே."

எனவும் இவையிற்றில் ஒடு என்னும் மூன்றும் வேற்றுமைப் பிரத்தியம் வந்தவாறு காண்க.

"நோயொ டுறவென்னை கொல்லோ நுனையெஃகின்
வாயிடை மாளா தவர்க்கு"

1 "வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு."

என ஒடு என்னும் பிரத்தியம் வந்தவாறு கண்டுகொள்க.

'முதல் வேற்றுமையின் உருவம் விளிவேற்றுமை யொழித் தெங்கு முறப்பெறுமே' என்பதனால், வேளாளராற்செய்யப்பட்டது, தவசிகளாற்செய்யப்பட்டது, நம்பிமாராற்செய்யப்பட்டது என மூன்றும் வேற்றுமையின் முன்னே எழுவாய் வேற்றுமை வந்தவாறு கண்டுகொள்க.

'குப்பொருட் டென்பது மெய்திகழ் வேற்றுமை நான்காவதாமிக்க கோளியிலே' என்பதனால், இரப்பானுக்குச் சோறிட்டான், ஏற்பானுக்குப் பொன்னீந்தான், நல்லானுக்கு மந்திரங் கொடுத்தான், தெய்வத்துக்குப் பூவிட்டான் என நான்காம்வேற்றுமையிற் கோளிக்காரகம் வந்தவாறு காண்க. 'முதல் வேற்றுமையின் உருவம் விளிவேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே' என்பதனால், நாட்டார்க்கு இட்டான், வேளாளர்களுக்கு அளித்தான், தவசிகளுக்குக் கொடுத்தான், நம்பிமார்களுக்கு ஈந்தான் என நான்காம் வேற்றுமையின் முன் எழுவாயுருபு வந்தவாறு காண்க. கரும்பு, சோறு என நிறுத்திப் பொருட்டு என நான்காம் வேற்றுமையுருபு வருவித்து, இன்னென்னுஞ் சாரியைச்சொல் இடைப்படுத்துச் சந்திகாரியம் பண்ணி, கரும்பின்பொருட்டு வேலியிட்டான், சோற்றின் பொருட்டு ஊர் சேவித்தான் என முடித்துப் பொருட்டுருபு வந்தவாறு காண்க. (௬)

35. இதுவும் அது.

ஆனுளா ரார்க ளதுவின வாறிற் குடைப்பின்குவ்வேல்
நூனு டியபத மாநுவ லாதார மேழினிற்கே
தானு முழைவயின் பக்க லுழியில்கண் சார்பிறவும்
வானு மலிநின்ற வற்றில் வரூஉமைந் தவதியிலே.

1. திருக்குறள், 552.

(இ-ள்.) ஒன்றினைத் துடக்கிக்[1] கோடு நிற்றலே தனக்குப் பொருளாகவுடைய ஆறும் வேற்றுமைக்கு ஆன் ஆள் ஆர் ஆர்கள் அது இன என்னுஞ் சொற்களின் முன் உடை என்னும் ஆறும் வேற்றுமை பெற்று, உடையான்-உடையாள்-உடையார்-உடையார்கள் - உடையது-உடையின வென்னும் ஆறு பிரத்தியமும் முன் சொல்லப்பட்ட எட்டுப் பிரகிருதிகளின் பின்பு மரபு பிழையாமல் வரும்; உடையென்னும் வேற்றுமையின் பின்பு அகாரம் ஆகமமாய் உடையவென்றும் வரும்; இந்த ஏழு சொற்களின் முன்னின்ற ஆறும் வேற்றுமைதான் காரக பதமாகாதே ஒன்றைத் துடக்கிக் [2]கோடு நிற்குமிடத்து வரப்பெறும்; ஆறும் வேற்றுமை காரக பதமாகும் பொழுது கு என்னும் பிரத்தியமொன்றே வரும்; ஆதாரமென்று சொல்லப்பட்ட பொருளின்மேல் வரும் ஏழாம் வேற்றுமைக்கு, கே உழை வயின் பக்கல் உழி இல் கண் என்னுமேழு பிரத்தியமும் உரிய. 'சார் பிறவும்' என்பதனால், இடம் இடை முன் பின் கீழ் மேல் உள் புறம் வாய் முதலியவும் உரிய; 'வானர் நாமலி' என்பதன்பொருள், வாலியதாய் நாவின்கண் மலியாநின்ற என்பது. அவதி என்று சொல்லப்பட்ட பொருளின் ஐந்தாம் வேற்றுமைப் பிரத்தியமானது, ஏழாம் வேற்றுமைப் பிரத்தியங்களின்பின் 'நின்று' என்னுஞ் சொற்பெற்று வரும் (எ-று.)

வரலாறு:—இவன் கொற்றனுடையான்.
இவள் கொற்றனுடையாள்.
இவர் கொற்றனுடையார்.
இவர்கள் கொற்றனுடையார்கள்.
இது கொற்றனுடையது.
இவை கொற்றனுடையின
எனவரும்.
இவை கொற்றனுடையன.
இது கொற்றனது
என முடிப்பாருமுளர்.
இவனுடைய மகன்
கொற்றனுடைய வீடு

என உடையவென்னும் பிரத்தியத்தானுமுடியும். இவை எல்லாம் ஆறும் வேற்றுமையாம். இவ்வேற்றுமைதான் காரகபதமாகாதே ஒன்றைத் துடக்கிக்[3] கோடு நின்று முடியும். 'குவ்வேல்

1, 2, 3. இங்குக் 'கோடு நிற்றல்' என்பதும் பாடம்.

னுடிய பதமாம்' என்பதனுல், பிரகிருதிகளின் பின்பு கு என்னும் நாலாம் வேற்றுமைப் பிரத்தியம் வருவித்து உகரச் சாரியையை இடைப்படுத்துச் சந்தி காரியம் பண்ணிக் காரக பதமாக்கிக் கிரியா பதத்தோடுங் கூட்டிச் சாத்தனுக்கு மகனுனுன் என முடிக்க; 'முதல் வேற்றுமையின் உருவம் விளி வேற்றுமையொழித்து எங்கும் உறப் பெறுமே' என்றதனுல், ஆறும் வேற்றுமை உருபுக்கு முன் பாக எழுவாய் வேற்றுமை உருபுகளும் நிறுத்தி முடிக்க.

'ஆதார மேழினிற்கே தானு முழைவயின் பக்க னுழியில்கண் சார்பிறவும்' என்பதன் வரலாறு :

நீர்க்கே விழுந்தான்.
சாத்தனுழை அறிவு நின்றது.
கொற்றன்வயிற்பொறையிருந்தது.
இராமன் பக்கல் நன்மை வதிந்தது.
தேவனுழிப் பெருமை தங்கிற்று.
எள்ளில் எண்ணெயுண்டு.
வீட்டின்கண் எலி புகுந்தது.
மாவினிடம் மாங்காய் பழுத்தது.
தேவதத்தனிடை அடக்கமெய்திற்று.
ஆலின்கீழ்ப் பசுக்கிடந்தன.
நீரின்மேல் நுரை எழும்பிற்று.
வேர்ப்புறந் தோல் செறிந்தது.
வீட்டின்முன் கோட்டமுளது.
காட்டினுட் புலி பாய்ந்தது.
வெளியின்பின் நீர் சூழ்ந்தது.
தேவதத்தன்வாய் அறிவு வளர்ந்தது.

என வரும்.

'முதல் வேற்றுமையின் உருவம் விளிவேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே' என்பதனுல்,

மலையாளர்பக்கற் சேவகஞ் செய்தான்.
நம்பனுரிடைப் பெருமையுளது.

என ஏழாம்வேற்றுமைப் பிரத்தியத்தின் முன் எழுவாயுருபு வந்தவாறு காண்க.

அவதிப் பொருளிலே ஐந்தாம் வேற்றுமைப் பிரத்தியம் வருமாறு:

சாத்தனுழைநின்றுந் தீமை அகன்றது.
பெரியோரிடைநின்றுஞ் சினநீங்கிற்று.
மலையினின்றும் அருவி வீழ்ந்தது. எனவரும்.

ஐந்தாம் வேற்றுமைக்கு இன் என்னும் பிரத்தியமும் வரும்:

மக்களிற்கொற்றனல்லன்.
மரத்திற்பனை நன்று.
ஊரின் நீங்கினான். எனவரும்.

1 "வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று."

இஃது ஐந்தாம் வேற்றுமை உருபாகிய [2]நின்றென்பதனால் முடிந்தது. இனி, தேவதத்தனரிடைநின்று பொன் வந்தது என முதல் வேற்றுமையினுருவம் விளி வேற்றுமை ஒழித்தெங்கு முறப்பெறுதல் காண்க. (எ)

36. இதுவும் அது.

ஆயாளீ யேயவ்வோ டாவாஞே லோயீ ரளபெடைகாள்
மாயா விளியி னுருபுகள்; மற்றிவை முன்னிலைக்கண்
ணேயாகும்; முன்சொன்ன வேழ்வேற் றுமையுமெல் லாவிடத்தும்
ஓயா தியல்கை யுணர்பெரி யோர்த முரைப்படியே.

(இ-ள்) ஆய் ஆள் ஈ ஏ அ ஆ ஆன் ஓல் ஈயர் என்னும்உருபுகளும், இவற்றினளபெடைகளும், காள் என்னும் பிரத்தியமும் விளிவேற்றுமைக்குரிய. இவ்விளி வேற்றுமை முன்னிலைக்கண்ணே வரும். மற்றையேழுவேற்றுமையுந் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்தினும் வரும் (எ - று.)

விளித்தல் தன்னை நோக்குவித்துக்கொள்ளுதற் பொருட்டாம். 'ஓயாது' என்று விகற்பித்தவதனால், விளி வேற்றுமைப் பிரத்தியம் பின்பு வந்தால், முன்பு நின்ற பிரகிருதியினீறு ஓரோவிடத்து அழிதலுமுண்டு.

1. திருக்குறள், 11.
2. 'நிற்ப என்னும் வினையெச்சம் நின்று எனத் திரிந்து நின்றது என்பது பரிமேலழகர் கூற்று.' இது பழைய குறிப்பு.

'முதல் வேற்றுமையின் உருவம் விளி வேற்றுமை யொழித்தெங்கு முறப்பெறுமே' என்பதனால்,

வரலாறு:—
பிள்ளாய், ஆனாய் எனவும்;
உடையாள், அரியாள் எனவும்;
செல்வீ, அரங்கீ எனவும்;
இராமனே, மன்னவனே எனவும்;
மன்னவ, நாயக எனவும்;
சாத்தா, கொற்றா எனவும்;
பெரியான், காத்தான் எனவும்;
சாத்தாவோல், கொற்றாவோல் எனவும்;
சாத்தாவோய், கொற்றாவோய் எனவும்;
அரையீர், வெளியீர் எனவும் வரும்.

இவற்றின் இறுதி சிதைந்து முடிந்தபடி அறிந்துகொள்க.

அளபெடை சாத்தாஅ, கொற்றீஇ என வரும். பெண்காள், மரங்காள் என்பவற்றிற் காள் என்னும் பிரத்தியமாமாறு காண்க. விளி வேற்றுமைக் காரக பதங்களெல்லாம் இறுதி உதாத்தமாக உச்சரித்தாலல்லது பொருள் விளங்காவென்க. அளபெடையான் வருமுருபுகள், சேயாரை விளிக்கும்போதல்லது வாரா. ஆய் முதலாகிய பிரத்தியங்கள் அளபெடுத்தலும் அன்றி, இறுதி அளபெடுத்தலும், இறுதி சிதைந்து நின்ற ஈற்றயலெழுத்து அளபெடுத்தலும், அவ்வீற்றயல் திரிந்து அளபெடுத்தலுமுண்டு.

37. இதுவும் அது.

உன்னுமென் னுந்தன்னும் யாவுமவ் வும்மிவ்வு முவ்வுமெவ்வு
மென்னு மிவற்றின்முன் னீநான்றான் சுவ்வரில் யாமுதல
வன்னும்வள் ளுந்துவ்வும் வையுஞ் சிறப்பினீர் நாமோடுதாம்
பின்னிலைந் தும்வர் பலசிற்கள் ளோடுவர் கள்ளேன்பவே.

(இ-ள்.) உன் என் தன் எனுமூன்றும், யா அ இ உ எ எனும் ஐந்துமாக எட்டுப் பிரகிருதியையும் வேற்றுமைப் பிரத்தியத்தோடு கூட்டி முடிக்கும் பொழுது முன்பு நின்ற மூன்றையும் சுப் பிரத்தியம் பண்ணி எழுவாய் வேற்றுமையில் நீ நான் தான் என அடைவே ஆதேசமாக்குக. இவையிற்றைச் சிறப்பிக்கக் கருதின பொழுது நீர் நாம் தாம் என ஆதேசமாக்குக. யா முதலாகிய ஐந்திணையும் வன் வள் து வை என்றடைவே பிரத்தியங் கொடுத்து

முடிக்க. இவற்றைச் சிறப்பிக்கக் கருதின பொழுது வர் என்னும் பிரத்தியங் கொடுக்க. இவை எட்டையும் பன்மையாக்கக் கருதின போது கள் வர்கள் என்னும் இரண்டு பிரத்தியங் கொடுத்து முடிக்க (எ - று.)

வரலாறு:—உன், என், தன் என்பன சுப்பிரத்தியத்தோடு சேர்ந்து நீ, நான், தான் என வரும்.

உன் என்பதற்கு நும் என்பதும், நின் என்பதும், நான் என்பதற்கு யான் என்பதும் ஆதேசமாம்.

யா முதலியன யாவன், அவன், இவன், உவன்,எவன் எனவும்;
யாவள்,அவள்,இவள்,உவள்,எவள் எனவும்;
யாது, அது, இது, உது, எது எனவும்;
யாவை, அவை, இவை, உவை, எவை எனவும் வரும்.

அது, இது, உது, எது என்பன அஃது, இஃது, உஃது, எஃது என ஆதேசமாம்.

சிறப்பில் முன்னின்ற மூன்றும் நீர், நாம், தாம் எனவும்; பின்னின்ற ஐந்தும் யாவர், அவர், இவர், உவர், எவர் எனவும் வரும்.

நாம், யாம் எனவும்; யாவர், யார் எனவும் ஆதேசமாதலுமாம்.
பன்மையில் நீர்கள், நீங்கள், நாங்கள், தாங்கள் எனவும் ;
யாவர்கள், அவர்கள், இவர்கள்,உவர்கள்,எவர்கள் எனவும் வரும்.
நீர்கள் என்பது நீயிர்கள், நீவிர்கள் என ஆதேசமாதலுமுண்டு.
நீர் என்பது நீயிர், நீவிர் என ஆதேசமாம்.
நாங்கள் என்பது யாங்கள் என ஆதேசமாம்.

இவையெல்லாம் எழுவாய் வேற்றுமை உருபாகக் கண்டு கொள்க.

'முதல் வேற்றுமையின் உருவம் விளி வேற்றுமை யொழித் தெங்கு முறப்பெறுமே' என்பதனால்,

உன்னை, என்னை, தன்னை, அவனை, இவனை, உவனை - எவனை எனவும்;

உம்மை, எம்மை, தம்மை எனவும் ;

யாவரை, அவரை, இவரை, உவரை, எவரை எனவும் ;

உங்களை, எங்களை, தங்களை எனவும்;

இரண்டாம் வேற்றுமையோடு கூட்டி முடிக்க.

உங்களை என்பது நுங்களை என ஆதேசமாம்.

உன்னால், என்னால், தன்னால் எனவும்; உன்னோடு, தன்னோடு, என்னோடு எனவும்; யாவனால், யாவனொடு எனவும் மூன்றும் வேற்றுமையோடு கூட்டி முடிக்க. ஒழிந்தனவுமிவ்வாறே வரும். இவை முடிக்குமிடத்துச் சாரியைச் சொற்களையும் விகாரங்களையும் வருமிடம் அறிந்து வருவித்து முடிக்க. உன், என்னுஞ்சொல் முன்னிலைச் சொல்லேயாயினும், இவற்றுடன் கூட்டிமுடிக்கப் படுதலால் விளிவேற்றுமைக்கு உரித்தன்று என்க. வன், வர், சு என்னும் பிரத்தியங்கள் வந்தால் எண்ணுப் பெயரில் மரபு பிழையாமல் முடிக்க.

அவை வருமாறு:—ஒன்றென்பது ஒருவென ஆதேசமாகி வன் என்னும் பிரத்தியத்தோடு ஒருவன் எனவும், வர் என்னும் பிரத்தியத்தோடு ஒருவர் எனவும் வரும். இப்பிரத்தியம் மற்றை எண்களோடு இருவர், மூவர், நால்வர், ஐவர், அறுவர், எழுவர், எண்மர், ஒன்பதின்மர், பதின்மர் எனவரும். ஒன்று, இரண்டு, மூன்று என்பன சுப்பிரத்தியத்தான் முடியும். (கூ)

வேற்றுமைப்படலம் முற்றும்.

உ. உபகாரகப் படலம்[1]

38. கருத்தாக் காரகமுதலிய காரகங்கள் இவையாம் என்பது.

மேதகு நற்றெழில் செய்வான் கருத்தா; வியன்கருவி
தீதில் கரணம்; செயப்பட்ட தாகுந் திறற்கருமம்;
யாதனி னீங்கு மவதிய தாம்; இட மாதாரமாம்;
கோதறு கோளிமன் கொள்பவ னாகுங் கொடியிடையே :

(இ-ள்.) முன் சொல்லிப் போந்த ஆறு காரக பதங்களுமா மாறு:—யாதொரு தொழிலைச் செய்வானெவன், அவன் கருத்தாக் காரகமாம்; அத்தொழிலினைச் செய்தற்குக் கருவியாயிற்று யாது, அது கரணக் காரகமாம்; யாதொன்று செய்யப்பட்டது, அது கருமக் காரகமாம்; யாதொன்றினின்றும் ஒரு பொருள் நீங்குவது, அஃது அவதிக் காரகமாம்; யாதொன்று ஒரு தொழில் செய்தற்கு இடமாயிற்று, அஃதாதாரக் காரகமாம்; யாவனொருவன் ஒரு பொருளைக் கொள்வான், அவன் கோளிக் காரகமாம் (எ-று.)

'கொடியிடையே!' என்பது மகடூஉ முன்னிலை. (க)

39. காரகங்கள் ஆறுக்கும் உதாரணம்

வரைநின் றிழிந்தங்கோர் வேதியன் வாவியின் கண்மலிந்த
விரைநின்ற பூவைக் கரத்தாற் பறித்து விமலனுக்குத்
துரைநின்ற தீவினை நீங்கவிட் டானென்று சொல்லுதலும்
உரைநின்ற காரக மாறும் பிறக்கும் ஒளியிழையே !

(இ-ள்.) 'வரை நின்று இழிந்தங்கொர் வேதியன்' என்பதில் 'யாதனினீங்கு மவதியதாம்' என்பதனால், அந்தணனை நீக்கப்பட்ட மலை அவதிக் காரகமாயிற்று; 'அங்கொர் வேதியன் பூப்பறித்திட் டான்' என்பதில் 'மேதகு நற்றொழில் செய்வான் கருத்தா' என்பதனால், வேதியன் கருத்தாக் காரகமாயினன்; 'வாவியின்கண்' என்பதில் 'இடமாதாரம்' என்பதனால், பூப்பறித்தற்கு இடமாகிய வாவி ஆதாரக் காரகமாயிற்று : மலிந்த விரைநின்ற பூவை என்பதில் 'செயப்பட்டதாகுந் திறற்கருமம்' என்பதனால், பறித் திடப்பட்ட பூ, கருமக் காரகமாயிற்று; 'கரத்தாற் பறித்து' என்ப

---

1. இது முற்கூறிய வேற்றுமைப்படலத்துக்கு உதவியாகிய பொருள்களைக் கூறும் படலம் என்றும். (உபகாரகம்-உதவியைச் செய்வது.)

தில், 'வியன்கருவி தீதில் கரணம்' என்பதனால், பூப்பறித்தற்குக் கருவியாக நின்ற கரம் கரணக் காரகமாயிற்று; 'விமலனுக்குத் துரைநின்ற தீவினை நீங்க இட்டான்' என்பதில், 'கோதறு கோளி மன் கொள்பவ னாகும்' என்பதனால், பூவைக் கொள்பவனான விமலன் கோளிக் காரகமாயினான் (எ-று.)

[1]"இந்திரன் தாமரை யைக்கரத் தாற்கொய் திறைவனுக்குத்
தந்திருங் குற்றத்தி னீங்கிவிண் மேல்இருந் தான்எனலும்
வந்தன காரக மெல்லாம் வகுத்த வழிமுறையே."

என்றார் பிறரும்.

இனி முன் சொல்லப்பட்ட ஆறு காரகமும் இருபத்து மூன்றாய் விரியுமென அவற்றின் வேறுபாடு சொல்லுகின்றார். (உ)

40, 41. முன் சொல்லப்பட்ட ஆறு காரகங்கள் இருபத்து மூன்றுதல்

காரணந் தான்தெரி தான்தெரி யாக்கரு மந்தலைமை
ஆரணங் கேயைந் துளகருத் தா;அச லஞ்சலமாம்
பூரண மாகும் அவதி; புறமக மாங்கரணம்;
சீரணங் கார்வங் கிடப்பிரப் பாங்கோளி தேமொழியே!

பற்றொடு வீடே யிருபுறந் தான்தெரி தான்தெரியா
நற்கருத் தாத்தீ பகமாங் கருமம்;நான் காதாரமேற்
பொற்பமர் சேர்வு கலப்புப் புலனொ டயலென்பதாம்
கற்பு மலியு மிருபத்து மூவகைக் காரகமே.

(இ-ள்.) காரணக் கருத்தாவும், தான் தெரி கருத்தாவும், தான் தெரியாக் கருத்தாவும், கருமக் கருத்தாவும், தலைமைக் கருத்தாவும் என ஐந்து வகைப்படும் கருத்தாக் காரகம்; அசலம் என்னும் அவதியும், சலம் என்னும் அவதியும் என இரண்டு வகைப்படும் அவதிக் காரகம்; புறக் கரணம், அகக் கரணம் என இரண்டு வகைப்படும் கரணக் காரகம்; (கரணம் எனினும் கருவி எனினும் ஒக்கும்.) ஆர்வக் கோளி, கிடப்புக் கோளி, இரப்புக் கோளி என மூன்று வகைப்படும் கோளிக் காரகம்; பற்றுக் கருமம், வீட்டுக் கருமம், இருபுறக் கருமம், தான் தெரி கருமம், தான் தெரியாக் கருமம், கருத்தாக் கருமம், தீபகக் கருமம் என ஏழு வகைப்படுங் கருமக் காரகம்; சேர்வாதாரம், கலப்பாதாரம், புலனாதாரம், அயலாதாரம் என நான்கு வகைப்படும் ஆதாரக் காரகம் (எ-று.)

1. இது கி. பி. 1895-ஆம் ஆண்டுப் பதிப்பில் அடிக்குறிப்பாயமைந்துள்ளது.

இவையிற்றினுக்கு உதாரணம் வருமாறு:—

சாத்தன் கொற்றனை அஞ்சுவித்தான்.

கொற்றன் அரங்கனைப் போக்கினான்.

புத்தன் கண்ணனை உய்வித்தான்.

என்புழிக் கருத்தா கிரியைக்குக் காரணமாய் நிற்றலின், காரணக் கருத்தாவாயிற்று.

விழுமியோரால் செய்யப்படாநின்றது நன்மை.

சாத்தனால் எறியப்பட்டது கல்.

கொற்றனால் கொள்ளப்பட்டது வீடு.

என்புழிக் கருத்தா இடந்தெரிந்து நிற்றலால், தான் தெரி கருத்தாவாயிற்று.

தேவதத்தன் சோற்றை அடுகின்றான்.

என்புழித் தேவதத்தன் என்னுஞ் சொல் தானே கருத்தா என்னுமிடந்தெரிந்து நில்லாமையானும், சோற்றை என்னுங் காரக பதத்தானும், அடுகின்றான் என்னுங் கிரியா பதத்தானுங் கருத்தா என்று அறியப்படுதலானும், தான் தெரியாக் கருத்தாவாயிற்று; 'வறியோர் சுற்றம் உவப்பர்' என்பதும் அது.

நன்மை தானே வெளிப்படும் விழுமியோர் பக்கல்.

என்புழி, நன்மையைச் சாத்தன் வெளிப்படுத்தினான் என்றாற்போல நன்மை கருமமாய்க் கருத்தாப் பிறிதொன்றாய் நில்லாது கருமமுங் கருத்தாவுந் தானேயாய் நிற்றலால், கருமக் கருத்தாவாயிற்று; 'அன்பு கெடுந் தீயோர் பக்கல்' என்பதும்,

[1]"பகைபாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்"

[2]"அறம்[3]பொருள் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா;—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்"

என்பனவும் அது.

விழுமியோர் நன்மை செய்வர்.

அறிவிலாதோர் பகை பெருகுவர்.

முயற்சியில்லாதோர் இகழ்ச்சியடைவர்.

---

1. திருக்குறள், 146. 2. நாலடியார், 81.
3. 'அறம்புகழ்' என்றும் பாடம்.

என்புழி மற்றுஞ் சிலரால் இயற்றப்படுந் தன்மை இன்றித் தாங் களே கருத்தாத் தன்மை எய்தினமையால், இவையிற்றிற் கருத் தா தலைமைக் கருத்தாவாயிற்று.

ஊரினின்றும் போனான் தேவதத்தன்.

மலையினின்றிழிந்தார் முனிவர்.

என்புழி, ஊரும் மலையும் துளக்கம் இல்லா அவதியாதலால், அசலம் என்னும் அவதியாயிற்று.

குதிரையினின்று விழுந்தான் சாத்தன்.

யானையினின்று இறங்கினான் கொற்றன்.

என்புழிக் குதிரையும் யானையும் துளக்கமுடைய அவதியாதலால், சலம் என்னும் அவதியாயிற்று.

கோடாலியான் மரத்தை வெட்டினான் கொற்றன்.

என்புழி, மரம் வெட்டுதற்குக் காரணமாய் நின்ற கோடாலி கருத் தாவாய் நின்ற கொற்றனுக்கு அவயவம் அன்றாதலால், புறக்கரண மாயிற்று; 'வாளினாலே வெட்டினான்; கத்தியால் அறுத்தான்' என் பனவும் அது.

கண்ணினாற்கண்டான்.

என்புழிக் காண்பதற்குக் காரணமாய் நின்ற கண், கருத்தாவிற்கு உறுப்பாதலால், அகக் காரணமாயிற்று; 'செவியினாற்கேட்டான், நெஞ்சினால் நினைந்தான்' என்பனவும் அது.

அருந்தவர்க்கு ஊண் கொடுத்தான்.

என்புழி, அருந்தவர் ஆர்வத்தோடு கொண்டமையானும், கருத்தா ஆர்வத்தோடு கொடுத்தமையானும் ஆர்வக் கோளியாயிற்று; 'விருந் தினர்க்கு இடங் கொடுத்தான்' என்பதும் அது.

தேவர்க்குப் பூவிட்டான்.

என்புழி, தேவர் தமக்குப் பூவேண்டும் என்றிரந்திலாமையானும், இல்வாழ்வானுக்கு இயல்பாதலானுங் கிடப்புக் கோளியாயிற்று; 'செய்க்கு நீர் பாய்ச்சினான்; ஆவுக்கு நீர் கொடுத்தான்' என்பனவும் அது.

அந்தணர்க்குப் பொன் கொடுத்தான் அரசன்.

என்புழி, அந்தணர் வேண்டும் என்று இரந்து பெறுதலின் இரப் புக் கோளியாயிற்று; 'இரவலர்க்குப் பிச்சை இட்டான்' என்பதும் அது.

பொன்னை ஆசைப்பட்டார் வறியோர்.

என்புழி, கருமத்தைக் கருத்தா பற்றினமையின், பற்றுக் கருமமாயிற்று.

ஒழுக்கத்தை இகழ்வர் தீயோர்.

என்புழி, கருமத்தைக் கருத்தா விட்டமையால், வீட்டுக் கருமமாயிற்று.

மாச்சோறு உண்கின்ற சிறுக்கன் அதன்கண் வீழ்ந்த தூளியினைத் தின்றான்.

என்புழி, கருமமாய் நின்ற தூளி தின்ற சிறுக்கனால் வேண்டப்படாமையால், பற்றுக் கருமமன்று; இதனை அறிந்திலாமையின் தின்னலாகாது என்னுங் கருத்து அவன் பக்கல் உண்டன்றாகலால், வீட்டுக் கருமமன்று; ஆதலால், பற்றுக் கருமமும் வீட்டுக் கருமமும் அன்றி இருபுறக் கருமமாயிற்று.

வீட்டை எடுத்தான் தச்சன்.

என்புழி, கருமமாய் நின்ற வீடு மற்றொரு சொல்லான் அன்றித் தானே கருமம் என்னும் இடந்தெரிந்து நிற்றலால், தான் தெரி கருமமாயிற்று.

வீடு தச்சன் கட்டினான்.

என்புழி, கருமமாய் நின்ற வீடு கருமம் என்னும் இடம் தானே தெரியாமையானும், தச்சன் என்னுங் காரக பதத்தானும், கட்டினான் என்னுங் கிரியா பதத்தானுங் கருமமென்று அறியப்படுதலானுந் தான் தெரியாக் கருமமாயிற்று; 'வாய்ச்சி கொல்லன் செய்தான்; தாலி தட்டான் செய்தான்' என்பனவும் அது.

கொற்றனை ஊர்க்குப் போக்கினான் சாத்தன்.

என்புழி, கொற்றன் தானே கருமமுமாய்ப் போதற்கிரியையைச் செய்வானுமாய் நிற்றலால், கருத்தாக் கருமமாயிற்று; 'இராமனை அறிவித்தான்; கண்ணனைப் பேசுவித்தான்' என்பனவும் அது.

பசுவினைப் பாலைக் கறந்தான்.

என்புழி, கருமமாய் நின்ற பசுவே பாலினைக் கறந்தான் என மற்றொரு கருமமாதலின், *தீபகக் கருமமாயிற்று. 'மாணாக்கனை நூலை அறிவித்தான்; ஆசிரியனைப் பொருளை வினவினான்' என்பனவும் அது.

தடுக்கின்கண் இருந்தான் கொற்றன்.

* 'வடநூலார் துவிகர்ம காரகமென்பர்,' என்பது பழைய குறிப்பு.

என்புழி, தடுக்கு இருக்கைக்குச் சேர்வானமையின், சேர்வா தாரமாயிற்று; 'தேயின்கண் நின்றான்; மெத்தையிற்கிடந்தான்' என்பனவும் அது.

எள்ளில் எண்ணெய் நின்றது.

என்புழி, ஆதாரமான எள்ளின்கண் ஆதேயமான எண்ணெய் எங்குங் கலந்து நிற்றலால், கலப்பாதாரமாயிற்று; 'தயிரில் வெண்ணெய் உளது; மரத்தில் தீயுண்டு' என்பனவும் அது. புலன் ஆதாரம் என்பது வடமொழியில் விடயாதாரம் ஆம். அது,

காட்டின்கண் புலி நின்றது; கடலின்கண் மீன் திரிகின்றது.

என வரும். அயலாதாரமாவது,

ஆலின்கண் பசுக் கிடந்தது.
யாழின்கண் ஓசை நின்றது.

என வரும். இப்பதங்களில் சாரியைச் சொற்களும், வேற்றுமை உருபுகளும் வந்து கிரியா பதத்தோடுங் கூடி முடிந்தவாறு கண்டுகொள்க. இனி முன் சொல்லப்பட்ட இருபத்து மூன்று காரக பதத்திலும் வேற்றுமைப் பிரத்தியங்கள் மயங்கி வருமாறு சொல்கின்றார். (ரு, ச)

42. இருபத்துமூன்று காரக பதத்திலும் வேற்றுமைப் பிரத்தியங்கள் மயங்கி வருதல்

ஆதிய தான்தெரி யாக்கருத் தா;அதல் லாக்கருத்தா
ஆதிய தாறோடு மூன்றும் பெறுமென்பர்; ஆதியையே
ஓதினர் தான்தெரி யாக்கரு மத்திற்(கு); ஒழிகருமம்
மேதகு மூன்றிரண் டாறுநான் காமென்பர் மெல்லியலே!

(இ-ள்.) தான் தெரியாக் கருத்தாவிற்கு எழுவாய் வேற்றுமையேயாம்; அல்லாத கருத்தாவிற்கு எழுவாய் வேற்றுமையும் ஆறும் வேற்றுமையும் மூன்றும் வேற்றுமையுமாம்; தான் தெரியாக் கருமத்திற்கு எழுவாய் வேற்றுமை ஒன்றுமேயாம்; ஒழிந்த கருமத்திற்கு மூன்றும் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் ஆறும் வேற்றுமையும் நான்காம் வேற்றுமையுமாம் (எ-று.) (ரு)

43. இதுவும் அது

மூன்றைந்தோ டாறு கரணம் பெறும்;முரட் கோளியதே
மூன்றிரு மூன்றோடு நான்காந் தருமுறை யால்;அவதி
தோன்றுமைந் தாம்;மற்றை யாதார மேழின்க ணேயென்பவாம;
வான்றிக டேய்வ வடநூற் புலவர்தம் வாய்மொழியே.

(இ-ள்.) கரணக் காரகத்துக்கு மூன்றும் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் ஆறும் வேற்றுமையுமாம்; கோளிக் காரகத்துக்கு மூன்றும் வேற்றுமையும் ஆறும் வேற்றுமையும் நான்காம் வேற்றுமையுமாம்; அவதிக் காரகத்துக்கு ஐந்தாம் வேற்றுமை ஒன்றுமேயாம்; ஆதாரக் காரகத்துக்கு ஏழாம் வேற்றுமை ஒன்றுமேயாம் (எ-று.)

வரலாறு:—

'தேவதத்தன் சோற்றை அடுகின்றான்' என்புழி, தான் தெரியாக் கருத்தா எழுவாய் வேற்றுமையால் வந்தது.

'தேவதத்தனாற் சோறு பெறப்பட்டது' என்புழி, தான்தெரி கருத்தா மூன்றும் வேற்றுமையால் வந்தது.

'தேவதத்தனுடைய சொல்' என்புழி, தான் தெரி கருத்தா ஆறும் வேற்றுமையால் வந்தது.

'சாத்தன் கொற்றனை அஞ்சுவித்தான்' என்புழி, காரணக் கருத்தா எழுவாய் வேற்றுமையால் வந்தது.

'நன்மை தானே வெளிப்படும் விழுமியோர் பக்கல்' என்புழி, கருமக் கருத்தா எழுவாய் வேற்றுமையால் வந்தது.

'விழுமியோர் நன்மை செய்வர்' என்புழி, தலைமைக் கருத்தா எழுவாய் வேற்றுமையால் வந்தது.

இவையிற்றுக்கு மூன்றும் வேற்றுமையும் ஆறும் வேற்றுமையும் ஏற்பித்துக்கொள்க.

'சோறு தேவதத்தனால் அடப்பட்டது' என்புழி, தான் தெரியாக் கருமம் எழுவாய் வேற்றுமையால் வந்தது.

'சாத்தனோடு எதிரிட்டான்' என்புழி, கருமக் காரகம் மூன்றும் வேற்றுமையால் வந்தது.

'நூலை அறிவித்தான்' எனக் கருமக் காரகம் இரண்டாம் வேற்றுமையால் வந்தது.

'சாத்தனுக்குரிமை சொன்னான்' எனக் கருமக் காரகம் ஆறும் வேற்றுமையால் வந்தது.

'செய்க்கு நீர் பாய்ச்சினான்' எனக் கருமக் காரகம் நான்காம் வேற்றுமையால் வந்தது.

'கோடாலியான் மரத்தை வெட்டினான்' என்புழி, கரணக் காரகம் மூன்றும் வேற்றுமையால் வந்தது.

'நன்மையினின்று பிழைத்தான்' என்புழி, கரணக் காரகம் ஐந்தாம் வேற்றுமையால் வந்தது.

'செவியினுக்குக் கேட்கலாம்' என்புழி, கரணக் காரகம் ஆறும் வேற்றுமையால் வந்தது.

'பொன்னோடு வெள்ளியிட்டது' என்புழி, கோளிக் காரகம் மூன்றும் வேற்றுமையால் வந்தது.

'சாத்தனுக்குக் கொடுத்தான்' என்புழி, கோளிக் காரகம் நாலாம் வேற்றுமையால் வந்தது.

ஆறும் வேற்றுமையில் வரும் கோளிக் காரகம் வடமொழியி லல்லது இல்லை.

'மரத்தினின்றும் விழுந்தான்' என்புழி, அவதிக் காரகம் ஐந்தாம் வேற்றுமையால் வந்தது.

'எள்ளில் எண்ணெய் நின்றது' என்புழி, ஆதாரக் காரகம் ஏழாம் வேற்றுமையால் வந்தது.* (௬)

உபகாரகப்படலம் முற்றும்.

---

* 'வேற்றுமை மயக்கம் வரை கூறற்பாலதன்று.

'யாத னுருபிற் கூறிற் றாயினும்

பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்,'

என்றார் முனிவரர் மூவரும்.

'ஒன்று மூன்றுநான் காறெனு முறைபொடு'

எனக் கூறப்புகுந்த பின்னூலாரும்

'மாறுபட நிற்றல் வரம்பிலை என்ப'

என்றே முடித்தனர்' என்பது பழைய குறிப்பு.

ந. தொகைப் படலம்[1]

44. தொகைநிலைத் தொடர்களும், வேற்றுமைத் தொகையின் வகையும்

நாமங்க ளிற்பொருந் தும்பொருள் நற்றொகை; அத்தொகைக்கண்
தாமங் கழியுமுன் சாற்றிய வேற்றுமை; வேற்றுமையைச்
சேமங்கொள் சார்பாக வெய்திய: சொல்லுஞ் சிலவிடத்துப்
போமங் கதன்பொருள் தன்னையெல் லார்க்கும் பொருட்படுத்தே.

(இ-ள்.) ஒரு பொருளை விளக்கி நிற்கும் பெயர்ச் சொற்கள் இரண்டு சொல்லாயும், பல சொல்லாயும் பொருந்திய பொருளால் ஒரு சொல்லாய்த் தொகும்; அவ்வாறு தொகுமிடத்து வேற்றுமை அழிந்தும், ஓரோவிடத்து வேற்றுமையும் வேற்றுமையைச் சார்வாகிய சொற்களும் அழிந்துந்தொகும்; தொகை எனினும் சமாசம் எனினும் ஒக்கும். வேற்றுமையும் வேற்றுமையைச் சார்வாகிய சொற்களும் அழிதற்குக் காரணம் அவை அத்தொகைச் சொல்லின் பொருளை விளக்குதற்பொருட்டு உச்சரிக்கப்படுதலால், அவை அழிந்தவிடத்தும் பொருளை விளக்கி நிற்றற்காகும் (எ-று.)

வரலாறு:—

மார்கழி திங்கள் - மார்கழித் திங்கள் என எழுவாய் வேற்றுமையிலும்;
குடியைத் தாங்கி - குடி தாங்கி என இரண்டாம் வேற்றுமையிலும்;
தாயொடு நால்வர் - தாய் நால்வர் என மூன்றாம் வேற்றுமையிலும்;
மரக்கலத்துக்குக் கல்லி = மரக்கலக் கல்லி,
மழையின்பொருட்டுக் குடை = மழைக் குடை,
குண்டலத்தின்பொருட்டுப் பொன் = குண்டலப் பொன்,
குதிரைப்பொருட்டுச் சம்மட்டி = குதிரைச் சம்மட்டி,
யானைப்பொருட்டுத் தோட்டி = யானைத்தோட்டி,
மாடத்தின்பொருட்டு ஓடு = மாடவோடு,
முயற்பொருட்டு வலை = முயல்வலை என நாலாம் வேற்றுமையிலும்;

ஆட்டினின்று கறந்த பால் = ஆட்டுப்பால் என்பதுபோல, எருமைப்பால், யானைமதம், பூனாற்றம், கடலமிழ்து, வாய்ச்சொல், எண்ணெய் என ஐந்தாம் வேற்றுமையிலும்;

கொற்றனுடைய மகன் = கொற்றன்மகன் என்பது போல, சாத்தன்வீடு, களக்கோல், மாங்காய், மரப்பனை, ஊர்ப்பொது என ஆறாம் வேற்றுமையிலும்;

---

1. இது தொகைகளைக் கூறும் படலம் என்றும்.

ஊரின்கட்குருவி = ஊர்க்குருவி என்பது போல, நீர்க்காக்கை, கடற்பன்றி, மலைக்குறவன் என ஏழாம் வேற்றுமையிலும் வரும்.

விளி வேற்றுமையில் சொல் தொக்கு முடிதலில்லை.

'கரும்பினுடைய வேலி, மாடத்தினுடையவோடு' என நாலாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமையாகவும்; 'எருமையினுடைய பால், யானையினுடைய மதம்' என ஐந்தாம் வேற்றுமை ஆறாம் வேற்றுமையாகவுந் தொகுத்தாலுங் குற்றமில்லை.

இனி வேற்றுமைச் சார்வாகிய சொற்களும் அழிந்து தொகுமாறு:—

தயிரினுற்குழைத்த சோறு = தயிர்ச்சோறு,
மருந்துகளால் ஆட்டப்பட்ட எண்ணெய் = மருந்தெண்ணெய்,
சங்கரனுக்கு மகனுயுள்ள சாத்தன் = சங்கரன் சாத்தன் என வரும்.

[1] இனி 'இடைச்சொல் அழி தொகை' என்பதும் ஒன்றுண்டு. அஃதாமாறு:—

இருப்பைப் பாலாற்கொள்ளப்பட்ட நெய் = இருப்பை நெய்,
பாண்டி நாட்டுக் கடலின் கரை = பாண்டிக் கரை என வரும்.

இதனை வடமொழிப் புலவர் மத்திமபத லோப சமாசம் என வழங்குவர். (க)

45. தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகையாம் என்பது

தற்புரு டன்பல நெற்கன்ம தாரயந் தாங்கியசீர்
நற்றுவி குத்தொகை நாவார் துவந்துவம் நல்லதெய்வச்
சொற்பயன் மாந்தர்க ளவ்விய பாவமி தென்றுதொன்மை
கற்பக மாப்பகர்ந் தார்தொகை யாறும் கனங்குழையே!

(இ-ள்.) [2] தற்புருட சமாசமும், பலநெற் சமாசமும், கன்மதாரய சமாசமும், துவிகு சமாசமும், துவந்துவ சமாச

1. ஈண்டு இடைச்சொல் என்றது இடையில் உள்ள சொற்களை; நால் வகையாகிய சொற்களில் ஒன்றாகிய இடைச்சொல்லை அன்று என அறிக.

2. "தற்புருடன் - வேற்றுமைத் தொகை, வெகுவிரீகி - அன்மொழித் தொகை, கருமதாரயன் - பண்புத்தொகை, துவிகு - எண்ணுடு புணர்ந்த எண் தொகை, துவந்துவன் - உம்மைத் தொகை, அவ்வியபாவம் (அவ்வியயீ பாவம்)- முன்னும் பின்னும் மொழி அடுத்து வரும் இடைச்சொல் தொகை," என்பர் பிரயோக விவேக நூலார். (பிரயோக விவேகம்-ச-ப-3ஆம் சூத்திர விசேட உரை.)

மும், அவ்வியபாவ சமாசமும் என்று தொகைப்படுத்துச் சொல்லுவர் வடமொழிப் புலவர் (எ-று.)

'பல நெல் சமாசம்' என்பது, பலவென்னும் பொருளைப் பயக்கின்ற பகு என்னும் வடமொழியும், நெல் என்னும் பொருளைப் பயக்கின்ற விரீகி என்னும் வடமொழியுஞ் சேர்ந்த பகுவிரீகி என்னுஞ் சமாசமாம். 'பல நெல்' எனினும் 'பகுவிரீகி' எனினும் ஒக்கும். (உ)

46. தற்புருட சமாசமும், துவிகு சமாசமும்

எழுவாய் முதலெழு வேற்றுமை யோடு மெழுந்தடையில்
வழுவாத நஞ்ஞோடெட் டாந்தற் புருடன்; வளர்துவிகு
தழுவார்ந்த எண்மொழி முன்னாய் வருந்தத் திதப்பொருண்மேல்
குழுவா ரொருமையொப் புப்பன்மை யொப்புக் குறியிரண்டே.

(இ-ள்.) தற்புருடத் தொகையானது எழுவாய் முதலாக ஏழு வேற்றுமையோடும் [1] தடையில் நிகழாநின்ற நஞ்ஞோடுங் கூட எட்டு வகைப்படும்; துவிகுத் தொகையானது எண் முன்னாய் வருந் தத்திதப் பொருண்மேல் ஒருமையொப்புத் துவிகும், பன்மையொப்புத் துவிகும் என இரண்டு குறியினையுடைத்து; அவை எழுவாய் வேற்றுமைத் தற்புருடனும், இரண்டாம் வேற்றுமைத் தற்புருடனும், மூன்றாம் வேற்றுமைத் தற்புருடனும், நாலாம் வேற்றுமைத் தற்புருடனும், ஐந்தாம் வேற்றுமைத் தற்புருடனும், ஆறாம் வேற்றுமைத் தற்புருடனும், ஏழாம் வேற்றுமைத் தற்புருடனும், நஞ்ஞுத் தற்புருடனும் எனவும்; ஒருமையொப்புத் துவிகும், பன்மையொப்புத் துவிகும் எனவும் வரும் (எ-று.)

வரலாறு:—

கழஞ்சினுடைய அரை = அரைக் கழஞ்சு,
காசினுடைய கால் = காற்காசு,
அகத்தினுடைய கால் = காலகம்,
பகலினுடைய முன் = முன் பகல்,
ஊரினுடைய உள் = உள்ளூர்,
கையினுடைய புறம் = புறங்கை என வரும்.

இவை முன் பதம் எழுவாய் வேற்றுமையாதலின், எழுவாய் வேற்றுமைத் தற்புருடனும்.

---

1. தடையில் - எதிர்மறைப் பொருளில்

இவ்வண்ணம்,

மலையைத் தாங்கி = மலை தாங்கி,
கல்லாற்றளி = கற்றளி,
தாலியின்பொருட்டுப் பொன் = தாலிப்பொன்,
கள்ளரினின்றும் பயம் = கள்ளர் பயம்,
தாமரையினுடைய கிழங்கு = தாமரைக் கிழங்கு,
ஊரின்கட்குருவி = ஊர்க்குருவி

என்பன முறப்பதம் முறையே இரண்டாம் மூன்றும் நாலாம் ஐந்தாம் ஆறும் ஏழாம் வேற்றுமையாதலின், அவ்வவ்வேற்றுமைத் தற்புருடனும். நஞுத் தற்புருடன் வடமொழியின் அல்லது இல்லை. அஃதாமாறு:

"தடைந வுடல்டையிற் றன்னுடல்போ மாவி
அடையி னுடறெற்று மாற்றும்"

என்பதனால் நவ்வென்னும் ஒற்றின்மேல் அகரவுயிரேறி நகரமாய்க் கிடந்த சொல், தொகையின்கண் உயிர்மெய் வரும்பொழுது நகரவொற்றழிந்து அகரமாய் நிற்கும்; உயிர் வரும்பொழுது நகரவொற்றுப் பின்னாய் அகரம் முன்னாய்த் தெற்று மாறி நிற்கும்.

உதாரணம்:—

ந + நாதன் = அநாதன்; ந + உசிதம் = அநுசிதம் என வரும்.
ஆயிரந்தளி கூடினவிடம் = ஆயிரத்தளி,
பன்னிரு படலங் கூடினது = பன்னிரு படலம்

என்பன ஒரு மொழியொப்புத் துவிகுத் தொகை. அன்மொழியொப்புத் துவிகுத் தொகையெனினும் இழுக்காது.

மூவர் கோக்கள் = முக்கோக்கள்

என்பது பன்மொழியொப்புத் துவிகுத் தொகை. (ங)

47. வெகுவிரீகி சமாசம்

இருமொழி பன்மொழி பின்மொழி யெண்ணோ டிருமொழியெண்
மருவும் விதியா றிலக்கண மற்றைச் சகமுன்மொழி
பரவுந் திகந்தரா ளத்தொகை யென்னப் பலநேற்றுகை
விரியுமொ ரேழவை வேற்று மொழிப்பொருண் மெல்லியலே!

(இ-ள்.) [1] இருமொழித் தொகையும், பன்மொழித் தொகையும், பின்மொழி எண் தொகையும், இருமொழி எண் தொகை

1. "இருமொழித் தொகையாவது, இரண்டிரண்டு மொழியால் தொகுவது; பன்மொழித் தொகையாவது, இரண்டின் மேற் கூறப்பட்ட மொழியால் தொகுவது." இவை வேறு பிரதியில் உள்ளவை.

யும், விதியாரிலக்கணத் தொகையும், சகமுன்மொழித் தொகையும், திகந்தராளத் தொகையும் எனப் பகுவிரீகித் தொகை எழு வகைப்படும் (எ-று.)

பின்மொழி எண்ணுவது, எண்ணினைப் பின்மொழியினுடையது; இருமொழி எண்ணுவது, முன்மொழியினும் பின்மொழியினும் எண்ணுய் வருவது; விதியாரிலக்கணத் தொகையாவது, தடுமாற்றத்தை இலக்கணமாக உடையது; சகமுன் மொழியாவது,வடமொழி எழுத்தடைவில் அகரத்தோடுங் கூடின முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தையும் முப்பத்து மூன்ரும் வியஞ்சனத்தையும் அடைவே ஒன்ருக உடைய தொரு பதமாய் அப்பதத்தின் விகாரத்தோடுங் கூடி முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தை முன்னுக உடைய தொகையாம்; திகந்தராளமாவது, பெருந்திசைகளுக்கு நடுவாய்க் கிடந்த கோணங்களைக் குறித்துத் தொகுந் தொகையாம்; இவை ஏழும் யாவனொருவன் என்றும் யாதொன்று என்றும் வேருய்க் கிடந்ததொரு மொழிக்குப் பொருளாகும் அல்லது தொகுத்தற் பொருட்டு வந்த மொழிகளுக்குப் பொருளாகா எனக் கொள்க.

வரலாறு:—

கல்லுத் தலையின்கண் யாதொரு மீனுக்குண்டு, அம்மீன் 'கற்றலை' எனவும், கழுத்திலாடை யாவனொருவனுக்குண்டு, அவன் 'கழுத்தாடை' எனவுஞ் சொல்வது, இரண்டு மொழியைத் தொகுத்தலால் இருமொழித் தொகை.

குரங்குகள் ஆடப்பட்ட துறை யாதொரூரில் உண்டு, அவ்வூர் 'குரங்காடு துறை' எனவும், மயில்கள் ஆடப்பட்ட துறை யாதொரூரில் உண்டு, அவ்வூர் 'மயிலாடுதுறை' எனவும் சொல்வது, பன்மொழியைத் தொகுத்தலால் பன்மொழித் தொகை.

'இன்ன' என்னுஞ் சொல்லினையுடைய நாற்பது கவி யாதொரு நூலின் உண்டு, அந்நூல் 'இன்ன நாற்பது' எனவும், இவ்வண்ணம் 'இனிய நாற்பது' 'கார் நாற்பது' 'களவழி நாற்பது' எனவும் வருவன, பின்மொழிகள் எண்மொழியாதலால் பின்மொழி எண் தொகை.

இருவராதல், மூவராதல் அன்றி, யாவர் சிலரைக் கருதி இருவர், மூவர் எனவும், இவ்வண்ணம் ஐந்தாறு எனவும், எழெட்டுப் பத்து எனவும் வருவன, இருமொழியும் எண்ணய் நின்றமையால் இருமொழி எண் தொகை.

தேசங்களிலே தேசங்களிலே பற்றிக்கொடு பற்றிக்கொடு நிகழ்கின்ற யாதொரு பூசல் 'தேசாதேசி' எனவும், தண்டுகளாலே தண்டுகளாலே அடித்து நிகழ்கின்றதோர் பூசல் 'தண்டாதண்டி' எனவும் வருவன, தடு மாற்றத்தை இலக்கணமாக உடைமையின், விதியாரிலக்கணத் தொகை; இது வடமொழியில் அல்லது வாராதெனக் கொள்க.

சகமுன்மொழித் தொகையாவது, வடமொழியில் முப்பத் திரண்டாம் வியஞ்சனத்தையும், முப்பத்து மூன்றாம் வியஞ்சனத் தையும் உடைய சொல் முன்னாகப் பெற்று, ஒரு *மெய்ச் சொல் பின்னாகத் தொகுவதாம்; அது தொகுமிடத்து முன்னின்ற மொழி யில் இரண்டாம் எழுத்து அழிந்தல்லது தொகாது.

வரலாறு:—முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தையும் முப்பத்து மூன் றாம் வியஞ்சனத்தையும் உடைய சொல்லை முன்னே நிறுவி, நீதி என் னுஞ் சொல்லைப் பின்னே நிறுவி, நீதியோடுங் கூடி நிகழாநின்றான் யாவன், அவன் 'சநீதி' ஆம் என்க.

திகந்தராளத் தோகையாமாறு:—தென்திசைக்குங் கீழ்த் திசைக்கும் நடுவு யாதொரு திசை, அது தென்கிழக்காம்; இவ்வண் ணம் தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு எனக் கண்டுகொள்க.

48. கன்மதாரய சமாசம்

முன்மொழிப் பண்பு மிருமொழிப் பண்பு மொழிந்தமைந்த
பின்மொழி யொப்பொடு முன்மொழி யொப்பும் பிணக்கொன்றிலா
முன்மொழி நற்கருத் தும்முன் மொழிநற் றுணிவுமென
நன்மொழி யார்கன்ம தாரய மாறென்ன நாட்டினரே. ௧௫

(இ-ள்.) முன்மொழிப் பண்புத் தொகையும், பின்மொழிப் பண்புத் தொகையும், பின்மொழியொப்புத் தொகையும், முன் மொழியொப்புத் தொகையும், முன்மொழிக் கருத்துத் தொகை யும், முன்மொழித் துணிவுத் தொகையும் எனக் கன்மதாரயம் ஆறாம் (எ-று.)

வரலாறு:—

நீலமும் அதுவே குவளையும் அதுவே என நீலக் குவளையாம். கருமையும் அதுவே பாம்பும் அதுவே எனக் கரும்பாம்பாம். இவ்வண்

---

* 'சாசுவன் என உயிர் பின்னாகவும் வருதலால் இது நியதியன்று,' என்பது பழைய குறிப்பு.

ணம், 'குறங்கொற்றன்' 'நெடுஞ்சாத்தன்' எனப் பண்பு மொழி நிற்றலான் முன்மொழிப் பண்புத் தொகையாயிற்று.

பண்பு எனினும் விசேடணம் எனினும் ஒக்கும்.

*குறுவும் அதுவே மையும் அதுவே எனக் குறுமை ஆயிற்று. இது பண்பு மொழியே முன்னும் பின்னும் நிற்றலால் இருமொழிப் பண்புத் தொகை.

ஆணிவன் மாணிக்கமொத்தலால், ஆண் மாணிக்கம். பெண்ணிவள் அணங்கொத்தலால், பெண்ணணங்கு. இவை ஒப்பு மொழி பின்பு நிற்றலால், பின்மொழி ஒப்புத்தொகை.

ஒப்பு எனினும் உவமை எனினும் ஒக்கும். பின்மொழி ஒப்புத் தொகையெனினும், பின்மொழி உவமைத் தொகை எனினும் ஒக்கும்.

பவளம் போற் செவ்வாய், பவள வாய். அஞ்சனம் போற் கரிய கண், அஞ்சனக் கண். இவை ஒப்பு மொழி முன்பு நிற்றலான், முன்மொழி ஒப்புத் தொகை.

அடையாது என்று கருதப்பட்ட நெடுங்கடை, அடையா நெடுங் கடை. இதனுள் கருதின மொழி முன்பு நிற்றலான், முன்மொழிக் கருத்துத் தொகை.

மருந்தே என்று துணியப்பட்ட மரம், மருந்து மரம். நஞ்செனத் துணியப்பட்ட மரம், நச்சு மரம். இவையிற்றில் துணிந்த மொழி முன்பு நிற்றலான், முன்மொழித் துணிவுத் தொகை எனப்பட்டது.

'முன்மொழிக் கருத்துத் தொகைக்கும் முன்மொழித் துணிவுத் தொகைக்கும் வேறுபாடியாது?' எனின், கருதினது மாத்திரமே அன்றித் துணிந்தும் உளன் என்று வேறுபடுக்கத்துணிந்தபொழுது முன்மொழித் துணிவுத் தொகையாம்; துணியாதே கருத்து மாத் திரமாம் பொழுது முன்மொழிக் கருத்துத் தொகையாம். ஆகையால், பல படிக்கும் ஒத்திருக்குந் தொகையும் உளவாம் என்றறிக.

---

* "குறுமையின் விகாரமே குறுவாதலானும், இருமொழிப் புணர்ச்சி இன்மையானும், "இரு சொல்லும் ஒரு பொருளனவாய் இன்னதிது வென ஒன்றையொன்று பொதுமை நீக்கி" எனக் கூறிய ஆசிரியர் சேனவரையர் உரைக்கு மாறுபடுதலானும், தொகை என்று ஒன்று ஆங்கு நிகழாமையானும், உரையாசிரியர் கூற்றுச் சரியன்றென மறுக்க. கருமையுமதுவே செம்மையுமதுவே எனக் 'கருஞ்சிவப்பு' எனவும், சிறுமையுமதுவே வெம்மையுமதுவே எனச் 'சிறுவெம்மை' எனவும் வருவனவும், இன்ன பிறவும் நூலாசிரியர் கருத்தென்க," என்பது பழைய குறிப்பு.

49. அவ்வியயீபாவ சமாசமும், துவந்துவ சமாசமும்

முன்மொழி யவ்வியஞ் சேர்தொகை பேர்முன் மொழித்தொகையே
சொன்மொழி யவ்விய பாவம் மருவும்; துவந்துவமும்
வன்மொழி யாமித ரேதரம் வாய்ந்த சமாகாரமாம்;
நன்மொழி யானுரைத் தார்கள் சமாசம் நறுநுதலே!

(இ-ள்.) முன்மொழி *அவ்வியத் தொகையும், பெயர் முன்மொழித் தொகையும் என்று அவ்விய பாவம் இரண்டு வகைப்படும்; இதரேதரத் தொகையும், சமாகாரத் தொகையும் என்று துவந்துவம் இரண்டு வகைப்படும் (எ-று.)

சமாசம் என்பது வடமொழியின் முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தோடு கூடி நிற்கும் சொல் எனக் கொள்க.

வரலாறு:—

கும்பத்தருகு நிகழ்கின்றது உப கும்பமாம். இதன்கண் உப என்னும் அவ்வியம் முன்பு நின்று கும்பம் என்னும் பெயர் பின்பு நிற்றலான், முன்மொழி அவ்வியத் தொகையாயிற்று.

சாகத்தினுடைய பிரதி † சாகப் பிரதியாம். பிரதி என்னுஞ் சொல் அவ்வியம்; சாகம் என்பது பெயர். அவ்வியம் பின்பு நின்று பெயர் முன்பு நிற்றலால் பெயர் முன்மொழித் தொகையாயிற்று.

வடமொழியில் அவ்வியச் சொல் தமிழின் இடைச்சொல்லென அமைக்க.

இடைச்சொல்லாவன, காரக பத வேற்றுமையானும் கிரியா பத வேற்றுமையானும் விகற்பிக்கப்படாதே ஐ ஆல் என்றும், மன் இசின் என்றும்; மற்று ஆங்கு ஒருங்கு என்றும் இவை முதலாக வருவன.

'துவந்துவமும் வன்மொழியாம் இதரேதரம் வாய்ந்த சமாகாரமாம்' என்பது, 'கபில பரணர் தங்களிலே வாது செய்தார்கள்,' என இயைபு தோற்றி நின்றமையால், இதரேதரத் தொகையாயிற்று.

உவாவும் பதினன்கும் உவாப் பதினன்கு. நெய்யும் எண்ணெயும் நெய்யெண்ணெய். நாளும் பக்கமும் நாட்பக்கம்—என்று இப்படி வருவனவெல்லாம் சமாகாரத் தொகையாம்.

இவையெல்லாம் வட மொழியிற் கண்டுகொள்க. (சு)

---

* 'அவ்வியயம் என்னும் வடமொழிச் சிதைவு'

† 'சாப்பிரதி எனவும் வழங்கும்.' இவை பழைய குறிப்பு.

50. தமிழ்த்தொகை நிலைத்தொடர்களும், பண்புத் தொகை உம்மைத் தொகைகளின் வகையும்

வேற்றுமை யும்மை வினைபண் புவமையோ டன்மொழியென்(று)
ஆற்றுந் தொகைசெந் தமிழ்நர்க ளாறென்பர்; ஆய்ந்தபண்பில்
தோற்று மளவு வடிவு நிறஞ்சுவை சொல்பிறவும்
ஏற்று மிருபல் லளவு நிறையெண் பெயருமம்மையே.

(இ-ள்.) வேற்றுமைத் தொகையும், உம்மைத் தொகையும், வினைத் தொகையும், பண்புத் தொகையும், உவமைத் தொகையும், அன்மொழித் தொகையும் எனத் தொகை ஆறு வகைப்படுத்துச் சொல்லுவர் ஒருசார் தமிழ்ப் புலவர்; அவையாறினும் பண்புத் தொகை தொகுமிடத்து அளவுப் பண்புத் தொகையும், வடிவுப் பண்புத் தொகையும், நிறப் பண்புத் தொகையும், சுவைப் பண்புத் தொகையும், பிறவாற்றானுமாய்த் தொகும்; உம்மைத் தொகை தொகுமிடத்து இருபெயர்த் தொகையும், பலபெயர்த் தொகையும், அளவுப் பெயர்த் தொகையும், நிறைப் பெயர்த் தொகையும், எண்ணின் பெயர்த் தொகையும், எண்ணியற்பெயர்த் தொகையுமாய்த் தொகும் (எ-று.)

'எண் எனுஞ்சொல்லை இருகாலாகச் சொல்ல வேண்டியதேன் ?' எனில், எண்ணியற்பெயரென்று எண்ணின்கண் நின்ற பெயரைக் குறித்தது ஒன்றும், எண்ணின் பெயரென்று எண்ணையே குறித்தது ஒன்றுமாக இரண்டாதலின் என்க.

வரலாறு:—

சாத்தனுடைய மகன், சாத்தன் மகன்; தாயொடு நால்வர், தாய் நால்வர் என வேற்றுமையழிந்து தொக்கவாறு.

பண்ணும் கோணிகையும், பண் கோணிகை என உம்மைத் தொகை வந்தவாறு; இவ்வண்ணம் செம்பு தரா, பயறு துவரை என உம்மை அழிந்து இருபெயர்த் தொகை வந்தவாறு.

எண்ணெய் மஞ்சள் வெற்றிலை, கடு நெல்லி தான்றி, சுக்கு மிளகு திப்பிலி எனப் பலபெயர்த் தொகை வந்தவாறு.

தூணியும் பதக்கும், தூணிப் பதக்கு என அளவுப் பெயர்த் தொகை வந்தவாறு; நடுவு ஏகாரமாகிக் கலனே தூணி எனவும் அமையும்.

கழஞ்சே கால், ஒன்றே காற்பலம் என நிறைப் பெயர்த் தொகை வந்தவாறு.

பத்தும் மூன்றும் பதின்மூன்று, ஆயிரமும் எட்டும் ஆயிரத்தெட்டு என எண்ணின் பெயர்த்தொகை வந்தவாறு; முப்பதின்மரும் மூவரும்

முப்பத்து மூவர்; நூற்றுவரும் ஐவரும் நூற்றைவர் என எண்ணியற் பெயர்த் தொகை வந்தவாறு.

இனி வினைத் தொகை வருமாறு :

கொல்லும் யானை, கொல்யானை; வெல்லும் படை, வெல்படை என வரும். ஓடுங் குதிரை, ஆடுங் கூத்து,(ஆடுங்) குரங்கு இவற்றைக் காலங்குறித்து * வேறு படுக்க.

பண்புத் தொகை வருமாறு :

நெடியானும் இவனே, கொற்றியும் இவளே என நெடுங்கொற்றி ஆம்; இவ்வண்ணம் 'குறுஞ்சாத்தன், நெடுங்கடல்' என அளவுப் பண்புத் தொகை வந்தவாறு.

வட்டமும் அதுவே பலகையும் அதுவே எனின், வட்டப் பலகை; இவ்வண்ணம் 'சதுரங்கப் பலகை, சளகு நிலம்' என வடிவுப் பண்புத் தொகை வந்தவாறு.

கருங்குதிரை, செம்போத்து என நிறப் பண்புத் தொகை வந்தவாறு.

புளிம்பருத்தி, உவரித் தண்ணீர் எனச் சுவைப் பண்புத் தொகை வந்தவாறு.

'பிறவும்' என்றதனால், வெந்நீர், தண்ணீர், இன்றமிழ், நறும்பூ, நுண்ணூல், பருநூல், மெல்லிலை, நல்லாடை என வருவனவுங் கொள்க.

இனி உவமைத் தொகை வருமாறு :

பவளம் போன்ற வாய், பவள வாய்; மழை போன்ற வண் கை, மழை வண் கை; முத்துப் போன்ற முறுவல், முத்து முறுவல் எனக் கொள்க.

இனி அன்மொழித் தொகை வருமாறு :

அன்மொழித் தொகையாவது, இரண்டு சொல்லும் பல சொல்லும் தொக்கக்கால், சொற்களை நோக்காதே பொருள் வேறொரு மொழியை நோக்குவது; அது வருமிடத்து, யாவன் அவன் என்றும், யாது அது என்றும், இன்னன பிறவுங் கூறுதல் காண்க.

கழுத்தின்கண் ஆடை யாவனுக்கு உண்டு, அவன் கழுத்தாடையாம். தலையின்கண் கல் யாதொன்றினுக்கு உண்டு, அது கற்றலையாம். (எ)

* "'வேறுபடுக்க வேண்டா' என்பதுரை பாடம். ஆசிரியர் தொல்காப்பியர் 'வினையின் தொகுதி காலத் தியலும்' என்றமையானும், பின்னூலாரும் 'காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை,' என்றமையானும், காலம் விரிந்துழித் தொகை இன்மையானும், எதிர்காலப் பெயரெச்சம் வேறின்மையானும், அஃதுரையன்று என மறுக்க," என்பது பழைய குறிப்பு.

51. தமிழ்த் தொகைநிலைத் தொடர்களில் உண்டாம் சில சிதைவுகள்

அன்மொழி நற்றொகை யிற்றொகும் போதுமல் லாவிடத்தும்
நன்மொழிப் பின்பு நடுவுங் கெடுநன் கோரோவிடத்து
முன்மொழி யீறு கெடும்;பன்மை யாகும்; முரட்பொருள்கோள்
பின்மொழி முற்சொற் பிறிதோர் மொழியோ டிருமொழியே.

(இ-ள்.) அன்மொழித் தொகையின்கண்ணும், அல்லாத தொகைகளினும், பின்மொழிகளும் நடுவின் மொழிகளுஞ் சிதைகை யும் உண்டு; ஒரோவிடத்துத் தொகையின் முன்பு நின்ற சொல் லின் ஈற்றில் ஒற்றுச் சிதைகையும் உண்டு; அச்சொல் பன்மைப் பொருளை விளக்கி நிற்றலும் உண்டு ; இனிப் பொருள் கொள்ளும் இடத்துப் பின்மொழியில் ஆதல், முன்மொழியில் ஆதல், வேற்று மொழியில் ஆதல், இரு மொழியினும் ஆதல் பொருள் சிறக்கும் (எ - று.)

வரலாறு:—

கடு - காய் 'கடு' எனவும், இவ்வண்ணம், 'தான்றி, நெல்லி' எனவும் வருவன பின்மொழிச் சிதைவு; தாமரை, பருத்தி, எள்ளு, கொள்ளு என வருவனவும் அது. பின்மொழி அழிந்த பொழுதும் அழியாத போதைப் பொருள் பயக்கும்.

கவிழப் பூக்குந் தும்பை, கவிழ் தும்பை. வெளுக்கப் பூக்குந் தாமரை, வெண்டாமரை. சிவக்கப் பூக்குந் தாமரை, செந்தாமரை. கொம்மட்டி போலக் காய்க்குமாதளை, கொம்மட்டி மாதளை. வேரிற் பழுக்கும் பலா, வேர்ப் பலா என்பன இடைமொழிச் சிதைவு.

சிவக்கத் தோய்ந்த விளிம்பினையுடைய கூறை செவ்விளிம்பன், என்பது இடைச்சொல்லும் கடைச் சொல்லும் அழிந்து தொக்கது. சோழன் கோன், சோழ கோன் என்பது முன் மொழியீற்றுச் சிதைவு; 'பட்டர்கள் தெருவு', 'நாட்டார் வாய்க்கால்', 'ஆயிரத்தளியர் வாசல்' என்பனவற்றில் முன்மொழியீறு பன்மைப் பொருளை விளக்கி நின்றது.

மாங்காய், பலாப்பழம் என்பன பின்மொழிச் சிறப்புத் தொகை. மழைக்கொடை, மருத்தெண்ணெய் என்பனவும் அது. அரைப்பலம், எள்ளுநீர், புறங்கை என்பன முன்மொழிச் சிறப்புத் தொகை.

'கற்றலை, கழுத்தாடை.' என்பன அன்மொழிப் பொருட்சிறப்புத் தொகை.

சோழ பாண்டியர் என்பது இரு மொழிப் பொருட்சிறப்புத் தொகை.

இனிக் கிடப்புத் தொகையும், மாறிடு தொகையும், நித்தத் தொகையும், அழிதொகையும், அழியாத் தொகையும் எனக் கூறுபடுப்பாருமுளர்.

அவையாமாறு :

'மாங்காய், பலாக்காய்' என முன்மொழியும் பின்மொழியும் மாறுபடாதே கிடப்பிலே நின்று தொக்கமையாற் கிடப்புத்தொகை.

'முன்றில், வாயில்' என முன்மொழி பின்னாய்ப் பின்மொழி முன்னாய் மாறுடி வந்தமையான் மாறுடு தொகை.

'செம்போத்து, குறுமரை, கருங்காக்கை' என ஏகாந்தித்துக் கிடத்தலால் நித்தத் தொகை.

'சாத்தன் மகன், எண்ணெய், எருமைப் பால்' என வேற்றுமை அழிந்து தொகுவன அழிதொகை.

'கழுத்திலாடை, பொதும்பில் தேன்' என வேற்றுமை அழியாது தொகுவன அழியாத் தொகை.

'முன்பொரு சூத்திரத்தின்கண் நடுவு நின்ற வேற்றுமையைச் சார்ந்த சொல்லும் அழியும் எனச் சொல்லி, போன சூத்திரத்தினும் நடுவு நின்ற சொல் அழியும் என்று சொன்னாராதலின் கூறியது கூறல் என்னும் குற்றம் உண்டோ?' எனில், அற்றன்று; முன்பிற்போன சூத்திரத்திற் காரக பத வேற்றுமையும் அதனைச் சார்ந்த சொல்லுமே அழிவன. இதனால், காரக பத வேற்றுமையும் கிரியா பத வேற்றுமையும், முற்சார்வு பதமும், அந்தமும், துவாந்தமும், சந்திராந்தமும் அழிந்து தொகப்பெறும். (௨)

தொகைப்படலம் முற்றும்.

௪. தத்திதப் படலம்[1]

52. தத்திதப் பிரத்தியங்கள்

அன்னிய னீன னிகனேயன் வான்வதி யம்மிகரம்
வன்னு அகரத்தோ டானுளன் மானக னுதிமற்றுந்
துன்னிய சீர்த்தத் திதத்தின் பிரத்தியஞ் சுவ்வென்பது
மன்னு மரபு பிழையாமலெங்கும் வரப்பெறுமே.

(இ-ள்.) அன், இயன், ஈனன், இகன், ஏயன், வான், வதி, அம், இவன், உ, அ, ஆன், ஆளன், மான், அகன் முதலிய*பிரத்தியங்களும் சு என்பதும் தத்திதப் பிரத்தியங்களாம் (எ-று.)

'மன்னு மரபு பிழையாமல்' என்றதனால் வேற்றுமைச் சுப்போல, சு எங்குமழியப் பெறும் என்க. (க)

53, 54. தத்திதங்கள் நிகழும் இடம் இவை என்பது

உண்ணு மிதனு லுரைக்கு மிதனை யுடையனிது
பண்ணு மிதனைப் பயிலு மிதிற்பயன் கொள்ளுமித்தால்
எண்ணு மிதனை யிதனுக்கு நாயக னீங்கிருக்கும்
நண்ணு மிதனை யிதையோக்கு மிங்குள னன்னயத்தே.

மகனிவ னுக்கிவ ளுக்கிந்த வர்க்கத் தினனிவனைத்
தகவிய தேவ னெனும்யாவ னென்றுநற் றத்திதங்கள்
நிகழும்; பிறபொரு ளின்கண்ணு நிற்கும்; நினைந்தவற்றைப்
புகண்மலி தெய்வப் புலவர்க்கும் போச்ச மடக்கரிதே.

(இ-ள்.) தத்திதப் பிரத்தியங்கள் நிகழுமிடத்து இதனால் உண்ணுவன் யாவன் என்பது முதலாக, இவனைத் தெய்வமாகக் கொள்வான் யாவன் என்பது ஈறாகக் கூறப்பட்ட பொருள்களினும்

---

1 இது தத்திதாந்தத்தைக் கூறும் படலம் என்றும். தத்திதாந்தம் என்பது, தத்திதாந்தச் சொற்களைக் குறித்து நின்றது.

பிரயோக விவேகம் தத்திதப் படலம் முதற்சூத்திர உரையில், "முன்சொல் தன்னைத் துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்துப் போய்ச் சேரும் பிரத்தியயத்தை உடைய சொல்லே தத்திதாந்தத்தை உடைய சொல்லாம்," என்றதை ஈண்டு நோக்குக.

* 'பிரத்தியயம் என்னும் வடமொழிச் சிதைவு' என்பது பழைய குறிப்பு.

வைபோலும் பிற பொருளின்கண்ணும் நிகழும்; [1] அவையிற்றைக் கூற்றுத்துப் பொச்சமடக்குதல் எண்ணிறந்த கிரந்தத்தாற் சொல் முடிக்கினுந் தெய்வப் புலவர்களுக்கும் அரிதாம் (எ-று.) அரிதாவதற்குக் காரணம் இலக்கியத்தைப் பார்த்து இலக்கணஞ் சொன்னமையின் என்க.

அவையிற்றிற்கு உதாரணம் வருமாறு:

வலையினாலுண்பான், வலையன்; ஞகரம் ஆகமமாய், வலைஞன் என்றுமாம்.

வேதத்தை உரைப்பான், வேதியன்; இதில் அம்மென்னுங் கடைச்சொற்குறைந்தது.

கொந்தத்தையுடையான், கொந்தவன்; இதில் ஈறழிந்தது.

மருந்தைப் பண்ணுவான், மருத்துவன்; மெல்லொற்று வல்லொற்றாயிற்று.

கூத்துப் பயிலுவான், கூத்தன்.

வல்லினாற் பயன் கொள்வான், வல்லி.

சோதிடத்தை எண்ணுவான், சோதிடவன்.

அதிதி மகன், ஆதித்தியன்; இதில் கடை குறைந்து நடுவே தகர ஒற்று ஆகமமாய், முதற்கண் அகரம் விருத்தியானது.

திதி மகன், தைத்தியன்; விநதை மகன், வைநதேயன்; வயின தேயனெனவும் வரும். கங்கை புத்திரன், காங்கேயன்.

சிபி வருக்கத்தான், செம்பியன்; இதில் நடுவே மகரவொற்று ஆகமமாய், முதற்கண் இகரங் குணமானது.

குரு வருக்கத்தான், கௌரவன்; இதில் முதற்கண் உகரம் விருத்தியானது.

புத்தனைத் தெய்வமாயுடையான், பௌத்தன்; இது சுப்பிரத்தியத்தால் முதல் விருத்தி பெற்றது.

சிவனைத் தெய்வமாக உடையான், சைவன்; பசுபதியைத் தெய்வமாக உடையான், பாசுபதன்.

ஆதி என்றதனால் பிற பொருள்களின்கண் நிகழுமாறு:

பூனைக்காலை ஒப்பக் காய்ப்பது, பூனைக் காலி.

குலத்தினுள் விழுமியான், குலீனன்; சிங்களவன் பேசுவது, சிங்களம்; வடுகன் பேசுவது, வடுகு; துளுவன் பேசுவது, துளுவு; வியாகரணமோதுவான், வையாகரணன்.

---

1 'எண்ணிறந்த கிரந்தத்தால் சொற்களைச் சொல்லி முடிக்கிலும் அவையிற்றைக் கூற்றறுத்துப் பொச்சமடக்குதல் தெய்வப் புலவர்களுக்கும் அரிதாம்' என இயைக்க.

துவாரத்தில் நிற்பான், தௌவாரிகன்; குணத்தை நன்றாக உடையான், குணவான்; குணவதி. மதியை நன்றாக உடையான், மதி... கள்ளத்தை உடையான், கள்ளன்; இவன் தன்மை கள்ளம் ...மமையும்.

குங்குமத்தால் ஊட்டப்பட்டது, கௌங்குமம்; இருடி மானது, ஆரிடம்; இதில் இருவினுக்கு ஆர் என்னும் ஆதேசம் இகரம் உலோபமானது.

பார்ப்பாரால் செயற்படுவது, பார்ப்பு. இவ்வண்ணம் 'கொல்லு, தச்சு' என முடியும். சொற்கள் ஒன்றையொன்று காதலித்துக் கிடத்தலால், இவற்றினின்றே கொல்லன், தச்சன் என முடிந்தது எனினு மமையும்.

இனிப் பிரத்தியங்களான் முடியுமாறு:

*அம்பு என்பது நீர்; பங்கம் என்பது சேறு; இவற்றுள் தோன்றியது 'அம்புசம், பங்கசம்' என வரும்.

குறிப்புச் சொற்களும், வினைச் சொற்களும், பிறவும் ஒரு பெயர்ச்சொல் தம்மேலேறிய பிரத்தியத்தையுடையவாய் வேறு பொருள் பயந்து நிற்பின், அவை தத்திதப் பெயர்கள் என்றறிந்து உலகிற்கு ஒப்ப முடிக்க (உ௯)

55. குணக்குறிப்பையும் பொருள்களையும் விளக்க வரும் பிரத்தியங்கள்

மையம் புதுவுகம் வல்லள வாதி குணக்குறிப்பில்
வையம் வலிநெடு வாதிபின் ஞம்மன்கன் ஞனன்வன்ஞள்
ஐய மவனவள் மிம்முத லாகுந் திரப்பியத்திற்
பைய மதிக்க வுலகத் தவர்க்குப் பயன்படவே.

(இ-ள்.) மை, அம், பு, து, வு, கம், வல், அளவு என்னும் இவை முதலாகிய பிரத்தியங்கள் வலி நெடு என்னுஞ் சொல் முதலாகிய பிரகிருதி குணத்தின் பின் குணக்குறிப்பை விளக்குதற் பொருட்டு வரும்; மன், கன், ஆன், அன், வன், ஆள், ஐ, அம், அவன், அவள், மி முதலாகிய பிரத்தியங்கள் †திரப்பியம் என்னும்

---

* 'அம்பு, பங்கம் என்பன தனிப் பிரத்தியங்கள் அல்ல; ஆதலின், மேல் எடுத்துக்காட்டுத் தவறென்க. அநுசன், தத்துவம், உபகாரம், பிரஞ்ஞை, சங்கரன் முதலிய பதங்களே தக்க உதாரணங்களாம்' என்பது பழைய குறிப்பு.

† "பருப்பதம், காப்பியம், காந்தர்ப்பம், சருப்பதோபத்திரம் என்றற் றொடக்கத்தனவொப்ப, திரவியமென்னும் வடமொழி தமிழில் திரப்

பொருள்களை விளக்குதற்பொருட்டு வரும். இவையாக்கும் பொழுது உலகத்தார்க்கு ஒத்துப் பயன் புணரவேயாக்குக (எ-று.)

வலி, நெடு முதலாகிய பிரகிருதி குணமாவது வலி, நெடு, குறு, கரு, பசு, வெளு, கெடு, இள, தண், வெம், அரி, எளி, பெரு, சிறு, பரு, நேர், மலி என இவை முதலாக வரும்.

உதாரணம் வருமாறு:

மை-வலிமை, நெடுமை, குறுமை; அம்-நீளம்; இதில் நெடு, நீள் என ஆதேசமாயிற்று. பு-அலிப்பு, மெலிப்பு; து-வலிது, மெலிது; வு-வலிவு, மெலிவு; கம்-குறுக்கம்; வல்-இளவல்; அளவு-தண்ணளவு; பிறவுமன்ன.

இவ்விலக்கணத்தால் திரப்பியப் பிரத்தியங்கள் விளங்கி முடியுமாறு:

குறுமன், கருமன் எனவும்; சிறுக்கன் எனவும்; அரியான், எளியான் எனவும்; கரியன், குறியன் எனவும்; புலவன், சிறுவன் எனவும்; செய்யாள், கரியாள் எனவும்; வெள்ளை, பச்சை எனவும்; புறம், அகம் எனவும்; கரியவன், குறியவன் எனவும்; கரியவள், குறியவள் எனவும்; கருமி, குறுமி எனவும் கொள்க. (சு)

56. பெண்பாற்பெயரின் வரும் பிரத்தியங்கள்

அச்சியோ டாட்டி யனியாத் தியத்தி தியாளோடள்ளி
இச்சிசி யாதியும் பெண்மைத் தெளிவாம்; எழில்வடநூல்
மேச்சிய வாகாராந் தத்தினு மூர்ப்பின்னு மிக்க ஐயாம்;
நச்சிய ஈகாரந் தானே குறுகும் நறுநுதலே!

(இ-ள்.) அச்சி, ஆட்டி, அனி, ஆத்தி, அத்தி, தி, ஆள், அள், இ, இச்சி, சி முதலாகிய பிரத்தியங்கள் பெண்மையை விளக்கும் பிரத்தியங்களாம்; பெண்ணைக் குறித்த பொழுது எல்லாச் சொற்களின் மரபும் பிழையாமற் சொல்லிக்கொள்க. எல்லாச் சொல்லுமாவன, சாதியைச் சொன்ன சொல்லும், குணத்தைச் சொன்ன சொல்லும், கிரியையைச் சொன்ன சொல்லும், திரப்பியத்தைச் சொன்ன சொல்லும் எனவே அடங்கும்; வடநூலிற் பெண்ணைக் குறித்து வந்த ஆகாராந்தச் சொற்களின் பின்னும் ஊரைச் சொல்லுஞ் சொற்களின் பின்னும் ஐகாரம் வரும்; ஈகாராந்தம் தானே குறுகும் (எ-று).

பியமெனத் திரிந்தது. இதனை மேல் அலங்காராதிகாரத்தில் வரும் 'திரப்பியஞ் சாதி தொழில்குணம்' என்னும் பத்தாவது கட்டளைக் கலித்துறையானும் உணர்க," என்பது பழைய குறிப்பு.

வரலாறு:—

'பறையன்' என்னுஞ் சாதிச்சொல், அக்குலத்துள்ளாள் என்னும் பெண்மைப் பொருண்மேல் அச்சி என்ற பிரத்தியம் பெற்றுப் * பறைச்சி என வரும்.

இவ்வண்ணம், வெள்ளாட்டி, கம்மாட்டி எனவும்; பார்ப்பனி, வண்ணாத்தி, நட்டுவத்தி, கைக்குளத்தி, குறத்தி, ஒருத்தி, நல்லாள், தீயாள், நல்லள், தீயள், சாத்தி, கொற்றி, கள்ளிச்சி, பேய்ச்சி எனவும் வரும்; பிறவுமன்ன.

வனிதா, தாரா, உமா, மாலா, சாலா என வடநூலில் ஆகாராந்தமாய்ப் பெண்ணைக் குறித்துக் கிடந்த சொற்கள் தமிழில் ஐகாராந்தமாகி, வனிதை, தாரை, உமை, மாலை, சாலை என முடியும். தேவதை, கலை, சீதை என வருவனவும் அது.

நாகபட்டினம், தஞ்சாவூர், உறையூர் எனக் கிடந்த ஊர்ப்பெயர்ச் சொற்கள் கடை குறைந்து நாகை, தஞ்சை, உறந்தை என ஐகாரத்தான் முடியும்.

வடநூலிற் பெண்பாலைக் குறித்த நதீ, குமரீ என்னும் ஈகாராந்தச் சொற்கள் நதி, குமரி எனக் குறுகும். (௫)

57. வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும் விதம்

முந்திய வர்க்கங்க ளைந்தினு முன்னொன்றின் மூன்றடங்கும்
பந்தியில் தெய்வ மொழிமுதல் யவ்வேல் பகருமிய்யாம்;
வந்திடும் லவ்விற் குகரமு மாகும்; வரில்ரகரம்
அந்த இரண்டோ டகரமு மாமென்பர் ஆயிழையே!

(இ-ள்.) க ச ட த ப என்பவற்றுள் ஒவ்வொன்றையே கிடப்பினும் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் மூக்கினும் ஐந்து விதமாகச் சொல்லப்படுகின்ற ஐந்து வருக்கங்களினும் முன்படையக் கிடப்பினுற் சொல்லப்படுகின்ற ஒன்றின்கண்ணே அதன் பின்னே நின்ற மூன்றெழுத்தும் அடங்கும்; இஃது ஆதேசமென்னும் விகாரமெனக் கொள்க; யவ்வென்னும் எழுத்தை முதலாக உடைய வடமொழியின் முன் இகரம் வரப் பெறும்; லவ்வென்னும் எழுத்தை முதலாக உடைய வடமொழியின் முன் இகரமும் உகரமும் வரப் பெறும்; ரவ்வென்னும் எழுத்தை முதலாக உடைய வடமொழியின் முன் அகர இகர உகரங்கள் மூன்றும் வரப் பெறும் (எ-று.)

---

*'இது சிப்பிரத்தியத்தான் முடிந்ததோர் தத்திதம். அச்சிப்பிரத்தியத்திற்கு உதாரணம் வேட்டுவச்சி, துளுவச்சி, அம்புட்டச்சி, ஆரியச்சி முதலிய பிற மொழிகளாம்;' என்பது பழைய குறிப்பு.

இவையெல்லாம் 'ஆகமம்' என்னும் விகாரம் எனக் கொள்க. 'இவையிற்றைத் தத்திதப் படலத்து ஓதல் வேண்டியது என்னை?' என்னின், இவையுந் தத்திதப் பிரத்தியத்தான் முடிகையினால் என்க.

வரலாறு:—

கந்தம் என்னுஞ்சொல் கவ்வருக்கத்து மூன்றாவதற்கு முதல் ஆதேசமாயும், தவ்வருக்கத்து நாலாவதற்கு முதல் ஆதேசமாயும் அம்மென்னுந் தத்திதப் பிரத்தியத்தான் முடிந்தது. இது வேறொரு பொருண்மேலாய் முடிந்தது அன்று; தன் பொருளிலே முடிந்தது. வடமொழியுடையானும் தன் 1 தன்பொருளிலே சுப்பிரத்தியத்தான் நீலமே நீலகமாயிற்று என்று முடிக்கும். இப்படியே கடகம், சத்திரம், சலம், மாடகம், ஆடகம், தானம், தனம், பாணம், பணம், பகவான் என வரும்.

இயக்கர் எனவும்; இலங்கை, உலோகம் எனவும்; அரங்கம், இராவணன், உரோமம் என்வும் வரும். (௬)

58. இதுவும் அது.

முதலோற் றிரட்டிக்கு முப்பத்தோன் றெய்திடின்; முன்பினிஃ
திதமிக்க வைந்தாமெய் யாகுந் தனியே யிதனயற்றுப்
பதமிக்க சவ்வரு மெண்ணான்கு தவ்வாமுப் பானுமுன்
றதனுக்கு லோபமும் யவ்வோடு கவ்வு மறைவர்களே.

(இ-ள்.) வடமொழியில் எழுத்தடைவில் கவ்வென்னு முதல் வியஞ்சனம் முப்பத்தொன்றாமெய் தனக்கு முன்னே வரினும், பின்னே வந்து முப்பத்தைந்தாய் நிற்பினும், ஈரிடத்தும் இரட்டிக்கும். இரட்டிக்குமிடத்து, 'தமிழில் இல்லன போம்' என்னும் இலக்கணத்தான் மேலிட்ட முப்பத்தொராமெய் அழியும்; மொழியின்கண் நடுவிலே தனியே வரில் ஐந்தாமெய்யாகிய டகாரமாகும். இவ் வியஞ்சனத்துக்கு அயலாய் நின்ற முப்பதாம் முப்பத்திரண்டாம் வியஞ்சனங்கள் சவ்வாம். முப்பத்திரண்டாம் வியஞ்சனம் தவ்வாம்; முப்பத்து மூன்றும் வியஞ்சனத்துக்கு ஒரோவழி உலோபமாம்; ஒரோவழி யவ்வுங் கவ்வுமாம் (எ-று.)

வரலாறு:—

பக்கம், தக்கன், இயக்கன் எனவும்; பரிக்காரம், நிக்காரம் எனவும்; விடபம், புருடன் எனவும்; சங்கு, சாலை, சதயம், சத்தம் எனவும்; சகலம், சங்கம், சிங்கம், சத்தியம் எனவும்; வத்தன், தாதன் எனவும்; அரி, அரன், ஆரம் எனவும்; வயிதேவி, மயிமை, மயிதலம் எனவும்; மோகம், மகிடம், மகிமை எனவும் வரும்.

---

1. 'பிரத்தியத்திலே சுப்பிரத்தியத்தா னலமே நிலமாயது' என்பது மன் பதிப்புப் பாடம்.

சவ்வருக்கத்து மூன்றும் எழுத்து யகாரமாய்ப் பங்கயம் என முடிவதும், முப்பத்தோராம் வியஞ்சனம் மொழி முதலிற் சகரமாய்ச் சட்ட என முடிவதும் உண்டு.

59. இதுவும் அது.

கூட்டெழுத் தின்பின் யரலக்கள் தோன்றிடிற் கூட்டிடையே
ஓட்டெழுத் தாகப் பெறுமோ ரிகாரம்;வவ் வுக்கோருவ்வாம்;
மீட்டெழுத் துத்தமி ழல்லன போம்வேறு தேயச்சொல்லின்
மாட்டெழுத் தும்மித னுலறி மற்றை விகாரத்தினே.

(இ-ள்.) வடமொழியில் இரண்டு வியஞ்சனங் கூடி வரும் இடத்துப் பின்பு நிற்கின்ற ய ர ல என்னும் மூன்று கூட்டெழுத்தைப் பிரித்து நடுவே இகரம் ஆகமம் ஆகும்; வகரங் கூட்டெழுத்திற் பின்னாய் வரின் நடுவே உகரம் ஆகமும் ஆகும்; இவையிற்றில் எல்லாம் முன்பின் எழுத்து இரட்டித்தும் வரும்; வடமொழியை வைத்துத் தமிழாக்கும் இடத்து இவ்விலக்கணத்தால் ஆதேசம் ஆவனவாகத் தமிழ் ஒழிந்தவற்றை அழிக்க. ஆரியம், வடுகு, தெலுங்கு, சாவகம், சோனகம், சிங்களம், பப்பரம் இவை முதலாகிய பிற தேயச் சொற்களையுந் தமிழாக்கும் இடத்து இவ்விலக்கணத்தானே முடிக்க (எ-று.)

வரலாறு:—

வாக்கியம், வாச்சியம், சத்தியம், நாட்டியம் என்வும்; புத்திரன், சத்திரம் எனவும்; சுக்கிலம், ஆமிலம் எனவும்; யகர ரகர லகரங்கள் இடையே இகரம் பெற்று வந்தன.

பக்குவம் என வகரங் கூட்டெழுத்திற்குப் பின்பு நடு ஓர் உகரம் பெற்றது.

மகர நகரங்கள் கூட்டெழுத்தின் பின் வருங்கால், முறையே பதுமம், அரதனம் என உகர அகரங்கள் பெற்று முன்னெழுத்து மிகாமல் முடிவனவும்; நகரம் - இரத்தினம் என முன்னெழுத்து இரட்டித்து இகரம் பெற்று முடிவதும்; இவை போல்வன பிறவுங் கொள்க.

இவ்விலக்கணத்தால் பக்கம் என முப்பத்தொன்றும் வியஞ்சனம் 'தமிழ் எழுத்தல்லன போம்' என்றவாற்றுனே போனதும், 'முதலொற்றிரட்டிக்கு முப்பத்தொன் றெய்திடில்' என்றவாற்றுனே இரட்டித்துக் காண்க. 'வட்டா' என்னும் ஆரிய தேயச் சொல்லு, வட்டை என வந்தவாறும், 'முருங்கா' என்னுஞ் சிங்களச் சொல் முருங்கை என வந்தவாறுங் கொள்க.

(௨)

தத்திதப்படலம் முற்றும்

௫. தாதுப் படலம்[1]

60. தாதுக்களை ஆக்கும் வகை

மன்னிய சீர்வட நூலிற் சரபச வென்றுவந்து
துன்னிய தாதுக் களின்போலி போலத் தொகுதமிழ்க்கும்
பன்னிய தாதுக் களைப்படைத் துக்கொள்க; முன்னிலையின்
உன்னிய வேவ லொருமைச்சொற் போன்றுல கிற்கொக்கவே.

(இ-ள்.) வடநூலில் தாதுவின்கண் சர என்றும் பச என்றும் மத்திம புருடனிலே விதி என்னும் ஏவற்பொருளின்கண் ஏக வசனந்தப் பொருள் போற் கிடந்தது ஆதலால், தமிழ்ச் சொல்லினுக்கும் தாதுக்களை அது போலத் தோற்றுவித்துக்கொள்க. படைக்குமிடத்து முன்னிலை ஏவற்பொருளின் உலகத்தார்க்கு ஒக்க ஒருமைச் சொற்போலப் படைக்க (எ - று.)

அஃதாமாறு:—சர என்னுந் தாதுவின் பொருட்போலியும், பச என்னுந் தாதுவின் பொருட்போலியும் போல, நட என்பதும் ஆடு என்பதுமாம். அப்பரிசே கிடந்தன எண்ணிறந்த தாதுக் களுளவாதலால், தமிழினுக்கும் நட, ஆடு என்னும் இவை முதலாகிய தாதுவாய் அவை முன்னிலையிடனில் ஏவற்பொருளில் ஒருமைப் பொருட்போலி போன்றன. நட என்பது ஒருவனை நட என்றும், ஆடு என்றது ஒருவனை ஆடு என்றும் ஏவினாற் போன்றது. அதற்குக் காரணம் என்னை எனின், சுவ்வென்னும் பிரத்தியத்தான் முடிந்தாலல்லது நடப்பது ஆடுவதான பொருள் களைப் பயவா. அப்பொருள் போன்றிருப்பது மாத்திரமே என்க. 'முடியாத பொழுதும் அப்படியே கிடப்பதாயின் முடித்துப் பயனென்னை?' எனின், அது வடநூல் தாது விதி என்க. அன்றியும், அதனைத் தாதுவாக வைத்து மற்றைக் கிரியா பதங்களை முடித்தலாலும் அமையுமென்க. தமிழ்ச்*சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக் கும் பெறும். அப்படித் தோற்றுவித்துக்கொள்ளுந் தாதுக்களும்

---

1. இது தாதுக்களைக் கூறும் படலம் என்றும்.

* 'ஈண்டுச் சொல்லென்றார் சொல்லின் இலக்கணத்தை,' என்பது பழைய குறிப்பு.

மூன்று வகைப்படும். அவை தமிழ்த் தாதுவும், வடமொழித் தாதுவும், திசைச்சொற்றாதுவுமாம். தமிழ்த் தாதுக்கள் நட, அடு, செய், பண்ணு என்னும் இவை முதலாக வரும். வடமொழித் தாதுக்கள் வடவெழுத்தோடு கூடியும், வடசொற்சிதைவாயும் இருக்கும். வி என்னும் எழுத்தின் பின் வடவெழுத்தண்டவிற் பத்தொன்பதாம் வரியின் மூன்றும் எழுத்தையும், ந என்னும் எழுத்தின் பின் முப்பதாம் வரியின் மூன்றும் எழுத்தையும், கிரு என்னும் எழுத்தின் பின் முப்பத்தொன்றும் வரியின் மூன்றும் எழுத்தையுங் கூட்டின பொழுது முன்னிலை ஏவலொருமை போலத் தோன்றித் தாதுவாதல் காண்க. சிந்தி, வந்தி எனப் பிறவும் வரும். வடவெழுத்துத் தாதுவெல்லாம் பெரும்பாலும் இகர இறுதியாய் அல்லது வாரா என்க. திசைச்சொல் தாதுக்கள் நொடி, கோடி என்னும் சொற்களொப்ப, முன்னிலையில் ஏவற்பொருண்மேல் ஒருமைச் சொல்லாய் வடமொழி தமிழ்ச் சொற்களினின்று வேறாய் வரும். பிறவுமன்ன. (க)

61. சில தாதுக்கள்

நடவடு செய்பண்ணு நண்ணுபோ சிந்தி நவிலுண்ணிரு
கிடவிடு கூறு பெறுமறு கோள்ளளமை வாழ்கிளேவெல்
கடநடு தங்கு கசிபோசி பூசு மிகுபுகுசேல்
இடுமுடி யேந்துகோல் இவ்வண்ண மற்று மியற்றிக்கொள்ளே.

முன்பிற்சூத்திரத்தில் தாதுக்களைப் பிறப்பித்துக்கொள்ளச் சொன்னானேயாயினும், அவற்றுட்சில காட்டிய வண்ணமே இயற்றிக்கொள்க என்றான்; ஈண்டு மேலும் சில தாதுக்கள் காட்டுகின்றான்.

(இ-ள்.) 'நட' என்பது முதல் 'கொல்' என்பது ஈறாக முப்பத்து மூன்று தாதுக்களுங் கண்டு, பிறவும் இப்படியே தோற்றுவித்துக் கொள்க (எ-று.)

அவற்றுள் கருமத்தை நீங்காத தாது, கருமத்தை நீங்கின தாது எனத் தாது இரு வகையாம். வடமொழிப் புலவரும் சகருமகம் அகருமகம் என வழங்குவர். கிரியா பதங்கள் முடிக்குமிடத்து முன் சொன்ன விகாரங்களை அறிந்து வேண்டுமிடமறிந்து முடிக்க. (உ)

62. தாதுக்களோடு வான் முதலிய பிரத்தியங்கள் வந்து கூடி முடியும் வகை

வானுமை யம்புகை வல்லிவு தல்லலல்லன் பானலைகுத்
தான்விதி வைசி முதல்சுப் பிரத்தியந் தாதுவின்பின்
ஆன வினைக்குறிப் புக்கா ரகத்தி லணையுமென்ப;
ஊனழில் சொல்லொன்று முன்புநின் ருகலு முண்டென்பரே.

(இ-ள்.) வான், உ, மை, அம், பு, கை, வல், இ, வு, தல், அல், அன், பான், அலை, கு, தான், வி, தி, வை, சி என இவை முதலாகும் பிரத்தியமுஞ் சுப்பிரத்தியமும் தாதுவின் பின் வினைக்குறிப்புப் பொருளினுங் காரக பதப் பொருளினும் வரப்பெறும்; இப்படித் தாதுக்களின் பிரத்தியம் பின் பெற்று முடியுமிடத்து மற்றொரு பெயர்ச்சொல்லு முன்பு நின்றும் முடியும் (எ-று.)

வரலாறு:—

போவான், அறிவான், செய்வான், கருதுவான் எனவும்;
பூச்சு, நாற்று எனவும்;
மென்மை, வன்மை எனவும்;
ஆட்டம், நாட்டம் எனவும்;
கற்பு, சிரிப்பு எனவும்;
அறிக்கை, நடக்கை எனவும்;
இளவல், கறுவல் எனவும்;
காணி எனவும்;
அறிவு, கரவு எனவும்;
போதல் எனவும்;
செல்லல் எனவும்;
ஊணன் எனவும்;
காப்பான் எனவும்;
சுடலை எனவும்;
போக்கு எனவும்;
கடந்தான் எனவும்;
கேள்வி எனவும்;
உண்டி எனவும்;
போர்வை எனவும்;
காட்சி, மாட்சி, நீட்சி எனவும் வரும்.

முதல் என்றமையால் கொல்லை, கலை என ஐ முதலிய வருவனவுங் கொள்க. கலா என்னும் வடமொழி கலையாயிற்று எனினும் அமையும்.

சுப்பிரத்தியத்தான் விதை, அவிழ், பார், சரி, மடி முதலிய கொள்க. இனி, சுப்பிரத்தியத்தான் எண், பண் எனக் கடை குறைந்தும், தீன், ஊண், வீடு என விகாரப்பட்டும் வருவனவுமாம்.

இவை காரகத்திலும் வினைக்குறிப்பினும் பேதித்தவாறு:—

தறிக்கப்படுதலால் தறி, முறிக்கப்படுதலால் முறி, பொதியப்படுதலால் பொதி எனவும்; இவ்வண்ணம் துளை, விதி, உரி எனவும் கருமக் காரகத்தில் முடிந்தன.

விளக்குதலால் விளக்கு எனவும்; இவ்வண்ணம் அறிவு, சாவு எனவும்; கருத்தாக் காரகத்தில் முடிந்தன. இதனால் அணிவதென்பது அணி எனவும்; இவ்வண்ணம் மொழி, பேச்சு, உடை எனவும் கரணக் காரகத்தில் முடிந்தன.

இதனினின்றும் கழிவர் என்பது கழி எனவும்; இவ்வண்ணம் உறை, வீடு எனவும் அவதிக் காரகத்தில் முடிந்தன. இதன்கட் சுடுவார் என்பது சுடலை என ஆதாரக் காரகத்தில் முடிந்தது.

கேட்டல், அறிதல், சாதல், போதல் எனவும்; வீடு, கூடு, கூத்து, நோக்கு, காட்சி, சரி, காவல், ஆட்டம், ஓட்டு எனவும் வினைக்குறிப்பின் முடிந்தன. வினைக்குறிப்பாவது, வடநூலிற் பாவமென்பது; இதில் ப இருபத்து நாலாம் வியஞ்சனம்.

இனி முன்பு சில பெயர் நின்று பின்பு தாது பெற்றுப் பிரத்தியங்களான் முடியுமாறு:—

கூத்தாடி, நீறணிந்தான், அம்பலத்தாடி, பாம்பழிவுண்ணி, முற்சொல்லி, ஆறுகாட்டி, ஊடுபோகி, நாடுகாணி, கண்கட்டு, பழியஞ்சி, புகழேந்தி என வரும். பிரத்தியசாதி பதத்துடன் பிரத்தியங்களும் கூட்டிப் பெயர்ச்சொற்களை எல்லாம் வடமொழித் தாதுவிலே பொருந்துவன அறிந்து முடிக்க. அவை முடிக்குமாறு: (௲)

63. வடமொழித் தாதுக்களோடு பிரத்தியங்கள் கூடி முடியும் வகை

தம்மந்தி கன்வம் மனமணந் தன்னக னக்கோடியுச்
சம்மன் மமையகஞ் சர்திர மாவாயு வல்லில்மியான்
கம்மன் தவங்கல் முதலா யினதேய்வத் தாதுவின்கண்
விம்ம வருங்கா ரகத்தும் வினைக்குறிப் பின்கணுமே.

(இ-ள்.) தம், அம், தி, கன், வம், அனம், அணம், தன், அகன், அக்கு, இ, உ, சம், மன், மம், ஐ, அகம், சர், திரம், ஆ, ஆயு, அல், இல், மி, ஆன், கம், அன், தவம், கல் என்னும் இவை முத

லாய்க் கிடந்த பிரத்தியங்களும், பிறவும் வடமொழித் தாதுவிற் காரகப் பொருளினும் வினைக்குறிப்பினும் வரும் (எ-று.)

அவை வருமிடத்துத் தாதுப் பெயர் அனேகமாகையால், தாதுப் படலத்திற் கிடந்த பொருண்மேலும், அன்றியே முன் புண்டாய்க் கிடந்த சொல்லை முடித்துக் காட்டுகின்றமையால், அச் சொல்லின் பொருண்மேலும், தக்க பிரத்தியத்தால் தாதுவிற் பொருளாக்கி முடிக்க. அது தாதுப் படலத்திற் கிடந்த பொருளிலே முடித்தற்கு அரிதாதலிற் செய்யும்படி அறிந்து முன் சொன்ன விகாரங்கள் வேண்டும் இடமறிந்து இயற்றி முடிக்க. இப்படி முடிக்க எல்லாப் பெயர்ச்சொல்லும் முடிவனவாம். பிராதிபதிகமும், * சாதியும், உடன் பிரத்தியமும், தாதுவும் முடித்தற்கரிய என்பாருமுளர். முடிப்பான் பக்கம் வலியுடைத்து. †பிராதியில் அநுராகம், விகாரம், உபகாரம் முதலிய பிராதியினும், ஓங்காரம், அலங்காரம் முதலிய பிராதியினும் முடிந்து வடமொழித் தாதுக்கள் கிடந்தன எனக் கொள்க. பொருள் தெரியாத தாதுக்களையும் ஒரு சொல்லான் முடிக்க என்றால் இச்சொல்லாக முடிக்க என்றாய்ந்து, சொன்ன தாதுவிற் பிரத்தியம் வரின் முடியும் என்று கருதி, வேண்டும் விகாரங்களான் முடிக்க. இதற்குக் குணமும் விருத்தியும் வருக்கக் கிடப்பு எனக் கொள்க. (௪)

64. சில தாதுக்கள் அடையும் விகாரங்கள்

அய்யா யிகராந்த மவ்வா வுகராந்த மாவிமுன்பு
நையாது நிற்கும் பிரத்தியம் பின்வரின்; நற்குணமும்
போய்யா விருத்தியும் ஓரோ விடத்துப் புகழ்பெயர்ச்சொல்
உய்யா தொழியில் விகாரத்தை யோர்ந்துகொ ளொண்ணுதலே!

(இ-ள்.) உயிர் முன்னாகிய பிரத்தியம் பின்பு வரில் வடமொழித்தாதுவில் இகாராந்தம் ஆன தாதுக்கள் எல்லாம் அய், ஆய் என்னும் இரண்டையும் அந்தமாக உடையவாம்; உகாராந்தம் ஆன தாதுக்கள் எல்லாம் அவ், ஆவ் என்னும் இரண்டையும் அந்தமாக உடையவாம்; தாதுக்கள் தமக்கொத்த குணமும், விருத்தியும் ஏற்று வருவனவன்றாயின், வரும் விகார வேறுபாடுகளை ஓர்ந்துகொள்க. இவை முடிக்குமிடத்து முன் சொன்னவை

---

* 'ச ஆதியான பிரத்தியத் தொகுதியைச் சாதி என்றார்.'
† 'பிராதி தாதுவின் முன் வரும் உபசர்க்கம்.'—இவை பழைய குறிப்பாம்.

வைத்து முடிக்கின் அல்லது பெயர்ச்சொல்லெல்லாம் முடிக்க அடங்கா (எ-று.)

* வரலாறு :—

பூ + தம் = பூதம்,
தா + மம் = தாமம்,
நீ + தி = நீதி,
பா + கன் = பாகன்,
இ + வம் = ஏவம், இதில் இகரம் குணமானது.
புச + அனம் = போசனம், இது உகரம் குணமானது.
நி + அனம் = நயனம், இது இகாராந்தம் அய்யானது.
நி + அகன் = நாயகன், இது ஆயானது.
சா + அணம் = சாணம்,
விதி + தன் = வேந்தன், இது ஈற்றில் நகரவொற்றுதேசமாய், இகரம் குணமானது.
கிரு + அன் = கருடன், இது இருவினுக்கு அர் ஆனது.
துட + அக்கு = துடக்கு,
சர் + இ = சரி,
மத + உ = மாது, இதில் முதலுயிர் நீண்டது.
வா + சம் = வாசம்,
வா + மன் = வாமன்,
சா + மம் = சாமம்,
நட + ஐ = நடை,
நட + அகம் = நாடகம்,
நி + சர் = நேசர், இது குணமானது.
பா + திரம் = பாத்திரம்,
கட + ஆ = கடா,
வா + ஆயு = வாயு,
பட + அல் = படல்,
புட + இல் = புட்டில்,
பூ + மி = பூமி,
வலி + ஆன் = வல்லான்,
கட + கம் = கடகம்,
மத + அன் = மதன்,
கத + தவம் = கதவம், இது கடை குறைந்தது.

* 'இவ்வுதாரணங்கள் எல்லாருக்கும் உடன் பாடன்று,' என்பது பழைய குறிப்பு.

பா + கல் = பாகல்,

'அய்யர் யிகராந்தம்' என்பதனால், நி, சி, இலா என்னும் தாதுக்களின் பின், அனம், அகம் என்னும் பிரத்தியம் வந்து நயனம், நாயகம், சயனம், சாயகம், இலவனம், இலாவகம் எனவும்; 'அவ்வா வுகராந்தம்' என்பதனால், பூ என்னுந் தாது பவனம், பாவகம் எனவும் முடிந்தவாறு காண்க.

பிற பிரத்தியங்களானும் விகாரங் கருவியாகக் கொண்டு முடித்து வினைக்குறிப்பினும் காரகத்தினும் அடங்க எல்லாப் பெயரும் முடிக்க. 'விம்ம' என்று மிகுத்துச் சொல்லிய அதனால், பொருள் பாராதே சொல் முடிவைப் பார்த்து முடிக்கச் சொன்ன தாதுவெல்லாம் தமிழெழுத்தாற் சொன்ன என்பது. (ரு)

65. காரிதந் தாதுக்கள்

ஆட்டாற்று தீற்றுதி தாதுக் களையடற் காரிதமேன்(று)
ஓட்டா வறிக; உரையின் படியோப்பில் விப்பிபின்பு
மூட்டா வறிகா ரிதக்கா ரிதம்;முன்பிற் றுதுவின்கட்
காட்டா வறியவை காரிதக் காரிதக் காரிதமே.

(இ-ள்.) ஆட்டு, ஆற்று, தீற்று முதலிய காரிதத் தாதுக்களாம். 'முன்பிற் கேவலத் தாதுவோடு இவற்றிற்கு வேறுபாடென்?' எனின், ஆடு என்பது கேவலத் தாதுவாய் அத்தொழிலையே மற்றொருவனைச் செய்வி என்னும் பொருண்மேல் வினைக்குறிப்பிலே பிரத்தியம் பண்ணி ஆட்டு எனவும், இவ்வண்ணம் ஆறு, ஆற்று, தின், தீற்று எனவும் வந்து வேறுபட்டன. இப்படியே ஊட்டு, காட்டு, மூட்டு, வாட்டு, ஏற்று, நாற்று, ஓட்டு, கூட்டு, சூட்டு என வரும். ஆடினான், கேவலத் தாது; ஆட்டினான், காரிதத் தாது. இவற்றின் பின்பு வி, பி என்னும் பிரத்தியங்கள் வந்தால், அவை காரிதக் காரிதத் தாதுவாய், ஆட்டுவி, ஆற்றுவி, தீற்றுவி, கேட்பிப்பி, வார்ப்பிப்பி, உண்பிப்பி, தின்பிப்பி என வரும். ஒருசார் கருத்தாவையும் கருமத்தையும் வேறுபடுக்குமிடத்துங் கேவலக் கருத்தா, காரிதக் கருத்தா, காரிதக் காரிதக் கருத்தா எனவும்; கேவலக் கருமம், காரிதக் கருமம், காரிதக் காரிதக் கருமம் எனவும் வரும்.

உதாரணம் :—

உண்டனன், ஊட்டினன், ஊட்டுவித்தனன் எனவும்; உண்டது சோறு, ஊட்டினது சோறு, ஊட்டுவித்தது சோறு எனவும் கொள்க.

முன்பு சொல்லிப் போந்த காரிதக் காரிதத் தாதுவின்மேல் பின் சொன்ன வி, பி என்னும் பிரத்தியங்கள் சேர்ந்து காரிதக் காரிதக் காரிதமாம்.

உதாரணம்:—

ஆட்டுவிப்பி, ஊட்டுவிப்பி என வரும். கருத்தாக் கருமங்களும் அவ்வாறே கொள்க. (சு)

66. காலங்காட்டும் பிரத்தியங்கள்

தாதுவின் பின்பு தனய விறப்பின்; நிகட்சியின்கண்
ஓதுங் கிறசுவ்வோ டாநின்ற வாம்;கும்மும் மோடுமஃகான்
பேத மலியு மெதிரின்க ணுகும்; பிறவும்வந்தால்
ஏதமில் சந்திராந் தம்பிழை யாம லியற்றிக்கொள்ளே.

(இ-ள்.) தாதுக்களின் பின் த, ன, ய என்னு மூன்று பிரத்தியமும் இறந்த காலத்தைக் குறித்து வரும்; நிகழ் காலத்தின்கண், கிற, சு, ஆநின்ற என்னும் மூன்று பிரத்தியமுமாம்; கும், உம் என்பனவும் மகரவொற்றும் எதிர் காலத்தின்கணும்; பிற பிரத்தியங்களாலும் வரும்; அவை *சந்திராந்தம் என்று பெயராம்; இவை பிழையாமல் முடிக்க (எ-று.)

சந்திராந்தம் வேறு சில பதங்களுக்கு உறுப்பாய் நிற்பதல்லது தனித்து வரப்பெறுது.

வரலாறு:—

பிறந்த பிள்ளை, கண்ட எருது, நின்ற பசு எனத் தகாரமும்; ஊட்டின, தீற்றின, போன என னகாரமும்; சொல்லிய, ஆய என யகாரமும் இறந்த காலத்திலும்;

செய்கிற சாத்தன், செய்சு சாத்தன், செய்யாநின்ற சாத்தன் என முறையே கிற, சு, ஆநின்ற என்பன நிகழ் காலத்திலும்;

நிற்குஞ் சாத்தன், அறியும் சாத்தன், சாங்கிழவி எனக் கும், உம், மகாரங்கள் எதிர் காலத்திலும் வந்தன.

இவை எல்லாம் மூன்று காலத்தில் ஒரு காலத்தைக் குறித்தல்லது வாராவென்று கொள்க. 'பேத மலியும்' என்பதனால்,

* "சம் திரம் முதலிய அந்தப் பிரத்தியத் தொகுதியைச் சந்திராந்த மென்றார். இப்பதம் வடநூல் வியாகரணங்களிலிலது. சங்கிராந்தம் சந்திராந்தமென மரீஇயதென்பர் சிலர். சங்கிராந்தப் பதத்தின் பொருளுக்கும் மரூஉமொழி வழக்குக்கும் அது பொருந்தாது," என்பது பழைய குறிப்பு.

எதிர்காலத்துக்குச் சொன்ன பிரத்தியம் மூன்று காலத்துக்குமாம். அது பிரயோகத்திற் காண்க. (எ)

67. துமந்தப் பிரத்தியம்

மன்னுந் துமந்தம் பொருட்டுக்கப் பான்தற்கு வானவென்று
பன்னு மெழிற்குது வின்பின்பி லாகும்; பகரில்முன்பு
துன்னிய தாதுத் தொழிற்பொருட் டாகவென் னுந்தொடர்ச்சி
உன்னிய போதென்று தெய்வப் புலவ ருரைத்தனரே.

(இ-ள்.) பொருட்டு, க, பான், தற்கு, வான், அ என்னும் ஆறு பிரத்தியங்களும் துமந்தப் பெயரால் தாதுக்களின் பின்பு வரும். இவை ஆமிடத்து இப்பிரத்தியத்தான் முன்பு நின்ற தாதுவிற் கிரியாபதப் பொருளிற்குத் தொடர்ச்சி கருதின பொழுதாம் (எ-று.)

உண் என்னுந் தாதுவின் பின் துமந்தப் பிரத்தியம் ஆமிடத்து உண்கை என்னுந் தொழிலே குறித்தாம் என்பது. இச்சொல்லப்பட்ட துமந்தப் பிரத்தியாந்த பதங்களும் மற்றொரு பதத்திற்கு உறுப்பாக அன்றி வாரா என்க.

வரலாறு:—

உண்ணுதற்பொருட்டு வந்தான், ஊட்டுவித்தற்பொருட்டுப் போனான், நிற்கவேண்டி இருந்தான், கற்கத் தாற்பரியத்தான், அறிதற்குத் துணிந்தான், போதற்கு நினைத்தான், அறிவான் கருத்துண்டு, போவான் கருத்தில்லை, உண்ண வல்லன், பேச வல்லன், படிப்பான் வந்தான், கொடுப்பான் நினைந்தான் என வரும்.

. கருதினன் உண்ண, நினைந்தான் சொல்ல எனப் பதங்களின் பின்னும்; உண்ணக் கருதினன், சொல்ல நினைந்தான் என நடுவிலும் வருதல் காண்க.

துமந்தமாவது நாலாம் வேற்றுமையின் அல்லது வாராமையின், அதனையும் இதனோடு ஒப்பித்தே முடிக்க. இப்பொருள் வடமொழித் தாதுவில் பாதும், யாதும் எனத் தும் பிரத்தியத்தான் முடிந்தமையில், இதனைத் துமந்தப் பிரத்தியம் என்றார். (அ)

68. துவாந்தப் பிரத்தியம்

ஆவுமிட் டுந்துவ்வு மூவ்விறை டிய்யு மரும்புலவர்
ஏவுங் கருத்தா விருதொழிற் கொன்றிடின் முன்புநின்று
மேவும் பொருட்டாது வின்பின் வரும்மிக்க தன்பெயரே
பாவுந் துவாந்தம தாமென் றுரைப்பர் பனிமொழியே!

(இ-ள்.) ஆ, இட்டு, து, உ, இ என்னும் ஐந்து பிரத்தியமும் ஒரு கருத்தா உடையனவாய் இரண்டு தாது உள்ள பொழுது முன்பு நின்ற தாதுவின்கண் வரும்; அவையிற்றின் பெயர் துவாந்தமாம் (எ-று.)

நீத்து வா, பாத்து வா என்னும் வடமொழித் தாது துவாந்தப் பிரத்தியத்தால் வந்தமையின், துவாந்தம் என்றார்.

வரலாறு:—

உண்ணாப் போனான், உண்டிட்டுப் போனான், உண்டு போனான் எனவும்;

புகாப் போனான், புக்கிட்டுப் போனான், புகுந்து போனான், புக்குப் போனான் எனவும்;

சொல்லா நின்றான், சொல்லிட்டு நின்றான், சொற்று நின்றான், சொல்லி நின்றான் எனவும் வரும்.

பல தாது வரும்போது பின்பிலதனைக் குறித்து முன்பிலதனுக்கு ஆக்குக. உண்டு தின்று உலாவி யிருந்து போனான் எனக் கொள்க. (கூ)

69. இடைச்சொற்கள் நின்று முடியும் விதம்

இல்லையுண் டாலில் லிவைமுத லாவிடைச் சொற்களுக்கோர்
எல்லையுண் டாக வியற்றவொண் ணாவிசை யும்பொருளும்
ஒல்லையுண் டாகநிற் குமிட முந்தேர்ந் திவற்றேடொக்கச்
சொல்லையுண் டாக்குக வென்பது நூலின் துணிபொருளே.

(இ-ள்.) இல்லை, உண்டு, ஆல், இல் என்னும் இவை முதலாய்க் கிடந்த இடைச்சொற்கள் இன்னதென்று வரையறுக்கப் படாவாதலால், அவையிற்றினுக்கு இசையும் பொருளும், பொருந்தி நிற்கும் இடமும், உலகத்தோடு ஒக்கத் தேர்ந்து அறிந்து காட்டின சொல்லோடும் ஒக்க இடைச்சொற்களை உளவாக்கி முடிக்க என்பது இலக்கண நூல்களின் துணிபாம் (எ-று.)

சில இடைச்சொல் கடையில் நிகழும்; சில இடைச்சொல் அருகினின்று சொல்லிற்குறுப்பாம்; சில தாமே பொருள் தந்து நிற்கும்; சார்வில்லை, சேர்வில்லை, சார்வுண்டு, சேர்வுண்டு எனவும்; அறிந்தால், பிரிந்தால், அறியில், பிரியில் எனவும் வரும். பிறவும் அன்ன. இல்லை, உண்டு, ஆல், இல், அ, ஆன் எனவும்; இன்றி, இன்னம், போலும், ஆம், ஆக்கும், ஏ, ஓடு, வாழி, சாற்றி, நனி, ஒங்கு எனவும் பிறவாற்றானும் வரும். (கூ0)

70. தடைப்பொருளில் பிரத்தியம் வரும் வகை

ஆனாளா ரார்களோ டாதா விலன்மற் றிலளிலரும்
தானா மிலர்க ளிலதில தாதுத் தடைப்பொருட்கண்
மேனா முரைத்த மரபே வரும்;மிக்க வாதொழிமுன்
நானா வுளமற்று நற்றடை மன்னும் பிரத்தியமே.

(இ-ள்.) ஆன், ஆள், ஆர், ஆர்கள், ஆது, ஆ எனவும்; இலன், இலள், இலர், இலர்கள், இலது, இல எனவும் தடைப்பொருள் விளக்குந் தாதுவின் பின் முன் நாம் சொன்ன மரபே வரும்; ஆதொழி முதலாக மற்றும் பல பிரத்தியங்களும் உள தடைப் பொருளின் நிகழ்வன (எ-று.)

'மரபே வரும்' என்றது முன்புசொல்லப்பட்ட ஒருவன், ஒருத்தி, சிறப்பு, பலர், ஒன்று, பல என்னும் ஆறு சொல் அடைவே முன் பாறிற்கும் பின்பாறிற்குஞ் சொன்னவையாம். முன்னைய ஆறும் எதிர்காலத் தடைப் பிரத்தியம். பின்னைய ஆறும் தகரவொற்றுப் பெற்று இறந்தகாலத் தடைப்பிரத்தியமும், ககரவொற்றுப் பெற்று நிகழ்காலப் பிரத்தியமுமாம்.

வரலாறு:—

நடவான், நடவாள், நடவார், நடவார்கள், நடவாது, நடவா எனவும்; நடந்திலன், நடந்திலள், நடந்திலர், நடந்திலர்கள், நடந்திலது, நடந்தில எனவும்; நடக்கிலன், நடக்கிலள், நடக்கிலர், நடக்கிலர்கள், நடக்கிலது, நடக்கில எனவும் வரும்.

'ஆதொழி முன் நானாவுள' என்பதனால், நடவாதொழி, நில்லாவழி, மாயாப் புகழ், இது நடக்குதில்லை, இவை நடப்பனவன்று எனவும்; பிறவாற்றானும் வருவன கொள்க. தாதுக்கள் பல இணைந்து வரும்போது நில்லாதே போனான், வாராதேயிருந்தான் என ஆது எனும் பிரத்தியத்தால் துவாந்தமாக்கி உலகிற்கேற்க முடிக்க. (கக)

தாதுப்படலம் முற்றும்.

௬. கிரியா பதப் படலம்[1]

71. படர்க்கை என்னும் பிரதம புருடனில் வரும் கிரியா பதங்கள் இத்துணையாம் என்பது

ஒருவ னொருத்தி சிறப்புப் பலரோன் றொடுபலவை
மருவு படர்க்கை யொடுகால மூன்றையும் வைத்துறழத்
துருவ மலிபதி னெட்டாந் தொழிற்பதம்; தொல்கருத்தா
உருவ மலியும் பொருண்மேல் நிகழு மொளியிழையே!

(இ-ள்.) ஒருவனைக் கருதின சொல்லாதியான ஆறையும வைத்து, இதன் முன் படர்க்கை என்னும் புருடனாய் உள்ள பிரதம புருடனை வைத்து, இதனோடு இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனும் முக்காலத்தையும் வைத்து உறழப் பதினெட்டுக் கிரியா பதமாம். இவை கருத்தாப் பொருளின்மேல் நிகழும் உருபுகள் எனக் கொள்க (எ-று.) (க)

72. முன்னிலையினும், தன்மையினும் வரும் கிரியா பதங்கள் இத்துணையாம் என்பது

முன்னிலை தன்மை யிடத்தினிற் காலங்கள் மூன்றையும்வைத்
துன்னு மொருமை சிறப்பொடு பன்மையு முய்த்துறழ்ந்தால்
பன்னுந் தொழிற்சொற் பதினெட் டுளகருத் தாப்பொருண்மேன்
மன்னி நிகழ்தொகை முப்பதோ டாறும் வகுத்தறியே.

(இ-ள்.) முன்னிலை, தன்மை என்னும் இரண்டிடத்தையும், மூன்று காலங்களையும், ஒருமை, சிறப்பு, பன்மை என்னு மூவகைச் சொல்லையும் வைத்துறழப் பதினெட்டுக் கிரியா பதமாம்; இரு திறமுங் கூடிக் கருத்தாப் பொருண்மேல் முப்பத்தாறு கிரியா பதமாம் (எ-று.)

இவையிற்றின்கண்ணுஞ் சிறப்பினை மூன்று வகைப்படுத்திக் கொள்க.

ஒருவன், ஒருத்தி, ஒன்று என்பதை வேறுபடுக்கவொண்ணாமையில் ஒருமை எனவும்; பலர், பல என்பதனை வேறுபடுக்க ஒண்ணாமையிற் பன்மை எனவுங் கொண்டான். சாத்தா நிற்பாய், மரமே நிற்பாய் எனவும்; நாங்கள் நிற்பேம் எனவும்; பொன்

---

1. இது கிரியா பதங்களைக் கூறும் படலம் என்றும். கிரியா பதம் - வினைச்சொல்.

காள் நிற்பீர் எனவும் வரும். இனி இவை முப்பத்தாறு கிரியா பதங்களுக்கும் ஒன்றுக்கு இரண்டாக எழுபத்திரண்டு பிரத்தியம் சொல்கின்றான். (உ)

73. படர்க்கை இறந்தகால வினைகளில் பிரத்தியங்கள் வருமாறு

தானனுந் தாளாளுந் தாராருந் தார்களோ டார்களென்று
மேனு முரைத்த பிரத்திய மாகுந் ததுவதுவும்
தேனார் குழலி! தனவு மனவுந் திகழ்படர்க்கை
ஆறு விறப்பில் தொழிற்பத மாறிற்கு மாய்ந்தறியே.

(இ-ள்.) தான், ஆன், தாள், ஆள், தார், ஆர், தார்கள், ஆர்கள், தது, அது, தன, அன என்று சொல்லப்பட்ட இவை பன்னிரண்டு பிரத்தியமும் இறந்தகாலப் படர்க்கைக் கிரியாபதம் ஆறிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும் (எ-று.)

வரலாறு:—

உண்டான், உண்டாள், உண்டார், உண்டார்கள், உண்டது, உண்டன எனவும்; உறங்கினன், உறங்கினள், உறங்கினர், உறங்கினர்கள், உறங்கியது, உறங்கியன எனவும் வரும்.

அது என்பதற்கு இற்று என்பது ஆதேசமாய் உறங்கிற்று எனவும் வரும். அன என்பதின் முன்னின்ற அகாரத்தினுக்குப் பெருகவும் இகரம் ஆதேசமாய் உறங்கின என முடியும். பிறவும் விகாரத்தால் அறிந்து முடிக்க. பிறவுமன்ன. (ஙு)

74. படர்க்கை நிகழ்கால வினைகளில் பிரத்தியங்கள் வருமாறு

நின்றான் கிறானொடு நின்றாள் கிறாளிவை நின்றார்கிறார்
நின்றார்க ளோடுகின் றார்களு நின்றதுங் கின்றதுவும்
தென்றாத சீர்நின் றனகின் றனவுந் திகழ்படர்க்கைப்
பின்றா னிகழ்கை தொழிற்பத மாறிற்கும் பேர்த்தறியே.

(இ-ள்.) நின்றான், கிறான், நின்றாள், கிறாள், நின்றார், கிறார், நின்றார்கள், கிறார்கள், நின்றது, கின்றது, நின்றன, கின்றன என்னும் இப்பன்னிரண்டு பிரத்தியமும் நிகழ்காலப் படர்க்கைக் கிரியா பதமாறிற்கும் முறையே ஒன்றிற்கு இரண்டாக வைத்தறிக (எ-று.)

நில்லென்னுந் தாதுவினின்று இறந்த காலப் படர்க்கையில் நின்றான் முதலிய பிரத்தியங்கள் முடிந்தாங்குக் கிட, இரு என்னுந் தாதுக்களினின்றுங் கிடந்தான், இருந்தான் முதலாய பிரத்தியங்கள் நிகழ்காலப் பொருளில் வரும்; இஃது 'ஒன்றின முடித்தல்

தன்னின முடித்தல்.' இவை மூன்றும் உருவத்தாற் பேதப்பட்டும் பொருள் ஒன்றுதல் காண்க. இவற்றைத் துவாந்தமாக்கி முடித் தாலும் முடியுமெனிற் பொருள் வேறுபடுதல் காண்க. மேலுந் தடிக்கு முன் ஆ என்னும் இடைச்சொற் பெற்றல்லது முடியா. கிறுன் முதலிய பிரத்தியங்கள் நடுவே ஒரு ணகாரவொற்றுப் பெற்றுக் கின்றுன், கின்றுள் என முடிதலுமாம்.

வரலாறு:—

உண்கின்றுன், உண்கின்றுள், உண்கின்றுர், உண்கின்றுர்கள், உண்கின்றது, உண்கின்றன எனவும்; உண்ணுநின்றுன், உண்ணுநின்றுள், உண்ணுநின்றுர், உண்ணுநின்றுர்கள், உண்ணுநின்றது, உண்ணுநின்றன எனவும் வரும்.

நில், இரு, கிட என்னுந் தாதுக்களை இறந்தகாலப் படர்க்கையில் முடித்துப் பிரத்தியமாக்கிக்கொள்ள வேண்டியது.

போகாநின்றுன் என்னும் பதம் நின்றுனென்னும் பிரத்தியத்தான் முடியாதே துவாந்தமாக்கிப் போ என்னுந் தாதுவுக்கும், நில்லென்னுந் தாதுவுக்கும் ஒருவனைக் கருத்தாவாக்கி முடிக்கில் அது பொருந்தாது; அவன் போவென்னுந் தாதுவுக்கல்லது நில்லென்னுந் தாதுவுக்குக் கருத்தாவாய் நிற்றல் இல்லாமையினென்க. அது போல உண்ணுவிருந்தான் என்னும் பதம் உண்கை முற்பட்டு இருக்கை பிற்படாமையின், துவாந்தமாக்கி முடிக்கலாகாது. உறங்காகிடந்தான் என்னும் பதமும் உறங்குகை முற்பட்டுக் கிடக்கை பிற்படாமையின் துவாந்தம் ஆக்கல் ஆகாது. அதனால், நின்றுன் முதலிய பிரத்தியம் போல இருந்தான் முதலிய ஆறும், கிடந்தான் முதலிய ஆறும் பிரத்தியமாக்கி மரபு அறிந்து முடிக்க. (ச)

75. படர்க்கை எதிர்கால வினைகளில் பிரத்தியங்கள் வருமாறு

வான்பானும் வாள்பாளும் வார்பாரும் வார்களும் பார்களுஞ்சீர்
தான்பா வியவது வும்பது வுந்தத்தை யத்தைவென்ற
தேன்பாவுஞ் சொல்லி ! வனவும் பனவுந் திகழ்படர்க்கை
வான்பான் மலியு மெதிர்விற் றேழிற்பத மாறிற்குமே.

(இ-ள்.) வான், முதல் பன ஈறுன பன்னிரண்டு பிரத்தியமும் எதிர் காலப் படர்க்கைக் கிரியா பதம் ஆறிற்கும் ஒன்றற்கு இரண்டாக வரும் (எ-று.)

வரலாறு:—

உறங்குவான், உறங்குவாள், உறங்குவார், உறங்குவார்கள், உறங்குவது, உறங்குவன எனவும்; உண்பான், உண்பாள், உண்பார், உண்பார்கள், உண்பது, உண்பன எனவும் வரும். (ரு)

76. முன்னிலை தன்மை இறந்த கால வினைகளில் பிரத்தியங்கள் வருமாறு

தாயாயுந் தீருஞ் சாற்றிய தீர்களோ டீர்களுமாஞ்
சாயாத முன்னிலை யின்னிறப் பாம்; தன்மை தன்னிறப்பில்
தேயாத தேனேனுந் தேமேமுந் தோமோமு மாகுமென்ப
வேயார் பொதியத் தகத்திய ஞர்சொன்ன மெய்த்தமிழ்க்கே.

(இ-ள்.) தாய் ஆய் தீர் ஈர் தீர்கள் ஈர்கள் என்பன இறந்த கால முன்னிலைக் கிரியாபதம் மூன்றிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும்; தேன் ஏன் [தேம் ஏம்] தோம் ஓம் என்பன இறந்த காலத்தன்மைக் கிரியாபதமூன்றிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும். (எ-று.)

வரலாறு:—நீ உண்டாய், நீர் உண்டீர், நீங்கள் உண்டீர்கள் எனவும்; உறங்கினாய், உறங்கினீர், உறங்கினீர்கள் எனவும்; நான் உண்டேன், நாம் உண்டேம், நாங்கள் உண்டோம் எனவும்; உறங்கினேன், உறங்கினேம், உறங்கினோம் எனவும் வரும். (சு)

77. முன்னிலை தன்மை நிகழ் கால வினைகளில் பிரத்தியங்கள் வருமாறு

கிறுஅய்நின் றய்கிறீர் நின்றீர் கிறீர்கள்நின் றீர்களுமாய்
இறுநின் றனமுன் னிலையி னிகழ்ச்சி; இதன்கண் தன்மை
கிறேனென்நின் றேன்கிறேம் நின்றேம் கிறோமுநின் றோமுமென்றும்
தெறுநின்ற கட்பவ ளாந்திகழ் வாய்நற் றிருந்திழையே!

(இ-ள்.) கிறாய், நின்றாய், கிறீர், நின்றீர், கிறீர்கள், நின்றீர்கள் என இவையாறும் நிகழ் கால முன்னிலைக் கிரியாபதம் மூன்றிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும்; கிறேன், நின்றேன், கிறேம், நின்றேம், கிறோம், நின்றோம் என்பவை நிகழ் காலத் தன்மைத் தொழிற்சொல் மூன்றிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும் (எ-று.)

வரலாறு:—உண்கிறாய், உண்கிறீர், உண்கிறீர்கள் எனவும்;
உண்ணாநின்றாய், உண்ணாநின்றீர், உண்ணாநின்றீர்கள் எனவும்;
உண்கிறேன், உண்கிறேம், உண்கிறோம் எனவும்;
உண்ணாநின்றேன், உண்ணாநின்றேம், உண்ணாநின்றோம் எனவும் வரும். (எ)

78. முன்னிலை தன்மை எதிர்கால வினைகளில் பிரத்தியங்கள் வருமாறு

வாய்பாய்வீர் பீர்வீர்கள் பீர்க ளிவைமன்னு முன்னிலையில்
சாய்பாய் விடுமெதிர் காலம்; இதனுழித் தன்மைசொல்லின்
வேய்பா வியதோளி! வேன்பேன்வேம் பேமோடு வோம்போமுமாம்;
சேய்பா வியசெழும் போதிப் பிரான்தன் திருந்துரைக்கே.

(இ-ள்.) வாய், பாய், வீர், பீர், வீர்கள், பீர்கள் ஆறும் எதிர் கால முன்னிலைக் கிரியா பதம் மூன்றிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும்; வேன், பேன், வேம், பேம், வோம், போம் ஆறும் எதிர்காலத் தன்மைக் கிரியா பதம் மூன்றிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும் (எ-று.)

வரலாறு:—உறங்குவாய், உறங்குவீர், உறங்குவீர்கள், உண்பாய், உண்பீர், உண்பீர்கள் எனவும்; உறங்குவேன், உறங்குவேம், உறங்குவோம், உண்பேன், உண்பேம், உண்போம் எனவும் வரும். வேன், வென் எனவும், பேன், பென் எனவும் ஆதேசமாதலும் உண்டு. பிற விகாரங்களும் அறிந்து முடிக்க. (வு)

79. ஏவல் வினையில் பிரத்தியங்கள் வருமாறு

ஓங்காத முன்னிலைப் பாலேவ லாங்கா லொருமையிற்சுப்
பாங்கார் சிறப்பிலா மேயுமின் கப்பன்மை யாமிடத்து
நீங்காத மின்களுங் கள்ளாம்; இசைவினிற் கவ்வென்பதாம்;
தாங்காப் பரோக்கத் தினிற்போலு மாமென்பர் தாழ்குழலே!

(இ-ள்.) முன்னிலை ஏவலொருமைப் பொருளின் தாதுக்கள் சு என்னும் பிரத்தியத்தான் முடியும்; முன்னிலையேவற் சிறப்பின்கண் ஆமே, உம், மின், க என்னும் நாலு பிரத்தியமுமாம்; முன்னிலை ஏவற் பன்மையின்கண் மின்கள், உம், கள் என்னும் மூன்றுமாம். இசையென்னும் பொருளிற் கவ்வரும்; பரோக்கப் பொருளின் முன்பு மூன்று காலத்திலும் முடிக்குமாறு முடிக்க. அப்பதத்தின் பின் போலும், ஆம் என்னும் இரண்டு பிரத்தியமும் வரும் (எ-று.)

வரலாறு:—

உண், உறங்கு, கிட, நட, படு, அடு, நில், இரு என முன்னிலை ஏவலொருமை வந்தது.

நாம் போகாமே, நாம் நில்லும், நாம் போமின், நாம் நிற்க என நாம் என்னும் முன்னிலையொருமைச் சிறப்புப் பதத்தானும்; நீர் போமின்,

நீருண்ணும், நீருண்ணுமின் என நீர் என்னும் முன்னிலையொருமைச் சிறப்புப் பதத்தானும், முன்னிலை ஏவல் ஒருமைச் சிறப்பு வந்தது. நீர் என்னுஞ் சிறப்புப் பதம் உம், மின் என்னும் பிரத்தியங்களான் முடியும்.

நீங்கள் போமின்கள், *நீங்கள் நில்லும், நீங்கள் போங்கள் என முன்னிலை ஏவற்பன்மை வந்தது. நீங்கள் போமின் என ஒரோவிடத்துக் கள் அழிந்து முடியும்.

அவனென் செய்க, இவளென் செய்க, செய் காத்த நீயுண்க, இவனென் செய்ய உண்டான், நீயறிக என இசைவுப் பொருளில் வந்தது.

உண்டான் போலும், உண்டானும் எனப் பரோக்கம் வந்தது.

பரோக்கமாவது தன் முகப்பன்றியொழிவது. பிறவுமன்ன.(௬௯)

80. மூன்றிடத்தினும் துணிவின்கண் பிரத்தியங்கள் வருமாறு

தன்மைத் துணிவா மொருமைவன் பன்தஞ்சம் போமொடுவோம்
பன்மைக்க ணன்றிப் படர்க்கையின் கண்ணும் மொருமையிலாம்
பன்மைக்கண் வர்பர்கள் ளோடாகு முன்னிலை தன்னொருமைத்
தன்மைச் சிவைதிபன் மைக்கி விசிப்பித்திப் பின்னரவே.

(இ-ள்.) துணிவுப் பொருளின்கண் தன்மையொருமையில் வன், பன் என்னும் இரண்டு பிரத்தியமுமாம்; அப்பொருளில் தன்மைப் பன்மையை விளக்குதற்குத் தம், சம், போம், வோம் என்னும் நாலு பிரத்தியமுமாம்; படர்க்கையொருமையில் உம் என்னும் பிரத்தியம் வரும்; இதனில் உகரம் அழியவும் பெறும்; வர், பர் என்பன தனித்தும் கள்ளோடு கூடியும் படர்க்கைப் பன்மையின் கண் ஆம்; சி, வை, தி என்னும் மூன்றும் முன்னிலையொருமைப் பொருளிலாம்; கி, வி, சி, தி, பி என்னும் ஐந்தின் பின்பு ரகரவொற்றென்னும் பன்னிரண்டாம் மெய் பெற்றும், அவ்வெழுத்துக்கள் நீண்டும் முன்னிலைப் பன்மையின்கண் ஆம் (எ-று.)

வரலாறு:—அறிவன், கூறுவன், நிற்பன், உண்பன் எனவும்; லகர ஆதேசம் பெற்று அறிவல், கூறுவல் எனவும் தன்மையொருமைத் துணிவு வந்தது. நாம் கண்டம், நாங்கள் கண்டம், நாமறிசம், நாங்களறிசம், நாம் நிற்போம், நாங்கள் நிற்போம், நாம் அறிவோம், நாங்களறிவோம் எனத் தன்மைப் பன்மைத் துணிவு வந்தது.

---

* 'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை, அவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச், செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா' என்னுந் தொல்காப்பியத்தோடு மாறுபடாதோ எனின்; அற்றன்று; ஈண்டு ஏவற் பொருளாயிற்று என்க.—ஏவலில் மின் ஒன்றன்றோ ஆண்டும் பிறண்டுங் கூறியது எனின், புதியன புகுதலென்க,' என்பது பழைய குறிப்பு.

அவன் அறியும், அவள் அறியும் எனப் படர்க்கையொருமையில் உம் வந்தது. அவர் அறிவர், அவர் நிற்பர், அவர்கள் அறிவர்கள், அவர்கள் நிற்பர்கள் எனப் படர்க்கைப்பன்மை வந்தது.

நீ அறிசி, நீ அறிவை, நீ அறிதி என முன்னிலையொருமை வந்தது.

இச்சூத்திரத்திற் சிறப்பித்த சொல்லையும் பன்மையில் அடக்கினன். மற்றையவும் இடமறிந்து அடக்கி முடித்துக்கொள்க. (௯0)

81. வினைக் குறிப்புப் பொருளினும், கருமக் காரகத்தினும் கிரியாபதம் முடியும் விதம்

வினைக்குறிப் போடு கருமம் படர்க்கையின் மிக்கவோன்றை
அனைத்தேன்ன லாம்;அவ் வோடுபடுத் தாதுபின் னுமியற்கை
தனைக்கரு மம்பேறும்; தாதுக்கள் மற்றும் படுவினைப்போல்
நினைக்க வரும்;மற் றிவையும் பேயர்ச்சோல் நிகர்த்திடுமே.

கருத்தாக் காரகத்தின் முடியுங் கிரியாபதஞ் சொல்லி, வினைக் குறிப்புப் பொருளினும், கருமக் காரகத்தினும் வருங் கிரியா பதம் முடிப்பான் எடுத்துக்கொண்டான்; அஃதாமாறு சொல்கின்றான்.

(இ-ள்.) வினைக்குறிப்பினும், கருமக் காரகத்தினுந் தாதுக்கள் முடியுமிடத்துப் படர்க்கையொன்றினைக் கருதின கிரியா பதம் போல முடியும்; கருமக் காரகத்தின்கண் வருங் கிரியாபதம் முடியுமிடத்து முன்பு சில தாதுக்களின் பின்னாகப் படு என்னுந் தாது வந்து இடையே அகாரம் ஆகமமாய்க் கருத்தாவில் முடித்த முடிப்பெல்லாம் பெறும்;மற்றத் தாதுக்கள் படு என்னுந் தாதுவைப்போல அகரத்தை முன் பெற்று, ஒரு தாதுவின் பின்னாய் வந்து கருமக்காரகத்தில் முடிதலுமுண்டு. இச்சொன்ன கிரியாபதம் எல்லாம் பெயர்ச்சொற் போலக் காரகபத வேற்றுமையான் முடிகையுண்டு (எ-று.)

வரலாறு:—உண், உறங்கு என்னுந் தாதுவின் பின் படர்க்கை ஒன்றினைக் கருதின கிரியாபதம் போல உண்டது, உறங்கியது, உண்கிறது, உறங்குகின்றது, உண்ணாநின்றது, உறங்காநின்றது, உண்பது, உறங்குவது என இப்படி மூன்று காலத்தினும் முடியும். இவ்விடத்துப் பிரத்தியங்களின் முன்னின்ற அகரம் இகரமாகையும் உண்டு.

'வினைக் குறிப்போடு கருமம் படர்க்கையின் மிக்கவொன்றை அனைத்தென்னலாம்' என்றதனால், வினைக்குறிப்பு முடியுமிடத்து உண்டது, உண்ணப்பட்டது, என்றது, உறங்கியது, உறங்கப்பட்டது என வரும். இவ்வாறே அனைத்துங் கொள்க.

இகரமாக்கி உண்டியது, உறங்கியது, உண்கிறியது, உறங்குகிறியது, உண்கிறிது, உறங்குகிறிது, உண்பிது, உறங்குவிது எனவும் முடியும். இவையும் உண்ணப்பட்டது, உறங்கப்பட்டது என்றும். இவ்வாறே அனைத்துங் கொள்க.

'அவ்வொடுபடுத் தாதுபின் னுமியற்கை தனைக்கரு மம்பெறும்' என்றதனால், அறி, காண் என்னுந் தாதுவின் பின் அகரமும், அதன் பின் படு என்னுந் தாதுவும் வைத்து அறியப்படு எனக் கருமத் தாதுவாக்கி, இத்தாதுவின் பின் முன் சொன்ன பிரத்தியங்களை வருவித்து அறியப்பட்டான், அறியப்பட்டாள், அறியப்படாநின்றான், அறியப்படாநின்றாள், அறியப்படுவான், அறியப்படுவாள் எனப் பிறவும் முடிக்க. சிறப்புப் பலர் ஒன்று பல முன்னிலை தன்மை அனைத்தும் இவ்வாறே முடியும்.

'தாதுக்கள் மற்றும் படுவினைப் போல் நினைக்க வரும்' என்றதனால், காணத் தருவான், அறியத் தருவான், பாடுண்பான், சொல்லுண்பான் என முடிக்க.

'இவையும் பெயர்ச்சொல் நிகர்த்திடுமே' என்றதனால், கிரியா பதங்களையும் ஒன்றிற்குப் பெயராகக் கருதின பொழுது உண்பான், உண்பானை, உண்பானால், உண்பானுக்கு, உண்பான்பக்கனின்றும், உண்பானுடைய, உண்பான்பக்கல், உண்பானே என முடியும்.

இவையெல்லாம் விகாரங்கள் வரும் இடம் அறிந்து முடிக்க, விகாரமே தலைக்கருவியாக எடுத்துக்கொண்டமையால் என்க. (கக)

82. எழுத்துப்பிழைகள் வாராமல் காக்க என்பது

ஈரெட்டு மூன்றுமைந்து மாமுடல் தேற்றவு மீற்றுவன்மை
தேரிட்டு மூன்று முடலோடு தேற்றவுஞ் சிந்தைசெய்து
நேரிட் டுரைப்ப ரறிவோன் றிலாதவர் நீயவற்றைப்
பாரிட்ட மாகப் பெரியோர் தமதுரை பார்த்தறியே.

(இ-ள்) பதினாறும் உடலாயுள்ள ளகாரமும், பதினைந்தாம் உடலாயுள்ள ழகாரமுந் தம்முட்டேற்றவும், ஈற்று வன்மையாய் உள்ள றகாரமும், மூன்றும் உடலாயுள்ள சகாரமுந் தம்முட்டேற்றவும், பிறவாற்றானும் தமிழைப் பிழைக்க வழங்குவர் அறிவு இல்லாதார். அவற்றையெல்லாம் உலகத்தாரோடு ஒக்கத் தேர்ந்து பெரியோருரையே இலக்கியமாக அறிக (எ-று.)

வரலாறு:—நாளி, கோளி, மூளை, உளக்கு, வாளை, வளி எனவும்; விழக்கு, பழிங்கு, தழிகை, இழமை எனவும், பதினாறும் உடலும் பதி

ஊைந்தாம் உடலுந் தம்முட்டேற்றக் கருநிலஞ் சுற்றின தேசத்துச் சிலர் வழங்குவர்.

வெச்சிலை, முச்சம், கச்சை எனவும்; உற்றியம்போது எனவும்; மற்றியம் பிற்றை வாங்கி விற்றான் எனவும்; பதினேழாம் உடலும், மூன்றாம் உடலுந் தம்முட்டேற்றக் காவிரி பாய்ந்த நிலத்துச் சிலர் வழங்குவர்.

நெல்லுக்கா நின்றது, வீட்டுக்கா நின்றது என்று பாலாறு பாய்ந்த நிலத்துச் சிலர் வழங்குவர்.

மற்றும் இவனைப் பாக்க, இங்காக்க, அங்காக்க எனவும்; இப்படிக்கொற்ற, அப்படிக்கொற்ற எனவும்; சேத்து நிலம், ஆத்துக் கால் எனவும்; வாயைப் பயம், கோயி முட்டை எனவும்; உசிர், மசிர் எனவும்; பிறவாற்றானும் அறிவில்லாதார் தமிழைப் பிழைக்க வழங்குவர்.

இவையெல்லாம் உலகத்தார்க்கு ஒவ்வா என்று களைக. 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே' என்றறிக. (கஉ)

83. வடமொழிக்கிடப்பு, தமிழ்மொழி மரபு, காரகபதக் குற்றம் முதலியவற்றை அறிந்து, சொற்களை வழுவின்றி முடிக்க என்பது.

மதத்திற் பொலியும் வடசொற் கிடப்புந் தமிழ்மரபும்
உதத்திற் பொலியேழைச் சொற்களின் குற்றமு மோங்குவினைப்
பதத்திற் சிதைவு மறிந்தே முடிக்கபன் னூறுயிரம்
விதத்திற் பொலியும் புகழவ லோகிதன் மெய்த்தமிழே.

(இ-ள்.) தெய்வமொழிக் கிடப்பும், தென்தமிழ் மரபும், வேண்டினவாறு பகரும் ஏழைச் சொல்லும் காரக பதக் குற்றமும் அறிந்து வழுவாமல் முடிக்க (எ-று.) (கங)

கிரியா பதப் படலம் முற்றும்.

இவற்றுச் சொல்லாராயப்படும் என்பது

வேற்றுமை யெட்டுந் திணையிரண்டும் பாலைந்தும்
மாற்றுதற் கோத்த வழுவேழும்—ஆறுரெட்டும்
எற்றமுக் காலமிட மூன்றோ டிரண்டிடத்தால்
தோற்ற வுரைப்பதாஞ் சொல்.

இவ்வண்ணம் எட்டு வகைப்படுத்துச் சொல்லாராய்ந்தார் தொல்காப்பியனார்.

அவற்றுள் வேற்றுமை எட்டாவன, முன்பே சொல்லப்பட்டன.

திணை இரண்டாவன, உயர்திணையும் அஃறிணையும்.

1 "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனா ரவரல பிறவே
ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே."

2 "ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் லுயர்திணை யவ்வே."

3 "ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொல் லஃறிணை யவ்வே."

என்பதனாலறிக.

பாலைந்தாவன, ஆண்பாற் சொல்லும், பெண்பாற் சொல்லும், பலர்பாற் சொல்லும், ஒன்றன்பாற் சொல்லும், பலவின்பாற் சொல்லும் எனக் கொள்க.

வழுவேழாவன,

"திணைபால் மரபு வினாச்செப்புக் காலம்
இடனோடே ழாகு மிழுக்கு."

என்பதாலறிக.

திணை வழுவாவது, எருது கிடந்தான், சாத்தன் வந்தது என உயர்திணையும் அஃறிணையும் தம்முள்ளே மயங்கச் சொல்லுதல்.

பால் வழுவாவது, கொற்றன் கிடந்தாள், சாத்தி கிடந்தான் என ஐந்து பாலையுந் தம்முள் மயங்கச் சொல்லுதல்.

மரபு வழுவாவது, எருமையிலண்டம், குதிரைச் சாணகம் என மரபு பிழைக்கச் சொல்லுதல்.

வினா வழுவாவது, 'சந்திரனைப் பாம்பு தீண்டுவது இரவோ, பகலோ?' என வினவுதல்.

செப்பு வழுவாவது, 'மதுரைக்குப் போக வழியேது?' என்றாற்குக் 'குதிரைக்குப் புல் பறிக்கிறேன்' என்றல்.

கால வழுவாவது, இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்னும் மூன்று காலமும் தம்முள் மயங்கச் சொல்லுதல்.

அது 'நாளைப் போனான்' என்றாற்போல வருவது.

இட வழுவாவது, தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடமும் தம்முள் மயங்க வருவது.

அது 'நீ உண்டேன், நான் போவாய், அவனறிவேன்' எனச் சொல்லுதல்.

---

1. தொல். சொல், சூ. 1.
2. ,, ,, ,, 2.
3. ,, ,, ,, 3.

ஆறு ஒட்டாவது, ஆறு தொகை; அவை வேற்றுமையழிந்து தொக்க வேற்றுமைத் தொகையும், உம்மை அழிந்து தொக்க உம்மைத் தொகையும், வினை அழிந்து தொக்க வினைத் தொகையும், பண்பு வர்க்கம் அழிந்து தொக்க பண்புத் தொகையும், உவமை அழிந்து தொக்க உவமைத் தொகையும், வந்த மொழி அன்றிப் பிற மொழி அழிந்து தொக்க அன்மொழித் தொகையும் ஆம்.

மூன்று காலமாவன, எதிர் காலம், நிகழ் காலம், இறந்த காலம் என இவை.

இடம் மூன்றாவன, தன்மை, முன்னிலை, படர்க்கை.

இனி இரண்டிடமாவது, வழக்கிடமும், செய்யுளிடமும் என இவை. வழக்கிடமாவது, தமிழ் வழங்கி வரும் இடத்து வழங்கி வருகிற வழக்கு. செய்யுளிடமாவது, வழக்கிற் சிறுபான்மையான் வந்து செய்யுட்களின் நிகழும் நிகழ்ச்சி எனக் கொள்க. (க)

௮௫. இதுவும் அது

திணைபால் மரபு வினச்சேப் பிடஞ்சோல்
இணையா வழுத்தோகையோ டேச்ச—மணையாக்
கவினையபார் வேற்றுமையுங் காலமயக் குங்கோண்
டவிநய ஞாராய்ந்தார் சோல்.

எனப் பதின்மூன்றால் ஆய்ந்தார் அவிநயனார். இவற்றுள் தொல்காப்பியனார் ஆராய்ந்தன நீக்கி மயக்கமும், சொல்லும், செப்பும், வினாவும், எச்சமும், மரபும் ஏற்றமாகச் சொன்னார்.

மயக்கமாவது, வேற்றுமை மயக்கமும், இடமயக்கமும், கால மயக்கமும் முதலியவாம் எனக் கொள்க.

சொல்லாவன, பெயர்ச் சொல்லும், பெயர்த் திரிசொல்லும், தொழிற்சொல்லும், தொழில் திரிசொல்லும், இடைச் சொல்லும், உரிச்சொல்லும் எனக்கொள்க.

செப்பும் வினாவும் ஆவன, அறிதல், அறியாமை, ஐயப்படுதல் தொடக்கத்தனவும்; நேர்தல், மறுத்தல் தொடக்கத்தனவுமாம்.

எச்சமாவது, பெயரெச்சம், தொழிலெச்சம் என இரண்டாம்.

மரபாவது, ஆண்மைப் பெயர் வரலாறு, பெண்மைப் பெயர் வரலாறு, தொழிற்பெயர் வரலாறு, உவமைப்பெயர் வரலாறு, விரவுப் பெயர் வரலாறு எனக் கிடந்தவெனக் கொள்க. (உ)

சொல்லதிகாரம் முற்றும்.

மூன்றாவது

பொருளதிகாரம்[1]

பொருட்படலம்[2]

84. பொருள்களின் தொகை

ஆற்று மகமே புறமே யகப்புற மன்றிவென்றி
போற்றும் புறப்புற மென்றும் பொருள்;அளப் பானளவை
ஏற்றும் பிரமேய மென்றும் வகுப்பர்; இவையுமன்றிச்
சாற்றும் புலவரு மெண்ணிறந் தாரேன்பர் தாழ்குழலே!

(இ-ள்.) *பொருளாவது அகப்பொருளும், அகப்புறப் பொருளும், புறப்பொருளும், புறப்புறப் பொருளும் என நான்கு வகைப்படும்; அளப்பானும், அளவையும், அளக்கப்படும் பொருளும் என மூன்று வகைப்படும் என்பாருமுளர்; மற்றும் பல வேறுபாட்டானும் வகுப்பாரும் உளர் (எ-று.)*

'பிரமேயம்' என்பது அளக்கப்படும் பொருள். (க)

85, 86. மேற்கூறிய பொருள்களின் வகை

முல்லை குறிஞ்சி மருதத் தொடுமுது பாலைநெய்தல்
சொல்லிய காஞ்சி சுரநடை கைக்கிளை பாலைதும்பை
இல்லவண் முல்லை தபுதாரந் தாபத மேய்ந்தவள்ளி
அல்லது காந்தள் குறுங்கலி வெட்சி யடல்வஞ்சியே.

குற்றிசை வாகை கரந்தை பெருந்திணை கொற்றநொச்சி
பற்றிய பாசறை முல்லை யுழிஞை யெனப்பகர்ந்த
மற்றிவை யையைந்து மாம்பொருள் நான்கினும் வண்புகட்சி
பற்றிய பாடாண் பொதுவிய லாதியும் பார்த்தறியே.

(இ-ள்.) *முல்லையும், குறிஞ்சியும், மருதமும், பாலையும், நெய்தலும், காஞ்சியும், சுரநடையும், கைக்கிளையும், முதுபாலையும், தும்பையும், இல்லாண்முல்லையும், தபுதாரமும், தாபதமும், வள்ளியும், காந்தளும், குறுங்கலியும், வெட்சியும், வஞ்சியும், குற்றிசையும், வாகையும், கரந்தையும், பெருந்திணையும், நொச்சியும்,*

1. *இது பொருள் இலக்கணத்தைக் கூறும் படலம் என்றும்.*
2. *இது பொருளைக் கூறும் படலம் என்றும்.*

பாசன்றமுல்லையும், உழிஞையும் எனச் சொன்ன இருபத்தைந்து நிலத்திலும் முன் சொன்ன நான்கு பொருளும் அடங்கும் எனக் கொள்க. பாடாண் பாட்டும், பொதுவியலும் முதலாயுள்ளவும் அறிந்து அடக்கிக்கொள்க (எ-று.) (உ, ௩)

89. அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னுமிவை பெறும் உரைகளின் தொகை

முல்லை குறிஞ்சி மருதத் தொடுபாலை நெய்தலைந்துஞ்
சொல்லு மகமா மதனுக் குரைதொகு சட்டகமோ(டு)
எல்லை நிகழு மிருபதே தா டேழுள; ஏனையவற்(று)
ஒல்லை நிகழு முறையு மறிந்துகொள் ஒண்ணுதலே !

(இ-ள்.) முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐந்து நிலமும் அகப்பொருளுக்கு அடையாளம் எனக் கொள்க. இப்படியுள்ள அகப்பொருளுக்குச் சட்டகம் முதலாக இருபத்தேழுரையுள. ஒழிந்த மூன்று பொருளின்கண் நிகழுமுறையும் அறிந்துகொள்க (எ-று.) (ச)

90, 91. மேற்கூறிய உரைகளின் வகை

சட்டக மேதிணை கைகோள் நடைசுட் டிடங்கிளவி
ஒட்டிய கேள்வி மொழிவகை கோளுட் பெறுபொருளோன்(று)
இட்டிகச் சொற்பொருள் எச்ச மிறைச்சி பயன்குறிப்புக்
கட்டக மெய்ப்பாடு காரணங் காலங் கருத்தியல்பே.

ஏற்றும் விளைவோ டுவம மிலக்கண மேய்ந்ததொல்லோர்
போற்றும் புடையுரை யேமொழி சேர்தன்மை யேயுமன்றி
ஆற்றும் பொருளடை வென்ரு முறையல் லவற்றினுக்கு
மாற்று முறையும் வகுக்கு முறையு மதித்தறியே.

(இ-ள்.) சட்டகமும், திணையும், கைகோளும், நடையும், சுட்டும், இடனும், கிளவியும், கேள்வியும், மொழியும், கோளும், உட்பெறு பொருளும், சொற்பொருளும், எச்சமும், இறைச்சியும், பயனும், குறிப்பும், மெய்ப்பாடும், காரணமும், காலமும், கருத்தும், இயல்பும், விளைவும், உவமமும், இலக்கணமும், புடையுரையும், மொழிசேர் தன்மையும், பொருளடைவும் என்னும் இருபத்தேழும் அகப்பொருளினுக்கு உரையாம். அகப்புறப் பொருளுக்கும்,

புறப்பொருளுக்கும், புறப்புறப் பொருளுக்கும் ஏற்கும் உரை அறிந்துகொள்க (எ-று.)

இவற்றுள் சட்டகமாவது, 'இஃதென்ன சட்டகம்?' என்றால், யாப்பதிகாரத்திற்கிடந்த முதல் வரி மொழி வகை கோள் உட்பெறு பொருள் என்றபடியே செய்யுளைத் தெரிந்து இன்ன சட்டகம் என்று சொல்வது.

திணையாவது, 'எந்நிலம் பற்றி வந்தது?' என்றால் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து நிலத்தில் இஃதிந்நிலம் பற்றி வந்ததென்று சொல்வது. (ரு, சு)

௯௦—9௧. ஐந்து திணைக்கும் உரிய முதல் கரு உரிப்பொருள்கள்

மலையிருள் முன்பனி கூதிர்வேற் பன்கண மூங்கில்மஞ்ஞை
இலைமலி வேங்கைசெங் காந்த ளிலவ மிகல்முருகன்
சிலைமலி குன்றுவர் தேனே புணர்தல் தினைசுனையுங்
கோலைமலி யானை குறிஞ்சியென் றின்ன குறிஞ்சியிலே.

ஓதிய வேனி லொடுபின் பனியகில் வெம்பரலே
தீதியல் வேடர் கலையோள் விடலைதிண் பாலையத்தங்
கோதியல் செந்நாய் பருந்தோடு கொம்பனை யார்ப்பிரிதல்
வாதியற் கன்னி குறும்பர்வெம் பாலை மடவரலே!

காடுகார் மாலை யிடையர் முதிரைகான் யாறுமுல்லை
நீடுமால் கொன்றை நிரைமேய்த்த லோடு நெடுங்குருந்தங்
கேடில்கார் தோன்றி சிறுபான் கிழத்தி மனையிருத்தல்
பீடுசேர் புன்கு பிறவுமுல் லைத்திணை பெண்கொடியே!

பொற்று மரையிந் திரன்பொய்கை பூந்தார் பழனஞ்செந்நெல்
வற்று வெருமை வளர்பனி நீர்நாய் *வடமகன்றில்
தெற்று மனையூட லூரன் கடைசியர் செங்கழுநீர்
சுற்று மருதத் திணையிலுண் டாவன தூமொழியே !

மீனே கடல்பனி கோண்கன் திமிலம் விளரிநிலாக்
கானே தரும்புன்னை கண்டலன் னஞ்சுறுக் காதலுப்பு
வானோர் வருணன் முதலை நுளைய ரிரங்கல்கைதை
தேனே தருமொழி யாய்!அந்தி நெய்தல் தெளிந்தறியே.

(இ-ள்.) இவையிற்றால் இன்ன திணையென் றறிக. (எ-று.)

* "சில பிரதிகளில் 'பிடிவலஞ்சி' என்பது பாடம்" என்பது பழைய குறிப்பு

[1]"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்."

எனவும்,

"மற்றவை தம்முள் மயங்கினு மப்பெயர்
பெற்ற திணையின் பெயர்க்கொடை பெறுமே."

எனவும் கூறினாராகலின், அவை மயங்கினும் அறிந்துகொள்க.

கைகோளாவது, களவும், கற்பும்; **கற்பாவது,** [2]காரணமோடியைந்து வருவது; **களவாவது,** [3]காரணமின்றி வருவது. இப்பாட்டுக் கற்பைக்கொண்டதோ களவைக் கொண்டதோ என்று சொல்வது.

நடையாவது, ஒழுக்கம். 'இப்பாட்டு எந்நடை பற்றி வந்தது?' என்றால், இந்நிலத்தின் ஒழுக்கம் பற்றி வந்தது என்றறிவது. அஃதாமாறு:—

குறிஞ்சி நடையியல்

" அறிந்தோ ராய்ந்த வன்புதரு வகையிற்
குறிஞ்சி நடைவகை கூறுங் காலை
அரிவைக் காகிய விறைவியை வர்க்கந்
தெரிமணிப் பூணோன் றெரியச் செப்பலும்
நன்னலம் புகழ்தலு நாணின மழுங்கலும்
பொன்னவிர் பூவையைப் புணர்ப்ப துரைத்தலும்
பிரிவுநனி கருதலும் பிரிவின்மை பேசலும்
பெருமை செய்தலும் பெறற்கரி தென்றலும்
ஊழ்வினை வலித்தலு முறுதெய்வம் பேணலும்
தோழனை நினைத்தலு மிகறலு மணுகலும்
இடத்தொடு புலம்பலு மேழையை வினவலும்
மடத்தகு சாயல் மாதரைக் காண்டலும்
வனம்புலம் பகற்றலு மார்வ நோக்கமுந்
குவளை யுண்கண் புதைத்துத் தலைவி யிறைஞ்சலும்
ஆற்றான் மொழிதலு மஞ்சிய நோக்கமும்
ஏற்ற வுவகையோ டினியவண் முறுவலும்
ஆங்கவன் புணர்தலு மவ்வயிற் புணர்ச்சியைப்

1. தொல். பொருள். அகத். சூ. 19.
2, 3. 'காரணம்' என்பது முன் பதிப்புப் பாடம்.

பாங்கற் குணர்த்தலும் பழியெனக் கூறலும்
தேங்கமழ் தாரோன் றெரியான் செப்பலுங்
இளைஞன் கழறலுங் கேடெனக் கூறலும்
இளையவன் வடிவு மிடனு மீதலும்
அண்ணல் கவற்சிக் கவள்வடிவு மிடனுந்
திண்ணிதிற் செப்பலுஞ் சென்றவன் காண்டலும்
வெறிகமழ் கோதை மிகுநலம் புணர்தலும்
அறிவு நிறையு மண்ணலை யெய்தலும்
வேறிடங் காட்டலு மிலங்கிழை யுணர்தலும்
ஊறன்று முடிவில்தன் பாங்கற் கூட்டமுந்
தையல் தளர்ச்சியை நோக்கித் தோழி
ஐயுறு நிலைமை யறிய வுரைத்தலும்
மனைவி போல வல்லவை மொழிதலும்
விழுப்பம் பேசலும் வேண்டா வென்றலும்
பழித்தக வுணர்த்தலும் பார்த்துற வுரைத்தலும்
பொருந்தா வென்றலும் பொய்யுரை புரிதலும்
வருந்து மென்றலும் வடிவிது வென்றலும்
நின்குறை நீயே சென்றுரை யென்றலும்
சீர்மலர்க் கோதைக்குச் செவ்வியன் றென்றலும்
நீர்மையன் றென்றலு நீங்குமி னென்றலும்
மூரன் முறுவலோடு முகமலர்ந் துரைத்தலும்
இரங்கி மொழிதலு மேத்தி மொழிதலும்
கலங்கி மொழிதலுங் கழறி மொழிதலும்
வள்ளல் தளர்ச்சியு மடலேற்று மொழிதலும்
உள்ளங் குளிர்ப்பித் தொண்தழை யென்றலும்
நெஞ்சக் தடங்கிய நின்றுகுறை யேற்றலும்
இன்சொ லிரக்கமும் வன்சொலின் மயக்கமும்
புகழ்தலு மயங்கி யுரைத்தலும்
கயற்கண் ணேழையைக் கவற்சி தீர்த்தலும்
பகற்குறி நேர்தலு மக்குறி யுரைத்தலும்
பகலிடங் காண்டலுஞ் சொற்பல வுரைத்தலும்
இற்செறி வுரைத்தலும் வரைவு கடாவலும்
இரவர விசைத்தலும் வரவு விலக்கலும்
மற்றவள் தளர்ச்சியு மிரவுக்குறி நேர்தலும்
எய்துகுறி வினவலு மேந்திழை மகிழ்வுடன்
குறியு ரைத்தலு மதுகேட் டுணர்த்தலும்
மெய்க்குறி யுரைத்தலு மிகுதியில் கொண்டலும்

எந்திழை யெடுப்பலு மிடப்புறத் தகற்றலும்
பூந்தண் சிலம்பன் புணர்ச்சியது குறியுஞ்
செவிலியது சேறலுஞ் சென்றெதிர் கோடலும்
கவ்வை பெரிதிவட் கண்டறி யென்றலும்
அம்பலு மலரு மாயின வென்றலும்
வம்பலர் கோதை வாட்டங் கூறலும்
நற்றாய் செவிலி யென்றிவர் நன்னுதற்
குற்றதை யறியாது நற்றிறம் படர்தலும்
கட்டுரை கூட்டலுங் கேட்டவள் கூற்றும்
ஒட்டிவெறி யயர்தலு மொண்ணுத லழுங்கலும்
இவ்விய லன்னைக் குணர்த்துக வென்றலும்
அவ்விய லொட்டாண் மொழிதலு மாயிடைப்
பூத்தரு புணர்ச்சியும் புனல்தரு புணர்ச்சியும்
காப்பெரும் புனத்துக் களிறுதரு புணர்ச்சியும்
தாய்தரு புணர்ச்சியும்
கூறிய தாயது குறிப்புவழி மொழிதலும்
வரைந்துநனி புகுதலும் வரைவவர் மறுத்தலும்
கரைந்ததற் கிரங்கலுங் கவற்சி தீர்த்தலும்
எதிர்கொளல் மொழிதலு மேற்றுமகள் மொழிதலும்
நிரவிய வியற்கையோ டின்னவை பொருளே."

நெய்தல் நடையியல்

"கையறு புலம்புங் கலவியுந் தலைதரு
நெய்தல் நடையியல் நேருங் காலைக்
கடலுங் கழியுங் கைதையுங் கானலும்
மடலிரும் பெண்ணையும் வான்சிறைப் புள்ளும்
கழுமிய விருளும் கதிரொளி மதியும்
பொழுதுங் காற்று மென்றிவை முதலாம்
எவ்வகைப் பொருளு மிரந்துகுறை யுறுதலும்
அவ்வகைப் பொருளுக் காற்றா துரைத்தலும்
விரைமலர்த் தாரோன் விழுப்பங் கூறலும்
இரவுக்குறி நேர்தலும் பகற்குறி மறுத்தலும்
இரவிடங் காட்டலும் பகலிடங் காட்டலும்
வரவறி வுறுத்தலும் வான்துயில் கோடலும்
இறைவனைத் தோளியை யின்துயி லெடுப்பலும்
துறைவனின் துயிலெழீஇத் துன்னுதற் பொருட்டால்
ஏதில் கூறலு மிடத்துய்த் தகற்றலும்

மேதகு கிளவியின் மீண்டெதிர் கோடலும்
சிறப்புறக் கிளத்தலும்
அம்பலு மலரு மாயின வென்றலும்
வம்பலர் தாரோய் வருந்தின னென்றலும்
குறிவழிப் படுத்தலுங் கொண்கன் தோன்றலும்
அறியக் கூறலு மருங்காப்பு மிகுதலும்
தாம்பிழைப் பின்மையுந் தலச்செல வருமையும்
வன்பழிக் கஞ்சலும் வாரலை யென்றலும்
இரவர லென்றலும் [1]பகல்வர லென்றலும்
மிரவும் பகலும் வாரா லென்றலும்
அவ்விரு பொழுது மாய்ந்துவர லென்றலும்
கவ்வை யுரைத்தலுங் களவவ னுரைத்தலும்
வரைதல் வேட்கையொடு வந்தவும் பிறவும்
உரைதரு பெருமையோ டுரைத்தனர் பலரே."

பாலை நடையியல்

"நூலியல் முறைமை நுண்ணிதி னுணர்ந்தோர்
பாலை நடையது பகருங் காலை
உடன்போக் குணர்த்தலு மப்போக் குரைத்தலும்
மடவோன் தன்திற மாண்புற நோக்கலும்
கற்பியல் காட்டலுங் கையுய்த்து மொழிதலும்
வெற்பிடைப் போதலும் மெல்லியல் தளர்தலும்
தளர்ந்தோ ளோம்பலுந் தம்மூபே ரென்றலும்
எதிர்ந்தோர் மொழிதலு மெதிர்கொளத் தவிர்தலும்
கண்டோ ரேத்திய கற்புடை யொழுக்கமும்
தண்தளிர் மாடந் தனக்குரை மாற்றமும்
தாங்கரும் பூசல் தன்னைய ரெழுச்சியும்
ஆங்கவள் வலித்தலு மமைந்தோர் திருத்தலும்
பதியுடன் படுத்தலும் பண்பெய்த மொழிதலும்
ஈன்றோ ளிரங்கலு மெதிர்ந்தோர் கூறலும்
அம்பலு மலரு மாதலு மயலோர்
தோன்றக் கூறிய தோமறு கற்பும்
அன்புறு செவிலி பின்செல வலித்தலும்
சென்றவள் வினவலுங் கண்டோர் தெருட்டலும்
ஒன்றிய வுள்ளமொ டுவந்தவள் மீண்டலும்
வறுஞ்சுரங் கடந்தவர் வளநாடு புகுதலும்
பிறங்குபுகழ்ப் புதல்வரைப் பெறுதலும் பெற்றோள்

1. இது வேறு பிரதியில் உள்ளது.

இருங்கிளை மருங்கின் தூது விடுத்தலும்
ஒருங்க வருந்தலு முவந்துடன் சென்றலும்
மாதரைக் கொண்டுதம் வாழ்பதி புகுதலும்
ஓதிய வினைத்து முரியவை புக்கபின்
பொருள்வயிற் பிரிதலு மப்பிரி வுணர்த்தலும்
இருள்புரி கூந்த லிற்றென மொழிதலும்
ஆற்று ணுதலு மதுகேட்டு மொழிதலும்
கூற்றங் கோளிய வுலகிய லுரைத்தலும்
பின்னைப் பிரிதலும் பெருஞ்சுரத் தழுங்கலும்
நனிபகர் பள்ளியின் நயந்துசெல வழுங்கலும்
பரத்தையிற் பிரிவொழித் தெல்லாப் பிரிவும்
உரைக்குங் காலை யுணர்ந்தன ளேக்கே."

மருத நடையியல்

"கருதற் கமைந்த கற்றோர் பூண்ட
மருத நடையது மாண்புறக் கூறின்
விழவு விரும்புதல்
பொழில்மகிழ்ந் திருத்தல் புனலாட் டயர்தல்
இவ்விடைப் பரத்தைய ரியலிடைப் பரத்தையர்
கல்வியொடு பழகிய காதற் பரத்தையர்
நல்லியல் நிலைமை நயப்புப் பரத்தையர்
சொல்லிய பரத்தையர் நால்வருங் கூற
ஆங்கவர்ப் புணர்ந்து அவர்க்கண் ணகறல்
வீங்குமுலைப் பரத்தையர் குழைநின்று விடார்க்குப்
பாங்கன் றோழி யென்னும்
ஆங்கவர் முதலிய ரிரந்துகுறை யுறுதல்
அவர்சென் றிரக்க வணியிழை மறுத்தல்
புகாறு கோதை பொறுத்தற் குறையிரத்தல்
ஊரன் புகுத லுவந்தெதிர் கோடல்
பேராச் சீற்றமொடு பெருமுனிவு பேசல்
விருந்தொடு புகுதல் புதல்வரொடு புகுதல்
திருந்திழை யரிவையைத் திரிந்தெதிர் கோடல்
செந்நிறக் கோலச் சிறுமி புகுதல்
அந்நிற நன்னு ளருங்கவி னுரைதல்
உண்ணிறை யுவகையோ டொண்ணுத லுவற்றல்
வெண்ணிறக் கோலத்து மேதக வுணர்தல்
பண்ணமைக் கிளவியொடு பள்ளியுள் மகிழ்தல்

அலைபுன லூர னாற்றான் புகுதல்
புலவிகற் பொன்றால் நண்ணிச் சீறல்
ஆற்றா னாகி யவளெதி ரூடல்
தேற்றே னென்ற தொழித்துவழி படுதல்
வளவய லூரன் வதுவை கேட்டுளை
உளநனி யடக்கி யுவந்தோள் போறல்
பண்ணி விடுதல் பான்மையின் மொழிதல்
எண்ணிய சிறப்பி னங்கையென் றிசைத்தல்
மனைச்செல் பரத்தையை மகிழ்ந்தெதிர் கோடல
முனித்தக வின்மை முயன்றுபண் பெய்தல்
ஆயிடை யவர்க ளமர்ந்தெதிர் கோடல்
போயஃ தீண்டல் புகழ்த லேத்தல்
பள்ளியுள் மகிழ்தல் பாங்குறப் புணர்தல்
எள்ளருந் தோழி யேற்பக் கூறலெனச்
சொன்னவை போல வன்னவு மெல்லாம்
பன்னுங் காலை யவ்வயிற் படுமே.”

முல்லை நடையியல்

“இறைச்சிப் பெருமையோ டிறைவழிப் பட்டுக்
கற்புக்கடம் பூண்டு கடப்பா டாற்றும்
முல்லைத் திணைநடை சொல்லுங் காலை
இறைவன் பிரிய வில்லிருந் தாற்றி
நினைவுநனி காத்தல் நீர்மையின் மொழிதல்
மாழையங் கண்ணி வருந்தினள் பெரிதெனத்
தோழி கவறல் கவன்ற தோழிக்
காற்றுவ னென்ற லவன்பய முரைத்தல்
வேற்றுமை கூறல் வெய்துயிர்த் திரங்கல்
மின்மலி கார்கண்டு மெலிந்தவள் மொழிதல்
தொன்மலி தோழி கால மறுத்தல்
காதல் பெயர்பு காரன் றிருவெனத்
தாதவிழ் கோதை தானே கூறல்
பருவங் காட்டிப் பிரிவொழி யென்றல்
வருவர் நமரென வாய்மொழி வலித்தல்
அந்தியு மாம்பலு மாலையு மணியுந்
தென்றலுந் திங்களும் பிறவு மன்னவை
பகன்றற வாற்றா ளகன்றவண் மொழிதல்
என்குறை யிதுவென விரந்துகுறை கூறல்

பொருள்வயி னிற்ற லவ்வயி னிலையும்
இயல்வளி முற்றுதல்
கார்கண் டுரைத்தல் கனவி னரற்றல்
போர்வேற் கண்ணி புலம்புமென் றிரங்குதல்
தூது விடுதல் தூதெதிர் கோடல்
போதவிழ் கோதை புலம்புநனி தீர்த்தல்
கோவொரூஉ மொழிதல் தேரவண் வருதல்
ஆர்மலி தேரை யமர்ந்தவ னேறல்
பாகனைக் கடாவெனப் பன்மணி நெடுந்தேர்
வேக நிலைமையின் விரைந்துநனி கடாவுதல்
இல்லியல் மடந்தைய ரியல்புரங் கேட்டல்
நல்லியல் நெடுங்கொடி நன்னகர் காட்டல்
இறைவன் சேருத லெதிர்சென்று வணங்குதல்
பொறைமலி மடந்தையைப் புலவித்தலை யளித்தல்
பருநா ளோக்கிப் பயன்கண்டு மொழிதல்
செருவேற் கண்ணி சேக்கையிற் களித்தல்
முல்லை நல்லியாழ் முறைமையிற் கேட்டலெனச்
சொல்லிய பிறவுஞ் சொன்னதன் பொருளே."

"குடவரைக் குறிஞ்சியுங் குணகடல் நெய்தலுங்
கடவ தாகுங் களவிற் குரித்தே."

"இருதிணைத் தொழிலு மியன்று தம்முள்
ஒருதிணைக் கோத லொழிந்தன வியல்பே."

"நன்னில மருதமுந் தொன்னில முல்லையுந்
துன்னருங் கற்பொடு தோன்றுந் தொடர்ந்தே."

"இடைநிலைப் பாலை யிருபாற்கு முரித்தே
படர்கொடி முல்லையின் பாற்படு மியற்றே.
ஒருவயிற் றணத்தலும் பொருள்வயிற் பிரிதலுங்
கருதிய களவிற் குண்மை யானே."

இனிச் சுட்டு என்பது, இப்பாட்டுத் தன்மையைச் சுட்டிற்று; படர்க்கையைச் சுட்டிற்று; முன்னிலையைச் சுட்டிற்று என்றறிவது.

இடனாவது, அகவிடனும் புறவிடனும் என இரண்டு வகைப் படும். அகவிடனாவது, மனையும் வளாகமும் பற்றி வருவது. புறவிட னாவது, மலையும், பழனமும், சோலையும், கடலும், நெறியும், ஆறும் பற்றி வருவது.

இனிக் கிளவி என்பது, கூற்றெனக் கொள்க. அது,

"நெஞ்சுக் குரைத்தல் கேட்டோர்க் குரைத்தல்
அந்தர மருங்கின வறிதரக் கூறலென
வந்த வகையின மூவகைக் கூற்றே."

"தலைமகன் தலைவி தோழி தாயே
கலைமருங் காப்பிற் செவிலி பாங்கன்
சிறியாட் பாணன் கண்டோர் கட்டு
வேலன் விறலி நலத்தகை யூரே
சேரி யயலோ டின்னன பிறவும்
ஆகு மென்ப வறிந்திசி னோரே."

மையால் இப்பாட்டு இன்னார் கூற்றென்பது.

கேள்வி என்பது,

"உயர்திணை மருங்கி னிவர்நனி கேட்டோர்
அஃறிணை மருங்கி னிதுநனி கேட்டதெனச்
சொல்லுதல் கேள்வி யென்மனார் புலவர்."

மொழிவகை என்பது, இப்பாட்டுச் செஞ்சொல், திரிசொல், வடசொல், திசைச் சொற்களில் இன்ன சொற்பற்றி வந்தது என்பது.

பொருள் கோளாவது,

"கொழுங்கொடி வள்ளி செழுங்குலை வாழை
தீங்கரும் பேமலர் திகழ்தரு பலவே
தேங்கம ழசோகு செருவிற் பூட்டே
பூம்புன லாறெனப் பொருள்கோ ளேழே."

"அவற்றுள்,
கொழுங்கொடி வள்ளி கூறுமுற் பொருளே;
செழுங்குலை வாழையின் சொற்பொரு ளீறே;
இன்றீங் கரும்பி விடையது பொருளே;
வன்றாட் பலவுக்கு முதலிடை பொருளே;
நற்பூ வசோகுக்கு நடுவது பொருளே;
விற்பூட்டு மேலுங் கீழும் பொருளே;
இரும்புன லாற்றினுக் கெங்கும் பொருளே."

என்றபடி இன்ன பொருள்கோள் என்றறிவது.

உட்பெறு பொருளாவது,

"உட்பெறு பொருளைச் செப்புங் காலைப்
பெற்றசொற் பொருளைச் செப்புதன் வழியே
மற்றொரு சொற்பொருள் வந்துநிற் பதுவே."

என்பதனால் உட்பெறு பொருளை அறிவது.

இனிச் சொற்பொருளாவது,

"சொற்பொருண் மேதகச் சொல்லுங் காலைத்
தனிச்சொ லெல்லாந் தம்பொருள் விளக்கலும்
புணர்ச்சொற் புணர்ந்து தம்பொருள் விளக்கலும்
முதன்மொழி விளக்கலும் கடைமொழி விளக்கலும்
எனமொழி பொருளை விளக்குத லியல்பே."

இதனாற் சொற்பொருளறிக.

எச்சமாவது, ஒழிந்தது. அது வினையெச்சம், பெயரெச்சம் என்று இருவகைப்படும். வினையெச்சமாவது, வினையொழிந்து நிற்பது; பெயரெச்சமாவது, பெயரொழிந்து நிற்பது.

இனி,

"இறைச்சிப் பொருள்வகை திறப்படத் தெரியில்
அங்கியற் பொருளே திணைநிலைப் பொருளே
வன்புலப் பொதுப்பொருள் மென்புலப் பொதுப்பொருள்
பெருமைப் பொதுப்பொருள் விருந்துப்பொதுப் பொருளென
இருமூன் றென்பர் தெரிநூற் புலவர்."

அவற்றுள், அங்கியற் பொருளாவது, அந்நிலத்தின் அங்கமாம் பொருளெனக் கொள்க. அவையாவன: குறிஞ்சி நிலத்துச் சந்தனமும், பொன்னும், வெள்ளியும் முதலிய. நெய்தல் நிலத்து உப்பும், இப்பியும், நந்தும், அலவனும், வலையும் முதலிய. பாலை நிலத்துச் சீழ்கு நாய் குருவியும், சிள்வீடும், அறுபுள்ளியும், கொம்பியும் முதலாயுள்ளன. மருத நிலத்துக்குக் கரும்பு, வாழை, தெங்கு முதலாயுள்ளன. முல்லை நிலத்துக்குப் பூவையும், பூனையும், தும்பியும், காவளையும், கார்போகியும் முதலாயுள்ளன.

திணைநிலைப் பொருள் முன்பே சொல்லப்பட்டன.

இனி வன்புலப் பொதுப்பொருளும், மென்புலப் பொதுப்பொருளும், பெருமைப் பொதுப்பொருளும், விருந்துப் பொதுப்பொருளும் ஆமாறு:—

"ஆரே புன்கை யரசு இளிஞ்சில்
கரரை பருத்தி கரும்பே முதலா
வன்புலப் பொருளென நன்குரைத் தனரே;
கீரை வழுதுணை இடையே சணப்பே

வேரிதணக் கந்த மருத முதலான
மென்புலப் பொருளென நன்குரைத் தனரே;
தாளியும் பூவலு நாவலுங் கழஞ்சும்
வேலியு மாறும் பதடியுங் கோரையுஞ்
சூரையுஞ் சுரையுஞ் சுரும்பும் வண்டுந்
துவரையு மத்தியு மைம்பெரு முதிரையுங்
காணுங் காலைத் திணைதொறுங் காணப்
பேணின ரென்மனார் பெருமைப் பொதுப்பொருளே;
ஒருதிணைக் குரியன வொருதிணைச் சேரின்
விரிநூற் புலவர் விருந்தென் றனரே."

இனிப் பயனாவது,

"பயனெனப் படுவது நயனுறக் கிளப்பின்
வழிபா டன்பே வாய்மை வரைவே
பிழையா நிலைமை பெருமை தலைமை
பொறையே போக்கே புணர்வே முயக்கே
நிறையே யெச்ச நேச நீர்மை
ஐய மகற லார்வங் குணமே
பையப் பகர்தல் பண்பே சீற்றங்
காப்பே வெறியே கட்டு நேர்தல்
பூப்பே புலப்பே புறையே புறைவியெனப்
பாற்பட வின்னவை பயத்த லாகும்."

இனிக் குறிப்பாவது,

"பெண்டி ராயினு மைந்த ராயினும்
உண்ட வேட்கை யுள்ளது கருதிக்
கொண்டொனி செய்வது குறிப்பெனப் படுமே.
அதுவே,
உற்றவ னொழுக்கமு முளுச்சிறு நோக்கமும்
பற்றியுரை யாடலும் பாங்கிற் கேட்டலும்
ஊடலு முணர்தலு முவத்தலும் பரிதலும்
பாடலும் பரவலும் பணிதலும் பணித்தலும்
அணங்குகொண் டகைத்தலும் அழுங்குற் றுணர்த்தலுங்
குணம்புகழ்ந் துரைத்தலுங் குற்றங் கூறலுஞ்
செய்தது பொறுத்தலுஞ் செய்வாய் திருத்தலும்
வைத்து மகிழ்தலும் வாட்டங் காண்டலும்
அணிந்தன களைஇ யாடைபெயர்த் துடுத்தலும்
நாணலு நகுதலு நயத்தலும் பார்த்தலுங்

கானல் கழியே கடலே காற்றே
பானல் பற்றை பனிமதிப் பருவம்
மலையே புனமே மழையே பிறவும்
என்றிவை பிற்றொடு நின்றுரை யாடலும்
ஒன்றிய கூற்றென் வுரைக்கல் வேண்டும்.''

இனி மெய்ப்பாடாவது,

"மெய்ப்பாட் டியல்வகை மேதக விரிப்பின்
மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றஞ்
செவ்விதில் தெரிந்து செப்பல்மற் றதுவே;
சுப்பிர யோகம் விப்பிர யோகஞ்
சோக மோக மரண மென்னும்
ஐவகைக் கணையு ளாக்கிய காமம்
பைய முறுகிடப் படரும்; அவற்றுள்,
சுப்பிர யோகம் சொல்லு நினைப்பும்;
விப்பிர யோகம் வெய்துயிர்ப் புறுதல்;
சோகம் வெப்புஞ் சோறுண் ணாமையும்;
மோக மயக்கமு மொழிபல பிதற்றலும்;
மரண மணங்கலும் வருந்தலு மென்பர்
அரணஞ் சான்ற அறிவி னோரே.
பிற்கணை நீக்கி முற்கணை நான்கும்
மெய்ப்படப் பட்டு வருந்தி விளம்பல்
அகமெய்ப் பாட்டே புறமெய்ப் பாட்டெனத்
தகநனி யுணர்ந்தோர் தந்துரைத் தனரே.
அகமெய்ப் பாட்டே யறியுங் காலை
விளர்ப்பே பசப்பே மெலிவே விதிர்ப்பே
துளக்கந் துயர்தல் தும்மல் சோர்தல்
வேர்த்தல் வெருவுதல் விம்முதல் விரும்புதல்
ஒப்பி லாமை யுருகுதல் மயங்குதல்
மூரி யுயிர்ப்பு மூர்ச்சனை முறுவல்
காரிகை கடத்தல் கழிகண் ணோட்டம்
இருந்துழி யிராமை யிராக மிகழ்தல்
வருந்திக் காட்டுதல் வாய்நனி யுறுதல்
சிந்தனை கூர்தல் சோர்துயி லின்மை
கண்டது மறுத்தல் காட்சி விரும்பல்
உண்டி விரும்பாமை யுரைத்தது மறுத்தல்
கண்ணீர் வழிதல் கனவுநனி காண்டலென
எண்ணூற் றுறையு மென்மனார் புலவர்.

புறமெய்ப் பாட்டே திறனுளிப் புகலில்
ஆரணங் காயவக் காமந் தானே
காரணம் பற்றிக் கருத்துவேறு பட்டு
மற்றுமொ ரேழாய் மெய்க்கண் டதனொடும்
எட்டா மென்ப ரியல்புணர்ந் தோரே.

அவைதாம்,

நற்சிருங் காரம் நகையே வியப்பே
அச்சம் வீர மூட்கோ ளிரக்கம்
இழிப்பெனத் தோன்றின் இவை;அவை தாமே
விழுத்தக வொன்றிற் கொரோரான் காக
மூப்பத் திரண்டென மொழிந்தனர் கண்டே.

அவற்றுள்,

இளமையும் வனப்பும் வளமையுங் கலவியும்
களனுகத் திரிதருஞ் சிருங்கா ரம்மே.
மயக்கம் பெயர்ப்பே யிகழ்வே நோக்க
நயப்பத் தோன்று நகையது நலனே.
தறுகண்மை புலமை பொருளே பண்பே
பெறுவழித் தோன்றும் பெருந்தகு வியப்பே.
மாற்றலர் விலங்கல் மற்றவர் சேருதல்
ஆற்றத் தோன்று மச்சத்து விளைவே.
பகையே செருவே யிகலே முனிவே
மிகுவழித் தோன்றும் வீரத்து விளைவே.
ஐவகைக் குரவர் தேவர் மன்னர்
எய்தா தெய்திய வியல்பவை உட்கோள்.
வருத்த மிகழ்வே வலியின்மை பெருமை
இரக்கம் தோன்று மின்னா விடத்தே.
நாற்றஞ் சுவையே தோற்ற மூறென்(று)
இந்நால் வழித்தாம் இழிப்பெனப் படுமே.
இற்றென வகுத்த வெண்ணாற் றுறையினும்
மற்றுப் பெயர்மயக் காயினும் வாய்ப்ப(து)
அந்நெறிப் பெற்றுழித் துன்னினர் கொளலே.
உட்கோ ணிலைமை யுணர வுரைப்பின்
மெய்க்கொளத் தோன்றினவை மெய்ப்பா டென்க."

இனிக் காரணமாவது, இன்ன காரணம் பற்றி வந்தது இப் பாட்டென்று அறிவது.

"அதுவே,
காரண மென்பது கால மூன்றின்
ஆரணங் காகிய வறிந்த பொருண்மேல்
சீரினிற் செப்புஞ் செந்நெறி பெறுமே.
அதுவே,
இன்னதென் றின்னே குரைப்ப வதன்வழிப்
பின்னே குரைத்த திதுவெனக்
கிளவியொடு கெழூஉம் விளைவின் கண்ணே."

காலமாவது,
"ஆண்டே யயன மிருதுத் திங்கள்
பக்க நாளே கிழமை நாழிகை
அஞ்சுங் கலையே காட்டே முதலா
ஈண்டிதற் கேற்ப திதுவென வெடுத்துக்
காண்டக வுரைப்பது கால வுரையே."

அன்றியும் இறந்தகாலம், எதிர்காலம், நிகழ் காலமுமாம்.

இனிக் கருத்துரையாவது,
"கருத்தெனப் படுவது கருத்துறத் தெரியில்
அறித லறியாமை யையுற லென்னும்
முறையுளி நோக்கின் மூவகைப் படுமே."

என்றமையாலறிக. அவைதாம்,
"அறிந்தறி யாமை யறிந்தவை யையுறல்
அறியா தறித லையுற் றிலாமை
எனஙனி வருத்த வித்திறல் வகைத்தே."

இனி இயல்புரையாவது,
"இயல்பெனப் படுவ தியல்புழி யெண்ணில்
இன்னுழியா யின்ன தியன்றதிது வென்ன
இன்ன முரைப்ப தென்மனர் புலவர்."

விளைவாவது,
"அதுதான்,
இடையூ றின்மையும் இன்பப் புணர்ச்சியும்
நெடுநிலைப் படாமையும்
கற்புங் காவலுங் கடனு நாணும்
இற்செறிந் திருக்கையும் இருஞ்சுரம் போதலும்
பாசறை முடித்தலும் பாத்தலின் விழவும்எனப்
பேசப் பட்டவும் பிறவும் போலப்
பரந்துமுன் பேசிய பயன்போற் றோன்றி
விரும்பியது விளைப்பது விளைவெனப் படுமே."

இனி, உவமையாவது,

"உவமமெனப் படுவ தவமற விரிப்பிற்
புகழே பழியே நன்மையென் றின்ன
நிகழு மொப்புமை நேர்ந்தன முறையே.

அவைதாம்,
கண்ணே செவியே மூக்கே நாவே
மெய்யே மனமே விளம்பின ஆறினும்
ஐய மின்றி யறுமூன் றுமே.

அவற்றுள்,
வடிவே வண்ண மொழிதன் மையென
நொடிவ கண்ணின் நோக்கிய வொப்பே.
எழுத்தியல் ஒலியும் எழுத்தில் ஒலியுமென
விழுத்தகு செவியின் வேண்டொப் பிரண்டே.
இனிய நாற்றமும் இன்னா நாற்றமும்
துன்னிய மூக்கினில் தோற்றும் பண்பே.
அறுவகைச் சுவையி னுவின் ஒப்பே.
நடுவு நிலைமை தண்மை வெம்மை
அறிவு நிலைமை பன்மை விழுப்பம்
நொப்பமு மழுக்குச் செருச்செருப் பென்றிவ்
வொன்பதும்
ஒழிவரும் பெருமை யுடம்பின் ஒப்பே.
வினையும் பயனுங் குலனுங் குணனும்
அளவு நிறமு மெண்ணோ டெழுவகை
பொறியி னுட்சியி னுடலின்
எய்திய வகையறிந் திசைப்ப தியல்பே.
மொழிந்த வேழு முதலுஞ் சினையும்
பண்பொடு பத்து மைவகை சேர்த்திக்
கொண்டே கூறினர் குறிப்புணர்ந் தோரே.
இல்பொருள் கேள்வி துணிவே யுவமஞ்
சொல்லிய நன்மையிற் சொல்லுந் துணிந்தோர்
கருதப் படுவகை தெரிந்துநனி வேறுமை
பொருளு முறுப்பு முதலாக் கூறினும்
ஏற்புழி நோக்கிய வெச்ச மாக
வாய்ப்பக் காட்டுக நூற்பொருள் வழக்கே.

அவைதாம்,
பாட்டின் பொருளொடு கூட்டித் தோன்றியும்

பொருவறு வனப்பிற் புனைந்துரை யாகியும்
இருவகை யியல்பு மேற்ப வருமே.
ஒப்பிக்கப் படுவ துவமமும் பொருளும்
ஒப்புடைக் காதல் புகட்சித னுயர்பே
அப்பொரு ளதுவாய்க் கிடப்பினு மதுவே.
இரண்டு மூன்று முதலாக் குணங்கள்
திரண்டவொப் புவமை திருந்த வுடைத்தே.
முடிக்கப் படுவது மொழிவது மிருகுணம்
அடுக்க வரினே தலைப்பா டொப்பாங்
கிளர்ந்தன வுவமை கேட்போர்க்குத் தகுமென
உளங்கொளும் பெற்றியி னுருபுநனி பெற்றுக்
கண்ணுள் ளதுபோற் காட்டுவ தாயின்
நுண்மை யுடையோ ருணர்ந்தனர் கொளலே.
அவ்வகைத் தன்றெனி லாதனும் பித்தனும்
ஒவ்வா வானை யொப்பித் தோனே.
நோக்கிய வொப்பினு மோரோ ரோன்பொருள்
ஆக்கி யுரைப்ப ததிசய வொப்பே.
ஐயமுந் துணிவு மாக வொப்புமை
செய்யவும் பெறுவர் தெரிந்திசி னோரே.
ஆங்க,
ஒப்புமைச் சொற்களைச் செப்புங் காலை
ஒப்ப வுறழ வுணர்ப்ப வுரப்ப
வேய்ப்ப மெத்த மெய்த்த விளக்கப்
புரையப் பொருந்தப் பொற்பக் கடுப்பக்
குரையக் கதழக் கருதக் கூட
நிகர மேவ நோக்க வோராங்(கு)
இகல வேம வியைப்ப வொப்ப
மான மருள மறல நீக்க
நீர வனைய நோக்கத் தொடிய
நுணங்கப் படிய துணிப்ப வுன்ன
வணங்க வாவ மலைய வென்ன
வெப்பத் தொழுப்ப விட்ட விருள
இன்ன வன்ன வென்று வியைபுந்
துன்னு மென்ப துணிந்திசி னோரே.
உருவ மாயி னெஞ்சக் கிளத்தல்
இல்பொரு ளிடையு மேற்பித் துரைப்பர்
பொருளறு கேள்விப் புலமை யோரே.

எல்லாப் பொருட்கு மெல்லா வியல்புஞ்
சொல்லா ருவமை யொருபுடைச் சொல்வர்
உவமைக் குவமை வழுவென மொழிப.
நற்பொரு ளுவமை தலைமைக் கேற்ப
திப்பொரு ணிற்கும் பகைமைக்குந் திகழ்ந்தே
அவற்றுள்,
ஈங்குத் தோன்றின வொப்புமை யிதுவெனப்
பாங்கறிந் துரைப்பது பண்பெனப் படுமே.''

இனி இலக்கணமாவது, சட்டக முதலா உள்ளனவற்றுக் கெல்லாம் இலக்கணஞ் சொல்லிக் காட்டுதல்.

இனிப் புடையுரையாவது,

"புடையுரை யென்பது நடைவகை தெரியின்
திறந்தெரி பாட்டி னிற்பொரு ளன்றியும்
புறம்பெற வருஉம் பொருள்வகை யுடைத்தே,''

இனி மொழிசேர் தன்மையாவது, வேற்றுமைத் தொகையும், வினைத் தொகையும், பண்புத் தொகையும், உவமைத் தொகையும், அன்மொழித் தொகையு முதலாய்க் கிடந்த பிறவாற்ருனும் அறிக.

இனிப் பொருணடையாவது,

"அனைமறி கோடலு மொழிமாற்றுக் கோடலும்
கொண்டு கூட்டு மிருநிர னிறையுஞ்
சுண்ணங் கோடலு முதலா யினவே.
அவைதாந் தலைமையு மின்மையுங் கூட்டிப்
பின்னருங் காரணம் பற்றிய
பொருட்டாத் தோன்றும் பொருள்வகை யுடைத்தே.''

இனி அகப்புறமும், புறமும், புறப்புறமும் ஆமாறு உணர்த்து கின்ருன்: (எ-கக)

5

97. அகப்புறம்

ஏற்று முதுபாலை பாசறை முல்லை யியன்றவள்ளி
தோற்றுஞ் சுரநடை யில்லவண் முல்லைதோல் காந்தளன்றி
மாற்றுங் குறுங்கலி தாபதங் குற்றிசை கைக்கிளையோ(டு)
ஆற்றும் பெருந்திணை யாந்தபு தார மகப்புறமே.

(இ-ள்.) இதனுல் அகப்புறமறிக (எ-று.)

"ஆய்ந்த வகப்புற மையிரண்டு மாயுங்கால்
காந்தள் கவிமடமா வேறுதல்; காமமிக்

காய்ந்தவர் வள்ளி வெறியாட்டாம் வாய்ந்த
கூரநடை மாதர் வருத்தம்; சுரனுள்
முதுபாலை தன்னை மொழியின் மதுமலர்த்தார்க்
காவலன் வீயக் கவன்ற ததுவாகும்
பாசறை முல்லை தலைமகன் பாசறைக்கண்
மாசறு மாதரை யுள்ளுதல்; மாசற்ற
இல்லவள் முல்லையும் அஃதேயாம்; சொல்லுங்காற்
றுற்றிசை கோல்வளை யாளைத் தலைமகன்
முற்றத் துறந்த துறவாம்; தூறுங்கலி
முற்றத் துறந்த தலைமகனை முன்னின்று
பொற்றொடி மாதர் பழிதூற்றும்; குற்றந்தீர்
தாபதம் காதற் றலைமகனை நீங்கிய
மேவரு மாதர் நிலையாகும்; மேவருஞ்சீர்
நீக்கப்பட் டாளை யுவந்த தலைமகன்
பார்த்துறூஉந் தன்மை யதுவாம் தபுதாரம்;
பத்து மகத்தின் புறம்.''

கைக்கிளையாவது, ஒருதலைக் காமம்.
பெருந்திணை என்பது, பொருந்தாக் காமம். (கஉ)

98. புறமும் புறப்புறமும்

வெட்சி கரந்தை விறல்வஞ்சி காஞ்சி யுழிஞைநொச்சி
உட்கிய தும்பையென் றேழும் புறமுயர் வாகைதன்பின்
கொட்கும் பொதுவியல் பாடாண் புறப்புறங் கொண்டிவற்றை
உட்கு மதுவிட் டுரவோ ருரைப்படி யோர்ந்தறியே.

(இ-ள்.) இதனாற் புறமும் புறப்புறமும் அறிக (எ-று.)
இனிப் புறப்பொருளேழையுஞ் சில விகற்பிக்குமாறு: (க௫)

99. வெட்சியின் வகை

ஒருப்பாடு நற்சோற் செலவோற் றுரைப்புப் புகல்பொருதல்
விருப்பா நிரைகோண் டவரைத் தடுத்தல் நெறிசெலுத்தல்
செருப்பாடு கைப்படை காத்தூர் புகல்திறங் கூறிடுதல்
பருப்பாடு பாலாற் களித்தல்வெட் சித்திறம் பான்மொழியே !

(இ-ள்.) இவை ஒருப்பாடு முதலிய வெட்சி விகற்பமாம். வெட்சியாவது, நிரை கவர்தற்பொருட்டு ஒருப்படுதலும், உரை சொல்லாய்தலும், அங்கு நோக்கிப் படையெழுதலும், ஒற்று வினையுரைத்தலும், நிரை நின்ற விண்டுவினைச் சூழ்போதலும், பொருதலும்,

நிரை கவர்தலும், பூசல் மாற்றுதலும், வழியிடை ஊறுபடாமைச் செலுத்தலும், கொண்ட நிரையின் செலவு காண்டலும், தம்மூர் மன்றத்துள் நிறுத்தலும், அவையிற்றைக் கூறிடுதலும், உண்டாடுதலும், உபகரித்தலும் எனப் பதினொன்காம் (எ-று.) (கச)

~~100~~ 98. கரந்தையின் வகை

ஓடாப் படையாண்மை யுன்ன நிரைமீட்டல் மன்னர்வெற்றி
கோடாத் திறங்கூறல் தன்திறங் கூறுதல் கோற்றப்போற்றார்
சூடாப் பொலிகுத லாரம ரோட்டல் துகளறுக்கல்
தேடாப் பொறித்தல் கரந்தைத் திறமற்றுந் தேர்ந்தறியே.

(இ-ள்.) இவை ஓடாப்படையாண்மை முதலிய கரந்தை விகற்பமாம். (எ-று.)

ஓடாப் படையாண்மையாவது, வருதார் தாங்குதல்; அஃதாமாறு:

“மாறுக முன்னுயர்த்தான் சேனை களமுழுதுந்
தானே வருமதனைத் தாங்கினான்—மேனாள்
அருகணையா வண்ண மடற்போரின் வென்று
வருகணையாற் பெற்ற மகன்.”

உன்ன நிலையாவது, வென்றி வினைமுன் வினைமுடித்தவன் திறங் கூறி உன்ன மரத்தை நற்போரினிடல் உன்னக் குறிசெய்கெனக் கிளத்தல்.

நிரை மீட்டலாவது, கொண்ட நிரை மீட்டல்.

மன்னர் கோடாத்திறங் கூறலாவது,

“உறையு மிடமன்றே பாரெலா முன்பால்
நெறியு நிலாமுத்த மன்றே—சிறுவாய்க்கால்
அற்றன்றே முந்நீ ரகன்றுயர்ந்த மாமேரு
புற்றன்றே நீமுனிந்த போது.”

தன் திறங் கூறலாவது

“ஒன்றேவென் னெண்கரத்துப் பட்டானங் குய்யுமேல்
ஒன்றே வெரிபாய்ந் துலக்கின்று—என்றேயும்
இத்தனையி னென்றன் றியானிற்க யாரெனின்
மற்றுன்னைப் பற்றிவோர் வந்து.”

கோற்றப் போற்றூர் சூடாப் பொலிகுதல், பனையும், வேம்பும், ஆத்தியுமென்று முக்கோக்களுக்குஞ் சொல்லப்பட்ட மூன்று தாருஞ் சூடிப் போர்ப் புக்கார்க்குப் பாடுதல்.

ஆரமரோட்டலாவது, பூசலிட்டு ஓட்டுவது.

துகளறு கல்தேடாப் பொறித்தலாவது, போருள் மடிந்தார் பெயர் பொறிக்கக் கல் தேடுதலும், பொறித்த கல்லு நீருட் குளிப்பித்தலும், கல் நடுதலுமாம்.

பெரும்படை என்பது, ஒரு தனியாள் வாள்வினை செய்து பட்டார்க்கு வினை முற்றுவித்து அவ்வினை வேறுபடுத்தல்.

வாழ்த்தல் என்பது, பல வாள்வினை செய்து பட்டார் கற்களைப் பார்த்துப் புகழ்ச்சி. (கரு)

~~101~~ 99. வஞ்சியின் வகை

அரவ மெடுத்தல் வயங்கிய லீகை விலக்கருமை
விரவு தனிச்சே வகம்வென்றி கூறல்வென் றூர்விளக்கம்
நிரவும் வழிவோடு சோற்று நிலைகோற் றவர்மேலிவும்
பரவு தழிஞ்சியேன் றின்னவை வஞ்சியின் பாற்படுமே.

(இ-ள்.) இவை வஞ்சி விகற்பமாம் (எ-று.)

அரவமாவது, படையெழுச்சி.

எடுத்தலாவது, படையெடுத்தல்.

வயங்கியலாவது, மேற்செல்வான் துணையரசரால் விளக்க முற்ற பெருமை.

ஈகையாவது, மேற்செல்லப்படுவதான தன் சேனைத் தலைவற்குப் பெருங்கொடைத் தண்ணளி நல்குதல்.

விலக்கருமையாவது, மேற்செல்லப்படுவான் தனது விலக்குதற்கரிய வென்றி மிகு செலவு.

தனிச்சேவகமாவது, வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமை.

வென்றி கூறலாவது, 'பத்துத் தலையோனைக் கட்டி உன்பாதத்து மடமொழியை மீளேனல்லேன்' என வருவது.

வென்றோர் விளக்கமாவது,

"நாழிகையிற் காற்கூறு தாழாது ஞாயிறுபோய்
வீழ விதியுடைய வேல்வேந்தே—யேழிசையோ
டேகாயோ பைய வயிற்றைக் குழையாகிப்
போகாயோ வென்றான் புகன்று."

என வருவது.

நிரவும் வழிகையாவது, *நாட்டக நாடு.*

சோற்று நிலையாவது, *மேற்செல்லப்படுவான் படையாளர்க்குப் பெறுமுறைமையால் உணு மிகுத்தல்.*

கொற்றவர் மேலிவாவது,

"யானைதேர் பாய்மா வெனவேந்த ருள்ளீட்டீர்
சேனை யுடையீர் சிலரல்லீர்—"

என வரும்.

பரவு தழிஞ்சியாவது, *உடைந்த படைஞர்பின் செல்லாமை.* (கசு)

102. காஞ்சியின் வகை

நிலையாமை வாழ்த்து மயக்க முதுமை நிலையினோடுந்
தொலையா மகிழ்ச்சி பெருமைதீப் பாய்தல் சுரத்திடைத்தன்
தலையார் கணவன் தனையிழத் தல்தனி யேயிரங்கல்
கலையார் மனைவிபேய் சூளுற வென்றிவை காஞ்சியென்னே.

(இ-ள்.) *இவை காஞ்சி விகற்பமாம் (எ-று.)*

நிலையாமையாவது, *அறம், பொருள், இன்பம், இளமை, யாக்கை, உயிராதி நிலையாமை.*

வாழ்த்தாவது, *கடவுள் வாழ்த்து முதலாயின.*

மயக்கம், *என்பது பூசல் மயக்கம்; அது புகழுடையன செய்து துஞ்சிய பெருமக்களைச் சுற்றத்தார் புலம்புதல்.*

முதுமையாவது, *தவத்தின்கண் நின்றோர்க்கு எடுத்துக் காட்டிய உவமைச் சொல்.*

[1] *"அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்*
கிவ்வுலக மில்லா கியாங்கு."

என வரும்.

---

1. *திருக்குறள்,* 247

நிலையாவது, கையறு நிலையும் தபுதார நிலையும் தாங்கிய நிலையும் தலைமைப் பெயல் நிலையும் என்ப.

அவற்றுள் கையறு நிலையாவது, கழிந்தோர் செய்த கழி வழீஇய ஒழிந்தோர் புலம்புங் கையறவு.

தபுதார நிலையாவது, காதலியையிழந்தார் காதல் நிலையென்பது.

தாங்கிய நிலையாவது, காதலனை இழந்தோள் நிலை.

தலைமைப்பெயல் நிலையாவது, அவர் பெருஞ்சிறப்பிற் புதல்வரைப் பெறாத் தலைவருந் தலைப்பெயல் நிலை; அது அங்கவனோடு இறந்தோரைப் பற்றி வருவது.

மகிழ்ச்சியாவது, ஒருபிராவதறிக உளங்கலந்தாற்கு என்பது.

பெருமையாவது, கூற்றம் மறுத்தற்கரிது; 'செயற்பாலன வல்லே செய்ம்மின்' எனப் பெரியோரால் சொல்லப்பட்ட சொற்பெருமை.

தீப்பாய்தலாவது, கணவனொடு நளியழற் புகல்.

சுரத்திடைத் தன் தலையார் கணவனை இழத்தலாவது, சுரத்திடைக் கணவனையிழந்த தலைமகள் முதுமை.

தனியேயிரங்கலாவது, துணையிழந்த தலைமகன் தனியேயிருந்திரங்கல்.

கலையார் மனைவி என்பது, களத்தில் வீழ்ந்த தலைமகனைத் தலைமகள் காத்த பெருமை. இஃது செருக்களத்துப் பேதையைப் பற்றிப் புணர்தல்.

சூளுறவாவது,

> "கருந்தடங்கண் மங்கையரை நேரக்குற்ற கண்ணும்
> பெருந்தடந் தோட்பிணித்த கையும்—பருந்தின்
> வளைவாயிற் பெய்யேனேல் வந்திரந்தார் துன்பங்
> களையாது மாற்றுகவென் கை."

என வரும். பிறவுமன்ன. (கஎ)

108. உழிஞையின் வகை

வேந்தன் சிறப்பு மதிலே றுதல்வென்றி வாட்சிறப்புக்
காந்தும் படைமிகை நாட்கோ ளோடுகாவ லேமுடிகோள்
ஏந்துந் தோன்கநிலை கோற்றநீர்ப் போர்ச்செல்வ மூர்ச்செருவே
போந்த முதிர்வு குறுமையென் றுமுழி ஞைப்புணர்ப்பே.

(இ-ள்.) இவை உழிஞை விகற்பமாம் (எ-று.)

வேந்தன் சிறப்பு:—

"மற்றிவனை மாலென் றறிந்தாலவ் வாளரக்கனை
பெற்றி கருதுவதென் பேதையர்காள்—மற்றிவன்றன்
கண்டான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
வண்டா ரரக்கன் வலி."

மதிலேறுதலாவது, பகைவர் மதிலை மேற்சென்றோன் சேனை ஏறுதல்.

வெற்றி வாட்சிறப்பாவது, பொருத வேந்தனது வாட்சிறப்புச் சொல்வது.

படைமிகையாவது:—

"ஐயிருப தோசனையு மாங்கோ ரிடமின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
வழிவந் திராமன் வடகரையா னென்றான்
விழிவந்து வேறாக மீட்டு."

நாட்கோளாவது, கொற்றக் குடையைத்தான் கொற்ற வாளைத்தான் குறித்து நாட்கொள்வது.

காவலாவது, அகத்தோனால் அமைக்கப்பட்ட அரண் காவல்.

முடிகோளாவது, தொக்கிலாரை முடி கொண்ட சிறப்பு.

தொகை நிலையாவது, இருவர் சேனையுந் தொக்க நிலை.

கோற்றமாவது, அரண் சூழ்ந்த வேந்தன் கொற்றச் சிறப்பு உணர்த்தல்.

நீர்ப்போராவது, வலியாரைப் பெரியோரைத் துணையின்றியே சென்று பொருதல்; பிறவுமன்ன.

உழிஞையெல்லாம் அரண் பற்றியே வரும். (கங)

104. வாகையின் வகை

நாற்குலப் பக்கமுக் காலங் களவழி நற்குரவை
ஆற்றல்வல் லாண்வேட்கை யார்பக்க மேன்மை யரும்பொருளே
தோற்றிய காவல் துறவு கோடைபடை யாளர்பக்கம்
மாற்றிய வொற்றுமை யோடுமற் றும்மிவை வாகையிலே.

(இ-ள்.) இவை வாகை விகற்பமாம் (எ-று.)

நாற்குலப் பக்கமாவது, ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கோடல், கொடுத்தல் என்னும் அந்தணர் அறுதொழிலும்;

ஓதல், வேட்டல், கொடுத்தல், படைக்கலத்தின் வாழ்தல், பல்லுயிரோம்பல் என்னும் அரசர் ஐந்தொழிலும்; ஓதல், வேட்டல், கொடுத்தல், உழுதல், பசுக் காத்தல், வாணிபம் என்னும் வைசியர் அறுதொழிலும்; கொடுத்தல், உழுதல், பசுக் காத்தல், வாணிகஞ் சிறப்பித்தல், நரம்புக் கருவி முதலாய கருவி கற்றல், அந்தணர்வழி ஒழுகல் என்னும் வேளாளர் அறுதொழிலுமாம்.

முக்காலமாவது, மூன்று காலம்.

களவழி, களத்திலழிவு.

குரவையாவது, இன்றோர்க்குரவையிட்டாடுதல்.

ஆற்றலாவது, ஆரியரணுத் தன் பகை மிகையை மதியாது பொரும் ஆற்றல்.

வல்லாண் பக்கமாவது, பகை வென்று விளங்கி மதிப்பெருவாகை வண்டாரத்துப் பெறுவான் செங்களத்துப் புலர்ந்து மாய்தல்.

வேட்கையார் பக்கமாவது, விருந்தோம்பலும் அழலோம்பலும் உட்பட எண்வகைத்தாம் பக்கம்.

மேன்மையாவது, பெரும்பகை தாங்கு மேன்மை; அது அருளொடு புணர்ந்த அகற்சியாம்.

"புனிற்றுப் பசியுழந்த புலிப்பிணவு தனாது
முலைமரூஉக் குழவி வாங்கி வாய்ப்படுத்
திரையெனக் கவர்ந்தது நோக்கி யாங்க
வேரிளங் குழவின் சென்று காண
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் துடங்கிய
வாளெயிற்றுக் கொள்ளையிற் றங்கினன் கதுவப்
பாசிலைப் போதி மேவிய பெருந்தகை
யாருயிர் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சிப் பெருமை தானே."

பொருளாவது, அறம், பொருள், இன்பம் மூன்று பொருளினும் விடாமற் புணர்ப்பது.

காவலாவது, பிழைத்தோரைத் தாங்குதல்.

துறவாவது, தவத்தினை வென்ற பக்கம். அஃதாவது,

"வாடாப் போதி மரகதப் பாசடை
மாணிழ லமர்ந்தோ னெஞ்சம் யாவர்க்கும்

அருளின் றீந்தே னிறைந்துநனி நெகிழ்த்து
மலரினு மெல்லிய ரென்ப ரதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கிநிமிர்ந் தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின்
யாதோ மற்றது மெல்லிய வாறே."

கோடையென்பது,

"பாசடைப் போதிப் பேரருள் வாமன்
வரையா ஈகை போல யாவிருங்
கொடைப்பட்டு வீரக் கொடைவலப் படுமின்
முன்னொ ருமுறைத் தன்னுழை யிரந்த
அன்பிலர்க் காவேண் டளவும் பருக
என்புதொறுங் கழிப்பிற்றன் மெய்திறந்து வாக்கிக்
குருதிக் கொழும்பதங் கொடுத்தது மன்றிக்
கருசிமிட் பட்ட கள்ளப் புறவின்
மாய யாக்கை சொல்லிய தாற்றன்
உடம்பு நிறுத்துக் கொடுத்தது மன்றி"

என வரும்.

படையாளர் பக்கமாவது, *கருதியறியும் படையாளர் பக்கம்.*

ஒற்றுமையாவது, *சிறியோர் நாணப் பெரியோர் கூறிய கூறு பாட்டிற் கழிமனத்தை ஒற்றுமை கொள்ளல்.*

'*மற்றும்' என்றமையால், எட்டியல் சான்றோர் பக்கமும் உட் படக் கண்டுகொள்க.*

எட்டியலாவன,

"அழுக்கா றிலாமை யவாவின்மை தூய்மை
ஒழுக்கங் குடிப்பிறப்பு வாய்மை—யிழுக்காத
நற்புலமை யோடு நடுவு நிலைமையே
கற்புடைய வெட்டுறுப்புக் காண்."

என்றமையாலறிக.

சான்றோர் பக்கமாவது, *பகைவர்கண்ணுந் தன்பாலார்கண் ணும் ஒப்புமையாகப் பாசறையுள்ளாச் சால்புடைமை கூறுதல்.*

அஞ்சாச்சிறப்பு *என்பதும் அது; பிறவுமன்ன.* (கசு)

105. தும்பையின் வகை

நிலைபாழி கோளோடு வாளாட் டுடைபடை நீள்களிற்றின்
தொலையார் மலைவிவை தும்பை விகற்பங்கள் தோன்மைமிக்க
தலையாய நூலவை தன்னினுங் கண்டிங் கொழிந்தவெல்லாஞ்
சிலையாரு நன்னுதல் மாதே! அறிந்துகொள் செப்பிடவே.

(இ-ள்.) இவை தும்பை விகற்பமாம் (எ-று.)

நிலையாவன, *தானை, யானை, குதிரை, தேர் இவற்றின் நிலை.*

பாழிகோளாவது, *கைப்படை விடுத்து மெய்கொண்டு பொருந் தறுகணாளர் ஏமப்பெருமை.*

வாளாட்டமாவது, *முரண் தேர் சூழ்ந்த களிற்றினத்தொடும் பட்ட வேந்தனையட்ட வேந்தர் தாமும் மறவரும் ஆடும் பொலிவு.*

உடைபடையாவது, *ஒருவர்க்குப் பல படைத் தலைவன் வாளினால் ஓச்சப்பட்ட உடைபடைத் தொகுதி. அதற்கு நூழில் என்றும் பெயராம்.*

களிற்றின் தொலையார் மலைவாவது, *களிற்றொடு மலைதலும் படுதலும் எனவிவை; பிறவுமன்ன.* (உ0)

106. பாடாண் வகை

புகட்சி பரவல் குறிப்புக் கொடிநிலை கந்தழியே
இகட்சி மலிவள்ளி யென்றிவை யாறு நெறிமுறையில்
திகட்சி மலைதரு பாடாண் பகுதிசெப் பாதனவும்
இகட்சியுண் டாகா வகைதேர்ந் தறித லியல்புடைத்தே.

(இ-ள்.) *புகட்சி, பரவல், குறிப்பு, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்றாறும் பாடாண் பகுதி விகற்பமாம்* (எ-று.)

புகட்சியாவது, *புகழ்.*

பரவலாவது,

"எனவாங்கு,
அகலி வாகின் றடியிணை பரவுதும்
பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலர்தரு பார்மிசை மன்னுவோ னெனவே."

என வரும்.

குறிப்பாவது, *நன்மை வேண்டின் தெய்வத்தை வழிபடும் என்பது.*

கொடிநிலையாவது. கொடியது தன்மை கூறுவது.
கந்தழியாவது, செருவில் தெட்பம் உடைமை.
வள்ளியாவது, முருகவேளைக் குறித்தது; பிறவுமன்ன.

இனி ஒருசாரார் சொல்லுமாறு:—அறமும், அறக்காரணமும், பொருளும், பொருட்காரணமும், இன்பமும், இன்பக் காரணமும் என்றிவ்வகைப்படுத்தும்; அகப்பொருளும்,புறப்பொருளும், அகப்புறப் பொருளும் என மூன்று வகைப்படுத்தும் மொழிவர்;

"அறம்பொரு ளின்ப மறனே காரணம்
அகமும் புறமு மகப்பு றமுமென
விலக்கில் இன்னவாகும் பொருட்டெரி வகையே"

என்றாராகலின். அறன் முதலாகிய மூன்று பொருளும் அகவுரையிற் கொள்க.

"களவுங் கற்புங் கைகோ ளாக
அளவி னன்பின தகமெனப் படுமே."

என்றமையால் அகப்பொருளறிக.

"அறத்தினும் பொருளினும் அன்பினு மறத்திறம்
வரைத்த நோக்கத்துப் புறத்திணை யாகும்."
"அவைதாம்,"
"வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி யுழிஞை தும்பை வாகை
எச்சப் படலமோ டிவையென மொழிப."

என்றமையாற் புறப்பொருளறிக.

"அறனும் வாட்கையு மொருதலைக் காமமும்
பொதுவியல் பாடா ணயநிலைப் படலமென்
றிவைக ளனைத்து மகப்புற மாகும்."

என்றமையால், அகப்புறப் பொருளை அறனும், வாட்கையும், ஒருதலைக் காமமும், பொதுவியலும், பாடாண் பாட்டும், கூத்த மார்க்கமும் என அறுவகையாய்ப் பகுதிப் படுத்துவார் எனக் கொள்க.

அஃதாமாறு: அறம் மனையறமும், துறவறமும் என விருவகைத்து. அவற்றில்,

"கொடுத்தலு மளித்தலுங் கோடலு மின்மையும்
ஒழுக்கத்தொடு புணர்தலும் புணர்ந்தோர்ப் பேணலும்
வழுக்கில் பிறவு மனையற வகையே."

"துறவு மடக்கமுந் தூய்மையுந் தவமும்
அறவினை யோம்பலு மறத்தினை மறுத்தலும்
மனையி னீங்கிய முனைவர்த மறமே."

என்பதனால் இவ்விரண்டும் அறிக.

"அறுவகைத் தொழிலினு மைந்துவகைப் பொருளினும்
உறுபுகழ் மன்னவ ருறவொடு நிலவு
மறுகில் வாட்கை வாட்சி யாகும்."

என்றமையால், வாட்கையறிக.

அறுவகைத் தொழிலும், வரைவு, வாணிகம், விச்சைச் சிறப்பு முதலியவெனக் கொள்க.

ஐவகைப் பண்டமாவன, நிலம், களம், காலேயம், மெய்ப் பொருள், மெய்ப்பண்டம் எனக் கொள்க.

ஒருதலைக் காமமாவது, ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என இரண்டு வகைப்படும்.

ஐந்திணைக்குப் புறனும் ஆனந்தமும் அறநிலைத் திணையுமாவது, பொதுவியற் படலம் எனக் கொள்க.

பரிபாடத்து மெய்வழிச்சியும், பரவலும், புகட்சியும், அன்புறுத்தலும், புகழ்வித்தலும், புனைதலும், அவாவின்நிலையும், தெய்வ வாழ்த்தும், பூவை வாழ்த்தும், பரிசில் நிலையும், இயன்மொழியும், கண்படை நிலையும், கலவி நிலையும், வெள்ளி நிலையும், நாடுபுகழ் நிலையும், களவழி நிலையும், பெருமங்கலமும், மணமங்கலமும், பொலிவு மங்கலமும், பரிசில் கடா நிலையும், ஆள்வினை வேள்வியும், வாயுறையும், செவியறிவும், குடை மங்கலமும், நாள்மங்கலமும், ஓம்படையும், புறநிலையும், ஆற்றுப்படையும் பாடாண்துறை எனக் கொள்க.

நயநிலைப் படலமாவது, நாடகம்; கூத்தமார்க்கமென்பதுமது. அது பெரியோரைத் தலைமக்கள் மேவச் செய்யப்பட்ட மெய்ப் பொருள் பற்றி வருதல். சிறியோரைத் தலைமக்களாக்கி ஒளியும் விருத்தியும் சாதியும் சந்தியும் சுவையுமுதலாகப் பல விகற்பத் தானும் வரும்.

அவற்றுள் *ஒளியாவது, சந்தி நிருதையும், அநிருதையும், சந்தியா நிருதையும் என மூன்று. அதுவே, உள்ளோன் தலைமகனாக உள்பொருளும், இகப்பொருளும், இலப்பொருளும், இரவுப்பொரு

* "ஒளியென்றது கதாப்பிரகாச வஸ்துவை. வடநூலார் அதனைப் பிரக்கியாதம், உற்பாத்தியம், மிசிரம் என வகுப்பர்." என்பது பழைய குறிப்பு.

ளும் என்றும், இல்லோன் தலைமகனாக உள்பொருளும், இகப்பொருளும், இலப்பொருளும், இரவுப்பொருளும் என்றும்; இல்லோன் தலைமகனாக இல்பொருள் என்றும் ஐந்து வகைப்படும்.

விருத்தியாவது, சாத்துவதியும், ஆரவடியும், * கைசிகியும், பாரதியும் என நான்கு வகைப்படும்.

சாத்துவதியாவது, தலைமக்களில் அறப்பொருள் உபாங்கமாவது.

ஆரவடியாவது, அதிகெம்பீர சந்தர்ப்பமாய் ஙிப்பியாபாண்டவாவுரை சுவைத்தல் உபாங்கமாவது.

கைசிகியாவது, காம விகற்பம் உபாங்கமாவது.

பாரதியாவது, கவுத்தனையே தலையாகக் கூத்துக் கொடுக்கப்படுவது.

சாதியாவது, †வீரம், கூச்சம், அர்ப்பாயம், பேய்க்காரம், வியோகம், பாணம், சல்லாபம், வீழிணி, உத்தாரமடங்கம், பிராசனம் என இவை.

வீரமாவது, அங்கம் இரண்டு முதலா ஆறிரண்டும் எய்தப்பெற்றுச் சந்தியைந்தும் உடைத்தாய் வாரங் கண்டம் பெற்றும் பெறுதும் தலைமகன் ஒருவனாவது.

கூச்சமாவது, தலைவர் இருவரை இடையிட்டுப் பேசப்பட்டு வாரத்தோடிருக்கும்.

அரப்பாயமாவது, அருளில்லாதோர் தலைமக்களாய்ப் பெண்ணுடைத்தாய் வாரம் போலியாவது; அர்ப்பீடமெனினுமொக்கும்.

பேய்க்காரமாவது, தலைமக்கள் தேவ காந்தர்வ பைசாசாதி பதினறுவராய்ப் பெண்ணுடைத்தாய் முன்பின் மூன்றினும் ஒன்றின் பொருள் பெறுதலும் அங்கமொன்றுதலும் கண்டமொன்றுதலுமாம்.

வியோகமாவது, தலைமக்கள் ஒருவரைத்தான் பலரைத்தான் உடைத்தாய்ச் சந்தியைந்துமுடைத்தாய்த் தலைமைக்கண்டம் ஒரு கண்டம் பெறும்.

---

* "கௌசிகை யென்றும் பாடமுண்டு."

† "வடநூலார் நாடகம், பிரகரணம், பாணம், பிராசனம், இடிமம், வியோகம், சமவாகரம், வீதி, அங்கம், ஈகாமிருகம் என வகுத்துக் கூறுந் தசரூபமும் ஆசிரியர் கூறிய பதின்சாதியும் இலக்கணத்திற் சிறுபான்மை ஒத்தன. வடமொழி இலக்கணத்தைப் பிரதாப ருத்திரீயம், தசரூபகம், சாயித்திய தருப்பணம் முதலியவற்றில் விரிவாகக் காண்க" என்பன பழைய குறிப்பு.

பாணமாவது, தூர்த்தனுதல் தலைவனுதல் தானுஞ் சொல்லி நின்றார் சொல்லையும் அனுவதித்துச் சொல்லிய ஐவகைச் சந்தியுள்ளும் கடைக்கண் சந்தியங்கம் ஒன்றுவது.

சல்லாபமாவது, ஒரு பொருண்மேற் பேசுவார் தலைமக்கள் இருவராய் ஓரங்கமாய் நிருபணைச் சந்தியொன்றுது நின்ற சந்தி நான்குடைத்தாவது.

வீழிணியாவது, கூத்தன் தலைமகனுய்த் தன் மடந்தைக்கு விடாக் கண்டவாறும் மன்னகரங் கண்டவாறுஞ் சொல்லுதலாய் அங்கம் ஒன்றாய் ஐவகைச் சந்தியுள்ளுங் கடைச்சந்தி அணையுமாறு சொல்லுவது.

உத்தாரமடங்கமாவது, மக்கள் பலரைத் தலைவராகப் பெற்றுப் பெரும்பொல்லாத பேருடைத்தாய்ப் பெண்களாலாற்றப்பட்டுச் சந்தியைந்துமுடையது.

*பிராசனச் சந்தியாவது, சுத்தமும் சங்கீரணமும் என இரண்டாம். சுத்தமாவது, தக்காரை இகழ்ந்து வருவது. சங்கீரணமாவது, பாஷண்டன் தலைமகனுய்த் தோழியரே, கணிகையரே, தூதரே, அலிகளே, பேடியரே என்றிவரையுடைத்தாய்க் கடைக்கண் சந்தியின்றி அங்கமொன்றுவது.

சந்தியாவது, சந்தியும், சந்தியங்கமும் என இரண்டு வகைப்படும்.

அவற்றிற் சந்தி ஐந்து வகைப்படும். அவை முகமும், பயிர்முகமும், கர்ப்பமுகமும், வைரிமுகமும், நிருவாணமும் எனவிவை.

சந்தியங்கமாவன அறுபத்து நான்கு.

அவற்றுள், உவகேபம், பரிகரம், பரிநியாசம், விலோவணம், யுக்தி, பிராத்தி, சமாதானம், விதானம், பரிபாவனை, †உச்சிரம், உற்பேதம், கரண பேதம் என முகத்திலங்கம் பன்னிரண்டு.

விலாசம், பரிசர்ப்பம், விதூதம், சமம், நாபம், நமதூதி, பிரகமம், நிரோதம், பரியுபாசனம், வச்சிரம், புட்பம், உபநியாசம், வருண சங்காரம் இவை பயிர்முகத்திலங்கம் பதின்மூன்று.

---

* "வடநூலார் சுத்த, சைகிருத, சங்கீரணமென மூவகைப்படுத்துப."

† "உச்சிர நீக்கிக் கரண பேதத்தைப் பேதம் கரணம் எனவுங் கூறுப" என்பன பழைய குறிப்பு.

அபூதாரணம், மார்க்கம், உருவம், உதாயிருதி, கிரமம், சங்கிரகம், அநுமானம், தோடகம், அதிபலம், உதேகம், சம்பிரமம், ஆகேவம் என்பன பன்னிரண்டும் கர்ப்ப முகத்தின் பேதம்.

அபவாதம், சம்பேடம், வித்திரவம், திரவம், சத்தி, துதி, பிரசங்கம், சலனம், விவசாயம், நிரோதனம், பிரரோசனம், விசலனம், ஆதானம் இவை பதின்மூன்றும் வைரி முகத்தின் அங்கங்கள்.

சந்தி, விரோதம், கிரதனம், நிண்ணயம், பரிபாடணம், பிரசாதம், ஆனந்தம், சமயம், கிருதி, ஆபாடணம், உபகூகனம், பிரசத்தி, பிரசனம், சங்காரம் இவை பதினான்கும் நிருவாண முகத்தின் அங்கங்கள்.

முகமாவது, உழுப்புப் புத்தியினின்று முளைத்தாற்போலக் கூத்தின் முகத்தினுள்ளே பொருள் தோன்றுவது.

பயிர்முகமாவது, முளைத்த அங்குரம் ஓங்கி மூத்தாற்போலத் தலைமக்கள் சொன்ன பொருளைப் பொலியுமாற்றால் விரிவாறச் சொல்வது.

கருப்பமாவது, கலத்திற் கருவு திரண்டோங்கிக் குடைப்போகியவாறு போல நலந்தரும் பொருளைத் திரளச் சொல்லுவது.

விமரிசமாவது, தோடு விரித்துக் கதிர் போந்தாற்போலவும், மேயது வளைத்தாற் போலவும் நாடகப்பொருள் நன்கு விளிக்கும் பயன்படுவது. விமரிசமெனினும் வைரிமுகம் எனினும் ஒக்கும்.

நிருவாணமாவது, விளைந்த போகம் விதி வரையால் அறுத்துப் படுத்து வைத்துத் துகளுங் களைந்துகொண்டு உண்மகிழ்ந்தாற் போலக் கொள்வது.

* சுவையாவன, சிங்கார முதலாயுள்ளன என்றும். அவையிற்றை வீரக் குறிப்பு, பயக் குறிப்பு, உக்கிரக் குறிப்பு, சிங்காரக் குறிப்பு, காருணியக் குறிப்பு, அற்புதக் குறிப்பு, புகழ்க் குறிப்பு, நகைக் குறிப்பு, இழிப்புக் குறிப்பு என்று ஒன்பதாகவுங் கூறுவர். வீரக் குறிப்பு, வெளி முதலாயினவாம். நகைக் குறிப்பு, மென்மை முதலாயினவாம்.

"களவுங் கற்புங் கைகோ ளாக
அளவி னன்பின தகமெனப் படுமே."

* "வடநூலார் இவற்றினை நவரசம் எனக் கூறுவர்," என்பது பழைய குறிப்பு.

"வெட்சி முதலாகத் தும்பை யீறுகப்
புக்கமர் செய்வது புறத்திணை யாகும்."
"அவைதாம்,
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குவரு சிறப்பி னுழிஞை நொச்சி
விறன்மிகு சிறப்பிற் றும்பையுள் ளிட்ட
மறனுடை மரபின வேழெனெ மொழிப."

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியா—முட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
அதுவளைத்த லாகு முழிஞை—அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம்."

"கைக்கிளை யேனைப் பெருந்திணை யென்றிவை
அக்கா மறிவோ ரகப்புற மென்ப."

"காட்சி முதலாக் கலவியி னொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளை; அதுதான்
கேட்போ ரில்லாக் கிளவிகள் பெறுமே."

"இறந்த மூப்பு மெய்தா இளமையுஞ்
சிறந்த காமத்திற் செய்யுஞ் சிதைவும்
பிறங்குதரு மரபிற் பெருந்திணை யாகும்."

"காந்தள் வள்ளி சுரநடை முதுபாலை
தாபதந் தபுதாரங் குற்றிசை குறுங்கலி
பாசறை முல்லை யில்லாண் முல்லை
என்றிவை பத்து மகப்புற மென்ப."

"ஆய்ந்த வகப்புற மையிரண்டு மாயுங்காற்
காந்தள் கலிமடமா வேறுத லுள்ளிட்ட
பத்து மகத்தின் புறம்."

"வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புறப் பொருளே." (உக)

பொருட்படலம் முற்றும்.

பொருளதிகாரம் முற்றும்.

நான்காவது

யாப்பதிகாரம்[1]

யாப்புப் படலம்[2]

107. அசை இரண்டும் ஈரசை மூவசைச் சீர்களும்

குறிலு நெடிலு மெனுமிவை நேரசை; குற்றெழுத்துப்
பெறின்முன் இவையே நிரையசை யாம்;பிழைப் பில்லபின்பொற்
றிறினும்; அசையிரண் டோன்றின்முற் சீர்மூ வசையோன்றிநேர்
இறுவ திடைச்சீர்; நிரையிற்ற பிற்சீர் எனவியம்பே.

(இ-ள்.) குற்றெழுத்தான் நெட்டெழுத்தான் தனியே வரின் நேரசையாம்; இவையிற்றின் முன்பு ஒரு குற்றெழுத்துப் பெற்றுக் குறிலிணையாயும் குறில் நெடிலாயும் வரின் நிரையசையாம்; நேரசையின் பின்பும் நிரையசையின் பின்பும் ஒற்றெழுத்து வரவும் பெறும், வாராதொழியவும் பெறும்; நேரசை நிரையசையாயுள்ளன இரண்டாய் ஒன்றின பொழுது முதற்சீரெனப்படும்; மூன்றசை ஒன்றி அவற்றின் ஈற்றசை நேரசையாய் வரின், அவை இடைச் சீர் என்பனவாம்; மூன்றசை ஒன்றி அவற்றின் ஈற்றசை நிரை யசையாய் வரின், கடைச்சீர் எனக் கொள்க (எ-று.)

'போ தி வேந் தன், சர ணலா லரண் புகேம்.'

என்றது நேரசை நான்கிற்கும் நிரையசை நான்கிற்கும் உதாரணமாம். போ என்னுந் தனிநெடிலும், தி என்னுந் தனிக்குறிலும், வேந் என்னும் நெடிலொற்றும், தன் என்னுங் குறிலொற்றும் நேரசை நான்கிற்கும் உதாரணம். சர என்னுங் குறிலிணையும், ணலா என்னுங் குறிநெடிலும், லரண் என்னுங் குறிலிணை ஒற்றும், புகேம் என்னுங் குறில் நெடிலொற்றும் நிரையசை நான்கிற்கும் உதாரணம். முதற்சீரை ஆசிரியச் சீரென்றும், இடைச் சீரை வெண்சீர் என்றும், கடைச்சீரை வஞ்சிச்சீர் என்றும் வழங்குவாரும் உளரெனக் கொள்க. வருஞ் செய்யுளில் அவற்றிற்கு உதாரணஞ் சொல்லுகின்றான். (க)

---

1. இது யாப்பிலக்கணத்தைக் கூறும் அதிகாரம் என்றும்.
2. இது யாப்பைக் கூறும் படலம் என்றும்.

108. ஈரசை மூவகைச் சீர்களின் உதாரணம்.

கருவிளங் கூவிளந் தேமா புளிமா எனக்கலந்து
மருவிய நான்கு முதற்சீர்க ளாம்;மற் றவற்றினந்தத்
துருவமாங் காய்வரி னுமிடைச் சீர்ஒண் கனிவருமேற்
செருவமர் வேற்கண்ணி னாய்!கடைச் சீரெனத் தேர்ந்தறியே.

(இ-ள்.) கருவிளம், கூவிளம், தேமா, புளிமா என்னும் நான்கும் முதற்சீர்க்கு உதாரணமாம்; இவற்றின் கடைக்கண் காய் என்னுஞ் சொற்பெற்றுக் கருவிளங்காய், கூவிளங்காய், தேமாங்காய், புளிமாங்காய் என வருவன இடைச்சீர்க்கு உதாரணமாம்; அவற்றின் இறுதிக்கண் கனி என்னுஞ் சொற்பெற்றுக் கருவிளங்கனி, கூவிளங்கனி, தேமாங்கனி, புளிமாங்கனி என வருவன கடைச் சீர்க்கு உதாரணமாம் (எ-று.) (உ)

109. மேற்கூறிய சீர்களாலான அடிகளின் பெயர்

இருசீரு முச்சீரு நாற்சீரு மைஞ்சீரு மைந்தின்மிக்கு
வருசீரு மந்தரங் கால்தீப் புனலோடு மண்பெயரால்
திரிசீ ரடியாங் குறள்சிந் தளவு நெடிற்றனைமை
தெரிசீர்க் கழிநெடி லேன்று நிரனிறை செப்புவரே.

(இ-ள்.) இரு சீரால் வந்த அடியும், முச்சீரால் வந்த அடியும், நாற்சீரால் வந்த அடியும், ஐஞ்சீரான் வந்த அடியும், ஐஞ்சீரின் மிக்கு வந்த அடியும் என அடி ஐந்து வகையாம்; அவற்றினுக்கு அடைவே ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் என்னும் பூதங்களின் பேரே பெயராம்; குறள், சிந்து, அளவு, நெடில், கழிநெடில் என்று நிரனிறை சொல்லுவாருமுளர் (எ-று.)

இரு சீரான் வந்த அடி குறளடி; முச்சீரான் வந்த அடி சிந்தடி; நாற்சீரான் வந்த அடி அளவடி; ஐஞ்சீரான் வந்த அடி நெடிலடி; அறுசீரான் வந்த அடி கழிநெடிலடி என்க. இவ்விடத்தில் அளவடி எனினும் நேரடி எனினும் ஒக்கும்.

வரலாறு :—

'பொருந்து போதியில்
இருந்த மாதவர்
திருந்து சேவடி
மருந்து மாகுமே.'

இஃது இருசீர்க் குறளடி நாற்காய் வந்த செய்யுள்.

'விண்ணவர் நாயகன் வேண்டக்
கண்ணினி தளித்த காதல்
புண்ணிய னிருந்த போதி
நண்ணிட நோய்நலி யாவே.'

இது முச்சீர்ச் சிந்தடி நான்காய் வந்த செய்யுள்.

'இன்ப மென்னை யலாததி லாதிவன்
பின்பு தோறும் பிரிவெனுந் தீயினுல்
என்பு வேவ விறந்து படுங்கொலோ
அன்பு தாங்கரி தாதலி னலரோ.'

இஃது அளவடி நான்காய் வந்த செய்யுள்.

[1]'முன்றான் பெருமைக்க ணின்றான் முடிவெய்து காறு
நன்றே நினைந்தான் குணமொழிந் தான்த னக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதி சூழ்ந்தான்
அன்றே யிறைவ னவன்றாள் சரணங்க ளன்றே.'

இது நெடிலடியான் வந்த செய்யுள்.

'இரவிடை மதிய மென்பா னுடிப்போய் மறையு மெல்லை
விரியிரு ளெழினி நீக்கி விசும்பெனு மரங்கு தன்மேல்
கரைகடன் முழவ மார்ப்பக் கதிரெனுங் கைகள் வட்டித்
தெரிகதி ரென்னுங் கூத்த னுடிவா னெழுந்து போந்தான்.'

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

'தகைமை தெரிசீர்க் கழிநெடில்' என்று சிறப்பித்த அதனுல், அறுசீர்க்கு மேற்பட்டுப் பதினொரு சீரளவுங் கழிநெடிலடி வரப் பெறுமெனக் கொள்க.

வரலாறு:—

'தோடாரி லங்கு மலர்கோதி வண்டு வரிபாடு நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை குணனாக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப வினைசேர்தல் நாளு மிலரே.'

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

'எண்டிசையு மாகி யிருளகல நூறி
எழுதளிர்கள் சோதி முழுதுலக நாறி
வண்டிசைகள் பாடி மதுமலர்கள் வேய்ந்து
மழையருவி போதி யுழைநிழல்கொள் வாமன்

---

1. குண்டலகேசி, கடவுள் வாழ்த்து.

வெண்டிரையின் மீது விரிகதிர்க ணணை
வெறிகமழ்கொண் மேனி யறிவனெழின் மேனி
புண்டரிக பாத நமசரண மாகும்
எனமுனிவர் தீமை புணர்பிறவி காணார்.'

இஃது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

*'கூரார் வளையுகிர் வாளெயிற்றுச் செங்கட்
கொலையுழுவை காய்பசியாற் கூர்ந்தவெண்ணோய் நீங்க
ஓரா யிரங்கதிர்போல் வாள்விரிந்த மேனி
யுளம்விரும்பிச் சென்றாங்கி யைந்தனை நீ யென்றாற்
காரார் திரைமுளைத்த செம்பவள மேவுங்
கடிமுகிழ் தண்சினைய காமருபூம் போதி
ஏரார் முனிவரர் வானவர்தங் கோவே
யெந்தாய ரோநின்னை யேத்தாதார் யாரே.'

இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

'பைங்கண்வா ளெயிற்றினப் பகட்டெருத்தின் வள்ளுகிர்ப்
பருஉத்திரட் குருஉக்கொடாஅட் பாலுடைச் செவுடைச்
சிங்கவேறு நான்குதாங்க மீதுயர்ந்த சேயொளிச்
சித்திரங் குயிற்றிணளி செம்பொனாசனத்தின்மேற்

---

* "இதுவும் பின் வரும் உதாரணச் செய்யுள் இரண்டும் உரையிற பிரித்திருக்குமாறு எண்சீர்க் கழிநெடிலடி விருத்தமென்றே கொள்ளல் வேண்டும். இவற்றை ஒன்பதின் சீர்க்கும், பதின் சீர்க்கும், பதினொரு சீர்க்கும் எடுத்துக்காட்டாக ஆசிரியர் கூறியது எவ்வாறு ஓசையூட்டினும் பொருந்திலது. பதின்சீர் எனவும், பதினொருசீர் எனவும் அவர் காட்டிய செய்யுட்கள் ஒரே சந்தம் உடையனவாம். அவற்றை,

'பைங்கண் வாளெ யிற்றி னப்ப கட்டெ ருத்தின் வள்ளுகிர்ப்
பருஉத்தி ரட்கு ருஉக்கொ டாஅட் பாலு டைச்செ ஞவுடை'

எனப் பதினான்கு சீராகவும்,

'வீடு கொண்ட நல்லறம் பகர்ந்த மன்ப தைக்கெலாம்
விளங்கு திங்க ணீர்மையால் விரிந்தி லங்கும் வன்பினோன்'

எனப் பன்னிரு சீராகவுங் கொள்வாருமுளர். ஒன்பதின்சீர் முதலியவற்றிற்கு உதாரணம் வந்துழி வந்துழிக் காண்க. இவை காவியங்களில் அருமையாக வரும்," என்பது பழைய குறிப்பு.

கொங்குநாறு போதுசிந்தி வானுளோரிறைஞ்சிடக்
கோதிலா வறம்பகர்ந்தமர்ந்தகோன் குளிர்நிழற்
பொங்குதாதுகொப்புளித்து வண்டொடுதேமலர்ப்
போதியெம் பிரானடிக்கள் போற்றில் வீட தாகுமே.'

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

'வீடுகொண்ட நல்லறம் பகர்ந்தமன் பதைக்கெலாம்
விளங்குதிங்க ணீர்மையால் விரிந்திலங்கும் வன்பினேன்
மோடுகொண்ட வெண்ணுரைக் கருங்கடற் செழுஞ்சுடர்
முளைத்தெழுந்த தென்னலாய் முகிழ்ந்திலங்கு போதியி
னூடுநின்ற மூவகைப் பவங்கடந்து குற்றமான
வைந்தொடங்கொர் மூன்றறுத்த நாதனுண் மலர்த்துணர்ப்
பீடுகொண்ட வார்தளிர்ப் பிறங்குபோதி யானையெம்
பிரானைநாளு மேத்துவார் பிறப்பிறப்பி லார்களே.'

இது பதினொருசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள். இதின் மேற்பட்டனவெல்லாம் இரட்டை விருத்தம் என்க. (௩)

110. மயங்கி வரும் மோனை எழுத்துக்கள்

முன்னிரண் டாவியு மீறுமை யும்மோனை; முன்னவற்றின்
பின்னிரண் டாவியு மேழுமெட் டும்மோனை; ஆறுமைந்தும்
பன்னிரண் டாமுயிர் முன்னிரண் டும்மோனை; பண்ணுந்தச்சப்
பின்னிரண் டாஙஞ மவ்வும்வவ் வும்மோனை பெண்ணணங்கே!

(இ-ள்.) முன்படைய நின்ற அ ஆ என்னும் இரண்டுயிரும், ஔ என்னும் இறுதியுயிரும், ஐகாரவுயிரும் ஆக இந்நான்குயிரும் வந்து, தம்முள் ஒன்றுக்கொன்று மோனை எனப்படும்; முன்பு சொன்ன அ ஆவின் பின்பு நின்ற இ ஈ என்னும் இரண்டுயிரும், ஏழாமுயிரும், எட்டாமுயிரும் ஆகிய இந்நான்குயிருந் தம்முள் ஒன்றுக்கொன்று மோனை எனப்படும்; ஆறாமுயிரும், ஐந்தாமுயிரும், பன்னிரண்டாமுயிரின் முன்பு நின்ற இரண்டுயிரும் ஒன்றுக்கொன்று மோனை எனப்படும்; தகாரமும், சகாரமுந் தம்முள் மோனையாம்; ஞகாரமும், நகாரமுந் தம்முள் மோனையாம். மகரமும், வகரமுந் தம்முள் மோனையாம் (எ-று.)

'இஃது இவ்விடத்துச் சொல்ல வேண்டியது என்னை?' எனின், இரு சீரான் வந்த குறளடியும், முச்சீரான் வந்த சிந்தடியும், நாற்சீரான் வந்த அளவடியும், ஐஞ்சீரான் வந்த நெடிலடியும், ஐஞ்சீரின் மிக்கு வந்த கழிநெடிலடியும் ஆமாறு சொல்லிய பாதங்

களில் ஒன்றையே சிறப்புடைத்தாக்குதற்கு முதல் எழுத்துக்கள் மோனையுள்ள எழுத்தே முதலாகவுடைய சொற்களால் இயற்றுக என்பதன்பொருட்டுச் சொன்னான் என்பது. இவற்றுள் ஒற்றெழுத்து மோனையும், உயிரெழுத்து மோனையும் மரபு பிழையாமல் வரவேண்டுமென்பது. அஃதாமாறு:—

தவ்வும், தாவும், தையும், தௌவும், சவ்வும், சாவும், சையும், சௌவும் என்னும் எட்டும் மயங்கும்.

நவ்வும், நாவும், நையும், நௌவும், ஞவ்வும், ஞாவும், ஞையும், ஞௌவும் மயங்கும்.

மவ்வும், மாவும், மையும், மௌவும், வவ்வும், வாவும், வையும், வௌவும் தம்முள் மயங்கும். பிறவுமன்ன.

ஒற்றெழுத்து மோனையில்லாதன வருமாறு:—

கவ்வும், காவும், கையும், கௌவும் தம்முள் மயங்கும்.

கிய்யும், கீயும், கெய்யும், கேயுந் தம்முள் மயங்கும்.

குவ்வும், கூவும், கொவ்வும், கோவுந் தம்முள் மயங்கும். பிறவும் அன்ன.

வரலாறு:—

"கோமத னுக்கொல்க விற்கொண்ட வீரன் குடந்தையன்னீர்
போமத னுக்கென் புகுந்ததென் றேற்குப் புருவமென்னுங்
காமத னுக்குனித் தெய்யக் கருங்கண் சிவந்ததல்லால்
தாமத னுக்கெதி ரோர்மறு மாற்றமுந் தந்திலரே."

இதனுள் கோவென்னும் எழுத்து முதலாகிய அடியுள் 'கொண்ட' என்னுஞ் சொல்லும், 'குடந்தை' என்னுஞ் சொல்லும்; போவென்னும் எழுத்து முதலாகிய அடியுள் 'புகுந்த' என்னுஞ் சொல்லும், 'புருவம்' என்னுஞ் சொல்லும்; காமதனு என்னும் அடிக்குக் 'கருங்கண்' என்னுஞ் சொல்லும்; தாவென்னும் எழுத்து முதலாகிய அடியுள் 'தந்திலர்' என்னுஞ் சொல்லும் வந்தன.

"மஞ்சின் மதிசூ டையான் மணஞ்செய்யப்
பஞ்சவனம் வாடை படைத்தருளும்—விஞ்சு
புகழா ரளகேசர் பூம்புகா ரென்னு
நகராரை யொப்பவரார் நாட்டு."

இதனுள் மஞ்சின் என்னும் அடியுள் 'மதி' என்றும், 'மணம்' என்றும்; பஞ்சவனம் என்னும் அடியுட் 'படைத்து' என்றும்; புகழார் என்னும் அடியுட் 'புகார்' என்றும்; நகரார் என்னும் அடியுள் 'நாட்டு' என்றும் வந்தன. பிறவும் அன்ன. (௪)

14. எதுகையும் எதுகையின் வேறுபாடுகளும்

ஏன்று முதலள வொத்திரண் டாமெழுத் தொன்றிவரிற்
சான்று ரதனை யெதுகையென் றோதுவர்; தன்மைகுன்று
மூன்றுவ தொன்ற லிரண்டடி யொன்றன் முழுதுமொன்றல்
ஆன்று வினமுயி ராசிடை யாய்வரும் ஆங்கதுவே.

(இ-ள்.) *அடிதோறும் முதலெழுத்தெல்லாந் தம்முள் ஒத்த அளவினவாய் இரண்டாம் எழுத்தொன்றி வரின், அஃது எதுகை என்று சொல்லப்படும்; எதுகை எனினும் தொடையெனினும் ஒக்கும்; அது மூன்றும் எழுத்து ஒன்றி வந்த எதுகையும், இரண்டடி எதுகையும், சீர் முழுதும் ஒன்றி வந்த எதுகையும், வல்லின எதுகையும், மெல்லின எதுகையும், இடையின எதுகையும், இரண்டாம் எழுத்தின் ஏறின உயிரெழுத்து ஒத்தும் ஒற்று ஒவ்வாதும் வந்த உயிரெதுகையும், ஆசிடையிட்ட எதுகையும் என்று விகற்பிக்கப்படும்* (எ-று.)

[1]'*அகர முதல வெழுத்தெல்லா மாதி*
பகவன் முதற்றே யுலகு.'

இது முதலெழுத்துக் குறிலாய் இரண்டாம் எழுத்தொன்றி வந்த எதுகை.

[2]'*பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்*
திகழரும் பீன்றது புன்னை.'

இது மூன்றும் எழுத்து ஒன்றின எதுகை.

நிறையோத நீர்நின்று நீதவமே செய்யினும் வாழி நீலம்
மறைவரியோ வரிவையரி னெடுங்கணே ரொவ்வாய் வாழி நீலம்
கண்ணொவ்வா யெனினுங் களித்து நகுதிநீ வாழி நீலம்
வண்ணமிது போமது வுண்டார்சே ரியையோ வாழி நீலம்.'

இஃது இரண்டடி எதுகை.

'*வல்லளே போக மலர்மேலு மாட்டாதாள்*
அல்லளே சொல்லீ ரயலீர்காண்—மெல்லலவன்
தோட்டுவரம் பூடாடுஞ் சோணாடு கைவிட்டு
வேட்டுவரம் பூடாடும் வெற்பு.'

இஃது இருசீர் முழுதும் ஒன்றி வந்த எதுகை.

---

1. *திருக்குறள்*, 1.
2. *யாப்ப - வி.* 36-ஆம் *சூ. மேற்கோள்.*

1'தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.'

இது வல்லின எதுகை.

2'அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.'

இது மெல்லின எதுகை.

3'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.'

இஃது இடையின எதுகை.

4'மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் சென்ற
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
நல்லறி வில்லா வுடம்பு.'

இஃது இரண்டாம் எழுத்தின்மேல் ஏறின உயிரெழுத்து ஒத்தும் ஒற்று ஒவ்வாதும் வந்த உயிரெதுகை.

'பேய்மை யாக்குமிப் பேதைமைக் கள்வனை டெனய்க்
காமுற் றுமதன் பயத்தினிற் காமனைக் கடந்து
நாம றுஉம்புகழ் கொடுப்பதோர் நன்னெறி நண்ணும்
வாமன் வாய்மொழி மறந்திட்டு மறந்தொழி கின்றும்."

இது யகரவொற்று வந்த ஆசிடை எதுகை.

5'மாக்கொடி *மாணையில் மவ்வற் பந்தருங்
கார்க்கொடி முல்லையும் †கவினு மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் ‡புறவ ஞாழலுந்
தூக்கொடி கமழ்ந்துதான் துறக்க மொக்குமே.'

இது ரகரவொற்றிடை வந்த ஆசிடை எதுகை.

6'ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் பால்போல்

---

1. திருக்குறள், 114.
2. ,, 74.
3. ,, 299.
4. நான்மணிக் கடிகை, 20.
5. சூளா. நாட். 2[illegible]
6. நாலடியார், 11

பி-ம்: * யானையு
† கலந்து
‡ கான

ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள் ளீங்கு.'

இது லகரவொற்று இடை வந்த ஆசெதுகை.

[1]'அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்தரமே போலு மனைவாழ்க்கை-யந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூளையே போன்று.'

இது ழகரவொற்றிடை வந்த ஆசிடையெதுகை.

"யரலழ வென்னு மீரிரண் டொற்றும்
வரன்முறை பிழையாது வந்திடை யுயிர்ப்பின்
ஆசிடை யெதுகையென் றறிந்தனர் கொளலே."

என வரும் இவ்வொற்றுக்களை ஒழித்த வழியும் ஏனையெழுத்துக்கள் எதுகை வழுவாது நிற்குங்கால் இவை ஆசிடை எதுகையாம் என்க. பிறவுமன்ன. (ரு)

112. செய்யுள் வகை

பத்தியங் கத்திய மென்றிரண் டாஞ்செய்யுள்; பத்தியமேல்
எத்திய பாதங்க ளால்வந் தியலு மெனமொழிந்த ;
கத்தியங் கட்டுரை செய்யுளின் போலிக் கலந்தவற்றோ
டோத்தியல் கின்றமை யாலொன்று தாமு முரைத்தனரே.

(இ-ள்.) செய்யுளெல்லாம் பத்தியம் என்றும், கத்தியம் என்றும் இரண்டு திறமாயடங்கும்; அவற்றுள் பத்தியமாவது, பாதங்களால் நடை பெறுவது எனக்கொள்க ; கத்தியமாவது, கட்டுரைப் போலியும், செய்யுட்போலியுமென இரண்டு வகைப் படும். அவையாவன: யானைத் தொழில் முதலாயின எல்லாங் கட்டுரைப் போலி என்பனவாம்; ஒருபோகு முதலாயின எல்லாஞ் செய்யுட்போலி என்பனவாம்; ஒரு சாரார் அவையிற்றையும் பாதத்தான் நடைபெற்றனவாக வழங்கிப் பெயர் வேறுபடுப்பர்; அவர் சொல்லுமாறு:—வெண்பாவும், ஆசிரியப்பாவும், கலிப்பாவும், வஞ்சிப்பாவும் எனப் பாக்களை நான்கு வகைப்படுத்து, தாழிசை, துறை, விருத்தம் என இனங்களை மூன்றாக்கி, இவ்வினம் மூன்றினுக்கும் பா நான்கினுக்கும் வெவ்வேறே உரிமையாக்கி, பன்னிரண்டு இனமாக வகுத்து, வெண்டாழிசை, வெண்டுறை,

1. யாப்ப - வி. 37-ஆம் சூ. மேற்கோள்.

வெளி விருத்தம்; ஆசிரியத் தாழிசை, ஆசிரியத் துறை, ஆசிரிய விருத்தம்; கலித் தாழிசை, கலித்துறை, கலி விருத்தம்; வஞ்சித் தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் எனக் கூறுவர். இவை யிற்றினும் பலவாகச் சொல்லுவாருமுளர் எனக் கொள்க. அவை வருமாறு:— (சா)

113. வெண்பாவின் பொது இலக்கணம்

ஒன்று மிடைச்சீர் வருஞ்சீ ரோடு;முதற் சீர்கள்தெற்றும்;
என்று மளவடி யீற்றடி யல்லன; ஈற்றடியும்
நன்று மலர்காசு நாள்பிறப் பென்றிற்ற சிந்தடியே;
துன்றுங் கடைச்சீர் புகாவென்பர் வெள்ளையிற் றாமொழியே!

வெண்பாவினுக்குப் பொது இலக்கணங் கூறுகின்றான்.

(இ-ள்.) வெண்பா என்னுஞ் செய்யுளின்கண் இடைச்சீர் வருஞ்சீரோடு ஒன்றி வரும்; முதற்சீர் வருஞ்சீரோடு தெற்றி வரும். ஈற்றடியல்லாத அடியெல்லாம் அளவடியாலே வரும்; ஈற்றடி மலர், காசு, நாள், பிறப்பு என்னும் நான்கு உதாரணத்தின் ஒன்று இறுதியாய் வந்த சிந்தடியாய் வரும்; கடைச்சீர் நான்கும் வெண் பாவிற் புகப்பெறா (எ-று.)

வரலாறு:—

'வேலை முகடும் விசும்பகடுங் கைகலந்த
காலைநீ யெங்கே கரந்ததுகொல்—மாலைப்
பிறைக்கீறு கண்ணுதலே பெண்பாகா வையா
விறைக்கீறு வெங்கட் கிது.'

'துன்றுங் கடைச்சீர்' என்னும் அதிக வசனத்தால் தேமா, புளிமா என்னும் இரண்டு முதற்சீரும் கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இரண்டு கடைச்சீரும் ஒத்தாழிசைக் கலிப்பாவினுட் புகப் பெறா எனவும், ஆசிரியப் பாவினுள்ளுங் கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் இரண்டு கடைச்சீரும் புகப்பெறா எனவுங் கொள்க. இனி வெண்பாவைப் பலவாகக் கூறபடுத்துவர். அவையாமாறு:— (எ)

114. வெண்பாவின் வகை

வேண்டிய ஈரடி யாற்குறள் ஆம்;மிக்க மூவடியால்
தூண்டிய சிந்தியல்; நான்கடி நேரிசை; தொக்கதனின்
நீண்டிய பாதத்துப் பஃறொடை யாம்;இத னேரிசையே
நீண்டிசை யாங்கலி; நேரிசை பேதிக்கி லின்னிசையே.

(இ-ள்.) ஈரடியால் வருவது குறள் வெண்பாவாம்; மூவடியால் வருவது சிந்தியல் வெண்பாவாம்; நான்கடியால் வருவது நேரிசை வெண்பாவாம்; நான்கடியின் மிக்கு வருவது பஃறொடை வெண்பாவாம்; நேரிசை வெண்பாப் போன்று அதனின் நீண்டு வருவது கலி வெண்பாவாம்; நேரிசை வெண்பா விகற்பிக்க இன்னிசை வெண்பாவாம் (எ-று.)

விகற்பமாவது:—முதலடியிலே தனிச்சொற் பெற்று வேறொரு விகற்பமாய் வருவதுவும், இரண்டாமடி தனிச்சொற் பெற்று வேறொரு விகற்பமாய் வருவதுவும், மூன்றாமடி தனிச்சொற் பெற்று வேறொரு விகற்பமாய் வருவதுவும், தனிச்சொலின்றி நான்கடியும் பல விகற்பமாய் வருவதுவும், தனிச்சொலின்றி நான்கடியும் ஒரு விகற்பமாய் வருவதுவும் இன்னிசையாம்.

வரலாறு:—

[1]'சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை.'

இது குறள் வெண்பா.

[2]'அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.'

இது விகற்பக் குறள் வெண்பா.

[3]'நற்கொற்ற வாயி லுறங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்'.

இது நேரிசைச் சிந்தியல் வெண்பா.

[4]'நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரில்
அறநாட்டுப் பெண்டி ரடி.'

இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

'ஒன்றைந்தெட் டாகியசீ ரொத்த வெதுகையாய்
நின்றபதின் மூன்றொன்பா னேரொத்து-நன்றியலு

1. திருக்குறள், 230.
2. ,, 401.
3. யாப்ப. வி. 59-ஆம் சூ. மேற்கோள்.
4.

நீடுசீர் மூவைந்தா நேரிசைவெண் பாவென்பர்
நாடுசீர் நாப்புலவர் நன்கு.'

இது நேரிசை வெண்பாவினுக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கண்டு கொள்க.

[1]'வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனுல் வாய்நேர்ந்தேன்-வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.'

இஃது ஒரு விகற்ப நேரிசை வெண்பா.

[2]'ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி
கார்ப்பெயல் மொய்ம்பினிற் செங்குளக் கோட்டின்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனல்நாடன்
ஆர்த்தம ரட்ட களத்து.'

இது நான்கடியின் மிக்கு வந்தமையாற் பஃறொடை வெண்பாவாம் எனக் கொள்க.

[3]'சுடர்த்தொடீ கேளாய் தெருவினு மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடர்ச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றே
னன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா அன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.'

---

1. யாப்ப, வி. 6-ஆம் சூ. மேற்கோள்.
2. களவழி, 2.
3. கலி, 51.

இது நேரிசை வெண்பாவே போன்று அதனின் நீண்டு வந்தமையாற் கலி வெண்பா எனக்கொள்க.

'ஒன்றும் பலவும் விகற்பாகி நான்கடியாய்
நின்ற தனிச்சொற்றும் பெற்றும் பெருதொழிந்துந்
தன்னிசைய நேரிசையில் வேருய் வருமாகில்
இன்னிசைவெண் பாவாமென் றூர்.'

இதனை இன்னிசை வெண்பாவிற்கு இலக்கணமும் இலக்கியமுமாய்க் கண்டுகொள்க.

[1]'ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னூர் கேண்மை கொளின்.'

இது தனிச்சொலின்றி ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

[2]'உறுபுனல் தந்துல கூட்டி—யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டலந்தக் கண்ணுஞ்—சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை.

இஃது ஈற்றடி ஒழிந்து ஏனையடிகள் தனிச்சொற்பெற்று வந்தது. பிறவுமன்ன.

இனி வெண்பாவை ஓசை யூட்டுமாறு:—

[3]'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.'

இதனை,

புளிமா புளிமா புளிமாங்காய் தேமா
புளிமா புளிமா பிறப்பு.

என்று ஓசையூட்டுக.

[4]'நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.'

இதனை,

1. நாலடியார், 176.
2. ,, 185.
3. திருக்குறள், 1.
4. 1072.

கூவிளம் தேமா புளிமா கருவிளங்காய்
தேமா புளிமா மலர்

என்று ஓசையூட்டுக.

1'கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.'
இதனை,
தேமா கருவிளம் தேமா புளிமாங்காய்
தேமா கருவிளம் காசு

என்று ஓசையூட்டுக.

2'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.'
இதனை,
கூவிளம் கூவிளம் தேமா கருவிளம்
கூவிளம் கூவிளம் நாள்.

என்று ஓசையூட்டுக. பிறவும் அன்ன.

காசு, நாள், மலர், பிறப்பு என்னும் உதாரணங்கள் வெண்பாவின் ஈற்றின்கண் நிறுத்தி ஓசையூட்டுதற்பொருட்டுச் சொன்னார் எனக் கொள்க. (அ)

115. ஆசிரியப்பாவின் வகை

ஈற்றயன் முச்சீர் வரினே ரிசையாம்; இணைக்குறட்பா
ஏற்ற குறள்சிந் திடையே வரும்;நிலை மண்டிலப்பாச்
சாற்றிய தன்னே ரடியா லியலும்; தலைநடுவீ(று)
ஆற்றிய பாதத் தகவ லடிமறி மண்டிலமே.

(இ-ள்.) எல்லாவடியும் நாற்சீராய், ஈற்றயலடி முச்சீராய் வருவது நேரிசை ஆசிரியப்பாவாம்; ஈற்றடியும் முதலடியும் நாற்சீராய், இடை சிந்தடியுங் குறளடியுமாய் வருவது இணைக்குறள் ஆசிரியப்பாவாம்; எல்லாவடியும் நாற்சீராய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பாவாம்; எல்லாவடியும் முதல் நடு இறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பாவாம் (எ-று.)

1. திருக்குறள், 984.
2. திருக்குறள், 1121.

அவை வருமாறு:—

[1]'நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.'

இஃது ஈற்றயலடி முச்சீரான் வந்தமையான் நேரிசையாசிரியப்பா.

[2]'நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.'

இஃது இடையே சிந்துங் குறளும் வந்தமையால் இணைக்குறள் ஆசிரியப்பா.

'கொங்கை யிணையெழில் கோங்கரும் பாக
அங்கை யணியிதட் டாமரை யாக
மணிநிறக் கண்ணிணை குவளை யாக
எண்ணிய நுண்ணிடை வல்லி யாக
நண்ணிய முறுவல் முல்லை யாக
வீறுமச் செவ்வாய் கொவ்வை யாக
ஐயவிச் சீறடி தளிர்க ளாகச்
சிறியே மாகங் காய்ந்தவிம் மங்கை
தன்னைக் காத்துமென் றனக்கிரக்க மின்றி
ஓடரிக் கண்ணியை யொளித்தீ ராயினுங்
காட்டுமி னென்று கைதொழு திறைஞ்சினன்
வாட்டிறத் தடக்கை வத்தவர் கோவே.'

இஃதெல்லா அடியும் நாற்சீரான் வந்தமையான் நிலைமண்டில ஆசிரியப்பா எனக் கொள்க.

[3]'மோரூக் காதலர் மலைமறந் தனரே
ஆரூக் கண்ணீர் வரலா னவே

---

1. குறுந்தொகை, 3.
2. யாப்ப - வி. 72-ஆம் சூ. மேற்கோள்.
3. யாப்ப - வி. 73-ஆம் சூ. மேற்கோள்.

வேறு மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே.'

இது நான்கடியுந் தலைதடுமாற உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வந்தமையால் அடிமறிமண்டில ஆசிரியப்பா.

'இந்திர னேறக் களிறீந் தனரே
முந்திதழ்ப் பூவின் முடிசூ டினரே
மந்திரக் கோடி மனத்தளித் தனரே
சுந்தரக் கோபுரச் சுருதிவாய் மையரே.'

இதுவும் அது.

'நெருங்குவளைப் பணைத்தோள் நிறனழிந் தன்வே
பெருங்கண் பனியொடு படலொல் லாவே
இருங்கலி யிரவே யிறப்பவும் பெரிதே
அரும்பவிழ் கோதைக் காற்றுத லரிதே.'

இதுவும் அது. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இனி ஒருசாரார் ஆசிரியப்பா நான்கினையும் மண்டிலமாக்கிப் பெயர் வேறுபடுப்பர்.

அவை வருமாறு :—

'முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே.'

இது நேரிசைமண்டில ஆசிரியப்பா.

'அறனல துடைத்தே யறனல துடைத்தே
உளமலர்க் குரவும் வழையு மாவும்
இளவண் டார்க்கு மின்னிள வேனில்
இன்பச் செவ்விக் கியைந்துங் காதலர்
அன்பிலர் துறத்த லறனல துடைத்தே.'

இது நிலைமண்டில ஆசிரியப்பா. மிக்க சொல்லும், மிக்க புகழும், மிக்க ஓசையும் உடைத்தாகலான் நேரிசை என்பது காரணக் குறி. அனைத்தடியும் ஒத்து நின்று இவ்வாறே பொருள் படுதலான் நிலைமண்டிலம் என்பது காரணக் குறி. பிறவும் அன்ன. (கூ)

1. யாப்ப - வி. 73-ஆம் சூ. மேற்கோள்.

116. கலிப்பாவின் வகை

தரவோடு தாழிசை சுற்றும் அராகமம் போதரங்கம்
உரவுடை நற்றனி வாரமேன் றுங்கலி; ஓர்ந்ததனை
வரவிசை நேரிசை யம்போ தரங்கம்பின் வண்ணகமே
விரவிய கோச்சகம் வெண்கலி யென்று விகற்பிப்பரே.

(இ-ள்.) *தரவும், தாழிசையும், அராகமும், அம்போதரங்கமும், தனிச் சொல்லும், சுரிதகமும் என்னும் ஆறுறுப்பும் உடையது கலிப்பா எனக் கொள்க. இனி அதனை நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, வெண்கலிப்பா என விகற்பித்துக் கூறுவர் (எ-று.)*

'அளவடியே முதலாக அனைத்தடியி னானும்
அழகமர்நான் கடிமுதலா எட்டடியி னளவும்
வளமலியுஞ் சீரராக வுறுப்புவந் தாகும்
மன்னியவீ ரடியிரண்டு மோரடியா னன்கும்
உளமலிசிந் தடியெட்டுங் குறளடி யீரெட்டும்
ஒருங்கியல்பே ரெண்சிற்றெண் ணிடையெண்ணோ டளவெண்
தளமலியம் போதரங்க மெனும்பெயரா னிலவுந்
தாழிசைக்கீ ரடிசிறுமை பெருமைநான் கடியே.'

இதனால் அராக உறுப்பிற்கும், அம்போதரங்க உறுப்பிற்கும், தாழிசைக்கும் இலக்கணம் அறிக. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் உறுப்பாகிய தரவு அளவடியால் வரும். பிற பாவின் தரவிற்கு அடி வரையறையில்லை.

'தாழிசை தரவிவை தாமள வடியே.'

என்றாராகலின், அவ்விரண்டும் அளவடியால் வருமென்க. (௧௦)

117. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாக்களில் வரும் உறுப்பும் வெண்கலிப்பா ஆமாறும்

வண்ணக வொத்தா ழிசைக்கா றுறுப்பென்பர்; ஐந்துறுப்பு
நண்ணுவ தம்போ தரங்கவொத் தாழிசை; நான்குறுப்பாம்
எண்ணிய நேரிசை யொத்தா ழிசைதான்; இறுதிசிந்தாய்த்
திண்ணிய நேரடி யால்வரும் வெண்கலி தேமொழியே!

(இ-ள்.) தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பும் உடையது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா; அராக உறுப்பை நீக்கி ஐந்துறுப்பாலும் வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா; அராகமும் அம்போதரங்கமும் நீக்கி நான்குறுப்பாலும் வருவது நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா; ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வருவது வெண்கலிப்பாவாம் (எ-று.)

வரலாறு:—

'பூமகனே முதலாகப் புகுந்தமர ரெண்டிசையுந்
தூமலரா லடிமலரைத் தொழுதிரந்து வினவியநாள்
காமமுங் கடுஞ்சினமுங் கழிப்பரிய மயக்கமுமாய்த்
தீமைசால் கட்டுரைக்குத் திறற்கருவி யாய்க்கிடந்த
நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படுமா றினிதுரைத்துச்
சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளினையே;

இஃது ஆறடித் தரவு.

தானமே முதலாகத் தசைபார நிறைத்தருளி
ஊனமொன் றில்லாமை யொழிவின்றி யியற்றினையே;

எண்பத்தொன் பதுசித்தி யியல்பினு ளுளவென்று
பண்பொத்த நுண்பொருளைப் பாரறியப் பகர்ந்தனையே;

துப்பியன்ற குணத்தோடு தொழில்களால் வேறுபட
முப்பதின்மே லிரண்டுகலை முறைமையான் மொழிந்தனையே;

இவை இரண்டடி மூன்று தாழிசை.

ஆதியு மிடையினோ டிறுதியு மறிகுவ
 தமரரு முனிவரு மரிதுநின் னிலைமையை;
மீதியல் கருடனை விடவரவொடுபகை
 விதிமுறை கெட்வறம் வெளியுற வருளினை;
தீதியல் புலியது பசிகெடு வகைநின
 திருவுரு வருளிய திறமலி பெருமையை;
போதியி னலமலி திருநிழ லதுநனி
 பொலிவுற வடியவ ரிடர்கெட வருளினை;

இவை நாலடி அராகம்.

திசைமுகன் மருவிய கமலநன் னிறமென
வசையறு முனிவொடு மலியு நின்னடி;
உயர்வுறு பெருமையொ டயரறு மயர்வொ
புரையறு நலனொடு பொலியு நின்புகழ்;

இவை ஈரடி இரண்டாய் வந்த பேரெண்.

கற்புடை மாரனைக் காய்சினந் தவிர்த்தனை;
பொற்புடை நாகர்தந் துயரம் போக்கினை;
மீனுரு வாகி மெய்ம்மையிற் படிந்தனை;
மானுரு வாகி வான்குண மியற்றினை;

இவை ஓரடி நான்காய் வந்த சிற்றெண்.

எண்ணிறந்த குணத்தோய் நீ;
யாவர்க்கு மரியோய் நீ;
உண்ணிறைந்த வருளோய் நீ;
உயர்பார நிறைத்தோய் நீ;
மெய்ப்பொருளை யறிந்தோய் நீ;
மெய்யறமிங் களித்தோய் நீ;
செப்பரிய தவத்தோய் நீ;
சேர்வார்க்குச் சார்வு நீ;

இவை முச்சீரினால் வந்த இடையெண்.

நன்மை நீஇ;
தின்மை நீஇ;
நனவு நீஇ;
கனவு நீஇ;
வன்மை நீஇ;
மென்மை நீஇ;
மதியு நீஇ;
விதியு நீஇ;
இம்மை நீஇ;
மறுமை நீஇ;
இரவு நீஇ;
பகலு நீஇ;
செம்மை நீஇ;
கருமை நீஇ;
சேர்வு நீஇ;
சார்வு நீஇ;

இவை இருசீர் பதினாறாய் வந்த அளவெண்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

அகலி வாரின் றடியிணை பரவுதும்
வெல்படைத் தொண்டிமான் விறற்சே னைபதி
சிங்களத் தரையன் வெண்குடை யதனொடு
பொங்குபுகழ் வில்லவன் றன் புறக்குடை கொண்டு
பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோ னெனவே.

இது சுரிதகம்.

இஃது ஆறுறுப்பானும் வந்தமையால் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

'திருமேவு பதுமஞ்சேர் திசைமுகனே முதலாக
உருமேவி யவதரித்த வுயிரனைத்து முயக்கொள்வான்
இவ்வுலகு மீழுலகு மிசையுலகு மிருணீங்க
எவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்தசெழுஞ் சுடரென்ன
விலங்குகதி ரோரிரண்டு விலங்கிவலங் கொண்டுலவ
அலங்குசினைப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய்நீ;

இது தரவு.

மேருகிரி யிரண்டா மெனப்பணைத்த விருபுயங்கள்
மாரனிதை யாவேட்டு மன்னுபுர மறுத்தனையே;
வேண்டினர்க்கு வேண்டினவே யளிப்பனென மேலைநாள்
பூண்டவரு ளாளநின் புகழ்புதிதாய்க் காட்டாதோ;

உலகுமிக மனந்தளர்வுற் றுயர்நெறியோர் நெறியழுங்கப்
புலவுநசைப் பெருஞ்சினத்துப் புலிக்குடம்பு கொடுத்தனையே;
பூதலத்து ளெவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி
மாதவநீ யென்பதற்கோர் மறுதலையாக் காட்டாதோ;

கழலடைந்த வுலகனைத்து மாயிரவாய்க் கடும்பாந்தள்
அழலடைந்த பணத்திடையிட் டன்றுதலை யேறினையே;
மருள்பாரா வதமொன்றே வாழ்விக்கக் கருதியநின்
அருள்பாரா வதமுயிர்க ளனைத்திற்கு மொன்றாமோ;

இவை தாழிசை.

அருவினை சிலகெட வொருபெரு நரகிடை
எரிசுடர் மரைமல ரெனவிடு மடியினை;
அகலிட முழுவது மழல்கெட வமிழ்துமிழ்
முகில்புரி யிமிழிசை நிகர்தரு மொழியினை;

இஃது அராகம்.

அன்பென்கோ வொப்புரவென் கோவொருவ னயில்கொண்டு
முந்திவிழித் தெறியப்பால் போந்தமுழுக் கருணைய;
நாணென்கோ நாகமென் கோநன்றில் லான்பூணுந்
தீயினைப் பாயப்படுத்த சிறுதுயில்கொண் டருளினை;

இவை ஈரடி இரண்டு அம்போதரங்கம்.

கைநாகத் தார்க்காழி கைகொண்ட ளித்தனையே;
பைநாகர் குலமுய்ய வாயமிழ்தம் பகர்ந்தனையே;
இரந்தேற்ற படையரக்கர்க் கிழிகுருதி பொழிந்தனையே
பரந்தேற்ற மற்றவர்க்குப் படருநெறி மொழிந்தனையே;

இவை ஓரடி நான்கு அம்போதரங்கம்.

எனவாங்கு;

இது தனிச்சொல்.

அருள்வீற் றிருந்த திருநிழற் போதி
முழுதுணர் முனிவநிற் பரவுதுந் தொழுதக
ஒருமன மெய்தி யிருவினைப் பிணிவிட
முப்பகை கடந்து நால்வகைப் பொருளுணர்ந்
தோங்குநீ ருலகிடை யாவரும்
நீங்கா வின்பமொடு நீடுவாழ் கெனவே.'

இது சுரிதகம்.

இஃது ஆறடித் தரவு வந்து, அதன்பின் மூன்று தாழிசை வந்து, அதன் பின் அராகம் வந்து, அதன் பின் அம்போதரங்கம் வந்து, அதன் பின் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. இதனது வேறுபாடு அறிக.

'மண்வாழும் பல்லுயிரும் வான்வாழு மிமையவருங்
கண்வாழு மாருகர் கிளையனைத்துங் களிகூர
அந்தரதுந் துமியியங்க வமரர்க ணடமாட
இந்திரர்பூ மழைபொழிய விமையவர்சா மரையிரட்ட
முத்தநெடுங் குடைநிழற்கீழ் மூரியா சரியணைமேல்
மெய்த்தவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்த வொருபெரியோய்!

இது தரவு.

எறும்புகடை யயன்முதலா வெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ்போகி
எவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்று மிடரெய்தில்
அவ்வுடம்பி னுயிர்க்குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம்;

அறங்கூறு முலகனைத்துங் குளிர்வளர்க்கு மழைமுழக்கின்
திறங்கூற வரைகதிருஞ் செழுக்கமல நனிநாண
ஒருமைக்க ணீரென்பா னுரைவிரிப்ப வுணர்பொருளால்
அருமைக்கண் மலைவின்றி யடைந்ததுநின் திருவார்த்தை;

இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோ ரியாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் திருமேனி;

இவை மூன்றுந் தாழிசை.

ஆருயிர்க ளனைத்தினையுங் காப்பதற்கே யருள்பூண்டால்
ஓருயிர்க்கே யுடம்பளித்தா லொப்புரவிங் கென்னாகும்;
தாமரைநீங் குழல்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே முனைந்துலைத்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல்;

இது பேரெண்.

போரரக்க ரோரைவர்க் கறவமிழ்தம் பொழிந்தனையே;
ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே;
வார்சிறைப்புள் ளரையர்க்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே;
பார்மிசை யீரைந்தும் பாவின்றிப் பயிற்றினையே;

இது சிற்றெண்.

அருளாழி பயந்தோய் நீஇ;
அறவாழி பயந்தோய் நீஇ;
மருளாழி துறந்தோய் நீஇ;
மறையாழி புரிந்தோய் நீஇ;
மாதவரின் மாதவ னீஇ;
வானவருள் வானவ னீஇ,
போதனரிற் போதன னீஇ;
புண்ணியருட் புண்ணிய னீஇ;

இவை இடையெண்.

ஆதி நீஇ;
அமல னீஇ;
அயனு நீஇ;
அரியு நீஇ;
சோதி நீஇ;
நாத னீஇ;
துறைவ னீஇ;
இறைவ னீஇ;

அருளு நீஇ;
பொருளு நீஇ;
அறிவ னீஇ;
அநக னீஇ;
தெருளு நீஇ;
திருவு நீஇ;
செறிவு நீஇ;
செம்ம னீஇ;

இவை அளவெண்.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

பவளச் செழுஞ்சுடர் மரகதப் பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்தி புரிமன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்புந்
திண்மையு முலகிற் சிறந்துவாழ் கெனவே.

இது சுரிதகம்.

இஃது ஆறடித் தரவும், நான்கடித் தாழிசையொத்த பொருண்மேல் மூன்றும் வந்து, அளவடி ஈரடியிரண்டும், ஓரடி நான்கும், சிந்தடி எட்டும், குறளடி பதினாறுமாய் அம்போதரங்கம் பெற்று ஆறடி ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

[1]'வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ;

இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவால்
பீருடைய நலந்தொலையப் பிரிவரோ பெரியவரே;

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பரோ நயமிலரே;

சிலம்படைந்த வெங்கானஞ் செறுத்தகைய வென்பவால்
புலம்படைந்து நலந்தொலையப் போவரோ பொருளிலரே;

இது தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே.

இது சுரிதகம்.

தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்றும் இரண்டடியாய்த் தனிச்சொற்பெற்று, மூன்றடி ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா. தரவு எனினும், எருத்தம் எனினும் ஒக்கும். தாழிசை எனினும், எண்ணெனினும், இடைநிலைப்பாட்டு எனினும் ஒக்கும். அராகம் எனினும், அடுக்கியல் எனினும், முடுகியல் எனினும், வண்ணகம் எனினும் ஒக்கும். அம்போதரங்கம் எனினும், அசையடி எனினும், பிரிந்திசைக்குறளடி எனினும், சொற்சீரடி எனினும், எண்ணெனினும் ஒக்கும். தனிச்சொல் எனினும், இடைநிலை எனினும் ஒக்கும். சுரிதகம் எனினும், அடக்கியல்

1. யாப்ப. வி. 82-ஆம். சூ. மேற்கோள்.

எனினும், வாரம் எனினும், வைப்பு எனினும், போக்கியல் எனினும் ஒக்கும்.

இனி வெண்கலிப்பா வருமாறு:—

[1]'ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்துபவென்
தார்வரை யகன்மார்பன் தனிமையை யறியுங்கொல்
சீர்நிறை கொடியிடை சிறந்து.'

இஃது ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் வந்தமையான், வெண்கலிப்பா. (கக)

116. கொச்சகக் கலிப்பாவின் வகை

நிலவுந் தரவுந் தரவிணை யும்நின்ற தாழிசைகள்
சிலவும் பலவுஞ் சிறந்து மயங்கியுஞ் சீர்விகற்பம்
பலவும் வரினும் பவளமுஞ் சேலும் பனிமுல்லையுங்
குலவுந் திருமுகத் தாய்!கொண்ட வான்பெயர் கொச்சகமே.

(இ-ள்.) தரவு ஒன்றாய் வருவது தரவு கொச்சகக் கலிப்பாவாம்; தரவு இரண்டாய் வருவது தரவிணைக் கொச்சகக் கலிப்பாவாம்; சில தாழிசையாய் வருவது சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாம்; பல தாழிசையாய் வருவது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாம்; ஆறுறுப்பும் தம்முள் மயங்கியும் மிக்கும் குறைந்தும் பிற பாக்களோடு விரவியும் வருவது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாம் (எ-று.)

வரலாறு :—

[2]'செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.'

இது சுரிதகமில்லாத தரவு கொச்சகக் கலிப்பா.

[3]'குடநிலைத் தண்புறவிற் கோவலரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறெறீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப

1. யாப்ப. வி. 85-ஆம் சூ. மேற்கோள்.
2. யாப்ப. வி. 85-ஆம் சூ. மேற்கோள்
3. யாப்ப. வி. 22-ஆம் சூ. மேற்கோள்

எனவாங்கு,

ஆனொடு புல்லிப் பெரும்புதர் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.'

இது தனிச் சொற்பெற்றுச் சுரிதகத்தாலிற்ற தரவு கோச்சகக் கலிப்பா.

1 'திருந்திலைய விலங்குவேற் றிகழ்தண்டார்க் கதக்கண்ணன்
விரிந்திலங்கு மவிர்பைம்பூண் டடமார்பன் வியன்களத்து
முருந்திறைஞ்சு முத்திற்கு முட்டியெல்லாந் தனித்தனியே
அருந்திறன்மா மறமன்னர்க் கழுவனவும் போன்றனவே.'

2 'அடலமுங் கழற்செவ்வே லலங்குதார்ச் செம்பியன்றன்
கெடலருங் கிளர்வேங்கை யெழுதத்த முயிரோம்பா
துடல்சமத்துக் குத்தெரிந்த வொன்னுப்பல் லரசர்தங்
கடகஞ்சேர் திரண்முன்கை யிற்றோட வைகினவே.'

இவையும் முன்னதனோடொக்கும். இவையிற்றைக் கலிவிருத்தம் என்றாலும் இழுக்காது.

3 'வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனுங்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே;

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று
புனைமலர்த் தடங்கண்ணார் பொருளாகக் கருதாரோ;

அதனால்;

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே.'

இது சுரிதகத்தாலிற்ற தரவிணைக் கோச்சகக் கலிப்பா.

4 'பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே;

1. யாப்ப. வி. 32-ஆம் சூ. மேற்கோள்
2. யாப்ப. வி. 115-ஆம் சூ. மேற்கோள்
3. யாப்ப. வி. 86-ஆம் சூ. மேற்கோள்
4. ,, ,, ,,

தரவு.

ஆங்கொருசார்,
உச்சியார்க் கிறைவனு யுலகெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூண் புரந்தரனாய்ப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே.

ஆங்கொருசார்,
அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாய்ப் பாவித்தார்
சக்கரங்கைக் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆங்கொருசார்,
மால்கொண்ட பகைதணிப்பான் மாதடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாய்ப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே;

இது தாழிசை.

அஃதான்று,
கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நின்ற புகழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.'

இது சுரிதகம்.

இது நான்கடித் தரவும் மூவடித் தாழிசை மூன்றும் இடையிடை தனிச்சொல்லும் பெற்று நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச் சிறிது வேறுபட்டு வந்தமையால், சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

[1] 'தண்மதியொண் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறைவு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியொப் பிலையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ;

இது தரவு.

1. யாப்ப. வி. 86-ஆம் சூ. மேற்கோள்.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பல் தாழ்குழல் தளர்வாளோ;

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் விருப்பாளோ;

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசொடு மடிவாளோ;

நாம்பிரியே மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியே மென்றளித்த வுயர்மொழியும் பழுதாமோ;

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்துக் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவதும் பழுதாமோ;

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ;

இவையாறுந் தாழிசை.

அஃதான்று,

தனிச்சொல்.

அரும்பெற லமிழ்தினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரிதிவள் வெறுக்கையு மற்றே;

அதனால்,
விழுமிய தறிமதி யறிவாங்
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே.'

இது நான்கடிச் சுரிதகமும் நான்கடித் தரவும் இரண்டடித் தாழிசையாறும் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்று வந்த பஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா.

1 'மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிரந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திறைகூரு மேமஞ்சார் துறைவகேள்;

வரையென மழையென மஞ்செனத் திரள்பொங்கிக்
கரையெனக் கடலெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தோடு மேமஞ்சார் துறைவகேள்;

இவையிரண்டுந் தரவு.

---

1. யாப்ப. வி. 86-ஆம் சூ. மேற்கோள்.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்;

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் தெரியலனே யென்றியால்;

நீர்பூத்த நிரையிதட்க ணின்றுசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்;

கனைவரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்;

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்;

கலங்கவிழ்ந்த நாய்கன்போல் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்;

இவையாறுந் தாழிசை.

அதனால்,

தனிச்சொல்.

அடும்பயி லிறும்பிடை நெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு;

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;

அலங்கொளி யவிர்சுட ரிலங்கெழின் மனைதொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்;

இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ;

ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ ;

தாங்காது கழலுமென் தகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

மறவாத வன்பினேன் மனநிற்கு மாறருளாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறருளாய்;

காதலார் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்;
இணைபிரிந்தார் மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்;

இவையாறுந் தாழிசை.

பகைபோன் றதுதுறை;
பரிவா யினகுறி;
நகையிழந் ததுமுகம்;
நனிநா ணிற்றுளம்;
தகையிழந் ததுதோள்;
தலைசிறந் ததுதுயர்;
புகைபரந் ததுமெய்;
பொறையாயிற் றென்னுயிர்;

இவை இருசீர் எட்டு அம்போதரங்கம்.

எனவாங்கு,

தனிச்சொல்.

இனையது நிலையா லினையது பொழுதால்
இனையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடுங் கழிகவித் துன்னிய நோயே.'

இது சுரிதகம்.

தரவு இரட்டித்துத் தாழிசையாறும், தனிச் சொல்லும் நான்கு ஈரடி அராகமும், பெயர்த்தும் ஆறு தாழிசையும், எட்டு அம்போதரங்க உறுப்பும், தனிச்சொல்லும், நான்கடிச் சுரிதகமும் பெற்றுக் கலிக்கோதப்பட்ட ஆறுறுப்பும் வந்து மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் மயங்கியும் வந்தமையால், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா. (கஉ)

119. வஞ்சிப்பாவும் மருட்பாவும் ஆமாறு

சிந்துங் குறளு மடியென்பர் வஞ்சிக்குச் சீர்தனிச்சொல்
அந்தஞ் சுரிதக மாசிரி யத்தான் மருவும்;வெள்ளை
முந்தி யிறுதி யகவல தாகி முடியுமென்றால்
இந்து நுதன்மட வாய்!மருட் பாவென் றியம்புவரே.

(இ-ள்.) வஞ்சிப்பா இருசீர் அடியானும் முச்சீர் அடியானும் வரும்; இப்படி இருசீர் அடியானும் முச்சீர் அடியானும் வந்த

பின்பு தனிச்சொற் பெற்று அதன் பின் ஒரு சுரிதகம் பெற்று முடியும் எனக்கொள்க. 'சீர் தனிச்சொல்' என்று சிறப்பித்த அதனால், வெள்ளைச் சுரிதகத்தால் இறுது எனக் கொள்க. வெண்பா முதலாக ஆசிரியத்தால் இறுவது மருட்பா (எ-று.)

அதனைப் புறநிலை வாழ்த்து மருட்பா என்றும், கைக்கிளை மருட்பா என்றும், வாயுறை வாழ்த்து மருட்பா என்றும், செவி அறிவுறூஉ மருட்பா என்றும் வேறுபடுப்பாரும் உளரெனக் கொள்க.

வரலாறு:—

'மிக்ககூன் விதிமுறை வகுத்தலுந்
தக்காசிடை வகையுளி சேர்த்தலும்
அளபெடை யலகு நீத்தலும்
வளமலி யசைச்சீர் வகுத்தலும்
வெண்பா வல்லாப் பாவினுட்
பண்பார் நெடிலடி நடத்தலும்
குறளடி யால்வரும் வஞ்சியைத்
திறமலி சிந்தடி யாக்கலு
மிக்குங் குறைந்தும் வரினும்
ஒருபுடை யொப்புமை நோக்கி
ஒழிந்த செய்யுளுங் கொளலே
அதான்று,
குறியீடு மிலக்கண முண்மையிற்
செறிவு டைப்பொதுச் சீர்தரப் பெறுமே.'

இது முச்சீரடி வஞ்சிப் பாட்டு.

[1]'பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்,
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே.'

இஃது இருசீர் வஞ்சிப் பாட்டு.

---

1. யாப்ப. வி. 15-ஆம் சூ. மேற்கோள்.

'மிக்க கூன் விதிமுறை வருத்தல்'

என்னும் உரைச் சூத்திரத்துக்குப் பொருள்: கூனுவது, பொருளோடு அடி முதற்கே நிற்பதுவும், இடையிலே நிற்பதுவும், வஞ்சியின் கடையிலே நிற்பதுவுமாம். வஞ்சி அடியின் இறுதியும் நடுவும் [1]அசை கூனய் வருவது சிறப்புடைத்து. சீர் கூனய் வரினும் உகர இறுதியாய் வரப்பெறும். கூனைத் தனிச்சொல் என்பாருமுளர்.

[2]'உதுக்காண், சுரந்தானு வண்கைச் சுவர்ணமாப் பூதி
பரந்தானுப் பல்புகழ் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருள்நீங்க
மின்னு மெளிதோ மழை.'

[3]'அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
அன்ன ளளிய ளென்னாது மாமழை
இன்னும் பெய்யு முழங்கும்
இன்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே.'

இது அடியிற் கூன் வந்த ஆசிரியம்.

[4]'உமணர், சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா
டின்னு வென்றிநி ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே.'

இதுவும் அடியிற் கூன் வந்த ஆசிரியம்.

[5]'உலகினுள், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாரே பிறழினும்
இருந்தகைய விறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பென்றும் பிறழ்வின்றி
உறுதகைய வுலகிற்கோ ரொப்பாகித் தோன்றுதே.'

எனக் கலியடி முதற்கண்ணே 'உலகினுள்' என்னுங் கூன் வந்தவாறு.

---

1. இச்சொல் முற்பதிப்பில் இல்லை.
2. யாப்ப - வி. 94-ஆம் சூ. மேற்கோள்
3. குறுந்தொகை, 216
4. ,, 124
5. யாப்ப - வி. 94-ஆம் சூ. மேற்கோள்

[1]'காமர் கடும்புனல்' என்னுங் கலியினுள்,
'சிறுகுடி யீரே சிறுகுடி யீரே'

என ஓரடியாலே தனிச்சொல் வந்தவாறு.

[2]'உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகுமென்ப
அதனால்,
ஊற்றிற நாடுதே னன்மை
பற்றிய யாவையும் பரிவறத் துறந்தே.'

இவ்வஞ்சிப்பா அடி முதற்கண் 'உலகே' எனத் தனிச்சொல் வந்தவாறு.

[3]'மாவழங்கலின் மயங்குற்றன, வழி'

என வஞ்சி அடியின் இறுதிக்கண் 'வழி' என அசை கூனாய் வந்தவாறு.

[4]'கலங்கழா அலிற் றுறை கலக்குற்றன'

என்னும் வஞ்சியடியின் நடு 'துறை' என அசை கூனாய் வந்தவாறு.

[5]'தேரோட்டத் துகள்கெழுமின, தெருவு'

என்னும் வஞ்சி அடியின் இறுதிக்கண் தெருவு என்ற [6] உகர இறுதியாகிய இயற்சீர் கூனாய் வந்தவாறு.

'தக்காசிடை வகையுளி சேர்த்தலும்'

என்பதனால், அயற்சீர் தளைகளை நோக்கி ஓசையூட்டுக. வகையுளியாவது, முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புகள் நிற்புழி அறிந்து குற்றப்படாமல் வண்ணம் அறுப்பது. என்னை?

[7]'அருஞ்சைக்கு நீரா ரசைசீ ரடிக்கண்
பொருஞ்சைக்கா தோசையே நோக்கி - மருணீங்கக்

---

1. கலி. 39
2. யாப்ப - வி. 94-ஆம் சூ. மேற்கோள்
3. புறம். 345.
4. ,, ,,
5. ,, ,,
6. இச்சொல் முற்பதிப்பில் இல்லை.
7. யாப்ப - வி. 95-ஆம் சூ. மேற்கோள்.

கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு.'

வரலாறு:—

[1]'கடியார்பூங் கோதை கடாயினன் திண்டேர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து.'

இதனுள் 'கடியார்' என்றும் 'பூங்கோதை' என்றும் 'கடாயி னன்' என்றும் அலகிட "ஒன்று மிடைச்சீர் வருஞ்சீ ரொடுமுதல் சீர்கள் தெற்றும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாறுபட்டு வெண்பாத் தன்மை கெடுமாதலால், 'கடியார்பூ' என்று புளிமாங்காயாகவும், 'கோதை' என்று தேமா ஆகவும், 'கடாயினன்' என்று கருவிளம் ஆகவும் அலகிடச் சிதையாதாம்.

[2]'மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.'

இதனுள் 'நீடு' என்றும், 'வாழ்வார்' என்றும் அலகிடில் 'ஒன்று மிடைச்சீர் வருஞ்சீ ரொடுமுதற் சீர்கள்தெற்றும்' என் னுஞ் சூத்திரத்துள் 'நன்று மலர் காசு நாள் பிறப்பு என்றிற்ற சிந் தடியே துன்றும்' என்பதனோடு மாறுபடுமாதலால், 'நிலமிசை' என்று கருவிள மாகவும் 'நீடுவாழ்' என்று கூவிளமாகவும், 'வார்' என்று நாளாகவும் அலகிடுக. 'அளபெடை நீத்தலும்' என்ப தனால், அலகு பெறாதே வருமாறு:

[3]'இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு.'

'உப்போஒ' என்புழி அளபெடை அநுகரணம் வந்தது. அன் றேல், இடைச்சீர் தெற்றி, 'ஒன்று மிடைச்சீர்' என்னுஞ் சூத்திரத் துள் 'ஒன்றும்' என்னும் இலக்கணத்தோடு மாறுபடுமாதலான், 'மிக்ககூன் விதிமுறை வகுத்தல்' என்னுஞ் சூத்திரத்து 'அள பெடை நீத்தலும்' என்றபடி நீக்கச் சிதையாதாம்.

---

1. யாப்ப - வி. 95-ஆம் சூ. மேற்கோள்
2. திருக்குறள், 3.
3. யாப்ப - வி. 4-ஆம் சூ. மேற்கோள்.

¹'பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றினவா—னெல்லுக்கு
நூறேறொ நூறென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாறேமா லன்றளந்த மண்.'

இதனுள் 'நூறேறொ நூ'றென்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடை வந்து வெண்பாவினுள் நாலசைச் சீராயிற்று. அவ்வாறு வருக என்னும் இலக்கணம் இன்மையால், அளபெடை அநுகரணமாம். (கரு)

120. கூன் வரும் இடமும், வெண்செந்துறையும், குறட்டாழிசையும் ஆமாறு

பாமுதல் நிற்பது கூன்வஞ்சி யீற்றினும் பாதத்துள்ளும்
ஆமிரண் டோத்து நிகழடி வெண்செந் துறையிழுகிப்
போமிசைச் செந்துறை சந்தஞ் சிதைகுறள் பூண்பலசீர்
தாமது வந்தங் குறைநவு மாங்குறட் டாழிசையே.

(இ-ள்) பொருளோடு அடிக்கு முதலில் நிற்பது கூனும்; அக் கூன் வஞ்சிப்பாவின் அடியிறுதி நடுவினும் வரும்; இரண்டடி தம்முள் ஒத்து வருவது வெண்செந்துறை எனப்படும். செந்துறை இழிந்து ஒழுகிய ஓசையின்றி வருவதுவும், உதாரண வாய்பாட்டால் ஒரு குறள் வெண்பா ஓசை கெட்டு வருவதுவும், சீர் பலவாய் இரண்டடியாய் ஈற்றடி குறைந்து வருவனவும் குறட்டாழிசையாம் (எ-று.)

'குறைநவும்' என்றமையால், இவ்வோசையினிற் குன்றி வருதலே அன்றியும், அழிந்தழிந்து தனித்தனியும் வரப்பெறும் எனக் கொள்க. 'அது' என்ற அதிக வசனத்தால், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றிச் செந்துறை சிதைந்தது தாழிசைக் குறளாம்.

வரலாறு:—

²'ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.'

இஃது இரண்டடியும் ஒத்து வந்தமையால், வெண்செந் துறை.

---

1. யாப்ப - வி. 4-ஆம் சூ. மேற்கோள்.
2. முதுமொழிக் காஞ்சி, 1.

1'அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வயி னீரே.'

இது செந்துறைச் சிதைவுத் தாழிசைக்குறள், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இல்லாமையால் என்க.

2'வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி.'

இது சந்தழி குறட்டாழிசை.

'போதி நிழலிற் புனிதன் பொலங்கழல்
ஆதி யுலகிற் காண்.'

இது ஈற்றடி குறைந்து தனியே வந்த குறட்டாழிசை. பிறவு மன்ன. (கச)

121. வெளி விருத்தமும், ஓசை கெட்ட சிந்தியல் வெண்பா வெண்டாழிசையாம் என்றலும், ஓசை கெட்ட நேரிசை வெண்பா வெண்டுறையாம் என்றலும், வெண்~~டாழிசை~~யும்

நான்கோடு மூன்றடி தோறுந் தனிச்சொல்லு நண்ணுமேனில்
தான்பெயர் வெள்ளை விருத்தம்;முப் பாதந் தழுவிவெள்ளை
போன்றிடும் வெண்டா ழிசை;மூன் றிழிவே ழடிபொருந்தி
ஆன்றவந் தங்குறை யின்வெண் டுறையென்ப ராயிழையே!

(இ-ள்.) வெளி விருத்தமாவது மூன்றடியானும் நான்கடியானும் வந்து, அடிதோறும் முடிவிடத்துத் தனிச்சொற்பெற்று முடிவதாம். சிந்தியல் வெண்பா ஓசை கெடில் வெண்டாழிசையாம்; நேரிசை வெண்பா ஓசைகெடில் வெண்டுறையாம். அல்லாமலும், மூன்றடிச் சிறுமை ஏழடிப் பெருமையாய்ப் பின்பிற்சிலவடி சீர் குறைந்து வருவனவும் வெண்~~டாழிசை~~யெனக் கொள்க (எ-று.)

வரலாறு:—

3'கொண்டல் முழங்கினவாற் கோபம் பரந்தனவால் என்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவால் என்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யிசைந்தகவி யேங்கினவால் என்செய்கோயான்'
எனவும்,

---

1. யாப்ப - வி. 64-ஆம் சூ. மேற்கோள்
2. ,, ,, ,, ,,
3. யாப். காரிகை - செய். 6 மேற்கோள்

'மருளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமால் என்செய்கோயான்
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்டிலமால் என்செய் கோயான்
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக் கண்டிலமால் என்செய்கோயான்'

எனவும் இவை மூன்றடியாய் 'என்செய்கோயான்' எனுந் தனிச்சொற்பெற்று வந்த வெளி விருத்தம்.

'கல்லார் நாவிற் கட்டுரை கொள்வார் புகழெய்தார்
புல்லார் வாயிற் சொற்றெளி வுற்றார் புகழெய்தார்
நல்லார் மேவு நண்பு துறந்தார் புகழெய்தார்
இல்லா ராய்நின் றின்ப முவந்தார் புகழெய்தார்.'

இது நான்கடியாய்ப் 'புகழெய்தார்' என்னுந் தனிச்சொற்பெற்று வந்த வெளி விருத்தம்.

இனி வெண்டாழிசை வருமாறு:—

1 'நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்.'

இது சிந்தியல்வெண்பாச் சிதைந்து தனியே வந்தது.

2 'அன்று யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
ஒன்று ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்றான் துறந்து விடல்;

'ஏடு யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
வீடான் துறந்து விடல்;

'பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்.'

இவை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்தன.

3 'குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு நீர்மணல்மேல் நின்று—புலா லுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மை யோநீபிறர்
உள்ளம்புக் காப்ப துரை.'

---

1. யாப்ப - வி. 15-ஆம் சூ. மேற்கோள்
2. ,, ,, 66 ,, ,,
3. ,, ,, 22 ,, ,,

இது நேரிசை வெண்பாச் சிதைந்து வந்த வெண்டுறை.

'இலைசூழ் செங்காந்த ளெரிவாய் முகையவிழ்த்த வீர்ந்தண் வாடை
கொலைவே னெடுங்கட் கொடிச்சி கதுப்புளறுங் குன்றநாட
வுடைஉலை நோயொ டுழக்குமா லந்தோ
முலையிடை நேர்பவர் நேருமிடமே.'

1'குழலிசைய வண்டினங்கள் கோளிலைய செங்காந்தட் குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சகைந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்.'

இவை நான்கடியாய் ஈற்றடி இரண்டும் இரண்டு சீர் குறைந்த ஓரொலி வெண்டுறை.

2'ஓதநெடுங் கடல்வலையத் துயிரனைத்து முயக்கொள்வா னுயர்ந்த கொள்கைப்
போதிநிழ லமர்ந்தருளும் புண்ணியனற் றண்ணளியும் பிறிதாம் போலும்
சூதவனங் குயில்கோதச் சுரும்புபரந் திசைபாட
மாதவியுங் கொடிநுடங்க மாருதமு மூடலவுந்
தாதுபொழிந் தனகுரவுந் தண்ணிளவே னிலும்புகுந்த
ஏதிலரா கியவன்ப ரின்னருளு மிதுவாயின்.'

இஃது ஆறடியாய் ஈற்றடி நான்குங் குறைந்து வந்த் ஓரொலி வேண்டுறை.

3'தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிடும் பிலிற்றி யாங்கே.'

இது மூன்றடியான் வந்த ஓரொலி வெண்டுறை.

4'வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி யுரைப்பன வுரைப்பன்மற்
றெறிவுறு தகையினர் சிறந்தன ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லன சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்.'

---

1. யாப்ப. வி. 15-ஆம் சூ. மேற்கோள்
2. யாப்ப வி. 67-ஆம் சூ. மேற்கோள்
3. ,, ,, ,, ,,
4. ,, ,, ,, ,,

இது ஐந்தடியாய் ஈற்றடி ஒருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

[1]'முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகு மேவல்செய முறை [செய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மார்ச்செழியன் தாக்கரிய வைவேல் பாடிக்
கலங்கினின் றூரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினு ளிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கனன் மாலை யவிழ்ந்தாட வாடுமிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றூரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றூபவே:'

இவ்வேழடியாய் ஈற்றடி இரண்டு சீர் குறைந்து வந்த வேற்றொலி வெண்டுறை; பிறவுமன்ன. முதலடியொழித்தெல்லாம் ஈற்றடி எனப்படும். இவ்வினமெல்லாவற்றுள்ளும் மூன்றடியால் வரும் விருத்தமும், துறையும், தாழிசையும் சிந்தியல் வெண்பாவின் இனம் என்றும், நான்கடி விருத்தம் தனிச்சொல்லுடைத்தாயின், நேரிசை வெண்பாவின் இனம் என்றும், நான்கடியால் வரும் துறை இன்னிசை வெண்பாவின் இனம் என்றும், மிக்கு வந்தன பஃறொடை வெண்பாவின் இனம் என்றும் வழங்குவாருமுளர். (கரு)

122. ஆசிரியத்தாழிசையும், ஆசிரியத்துறையும், ஆசிரிய விருத்தமும்

மூன்றடி யொப்பன தாழிசை: நான்காய்க் கடையயற்கண்
என்றடி னைந்து மிடைமடக் காயு மிடையிடையே
தோன்றடி குன்றியு மாகுந் துறை;தொல் கழிநெடிலாய்
ஆன்றடி நான்கொத் திடிலா சிரிய விருத்தமன்றே.

(இ-ள்.) மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வரின் ஆசிரியத் தாழிசையாம்; அவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கியுந் தனியும் வரும். நான்கடியாய் ஈற்றயல் குறைந்து வருவதுவும், இடைமடக்காய் வருவதுவும், இடை குறைந்து வருவதுவும், எனவிவை ஆசிரியத்துறையாம்; உம்மையால் இடையடி இரண்டு மிக்குவருவதுவும், இடையிடை இரண்டு குறைந்து வருவதுவும், முதலடி குறைந்து வருவதுவும், கழிநெடிலடியாய் வருவதுவும், பலவிகற்பத்தான் வருவதுவுங் கொள்க. கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரிய விருத்தமாம் (எ-று.)

1. யாப்பருங்கலவிருத்தி. 67-ஆம் சூ. மேற்கோள்.

வரலாறு:—

'வார மலிபுன்னை மலிசினை மேலிருந்து
நாரை நரலு நயமில் சிறுமாலை
ஓர வருங்கொலிவ் வூரே யன்னாய் !

பொன்னுதிர் புன்னை பொழிசினை மேலிருந்
தன்னந் திளைக்கு மருளில் சிறுமாலை
இன்னும் வருங்கொலிவ் வூரே யன்னாய் !

மன்றணி புன்னை மறிமடல் மேலிருந்
தன்றில் திளைக்கு மருளில் சிறுமாலை
இன்று வருங்கொலிவ் வூரே யன்னாய் !'

இவை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

'போதி மேவினை புன்மை யகற்றினை
சோதி வானவர் தொழுவெழுந் தருளினை
ஆதி நாதநி னடியிணை பரவுதும்.'

இது தனியே வந்தது.

1'இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
அரங்க மணிபொழிலா வாடும் போலு மிளவேனில்
அரங்க மணிபொழிலா வாடு மாயின்
மரங்கொல் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில்.'

இஃது இடைகுறைந்து இடை மடக்காய் வந்த ஆசிரியத்துறை

2'கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி வருவீராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றும்மஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங்கை வேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வாரலையே.'

இஃது ஈற்றயலடி குறைந்து வந்த ஆசிரியத்துறை.

'கோவித்த மன்னர் குலங்க ணலங்கெட
வேவித்த கைச்சிலை தொட்ட
மாவித் தகனே மணிமுடி யாயெனைக்
கூவித்த காரணங் கூறே.'

இஃது இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை.

1 யாப்ப-வி. சூ. 76-மேற்கோள்

2.

'மேரு நெடுவரை மீது பொருபுலி
சேர எழுதிய சோழன்
ஆர மலரணி யாளி யனுபமன்
வீர னடிகளை யானே.'

இஃது அளவடியும் சிந்தடியும் உறழ்ந்து வந்த ஆசிரியத்துறை.

'பாடகஞ்சேர் காலொருபாற் பைம்பொற் கழலொருபால் தேன்துளி
நீடு குழலொருபால் நீண்ட சடையொருபால்
வீடியமா னதளொருபால் மேகலைசேர்ந்
தாடு துகிலொருபா லவ்வுருவாண் பெண்ணென் றறவாரா யார்ர.'

இஃது இடையிடை குறைந்து வந்தது.

'வரிகொ ளரவு மதியும்
புரிவுள சடையும்
புரிவுள சடைமேற் புனலும் பிறழுமே.'

இதுவும் அவ்வாறே குறைந்து இடையடி மடக்கி வந்தது.

'விண்ட முல்லை தாதுதிர்ந்த மீதெலாங்
கொண்டல்பூச் சொரிந்திருண்ட கொன்றைபொன் பொழிந்திவாள்
கெண்டையின் தடங்கண் மாதர் கேள்வர் சொன்ன காலமால்
வண்டு பாட மஞ்ஞை யாட வந்ததே.'

எனவும்,

'மிக்கவுத்த ராபதிக்கு மேவினார்
தொக்கசெஞ் சடைப்பரன் தனக்கோர்தூ சளித்தவாய்
மைக்கொள் சோலை சூழநீதி மன்னர் கூடி வாரணம்
புக்க வாசவர்க் கிருக்கை நல்கினார்.'

—எனவும் இவை இரண்டும் இடையடி நீண்டு வந்தன. பிறவு மன்ன.

'நுங்களையே யுறவாக வனம்புகுந்தா் காதலிகா ணுமக்குந் தாயே
னெங்களையே சரணென்க விருநீல வாலிங்கொ ருற்று ரில்லை
தங்களையா னிப்பொழுதே சாரேனே லென்மக்கள் தரியார் கண்டீர்
பொங்குளைமான் தேரிரவி போவதன்முன் யானணையப் போவன் [வாழி.'

இது கழிநெடில் நான்கு ஒத்து வந்தமையால் ஆசிரிய விருத்தம். இனி ஒரு சாரார் ஆசிரிய விருத்தத்தினை மண்டில விருத்தம் என்று கூறுவர்.

வரலாறு:—

'புரவுதரு குடியாகிப் புயல்வண்ணன் விரும்பியதூஉம் பொழில்சூழ் [காஞ்சி
கரியசுடர் வீதிதொறு முலாப்போந்து கவர்வதூஉங் கலைசூழ் காஞ்சி
நிரைவளையிவ் வுலகுய்ய நின்றுதவஞ் செய்வதூஉ நிழல்சூழ் காஞ்சி
சுரமகளிர் பாடுவதும் பயில்வதூஉஞ் சொன்மாலை தொடுத்த காஞ்சி.'

இஃது ஆசிரியமண்டில விருத்தம். 'இதனோடு வெளி விருத்தத்திற்கு வேறுபாடியாதோ?' எனின், வெளிவிருத்தம் அளவடியான் வரும். இது வேற்றுமை.

'அன்றயனை யுந்தியி னளித்தபரன் மேவுவது மத்தி கிரியே
சென்றுகரி கவ்வுமுத லைக்கணற மேவுவது மத்தி கிரியே
வென்றவன் வணக்குவது மேலில் கெயிற்றரிய தான வரையே
தன்றொழின் முருக்குவது தாளில் கெயிற்றரிய *தான வரையே.'

இதுவும் அது.

'துனைவருநீர் துடைப்பவராய்த் துவள்கின்றேன் துணைவிழிசேர் துயிலை [நீக்கி
இனவளைபோ விளநலஞ்சோர்ந்திடருழப்ப விகந்தவர்நாட் டில்லைபோலுந்
தனியவர்கள் தளர்வெய்தத் தடங்கமலந் தளைவிழ்க்குந் தருண வேனிற்
பனிமலரின் பசுந்தாது பைம்பொழிலிற் பரப்பிவரும் பருவத் தென்றல்.'

இஃது ஆசிரிய நிலை விருத்தம். இவ்வினமனைத்தினையும் ஓரடி குறைந்து வந்த துறை நேரிசைத்துறை என்றும், நேரிசை ஆசிரியப்பாவிற்கு இனமென்றும்; இரண்டடி குறைந்து வந்த இணைக் குறட்டுறை இணைக்குறள் ஆசிரியப்பாவிற்கு இனம் என்றும்; அடிதோறும் பொருள் பெற்று வந்த ஆசிரியவிருத்தம் அடிமறிமண்டில ஆசிரியப்பாவிற்கு இனம் என்றும்; நிலைவிருத்தம் நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு இனம் என்றும்; தாழிசை நிலைமண்டில ஆசிரியப் பாவிற்கு இனமென்றும் வேண்டுவாருமுளர். இவையெல்லாம் உய்த்துணர்க. இன்னும் பலவாகவுங் கூறுப. (கசு)

12$. கலித்தாழிசையும், கலி விருத்தமும், கலித்துறையும்

ஈரடி யாதி யெனைத்தடி யாலும்வந் தீற்றில்நின்ற
ஓரடி நீளிற் கலித்தா ழிசை;ஒலி யோர்விருத்தம்
நேரடி நான்காய் நிகழுமேன் றுர்;நெடி லென்றுரைத்த
பேரடி நான்கு கலித்துறை யாமென்பர் பேய்வளையே!

* 'கைம்மலை யொப்பத் தானவ்வரை யென்றார் குவலயாபீடத்தை' என்பது பழைய குறிப்பு.

(இ-ள்.) ஈரடி முதலாக அனைத்தடியாலும் வந்து ஈற்றடி மிகுவது கலித்தாழிசையாம்; இவை ஒருபொருள்மேல் மூன்றடுக்கவும் பெறும். நாற்சீர் நான்காய் வருவது கலி விருத்தம்; நெடிலடி நான்காய் வருவது கலித்துறையாம் (எ-று.)

வரலாறு :

1 'கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்
ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்;
மென்றினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்.'

இவை ஈரடி மூன்றாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருள்மேல் வந்த கலித்தாழிசை.

2 'பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே.'

இஃது ஈற்றடி மிக்கு ஏனையடியில் இரண்டாமடி குறைந்து, முதலடியும் மூன்றாமடியும் ஒத்து வந்த கலித்தாழிசை.

'போர்த்தலுடை நீக்குதல் பொடித்துகண்டுமெய் பூசல்
கூர்த்தபனி யாற்றுக் குளித்தல் புலனன்றே
சார்த்தியிடு பிச்சையர் சடைத்தலையொ டாய்தல்
வார்த்தையிவை செய்தவ மடித்தமன மென்றான்.'

இது நாற்சீர் நாலடியான் வந்த கலிவிருத்தம். அடிதோறும் பொருள்பெற்று வந்தன மண்டில விருத்தம். ஏனைய நிலைவிருத்தம்.

3 'மூன்றான் பெருமைக்கண் ... சரணங்களன்றே.'

இது நெடிலடி நான்காய் வந்த கலித்துறை

'நன்மை மேவுவார் மேவுவார் பெரும்பொரு ளென்கும்
புன்மை மேவுவார் யாவரும் புகழொடு பொருந்தார்
தொன்மை மேவுவார் மேவுவார் தொடர்வுறச் சுற்றம்
இன்மை மேவுவார் யாவரு மின்பமொன் றெய்தார்.'

இது மண்டிலக் கலித்துறை. பிறவும் அன்ன.

---

1. யாப்ப - வி. சூ. 87. மேற்கோள்
2. யாப்ப - வி. சூ. 87. மேற்கோள்
3. குண்டலகேசி, கடவுள் வாழ்த்து. இந்நூல், 125-ஆம் பக்கம்.

இவ்வினமனைத்தினும் அளவடியின் மிக்கு வருவன வெண் கலிப்பா இனம் என்றும், கலித்தாழிசை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவன நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா இனம் என்றும், கலித்துறையும் தனித்து வருங் கலித்தாழிசையும் தம்முளொத்தும் ஒவ்வாதும் வருங் கலிவிருத்தமும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாஇனம் என்றும் வேண்டுவாருமுளர். இனிக் கலித்துறையைக் கோவைக் கலித்துறை என்றும், காப்பியக் கலித் துறை என்றும் இரண்டாக்குவார் எனக் கொள்க. (கஎ)

124. கோவைக் கலித்துறை ஆமாறு

நெடிலடி நான்கவை நேர்ந்துநின் றேபதி னேழெழுத்தாய்
முடிவன வாம்பதி னேழு நிரைவரின் மூன்மொழிந்த
படிவழு வாது நடைபெறு மோசைவண் டேந்திநின்று
கடிகமழ் கோதைக் கயனெடுங் கண்ணி! கலித்துறையே.

(இ-ள்.) இதனைக் கோவைக் கலித்துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க. [1] 'முன்முன் பெருமை' காப்பியக் கலித்துறை. (கஅ)

125. வஞ்சித்துறையும், வஞ்சிவிருத்தமும், வஞ்சித்தாழிசையும், பாக்களின் ஒழிபும்

துன்னுங் குறளடி நான்குவஞ் சித்துறை; சிந்தடிநான்(கு)
உன்னும் விருத்தம்; துறைமூன் றொருபொருள் தாழிசையாம்;
இன்னும் வரினு மடக்குக போலியேன் றேற்பமுன்னூல்
பன்னு மவர்க்கு முடம்பா டெனவறி பைந்தொடியே!

(இ-ள்.) குறளடி நான்காய் வருவது வஞ்சித்துறையாம்; சிந் தடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாம்; வஞ்சித்துறை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது வஞ்சித் தாழிசையாம்; ஒழிந்த செய்யுட்களையும் ஒப்புமையாக இப்பெயர்களிலேயே வழங்குக என்பது எல்லாப் புலவர்க்கும் உடன்பாடு (எ-று.)

வரலாறு :—

[2]'பொருந்து போதி'

என்பது இருசீரடி நான்காய் வந்தமையால், வஞ்சித் துறை.

[3]'விண்ணவர் நாயகன்'

என்பது சிந்தடி நான்காய் வந்தமையால், வஞ்சி விருத்தம்.

1. இந்நூல், 125-ஆம் பக்கம். 3. இந்நூல், 125-ஆம் பக்கம்.
2. இந்நூல், 124-ஆம் பக்கம்

1 'மடப்பிடியை மதவேழந்
தடக்கையான் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்;

பேடையை யிரும்போத்துத்
தோர்கையான் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்;

இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.'

இது வஞ்சித்துறை, ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்தமையான், வஞ்சித் தாழிசையாம்.

'மன்ன னேரியன்
சென்னி மானதன்
கன்னி காவலன்
பொன்னி நாயகன்.'

இது வஞ்சி மண்டிலத்துறை.

'தாதகி நிழலே தாணிரவே
போதவர் பூகஞ் சூழ்பொழிலே
மீதெழு நிலவே வெவ்வெயிலே
ஆதர வகலா ளிங்கிவளே.'

இது வஞ்சி மண்டிலவிருத்தம். இவ்வினமனைத்தினுங் குறளடியால் வருந்துறையும், தாழிசையும் குறளடி வஞ்சிப்பாவின் இனமென்றும்; சிந்தடியால் வரும் வஞ்சிவிருத்தம் சிந்தடி வஞ்சிப்பாவின் இனமென்றும் வழங்கப்படும் என்ப.

2 'மிக்குங் குறைந்தும் வரினும் ஒருபுடை
ஒப்புமை நோக்கி ஒழிந்தவுங் கொளலே.'

என்றார் அமுத சாகரனார்.

---

1. யாப்ப - வி. சூ. 91. மேற்கோள்
2. யாப்ப - வி. சூ. 93.

'உரைத்த பாவினுக் கொத்த வடிகள்
வகுத்துரை பெற்றி யன்றிப் பிறவு
நடக்கு மாண நடத்தை யுள்ளே,'

என்றார் காக்கைபாடினியார்.

'ஒத்த வடியினு மொவ்வா விகற்பினு
மிக்க வடிவரினு மப்பாற் படுமே,'

என்றார் அவிநயனார்.

'பாவு மினமு மேவின வன்றியும்
வேறுபட நடந்துங் கூறுபட வரினும்
ஆறறி புலவ ரறிந்தனர் கொளலே.'

என்றார் மயேசுவரனார் எனக் கொள்க. 'ஒன்று மிடைச்சீர் வருஞ்சீ ரோடு' என்னுஞ் சூத்திரமுதலாகத் 'துன்னுங் குறளடி நான்கு' எனுஞ் சூத்திரமீறாய்க் கிடந்த சூத்திரம் எல்லாம் ஒருசாராசிரியர் மதமெனக் கொண்டு இவையிற்றுக்குக் குற்றங்காட்டுதற்கு எடுத்தோதினான் என்க. குற்றங் காட்டுமாறு:—

நாலு பாக்களுக்கு நால் ஓசை என்று கூறுபடுத்து, வெண்பாக்களுக்குச் செப்பலோசையென்றாக்கி, அதனையலகிட்டு ஓசையூட்டுக என்று இலக்கணஞ் சொன்னார். ஓசையாவது, செவிப்புலனே கருவியாக அறிவது என்பது எல்லார்க்கும் உடம்பாடாதலாம். அஃதறியும் இடத்து,

[1]'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.'

[2]'கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.'

[3]'உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.'

என்று இத்தொடக்கத்தனவற்றைச் செவிப்புலனே கருவியாக ஆராய்ந்த பொழுது ஓசை இனியவாய் இருக்கும்; அலகிட்டு ஓசையூட்டில் அவை ஓசையுண்ணா என்றால், அற்றன்று; இவற்றின்கண் அளபெடை உண்டாகவே ஓசையுண்ணுமெனில், அளபெடையின்றியேயும் ஓசை இனியனவாக இருந்தன என்க. அன்றியும் தேமா முதலாகிய உதாரணங்களால் ஓசையூட்டில், அவ்

1. திருக்குறள், 2.
2. திருக்குறள்—1087
3. ,, 1200

லோசை வெண்பாவின் ஓசை அன்று; அது உதாரணத்தில் ஓசை என்று கொள்க. 'வெண்பாவின் ஓசையும் உண்டே?' எனில் இரண்டோசை ஓரிடத்து நில்லா என்க. வெண்பாவின் ஓசை அங்கிருப்பதாகில் வெண்பாத் தன்கண் ஓசை இன்றியிருக்கும். அப்பாலது வெண்பாவின்கண்ணும் கண்டோம் ஆதலால் உதாரணத்தால் ஓசையூட்டும் பொழுது உதாரணத்திலோசை என்று கொள்க. அன்றியும்,

> [1]'கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
> முகாஅமை வல்லதே யொற்று.'

'இதனை எப்படி ஓசை யூட்டுவது?' எனில் குற்றியலிகரமென்று ஒன்றாக்கி அதனை,

> [2]"சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இஉஅளபோ
> டாரு மறிவ ரலகு பெறுமை"

என்று இகரம் அலகு பெறுதாக்கி, ஓசையூட்டுக என்பர்; அதுவும் பிழையென்க. இகரங் குற்றெழுத்தாய் நின்று அலகு காரியம் பெறுதலல்லது ஒற்றெழுத்தே போல் அரைமாத்திரை உடைத்தாயினும், அலகு காரியம் பெறாது ஒழிதற்குக் காரணம் இன்மையால் என்க. அன்றியும் அலகு காரியம் பெறுவிடில், எல்லாவிடத்தும் பெறாதொழிய வேண்டும் என்க. அன்றியுங் குற்றியலிகரம் அரை மாத்திரையாய், முற்றியலிகரம் ஒரு மாத்திரையானமை ஓர் உச்சாரணையினால் வேறுபடுத்திக் காட்டவொண்ணுவென்க. அன்றியுஞ் சீருந் தளையும் அழிய வந்த இடத்து அலகு காரியம் பெறுமெனின், இச்செய்யுளைச் செய்த புராண கவிஞர் சீரும் தளையும் சிதையச் செய்யாரா தலால், அலகிட்டவன் திருந்த அலகிட்டானுகையும் பொருந்தாதென்க. அலகிட்டவன் திருந்த அலகிட்டான் ஆகவும் அமையும், ஒரு நாள் அலகிட்டபடியே திருந்தக் கிடப்பதாகில் என மறுக்க.

> [3]'குலாவணங்கு வில்வெயினர் கோன்கண்டன் கோழி
> நிலாவணங்கு நீர்மணன்மே னின்று—புலாலுணங்கல்
> கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மை யோநீபிறர்
> உள்ளம்புக் காப்ப துரை.'

என்னும் பழம்பாடல் எவ்விலக்கணங்களால் அலகிட்டு ஓசையூட்டும் பொழுதும் ஓசையுண்ணாது, செவி கருவியாகப் பார்த்த

1. திருக்குறள், 585. 2. யாப்ப - காரிகை, ஒழிபு, 1.
3. யாப்ப - வி. சூ. 2-மேற்கோள்.

பொழுது ஓசை உண்ணும்; ஆதலால், அவை எல்லாம் பிழைக்கும் என்க. ஓசையுண்ணாத பொழுது மற்றொரு பெயர் மாத்திரம் போக்கி அச்செய்யுளுக்கு வேறொரு குற்றஞ்சொல்ல மாட்டாமை யால், பயனுமில்லை என்க. அன்றியும், வடநூற் புலவர்க்கு ஓசை யூட்டுக என்பதில்லை எனக் கொள்க. மேலும், அவர் பயில்வார்க் கரிதாக நூலைப் பெருக்குவதுவுஞ் செய்து, அப்பெருமையில் வாய்ப்புக்களை அடக்கமாட்டாதே மிக்கும் குறைந்தும் வரினும் ஒருபுடை ஒப்புமை நோக்கி ஒழிந்தவுங் கொளல் என்று சூத்திர முஞ் செய்தமையாலே அடங்கவுஞ் செய்திற்றிலர். பயில்வார்க்கு எளிதாகச் சுருங்கவுஞ் செய்திற்றிலர். யாப்பதிகாரத்திணல் பய னும் செய்யுளுக்கு ஒரு பெரிய ஏதுவே ஆதலால், குற்றமென்க. அன்றியும், யானைத்தொழில் முதலாகிய செய்யுட்களையெல்லாம், அடி வகுத்தற்கு இலக்கணஞ் சொன்னார் அடி வகுத்தும் பயனின் மையானும், அடி வகுத்தற்குக் கட்டளைப்பட்டு நிரம்பி இருப்பதோர் இலக்கணம் இன்மையானும் அதுவும் பிழை என்க. அடி வகுத்தற் குக் கலித்துறை, நேரிசைவெண்பா முதலிய செய்யுட்களை எதுகை கருவியாகக் கொண்டு அடி வழங்குவதாகில் 'திருமன்னி வளரும் இருநில மடந்தையும், போர்ச்செய்ய பாவையும், சீர்த்தனிச் செல்வியும்' இன்னுஞ் சில செய்யுளும் ஆசிரியப்பா, வெண்பா வோடு மாறுகொண்டு போலி வெண்பாவாகும். அன்றியும்,

[1]'போரவுணர்க் கடந்தோய் நீ
புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ
நிழறிகழும் படையோய் நீ'

என்னும் இடையெண்ணே செந்துறையாம் எனக் கொள்க. மற்றும் அடிவகுத்தற்கு நிரம்பி இருப்பதொரு கருவி கண்டதின்மையானும், ஆசிரியப்பா முதலாகிய அடி வகுத்துப் பயன் நிரம்பாமையானும் அது பிழை என்க. மற்று மிகைப்படக் கூறுதல் முதலாகப் பல குற்றமும் உள எனக் கொள்க. 'குடமுடைந்தது, மடம் வெந்தது,' என்றாற்போலச் சிறிதேயாயினும் குற்றமுடைத்தாயின் அது நூலாய் நிரம்பாதெனக் கொள்க. இந்நூலுடையார் எது கையே கருவியாக அடி வகுத்தார் என்க. (கக)

---

1. யாப்ப - வி. சூ. 2 மேற்கோள்.

126. பாக்களை முற்கூறிய பெயர்களால் அல்லாமல் வேறு பெயர்களால் வகுத்து, வேறு இலக்கணமும் கூறுகின்றார்

மேவுங் குறள்சிந் தொடுதிரி பாதிவெண் பாத்திலதம்
மேவும் விருத்தஞ் சவலையென் றேழு மினியவற்றுள்
தாவு மிலக்கணந் தப்பிடி லாங்கவை தம்பெயரால்
பாவு நிலையுடைப் போலியு மென்றறி பத்தியமே.

(இ-ள்) குறளும், சிந்தும், திரிபாதியும், வெண்பாவும், திலதமும், விருத்தமும், சவலையும் என்று ஏழு வகைப்படும் பத்தியக்கவி எனக் கொள்க; இனி இவ்வேழும் தத்தம் இலக்கணத்தின் மிக்கும் குறைந்தும் வரின், போலி என்பனவாம்; குறட்போலி, சிந்துப் போலி, திரிபாதிப் போலி, வெண்பாப் போலி, திலதப் போலி, விருத்தப் போலி, சவலைப் போலி என வருமெனக் கொள்க (எ-று.) (உ)

127. குறள், சிந்து, திரிபாதி, வெண்பாக்கள் ஆமாறு

எழுசீ ரடியிரண் டாற்குற ளாகும்; இரண்டடியொத்
தழிசீ ரிலாதது சிந்தாம்; அடிமூன்று தம்மிலொக்கில்
விழுசீ ரிலாத திரிபாதி; நான்கடி மேவிவெண்பாத்
தொழுசீர் பதினைந்த தாய்நடு வேதனிச் சொல்வருமே.

(இ-ள்.) எழுசீர் அடி இரண்டாய் வருவது குறளாம்; அடி இரண்டாய்த் தம்முள் அளவொத்தது சிந்தாம்; மூன்றடியாய்த் தம்மில் அளவொக்கில் திரிபாதியாம்; நான்கடியாய்ப் பதினைந்து சீராய் நடுவு தனிச்சொல் வருவது வெண்பாவாம் எனக் கொள்க (எ-று.)

வரலாறு:—

[1]'உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.'

இது முதலடி நாற்சீராய்க் கடையடி முச்சீராய் வந்த குறள். இனிக் குறட்போலியாவது, எழுசீரின் மிக்கும் குறைந்தும் இரண்டடியாய் அவ்வடியும் தம்முள் அளவொவ்வாது வருவதாம். ஓரடியாலே ஒரு செய்யுளாய் வருவதுவும் குறட்போலியாம்.

வரலாறு:—

'உற்றவர்க்குறுப் பறுத்தெரியின்க ணுய்த்தலையன்ன
தீமைசெய்தோர்க்கு மொத்தமனத்தாய்
நற்றவர்க்கிட மாகின்றது நாகையே.'

1. திருக்குறள், 406.

இஃது இரண்டடியாய் ஈறு குறைந்து வந்த குறட்போலி.

[1]'கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ற டொழாஅ ரெனின்.'

[2]'கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.'

இவையெல்லாங் குறட்போலியெனக் கொள்க.

'சிறியகுறள் மாணி செய்குணங்க ளோதுவன்காண்.'

இஃது ஓரடியான் வந்த குறட்போலி.

இனிச் சிந்தாவது,

'வீசின பம்பர மோய்வதன் முன்னு
னுஞ்ச யறவினை யாடித் திரிவனே,'

எனவும்,

'எடுத்த மாட மிடிவதன் முன்னு
னடுத்த வண்ணம் விளையாடித் திரிவனே,'

எனவும் இவை இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வந்தமையால், சிந்தாம் எனக்கொள்க.

'மீனுமை காரேனம் வென்றியரி யென்றிவ்வமுன்
னுனினைப்பதற் கன்பர்கண் டீர்நன்மை யாள்பவரே;'

எனவும்,

[3]'கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.'

எனவும் இவை ஈரடி ஒவ்வாது வந்தமையால், சிந்துப் போலியாம் எனக் கொள்க. திருவள்ளுவப் பயனெல்லாங் குறள் வெண்பா என்றமையால் அஃது குற்றமெனில், அற்றன்று; 'அவையெல்லாம் ஒரு பெயராலே வழங்க வேண்டாவோ ?' எனின், குண்டலகேசி விருத்தம், கலிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம் முதலாயுள்ள வற்றுட் கலித்துறைகளும் உளவாமாதலால், குற்றமாகாது. இவை

1. திருக்குறள், 2.
2. ,, 1087.
3. ,, 585.

யிற்றின் நாற்சீரடியாய் வருவன சிந்தாகவும் ஒழிந்தன சிந்துப் போலியாகவும் வழங்குப எனக் கொள்க.

தனி வெண்பாவாவது,

'ஒன்றைந்தெட் டாகியசீ ரொத்த வெதுகையாய்
ஒன்றபதின் மூன்றொன்பா னேரொத்து—நன்றியலு
நீடுசீர் மூவைந்தா னேரிசைவெண் பாவென்பர்
நாடுசீர் நாப்புலவர் நன்கு.'

இது நாலடியாகிப் பதினைந்து சீராய் நடுவு தனிச்சொற் பெற்று வந்தவாறு கண்டுகொள்க.

(இ-ள்.) முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் எட்டாம்சீரும் தம்மில் ஒத்த எதுகையாய், பதின்மூன்றாம் சீரும் ஒன்பதாஞ் சீரும் ஒத்த எதுகையாய்ப் பதினைந்து சீரால் வந்தது வெண்பாவாம்; இதனை நேரிசை வெண்பா என்பாருமுளர்.

'நிகரி லிருவிகற்ப நேரிசைவெண் பாவைப்
பகரிற் பரிசறிவார் மாட்டுப் - புகரிலா
இன்குறள் வெண்பா விரண்டாய்த் தனிச்சொல்லு
நன்குறளாய் நிற்கு நடு.'

'மூண்டுமலி நேரிசை வெண்பா முதற்குறட்பா
வேண்டுதனிச் சொல்லோடு விட்டிசைக்கில்—ஆண்டடியில்.
ஆசிடை யொன்றிரண்டு வந்தமர்ந்தான் மற்றதன்பேர்
ஆசிடை வெண்பாவென் றார்.'

இனி வெண்பாப் போலியாவது, இவ்விலக்கணங்களான் மிக்கும், குறைந்தும் இதுவே போல வரும்.

வரலாறு:—

*'வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை
களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்.'

---

* 'இதனையும் கீழ்வரும் 'கடற்குட்டம்' என்பதனையும் முதன் மூன்றடியும் அளவடியாய் ஈற்றடி சிந்தடியாய் இன்னிசை வெண்பா எனப் பிறர் கொள்ளுப. எதுகை கருவியாகக் கொண்டு அடி வகுப்பார் இன்னிசை வெண்பாவையும் வெண்பாப் போலியின் அமைத்தமையான் அன்றே இவ்வாசிரியர் அடிவரையறை நோக்காது ஈற்றில் அளவடியும் இடையில் நெடிலடியும் பொருத்தி இவ்வாறு இடர்ப்பட்டது' என்பது பழைய குறிப்பு.

இது தனிச்சொல் இன்றி மூன்றும் அடி குறைந்து நான்கடியாய்ப் பதினைந்து சீராய் வந்தது.

> [1]'கடற்குட்டம் ✝போழ்வர் கலவர்
> படைக்குட்டம் பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
> தவக்குட்டந் தன்னுடையா னீந்தும்
> அவைக்குட்டங் கற்றான் கடந்து விடும்.'

இது முதலடியும் மூன்றாமடியுங் குறைந்து, ஏனையடிகள் நீண்டு, மேல் இரண்டடியும் ஒரெதுகையாய், கீழ் இரண்டடியும் ஒரெதுகையாய் வந்த வெண்பாப் போலி.

> 'கறைப்பற் பெருமோட்டுக் காடுகிழ வோட்டொத்
> தரைத்திருந்த சாந்துகொண் டப்பேய்
> மறைக்குமாங் காணாது வன்பேய்தன் கையைக்
> குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு.'

இது தனிச்சொலின்றி வந்த வெண்பாப்போலி. இனி இன்னிசை வெண்பா என்பதொன்றுண்டு. அதுவும் வெண்பாப் போலியிலே அடங்கும் என்பது மேலே சொல்லியவற்றால் தானே விளங்கும்.

> 'ஒன்றும் பலவும் விகற்பாகி நான்கடியாய்
> நின்று தனிச்சொற்றும் பெற்றும் பெறாதொழிந்துந்
> தன்னிசைய நேரிசையின் வேறாய் வருமாகில்
> இன்னிசைவெண் பாவாமென் றார்.'

இஃது இன்னிசை வெண்பாவிற்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க. இனித் திலதமாமாறு சொல்லுகின்றான். (உக)

128. திலதம் ஆமாறு

> நேர்முந் துறிற்பதி னாறெழுத் தாகி நிரைமுதலாஞ்
> சீர்முந் துறிற்பதி னேழாய் முடிந்துசெப் பாரடிகள்
> ஏர்முந்து நான்கோத் திருபது சீரா லியன்றிடுமேல்
> தேர்முந்து பேரல்குன் மாதே ! அஃது திலதமன்றே.

(இ-ள்.) நேரசை முந்தின் பதினாறு எழுத்தாய், நிரையசை முந்தின் பதினேழ் எழுத்தாய் முடியும் பாதங்கள் நாலாய்ச்

---

1. நான்மணிக்கடிகை, 18.

✝'போழ்வ ரகல்வர் எனினு மமையும்,' என்பது பழைய குறிப்பு.

நான்கடியான் வந்த சவலை, எதுகை இன்றி வரினும் சவலைப் போலியாம் எனக்கொள்க. இதனால் எல்லாச் செய்யுளும் எதுகை அழியினும் போலியாகும் என்றாராயிற்று. முடிவிரண்டும் மிக்கும், முதலிரண்டும் நைந்தும், முடிவிரண்டு குன்றி முதலிரண்டு மிக்கும், இடையிடையஃகியும், மிக்கும் வரினும் நடைச்சவலைப் பாதச்சம விருத்தம் என்பாருமுளர்.

வரலாறு,

'சங்குமுள வுறையுமுள தாநல்ல கவரியுள
எங்குமுள தூரவுகிண றெறியுமறி கொடியுமுள
பொங்குபுனல் வந்தலைப்பப் புள்ளினங்க ளார்ப்பப்
பொருகயலோ டினவாளை புறக்கணித்து நோக்கத்
தெங்குபழம் வீழ்ந்தொழுகுங் காவிரியின் றென்பாற்
றிருவெண்காட் டையவெனிற் றீவினைகள் கெடுமே.'

இது முதற்சவலை. பிறவும் ஒட்டிக் கொள்க. இனிச் சந்தமும் தண்டகமும் ஆமாறு சொல்லுகின்றான். (உச)

131. விருத்தமும் தண்டகமும் ஆமாறு

ஒன்றுதி யென்ப ரொருசா ரவரொரு நான்குமுன்னும்
என்று லினிதுசந் தத்தி னெழுத்தை யிருபதின்மேல்
நன்றாய வாறுயர் வாமேன் றுரைப்பர்நற் றண்டகமேற்
பின்றாத கட்டளை நான்குமுன் னாகிப் பெருகிடுமே.

(இ-ள்.) விருத்தவடிகள் ஓரெழுத்து முதலாக வருமென்பர் ஒருசாரார்; நான்கெழுத்து முதலாக வந்தால் அல்லது ஓசையுண்டாகா; விருத்தவடிக்குப் பெருமை *இருபத்தாறு எழுத்து எனக் கொள்க; எனவே இருபத்தா றெழுத்தின் ஏறினவெல்லாம் விருத்தப் போலியாம் என்றாராயிற்று. தண்டகம் நான்கு கட்டளை முதலாக வரும். (உரு)

132. இலகுவும் குருவும் ஆமாறு

ஏறிய நெட்டெழுத் தேநெடி லோற்றே யெழில்வடநூல்
கூறிய சீர்க்குறி லோற்றே குருவாம் குறிலதுவே
வேறியல் செய்கை யிலகுவேன் றாகும்; வியன்குறிலும்
ஈறிய லிற்பிறி தாமொரு காலென் றியம்புவரே.

---

* 'இது வடநூற்றுணிபு. தமிழின் முப்பத்து மூன்றெழுத்து ஈறாக வரும்; அடியிரட்டித்த விருத்தங்களில் அதற்கு மேலும் வரப் பெறும்.' என்பது பழைய குறிப்பு.

(இ-ள்) நெட்டெழுத்தும், நெடிலொற்றும், குறிலொற்றும் குருவென்பர்; அஃது இரண்டலகுடைத்தாகி இளம்பிறை போன்ற குறியினைப் பெறும்; குற்றெழுத்து இலகுவாம்; அஃது ஓரலகு உடைத்தாய், நேரே கீழ்நோக்கி வலிக்கப்பட்ட ஒரு கீற்றினைப் பெறும்; ஈற்றின்கண் நின்ற பொழுது குருவாகையும் ஒருகா லுண்டு. (எ-று)

இனிச் சந்தங்களுக்குப் பிரத்தாரமுதல் ஆறுதெளிவுகளுஞ் சொல்லுகின்றான். (உகூ)

133. பிரத்தார முதல் ஆறு தெளிவு

ஒப்பா ருறழ்ச்சியுங் கேடுமுத் திட்டமு மோன்றிரண்டே
னப்பா லிலகு குருச்செய் கையுமந்தச் சந்தங்களால்
துப்பார் தொகையு நிலவ ளவுமென்று சொல்லிவைத்தார்
செப்பார் தெளிவுக ளாறையுஞ் சீறடித் தேமொழியே!

(இ-ள்.) உறழ்ச்சியும், கேடும், உத்திட்டமும், ஓரிலகுடையன இன்னதனைச் சந்தம் ஒரு குருவுடையன இன்னதனைச் சந்தம் இரண்டிலகுடையன இன்னதனைச் சந்தம் இரண்டு குருவுடையன இன்னதனைச் சந்தம் என்றிப்படிச் சந்தத்தளவும் ஏறச்சொல்லும் *இலகு குருச் செய்கையும், முதற் சந்தத்துக்கு விரிவின்னதனையும் இரண்டாஞ் சந்தத்திற்கு விரிவின்னதனையும் என்றிப்படி இருபத்தாறளவுமேற்றிச் சொல்லும் விருத்தத் தொகையும், முதற் சந்தம் இன்னதனை நிலத்தில் உறழலாம் இரண்டாஞ்சந்தம் இன்னதனை நிலத்தில் உறழலாம் மூன்றாஞ்சந்தம் இன்னதனை நிலத்தில் உறழலாம் என்றிப்படி இருபத்தாறுஞ் சந்தத்தளவும் ஏற்றிச் சொல்லும் நில அளவும் தெளிவுகளாம். (எ-று.)

உறழ்ச்சி எனினும் பிரத்தாரம் எனினும் ஒக்கும்; நட்டமெனினும் கேடெனினும் ஒக்கும்; உத்திட்டம் எனினும் நித்திட்டம் எனினும் ஒக்கும். (உஎ)

134. சந்தங்களைப் பிரத்தரித்துக் காட்டுதல்

ஆதி யினிற்குருப் பாதம்வைத் தாதிக் குருவதன்கீழ்
ஓதிய சீரில குத்தன்னை யாக்கி யொழிந்தவற்றை
மீதியன் மேற்படிக் கோப்பித்து முன்புறப் பாழ்கிடக்கின்
தீதிய லர்க்குருக் கொண்டே மறைக்க திறப்படவே.

---

* 'இதனை வடநூலார் ஏகத்துவியாதிலகக்கிரியை என்பர்,' என்பது பழைய குறிப்பு.

(இ-ள்.) சந்தங்களைப் பிரத்தரித்துக் காட்டுதற்கு எடுத்துக் கொண்டான்; அஃது ஆதி முழுக் குருவைத்து உறழ்க்கையும், ஆதி முழு இலகு வைத்து உறழ்கையும் என இரண்டு வகைப்படும். அவற்றுள் ஆதி முழுக் குரு வைத்து உறழ்கையாவது, இன்னதனை ஒரு சந்தமென்று உறழ்ந்து காட்டுக என்றால், முழுக் குருவடியை மேல் வைத்து முதற் குருவின்கீழ் ஓரிலகு வைத்து ஒழிந்தனவெல்லாம் ஒக்கவிட இரண்டாம் அடியாம்; இரண்டாம் அடியின் முதற் குருவின்கீழ் இலகுவிட்டுப் பின்பு மேலைப்படியோடு ஒக்கவிட்டு முன்பு குருவிட மூன்றாமடியாம். மற்றையவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க.

'குருக்கீழ் இலகுவா மேனைய தொக்குங்
குருத்தொகையு மாதிக்கட் கூட்டு.'

இனி ஆதி முழு இலகு வைத்து உறழுமாறு, அச்சந்தத்தின் முழு இலகு வைத்து அதன் முதலிலகுவின்கீழ்க் குரு வைத்து ஒழிந்தன ஒப்பிக்க இரண்டாமடியாம். பின்னையும் இதன் முதல் இலகுவின் கீழ்க் குரு வைத்துப் பின் ஒக்கவிட்டு முன்பு இலகுவிட மூன்றாமடியாம்; ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. மேலும் முழுக்குரு உறழ்ச்சியோடு மாறுபடாமை உறழ்க.

'இலகுவின் கீழ்க்குருவா மேனைய தொக்கு
மிலகு வெழுவா யிடத்து.' (உ௪)

135. நட்டம் என்னும் தெளிவுக்கு இலக்கணம்

ஏறு மடியெனைத் தாவது கேட்டதேன் றலவ்வெண்ணைத்
தேறும் படியரை செய்தி லகுக்கோள்க சேரிறேற்றை
வேறு முருவொன்று பெய்த்துரை செய்து வியன்குருவைத்
தீறு திகழு மளவு மியற்றுக விப்படியே.

(இ-ள்.) நட்டமென்னுந் தெளிவிற்கு இலக்கணஞ் செய்வானெடுத்துக்கொண்டான்; ஆதி முழுக் குருவின் நட்டமும் ஆதி முழுவிலகுவின் நட்டமும் என இரண்டு வகைப்படும்; அவற்றுள் இஃது ஆதி முழுக் குருவின் நட்டத்துக்கு இலக்கணம் எனக் கொள்க. இன்ன சந்தத்தில் இன்னதனையாம் அடியில் இட்டது அறி என்றால் அவன் சொன்ன அடித்தொகையைப் பாகஞ் செய்து இலகு வைக்க. பாகஞ்செய்யப் போகாதாகில் ஒன்றிட்டுப் பாகஞ்செய்து குரு வைக்க; இப்படி வெறிதே பாகஞ்செய்ய இலகுவாம்; ஒன்றிட்டுப் பாகஞ் செய்யிற் குருவாம்; அவன் கருதின

எழுத்தளவும் இட்டால் அவ்வடி இதுவென வெளிப்படும்; ஆதி முழு இலகுவின் நட்டம் இலகு சொன்ன இடத்திற் குருவைத்துக் குருச் சொன்ன இடத்து இலகு வைத்து அடியிட்டுக்கொள்க.

'எனைத்தாவ தென்றறிவ னிட்டதறி யென்றால்
அனைத்தரைசெய் தாண்டிலகு வைக்க—நினைத்ததனை
விள்ளத்தா னாகாதேல் வேறே யிலகிட்டுக்
கொள்ளத்தா னாகுங் குரு.' (உகூ)

136. உத்திட்டம் என்னும் தெளிவின் இலக்கணம்

காட்டிய வீடேனைத் தாவதேன் றலதன் கண்ணெழுத்திற்
கூட்டிய வொன்றாதி கொண்ட திரட்டித்துக் கோப்பியல
நாட்டிய சீரில குக்களின் மேனண் ணியவிலக்கம்
ஈட்டியங் கொன்றிட் டுரைக்கு மிதனையுத் திட்டமேன்னே.

(இ-ள்.) உத்திட்டமாவது சொல்லுவான் எடுத்துக்கொண்டான். உத்திட்டம் ஆதி முழுக் குருவின் உத்திட்டம், ஆதி முழு இலகுவின் உத்திட்டம் என இரண்டு வகைப்படும். அவற்றுள் ஆதி முழுக் குருவின் உத்திட்டத்துக்கு இலக்கணமாவது, ஓரடியில் குரு இலகுவிட்டது இன்னதனையாமடி என்று சொல்லென்றால், அவ்வடியில் எழுத்துக்களுக்கு ஒன்று முதலாகக் கொண்டு இரட்டியாய் ஈற்றளவும் இலக்கமிட்டு இலகுவின்மேல் எண்ணெல்லாந் தொகுத்து ஒன்றிட அதற்கு எண்ணும் (எ-று.)

'ஒன்றிரண்டு நான்கெட்டென் றுள்ளளவுஞ் சேர்த்திரட்டித்
தென்று மிலகுவின்மே லெண்களோ—டொன்றிட்டு
வைத்திம் முறைமை வழுவாமை கண்டுய்ப்ப
துத்திட்டஞ் சுட்டெனினு மொன்று.'

ஆதி முழு இலகுவின் உத்திட்டம் குருவின்மேல் எண்களில் ஒன்றிட்டுச் சொல்லுக. (௩௦)

137. ஓர் இலகு முதலாக உடைய விருத்தங்களை அறிதல்

ஓங்கிய சந்தத் தெழுத்துக் களைவீ டிரண்டொருமுன்
றாங்கிய னன்கைந்தோ டாறே ழெனவிரண் டாலிசைத்துத்
தாங்கிய வீடோன்றேன் றீரேழித் திட்டுத் தமதயலெண்
பாங்கிற் றேகுத்து லகுக்குருப் பெய்து பகர்தோகையே.

(இ-ள்.) இன்ன சந்தத்து, ஓரிலகு உடைய விருத்தம் எத்தனை? இரண்டிலகு உடைய விருத்தம் எத்தனை? மூன்றிலகு உடைய

விருத்தம் எத்தனை? என்று இப்படி ஏற வினவினால், சந்தத்தில் எழுத்துக்களை வீடு வகுத்து இரண்டு முதல் மூன்று நாலெனத் தெனக் கீழ்நின்று மேல் நிறுத்திப் பின்னையும் இடநின்று வலநோக்கி முன் வைத்த திரள்களை ஈருக்கி இரண்டின் வீடிசையவிட்டுப் பின்பு ஒவ்வொரு பந்தியினும் ஒரு வீடு குறைய வகுத்து வீடு தோறும் அதனயல் வீட்டிலக்கங்களைத் தொகுத்து வைத்து மேல் நின்று கீழ் நோக்கி எண்ண ஓரிலகு முதலாகவுடைய விருத் தங்களாம். அவை எல்லாங் கூட்டி முழுக் குருவிலகுவை இடத் தொகையாம் (எ-று.)

'ஒன்றிரண்டு மூன்னுநா லஞ்சாறே ழெட்டொன்ப
தென்றுகொண் டிச்சை யளவுவரி—யொன்றிலொன்
றிட்டிட் டிறுதி யொழித்தொழிய வேதாதி
யொட்டி யிலகுகொண் டொட்டு.' (ரு௧)

138. சந்தத்தின் தொகை முதலியன அறியும் விதம்

தொகைநான் கிடமிட் டெழுத்தான் முரணித் தொடருமரை
தகையாத வண்ண நடுவண் வாற்றித் தருங்கடையிற்
சிகையாக விட்டெழுத் தோடில குக்களுஞ் சீர்க்குருவும்
மிகையாகு மாத்தி ரையுமடை வேயறி மெல்லியலே!

(இ-ள்.) தான் கருதின சந்தத் தொகையை நான்கிடத்து வைத்து அச்சந்தத்தின் எழுத்தான் நான்கிடத்து முரணி நடு விரண்டு படியையும் பாகஞ்செய்து கடைப்படியினோர் பாகங் கூட்டி வைத்தால் கீழைப்படியின் முதலச்சந்த எழுத்தின் தொகையாம்; இரண்டாவது இலகுவாம்; மூன்றாவது குருவாம்; நான்காவது மாத்திரையாம் (எ-று.)

'விருத்த வடியினை வேறைந்தா நாட்டி
விருத்த வடியெழுத்தான் மேனன்கு மாறி
யரைத்தகு நடுவின்மூன் றொடுநான்கா யக்குப்பை
யொருக்கவைந் திரட்டி யெழுத்தொடு முறழ
விருத்த வரியின் விரிவி லெழுத்துக்
குருக்களோ டேனைக் குறைவி லிலகு
விருத்தமாத் திரைமுழு மாத்திரை *யைந்தும்
விரித்து விகற்பித்து வேண்டப் படுமே.' (ரு௨)

*'ஐந்தாவதோர் பயனில் குறியீடு. அஃதாசிரியர்க்குடன்பாடன்று,' என்பது பழைய குறிப்பு.

139. சந்தத்தின் தோகை, அளவு முதலியன

எழுத்த ளவுமிரண் டேமுத லாய்க்கோண் டிரட்டிசெய்யக்
குழுத்த விறுதித் தோகையே தோகை; குல வுந்தோகையை
அழுத்த விரட்டிசெய் தங்கோன்று நீக்க வதுவுறழ்வால்
விழுத்த வியன்ற நிலத்தின் விரலேன்ப மெல்லியலே!

(இ-ள்.) தான் வேண்டின சந்தத்தின் எழுத்தளவாக இரண்டு முதலாக இரட்டித்து ஈற்றளவும் இலக்கம் இட்டால், ஈற்றில் நின்ற தொகை அச்சந்தத்திற்குத் தொகையாம்; அத் தொகையை இரட்டித்து ஒன்று களைய அச்சந்தம் உறழும் நிலத்திற்கு விரலளவாம். அகலத்திற்கும் அச்சந்தத்தில் எழுத்தை இரட்டித்து ஒன்றை நீக்க அகலம் விரலளவாம் (எ-று.)

'இரண்டுநான் கெட்டுப் பதினாறு முப்பத்
திரண்டறுபத் தீரிரண் டேறப்—பொருந்திய
வுத்த முதலாக வுற்கிருதி யீறாக
வைத்துரைப்பார் நாவல் லவர்.'

'விருத்த விரியிரட்டித் தோர்விர னீக்க
விருத்த விரற்களவை யாம்.'

'ஒருவிரற்கு மெய்யுணரின் மூன்றிறந்த சந்தம்
விரிமூன்று தொட்டுமே லேற—விீறுடங்கி
யீறு முதலாக விவ்வளவு மேய்ந்தொகை
வேறுபா டின்றி விளம்பு.'

'ஆதி யிரட்டித் ததனகத் தொன்றிடினும்
வேறுபா டில்லை விரல்.'

'மூன்றேழு மூவைந்து முப்பதின்மே லொன்றதுவு
மூன்றுடைய மூவிரு பஃதுமெனத்—தோன்ற
வரற்றொகைவா னன்றாகக் காணுமே சந்த
விரற்றொகையா னின்ற விரி.'

இவற்றை விரித்துரைத்துக்கொள்க. இனி விரற்குப் பிரமாணமாமாறு:

'அணுத்தேர்த் துகள்பஞ்சிற் றூய்மயி ரன்றி
மணற்கடுகு நெல்விரலென் றேற—வணுத்தொடங்கி
எட்டோடு மன்னுவிரற் பன்னிரண்டாற் சாணக்கில்
அச்சா ணிரண்டுமுழ மாம்.'

'முழநான்கு கோலக்கோ லைஞ்ஞூறு கூப்பீ
டவைநான்கு காதத் தளவாம்—பழுதின்
றளாநிறைந்த தொல்லோ ருரைசெய்த துண்மை
யளவிறந்த தன்மைநிலை யாம்.'

'ஈரைஞ்ஞூ றெண்மூன் றியல்பின் பிரிந்தக்கால்
ஈரைந்தாஞ் சந்தத்தி லெண்.'

'எட்டொன் றிருபான்மூன் றென்ன வருமூன்றற்
கொட்டிய சந்த விரி.'

'மதிலிரண்டு மாமாறும் வாய்ந்த வசுக்கள்
பதினைந்தாஞ் சந்தப் பரப்பு.'

'இரண்ட திரண்டிரு நான்கிரு நான்காம்
இரண்டென்ப பாதத்தி லெண்.'

'ஒருபாழ் பரவையோ ரெட்டைந்தோ ரேழா
றிருபதாஞ் சந்தத்தி லெண்.'

'இருநான்கு திக்கிசை யெட்டாறு சுன்னெட்
டிருபான்மேன் மூன்று மியல்பு.'

'ஆறே ழுருபுபா ழெட்டோடு மாங்கலை
வீறுத்த மாதி விளம்பிருபா—ஞுருக
மாறற் கிருதி மகிழ்வினுற் செய்துலகிற்
கூறுக தேறும் பொருள்.'

'ஏற்புடைய காதங் குறைந்த வெழுநூறு
நூற்றொருகால் கைவிரலே ழுற்கிருதி—யாற்ற
மொழிந்தவிரு பத்தாறு முன்னிய சந்த
மொழிந்தனவு மிவ்வாறே யொட்டு.'

என இவையிற்றை விரித்துரைத்துக் கண்டுகொள்க.

இனி அந்தச் சந்தங்கள் நின்ற பெயரும் முறையும் ஆமாறு சொல்லுதும்.

'ஒத்தமைந்த சந்தப் பொதுப்பெய ராய்ந்துரைப்பி
னுத்த மதியுத்த மத்திம மொத்தநிலை
நன்னிலை காயத் திரியுட னுண்டி
யனுட்டுப் பொடுபெருதி பந்தி வனப்புச்
சயதி யதிசயதி சக்குவரி மற்றையதி
சக்குவரி யாடியதி யாடி திருதி
அதிதிருதி யோடு கிருதி பிரகிருதி
யாகிருதி விக்கிருதி சங்கிருதி மேலும்

அபிகிருதி யுற்கிருதி யாமெழுத்தா லென்று
ிருபதின்மே லாறு மிவை.'

*உத்தம், அதியுத்தம், மத்திமம், நிலை, நன்னிலை, காயத்திரி, உண்டி, அனுட்டுப்பு, பகுதி, பந்தி, வனப்பு, சயதி, அதிசயதி, சக்குவரி, அதிசக்குவரி, ஆடி, அதியாடி, திருதி, அதிதிருதி, கிருதி, பிரகிருதி, ஆகிருதி, விக்கிருதி, சங்கிருதி, அபிகிருதி, உற்கிருதி எனச் சந்தம் எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம்.

வரலாறு:—

'கார், நேர், வார், யார்'

உத்தம்.

'போதி, யாதி, [பாத,] மோது'

அதியுத்தம்.

'வேரம் போய்
மாரன் சீர்
சேருங் கால்
நேர்வன் யான்'

மத்திமம்.

'போதி நீழற்
சோதி பாதங்
காத லானின்
றோத னன்றே'

நிலை.

'மன்ன னேரியன்
சென்னி மானதன்
கன்னி காவலன்
பொன்னி நாயகன்'

நன்னிலை.

---

* "உத்தமாவது, ஒற்றொழித்து உயிராவது, உயிர்மெய்யாவது, பாதம் ஒன்றற்கு ஓரெழுத்தாய் வருவது. மற்றைய நிரலே ஒவ்வொன்றற்கு ஓரெழுத்துக் கூடி ஈற்றின் நின்ற உற்கிருதி பாதமொன்றற்கு இருபத்தாறெழுத்துப் பெற்று முடியும். இது வடமொழி விதி. தென்மொழியார் எழுத்திலக்கங் கொள்ளாது, மாத்திரையே கொள்வர். ஆயினும், இரண்டும் ஒத்து நடப்பதே யதிக சிறப்புடையது. அது குண்டலகேசி, சிந்தாமணி, பாரதம் முதலிய காப்பியங்களிற் காண்க.'

† தமிழ் நூலாருள் ஒருசாரார் மாத்திரையே நோக்கித் துதி, மதி, யதி, பதி என வருவதனையும் இதன்பாலாக்குப. உரையாசிரியர் சந்தங்களுக்கு எடுத்துக் காட்டிய உதாரணச் செய்யுள்களிற் சில எழுத்தைச் சந்தத் தொகைக்கேற்ப மாற்றியிருக்கின்றனர் போலும்." என்பன பழைய குறிப்பு.

'கருவி வானமே
வருவர் மாதிரம்
பொருவி லாமிதே
பருவ மாவதே,'

காயத்திரி.

'போதுறு புனைகோதாய்
காதல ரயமாறு
வேதுறு மனமீதே
யாதர வகலாதே.'

உண்டி.

'அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாத மல்லாற்
றுணிபொன் றிலாத தேவர்
மணிதங்கு பாத மேவார்.'

'உளர்குழ லிருளாகி
யிளநகை நிலவாக
வளர்குழன் மடமானே
தளர்வது தமியேனே.'

அனுட்டுப்பு.

'இளையார் கனிவா யெனவே
விளையா மதுவே தருநோ
தளர்வார் நிறைசேர் கவரு
ளுளையே லளியே யுரையாய்.'

'தாதகி மலர்சூ டியைநேர்
போதனர் புகழே புயலே
மீதெழு நிலவே வெயிலே
யாதர வகலா ளிவளே.'

பகுதி.

'பயக்குறு பிறவி தவிர்த்த
கயக்குறு மொழியைக் கயத்த
வியப்புறு கமல மலைத்த
மயக்குறு மொழிவ தனத்தை.'

'குறியா ரெனவே புனலின்மீ
துறுதா மரைமே லுரைவார்தா

நெறியார் சடையாய் நினைபாத
மறிவா ரினியா ரறிவாரே.'

பங்தி.

'பற்றொன் றேவில ராகி யொழுகுத
லற்றன் றேலறி விற்றெளிங் தாற்றுத
லொற்றொன் றுனு மிலர்தார் பிரிவரே
மற்றொன் றென்னை மயக்குவ தேகொலோ.'

வணப்பு.

'உருண்ட தேர்மேற் செலவுங்த னுள்ளமா
மருண்ட தேர்மிசை மாதர்கண் மீட்சியுங்
கருண்ட வாளுடைக் காள னொருவனே
யிருண்ட தேர்மிசை யெவ்வா றியங்கினன்.'

சயதி.

'பரிசில வெம்மொடு போது மம்பு மென்றுங்
கரிசில வேங்தி யகன்று நீண்ட கண்மேற்
குரிசிலை யன்று கனற்றி வெங்த காமன்
கருசிலை போற்புரு வத்தாள் காட்சி மிக்காள்.'

அதிசயதி.

'சங்த நீழ லுலாவித் தண்ணென் றமருங் தெண்ணீர்
சிங்து துவலை வீசித் தெண்ணிலாவுலாவு
மங்த வலைய மேன வல்லி தகர வாசங்
தங்த பொழுது வாழ்வார் தமைவைத் தேகு நண்பர்.'

சக்குவரி.

'அருண கிரண மேபோ லங்க ராகங் குலவுங்
தருண கலவி மாரன் றயங்கு சிங்தை யென்றோய்
தெருண முழைய தென்று லதுவோ சேலாய் கண்ணூர்
கருணை சிறிது பெய்யுங் காலை யுண்டே வினிதாம்.'

அதிசக்குவரி.

'தேனுட னடுஞ் சிலைபொழி மலினச் செயலாட
ஆனுட னடுங் கவரித ழாயத் தயில்விழியென்
மானுட னடும் மயிலன சாயன் மதர்விழியார்
வானுட னடும் மதிதரு துனிநோய் மதியாரோ.'

ஆடி.

'தேனூர் பொழுதிற் றிருங்தா தேகீ சிங்தைகொண் டேவே றாரி
போனார் தேரூர் சுவடு புதையல் வாழிபொங் கோத மேலை

வானூர் மாவுங் கிரியு முதவா வாரல் கொ[illegible]மவக
கானூர் சோலைத் தருவிலு லாவுங் காவல் யாவ ருளரே.'

அதியாடி.

'கூரெயிற்றி னேர்தோற்ற முகைவென்று சீர்கொண்டு கொல்லைமுல்லை
நேரிடைக்கு முன்றோற்ற பகைகொண்டு வந்துத னீல மேவுங்
காரளக்கு நாளென்று கடனீந்து வார்சொன்ன கால மன்றாற்
பேரமர்க்[illegible]மன மேகுகின்ற வாறென்னை பேதை மாதர்.'

திருதி.

'பாரா வார மருங்கு லாவு மொலியி னோடு பரவைகொண்டே
சாரா வார மலைந்து தங்குந் தொன்னுமர் தெள்ளு புகார்மன்னவர்
வீரா வார மணிந்த வாழி வலவர் மென்பூங் கரும்பினறுங்
காரா வார மருள ராய கவின்பூ மலரோண் சூடாமணி.'

அதிதிருதி.

'ஒருவேனின் றுயிரன்ன தோகையுரை யுள்ளங்கிழித் தூடுபோகுஞ்
செருவேகின் றசோகதரு வின்செழுந் தாதுதிரப் போதுகொண்டு
பொருவேகின் றன்கொடிய வேனிலான் மதுவுணவுங் கொண்டானன்றோ
வருவேனென் றார்பிரிந்த வுஞ்சருரை யிற்கொடிது வானிலாவும்.'

கிருதி.

'கந்தாரம் பாடியாடுங் கரன்மதுக ரமுங்கன்னிகா ரமுஞ்செருந்துங்
கொந்தாருங் குரவமுங் கான்மலிதருங் கோகிலமுந் தாதுகோதுஞ்
சந்தாரங் கோவையார முந்தருணன் தடகடஞ்சா ரனங்கெள்ளிப்பார்
வந்தார்தந் தேர்மிசையால் வரவுதனை யறிகுதிவண் டோகையன்னாய்.'

*பிரகிருதி.

'தளையவி ருட்புது நறைஞிமி றும்பொழில் தடமலி துறைமாடே
வளைமொழி நித்தில மளகில வைத்தரு மயிலையி லெழுகாரே

* 'கன்னி யிவள்பிறர் பன்னி யெனதிரு
கண்ணின் மணிநிகர் சன்மனு
மன்னு குலமுதல் பின்னை யொருவரு
மண்ணி லுறுதுணை யின்மையா
லின்ன[illegible]பரிதுள தென்ன புரிகுவ
தென்ன வறிகில னன்னைகேண்
முன்னை மனைநிகழ் தன்ம முனிவனை
முன்னின் மனமிடர் துன்னுமால்.'
(வி-பா-ஆ-ப-வேத்திரகீயச் சருக்கம், 44.)

'இப்பாரதச் செய்யுள் பிரகிருதிச் சந்தத்திற்கு இனிய ஓசையோடு கூடிய உதாரணமாதல் காண்க' என்பது பழைய குறிப்பு.

யளவிய முற்கலி மழைபொழி யச்செயு மடறிகழ் புயவீரா
விளையம டக்கொடி யிடரொழி யப்புனை மலரித ளருளாயே.''

அதிகிருதி.

"காவி யோவிட மோமது கரமோ
கண்ணிணை யவனிமே லரியாய் கழறே."

*விக்கிருதி.

"உடைய தானவ ருடைய வென்றவ
ருடைய தாணம சரண மாகுமே."

சங்கிருதி.

"அங்குலிய மொன்றுபுன லாழ்தரு கிணற்றில்விழ
வந்தமுனி தேடுமினொனுப்
புங்கமொடு புங்கமுற வெய்தவ னெடுத்தமை
புகன்றருகு நின்றவரைநீ
ரிங்கித னிலைத்தொகைகள் யாவுமுரு வப்பகழி
யேவுமினொ னுமுன்விசயன்
றுங்கவில் வளைத்தொரு கணத்தினில் வடத்திலை
துளைத்தனனி லக்கிளுடையால்."

†அபிகிருதி.

---

* விக்கிருதி சங்கிருதிகளுக்கு உதாரணமாக ஓரோரடியே காட்டினர். பின் வருவனவற்றால் முழுச்செய்யுள் வருமாறுணர்க:
'வன்போர்புரி வெங்கணை யங்கர்பிரான் மறனுலுயர் போரற னூர்குமரன்
றன்போலவி ளங்கின னுதலினென் றனுவுங்குனி யாதுச ரங்கள்செலா
வன்போடிய துள்ளமெ னக்கினிமே லவனேடமர் செய்தலு மிங்கரிதால்
வென்போகுவ னென்றனு மேயிறைவன் விசையோடிர தத்தினை
[மீளவிடா'
(வி-பா-க-ப-17-ஆம் போர், 204.)

"அண்டர் குலபதி யாம்விடை வாகன
னம்பொ னடிமலர் சூடிடு சேகர
னெண்டி சையுமனு நீதிசெய் கோலின
னெங்கு மொருகுடை யாலிடு நீழலன்
மண்டு கிரணசி காமணி மௌலியன்
வண்டு மதுநுகர் தாதகி மாலையன்
மிண்டு முதுபுலி யேறுப தாகையன்
வென்றி வளவனை யார்நிக ராவரே.''
(வி-பா-க-ப-17-ஆம் போர், 68.)

† "ஆசிரியர் உதாரணமாகக் காட்டிய 'தொழுதவ முனிவரு மருளுறு மலருறை' என்னுஞ் செய்யுள் காலாந்தரத்தில் பாடாந்தரம் தாறுமாறாகி

'பரிதி'

தொழுவடிய ரிதயமல ரொருபொழுதும் பிரிவரிய துணைவனெனலா
மெழுமிரவி கிரணசிக ரிலகுதுகில் புனைசெய்தரு நிறைவரிடமாங்
குழுவுமறை யவருமுனி வரருமரி பிரமருர கவனுமெவருந்
தொழுதகைய விமையவரு மறமருவு துதிசெய்தொழு துடிதபுரமே.'

'மணியிலகு செறிதளிரொ டலரொளிய நிழலரசி மருவியறவோர்
பிணிவிரவு துயரமொடு பிறவிகெட வுரையருளும் பெரியவருளோன்
றணியிலகு சுடருடைய வரசரொடு பிரமர்தொழு தலைமையவர்மா
வணியிலகு கமலமல ரனையவெழி லறிவனிணை யடிகடொழுவாம்.'

உற்கிருதி.

இனி விருத்த பேதஞ் சொல்லுதும். முன்பு சொல்லிப் போந்த பத்தியம், கத்தியம் என்பன ஆறு விகற்பம் எனக் கொ—

"பத்திய நான்கடிய சாதி விருத்தமது
மற்றவற்று மாத்திரை யானறிப—ஒத்தமைந்த
சாதி விருத்தந் தனைமாத் திரையுடனே
நீதி யெழுத்தாற் றெளி."

"ஆதிநூற் காரியைவை தாளியை யென்றிரண்டாஞ்
சாதிசமம் பாதிச் சமம்வியம—மோதுஞ்
செருத்தகைய பேரமர்க்கட் சிற்றிடையாய் சொன்ன
விருத்தமொரு மூன்று விளம்பு."

என்றதனால் ஆரியை, வைதாளியை என்று இரண்டாம் சாதி. அவற்றுட் சமம், *பாதிச்சமம், †வியமம் என மூன்றும் விருத்தம் என்க.

"ஓரடிபோ லொன்கு மெழுத்தல கொத்தனவு
மீரடி தம்முளொத் தெய்தனவு—மோரடியு

ஓரடிக்கோரடி மிக விகாரப்பட்டுக் கிடந்தமையானும், பல தேசத்துப் பிரதிகளைக்கொண்டு பரிசோதித்தும் யதார்த்த ரூபம் நிச்சயப்படாமை யானும் மூலகிரந்தத்தைப் பார்ப்பதற்குப் புராணகவி யாவரென்பது வெளிப்படாமையானும் அதனை ஒழித்துப் பாரத விருத்தத்தில் ஒன்றை அதற்குப் பதிலாகச் சேர்த்தனன். (வி-பா-வாரணாவதச் சருக்கம், 51.)

* வடநூலார் அர்த்தசமம் என்று சொல்லுவர்.

† விஷமம் என்னும் வடமொழிப்பதம் "வியமம் எனத் திரிந்தது," என்பன பழைய குறிப்பு.

மொவ்வா தனவுஞ் சமமும் வியமமுமென்
றெய்தா விருத்தத் தியல்பு.''

இதனால் ஓரடிபோல நான்கடியும் எழுத்தும் அலகுமொத்த விருத்தம் சமம் என்றும், இவ்விரண்டடியாய்த் தம்முள் எழுத்தும் அலகும் ஒத்து வருவன பாதிச்சமம் என்றும், ஓரடியுந் தம்மில் எழுத்தும் அலகும் ஒவ்வாது வருவன வியமம் என்றுஞ் சொல்லப்படும்.

'பாத மிரண்டிரண் டொத்துக் குறைந்தனகொள்
பாதிச் சமமாப் பகுத்து.'

இரண்டு இரண்டு அடியாகக் குறைந்து வருவனவும், இவ்வாறே மிக்கு வருவனவும், இவ்வாறே அடியொத்தும் ஒவ்வாதும் வருவனவும் பாதிச் சமவிருத்தத்தின்பாற் சார்த்தி வழங்குப. அவை வருமாறு:

''உழைபிரி வறியா தானந்த நாதநிற்
றழையார் தங்கு காவலர்
விழைநகு வேனு மணங்கு மேனியார்
குழைவொடு கலைகெட்டுக் குன்ற வாணரே.''

இது முதலடியும் நான்காம் அடியுந் தம்முள் அளவொத்தும், ஏனைய குறைந்தும் வந்தது.

'கனங்கழுவு கார்வா னுழுதகையும்
வனங்குலவு கோட்டு மலரும்
புனங்குலவு பூந்தாது
மனங்கசர மானுதல்.'

இது நான்கடியும் எழுத்திடையிட்டு மாத்திரை குறைந்து வந்தது.

''காவியோ கயலோ கழுநீர்களோ
ஆவியோ துணைவா வரவிந்தமோ
வாவியினன் மலரருந் தார்நறு
நாவிவார்குழ னீள நயனமே.''

இது நான்கடியும் எழுத்தொத்து, முன்னிரண்டடியும் மாத்திரை மிக்கு, ஏனையடி மாத்திரை குறைந்து வந்தது.

''கொண்ட லெங்கு நிரந்தன கோபுரந்
தண்டு ளக்கரும் பீன்ற தளவமே
வண்டு பாட நடித்தன மஞ்ஞையே
பண்டு போனவர் சொன்ன பருவமே.''

இது நான்கடியுந் தம்முள் எழுத்தொத்து, முன்னிரண்டடியுந் தம்முள் எழுத்தும் ஒத்து மாத்திரையும் ஒத்து, முதலடியும் மூன்றாமடியும் தம்முள் அலகுநிலை ஒத்து, வேறுபட்டு வந்தது. இவ்வாறு வருவனவற்றுள் வேறுபாடறிந்து பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இனி விருத்தமாவன,

"எழுத்தினொத்த லியையாதுந் தம்மி
லெழுத்து மலகு மியையா—வழுத்து
மனைத்து மளவா மடிநான்காய்ச் சாற்றி
லனைத்தும் வியமமென்றா ராய்ந்து."

என்பதனால் நான்கடியும் எழுத்தொத்து அலகுநிலை ஒவ்வாது வருவனவும், எழுத்தும் அலகும் தம்முளியையாது வருவனவும் அளவடி விருத்தம் எனப்படும். அளவடி எனினும் வியமம் எனினும் ஒக்கும். அவற்றுட்சில வருமாறு:—

"கொள்ளுங் கூற்றி னிணைத்துணர் வுசிறி
துள்ள நிற்க வொழிந்திடு மாறுபோல்
வள்ளல் தாள வனவ லையுளக்
கள்வ ரைவரு மென்றே கரந்திட்டார்."

இது நான்கடியுந் தம்மில் எழுத்து ஒத்து, அலகு ஒவ்வாது வந்தது.

"சொற்றவா வளவி னுளவா வெனுந்தடத்
திற்றவா யில்லதெஞ் ஞான்று முள்ளது
சொற்றவாண் மனத்தி னுறவிப் பின்னரே
மற்றவா னேக்கினன் மடங்கல் மொய்ம்பினன்."

இது நான்கடியும் தம்மில் எழுத்தும் அலகும் ஒவ்வாது வந்தது. பிறவுமன்ன.

இனி மேலே கூறிய ஆரியை, வைதாளியை என்பனவற்றின் விகற்பம் வருமாறு சொல்லுதும்:

அவற்றுள் ஆரியை வருமாறு:—

"குறில்போல்ஐ இஉக் குறுக்க நெடில்போ
லுறுநீட் டிலகுகுரு வென்றும்—பொறையளந்தா
னீச னெனவு மிவையிரண்டு மிம்முறையாற்
பேசப் பெறுவ பெயர்."

மூவுயிர்க் குறுக்கங்களைக் குறில் போலவும், புளுதத்தை நெடில் போலவுங் கொள்ளப்படும். இவற்றுள் இலகுவை மால் என்றும் குருவை ஈசன் என்றும் பெயரிட்டு வழங்குப.

*"குருவிலகு மும்மையு முற்றுய வாதி
மருவுடை யீற்று வருவ—நிரையே
நிலனிய மானன் மதிநீ ரிரவி
கனல்கால் வெளியென்று காட்டு."

அசை மும்மூன்றாகக் குரு இலகு உறழ்ந்து வருங்காற் கணம் என்றும்; முற்றக் குரு வரின், நிலமென்றும்; இலகு முற்ற வரின், †இயமானன் என்றுந் தானம் பெறும். முதலிற் குரு வரின் மதி யென்றும்; இலகு வரின் நீரென்றும்; இடையிற் குருவரின் இரவி என்றும்; இலகு வரின் கனல் என்றும்; கடையிற் குரு வரின் கால் என்றும்; இலகு வரின் வெளி என்றும் உரைக்கப்படும். இவை முன் வருஞ் செய்யுளும் அக்கண வகையால் அறியப்படும். 'மாத்திரையால் விருத்தவிரி சார்த்தி யுணர்வாகும்' என்பதனால் அறிக. இரண்டெழுத்து முதல் நான்கு இலகு கூடிய கணம் திரண்ட ஏழிறுதியோர் குரு வரின் பாதமாம். பிற்பாகத்தாரும் இடத்து ஓரிலகுவே வரும். ஒற்றித்த இடக்கணத்து இடைக் குரு வரின் வழுவாம்.

வரலாறு:—

"அம்பொற் கயிலைக் கிறைவர்
வலங்காரம் பெறாத நோதகவினால்

---

* தமிழ் யாப்புடையார்,

"ஆதி யிடையிறுதி முற்றுநே ராநிரையென்
றோதுவர்நீர் தீமாக யொண்சுவர்க்கந்—தீதிலோர்
சொற்றார் மதியரிதி காணிலமா நீர்மதியு
முற்று யவுமுன் மொழிக்கு"

எனக் கணலக்கணங் கூறுவர். மேலும் நேரசை ஓரலகும் நிரையசை ஈரலகும் உடைய என்பர். ஆதலால், இருகூற்றினரும் மாத்திரை வகை யாற் பெயர் முறை ஒப்புமையுடையர். ஆயினும், இந்நூலுடையார்க்குத் தனிக்குறில் தவிர்ந்த மற்றைய நேரசையாவும் குருவின் பாற்பட்டு ஈரலகு பெறுதலின் இருவரும் வழக்கின்கண் முரணுவரென்று அறிக.'

† 'இயமானனைத் துறக்கம் என்றும் பெயர் கூறுவர்' என்பன பழைய குறிப்பு.

வெம்பித் திரிவர் மதியான்
மேவினள் பார்வதி யாவிகா வாயால்."

எனவும்,

"இசைமிகு மொழியா ரணையே
அசைவுறு மனமொழி மதுமொழியா ரணையே
நசைவுறநீ பேதுறலே
பசையொடு சேருக வாழிய பேதுறலே."

எனவும்,

"அனுபம பண்டித சோழ
மனுவவனு குலமொழி வளவா வருளே
யெனவரு வரதா மிகவே
யனவரத முமுனது தோகை வேறுறுமால்."

எனவும் இவையனைத்தும் முதலடியு மூன்றாமடியும் பன்னிரண்டு மாத்திரையாய், இரண்டாமடியு நான்காமடியும் நந்நான்கு கணமாய் இறுதி குரு வருவது என மாத்திரையாற் கண்டுகொள்க. இவ்வாறன்றிப் பிறவாறு வருவனவும் ஆய்ந்தறிக.

இனி வைதாளியை வருமாறு:—

"ஆறலகு நீமா லடலேற் றிறைமுதன் மூன்
றீறு மிரண்டு மெனுமடிகள்—வேறுமுத
லீர்மாத் திரையா மிரண்டடை யொத்தநடை
சேர்வதுவை தாளியையாச் செப்பு."

ஒற்றித்த முதலடியும் மூன்றாமடியும் மூன்றாறு மாத்திரையாய்ப் பின்னிடை இலகுவான கணம் ஒன்றும் ஓரிலகுவும் ஒரு குருவும் வருவது; இரட்டித்த அடியான இரண்டாமடியும் நான்காமடியும் முன்னெட்டு மாத்திரையாய்ப் பின்னிடை இலகுவான கணம் ஒன்றும் ஓரிலகுவும் ஒரு குருவும் வருவது; இது வைதாளியைக்கு இலக்கணமாம்.

அவை வருமாறு:—

"கருவே யேறார்வ ளுளிலே
வருவே னென்றே போந்த மன்னவன்
றிருவே ரூய்த்தூர வெய்தினார்
மருவா ரெனினென் னின்னு யிர்கிலா."

எனவும்,

"கொன்றைப் புதுவேரி கொண்டிதோ
மன்றற் றண்ணிள வாடை வந்ததால்

ஒன்றிப் பலகோப முள்ளினன்
வென்றிக் கார்முக வேந்து மாரவேள்.''

எனவும்,

''கானத்தண் கொன்றை மாலைதா
மானத்தின்றென் கொம்பு வாடுமால்
வானத்திங் கட்கு மாறுகொல்
நாணித்தாற் றிலனரி பாகனே.''

எனவும் இவ்வாறன்றிப் பிறவாறு வருவனவுங் கண்டுகொள்க.

இனி,

''குருலகுமுற் றுயுங் குருலகு மாறி
வரினுமது மைகாச மானங்—குருலகுவின்
பின்றுன் வரிற்பிர மாணம் விதானமா
மென்று ரிரண்டா மெனின்.''

நான்கடியும் முற்றக் குருவே வரினும், முற்ற லகுவே வரினும், குருவும் இலகுவுமாய் முறையே மாறி வரினும் மைகாசமானம் என்று பெயராம். இலகுவின் பின் குருவாய் முற்றவரிற் பிரமாண மாம். இரண்டிலகுவும் இரண்டு குருவுமாய் முற்ற வரின் விதான மாம் என்றார் எனக்கொள்க. அவை வருமாறு:—

''காரார் தோகைக் கண்ணார் சாயற்
றேரா ரல்குற் றேனார் தீஞ்சொற்
போரார் வேற்கட் பொன்னே யின்னே
வாரா ராஞர் போனார் தாமே.''

இது முற்றக் குருவே வந்த மைகாசமானம்.

''வேரி சேரு மீது லாவு
மாரி கூரு மீர வாளி
வீர மார னேவி னனு
நேரி சோர மேவு நோவு.''

இது குருவும் இலகுவு[முறையே]வந்த மைகாசமானம்.

''இணங்கு மாத ரேசவே யிரங்கி மோத வேலைமா
னணங்கு லாவு வாளியா னணிந்த சாப மாய்மா
லுணங்கி மேனி வாடுமா லுறந்தை யாளு மானதா
வணங்கி னவி காவனீ யணிந்த வார மாகுலம்.''

இது பிரமாணம்.

"மதுவாய்சேர் மலரானே மயரறுவா முறையானே
முதுவானோர் தொழுதாளாய் முரஞ்வாய் மொழியானே
கதுவார்சேர் மதியானே கழியாநோ வொழியாவா
றிதுவாறு விறையோனே யினியாழே நினையாளே."

இது இரண்டிலகுவும் இரண்டு குருவும் முறையானே வந்த விதானம்.

இவையெல்லாஞ் சந்தக் கூறுபாட்டான் வந்தன. மற்றுஞ் சந்தங்கட்கும் இப்படியே வருவன அறிந்து பெயரிட்டு வழங்குக.

"ஓரெழுத்துக் குன்றினணி சாத்தாம் விராட்டாகு
மீரெழுத்துக் குன்றி னியமான—னேராப்போ
யோரெழுத்து மிக்க புரிக்காஞ் சுராட்டென்ப
வீரெழுத்து மிக்க வெனின்."

இதன் பொருள், மேற்சொன்ன விருத்தங்கள் ஓரெழுத்துக் குன்றில் அணிசாத்து என்றும், ஈரெழுத்துக் குன்றின் விராட்டு என்றும், ஓரெழுத்து மிகிற் புரிக்கு என்றும், இரண்டெழுத்து மிகிற் சுராட்டு என்றும் இப்படிப் பெயரிட்டு வழங்கப்படும். அவை வந்த வழிக் கண்டுகொள்க. முதலடியும் ஈற்றடியும் ஓரெழுத்துக் குறைந்து இடையிரண்டடியும் மிக்கு வந்தன யவமத்திமம் என்றும் இவை இரண்டடியுங் குறைந்து, முதலடியும் ஈற்றடியும் மிக்கு வந்தன பீலிகாமத்திமம் என்றும் பெயரிட்டு வழங்கப்படும். இவையும் வந்தவழிக் கண்டுகொள்க. மேற்போன விருத்தங்கட்கு எழுத்தும் அலகும் இன்ன துணை எனவும், நான்கடிக்கு இன்ன துணை எனவும் அறிதற்கு இலக்கணம்,

"சந்த வெழுத்தலகிற் றள்ளி யரைசெய்து
சந்த வெழுத்தி னரைகூட்ட—முந்துகுருப்
பாதத் தளவாகும் பாதமே மாறிவர
வேதந்தீர் நான்கடிக்கு மெண்."

என்பதனாலறிக. இனித் தண்டகம் ஆமாறு சொல்லுதும். (கூகூ)

140. தண்டகமாமாறு

மருவு நெடில்குறில் வல்லோற்று மேல்லோற் றிடையிலோற்றென்(று)
உருவந் திகழ்ந்தவை யுய்க்குங் குறிகளோப் பார்நிரைநேர்
துருவ மலிபுள்ளி வட்டம் விலகேன்பர் தோன்மைகுன்றாத்
திருவு மழகும் புகழுந் திகழ்தரு தேமொழியே!

(இ - ள்.) தண்டகத்திற்கு இலக்கணஞ் சொல்லுவானெடுத்துக்கொண்டான். அஃது ஆமாறு: நெடிலுக்கு நிரையசையும், குறிலுக்கு நேரசையும், வல்லொற்றுக்குப் புள்ளியும், மெல்லொற்றுக்கு வட்டமும், இடையொற்றுக்கு விலகும் ஐந்து குறியாம் (எ-று.)

இதனுள் நெடிலிரண்டு மாத்திரை உடைமையின், முன்வைத்தார். குறில் ஒரு மாத்திரை உடைமையிற் பின் வைத்தார். வல்லொற்றுத் தனக்குச் சொல்லிய குறியெவ்விடத்துந் தவிராது பெறுதலின், அதற்குப் பின்வைத்தார். மெல்லொற்றுத் தனக்குச் சொல்லிய குறிநெடிற் பின் மிகப் பெறாது ஒழிதலானும், குறிற்பின்பு ஓரோவழிப் பெறுதலானும் அதன்பின் வைத்தார். இடை ஒற்றில் பதின்மூன்றும் ஒற்றும் பதினாறும் ஒற்றும் என்னும் இரண்டு தவிர ஒழிந்தவொற்றுச் சிறுபான்மையாற் பெறுதலானும், மெல்லொற்றோடு மயங்கி வருதலானும், பின்பு அடைய வைத்தார். இவை குறி பெறுகையும் பெறாது ஒழிகையும் உச்சாரணையாற் கண்டு கொள்க. இவ்விடத்து ஐகாரமும் ஔகாரமும் குற்றெழுத்தாம் என்க.

வரலாறு:—

"துற்றுற் றன்றிவெம் போர்செய்த,விற்கைப்
பன்மன்முன் போடவோர்,தத்திற் றுன்றுவன
பாய்பரி,யுய்த்துத் தன்மைகொண் டோடிய
வெற்றுச் செம்பியன் பார்புகழ்,கொற்கைக்
கண்டன்வன் பாரதம்,வெற்புக் கொண்டுதிண்
போர்புரி,கொப்பத் தன்றெதிர்ந் தோர்வெறு
கொற்றத் தொங்கல்சிங் காசன,மொற்றைச்
சங்குவெண் சாய்மரை,குத்துப் பந்தர்முன்
பாவிய,முத்துப் பந்திமுன் றுன்மகி
ழொற்றைப் பெண்டிர்பண் டாரமொ,டொற்றைத்
தன்பெருஞ் சேனையு,மிட்டிட் டன்றுடைந்
தான்வசைப்,பட்டுக் கண்டவங் காரனே."

இது குற்றெழுத்து நெட்டெழுத்துக்களும், வல்லொற்று மெல்லொற்றுக்களும் குறி முறையே பெற்று இடையொற்றுக்கள் குறி பெறாது வந்த துண்டம் பதினாறாய் நான்கடியாய் வந்த தண்டகம். இதனுள் ஐகாரமுங் குற்றெழுத்தாய் வந்தது. இடையொற்றுக் குறி பெறாமை உச்சாரணையே கருவியாக அறிக. (௩௪)

141. இதுவும் அது

இப்படிக் கட்டளைத் துண்டமோன் ருக்கிய தீரிரண்டில்
ஒப்புடை யெட்டிற் பதினாறி னின்முப்பத் தோரிரண்டிற்
செப்பிட வாக்குக தண்டகம் வல்லோற்றல் லாதவோற்றுத்
தப்புட னுச்சா ரணையினல் லான்மிகத் தோன்றரிதே.

(இ-ள்.) முன்பு சொன்ன குறிகளால் ஒரு கட்டளைத் துண்டத்தையிட்டு அத்துண்டம் நாலாற்றுன், எட்டாற்றுன், பதினாற்றுன், முப்பத்திரண்டாற்றுன் முடிக்க அது தண்டகமாம்; அதன்கண் வல்லொற்றல்லாத ஒற்று உச்சாரணை இல்லாது குறி பெறுகை அரிது (எ-று.)

முன் சொன்ன தண்டகம் பதினாறு துண்டத்தால் வந்தது; பிறவுமன்ன. இக்கட்டளை பிழைக்கில் அது தண்டகப்போலியாம். இனி வண்ணமிருபதாவது சொல்லுதும். (௩௫)

142. வண்ணமாமாறு

மேல்லிசை யேந்த லொழுகுருட் டெண்ணொரு வேமுடுகு
வல்லியல் பாவகப் பாட்டு நலிவகைப் போடியையு
சொல்லிய சித்திரந் தாவு புறப்பாட் டளபேடையும்
வல்லிசை தூங்கல் நெடுஞ்சீர் குறுஞ்சீ ரிவைவண்ணமே.

(இ-ள்.) மெல்லிசை வண்ணமுதல் குறுஞ்சீர் வண்ணமீறாகக் கூறியன இருபதும் வண்ணமாம் (எ-று.)

மெல்லிசை வண்ணமாவது, மெல்லெழுத்து மிகுவது. ஏந்தல் வண்ணமாவது, சொன்ன சொல்லே சிறந்து வருவது. ஒழுகு வண்ணமாவது, ஓசையினொழுகுவது. உருட்டு வண்ணமாவது, அராகந்தொடுப்பது. எண்ணு வண்ணமாவது, எண் பெயர் மிக்கு வருவது. ஒரூஉ வண்ணமாவது, அடியடிதோறும் ஒன்றாய்த் தொடையுடைத்தாவது. முடுகு வண்ணமாவது, அடியிற்றது அறியலாகாதாய், நீண்டு அடித்தாய் அராகத்தோடு கூடி வருவது. பாவு வண்ணமாவது, நூற்பாப் பயில வருவது. அகப்பாட்டு வண்ணமாவது, முடியாதது போல முடிவது. நலிவு வண்ணமாவது, ஆய்தமுடைத்தாய் வருவது. அகைப்பு வண்ணமாவது, அறுத்தறுத்து ஒழுகுவது. இயைபு வண்ணமாவது, இடையெழுத்து மிகுவது. சித்திர வண்ணமாவது, குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் விரவி வருவது. தாவு வண்ணமாவது, இடையிட்டு

வந்த எதுகைத்தாவது. புறப்பாட்டு வண்ணமாவது, முடிந்தது போன்று முடியாதது. அளபெடை வண்ணமாவது, அளபெடையில் வருவது. வல்லிசை வண்ணமாவது, வல்லெழுத்து மிகுவது, தூங்கல் வண்ணமாவது, வஞ்சி பயில வருவது. நெடுஞ்சீர் வண்ணமாவது, நெட்டெழுத்துப் பயில வருவது. குறுஞ்சீர் வண்ணமாவது, குற்றெழுத்துப் பயில வருவது எனக்கொள்க. வண்ணம் *நூறென்பாருமுளர். அவை வந்தவழிக் கண்டுகொள்க (௩௬)

யாப்பதிகாரம் முற்றும்.

யாப்புப்படலம் முற்றும்

---

* 'வண்ணம் தொகையான் ஐந்தும், வகையான் இருபதும், விரியானூறும் என்ப. தொல்காப்பியர் முதலானோர் இருபதெனை வகுத்தனர். கையனூர், அவிநயனூர் முதலானோர் நூறெனை விரித்தனர். நூறுமாறு:

"தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை சொற்றவற்றைப்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலி பாற்படுத்தி
யோங்கேர் குறிநெடில் வல்லின மெல்லின மோடிடையைத்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ண நூறுந் தலைப்படுமே;"

என்பது பழைய குறிப்பு.

ஐந்தாவது

அலங்காரம்[1]

அலங்காரப் படலம்[2]

145. இவ்வதிகாரத்தில் இன்ன இலக்கணங் கூறப்படும் என்பது

உரையுட லாக வுயிர்பொரு ளாக வுரைத்தவண்ணம்
நிரைநிற மாநடை யேசெல வாநின்ற செய்யுட்களாந்
தரைமலி மானிடர் தம்மலங் காரங்கள் தண்டிசொன்ன
கரைமலி நூலின் படியே யுரைப்பன் கனங்குழையே!

(இ-ள்.) சொல்லே உடலாகவும், பொருளே உயிராகவும், வண்ணங்களே நிறமாகவும், நடையே செலவாகவும் நின்ற செய்யுட்களென்னும் மானிடவராபரணங்களைப் பெயர் வேறுபாடு உணர்த்துதற்குத் தண்டியார் சொன்னபடியே இலக்கணஞ் சொல்லுவன் (எ-று.)

இவ்விடத்து மானிட வடிவம் முன்பேயுண்டாம். ஆபரணங்கள் பின்னை வேறொருவனாற் செய்து பூட்டப்படுவன. அதுபோலச் செய்யுட்கள் முன்பே உளவாய், அலங்காரம் பின்பொருவனாற் செய்திவற்றிற் பூட்டப்படுவனவல்ல. செய்யுள் உள்ளபொழுதே இவையும் உளவாதலில், ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கப்படாநின்றதொரு மானிட வடிவிற்கேற்ப உருவகஞ் செய்தாரெனக் கொள்க. அலங்காரம் எனவே ஆடையாபரணாதி என எல்லாம் அடங்கும். அது என்போல எனின், இவனை அலங்கரிக்க என்ற பொழுதே எல்லாம் அடங்கினாற்போலவென்க. ஒருத்தி எல்லா வாபரணங்களும் பூண்டு நின்றாளேயாயினும், அவற்றின் மிக்கிருந்தது ஒன்றால் ஆரம் பூண்டு நின்றாள் என்றதுபோல, ஒரு செய்யுட்குப் பல அலங்காரமாயினும் மிக்கதொன்றால் வழங்குக. இரண்டு ஒத்திருந்ததாகில், அதனை அவ்விரண்டின் பெயரானும் வழங்கினுமிழுக்காது. இரண்டுக்கு மேற்பட்டிருக்

---

1. 'அலங்காரத்தை உணர்த்தும் அதிகாரம்' என்னும் பொருளினதாகிய அலங்கார அதிகாரம் என்னுந் தொடர்மொழி ஈண்டு வருமொழி நீங்கப் பெற்று அலங்காரம் என்று நின்றது. இது சொல்லின்பம் பற்றி இங்ஙனம் அமைக்கப்பெற்றது போலும்!

2. இஃது அலங்காரத்தை உணர்த்தும் படலம் என்றும்.

இல் விரவியலாம் என்க. சொல்லே உடலாக என்பதனாற் சொல்லாவன செய்யுட்கு உறுப்பாகிய சீர் பன்னிரண்டையும் எனக் கொள்க. ஒரு சொல்லே ஒரு சீராய் வருவது சிறப்புடைத்து. எழுத்தும், அசையும், சீரும், தளையும், அடியும், தொடையும், அல்லவோ யாப்பினுக்கு உறுப்பாவன எனில், அது பொருந்தாது. எழுத்துக்களை அசைக்குறுப்பு என்றமையால், அவையெல்லாம் ஒன்றுக்கொன்று உறுப்பாய் யாப்புக்கு உறுப்பாவனவாம். அன்றியுந் தொடைகளையும் ஆதாரமாகச் சொன்னமையால், அது பொருந்தாது என்க. (க)

144. இத்தகைய சொல்லே செய்யுட்குக் குற்றமில்லாத உறுப்பாம் என்பது

சார்ந்த வழக்கோடு தப்பா வடவெழுத் தைத்தவிர்ந்து
தேர்ந்துணர் வார்க்கு மினிமையைத் தந்துசெய் யுட்களினும்
நேர்ந்து சொலப்பட் டுயர்ந்தவ ரால்நிர லேபொருளை
ஓர்ந்து கொளப்படுஞ் சொற்குற்ற மற்ற வுறுப்பென்பரே.

(இ-ள்.) வழக்கதிகாரத்தோடும் பொருந்தித் தமிழினோடுங் கூடி, வடவெழுத்தைத் தவிர்ந்து, பெரிதுமின்பந் தந்து, பெரியோரால் செய்யப்பட்ட செய்யுட்களினும் வந்து திரிதற் பொருட்கோளின்றியே நிரலே பொருள் விளங்க இருக்குஞ் சொல்லுக்கள் குற்றமற்ற உறுப்பாவன (எ-று.)

அப்படியே குற்றமற்ற உறுப்புக்களால் நிரம்பிய உடலே குற்றமற்ற உடலாவதாம். மணிப்பிரவாளத்தினுக்கும் விரவியல் செய்யுட்களுக்கும் வடவெழுத்து வருகவென்று சிறப்பிலக்கணம் உண்மையால், அவற்றில் வடவெழுத்து வருவது குற்றம் அன்றென்க. (உ)

145. இப்படிப்பட்ட சொற்கள் செய்யுட்குப் பழிக்கப்பட்ட உறுப்பாம் என்பது

தெற்றி வழக்கொடு தேர்ந்துணர் வார்க்கின்பஞ் செய்யலின்றிப்
பற்றி வடநூ லெழுத்துக்க ளோடு பயின்றுரையின்
மற்றிவை யில்லென்று வாங்கவும் பட்டுப் பொருண்மருண்டிப்
பெற்றி யுடைச்சொற் பழித்த வுறுப்பென்று பேசுவரே.

(இ-ள்.) இப்படிப்பட்ட சொற்கள் பழிக்கப்பட்ட உறுப்பாவன (எ-று.)

எனவே அவ்வுறுப்புக்களால் நிரம்பின உடல் குற்றப்பட்ட தாயிற்று என்பது. ஆயின், மணிப்பிரவாளத்துக்கும் விரவியனுக்கும் வடவெழுத்துள எனில் அவையிற்றுக்கன்று இவ்விலக்கணம்; கீழ்க்கணக்கு முதலாகிய செய்யுட்களுக்கே என்றறிக. அவையிற்றுக்கு வேறே இலக்கணம் உண்டென்பது. அன்றியும், அருணனும் வெள்ளியும் முதலான பெரியோர்க்கும் உறுப்புக் குற்றம் உளவென்பது. 'உறுப்புக் குற்றங் காரணமாக யாப்புக்களைப் பழிக்கப் படாவோ?' எனின், யாப்புக்களின் வேறு சிறப்புடைய பயனுளவாகில் அப்பயனுேக்கிக் கொண்டாடப்படும். ஆயினும், குற்றங் குற்றமே என்பது. அவைகள் அன்றுள்ளாரொருகுரிசிலைப் புகழ்ந்து செய்யுங் கவியுள் மறந்தேயும் வரப்பெறு எனக் கொள்க. ஆகாமைக்குக் காரணம் யாதெனின், தச்சநூலில் இப்படிப்பட்ட மனைதனை எடுக்கிற் குடிபுகல் இன்ன நன்மை தரும் இன்ன தீமை தரும் என்று சொல்லும் என்பது. மற்றும் இப்படிப்பட்ட யானை, குதிரை, ஆயுதம் உடையானுக்குப் பொல்லாங்கைத் தரும், நன்மையைத் தரும் என்று நூலுண்மையான் என்பது. ஆகிற் பகைவராய் உள்ளாரைச் சாவவுங் கெடவும் பாடல் ஆகாதோவெனின், அற்றன்று. பாடின கவி பாட்டுண்டான் கொள்ளின் அல்லது பயன் கொடாது என்பது. என் போலவோ எனின், குதிரை இலக்கணமறிவான் குதிரை கொள்ளுமிடத்து இக்குதிரை கொள்ளில் எனக்குப் பொல்லாதென்று தவிரும். மற்றும் இவ்வியானை கொள்ளிற் பொல்லாது; இவ்வீட்டில் இருக்கிற் பொல்லாது என்னும் இலக்கணம் அறியான் பயன் கொள்ளான். பாட்டுண்பானும் இலக்கணந் தான் அறிதலின்றேற் பிறரையிட்டாராய்தல் செய்து கைக்கொள்ளும். அறியாதும் ஆராயாதுங் கொள்ளின், பயன் கொடாதென்பது. அற்றன்று; ஆராயாது கைக்கொண்டாருஞ் சாவவுங் கெடவும் பழையோர் பாடினரெனின், அது பாட்டின் பயனால் வந்ததன்று. அவர்கள் சொற்பழுதாகாமையில் எனக் கொள்க. (௩)

146. இப்படிப்பட்ட பொருள் சிறப்புயிராம் என்பது

ஆக்குதல் கேட்டவர்க் கின்பத் தினையன்றி யவ்வவரே
போக்குதல் செய்த கருத்திற் பொருளாய்ப் புராதனரால்
நீக்குதல் செய்தகுற் றத்தைக் கடத்தல் நெறிமுறையே
தாக்குதல் செய்த பொருள்காண் சிறப்புயிர் தாழ்குழலே!

(இ-ள்.) இப்படிப்பட்ட பொருள் சிறப்புயிராவது (எ-று.)

உயிருக்குச் சிறப்பாவது, வலியுடைமை. வலியில்லானை ஆவி இல்லாதான் என்பரெனக் கொள்க. 'சொற்குற்றத்தாற் பாட்டுண்ட தலைமகன் உடலுக்கு ஊனம்; பொருட்குற்றத்தால் உயிர்க்கு ஊனம்' என்பதனுற் பொருட்குற்றந் தவிர்தல் சிறப்புடைத்தென்பது. குண்டலகேசியும் உதயணன் கதையும் முதலாக உடையவற்றில் தெரியாத சொல்லும் பொருளும் வந்தன எனின், அகலக்கவி செய்வானுக்கு அப்படியல்லதாகாதென்பது. அன்றியும், அவை செய்த காலத்து அச்சொற்களும் பொருள்களும் விளங்கி இருக்கும் என்றலும் அமையுமெனக் கொள்க. (௪)

147. இப்படிப்பட்ட பொருள் சிறப்பில்லாத உயிராம் என்பது

தெரிவா னரிது பொருளெனப் போதல் சிதைவுசொல்லப்
புரிவான் பொருளுக்கு மேறுதன் மற்றும் பொருளுண்டென்று
பரிவா னுடன்சொல்ல வேண்டுத லென்றிந்தப் பாட்டில்வைத்த
விரிவாம் பொருளென்னு மாவியின் குற்றம் விளங்கிழையே!

(இ-ள்.) பொருள் தெரியாது எனப்படுதல், குற்றஞ்சொல்லக் கருதினன் சொன்ன பொருளுக்கும் ஏறியிருத்தல், ஒருவர் இப்பாட்டின் பொருண்மேல் எதிர்த்தால் அஃது கைக்கொளப்படாதொழிதல் என இவை முதன் மற்றும் இப்படிப்பட்ட எல்லாம் உயிர்க் குற்றமாம் (எ-று.)

இனிச் சொல்லே உடலாகப் பொருளே உயிராக நின்ற செய்யுளின் திறமென்று சொல்லப்பட்ட வண்ணம், முன்னை யாப்புக்களிலே சொல்லப்பட்டதெனக் கொள்க. இனி, நடையாவது, தளர்நடையும் இன்னிய நடையும் எனவிரண்டு. தளர்நடையாவது, தண்டக நடை; இன்னிய நடையாவது, பிற செய்யுளின் நடை எனக் கொள்க. (ரு)

148. விதர்ப்பர், கௌடர் என்பார் கூறும் ஆவிகள்

ஈண்டுஞ் சிலேட்ட முதாரதை காந்தி புலன்சமதை
தூண்டுஞ் சமாதி பொருட்டெளி வோகஞ் சுகுமாரதை
ஈண்டுமின் பத்தொடு பத்தாவி யென்னும் விதர்ப்பன்;கௌடன்
வேண்டு மிவற்றை விபரீத மாக விளங்கிழையே!

(இ-ள்.) சிலேட்டமும், உதாரதையும், காந்தியும், புலனும், சமதையும், சமாதியும், பொருட்டெளிவும், ஓசமும், சுகுமாரதையும், இன்பமும் என ஆவி பத்தென்று விதர்ப்பக் கவிகள் வேண்டு

வர்; இவைபிற்றையே மாறுக வேண்டுவர் கவுடரென்னும் புலவர். (எ-று.) (கா)

149. பிராணனாகிய பொருளே அலங்காரம் என்பது

ஒப்பார் பொருளே யுயிரா னமையி னுரைத்தவற்றைத்
துப்பா ரலங்கார மாகத் தொகுக்கச்சொல் லும்பொருளுஞ்
செப்பார் தரமுற்றி லேயலங் காரந் திகழ்வதன்றேல்
தப்பார் தருமென்று கண்டுரைத் தார்பண்டு தண்டிகளே.

(இ-ள்.) பொருளையே பிராணனாகக் கொண்டார் ஆகலின், மேற்சொல்லப்பட்ட பிராணன்களையே அலங்காரம் என்பது இந் நூலுடையார்க்குத் துணிவு. இது, 'தண்டியார் சொன்னபடியே சொல்லுவன்,' என்று எடுத்துக்கொண்ட மேற்கோளொடு மாறு கொள்ளும் எனில், அலங்காரங்களை அல்லாது பிராணன்களை அவர் சொன்னபடி சொல்லுவன் என்னுமையான், மாறு கொள்ளாது என மறுக்க. இனி இளகி இருந்த சொல்லும் இளகி இருந்த பொருளும் இன்றி முற்றிய பொழுதே அலங்காரங்கள் விளங்குவது என்பது தண்டியார்க்கும் உடன்பாடாம். (எ-று.)

'என் போல?' எனின், உயிர்க்கண்ணும் உடற்கண்ணும் குற்றம் உடையாள் ஒருத்தி ஆபரணம் பூண்டால் விளங்காதவாறு போல என்பது. அது மூக்கும் கண்ணும் முதலிய உறுப்புக் குறைந்தாளும், சாகைக்கண்ணுமையமும் முதலாகிய உயிர் நோவு களை உடையாளும் ஆபரணங்களால் விளங்காதவாறு போல எனக் கொள்க.

வரலாறு:—

"தம்மோக மில்லெனினுந் தம்மைமோ கித்தவர்கள்
தம்மோகந் தீர்ப்பதுவுந் தன்மைக்கண்."

என முற்றாத சொல்லானும் இளகி இருந்த பொருளானும் வந்தமையாற் குற்றமாயிற்று எனக் கொள்க. (எ)

150. சிலேட்டம் முதலிய உயிர் ஆமாறு

செறிவார் சிலேட்டம்; தொகைமிகை யாம்ஓகம்; சீர்ச்சமதை
அறிவா ரடியோப்ப தாகும்; சமாதி யவனிக்கோப்பப்
பிறிவார் குணமொன்ற தோன்றிற் கிடப்பன; மென்மையொன்
நெறிவார் குழலி! சுகுமா ரதையென்று நேர்ந்துரையே. [றின்,

(இ-ள்.) சிலேட்டம் என்னும் உயிர், சொற்செறிபுடைத்தாம்; ஓகம் என்னுமுயிர், முழுதும் ஒரு மதமாகத் தொகுத்த தொகை

யினை உடையதென்பது; சமதை என்னும் உயிர், ஒத்திருந்த பதங்களை உடையது; சமாதி என்னும் உயிர், ஒன்றின் பக்கலுள்ளது ஒரு பண்பையே உலகுக்கு ஒத்திருக்கும் வண்ணம் அப்பண்பு குன்றியிருப்பதொன்றின்கண் உண்டாகப் புணர்ப்பது; சுகுமாரதையாவது, வல்லொற்று நீங்கியுள்ள சொற்களால் ஆக்கப்பட்டு மெல்லிதாயிருப்பது (எ-று.) (௪)

15௮. இதுவும் அது.

*ஆறு வழகினைக் காந்தியேன் கின்ற ததுதமிழின்
நாறு விதமாய் நடைபெற் றியலு நனிபுகட்சி
தாறு மிடத்தினும் வார்த்தையின் கண்ணுந் தலைசிறந்து
தேனுய் விதர்ப்பருக் குங்கவு டார்க்குந் திறப்படுமே.

(இ-ள்.) காந்தி என்னுமலங்காரம் யாப்பு வனப்பெனக் கொள்க; அது தமிழிற் பல கூறுபாடு பெற்றும் புகட்சியினும் வார்த்தையினும் உலகிறந்த நன்பொருட்பொலிவான் நின்று விதர்ப்பர்க்குங் கௌடர்க்கும் நெறிப்பட்டியலும் (எ-று.)

'ஒழிந்த அலங்காரங்களோ?' எனின், அவ்வப்பெயரானே தம்பொருள் விளங்கி இருக்கும் எனக் கொள்க.

வரலாறு:—

[1]"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

இது சொற்செறிவுடைமையாற் சிலேட்டம் என்னும் உயிராயிற்று. இது சிலேட்டை எனவுமமையும்.

[2]"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு."

---

* "ஆறு வுலகிற் கரும்புகழ் காந்தி கொடைப்புகட்சி
தாறு முதாரம் பொருள்விளக் குஞ்செய்யு டான்புலனாந்
தேனார்சொல் லன்றிப் பொருளாற் றெளியிற் பொருட்டெளிவாந்
தானுடு சொற்பொரு ளிற்சுவை தோன்றிற் றகுமின்பமே"

என எஞ்சியவற்றையுஞ் சேர்த்துப் பிற்காலத்துச் செய்யப்பட்ட சூத்திரம் ஒன்று மதுரை நாட்டுப் பிரதிகளில் உளது,'' என்பது பழைய குறிப்பு.

1. திருக்குறள், 350. 2. திருக்குறள், 27.

இது தொகை மிக்கு வந்தமையால், ஓகம் என்னும் உயிர் ஆயிற்று. தொகை மிகையால் ஓகமென்பர், அது எண்ணில் வந்த சொற்களை ஒன்றாகத் தொகுத்தலின்.

"வேரிக் கமழ்தா ரரசன் விடுகின்ற போதுஞ்
சோரிக் கலத்தின் வகையாற் கொலைசூழ்ந்த போதும்
பூரித்தல் வாட லிவற்றாற் பொலியாது விட்டான்
பாரித்த வெல்லாம் வினையின் பயனென்ன வல்லான்."

இது நான்கடியும் எழுத்தொத்து வந்தமையாற் சமதை என்னும் உயிராயிற்று.

"கடுங்கை வயலுழவர் காலைத் தடிய
மடங்கி யரியுண்ட நீலந்—தடஞ்சோர
நீளரிமேற் கண்படுக்கு நீணீ ரவந்தியார்
கோளரியே றிவ்விருந்த கோ."

என்றதனுட் கண்ணுடையவற்றின் பக்கலுள்ள உறங்குதல் தொழிலைக் கண்ணில்லாத குவளையின்கண்ணும் உலகிற்கொக்கப் புணர்த்தமையாற் சமாதி என்னும் உயிராயிற்று.

"யானையால் யானையு மேவுவான் யானை
வினையான் வினைமையு மாம்."

இது வல்லெழுத்து நீங்கலாய் மெல்லிதாகிய ஓசையொடு வந்தமையாற் சுகுமாரதை என்னும் உயிராயிற்று. இதனை இனிமை எனவும் அமையும்.

"மானே யுனது வளர்கொங்கை வீக்கத்தைத்
தானேது மெண்ணாது தாமரையோன்—மீனேயும்
வானத்தை யித்தனையு மந்தமா கப்படைத்தான்
ஞானத்தை யில்லான்போ னன்கு."

இஃது உலகு இறந்த நன்பொருட்பொலிவு வரவு புகட்சியின்கண் வந்தமையால், காந்தி என்னும் உயிராயிற்று. 'வரை தோள்', 'தாமரை புரை தொடை' என்றித்தொடக்கத்தன எல்லாங் காந்தியாம் எனக்கொள்க. இச்செய்யுள் தண்டியார் இலக்கியப்படி பொருளெனக் கொள்க.

இனி உதாரதையாவது, தலையென்றும், இடையென்றும், கடையென்றும் முத்திறமாகச் சொல்லப்பட்ட வள்ளல்களுள் தலையாகு வள்ளல் கொடையினைப் புகழ்ந்து செய்வது.

"தண்பணி முகிறகைத் தலையாகு வள்ள
லொண்புகழ் இளப்ப துதாரதை யாகும்."

"காலையும் வந்த கவைஞர் கதிர்கரந்த
மாலையும் வாராதே யென்செய்வார்—நீலம்
புனிற்று நிரைமேயும் புள்வேளூர்ப் பூதா!
கனிற்றுகா ணம்மறையார் கை."

எனக் கொள்க.

புலனாவது, பொருள் விளங்கி இருப்பது.

"சொலப்படும் பொருளுமச் சொல்லும் வண்ணமும்
புலப்படக் கிடப்பது புலனெனப் படுமே."

வரலாறு:—

1"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

இது பொருள் விளங்க இருத்தலால் புலனாயிற்று.

பொருட்டெளிவு ஆவது,

"தெருள்படு மொழிவயிற் றெரியா ததற்குப்
பொருளாற் றெரிவது பொருட்டெளி வாகும்."

வரலாறு:—

"குளம்பின் மடிநாகர் புண்ணீரிற் செம்மை
வளந்திகழு மால்கடல்வாய் நின்று—விளங்கொளிசேர்
மாலாய் முனிந்தெடுக்கப் பட்டாளிம் மண்மகளாஞ்
சேலாருங் கண்மயிலே சென்று."

இதனுட் 'குளம்பு' என்ற பொழுது மாலுருவாய் நின்ற பன்றியின் குளம்பென்பது. இது பொருளால் தெளிதலால் பொருட்டெளிவு எனப்பட்டது.

இனி இன்பம் என்னும் உயிரலங்காரம் ஆவது, சொல்லின் கண்ணும் பொருளின்கண்ணும் சுவையுடைத்தாவது. அதுதான் முன்னைப் பிறப்பினும் கவிப்பொருத்தம் உடையானுக்கு அல்லாது தெளியாது,

"நவையறு மொழியினு நயத்தினும் பொருளினுஞ்
சுவைவரத் தொடுக்குந் தூக்கே யின்பம்."

என்பதாகலின்.

1. திருக்குறள், 108.

வரலாறு:—

"கதிர்த்தா ரகையும்வெண் டிங்களு மாகவெய் யோனைக்கையாற்
பிதிர்த்தா ருளர்பெரும் பாலுடன் ருங்கிற்பின் ருக்கவியோ
டெதிர்த்தாரை வென்றண்ட மூடுகின் ருனருள் போலுந்தன்மை
யுதிர்த்தா ரழல்கங்கு லாயெங்கும் பெற்ற தொளிவிசும்பே."

இது நான்கடியும் எதுகையும், வழி மொழியும், பொருட் பொலிவும் பெற்று நயன் ஒப்ப முடிந்தமையால், இன்பம் என்னும் உயிரலங்காரமாய் நின்றது. இதனைத் தண்டியார் மாதுரியம் என்பர். காந்தியென்னும் உயிர் சிறப்புடைமையால், தனித்து இலக்கணஞ்சொன்ஞர் எனக்கொள்க. அவை பத்துந் தண்டிகளுயிராயின. இந்நூலுடையார் அலங்காரமாய் நிறுவலால், உயிர் அலங்காரமாயிற்றென்க. இனித் தன்மை முதலிய அலங்காரம் ஆமாறு சொல்லுகின்றான். (கூ)

152. தன்மை, உவமை, உருவகம், தீபகம் என்னும் அணிகள் ஆமாறு

திரப்பியஞ் சாதி தொழில்குண மாந்தன்மை; சீருவமை
பரப்பிய வொப்பாம்; உருவக மாவ ததன்றிரிவு;
கரப்பிய சொல்லெங்கு மொன்றே யுபகார மேல்விளக்கு;
நிரப்பிய மீட்சியு மற்றதன் போலி நிரைவளையே!

(இ-ள்.) திரப்பியத் தன்மையும் சாதித் தன்மையும் தொழில் தன்மையும் குணத் தன்மையும் எனத் தன்மையென்னும் அலங்காரம் நான்கு வகைப்படும்; தன்மையாவது, இயல்பெனக் கொள்க; உவமையென்னும் அலங்காரமாவது, பழித்துத்தான் பட்டாங்கு சொல்லித்தான் ஒன்ருேடொன்று உவமிக்கும் இடத்து உவமைக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் பொதுவாய் நின்றதொரு பண்பு பற்றி வரும் எனக்கொள்க; 'கடல் போன்றது படை,' என்றது உவமையாம். [1] 'படைக்கடல்' என்று படையைக் கடலாக வியந்துவரின் உருவகமாமெனக் கொள்க. ஒரு சொல்லே கவிக்கெங்கும் உபகாரமாய் நின்றது திபகமாம்.[2] (எ-று.)

வரலாறு:—

"கறைமிடற்றர் கையிற் கபாலத்தர் வெள்ளைப்
பிறைமுடியர் பின்ருழ் சடையர்—பொறிவிரவு

1. இது முன்பதிப்பில் 'கடற்படை' என்றிருந்தது.
2. 'நிரம்பிய மீட்சியு மற்றதன் போலி' என்பதற்கு ஈண்டுப்பொருள் காணப்படவில்லை.

நாகத்தர் சூலத்தர் நன்னுதலா டாணிருந்த
பாகத்த ரன்றே பரசு.''

இது திரப்பியத்தின் தன்மையைச் சொன்னமையால், திரப்பியத் தன்மை என்னும் அலங்காரமாயிற்று.

''உருப்பெறக் கிடந்த வுண்மைசான் மரபின்
திரப்பியம் பகர்வது திரப்பியத் தன்மை''

எனக் கொள்க.

''துண்டஞ் சிவந்திறகும் பச்சையாய்த் தொன்மைத்தார்
கண்டம் பொலியக் கவின்பெற் றனகிளியே''

என்றும்; 'பசுங்காய், கருங்காக்கை' என்றும்; 'செம்பவளம், வெண்குருகு' என்றும் இன்னவையெல்லாஞ் சாதியினுடைய தன்மையைச் சொன்னமையாற் சாதித்தன்மை என்னும் அலங்காரமாயிற்று. பிறவும் அன்ன.

''இன்மை யிகழா தினத்திற் கொத்த
தன்மையிட் டுரைப்பது சாதித் தன்மை''

எனக் கொள்க.

''முற்குளம்பி னூற்கிளறி மோந்தங்கோர் முக்காலும்
பொற்சுண்ண மாடிப் புரண்டெழுந்து—நற்சென்னி
நேர்நிறுத்தி நின்றுதறிக் கங்கைநீ ருண்டனவே
பானிறத்த மால்வெண் பரி.''

இது தொழிலின் தன்மையைச் சொன்னமையால், தொழிற்றன்மை என்னும் அலங்காரமாயிற்று.

''பழுதில் செய்வினை பதந்தொறும் வருவது
தொழிலின் தன்மை யென்மனார் புலவர்.''

எனக் கொள்க.

[1]''எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைக்க வருவதொன் *றுண்டு.''

---

1. திருக்குறள், 1202.

* ''இல் என்று பாடமோதித் துன்பம் எதிர்நிலை எழுவாயாகக் கொண்டார் பரிமேலழகர். இனிதே என முன்னர் நிறுத்தினமையானும், துன்பம் இல்லாவழியெல்லாம் இன்பமேயுளது என்பது சாத்தியமாகாமையானும், புணர்ந்துழியும் பிரிந்துழியும் இனிமையுண்மை கூறலே நாயனார் கருத்தாதலானும் அஃது சிறப்பன்றென மறுக்க. அன்றியும், உண்டென் பதே பழம்பிரதிகளின் பாடமுமாம்'' என்பது பழைய குறிப்பு.

இது காமக்குணத்தின் தன்மையைச் சொன்னமையால், குணத் தன்மை என்னும் அலங்காரமாயிற்று.

"மனத்தின் வாய்மையிற் றெழிலின் வருமெனக்
குணத்தினைக் கிளப்பது குணத்தின் றன்மை."

எனக் கொள்க.

இனி, உவமையென்னும் அலங்காரமாமாறு:

[1]"கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்."

இஃது உவமையான கடலுக்கும் உவமிக்கப்பட்ட பொருளாயுள்ள காமத்துக்குங் 'கரையேறவொண்ணாமை' என்னும் பண்பு பொது வாய் நிற்றலால், உவமை என்னும் அலங்காரமாயிற்று.

"உவமா னத்தோ டுவமே யத்தினுக்
குரியபண் புறுத்துவ துவமை யாகும்."

எனக் கொள்க.

இனி, உருவகம் ஆவது,

[2]"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்."

இது பிறவிக்கும் கடலுக்கும் நீந்துதற்கு அருமை என்னும் பண்பு பொதுவாகிப் பின்னை உவமிக்கப்பட்ட பொருளையே உவமையாகச் சொன்னமையால், உருவகம் ஆயிற்று. 'போலும்' என முன்னுவமைப் பண்பு எய்திப் பின் 'ஆவது அது' என்று தானே அதுவாகச் சொல்லுதல் உருவகமாம்.

"உவமை போலப் பண்பொடு மிசைந்து
தானே யதுவாவ துருவக மாகும்."

எனக் கொள்க.

இனி, விளக்கு என்னும் அலங்காரமாவது,

[3]"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை."

இதனுள் 'துணை' என்னும் இறுதிச்சொல் மூன்றிடத்தும் பொருள் கொள்ள நின்றமையால், இறுதி விளக்கு ஆயிற்று.

1. திருக்குறள், 1137.
2. ,, 10.
3. ,, 42.

*"இளங்கடை யிடைதலை யென்னும் மூன்றினும்
விளங்கா நின்றது விளக்கெனப் படுமே."

இதனைத் தண்டியார் தீபகம் என்று சொல்லுவர். அஃது ஆதி அந்தம் மத்தியம் மூன்றிடத்தும்வரும். ஆதி தீபகமாவது, முதலின் கண் நின்ற சொல் எல்லாவிடத்தும் பொருள்கொள நிற்பது. மத்திய தீபகமாவது, நடுவு நின்ற சொல் எல்லாவிடத்தும் பொருள் கொள நிற்பது.

"தொல்காப் பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னார்வகுத்துப் பன்னினார்—நல்யாப்புக்
கற்றார் மதிக்குங் கலைக்காக்கை பாடினியார்
சொற்றார்தந் நூலிற் றொகுத்து."

இதில் உரைத்தார், பன்னினார், சொற்றார் என மீண்டு வந்த சொன் மூன்றும், சொன்னார் என்னும் பொருளொன்றையே விளக்கினமையால், பொருண்மீட்சி என்னும் அலங்காரமாயிற்று.

"இந்திர னேறக் கரியளித் தார்பரி யேழளித்தார்
செந்திரு மேனித் தினகரற் குச்சிவ னார்மணத்துப்
பைந்துகி லேறப்பல் லக்களித் தார்பழை யாறைநகர்ச்
சுந்தரச் சோழரை யாவரொப் பார்களித் தொன்னிலத்தே!"

என வருவது பதமீட்சி.

"பொருளே மீள்வது பொருளின் மீட்சி;
பதமே மீள்வது பதத்தின் மீட்சி;
இரண்டு மீள்வ திருகை மீட்சி."

எனக் கொள்க.

"வீரர் களிறேற வெல்வேந்தர் தேரேறப்
போர்கெழு வெஞ்சிலைநாண் பூட்டேற—வார்முரச
மார்ப்பேற வேலினார் மாவேற வெஞ்சுடர்வாள்
கூர்ப்பேற வேறினான் குன்று."

இதில் 'ஏற' என்று ஒரு பதமே மீள வந்தமையால், பதமீட்சி என்னும் அலங்காரமாயிற்று. இருகை மீட்சி வந்தவழிக் கண்டு கொள்க. (௧௦)

* "மீட்சியே முதுமையதாதலின், இளமை என்றார்," என்பது பழைய குறிப்பு.

153. பிறபொருள் வைப்பு, தடைமொழி, விதிரேகம், விபாவனை, சுருக்கு, பெருக்கு, ஈறு நோக்கு, ஏது, நுணுக்கம், இலேசு என்னும் அலங்காரங்கள் ஆமாறு

கூறும் பிறபொருள் வைப்புத் தடைமொழி கொள்பொருளில்
ஏறு மிரண்டிலோன் றேறும் விதிரேக மேதுவின்மை
தேறும் விபாவனை யன்றித் திகழ்சுருக் கேபெருக்கே
ஈறு மிகுநோக்க மேது நுணுக்க மிலேசு மென்னே.

(இ-ள்.) பிறபொருள் வைப்பும், தடைமொழியும் பெயரினால் இலக்கணமறிக. 'தடைமொழி' எனினும் 'உட்கோள்' எனினும் ஒக்கும். இரண்டு பொருளை ஒக்கச் சொல்லி ஒன்றிற்கு ஒரு குணம் ஏற உண்டாக்குதல், இரண்டிக்கும் வெவ்வேறே இரண்டு குணம் ஏற உண்டாக்குதல் விதிரேகம் என்னும் அலங்காரமாம்; இதனை வேற்றுமை நிலை என்பாருமுளர். யாதானுமாக ஒன்று வந்த காரணம் இன்றியே நிகழ்வதெனின், அது விபாவனையாம்; இதனை வெளிப்பாட்டு நிலை என்பாருமுளர். இனிச் சுருக்கும், பெருக்கும், ஈறு நோக்கும், ஏதுவும், நுணுக்கமும், இலேசும் என்பன சில அலங்காரமுள (எ-று)

சுருக்கம் பெருக்கங்களைத் தொகை மொழி, மிகை மொழி என்பாருமுளர்.

வரலாறு:—

"மன்னன் றசரதற்கு வாய்த்த மருமகளாய்
மன்னன் சனகன் மகளாகி—மன்னனிரா
மன்றாரமாகியபொன் மாதகன்றாண் மீண்டெய்தாள்
என்றாலார் துன்புறா ரீங்கு."

என இதனுள், 'என்றால் ஆர் துன்புறா ரீங்கு' என்று முன்பிற் பொருள்களுக்கேற்பப் பிறிதொரு பொருள் வைத்தமையால், பிற பொருள் வைப்பாயிற்று. இதனை அருத்தாந்த நியாயம் என்பர் தண்டியார்.

"துறையினிற் பிறக்கப் பொருள்கள் கடியப்
பிறபொருள் வைப்பது பிறபொருள் வைப்பே,"

எனக் கொள்க.

[1]"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை."

1. திருக்குறள், 1151.

இது விலக்குதலையுட்கொண்டு சொன்னமையால் தடைமொழியாயிற்று. தண்டியார் இதனை ஆக்கேபம் என்பர்.

"இழுக்குரை தழீஇ விலக்குதற் பொருளை
முற்கொண் டுரைக்கு முரையே தடைமொழி."

"புணர்ந்தகன்றூர் பொன்னிறம் பூத்தற்குத் தந்து
துணர்ந்தகன்ற கொன்றையே சொல்லா—புணர்ந்தொருவர்
வாட்டா நெடுஞ்சுட ரேந்து மலர்த்தோன்றி
காட்டாவோ காதலர்க்குக் கார்?"

இதனுட் பொன்னிறம் பூத்தற்குப் புணர்ந்தகன்றுரையும், பயனாகிய பொன்னிறம் பெய்தலையும் விளக்கினமையால் விபாவனை யாயிற்று. இதனை வெளிப்படை எனினும் இழுக்காது.

"முயற்சி யின்றி முடியும் பொருண்மாட்டு
வியப்புற வருமெனின் விபாவனை யாமே"

எனக் கொள்க.

"வேட்டொழிவ தல்லால் விளைஞர் விளைவயலுட்
டோட்ட கடைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
யின்புறுத்த வல்லாமோ யாம்?"

இதனுட் சிறப்புடையளாகிய தலைமகளை இகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர்மாட்டு நிகழாநின்றமையில் நாட்டுக் கடைஞர் உள்ளார் சிறப்பில்லாத நந்தை யூன்றுப்புடைய ஆமையின் புறத்து உடைத்துத் தின்பர் என்னுமிதனாற்றெருகுத்து விளங்கச் சொன்னமையால், தொகைமொழியாயிற்று. வச்சத்தோள்ளாயிரம் முழுவதுந் தொகைமொழி எனக் கொள்க. தொகைமொழி எனினுஞ் சுருக்கம் எனினும் ஒக்கும். இதனைத் தண்டியார் சமாசம் என்பர்.

"நெஞ்சினிற் பொருளை நிரப்ப வேறொரு
செஞ்சொலிற் காட்டுந் திறமே தொகைமொழி."

இனிப் பெருக்காவது, உலகத்தார்க்கேற்றிரா வண்ண மிகச் சொல்லுதல் எனக் கொள்க.

"பேணு குமுத மலரப் பெரும்பகலே
வாணிலவு தாகி மலியுமே—பூண்முலையார்
பண்களகத் தோதாப் பரந்தெழுந்து மாளிகைமேல்
வெண்களபத் தாலே விரிந்து."

'இதனோடுங் காந்திக்கு வேறுபாடென்னே?' எனின், காந்தி என்னும் உயிர் புகழ்ச்சிக்கண்ணும் பல வார்த்தையின்கண்ணும் அல்லால் வாராது: இஃதெல்லாவிடத்தினும் வரப்பெறும் எனக் கொள்க. இதனை மிகை மொழி எனவும் அமையும். தண்டியார் அதிசயாலங்காரம் என்பர்.

"உரையினும் புகழினு மன்றிவே றுயர்ச்சியிற்
பெருகச் சொல்லுதல் பெருக்கெனப் படுமே"

எனக் கொள்க.

"குலவார் மருங்கோர் கொலையுருவங் கொண்டு
நிலவார் மதிநேர் நிழற்றும்—புலவார்
முகனுறு வேல்வேந்த னுசரிதன் செம்பொன்
இகனுறு நீண்முடிமே லின்று."

இதனுள் உவமையாகிய மதியைப் பொருளாகிய குடையாக்கிக் குணன் நாட்டிச் சொன்னமையான், நோக்கு ஆயிற்று.

"மெய்ப்பொரு ணிற்ப வேறொன் றாக்கி
அப்படி யாக வியம்புத னோக்கே"

எனக் கொள்க.

ஏது என்னுமலங்காரமாவது, கூறிய பொருளுக்குக் காரக ஞாபகமாதியான ஏதுச் சொல்லுதல்.

அஃதாமாறு:

[1]"சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்."

இதனுட் 'சூழ்வார் கண்ணாக ஒழுகலே பொருளாகச் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்' என்று ஏது நாட்டிச் சொன்னமையால் ஏது அலங்காரமாயிற்று.

"இப்படி யாதலி னிப்படி யாயிற்
றென்னக் கிளப்ப தேது வாகும்."

எனக் கொள்க.

"கணவர்க்கு வந்தெய்துங் கால மலாமுன்
னுணர்வுசெய மாட்டா துணர்ந்து—துணர்மலிந்த
தாளார் முளரித் தடமலரைக் கூப்பினாள்
வாளார் திருநெடுங்கண் மாது."

1. திருக்குறள், 445.

இது காதலர்க்கு இரவுக்குறி அறியாமையை உணர்த்தினமை யான், நுணுக்கம் என்னும் அலங்காரமாயிற்று.

"இங்கிதா காரத் தியல்குறி குறிப்பின்
உணர்த்துத னுணுக்க மென்மனார் புலவர்."

எனக் கொள்க.

"உன்னுயி ரோய்பு ளகத்தா லோங்கரசர்
கன்னிமேற் காதலுள னென்னுமல்—முன்னீர்க்
குளிர்காற்று வந்தசைப்பக் கூசினு னென்று
ரளியாற்றுந் தண்டாரா னங்கு."

இது ஒன்றினால் ஒன்றை மறைத்தமையால், இலேசு என்னும் அலங்காரமாயிற்று. இதனை இலேயம் எனினும் அமையும்.

"மறைந்த பொருண்மற் றொன்றி னிலக
வியம்புத லிலேசி னிலக்கண மாகும்."

எனக் கொள்க. (௰க)

152. அடைவு, மகிழ்ச்சி, சுவை, ஊக்கம், பரியாய மொழி, துணைப்பேறு, உதாத்தம், அவநுதி, சிலேடை, சிறப்பு, உடனிலைச்சொல், முரண், நுவலாச்சொல், தெரிவில் புகழ்ச்சி, சுட்டு என்னும் அலங்காரமாமாறு

அடைவு மகிழ்ச்சி சுவையூக்க மாம்பரி யாயமொழி
அடைவு மலிதுணைப் பேற்றுடு தாத்த மவநுதியு
முடைவு நிகழுஞ் சிலேடை சிறப்போ டுடனிலைச்சொற்
புடையின் முரணுவ லாச்சொற் புரிவில் புகழ்ச்சிசுட்டே.

(இ-ள்.) அடைவும், மகிழ்ச்சியும், சுவையும், ஊக்கமும், பரியாயமொழியும், துணைப்பேறும், உதாத்தமும், அவநுதியும், சிலேடையும், சிறப்பும், உடனிலைச்சொல்லும், முரணும், நுவலாச் சொல்லும், தெரிவில் புகழ்ச்சியும், சுட்டும் எனக் கிடந்த அலங் காரங்களும் உள (எ-று.)

அகலம் உரையிற் கண்டு கொள்க.

வரலாறு:—

"செவ்வாய் புகர்புந்தி திங்கட் கதிர்புந்தி
செவ்வாய்பொன் காரிசனி மந்த்ரிசெவ்வா—யெவ்வாயு
மேடமுத லீராறு வீட்டுக் கிறையென்று
நீடாய்ந்து சொன்னார் நிலத்து."

இது செவ்வாய் முதலிய கோட்களைப் பன்னிரண்டு இராசிக்கும் நாயகராக அடைவே வைத்துச் சொன்னமையால், அடைவாயிற்று. இதனை நிரனிறை எனினுமாம். இதனைப் பெயர் நிரனிறை, வினை நிரனிறை, எதிர் நிரனிறை, மயக்க நிரனிறை, உய்த்துணர் நிரனிறை என்று பல விகற்பங்களாலும் வேறுபடுப்பாரும் உளரெனக் கொள்க.

1 "தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு"

இது மகிழ்ந்து சொன்னமையால், மகிழ்ச்சியாயிற்று.

"அடைவே நிரனிறை யாகு மாங்குத்
திடமுற மகிழ்ந்து செப்புதன் மகிழ்ச்சி."

எனக் கொள்க. இனிச் சுவையாவது, சிருங்கார முதலாகவுடைய நாடகச்சுவை ஒன்பதும் எனக் கொள்க.

வரலாறு:—

2 "ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா."

இது சிருங்காரம்.

3 "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்."

இது வீரம்.

"கலைகா னெகிழ்ந்து குழலுஞ் சரிந்து வளைகழல
முலைகால் பசந்துமுன் போலா ளிவண்முனை வெம்பணைக்கைச்
சிலைகால் வளைவித்த மாறன்றெவ் வேந்திற்செவ் வேளுறையு
மலைகா லருவிசென் றாடின ளோமற்றிவ் வாயிழையே."

இது *விகாரம். பிறவுமன்ன.

1. திருக்குறள், 1107. 2. திருக்குறள், 1329.
3. ,, ,, 774.

* "இது சிங்காரம், ஆசியம், கருணை, இரவுத்திரம், வீரம், பயானகம், குச்சை, அற்புதம், சாந்தம் என இலக்கண நூலாரால் வகுக்கப்பட்ட ஒன்பது சுவையில் ஒன்று அன்று. ஆயினும், விபாவமெனவும், அனுபாவம் எனவும், சஞ்சரி பாவம் எனவுங் காரணகாரிய உடனிகழ்வு இயையுள்ள மெய்ப்பாடுகளாற் பிறந்து வெளிப்பட்டுச் சந்தர்ப்பித்து நடைபெறுவதே சுவையாதலின், மெய்ப்பாட்டின்பாலதாகிய விகாரத்தைச் சுவை என்றெடுத்துக் கூறியது குற்றமன்று. அன்றியுங் காரணவாகு பெயராகக் கொள்ளினும் அமையும் எனக் கொள்க," என்பது பழைய குறிப்பு.

"நவைதீ ரொன்ப தாகு முட்பொருள்
சுவைவாய்க் கிளப்பது சுவையென மொழிப."

எனக் கொள்க. ஊக்கமாவது,

"மலைகரந்து போகாதோ வற்றாதோ பௌவ
மலர்கதிரோன் வீழாதோ வஞ்சி—நிலையெனக்குப்
பார்வேந்த ரொப்பரோ பாய்நீர்க் குருகுலத்தார்
போர்வேந்தே யான்முனிந்த போது."

என வரும்.

"தாக்கிய விடத்தெனைத் தடுப்பா ரியாரென
வூக்கங் கூறுத லூக்க மாகும்."

எனக் கொள்க.

"இவ்வயிற் கேட்டதோர்
பசுங்கதிர்த் திங்க ளுடிய செல்வ
னென்றி யெனக்குரை யின்றி யிரங்கென
மருளுந் தெருளும் வரம்பில பயிற்றி"

என இதனுள் வத்தவனை வணக்குற்றார் மன் மதிக் குலத்தனுதலிற் சந்திரனைத் தேடிப் போகின்றேன் என்று வேறொரு பரியாயத்தாற் சொன்னமையாற் பரியாய மொழியாயிற்று.

"பொருளினைப் புலப்பட் டிராமல் வேறொரு
பரிசினிற் கூறுதல் பரியா யம்மே."

எனக் கொள்க.

"வான்குணத் தெம்பிக்கு மன்னு பெருஞ்செல்வம்
யான்கொடுப்பேற் கெங்கோனு மிக்களித்தா - ளுன்போய்க்
கரும்பேறு நாட்டார்தங் காவலன்றன் றேவி
தரும்பேறு மற்றுண்டோ சாற்று."

என இதனுள் 'நான் கொடுப்பான் இருந்தவர்க்குத் தானும் உடன் பட்டான்' என்றமையால், துணைப்பேறு என்னும் அலங்கார மாயிற்று.

"நினைவுடைப் பொருளினை நிரப்புதற் கிதுவுந்
துணையெனப் படுவது துணைப்பே றென்ப."

இனி உதாத்தம் என்னும் அலங்காரமாவது, ஒருவன் இடவகையைத்தான், செல்வத்தைத்தான் பெருமை கூறுதல்.

வரலாறு:—

"திருக்கிளர் தாமரையின் றேனொழுகச் சாலி
பருக்கு மிலந்தைப் பதியே—யிருக்கென்னு
நாமாலை யிட்டு நலங்கிளர்தார் மூவேந்தர்
பாமாலை யிட்டார் பதி."

எனவும்,

"தென்ற லுலவச் சிலைமாரன் போர்செய்ய
மன்றல் கமழு மருதூரே - கொன்றையினின்
மட்டாடுந் தொங்கலினார் வந்து மணஞ்செய்யப்
பட்டாரை யிட்டார் பதி."

எனவும் இவை இட வகையைப் புகழ்ந்த உதாத்தம்.

"அருமொழிதன் கோயி லடலரசர் மிண்டித்
திருமகட் குக்கொடிக டேய்த்த—பருமணிக
ளோதத் தமுதனைய வொண்ணுதலார் மென்மலராம்
பாதத்தி னூன்றும் பரல்."

இது செல்வத்தைப் புகழ்ந்த உதாத்தம்.

"செல்வ மாயினும் பதியே யாயினும்
வல்லிதிற் புகழும் வாய்மைய துதாத்தம்."

எனக் கொள்க.

அவநுதியென்னுமலங்காரமாவது,
ஒன்றை நாட்டி யஃதன்று இன்னதுபோல் நிகழ்வது என்பது.

"மாலைநீ யல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது."

என வரும்.

"அதுவோ வதுவன் றுயுங் காலை
யிதுபோ னிகழ்ந்த தெனுமவ நுதியே."

எனக் கொள்க.

சிலேடையாவது,

"செம்மை யுடையார் சிறியார்மேற் சொல்லுஞ்சொல்
வெம்மை யுடைய விறற்பகழி—தம்வன்மை
காலிட்டா னென்னுது காய்ந்தவர்மேற் பாய்ந்தனவே
மேலிட் டுயிர்போக மிக்கு."

இது செம்மையுடையார் சொல்லை அம்போடொக்கச் சிலேடித்தமையால், சிலேடையாயிற்று.

"மெய்ப்பொரு ளேற வியம்பிய விரண்டையுந்
திட்பங் கூறுதல் சிலேடை யாகும்."

எனக் கொள்க.

இனிச் சிறப்பு என்னுமலங்காரமாவது, குணமும் சாதியும் உடையவற்றால் வேறுபடுத்துச் சிறப்பித்தல்.

"கரும்பே தன் கைச்சிலையுங் காமர் கணையு
மரும்பே சுரும்பேநா ணன்றாற்—பெரும்பேய்க்
கணத்தானைப் போர்வென்று காரிகையா ரோடு
மணத்தான மேற்றுவித்தான் வந்து."

என இது இப்படி உள்ளானாகிலும் இப்படிச் செய்தானென்று சிறப்பித்தலால், சிறப்பாயிற்று.

"சாதியுங் குணமுங் கிரியையும் பொருந்த
மேதகு சிறப்பின் விளம்புதல் சிறப்பே."

எனக் கொள்க.

"உள்ளிய வுள்ளியாங் கீயு முயர்விற்றுங்
கள்ளவிழ் பூஞ்சோலைக் கற்பகமும்—வள்ளல்
வளையாய் புனலுடன் மானவே னின்று
முளவாக வாடா துலகு."

இது கருதின குணங்களை உடன்கூட்டி ஒப்பித்தலால், உடனிலைக் கூட்டமாயிற்று.

"பெரியத னோடு செயலா விழிந்ததை
யுரிய தாக்குத லுடனிலைக் கூட்டம்."

எனக் கொள்க.

1 "நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று."

என இதனுள் தீதென்றும் நன்றென்றும் வந்தமையான், முரண் என்னும் அலங்காரமாயிற்று. இதனையே சொல்லுஞ் சொல்லு மறுதலிக்கு முரணும், பொருளும்பொருளு மறுதலிக்கு முரணும் என வேறுபடுப்பாரும் உளர்.

"பொருளினு மொழியினும் பொருந்தக் காட்சியின்
முரணக் கூறுதல் முரணென மொழிப."

எனக் கொள்க.

1. திருக்குறள், 222

"தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்."[1]

இது நாணுத் துறவுரைத்தல் என்னும் அதிகாரத்தது, ஆயினும் அவ்வதிகாரத்துக்கு உரித்தல்லாத பொருளை உணர்த்தி அவ்வதிகாரச் சொல்லையும் விளக்குதலால், நுவலாச் சொல்லாயிற்று. இதனை நுவலா நுவற்சி என்றாலும் அமையும்.

"அடைகின் றியம்பி யறிபொருள் விளக்குதல்
நுவலாச் சொல்லென நுவன்றனர் புலவர்."

எனக் கொள்க.

"மன்னிய பெண்ணை வதைசெய்த வாள்வலியுங்
கன்னியை யெய்திக் கலந்ததுவும்—பொன்னிக்
குலமங்கை தன்னைக் கொலைசெய் ததுவு
மலர்மங்கை கோற்கோர் வடு."

இது பழித்தாற்போலப் புகழ்தலால், தெளிவில் புகழ்ச்சியாயிற்று.

"பழிமொழி மொழிந்து பல்புகழ் விளக்குதல்
தெளிவில் புகழ்ச்சி யென்மனார் புலவர்."

எனக் கொள்க.

"அண்ட முதற்பரிதி யாக்கிப் பெயரடைவாம்
புண்டரிகப் பொய்கை பொலிவுக்கு—மண்டலத்தி
னுற்றாரை நோக்கி யுபகரித்த லேயன்றோ
பற்றான வாழ்வாற் பயன்."

இது முன்பு ஒன்றைச் சுட்டிக் கூறுதலால் சுட்டாயிற்று. இதனை நிதரிசனம் எனவும் அமையும்.

"ஒட்டிய பொருள்வர வொன்றைமுன் வைத்துச்
சுட்டிக் கூறுதல் சுட்டென மொழிப."

எனக் கொள்க.

152. ஒருங்கியல், பரி மாற்றம், ஆசி, விராவு, பாவிகம் என்னும் அலங்காரங்கள் ஆமாறும், அவைகளின் தொகையும்

ஆக்கு மொருங்கிய லேபரி மாற்றத்தோ டாசிவிராத்
தாக்கு மொழிப்பா விகமிவை யேழைந்துந் தண்டிசொன்ன
வாக்கு மலியலங் கார மேனவறி; மற்றுமின்ன
நோக்கு மேனிற்பல வாமலங் கார நுடங்கிடையே!

1. திருக்குறள், 1135

(இ-ள்.) ஒருங்கியலும், பரிமாற்றமும், ஆசியும், விராவும், பாவிகமும் எனக் கிடந்த அலங்காரமு முன்பு தன்மை முதலாகச் சொன்ன அலங்காரமுமாக முப்பத்தைந்தலங்காரமுந் தண்டியாரால் விகற்பிக்கப்பட்டனவாம். இன்னமும் விகற்பிப்பார்க்கு மற்றும் பலவாய் வேறுபடும் (எ-று.)

"பூக்கால் புனைந்த புனவர் மடமக
ணோக்காநோக் குண்டாரை நோவதென்—நோக்காதே
கள்ள நிறையுங் கருங்கண்ணாற் கட்டழித்தா
ளுள்ள நிறையோ டொருங்கு."

என இதனுள் 'உள்ளங்கட்டழித்தாள் நிறையோடும் ஒருங்கு,' என்றமையால், ஒருங்கியல் என்னுமலங்காரமாயிற்று.

"மறுவில் கூட்டம் பொருந்தி யொருங்கே
வருவ தொருங்கிய லென்மனார் புலவர்,"

எனக் கொள்க.

1 "சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து."

என 'இவையிற்றைக்கொண்டு இவை தந்தார்,' என்றமையால், பரிமாற்றம் ஆயிற்று. இதனை மாறாட்டு எனவும் அமையும்.

"இவைகொண் டிவையெனக் கீந்தன ரென்று
நவைதீர மொழிவது நவில்பரி மாற்றம்."

எனக் கொள்க.

ஆசியாமாறு :

"மிகைசேர்ந்த நாகமும் வெண்மதியுந் தம்மிற்
பகைதீர்ந்த மால்சடையோன் காப்ப—முகைமலரக்
கோழி யனுபமனன் கோரம் புலிவாழி
வாழிய மண்டலத்து வான்."

இஃது ஆசிப்பொருள் உணர்த்தினமையால், ஆசியெனக.

"அறநிலை மருங்கி னாசி யென்பது
புறநிலை வாழ்த்தெனப் புகன்றனர் புலவர்."

எனக் கொள்க.

விராவாவது, பல அலங்காரமும் படுவது.

---

1. திருக்குறள், 1183.

"வெய்ய சுடரானும் வீரை வெருதானுஞ்
செய்ய வொளியர் திறலுடையர்—வெய்யசுட
ராழியான் கங்குல் விளக்கா னனையனே
கோழியனே கூடலார் கோ"

என இதனுள் ஞாயிற்றோடு ஒக்க அவன் வழியரசனையும் விதந்து வேற்றுமை காட்டலில், விரவியல் ஆயிற்று.

"பரவியல் பல்லலங் காரம் பட்டன
விரவிய லென்று வேண்டுவ ரென்ப"

எனக் கொள்க. 'விரா' எனினும், 'விரவியல்' எனினுமொக்கும்.

இனிப் பாவிகமாவது, அகலக்கவிப்புலவன் கருத்து. அஃது குண்டலகேசி, உதயணன் கதை முதலாயினவற்றுள் கண்டு கொள்க.

154, 155. உவமையின் வகைகள்

புகழ்ச்சி பழிப்பு விரோதங் கருத்திசை யுண்மையையம்
இகழ்ச்சி யெதிர்ப்பொரு ளற்புத நோக்கித ரேதரந்தா
னிகழ்ச்சி மிகைபண் புயர்வு நியம மநியமமுந்
திகழ்ச்சி மலிதடை தேற்றுச் சிலேடை துணிவென்பரே.

உம்மை பொருளினோ டொப்புமை கூட்ட மபூதத்தோடு
செம்மை திகழ்வாக் கியப்பொருள் கோவைதிண் காரணமும்
வெம்மை மயக்கம் பலவியல் விக்கிரி யத்தினொடு
மெய்ம்மையிற் சந்தா னமுமென் றுவமை விகற்பிப்பரே.

(இ-ள்.) இஃதியல்புப் புகழ்ச்சியுவமையும், பழிப்புவமையும், விரோதவுவமையும், கருத்துவமையும், இசையுவமையும், உண்மை யுவமையும், ஐயவுவமையும், இகழ்ச்சியுவமையும், எதிர்ப்பொரு ளுவமையும், அற்புதவுவமையும், நோக்குவமையும் இதரேதரவுவ மையும், மிகையுவமையும், பண்புவமையும், உயர்வுவமையும், நியமவுவமையும், அநியமவுவமையும், தடையுவமையும், தேற்று வமையும், சிலேடையுவமையும், துணிவுவமையும், உம்மையுவமை யும், பொருளுவமையும், ஒப்புவமையும், கூட்டவுவமையும், அபூத வுவமையும், வாக்கியப்பொருளுவமையும், கோவையுவமையும், காரணவுவமையும், மயக்கவுவமையும், பலவியலுவமையும், விக்கிரிய வுவமையும், சந்தானவுவமையும் என உவமை என்னும் அலங் காரத்தை முப்பத்து மூன்றாக விகற்பிப்பர் (எ - று.)

வரலாறு:—

"நான்முகன் றோன்றிய தாமரை நின்னுடை
வாண்முகந் தன்னொடு மாறு."

இது உவமையைப் புகழ்தலால், புகழ்ச்சி உவமையாயிற்று.

"போது நற்புகழ்ச்சி பொருளைப் புகழா
தேதுவைப் புகழ்த லென்மனூர் புலவர்."

எனக் கொள்க.

[1] "அறுவாய் நிறைந்த வவ்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து."

இஃதுவமையைப் பழித்தலால், பழிப்புவமை.

"இழுக்கில் பொருளை உயர்த்தி யுவமையைப்
பழிக்கப் படுவது பழிப்பெனப் படுமே."

எனக் கொள்க.

"நின்முகம் பங்கயந் திங்க ளிவைமூன்றுந்
தம்மின் மறுதலிக்குஞ் சார்ந்து."

இவை ஒன்றிற்கொன்று தம்மின் மறுதலித்தமையால், விரோத உவமை.

"புகழ்பெறு பொருளும் பொருவு மொன்றையொன்
றிகழ்வது விரோத மென்மனூர் புலவர்."

எனக் கொள்க.

"நின்முகந் திங்களோ டொக்கு மெனவுரைத்தே
னன்மையோ தீமையோ நாடு."

இது புலவன் கருதலால், கருத்துவமை.

"பொருந்திய பொருட்கிது பொருளெனக் கருதுதல்
கருத்தி னுவமை யென்மனூர் புலவர்."

எனக் கொள்க.

"மான்விழி நின்முகத்த வாண்மதியின் கண்ணதுமா
னாகிலு மொக்கு மமர்ந்து."

இஃதுவமைக்கு ஒரு விசேடஞ் சொல்லி, அஃதப்படித்தாயினு மொக்கும் என்றமையால், இசையுவமை.

---

1. திருக்குறள், 1117.

"பொருத்த மின்மைப் பொருவையும் பொருளையு
மிருத்தியு மிசைவ திசையுவமை யாகும்."

எனக் கொள்க.

"பங்கய மன்று முகமேயிது விவ்வையும்
வண்டல்ல வாட்கண்க ளே."

இஃது உண்மை யுவமை.

"பொருளையுஞ் சினையையும் பொருவன் றென்னு
முறையினிற் கோட லுண்மை யுவமை."

எனக் கொள்க.

1 "அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு."

இஃதையப்படுதலால், ஐயவுவமை.

"பொய்யறு பொருளையும் பொருவையுங் கருதி
யையப் படுவ தைய வுவமை."

எனக் கொள்க.

"திங்களிற் றோன்றிய நஞ்சேநின் சீர்முகத்து
நின்றெழுந்த வெவ்வுரைக்கு நேர்."

இஃது இகழப்படும் உவமையோடுவமித்தலால், இகழ்ச்சி உவமை.

"இகழப் படுபொரு ளியம்பிய பொருவை
நிகர்க்கு மென்பது நிரம்பிய விகழ்ச்சி."

எனக் கொள்க.

"நின்னொக்கு மன்ன ருளரல்லர் கற்பகந்
தன்னொக்கும் பாதவமு மில்."

இஃது எதிர்ப்பொருளுவமை.

"இதுபொரு ளுவமையின் றிதுபொரு டனிமையி
னிதுவே நன்றெனி னெதிர்ப்பொரு ளுவமை."

எனக் கொள்க.

"வாட்டடங் கண்ணும் வளைந்த புருவமுந்
தாட்டா மரையிற் றலைசிறப்பி—னொட்டலா
மின்முகத்தைக் காட்டி விளங்கு நுடங்கிடையாய் !
நின்முகத்திற் கொப்பாகு நேர்."

இது அற்புதவுவமை.

1. திருக்குறள், 1081.

"இப்படி யென்ப தியம்பிய துடைமையி
லப்பொரு வாமெனு மற்புத வுவமை."

எனக் கொள்க.

"நாமே விவண்முகத்துக் கொப்பெனு நன்மதியுங்
கான்மலி பங்கயமுங் காண்."

இது புலவன் குறிப்பாதலின், நோக்குவமை.

"சாலும் பொருட்கெதிர் பொருவினும் பொருண்மொழி
நூலோர் நோக்குத லுேக்கெனப் படுமே."

எனக் கொள்க.

"பங்கயத்தோ டொக்குநின் கைத்தலம் பங்கய
நின்கையோ டொப்பெனவு மாம்."

இஃது ஒன்றோடொன் றுவமித்தலால் இதரேதரவுவமை.

"மேதக வெதிரெதிர் விளம்பிய பொருளு
மெதிரும் பொருவுத லிதரே தரமே."

எனக் கொள்க.

"நின்முகங் கண்டதுவு நின்கண்ணே திங்களையும்
விண்மிசையே கண்டதுவு மிக்கு."

இது மிகையுவமை.

"இவ்வயிற் கண்டது பொருளையும் பொருவையு
மிவ்வயிற் கண்டதென் பதுமிகை யுவமை."

எனக் கொள்க. இதனைத் தண்டியார் அதிசயவுவமை என்று சொல்லுவர்.

"தாமரையே போற்செய்ய தாமக் கருங்குழலி
காமருவு நின்கைத் தலம்."

இஃது ஒத்த பண்பு சொல்லி உவமித்தமையால், பண்புவமை.

"ஒண்பொருள் வரவவ் வுவமையோ டொன்றிய
பண்பொடு வருதல் பண்பெனப் படுமே."

எனக் கொள்க.

"நின்முகந் திங்களையுந் தாமரையை யுங்கடந்து
தன்னையே யொத்தது தான்."

இஃது உயரச்சொன்னமையால், உயர்புவமை.

"ஏனோர் மொழிபொரு விகற்தொரு தனக்குத்
தானே பொருவெனத் தருமொழி யுயர்பே."

எனக் கொள்க.

"மதியேநின் வாண்முகத் திற்றொப் பதிதனுன்
மற்றொன் றுண் டென்கை மயக்கு."

என இது நியமித்தமையால், நியமவுவமை.

"வேறுரைப் பதுபிழை யுவமை யிதுவெனத்
தேறிய பொருவுடைத் திறத்தது நியமம்."

எனக் கொள்க.

"தாமரைக் கொப்பாநின் வாண்முகமே நின்கரத்துக்
காமற்றொப் புண்டாயி னுங்கு."

இது அநியமவுவமை.

"உரிய வுவமை யொண்பொருட் கிதுகீழ்க்குப்
பொருவே றெனினு மநியம வுவமை."

எனக் கொள்க.

"வடலர் தார்ச்சசங் கிரன்ற ஙிருங்கொடைக்கு
நீடு மழையே நிகரென்னிற்—கோடை
மறுக்கையினும் வக்கிரக்கோ ளுள்ளுந்தாம் பெய்யா
வொறுக்கையினு மாட்டாவே யொப்பு."

இஃது உவமையைத் தடுத்தலால், தடையுவமை.

"ஒப்பார் பொருவுக் கொருபிழை காட்டித்
தப்பு மென்பது தடைமொழி யுவமை."

எனக் கொள்க.

"நின்முகம் போல மலர்ந்த தரவிந்த
மன்னமே பாரா யது."

இஃது தெற்ற உவமித்தலால், தெற்றுவமை.

"பொருள்போ லமைந்த பொருவிது வென்னு
மரபொடு தெற்றி வருவது தெற்றே."

எனக் கொள்க.

"திருமேவிக் கடிக்மழ்ந்து திங்களொடும் பகைத்தமையா
னுருமேவுந் தாமரையோ டொக்குநின் னொளிமுகமே."

இஃது இரண்டுஞ் சிலேடித்து வந்தமையால், சிலேடையுவமை யாயிற்று.

"புரந்தசொற் பொருவையும் பொருளையு மொன்ற
விரண்டையுஞ் சிலேடித் திசைப்பது சிலேடை."

எனக் கொள்க.

"திங்க ளனையதாற் றிங்களை யஞ்சுவிக்குந்
தங்குசெயல் தாமரைக்க ணுண்டென்று—செங்கட்
கருங்குழலி வாண்முகமே யென்னுங் கருத்தா
லொருங்கறிய லாகு முணர்ந்து."

இது துணிவுவமை.

"அன்னது பொருவன் றெனவடை விளம்பி
யின்னது மெய்ப்பொரு ளென்பது துணிவே."

எனக் கொள்க.

இனி உம்மையுவமையாவது, 'இக்குணத்தாலே அன்றி, இக் குணத்தாலும் ஒக்கும்' என உம்மை இட்டு வருவது.

"செம்மையினுற் செந்தா மரையொக்கு நின்முகந்
தண்மையி னுனுந் தனக்கு."

"இக்குறி யதனு லன்றி யிதனுலு
மொக்குமென் றிசைப்ப தும்மை யுவமை."

என்பதனுல் அறிக.

"தாமரை போலுநின் வாண்முகங் கண்ணிணைக
ணீலோற் பலத்துக்கு நேர்."

இது பொருளுவமை.

"கருதிய பொருட்குக் காரணந் தவிர்த்துப்
பொருவை யியம்புதல் பொருளெனப் படுமே."

எனக் கொள்க.

"மண்ணுடு காத்தற்கு நீயுறங்காய் வானவர்கோன்
விண்ணுடு காத்தற்கு மேலுறங்கான்—நண்ணுதா
ரானவரைக் கொன்ரு யனுபமனு நீயவனுந்
தானவரைக் கொன்ருன் றடிந்து."

இது ஒப்புமை ஒக்கச் சொன்னமையால், ஒப்புமைக்கூட்ட உவமை.

"இப்படி யெனப்பொரு ளிரண்டுநற் பொருவுத
லொப்புமைக் கூட்டமென் ருேதினர் புலவர்."

எனக் கொள்க.

"வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று."[1]

இஃது இல்லாதது சொன்னமையான், அபூதவுவமை.

"விடாதவப் பொருட்கு விதிசே ருவமை
யடாத தியம்புத லபூத வுவமை."

எனக் கொள்க.

வாக்கியப் பொருளுவமையாவது, வாக்கியப்பொருளான் உவமை விளக்குதல். வாக்கியமாவது, பல பதங் கூடியிருப்பது. இதனைத் தொடர்மொழியெனவும் அமையும். அது வருமாறு:

"வெண்ணிலவுந் தண்ணளியு மென்மையுஞ் சேருமா
லண்ண லதுவெண் குடை."

"பழுதி லுவமைப் பலபதஞ் சேர்மொழிப்
பொருளில் விளக்கம் புணர்ப்பது வாக்கியம்."

எனக் கொள்க.

"வேலொப் பனவெங் கணையொப் பனதடஞ்
சேலொப் பனமங் கையர்சே யரிக்கணே."

இது நிரையிற் சொன்னமையால், கோவையுவமை.

"பண்டை யோருரை பலபொரு டமக்குக்
கொண்டு கூறுதல் கோவையென் றனரே."

எனக் கொள்க.

"வீரியத்தால் வெய்யோன் வெகுளியா ளூழித்தீ
காரியத்தாற் சாணக் கியன்."

இஃது ஏதுக் காட்டி 'இவற்றால்' என்றமையால், ஏதுவுவமை. இதனைக் காரணவுவமை எனினும் அமையும்.

"இதனு லிப்பொரு ளொக்கு மெனக்குணந்
துதியாற் சொல்லுத லேது வுவமை."

எனக் கொள்க.

"மதியு மடந்தை முகனு மறியாப்
பதியிற் கலங்கிய மீன்."

இது மயக்கவுவமை.

"இதுபொரு ளதுபொரு வென்றுணர்த் திலமென
வுவமையின் மலைவினை யுரைப்பது மயக்கே."

எனக் கொள்க.

---

1. திருக்குறள், 273.

"காவி கணைசெங் கயல்கதிர் வாளிவைநின்
வாள்விழிக் கொப்புரைக்க லாம்."

இது பலவியலுவமை.

"உயர்பொரு ளொன்றை யொக்கு முவமை
பலவுடன் கூறுதல் பலவிய லாகும்."

எனக் கொள்க.

"சந்திரனிற் றோன்றிற்றுப் போலுந்தண் டாமரையின்
வந்ததுபோ னின்வாண் முகம்."

இது விக்கிரியவுவமை.

"இத்துணைப் பொருவில்வந் ததிர்ந்தது பொருளென
வத்துணை மொழிவரி னதுவிக் கிரியம்."

எனக் கொள்க.

இனிச் *சந்தானவுவமையாவது, உவமையும் பொருளுந் தொடர்ந்து சொற்சலிப்பது.

"கோபத்தின் மிக்குக் குவிகோலம் பெய்துவிடி
லாபத்தைச் செய்யு மனங்கன்போற் றூவாது
கோபத்தின் மிக்குக் குவிகோலம் பெய்துவிடி
லாபத்தைச் செய்யு மணிவா யணிமயிலே."

"தொலைப்பரும் பொருவையும் பொருளையுந் தொடர்ந்துசொற்
சலிப்பது பொருளுறிற் சந்தா னம்மே."

எனக் கொள்க. (கரு)

156. உவமையின் பொது இலக்கணம்

பட்டாங் குரைத்தல் புகழ்தல் பழித்தலிற் பண்புபயன்
சிட்டார் தொழில்வடி வாதி யுவமை செறிந்துறுப்புத்
தட்டா தியலும் பொருளு முவமையுஞ் சார்பொதுவாய்
முட்டா மலேநிகழ் காரண மும்பெறு மொய்குழலே!

இதனுன் மேல் விரித்துக் கூறிய உவமையின் பொது இலக்கணந் தொகுத்துரைக்கின்றான்.

(இ-ள்.) ஒரு பொருளை ஒன்றோடுவமிக்கும் இடத்துப் பட்டாங்கால் உவமித்தலும், புகழ்தலால் உவமித்தலும், பழித்தலால்

* "இதனோடு தமிழ்த் தண்டியலங்காரத்தார் மதம் மாறுபடும். அவர் கூறிய உதாரணங் கோவையுவமையாமென மறுக்க," என்பது பழைய குறிப்பு.

உவமித்தலும் என மூன்று பகுதியாம். அப்படி உவமிக்குமிடத்துப் பண்பும், பயனும், தொழிலும், வடிவும் முதலாகிய காரணங்களால் உவமிக்கப்படும். அதற்குறுப்பாக உவமிக்கப்படும் பொருளும், உவமையும், இவ்விரண்டுக்கும் பொதுவாய் நின்ற பண்பு முதலாகிய காரணமும் என மூன்று வரும் (எ-று.)

வரலாறு:—

'ஆபோலும் ஆமா,' என்பது பட்டாங்குரைத்தலுவமை.

1 "மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் * பூவொப்ப தென்று."

இது புகழ்தலுவமை.

2 "அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துணர்த்த லால்."

இது பழித்தலுவமை. இதுவே தொழிலுவமையுமாம்.

3 "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்."

இது பண்புவமை.

4 "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு."

இது பயனுவமை.

5 "மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்."

இது வடிவுவமை.

'ஆதி' என்றதனால், நிறம் குணம் சுவை முதலியனவுங் கொள்க.'

157. பிறவாற்றன் ஆகும் உவமை அலங்காரத்தின் வகைகள்

ஒப்பி லுவமை யிழிவுயர் வோடு முயரிழிவு
துப்பில் சமமே தலைப்பெயல் கூற்றுத் தொகைவிரிவு
தப்பி லுறழ்ந்து வரலோ டொருவழி யோர்பொருண்மேற்
செப்புச் சினைமுத லோப்பு மறையென்று தேர்ந்தறியே.

* பூவொக்கு மென்று

1. திருக்குறள், 1112.
2. ,, 1076.
3. திருக்குறள், 1121.
4. ,, 215.
5. ,, 1142.

இதனால் உவமை அலங்காரத்தைப் பிறவாற்றினால் விரித்து விகற்பிப்பதாவதோர் கூற்றினைச் சொல்லுகின்றான்.

(இ-ள்.) ஒப்பிலுவமையும், இழிவுயர்வுப் புகழ்ச்சியுவமையும், உயர்விழிவுப் புகழ்ச்சியுவமையும், சமவுவமையும், தலைப்பெயன்மரபிற் சார்ந்துவருமுவமையும், கூற்றுவமையும், தொகையுவமையும், விரியுவமையும், உறழ்ந்துவரானுவமையும், ஒருவழியொப்பினொரு பொருண்மொழிதலுவமையும், சினைமுதலொப்புவமையும், ஒப்பு மறையுவமையும் என உவமையை இன்னும் பிறவாற்றான் விகற்பிப்பர் (எ-று.)

இப்பெயர்களிற் செய்யுட்சுவை நோக்கிக் கடை குறைந்தனவும் உரையிற்கோடல் என்னுந் தந்திரவுத்தியாற்கொள்க.

ஒப்பிலுவமை வருமாறு:—

"செங்குவளை போலா கருநிறத்த சேயரிக்க
ணங்குவளைக் காரிதழு மாங்கொவ்வா—செங்குவளைத்
தண்மலரே நாறுந் தமனியப்பூங் கோதாய்! நின்
கண்மலரே போலுமுன் கண்."

இது மற்றோருவமை இல்லாமையால், ஒப்பிலுவமையாயிற்று.

1"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து."

இது இழிந்தவுவமையின் உயர்ந்ததனைப் புகழ்ந்தமையால், இழிவுயர்புப்புகழ்ச்சியுவமையாயிற்று.

"மலையொக்கும் யானை."

என்பது உயர்ந்த உவமையை இழிந்ததனோடொப்பித்துப் புகழ்ந்தமையால், உயர்விழிவுப்புகழ்ச்சியாயிற்று.

"தந்தையை யொக்கும் மகன்."

என்பது சமவுவமையாயிற்று.

தலைப்பெயன்மரபிற் சார்ந்து வருமுவமை வருமாறு:—

"தாமருவு கின்றாரிப் பைங்கிளியார் தாமிருந்து
காமருபூந் தாதுதிர்க்குங் காரெருமை—தாமருகே
பொன்னுலைகற் போற்றோன்றும் பூம்புனனீர் நாடென்பே ம்
ரென்னுரைகற் பார்போ லிருந்து."

1. திருக்குறள், 667.

இதனுண் மற்றொன்று தலைப்பெய்யவுவமை உரைத்தமையா தலைப்பெயன்மரபிற் சார்ந்து வருமுவமையாயிற்று.

கூற்றுவமை வருமாறு:—

"செங்கோல னெங்கோன் கொடுந்தொழிலாற் றெவ்வேந்தர்
தங்கோ னிகலரியன் றுமெளிய—னெங்கோமா
னெவ்வகைய னேந்திய தொல்குணத்தா லேனோரு
மவ்வகைய ராமிவற்றி னால்."

'பவளவாய்' என்பது தொகையுவமை.

'பவளம் போன்ற செவ்வாய்' என்பது விரியுவமை.

"அன்ன நடைபயின்று யாயிழைநீ யன்னமு
நின்னடை யேபயின்று நின்னொக்கு—நின்னை
உழைக்கண்ணார் மான்பிணை யொப்பா ரிதென்ன
மழைக்கண்ணாய் நின்போன்ற மான்."

இஃது உறழ்ந்துவரலுவமை.

"எழிறரு ஞாயிற் றெழில்போ னிறைந்து
பொழிதருவான் றிங்களே போல—முழுவுலகுந்
தன்புகழி னானிறைந்த தார்வேந்தன் சேந்தன்பாட்
டென்புகழ்த லாவ தினி."

இஃது ஒருவழியோப்பின் ஒருபொருண் மொழிதலுவமை. இஃதெல்லாவிடத்தும் எல்லாக்காலத்தும் ஒவ்வாப் பொருளை ஓரிடமாயினும் ஒரு காலமாயினும் பற்றிச் சொல்ல வரும்.

"அன்னமே யென்ன வணிமயிலே யாமென்ன
மன்னு மடமான் பிணையென்ன—மின்னு
மிளவஞ்சி யென்ன வருமேயெங் கோமான்
வளவஞ்சி மன்னன் மகள்."

இதனுள் 'அன்னமேயென்ன அணிமயிலேயென்ன' என்று முதலும் சினையுமே உவமையும் பொருளுமாகப் புணர்ந்தமையான், முதல் சினையோப்புவமை.

"காலம் வரைந்திடுங் கைகோள் வழிச்செறி
மாலு முழங்கி வளர்தொழுகிச்—சாலவும்
பெய்கோவா யென்றும் பெருமய மாவினைத்தான்
கைபோவாய் வாழிநீ கார்."

இஃது ஒப்பு மறைவுவமை.

'தேர்ந்து' என்று மிகுத்துச் சொல்லியவதனால், எடுத்துக்காட்டுவமை, பன்மாறுவமை முதலியனவுங்கொள்க.

இனி ஒரு சாரார் வார்த்தை, அந்நியவுவமை, வழிநிலை,[1] உயர்பு, உருவகம், ஒற்றுமைமொழி முதலாயவுள்ளிட்டுப் பலவாகச் சொல்லுவர். அவையெல்லாம் மேலை விகற்பங்களிலே அகப்பட்டடங்கும் என்க.

அவர் சொல்லுமாறு:

"காலமு மிடனும் வாலிதிற் புகழ்வா
ராகிய தடுப்பனது வார்த்தை யாகும்."

என்று வார்த்தைக்கு இலக்கணங் கூறுவர்.

காலமாவது, பொழுதும் பருவமும் எனக்கொள்க.

இடமாவது, பாலை, குறிஞ்சி, நெய்தல், முல்லை, மருதம் என்னும் ஐந்து நிலமுமாம்.

"வேலை மடற்றாழை வெண்டோட் டிடைக்கிடந்து
மாலைத் துயின்ற மணிவண்டு—காலைத்
துளிநறவந் தாதெதிரத் தோன்றிற்றே காமர்த்
தெளிநிற வெங்கதிரோன் றேர்."

இது கால வார்த்தை.

"மழலைக் கனிவாய் மணிவண்டு வருடி மருங்கு பாராட்ட
வழலைக் கலந்த வரவிந்தத் தமளி சேர்ந்த விளவன்னங்
கழனிச் செந்நெற் கதிரென்னுங் கவரி வீசக் கண்படுக்கும்
பழனக் குவளை நீர்நாட பாவை வார்த்தை பகர்வுற்றாள்.'

இது இட வார்த்தை

"மதிபோன் மறுவில்லை வண்டா மரைபோற்
புதுவிரி புல்லிதழீண் டில்லை—யிதுவெல்லா
மெய்யுணர்வி னோர்தமக்கு மெய்தருமா லொக்குமே
மொய்யிணர்ப்பூங் கோதை முகம்."

"கற்பகம்போ லொக்கும் கணுவில்லைக் காவேரி
மற்புனல்போ லாமொருகால் வற்றாது—நற்புகழ்சேர்
நந்திகை மன்னு புலவோர் நவைதீரக்
கந்தகோன் வந்துதவுங் கை."

இவை யிரண்டும் அந்நியவுவமை நிலை.

1. சூளா. சுயம்வரச் சருக்கம், 195.

"இதுவெனி னிதுவிதற் கில்லென்று சொல்ல
லந்நிய வுவமை நிலையா கும்மே."

"தவளை யுகளுந் தடம்புனனீர் நாட
னிவளை வளைகரந்தா னென்றூற்—றவளத்
தனிக்காவல் வெண்குடையான் றண்ணளியு மஃதே
யினிக்காவ லாமோ வெமக்கு."

இஃது எழுத்து வழி நிலை.

"மாதரார் மாதர்நோக் குண்ட மடநெஞ்சங்
காதலார் காதன்மை காணாதே—யேதிலார்
வன்சொல்லான் வன்பொறை சொல்லிலெழின் மானோக்கி
யின்சொல்லா லின்புறுமோ வீங்கு."

இது மொழி வழிநிலை.

"வழிமொழி யணியே வகுக்குங் காலை
எழுத்துஞ் சொல்லு மிசைபல வாகி
வழிதொடர்ந் தொலிப்ப வகுத்த லாகும்."

"எழுத்தின் வழிநிலை யிசைதொடர்ந் திசைக்கு
மொழியின் வழிநிலை மொழிவழி நிலையே."

"விண்ணிடை யிழிந்து வந்த விண்ணவர் கிழவ னொப்பான்
மண்ணிடை யொல்லை யிங்கோர் பொருளென வருந்தி வந்த
தெண்ணிடை யுணரு மந்தா ரத்திடை கடுநே ரன்றூற்
கண்ணிடை யுமிழுஞ் செந்தீக் கடாக்களிற் றுழல்வ னென்றான்."

இஃது உயரக் கூறினமையால், உயர்பு ஆயிற்று.

"மன்ன ரொளிமுடிமேன் மாணிக்கங் கால்சாய்த்து
மின்னி விரிந்த வெயிற்கதிர்க—டுன்னி
யடிமலர்மேற் சென்றெறிப்ப நின்றா னவிரொண்
கொடிமலர்வேய் நீண்முடியெங் கோ."

இது மாணிக்கச் சிறப்புரைத்தமையால், அருங்கலவுயர்வு ஆயிற்று.

"இயன்ற செய்யுட் கிசைந்த நடையா
லுயரக் கூற லருங்கல மொழிதலென்
றுயர்பிரண் டென்ப வுயர்ந்தோர் தாமே."

"செந்தா மரையா [illegible]ந்தாடுஞ் செய்குன்ற
மந்தாரப் பூஞ்சோலை மங்கையர்க்குக்-கொந்தார்

1. சூளா. கல்யாணச் சருக்கம், 144

இலையாரந் தாதுறைக்கு மின்பொதியிற் கோமான்
மலையாரந் தாமலைத்த மார்பு."

இஃது மார்பினது தன்மையைச் செய்குன்றினாலும், மந்தாரச் சோலையாலும் காட்டினமையாகச் சொன்னமையால், உவமையுருவக மாயிற்று.

"பொருளின் மெய்ம்மை காட்டிப் பொருளை
யுருவி னுவலின துவமை யுருவகம்."

இனி ஒற்றுமை மொழி வருமாறு:

"அருங்கல முலகின் மிக்க வரசற்கே யுரிய வன்றிப்
பெருங்கல முடைய ரேனும் பிறர்க்கவை செய்க லாகா
விருங்கலி முழவுத் தோளா யெரிமணிப் பலகை மேலோர்
நெருங்கொலி யுஞ்சுவங் கண்டு நின்னையா னினைந்து வந்தேன்."[1]

இது அரசற்குரிமை கூறும் பொருண்மேற்று ஆதலால், ஒற்றுமை மொழிதல் ஆயிற்று.

158, 159. உருவக அணியின் வகை

தெற்றுத் தொகையவ் வியமேதுப் பண்பு விரியுவமை
மற்றுச் சிலேடை சகல மியைபு வரப்புணர்ந்த
முற்றுத் தொகைவிரி தன்னோ டவயவி முந்துறுப்புப்
பெற்றுப் பயிறத்து வாபனந் தன்னோ டியைபிலியே.

தாக்குஞ் சமாதான மேவிதி ரேகந் தடைமொழியும்
ஊக்கு முருவகத் தோடொன் றுருவக மேகாங்கமென்
றாக்கு முருவக மைந்நான்கொன் றும்பிற வந்தனவும்
நீக்கு வனவிட்டுத் தொல்லோ ருரைப்படி நேர்ந்தறியே.

(இ-ள்.) தெற்றுருவகம், தொகையுருவகம், அவ்வியவுருவகம், ஏதுருவகம், பண்புருவகம், விரியுருவகம், உவமையுருவகம், சிலேடையுருவகம், சகலவுருவகம், இயைபுருவகம், முற்றுருவகம், தொகைவிரியுருவகம், அவயவியுருவகம், உறுப்புருவகம், தத்துவாபனவுருவகம், இயைபிலியுருவகம், சமாதானவுருவகம், விதிரேகவுருவகம், தடைமொழியுருவகம், உருவகவுருவகம், ஏகாங்கவுருவகம் என இருபத்தோர் உருவகமுள. மற்றும் வருவனவும் அறிந்துகொள்க (எ-று.)

---

1. சூளா. கல்யாணச் சருக்கம், 189.

வரலாறு:—

"தாமரையைக் குவியாது தாட்குமுத மலர்த்தா—
தீமைசெயு [என்னுயிர்க்குன் றிருமுகமாந் திங்களே."

இது சந்திரன் தொழிலைத் தெற்றினமையால், தெற்றுருவகம்
இதனை விரோத உருவகமெனினும் அமையும்.

"எஞ்சிய பண்பி லியையினு மொழிதொழில்
செஞ்சொலாற் கிளப்பது தெற்றுரு வகமே."

எனக் கொள்க.

1 "பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்."

இது பிறவி என்னுநின்ற பெருங்கடல் என்னுஞ் சொற்றொக்கு
நின்றமையால், தொகையுருவகம்.

"மிக்க வுவமை விரியா துரையிற்
றொக்கு நிற்பது தொகையுரு வகமே."

எனக் கொள்க.

"காலன் மதத்தாற் சிவந்தகபோ லத்தழகு
கோலிக் குனித்த புருவக் கொடியிடையாய்!
சீலமலிநின் முகமென்னுந் திங்களா
னுலகுங் காம னலியக் கெடுக்கலுற்றான்."

இது ஒவ்வாக் கிரியையைக் கூறினமையால், அவ்வியவுருவகம்.

"கூறிய பொருள்வயிற் கொளுத்திய கிரியை
வேறா யிருப்பதவ் வியவுரு வகமே."

எனக் கொள்க.

"ஆழ முடைமையினு வாழியா மந்தரத்து
வாழ நிமிர்தலான் மந்தரமா—மேழுலகுந்
தந்தளிக்கும் வண்ணத்தாற் றயாஞ்செந் தாமரைக்கட்
பைந்தெரியன் மாயோன் பதி."

இது ஏது காட்டி உருவகஞ் சொன்னமையால், ஏதுருவகம்.

"மரபுடைப் பொருளைமற் றதுவா லதுவெனு
முறைபெறி லேதுரு வகமா மென்ப."

எனக் கொள்க.

---

1 திருக்குறள், 10.

"தலையிலமர் கங்கைத் துகிலுடையன் றங்கைச்
சிலையினமர் செங்கண்மால் பாக—னிலையினமர்
தானவரைக் கொன்று விழவுகெடுத் தான்றனியே
வானவரெல் லாமதிக்க வந்து."

இது பண்புப் பதத்தால் பொருளேற்றமையால், பண்புருவகம்.

"ஒண்பொருட் பெற்றி யுற்றதற் குரிய
பண்பொடு கிளப்பது பண்புரு வகமே."

எனக் கொள்க.

[1] "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு."

இது விரியுருவகம்.

"கருதிய பொருளைக் கலையிற் றொகாமல்
விரியத் தொடுப்பது விரியுரு வகமே."

எனக் கொள்க.

"மதர்த்துச் சிவந்தநின் வாண்முகத் திங்கட்
பதத்திலெழுஞ் செம்மைவளம் பார்நின்—வதைத்தெனுடல்
வெந்துமத ராக மிகுக்க வொளிமாறுய்த்
தந்து மிகைத்தியலுந் தான்."

இது உவமையே யுருவகமாக வந்தமையால், உவமையுருவகம்.

"ஒண்டரு பொருளை யுருவக மாக்குத
லுண்டெனி னுவமை யுருவக மாகும்."

எனக் கொள்க.

"சோதி மேவிய கரத்தொடு தோன்றிய
மாத ராயினோர் வாண்முகத் திங்களே."

இது சிலேடையுருவகம்.

"நயம்படு சிறப்பி னவைநீ ரிருபொருட்
கியம்புதல் சிலேடை யெனுமுரு வகமே."

எனக் கொள்க.

"பெண்ணைப் பறவைக் குரன்முழக் காய்ப்பிறை வாளுருவி
வண்ணக் கருங்கடல் வட்டத்தை யேந்தி மதிபுலியூ
ரண்ணற் சிவன்கொன்றை யந்தார் நினைந்தவெ னாருயிரை
யுண்ணத் திரிதரு மந்தியென் னுநின்ற யோகினியே."

இது சகல உருவகம்.

---

1 திருக்குறள், 358.

ஒருபொருட் கேற வுருவகம் பலமொழி
தருமெனி லுருவகஞ் சகல மாகும்.''

எனக் கொள்க.

1. ''காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.''

இது பொருந்து மென்பதனால், இயைபுருவகம்.

''அசைவில் கருவி யவற்றாற் றொழிலி
னிசையு மென்ப தியைபுரு வகமே''

எனக் கொள்க. இதுவே, 'காமக் கடும்புனல்' என்னுந் தொகை யுருவகமும், 'நாணொடு நல்லாண்மை யென்னும் புணை' என்னும் விரியுருவகமும் வந்தமையால், தொகைவிரியுருவகம் ஆயிற்று.

''தொகையும் விரியுந் தொக்குடன் கிளப்பது
தொகைவிரி யென்று சொல்லினர் புலவர்''

எனக் கொள்க.

''விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல்—பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து''

இது முற்றுருவகம்.

''சொற்ற வவயவ வவயவி யிடம்பிற
முற்ற வுரைப்பது முற்றுரு வகமே''

எனக் கொள்க.

''மாதராய் நின்றன் முகக்கமலத் துள்வளைந்த
கோதில் புருவமுங் கூனுதலுங்—தீதி
லுருக்குறி யொப்புமீன் போடியிமைக் குஞ்சே
யரிக்கண்ணு நோய்செய் தன.''

இஃது உறுப்புக்களை வேறுபடுத்து உருவகஞ் செய்யாது அவ்வுறுப்புக்களையுடைய அவயவியை வேறு சொன்னமையால், அவயவியுருவகம் ஆயிற்று.

''இயையு முறுப்பொழித் துறுப்புடைப் பொருளை
யமைய வுரைத்த வவயவி யுருவகம்.''

எனக் கொள்க.

1. திருக்குறள், 1134.

"புருவச் சிலைகுனித்துக் கண்ணம்பென் னுள்ள
முருவத் துரந்தா ரொருவ—ரருவி
பொருங்கற் சிலம்பிற் புனையல்குற் றேர்மேன்
மருங்குற் கொடிநுடங்க வந்து."

இது அவயவியைச் சொல்லாதே அதனுறுப்புக்களை வேறு படுத்து உருவகஞ் செய்தமையான், உறுப்புருவகம் ஆயிற்று.

"அவயவி யொழிய வவயவந் தன்னை
யுருவகஞ் செய்வ துறுப்புரு வகமே."

எனக் கொள்க.

"பொங்களக மல்ல புயலே யிவையிவையுங்
கொங்கை யிணையல்ல கோங்கரும்பு—மங்கைநின்
மையரிக்க ணல்ல மதர்வண் டிவையிவையுங்
கையல்ல காந்தண் மலர்."

இது உண்மைப் பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளை யுடன்பட்டமையால் தத்துவாபன வுருவகம்.

"உண்மைப் பொருண்மறுத் தொப்புமைப் பொருண்மேற்
றன்மைசெ யுருவகந் தத்துவா பனமே."

எனக் கொள்க.

"தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத்—தான
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு."

இது பலபொருளுந் தம்மில் இயையாமல் உருவகஞ் செய்தமையால், இயைபிலியுருவகம்.

"பலபொருள் இயையாப் பண்பின் வருவ
தியைபிலி யுருவக மென்மனார் புலவர்."

எனக் கொள்க.

"கார்குழை சேர்ந்த கதிர்வாண் மதிமுகமு
மேர்கெழு தென்றலு மென்னிடையே—சேரத்
துயர்விளைப்ப வாயினுற் றீவினையால் வந்த
மயனினைப்ப தாமளவோ மற்று."

இது 'எல்லார்க்கும் இனிய நின் முகமும் இளந்தென்றலும் எனக்குத் துயர் விளைப்ப' என்று கூறிப் பின்னர்ச் சமாதானங் கற்பித்தமையால், சமாதானவுருவகம்.

"கைகாந்தள் வாய்குமுதங் கண்ணெய்தல் காரிகையே
மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கென்—றிவ்வனைத்தும்
வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன்
றின்மையா லன்றோ விவர்க்கு."

இதுவும் அது.

"சிறிய வுருவகஞ் செப்பிற் பயன்றரக்
காரணங் கற்பித்தல் சமாதான மாகும்."

எனக் கொள்க.

"வையம் புரக்குமான் மன்னவநின் கையிரண்டும்
பொய்யின்றி வானீர் பொழிகாருங்—கையா
மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கு
மொருகார் பருவ முடைத்து."

இது உருவகங் கூறிப் பின் வேற்றுமையைச் சொல்லுதலால், விதிரேகவுருவகம்.

"ஏற்றிய பொருள்க ளிரண்டினு மியல்பாம்
வேற்றுமை கூறிலது விதிரே கம்மே."

எனக் கொள்க.

"மாதரா யுன்றனது வாண்முகமாந் திங்களுக்குந்
தீதிலா மானின் றிருவிழிக்கு—மோதிலிருங்
காதலு ளாரைக் கடுந்துயரஞ் செய்வதே
பாதி யமையும் பரிசு."

இது தனக்குத் துயர் செய்தல் உட்கொண்டு நின்று சந்திரனும் மான்விழியும் தங்குணத்தைத் தடுத்த தன்மையால், தடைமொழியுருவகம்.

"இணங்கிய பொருள்க ளியையுங் குணத்தை
விளங்க விளம்புந் தடைமொழி யுருவகம்."

எனக் கொள்க.

"அத்தகு நின்றன் முககமல வாளரங்கி
லொத்தபுரு வக்கொடிமுன் னேங்குமே—வித்தகஞ்சே
ராடல்புரிந் தாளென் றுரைத்தா னவனியெல்லாங்
கோடல்புரிந் தானுக்கந்தைக் கோ."

இது உருவகத்தை உருவகஞ் செய்தமையால், உருவகவுருவகம்.

"உருவகந் தன்னை யுருவகஞ் செய்வ
துருவக வுருவக மென்மனார் புலவர்."

எனக் கொள்க.

"காலன் மதத்தாற் சிவந்துகயல் போன்றவிழி
நீலோற் பலமு முடையநின்—கோலமுகத்
தாடவர்கள் சால வருந்துயர மெய்துவரே
யூடலெளி தன்றென் றுணர்ந்து."

இது பல வுறுப்புக்களுள்ளும் ஒன்றையே உருவகஞ்செய்தமையால், ஏகாங்கவுருவகம்.

"ஒன்றி னுறுப்புப் பலவற்றி னுள்ளு
மொன்றினை யுருவக முரைப்ப தேகாங்கம்."

எனக் கொள்க.

"பிற வந்தனவு நேர்ந்தறியே."

என்றமையால்,

1"இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடு மாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில்."

எனக் குயில் முழவாகவும் தேன் யாழாகவும் பொழில் அரங்கமாகவும் உருவகஞ் செய்து, இளவேனில் என்னுங் கூத்தனென்று எடுத்த உருவகத்தை முற்றுவியாது வரும் ஏகதேசவுருவக முதலியனவுங் கொள்க. (கசு)

160. பிற பொருள் வைப்பணியின் வகை

தேரும் பொதுவே சிறப்பு நிலையே சிலேடையன்றி
யேரும் முரணியை பொடியை பின்மை யியைபுதம்மிற்
பேரும் விரவிய லோநற் பிறபொருள் வைப்புத்தண்டி
சீரும் பொலிவு மலியுந் தன்னூலினிற் செப்பியதே.

(இ-ள்.) * பொதுப் பிறபொருள் வைப்பும், சிறப்பு நிலைப் பிற பொருள் வைப்பும், சிலேடைப் பிறபொருள் வைப்பும், முரண் பிற

---

1. யாப்பரு, வி; மேற்கோள்.

* "பொதுப்பிற பொருள் வைப்பையும், சிறப்புநிலைப் பிறபொருள் வைப்பையும் முறையே முழுதுஞ் சேறல் என்றும் ஒரு வழிச் சேறல் என்றும் பெயரிட்டு வழங்குவாரு முளர்." என்பது பழைய குறிப்பு.

பொருள் வைப்பும், இயைபுப் பிறபொருள் வைப்பும், இயைபிலிப் பிறபொருள் வைப்பும், விரவியற் பிறபொருள் வைப்பும் என விகற்பித்தார் தண்டியார் (எ-று.)

வரலாறு:—

"விண்ணவரின் மிக்கு விளங்கொளியான் மேம்பட்டு
மண்ணவர்க்குக் கண்ணாய வான்கதிர்கள்—கண்ணெதிரே
பந்தித் திருளடையும் பாரிலென்றா லானவினைப்
பந்தத்தை யூரவர்கட் பார்."

இது எல்லார்க்கும் பொதுவாதலால், பொதுப் பிற பொருள் வைப்பு.

"எண்ணும் பயன்றூக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்குந்—தண்ணறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய்! புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றோ கடன்."

இது பொதுவின்றிப் புகழாளரையே குறித்தமையால், சிறப்பு நிலைப்பிற பொருள் வைப்பு.

"எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் பாட முறுவலிக்கு—முற்ற
முடியப் பரவை முழங்குலகத் தென்றுங்
கொடியர்க்கு முண்டோர் குணம்."

இது சிலேடைப் பொருண்மேல் வந்தமையால், சிலேடைப் பிற பொருள் வைப்பு.

"காதன் மதியங் களங்கமுடைத் தாலும்
பூதலத்தை யெல்லாம் பொலிவிக்கு—மோதுசில
குற்ற முடையா ரெனினுங் குவலயத்து
நற்றகையார் நல்லரென்றே நாடு."

"வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றட்கொளினும்
பெய்யு மழைமுகிலைப் பேணுவரால்—வையத்
திருள்பொழியுங் குற்றமிருப்பினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்."

இவை தெற்றுங் குணமுடையவாதலால், முரண் பிற பொருள் வைப்பு.

"அத்தகு திங்கண் முகமயி மானனு
மெத்தனையும் வான்றுயர மெய்துவிக்கு—மொய்த்தவர்க்

செய்தாது தானதுபோ னல்லோ ரியாவர்க்கும்
வெய்தாவ தாகாது வேறு.

இது இயையும் இயைபிலியும் வந்தமையால், விரவியற் பிற பொருள் வைப்பு.

'ஆர வடமு மதிசீத சந்தனமு
மீர நிலவு மெரிவிரியும்—பாரிற்
றுதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்
விதிவகையால் வேறு படும்.'

இது பொருந்தாவியற்கை சொல்லுதலால், கூடாவியற்கைப் பிற பொருள் வைப்பு.

'பொய்யுரையா நண்பர் புகுந்த நெறிநோக்கிக்
கைவளைசோர்ந் தாவி கரைந்துகுவார்—மெய்வெதுப்புப்
பூத்தமையிற் காந்தர் பொலங்கிரியை நீத்தகன்றார்
நீத்தகையார்க் கஃதே செயல்.'

இது கூடுவானைக் கூடுவதாக மொழிந்தமையால், கூடுமியற்கைப் பிற பொருள் வைப்பு.

'தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங்க டீர்ந்தா—னுலகிற்
றணிமுதன்மை பூண்டோர்க்கோர் வேண்டுவரேற் றப்பா
வினையும் விபரீத மாம்.'

இது விபரீதப்பட வந்தமையால், விபரீதப் பிற பொருள் வைப்பாயிற்று

'கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைகடலுங்
கூவித் தமியோரைக் கொல்லுமாற்—பாவாய்
பெரியோரும் பேணாது செய்வரோ தம்மிற்
சிறியார் பிறர்க்கியற்றுந் தீங்கு.'

இது கூடாததனையுங் கூடுவதனையுங் கூடச்சொன்னமையால், இருமை இயற்கைப் பிற பொருள் வைப்பு.

161, 162. தடைமொழியணியின் வகை

ஆசி யனுதரங் காரணங் காரிய மையமேதுப்
பேசு முபாயஞ் சிலேடை முயற்சி பிறபொருள்வைப்(பு)
ஏசில் கருணைநட் போடு கரும மிகழ்ச்சிவன்சொல்
தேசி னிரக்கந் தலைமை யனுசயஞ் செற்றமென்னே.

வெப்பந் தருமம் பரவசத் தோடு வியன்குணமற்(று)
ஒப்புப் பொருளின் தடைமொழி தன்னை உரைத்துணர்ந்து
செப்ப முடையவர் காலங்கண் மூன்றிற் றிருத்திப்பின்னும்
எப்பண்பு கொண்ட விகற்பம் வரினு மியற்றுவரே.

(இ-ள்.) ஆசித் தடைமொழியும், அனுதாரத் தடைமொழியும், காரணத் தடைமொழியும், காரியத் தடைமொழியும், ஐயத் தடைமொழியும், ஏதுத் தடைமொழியும், உபாயத் தடைமொழியும், சிலேடைத் தடைமொழியும், முயற்சித் தடைமொழியும், பிற பொருள் வைப்புத் தடைமொழியும், கருணைத் தடைமொழியும், நட்புத் தடைமொழியும், கருமத் தடைமொழியும், இகழ்ச்சித் தடைமொழியும், வன்சொல் தடைமொழியும், இரக்கத் தடைமொழியும், தலைமைத் தடைமொழியும், அனுசயத் தடைமொழியும், செற்றத் தடைமொழியும், வெப்பத் தடைமொழியும், தருமத் தடைமொழியும், பரவசத் தடைமொழியும், குணத் தடைமொழியும், உடன்பாட்டுத் தடைமொழியும், பொருள் தடைமொழியும் என விகற்பிக்கப்படாநின்ற தடைமொழியலங்காரத்தை மூன்று காலத்திளோடும் பொருந்துவித்துக் கூறுவர். இது நெறியாகப் பிறவாற் றுன் வந்தனவும் அமைத்துக்கொள்வர் (எ-று.)

வரலாறு:—

'ஏகுக வன்ப ரெளிதாகச் சென்னெறிக்கண்
யானு மினிதிருக்க வேண்டு.'

இது ஆசி சொன்னமையால், ஆசித் தடைமொழி.

'ஆசை பொருட்கில்லை யன்பர்க்கின் றென்பக்க
லேகுக நிற்க வினி.'

இது அனுதாரத் தடைமொழி.

'கண்விற் புருவத்தா னேர்தர நீசேறி
என்னும் பிறரிதறிந் தென்னுரும்—பண்ணிய
குற்றமொன் றென்பக்க லின்மையாற் கூர்ந்திரு
மச்சஞ் சிறிதுமுள தன்று.'

இது அச்சத்திற்குக் காரணமாகத் தன்பாற் குற்றமின்மை கூறினமையால், காரணத் தடைமொழி.

'அன்ப ரகன்று ரவர்குறித்த கார்ப்பருவம்
வந்த துயிர்த்திலண் மாது.'

இது சாகைக்குக் காரணங்கூறி அதன் காரியமாய் உள்ள சாகையை விலக்கியமையால், காரியத் தடைமொழியாயிற்று.

'மின்னே பொழிலின் விளையாடு மிவ்வுருவம்
பொன்னேவென் னுஞ்சுணங்கிற் பூங்கொடியோ—வென்னே
திசையுலவுங் கண்ணுந் திரண்முலையுந் தோளின்
மிசையிருளுந் தாங்குவதோ மின்.'

இது ஐயுற்றதனை விலக்குதலால், ஐயத் தடைமொழி.

'எம்மி திதுவென் றிரப்பவரிற் கொள்ளுதலாற்
செம்மைமலி வள்ளலென்று செப்பத் தகாய்நீயே.'

இது ஏதுத் தடைமொழி.

'காலனெனைக் காணு தொழியும் வகையருளி
ஞாலத் தகலுதியேல் யானதற் காற்றுவனே.'

இது உபாயத் தடைமொழி.

'மன்னுதனுச் சோதி மகரமீ னஞ்செவ்வாய்
பன்னுமிவற் றோடொன்றிப் பார்திகழ்ந்த—நின்னுடைய
ஆனமிலா வாண்முகமா மொண்மதியொன் றுண்டாகி
லேனைமதி தன்னுலிங் கென்.

இது சந்திரனோடொக்கச் சிலேடை செய்து அதனை மறுத்தலால், சிலேடைத் தடைமொழி.

'ஏகென்று சொல்ல முயலுவ தேகலென்
றாகுமென் வாய்சொல் வது.'

இது முயற்சித் தடைமொழி.

'நூலெலாங் கற்றவனே யானுனு நோக்கரு
வாலியசின் காதலே மாவியப்புச்—சாலவு
மாராது மால்கடலுக் காறெலா மெந்நாளுந்
தீராது பாய்ந்தாலுஞ் சென்று.'

இது பிற பொருள் வைப்புத் தடைமொழி

'இரியன் மகளி ரிலஞ்சிமலி யீன்ற
வரிவிரவு செங்காற் குழவி—யருகிருந்தங்
கூமன்பா ராட்ட வுறங்குமே செம்பியன்ற
னும்பா ராட்டாதார் நாடு.'

இது கருணைத் தடைமொழி.

'ஏருக வேகுதியே லோரா வுரைபிறக்குங்
காலத்தின் முன்னே கடிது.'

இஃது உறுதி சொன்னமையால், நட்புத்தடைமொழி.

கருமத்தடைமொழியாவது, ஒரு பொருளின் பக்கத்துள்ள கருமத்தைத் தடையாக்குதல். கருமமாவது ஆதேயம்; கருமியாவது ஆதாரம்.

'குடைநின் றதுசெம்மை கோலொடு சென்றது கோமனுவி
னடைநின் றதுகலி ஞாலங் கடந்தது நன்மையன்றி
யிடைநின்ற தொன்றுண் டியாதெனி னிராசகண் டீரவநின்
றொடைநின்ற தார்புனை வார்மட வார்படுந் துன்புறவே.'

இவ்விடத்துக் கருமியாயினானரசன்; கருமமாயினது தீமை. அதனைத் தடுத்தமையால், கருமத் தடைமொழியாயிற்று.

'ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மே
லாசை சிறிது மடைகிலமாற்—றேசு
வழுவா நெறியின் வரும்பொருண்மேல் வள்ளா
லெழுவா யொழிவா யினி.'

இது ஏதுவை இகழ்ந்து விலக்கினமையால், இகழ்ச்சித் தடைமொழியாயிற்று.

'மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலார் நாட்டந் தருகினக்கு—நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாணுளைக்
கொள்ள வுழலுமாங் கூற்று.'

இது வலிதாகச் சொன்னமையால் வன்சொல் தடைமொழி.

'ஊச றொழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும்
வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே—தேசு
பொழிலிழக்கு நாளையே பூங்குழலி நீங்க
வெழிலிழக்கு மந்தோ விதண்.'

இது இரக்கந் தோன்றத் தடுத்தமையால், இரக்கத் தடைமொழி.

'என்னுயிர்க்குத் தீங்கில்லை யின்பந் தரும்வழியும்
பொன்னும் பெறலாமங் கானும் போக்கொழியே.'

இது தலைமைத் தடைமொழி.

'செய்த தவமில்லைத் தேடிய மாடில்லை
யெய்திய நூலொ டியைபில்லை—மெய்யன்பு
மேயநண்பர் தாமில்லை மேதினியின் மெல்லவே
போயிற் றிளமை புலர்ந்து.'

இது அனுசயத் தடைமொழி. இதனைக் கையறவு எனினும் அமையும்.

'ஏகுவ னியானென் றெடுத்துரைத்த நீயினிப்
போகிலென் போகாக்கா லென்.'

இது செற்றத் தடைமொழி.

'தேடித் தந்திட மாடிற் போக்குற
நாடித் திசைமிசை யோடுநம் மிறையே.'

இது வெப்பத் தடைமொழி.

'பைங்குழலும் பாரப் பணைமுலையு முண்மையா
லிங்கிவளுக் குண்டோ விடை.'

இது தருமத் தடைமொழி; தருமமாவது ஆதேயம். இவ்விடத்துத் தருமமாய் உண்மைக்கு ஆதாரமாய் நின்ற இடையைத் தடுத்தமையால், தருமத் தடைமொழி.

'செல்க திருவுளமேல் யானறியேன் நேரங்கமட
மல்லமது தாங்கு மதர்விழியின்—மெல்லிமை
நோக்கு விலங்குமேல் நோமிவடன் காதலைநீ
போக்கி யகல்வாய் பொருட்கு.'

இது தன் வசமல்லாமையைக் கூறி விலக்கினமையால், பரவசத் தடைமொழி.

'மாதர் துவரிதழ்வாய் மைந்த ருயிர்கவருஞ்
சீத முறுவல் செயலழிக்கு—மீதுலவா
நீண்ட மதர்விழிக ணெஞ்சங் கிழிக்குலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு.'

இது குணத்தை விலக்குதலால், குணத் தடைமொழி.

'அப்போ தடுப்ப தறியே னருள்செய்த
திப்போ திவளுமிசைகின் றுள்—தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
யிருளோ நிலவோ வெழும்.'

இது உடன்பட்டாற் போலத் தடுத்தமையால், உடன்பாட்டுத் தடைமொழி.

'கண்ணு மனமுங் கவர்ந்தவ ளாடிடமென்
றெண்ண வருளு மடையாளந்—தண்ணிழலின்
சுற்றெல்லை கொண்டெசுழல் சோதித் திரளல்லான்
மற்றில்லை காணும் வடிவு.'

இது பொருள் தோன்றத் தடுத்தமையால், பொருள் தடைமொழி.

'பின்னும் எப்பண்பு கொண்ட விகற்பம்' என்றமையால்,

'செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க—வெல்லு
மடற்றேர் விடலா யகன்றுறையி னுங்கோ
ரிடத்தே பிறக்க வியாம்.'

என வரும் வாழ்த்துத் தடைமொழியும்,

'விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெங்
கிளையமுகை கேட்பதற்கு முன்னம்—விளைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்
கிடையூறு தோன்று முனக்கு.'

என வரும் துணைச்செயற்றடைமொழியும் முதலாயின கொள்க.

'பாலன் றனதுருவாய்ப் பாருலகுண் டாலிலையின்
மேலன்று நீதுயின்றாய் மெய்யென்ப—ராலன்று
வேலைசேர் நீரதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்.'

இது இறந்தகாலத் தடைமொழி.

1 'நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.'

இது நிகழ்காலத் தடைமொழி.

'முல்லைக் கொடிநுடங்க மொய்காந்தள் கையெடுப்ப
மெல்ல வினவண்டு வீழ்ந்திரங்க—மெல்லியர்மேற்
றீவாய் செவ்வாடை சேர்ந்தாற் செயலறியேன்
போவா யொழிவாய் பொருட்டு.'

இது எதிர்காலத் தடைமொழி. [பிறவும் அன்ன.]

1. திருக்குறள், 304.

163. விதிரேக அணியின் வகை

ஒருமை யிருமை சிலேடை யுயர்பினே டேதுவன்றிப்
பெருமை மலிசாதி யோப்பாம் விதிரேகம் பேசுதோழில்
அருமை மலிகுணஞ் சாதியென் றருமவ் வேதுவுமற்(று)
இருமை நிகழ்னு பகங்கா ரகமா மிலங்கிழையே!

(இ-ள்) ஒருமை விதிரேகம், இருமை விதிரேகம், சிலேடை விதிரேகம், உயர்பு விதிரேகம், ஏது விதிரேகம், சாதி விதிரேகம், ஒப்பு விதிரேகம் என விதிரேகத்தைக் கூறுபடுப்பர். அது தொழில், குணம், சாதி பற்றிக் கூற்றினானும் குறிப்பினானும் வரும். ஏது விதிரேகத்தை ஞாபக ஏதுவும், காரக ஏதுவும் எனக் கூறுபடுப்பர் (எ-று.)

'அனைத்துலகுஞ் சேய்போ யருநிதியங் கைக்கொண்
டினைத்தளவே யென்றற் கரிதாய்ப்—பனிக்கடன்
மன்னவனின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னு மிதுவொன்றே வேறு.'

இது ஒன்றற்கொரு பேதஞ் சொன்னமையால், ஒருமை விதிரேகம்.

* 'வேங்கைவன நாடன் விசயன்வா டைக்கதிப
னோங்கு புகழுதயா தித்தனுக்குத்-தாங்குகட
னேராமென் றாலு நிறத்தா லவன்செய்யன்
காரார் நிறமக் கடல்.'

---

* "ஒருமை விதிரேகமும், ஒன்றின் எதிர்நிலைப் பொருளை மற்றைய தன்பாற்படுத்து இரண்டிற்கும் இரண்டு பேதந் தருமாற்றான் ஈண் டெடுத்துக் காட்டிய இருமை விதிரேகமும் ஒருமை விதிரேகம் எனக் கொண்டு,

'ஓங்க விடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுண்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.'

'சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்று—ளொன்று
மலரிவருங் கூந்தலார் மான்மதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.'

என வருவனவற்றையே இருமை விதிரேகம் என்பாருமுளர்," என்பது பழைய குறிப்பு.

இதனுள் இரண்டிக்கும் இரண்டு பேதஞ் சொன்னமையால், இருமை விதிரேகம்.

'ஏறடர்த்து வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு
மாறடர்த்த வாழி வலவனுக்—காறெழுதற்
கெஞ்சினு ரில்லெனினு மாய னிகனெடுமால்
வஞ்சியா னீர்நாட்டார் மன்.'

இது சிலேடை விதிரேகம்.

'மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ளொலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.'

இது உயர்பு விதிரேகம்.

'வன்மை யுயர்பு நிறைப்பேறு வான்புக
ழென்னு மியையிலுண் டாகிலு—மன்னவரைக்
காசினிமைக் குழ்ந்துங் கடனேர மாட்டாது
மாசொன்ற லாலலையின் வாய்.'

இது செயற்கை ஏதுச் சொன்னமையால், காரகவேது விதிரேகம்.

'உளதென் றனங்க ளுடலைத் திருகில்
வெளியன்றி வேறு ரிடை.'

இது இயற்கை ஏதுச்சொன்னமையால், ஞாபகவேது விதிரேகம்.

'கல்லாதார் வாயிற் கடுஞ்சொல்லாங் காரரவு
நல்லாரைச் சென்று நனிகடிக்குஞ்—சொல்லாவோர்
மந்திரமு மில்லை மகிதலத்தே மற்றுமொரு
தந்திரமு மில்லையதன் சால்பு.'

இது பரம்பாக உருவகஞ்செய்தும் அதன் சாதியினுள்ள குணத்தை வேறுப்படுத்தலால், சாதி விதிரேகம்.

'மாதராய் நின்வதனந் தாமரையென் றிவ்விரண்டன்
மேதகு பேதம் விரித்துரைப்பிற்—கோதிலா
நின்கண் ணதுநின்ற நின்முக நீடுபுனற்
றன்கண் ணதுகமலந் தான்.'

இது ஒப்பு விதிரேகம்.

பிறவும் அன்ன. இவையனைத்துங் கூற்றினானுங் குறிப்பினானும் வருமாறு உய்த்துணர்ந்துகொள்க.

---

1. யாப்ப-காரிகை.

164. விபாவனை, சுருக்கு என்னும் அலங்காரங்கள்

பாவும் விபாவனை பல்லோ ரறியும் பரிசொழித்து
மேவு மியல்பு குறிப்பேது நீக்கி விளைவுரையாம்;
வீவில் கவிதான் கருது பொருளை வெளிப்படுத்தற்
கோவிய மேசுருக் காமறை சொல்லி னுரைத்திடினே.

(இ-ள்) நிறுத்த முறையானே விபாவனை என்னும் அலங்காரமும் சுருக்கு என்னும் அலங்காரமுங் கூறுகின்றான். விபாவனையாவது, ஒன்றின் விளைவு உரைக்குங்காற் பலரும் அறிய நிகழுங் காரணம் ஒழித்துப் பிறிதொரு காரணங் கற்பிப்பது. அது குறிப்பு விபாவனையும், இயல்பு விபாவனையும், காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்தும் விபாவனையும் எனவரும். *சுருக்கு என்னும் அலங்காரம் கவி தன்னாற் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றினைச் சொல்வது (எ-று.)

'வீவில்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், அது அடையும் பொருளும் அயல்பட மொழிதலும், அடை பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதலும், அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதலும், அடை விபரீதப்பட்டுப் பொருள் வேறுபட மொழிதலும் என்று நாலு வகையான் வரும்.

வரலாறு:—

'தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும்—வாயிலா
ரின்றிச் சிலரூட நீர்ந்தா ரிகலின்றிக்
கன்றிச் சிலைவளைக்குங் கார்.'

இஃது இயல்பு விபாவனை.

'கடையாமே கூர்த்த கருநெடுங்கண் டேடிப்
படையாமே யேய்ந்தனம் பாவாய்—கடைஞெமிரக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
ரூட்டாமே சேந்த வடி.'

இது குறிப்பு விபாவனை.

'பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலோங்குந்
தீட்டாத வம்பு சிதறுமா—வீட்டமாய்க்

* "இதனைப் பிறர் ஒட்டு எனவும், தொகைமொழி எனவும் மொழிர்," என்பது பழைய குறிப்பு.

காணாத கண்பரப்புந் தோகை கடும்பழிக்கு
நாணா தயர்த்தார் நமர்.'

இது காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்தும் விபாவனை.
இன்னும்,

'காரண மின்றி மலயா நிலங்கன லு
மீர மதிவெதும்பற் கென்னிமித்தங்—காரிகையார்க்
கியாமே தளர வியல்பாக நீண்டனகண்
தாமே திரண்ட தனம்.'

எனவும்,

'பாயாத வேங்கை மலரப் படுமதமா
பூவாத புண்டரிக மென்றெண்ணி—மேவிப்
பிடிதழுவி நின்றுறங்குங் கானிற் பிழையாம்
வடிதழுவும் வேலோய் வரல்.'

எனவும் வருவனவற்றையும் விபாவனையின்பாற் படுத்துக்கொள்க.

'வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிற்
குறைபடுதேன் வேட்குங் குறுகு—நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதொரு
வண்டா மரைபிரிந்த வண்டு.'

இஃது அடையும் பொருளும் அயல்பட மொழிதல்.

'உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக்—கண்ணெகிழ்ந்து
நீங்க வரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கிங்
கோங்கிய சோலை யுளது.'

இது வள்ளலைக் கொள்ள நின்று அடை பொதுவாய்ப் பொருள் வேறுபட வந்தது.

'தண்ணளிசேர்ந் தின்சொன் மருவுந் தகைமைத்தா
யெண்ணிய வெப்பொருளு மெந்நாளு—மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
தந்தது முன்னைத் தவம்.'

இதுவும் ஒரு வள்ளலைக் கொள்ள நின்று அடை விரவிப் பொருள் வேறுபட வந்தது.

'கடைபோ லுலகியற்கை காலத்தின் நீங்கா
லடைய வறிதாயிற் றன்றே—யடைவோர்க்
கருமை யுடைத்தன்றி யந்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்.'

இது வறுமையுற்றான் ஓர் வள்ளலைக் கொள்ள நின்ற பொருள் வேறுபட்டு அடை விபரீதப்பட வந்தது.

165. அதிசயம், நோக்கு என்னும் அலங்காரங்கள்

அருளு மதிசய மான்றோர் வியப்ப துலகிறவாப்
பொருள்குண மையந் துணிவு திரிவெனப் போற்றுவரால்;
பெருகிய நோக்கது தற்குறிப் பேற்றம் பெயர்பொருளாய்
வருவதும் பேராப் பொருளது மாக வகுத்தனரே.

(இ-ள்.) அதிசயமாவது ஆன்றோர்க்கு வியப்புடைத்தாக வருவது; அது உலகநடை இறவாது பொருளதிசயமும், குணவதிசயமும், ஐயவதிசயமும், துணிவதிசயமும், திரிவதிசயமும் என்னுங் கூறுபாட்டால் வரும். நோக்கு என்னும் அலங்காரம் *தற்குறிப்பேற்றமாம்; அஃது இயங்கு பொருளும் இயங்காப் பொருளும் என வரும் (எ-று.)

அதிசயமெனினும், பெருக்கு எனினும், மிகைமொழியெனினும் ஒக்கும்.

வரலாறு:—

'பண்டு புரமெரித்த தீயே படர்ந்தின்று
மண்ட முகடு நெருப்பறாஅ—தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.'

இது பொருளதிசயம்.

'மாலை நிலவொளிப்ப மாத ரிழைபுனைந்த
நீல மணிக ணிழலுமிழ—மேல்விரும்பிச்
செல்லு மிவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு
வல்லிருளா கின்ற மறுகு.'

இது குணவதிசயம்.

'உள்ளம் புகுந்தே யுலாவு மொருகாலென்
னுள்ள மூழ்ந்து முடன்பருகு—மொள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வே
னுள்ளம் பெரிதோ வுரை.'

---

* "தற்குறிப்பேற்றமாவது, ஒரு பொருள் உலகினிடத்தே இயல்பாக நிகழுந் தன்மையை ஒழித்துக் கவி செய்வான், தான் கருதிய வேறொரு காரணத்தினை அதின்கண் ஏற்றி மொழிவது," என்பது பழைய குறிப்பு.

இஃது ஐயவதிசயம்.

'ஆளுங் கரியும் பரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுளித்தெறிந்து—நீள்குடையும்
வள்வார் முரசு மறிதிரைமேற் கொண்டொழுக
வொள்வா ளுறைகழித்தான் வேந்து.'

இது துணிவதிசயம். இதனைத் தொழிலதிசயம் என்பாரு உளர்.

'திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுப்ப—வங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரா
லேந்திழையார் பூந்துகிலா மென்று.'

இது திரிபதிசயம். பிறவும் அன்ன.

'மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்டொடர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியுந் தன்னுருவந்
தேயுந் தெளிவிசும்பி னின்று.'

இஃது இயங்கு பொருள் நோக்கு.

'வேனில் வெயிற்குடைந்த மெய்வருமை கண்டிரங்கி
வானில் வளமருளும் வண்புயற்குத்—தானுமெதிர்
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினைக்கைப்
போதுமீ தேந்தும் பொழில்.'

இஃது இயங்காப் பொருள் நோக்கு.

166. ஏது என்னும் அலங்காரம்

ஏது வுரைப்பி னிதுவிது வின்விளை வென்றுரைத்தல்;
ஓதிய காரக ஞாபக முள்ளதோ டொன்றினொன்று
மாதி யபாவ மழிவுபா டென்று மபாவமின்மை
தீதி லொருங்குடன் றேற்றம்யுத் தாயுத்தஞ் செப்புவரே.

(இ-ள்) ஏது என்னும் அலங்காரம் ஒன்றினிடத்தொன்று விளைந்ததாகச் சொல்லுவது; அது காரகவேதுவும், ஞாபகவேதுவும், உள்ளதன் அபாவமும், ஒன்றினொன்று அபாவமும், அழிவுபாட்டபாவமும், என்றுமபாவமும், இன்மையபாவமும், ஒருங்குடன் றேற்றமும், யுத்தமும், அயுத்தமும் என விகற்பிக்கப்படும் (எ-று.)

வரலாறு—

'மலையி லலைகடலில் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தாற்—றலைமைசேர்
பொன்மாது புல்லுபுகழ்ச் சோழன் புயம்புணை
வென்மா தவத்தோ மியாம்.'

இது காரகவேது.

'காதலன்மே னூடல் கரையிறத்தல் காட்டுமான்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப—மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேர்ந்த கருத்து.'

இது ஞாபகவேது.

'காரோடு நின்றூர் கடிமனையிற் கையேற்
றிரவோடு நிற்பித்த தெம்மை—யரவோடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்.'

இஃது உள்ளதன் அபாவம்.

'பொய்ம்மை யுடன்புணரார் மேலானார் பொய்ம்மையு
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவா—மிம்முறையாற்
பூவலர்ந்த தாரார் பிரிந்தாற பொலங்குழையார்
காவலர்சொற் போற்றல் கடன்.'

இஃது ஒன்றின் ஒன்று அபாவம்.

'கழிந்த திளமை களிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கங்—கழிந்து
கருநெறியுங் கூந்தலார் காதனோய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம்.'

இஃது அழிவுபாட்டு அபாவம்.

யாண்டு மொழிதிறம்பார் சான்றவ ரெம்மருங்கு
நீண்டு மயில்க ளினமினமாய்—மூண்டெழுந்த
காலையே கார்முழங்கு மென்றயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்.'

இஃது என்றும் அபாவம்.

காரார் கொடிமுல்லை நின்குழனுமேற் கைபுனைய
வாராமை யில்லை வயவேந்தர்—போர்கடந்து
வாளையேர் கண்ணி நுதன்மேல் விரும்பசலை
நாளையே நீங்கு நமக்கு.'

இஃது இன்மை அபாவம்.

'விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும்—பிரிந்தோர்
நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவி
பொறைதளரும் புன்மாலைப் போது.'

இஃது ஒருங்குடன் தோற்றம்.

'பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்ன ரசைந்து முகுளிக்குந்—தன்னேர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
யரவிந்த நூறு யிரம்.'

இஃது யுத்தம்.

'இகன்மதமால் யானை யிணைவரா வெங்கோன்
முகமதியின் மூர னிலவா—னகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல.'

இஃது அயுத்தம். பிறவும் அன்ன.

167. நுணுக்கம், இலேசம் என்னும் அலங்காரங்கள்

திகழு நுணுக்கங் குறிப்பிற் றொழிலிற் றிறமுணர்த்தல்
நிகழு மிலேசமெய்ச் சத்துவம் வேறு நெறியினுய்த்தல்;
இகழு மொழியிற் புகழ்தலு மேத்திய வின்னுரையிற்
புகழு நடையிற் பழித்தலும் போற்றுவர் போற்றொடியே!

(இ-ள்.) நுணுக்கம் என்னும் அலங்காரம் காரியங்களை மாபாற் சொல்லாதேயுணர்த்தல்; அது குறிப்பு நுணுக்கம், தொழில்நுணுக்கம் என இரண்டு வகையாம்; இலேசம் என்னும் அலங்காரம் கண்ணின் நீர் வார்தல், மெய் சிலிர்த்தல் முதலான * சத்துவங்கட்கு வேறு காரணஞ் சொல்வது; இகழ்வது போலப் புகழ்தலும் புகழ்வதுபோலிகழ்வதும் இதன்பாற்படுமென்று கூறுவாருமுளர் (எ-று.)

* 'சத்துவமாவது வெள்ளிய பளிங்கில் வர்ண நூலைக் கோத்தால் அந் நூலின் வர்ணம் புறம்பொழிந்து தோன்றுமாறுபோல உவகை முதலிய உள்ள நிகழ்ச்சி வெளிப்படத் தோன்றுங் குறியாம்'' என்பது பழைய குறிப்பு.

வரலாறு:-

'காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததாற்
பேதைய ராயம் பிரியாத—மாதர்
படரிருள்கால் சீய்க்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு.'

இது குறிப்பினாலே இரவுக்குறி நேர்ந்தமையால், குறிப்பு நுணுக்கம்.

'பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோட்
கூட லவாவாற் குறிப்புணர்த்து—மாடவற்கு
மென்றீந் தொடையாழின் மெல்லவிர றைவந்தா
ளின்றீங் குறிஞ்சி யிசை.'

இஃது இடையாமத்தை அக்காலத்திற்குரிய குறிஞ்சி இசையைப் பாடிக் குறித்தலால், தொழில் நுணுக்கம்.

'கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லுவராற்
பொங்கும் படைபரப்பி மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.'

'மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேற் கண்டு
விதிர்ப்ப மயிரரும்ப மெய்யிற்—புதைத்தாள்
வளவா ரணநெடுங்கை வண்டிவலை வாய்ந்த
விளவாடை கூர்ந்த தென.'

இவை கண்ணீரரும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் என்னும் சத்துவங்களை வேறு நெறியிற் புணர்த்தலால் இலேசமாம்.

'ஆடன் மயிலியலி யன்ப னணியாகங்
கூடுங்கான் மெல்லென் குறிப்பறியா—னூட
விளிவந்த செய்கை யிரவாளன் யாண்டும்
விளிவந்த வேட்கை யிலன்.'

'மன்னிய பெண்ணை வதைசெய்த வாள்வலியுங்
கன்னியை யெய்திக் கலந்ததுவும்—பொன்னிக்
குலமங்கை தன்னைக் கொலைசெய் ததுவு
மலர்மங்கை கோற்கோர் வடு.'

இவை புகழாப் புகழ்ச்சி இலேசம்.

'மேய கலவி விளைபோழ்து மெல்லியாஞ்
சாய றளராமற் றூங்குமாற்—சேயிழையாய்

போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்.'

இஃது புகழ்ந்தாற்போலப் பழித்த இலேசம்.

168. நிரனிறை, சுவை, ஊக்கம், பரியாயம் என்னும் அலங்காரங்கள்

நிரனிறை யாவது சொல்லும் பொருளு நிரனிறுத்தல்;
விரவு மகிழ்ச்சி யுளநிக ழார்வம் விளம்புமொழி;
உரிய சுவைதா னிரதமெம் பாட்டுரை யூக்கமென்ப;
பரியாய மோர்பொருள் தோன்றப் பிறிது பகர்தலென்னே.

(இ-ள்.) சொல்லையாவது பொருளையாவது நிரையே நிறுத்தல் நிரனிறை என்னும் அலங்காரமாம்; உளநிகழ் ஆர்வங்கூறுமொழி மகிழ்ச்சியாம்; இரத வசனம் சுவையாம்; ஊக்கமாவது, தன்மேம் பாட்டுரையாம்; பரியாயம் தான் கருதிய பொருளைப் பிறமொழி யாற் பகர்தலாம் (எ-று.)

வரலாறு:—

'காரிகைக் மென்மொழியா ளேக்கா நகிர்முலையால்
வார்புருவத் தாலிடையால் வையகத்தி—னேர்தொலைத்த
கொல்வி வடிநெடுவேல் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லி தமியேன் மனத்து.'

இஃது சொல்லை நிறுத்தி அடைவே பொருளாலே கண்ணழித் தலால், நிரனிறை என்னும் அலங்காரமாம். பொருள்களிற் சொன்ன நிரனிறை விகற்பமெல்லாம் வந்தவழிக் கண்டுரைத்துக் கொள்க.

'சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்
புல்ல விருதோள் புடைபெயரா—மெல்ல
நினைவே மெனினெஞ் சிடம்போதா தெம்பால்
வனைதாராய் வந்ததற்கு மாறு.'

இஃது நெஞ்சுள் நிகழ்ந்த ஆர்வத்தைப் புலப்பட உரைத்த லால் மகிழ்ச்சி என்னும் அலங்காரம்.

'உண்ணிகழ் மகிழ்ச்சி புலப்பட வுரைத்த
துண்ணிய வார்வ மொழியெனச் செப்புவர்.'

மகிழ்ச்சி எனினும் ஆர்வமொழி எனினும் ஒக்கும்.

இனிச் சுவையொன்பதும் ஆமாறு.

1 'ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.'

இது சிருங்காரம்.

'சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
யீர்ந்திட் டுயர்துலதா னேறினோ—னேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வங்கட்
படைவீர மோவவன் பண்பு.'

இது வீரம்.

'கையில் விரனெரித்துக் காறளர்ந்து வாய்புலர்ந்து
மெய்பனிப்பத் தாளில் விழுமிவனோ—வுய்யக்
களிவேக மாறுக் கரிபுரளச் செங்கை
யொளிவே லுகைப்பா னினி.'

இஃது அச்சம்.

2 'குடருங் கொழுப்புங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த தடியு முடம்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.'

இஃது இழிப்பு.

'முத்தரும்பிச் செம்பொன் முறிதழைத்து பைந்துகிரின்
ஞெத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிருங்—கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
றன்னேர் பொழியுந் தரு.'

இது வியப்பு.

'கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டு
மழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமந் தரியா தசையுந் தளிர்மேனி
யீமந் தரிக்குமோ வென்று.'

இஃது அவலம்.

'கைபிசையா வாய்மடியாக் கண்சிவா த் தீவிழியா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்—வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
பேராவேந்தன் றூதிசைத்த போது.'

1. திருக்குறள், 1329.
2. நாலடியார், 46.

இஃது உருத்திரம்.

'பள்ளியுள் வாழும் பறியறு மாதவர்
பிள்ளைக ளெல்லாம் பெரியர் முதிர்ந்தவர்
வெள்ளைகள் போல விலாவிற நக்குநக்
குள்ளவ ரெல்லா மொருங்குடன் மாய்ந்தார்.'

இது முறுகிய நகை.

1 'தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.'

இது சாந்தம்.

'நவைதீ ரொன்பஃ தாகு முட்பொருள்
சுவைவாய்க் கிளப்பது சுவையென மொழிப.'

'மலைகரந்து போகாதோ வற்றாதோ பவ்வ
மலர்கதிரோன் வீழாதோ வஞ்சி—நிலையெனக்குப்
பார்வேந்த ரொப்பரோ பாய்நீர்க் குருகுலத்தார்
போர்வேந்தே யான்முனிந்த போது.'

இது தன் வலி மிகுத்துச் சொன்னமையால், தன் மேம்பா
டுரை.

'தாக்கிய விடத்தெனைத் தடுப்பவர் யாரென
ஊக்கங் கூறுத லூக்க மாகும்.'

'மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்கீழ் நின்றருணீ—தன்னிகராச்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
யிந்தீ வரங்கொணர்வல் யான்.'

இது குறித்த பொருளைப் பிறிதொரு வழியாற் சொல்லினமை
யால், பரியாய மொழியாயிற்று. உதயணன்காதை முதலாயின
வற்றுள் உள்ளுறை பொருளாகச் சொல்லியவெல்லாம் பரியாயப்

'குறித்த பொருளைப் பிறிதொரு வழியாற்
புலப்பட வுரைத்தல் பரியாய மொழியே.'

169. சமாயிதம், உதாரதை, அவனுதி என்னும் அலங்காரங்கள்

தாங்குஞ் சமாயிதந் தான்முயல் செய்தி தனதுபயன்
ஆங்கத னாலன்றி மற்றொன்றி னால்வந்த தாகச் சொல்லல்;
தீங்கி லுதாரதை செல்வமு முள்ளமுஞ் சீர்மைசெப்பல்;
ஓங்கு மவனுதி யுண்மை தவிர வுரைத்திடலே.

1. திருக்குறள், 318.

(இ - ள்.) தாம் முயல்கின்ற காரியத்திற்குப் பிறிதொன்று துணை செய்ததாகச் சொல்லல் சமாயிதமாம்; உதாரதை என்னும் அலங்காரம் செல்வ மிகுதியும் உள்ள மிகுதியுஞ் சொல்லுதலாம்; உண்மை மறைத்து வேறு சொல்லுதல் அவனுதியாம்; அது சிறப் பவனுதியும், பொருளவனுதியும், குணவவனுதியும் என மூன்றாகச் சொல்லுவர் (எ-று.)

வரலாறு:—

'வான்குணத் தெம்பிக்கு மன்னு பெருஞ்செல்வம்
யான்கொடுப்பேற் கெங்கோனு மிக்களித்தா—னென்போய்க்
கரும்பேறு நாட்டார்தங் காவலன்றன் றேவி
தரும்பேறு மற்றுண்டோ சாற்று.'

இதனுள் தான் கொடுப்பானாகவிருந்த அரசுக்குத் தசரதனும் உடன்பட்டான் என்றமையால் சமாயிதம் என்னுமலங்கார மாயிற்று.

'நினைவுடைப் பொருளை நிரப்புதற் கதுவுந்
துணையெனப் படுவது துணைப்பே றென்ப.'

சமாயிதம் எனினும் துணைப்பேறு எனினும் ஒக்கும்.

'குன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்து
மென்றும் வறியோ ரினங்கவர்ந்து—மொன்று
மறிவரிதாய் நிற்கு மளவினதாற் சோரி
செறிகதிர்வேற் சென்னி திரு.'

இது செல்வமிகுதி சொன்னமையால், செல்வமிகுதி உதாரதை.

'மண்ணகன்று தன்கிளையு நீங்கி வனமடைந்து
பண்ணுந் தவமுயலும் பார்த்தனா—விண்ணிறந்து
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு.'

இஃது உள்ளமிகுதி சொன்னமையால் உள்ளமிகுதி உதாரதை.

'செல்வமு முள்ளமுஞ் சீர்மைசெப் பிடுத
லொள்ளிய வுதாரத்தமென் றுரைத்தனர் கொளலே.'

'நறைகமழ்தார் வேட்டார் நலநீத்து நாணு
நிறையு நிலைதளரா நீர்மை—யறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து.'

இஃது ஒருவனைச் சிறப்பித்து வருதலால், சிறப்பவனுதி.

'நிலனும் விசும்பா நிமிர்புனலாந் தீயா
மலர்கதிராம் வான்மதியா மன்றி—யலர்கொன்றை
யொண்ணறுந் தாரா னொருவ னுயிர்க்குயிரா
யெண்ணிறந்த வெப்பொருளு மாம்.'

இது பொருளிடத்து வந்தமையால், பொருளவனுதி.

'மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்
பனித்தொடையற் பார்த்திபர்கோ னெங்கோன்—றனிக்கவிகை
தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு
வெம்மை நிழற்றாய் மிகும்.'

இது குணத்தினிடத்து வந்தமையாற் குணவவனுதி.

'சிறப்பினுங் குணத்தினுந் திருவினுஞ் சீர்மையை
மறுத்துடன் மொழிவ தவனுதி வழக்கே.'

இது பிறவலங்காரங்களோடு கூடியும் வரும்.

'நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன்—றுறையின்
விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ.'

இது சிலேடைப் பொருள்மேல் வந்தமையால், சிலேடை அவனுதி. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (உகூ)

170. சிலேடை என்னும் அலங்காரம்

செப்புஞ் சிலேடை யொருதிறஞ் சேர்சொற் பலபொருளை
ஒப்ப வுணர்த்தல்; ஒருவினை பல்வினை யோங்குமுரண்
துப்புறழ் வாயின் சோலாய்!நிய மத்தோ டநியமமுந்
தப்பில் விரோதத் துடனவி ரோதமுஞ் சாற்றினரே.

(இ-ள்.) சிலேடையென்னும் அலங்காரம் ஒருவகையாக நின்ற சொற் பலபொருள் தெரிய நிற்பது; அது ஒருவினைச் சிலேடையும், பலவினைச் சிலேடையும், முரண் சிலேடையும், நியமச் சிலேடையும், அநியமச் சிலேடையும், விரோதச் சிலேடையும், அவிரோதச் சிலேடையும் என வரும் (எ-று.)

வரலாறு:—

'அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க—வும்பர்

நவம்புரியு நாண்மதியுங் கங்கையு நண்ணித்
தவம்புரிவார்க் கின்பந் தரும்.'

இது ஒரு வினையிலே சிலேடித்தமையினால், ஒரு வினைச் சிலேடை.

'தவிர்வில் மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக்—குயிலிசையு
மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலா
ரின்னுயிரை யீர்கின் றன.'

இது பல வினை கொண்டு நிற்றலால், பலவினைச் சிலேடை.

'ஒருவினை முடித்தலும் பலவினை முடித்தலு
மொருவினை பலவினைச் சிலேடை யாகும்.'

'மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலைத் துணைமேவ லார்கடிய—வேலைமேன்
மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலியடங்கும் புள்.'

இது முரணத் தொடுத்தமையால், முரண் வினைச் சிலேடை.

'முரண வருவது முரண்வினைச் சிலேடை.'

'வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர்மை
மென்கோ வியாழே யிரங்குவன வேல்வேந்தே
நின்கோ னிலவு நிலத்து.'

இது சிலேடித்தவற்றை நியமித்துச் சொன்னமையால், நியமச் சிலேடை. இன்னும் இதனை இருபொருள் நியமச்சிலேடை, முப்பொருள் நியமச்சிலேடை எனப் பல விகற்பங்களாலும் உரைப்பாரும் உளர். அவை வந்தவழிக் கண்டுகொள்க.

'சிறைபயில்வ புட்குலமே தீம்புனலு மன்ன
விறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையிற்
கொடியன மாளிகையின் குன்றமே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள.'

இது சிலேடித்த பொருள் நியமஞ் செய்யாதே மற்றும் ஒரு பொருள் சொல்லுதலால், நியமச் சிலேடை.

'விச்சா தரனேனு மந்தரத்து மேவானு
லச்சுத னயினுமம் மாயனலன்—நிச்ச

நிறைவான் கலையா னகளங்க னீதி
யிறையா னநகனெங் கோன்.'

இது சிலேடித்தவற்றைப் பின்னரும் விரோதிப்பச் சிலேடித்தமையால் விரோதச் சிலேடை.

'சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கு
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கு—மீதா
மநகமதி தோற்றிக் குமுத மளிக்குந்
தநத னிருநிதிக்கோன் றான்.'

இது முன்னர்ச் சிலேடித்த பொருளைப் பின்னரும் விரோதியாமற் சிலேடித்தமையால், அவிரோதச் சிலேடை. இவ்வனைத்துச் சிலேடையுஞ் செம்மொழிச் சிலேடையும் பிரிமொழிச் சிலேடையும் என இரண்டு கூறுபடும் எனக் கொள்க.

வரலாறு:—
'செங்கரங்க ளாலிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப்—பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகு
நீராழி நீணிலத்து மேல்.'

இது ஒரு வழி நின்ற சொல் வேறுபடாது பல பொருள் தந்தமையால், செம்மொழிச் சிலேடை.

'தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
வெள்ளா வரிமா னிடர்மிகுப்ப—வுள்வாழ்தேஞ்
சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ள
நந்துந் தொழில்புரிந்தார் நாடு.'

இது ஒரு வழி நின்ற சொல் பிரிந்து தொகை வேறுபட்டுப் பல பொருள் கொண்டமையால், பிரிமொழிச் சிலேடை.

171. சிறப்பு, உடனிலை, முரண் என்னும் அலங்காரங்கள்

செல்லுஞ் சிறப்புத் தொழில்குண மங்கஞ் சிதைந்திடினு
நல்ல பயன்பட நாட்டல்; உடனிலைச் சொன்னயந்து
சொல்லுங் குணமுத லொத்த தொகுத்தல்; சொலும்பொருளும்
புல்லும் விரோதம் புணரின் முரணென்ப பொற்றொடியே!

(இ-ள்.) சிறப்பென்னும் அலங்காரம், குறையுடனே மேம்பாடு தோன்றச் சொல்லுவது; அது குணக்குறை விசேடமும், தொழிற்குறை விசேடமும், சாதிக்குறை விசேடமும், பொருட்குறை விசேடமும், உறுப்புக்குறை விசேடமும் என விகற்பிக்கப்படும்.

உடனிலைச்சொல் என்னும் அலங்காரம் பொருள்கள் தம்மில் ஒப்பாயினவற்றை ஒருங்கு கூட்டிச் சொல்லுதலாம். அது புகழ்தற்கண்ணும், பழித்தற்கண்ணும் வரும். முரண் என்னும் அலங்காரஞ் சொல்லும் பொருளும் மாறுபட வைத்தலாம் (எ-று.)

சிறப்பெனினும் விசேடமெனினும் ஒக்கும். ஒப்புமைக் கூட்டமெனினும் உடனிலைச்சொல் எனினும் ஒக்கும். முரண் எனினும் விரோதம் எனினும் ஒக்கும்.

வரலாறு:—

'கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டஞ்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற.'

இது குணத்திலே குறைவு கூறிக் காரியத்திலே மேம்பாடு தோன்றச் சொன்னமையால், குணக்குறை விசேடம்.

'ஏங்கா முகில்பொழியா நாளும் புனனேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா—நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை.'

இது தொழிற்குறை விசேடம்.

'மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட
வாயனோர் மாறேற்ற மார்புரிந்தார்—தூய
பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற்
புரந்தரனும் வானோரும் போல்.'

இது சாதிக்குறை விசேடம்.

'தொல்லை மறைதேர் துணைவன்பா லாண்டுவரை
யெல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலா
ளோங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமோ
வேலங்கொர்விநீர்க் கச்சி யிடம்.'

இது பொருட்குறை விசேடம்.

'யானை யிரதம் பரியா ளிவையில்லைத்
தானு மனங்கன் றனுக்கரும்பு—தேனார்
மலரைந்தி னல்வென் றடிப்படுத்தான் மார
னுலகங்கண் மூன்று மொருங்கு.'

இது உறுப்புக்குறை விசேடம்.

'பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்புந்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கு—நாண்டாங்கு
வண்மைசால் சான்ற வருங்காஞ்சி வண்பதிப்
முண்மையா லுண்டிவ் வுலகு.'

இது புகழுடனிலே.

'கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனு
முள்ளது சொல்லாச் சலமொழி மாந்தரு
மில்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள்.'

இது பழிப்புடனிலே. பிறவும் அன்ன.

'சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க
வாலு மயிலினங்க ளார்த்தெழுந்த—ஞாலங்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார் மெய்.'

'காலையு மாலையுங் கைகூப்பிக் காமெழுதால்
மேலை வினையெல்லாங் கீழவாங்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தாரப்
பெருமானைச் சிற்றம் பலத்து.'

இவை முரண்.

'மொழியினும் பொருளினு முரணுதல் முரணே.'

இது பிறவலங்காரங்களோடும் வரும்.

'இனமா னிகல வெளியவா மேனும்
வனமேவு புண்டரிகம் வாட்டும்—வனமார்
கரியுருவங் கொண்டு மரிசிதறக் காட்டும்
விரிமலர்மென் கூந்தல் விழி.'

இது சிலேடை முரண்; பிறவும் அன்ன. (௱௭௧)

172. நுவலா நுவற்சி, தெரிவில் புகழ்ச்சி, சுட்டு என்னும் அலங்காரங்கள்

மாறி யிகழ்மொழி வண்புக ழாய்நுவ லாச்சொல்வரும்;
தேறுந் தெரிவில் புகழ்ச்சியோன் றைப்பழிக் கப்பிறிது
கூறிப் புகழுதல்; சுட்டா நிகழ்பயன் கொள்பொருளில்
வேறு படநன்மை தீமை வெளிப்படல் மெல்லணங்கே!

1. திரிகடுகம், 50. 2. தொல்-பொருள். சூ. 407.

(இ-ள்) நுவலாச்சொல்லென்னும் அலங்காரம் ஒரு பொருளைப் பழித்தாற்போலப் புகழ்தலாம்; புகழாப் புகழ்ச்சியெனினும் நுவலாச் சொல் எனினும் ஒக்கும். தெரிவில் புகழ்ச்சியாவது, ஒன்றைப் பழித்தற்கு வேறொன்றைப் புகழ்தலாம். சுட்டென்னும் அலங்காரம் ஒரு வகையால் நிகழ்பொருளிடத்தே வரும் பயனைப் பிறிதொன்றற்கு நன்மையாவது தீமையாவது தோன்றச் சொல்லுதலாம். (எ-று)

நிதரிசனம் எனினும் சுட்டெனினும் ஒக்கும்.

வரலாறு:—

'நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோ
ரனைவரையும் புல்லினு ளன்றே—மனுநூல்
புணர்ந்த நெறியொழுகும் பூழியர்கோ யிந்நாண்
மணந்த தடமலர்மேன் மாது.'

இது புகழாப் புகழ்ச்சி.

'இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லு—மொருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர்.'

இது தெரிவில் புகழ்ச்சி.

'பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ்
சிறியோர் பொருத திறமு—மறிவுறீஇச்
செங்கமல மெய்மலர்ந்த தேங்குமுத மேபசந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது.'

இது நன்மை வெளிப்படச் சொல்லிய சுட்டு.

'பெரியோ ருழையும் பிழைசிறி துண் டாகி
லிருநிலத்தில் யாரு மறியத்—தெரிவிக்குந்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு.'

இது தீமை தோன்றச் சொல்லிய சுட்டு. (ருஉ)

---

1. தண்டியலங்காரம், சூ. 83 உரை மேற்கோள்
2. சூ. 85 உரை மேற்கோள்
3.

173. **ஒருங்கியல், பரிமாற்றம், ஆசி என்னும் அலங்காரங்கள்**

துப்பா ரொருங்கியல் தூய வினைபண் பிரண்டுபொருட்(கு)
ஒப்பா வொருசொல்லு வைப்ப துயர்பரி மாற்றமது
செப்பார் பொருண்மா றிடல்;திக ழாசியின் சீர்மைசொலின்
தப்பாத வாசீர் வசன மெனவுணர் தாழ்குழலே!

(இ-ள்.) ஒருங்கியல் அலங்காரம், இரண்டு பொருட்குப் பொருந்த ஒரு சொற்புணர்வது; அது வினை புணர்நிலையும், பண்பு புணர்நிலையும் என இரண்டு வகைப்பட்டு மூன்றும் வேற்றுமையான் வரும். புணர் நிலையெனினும் ஒருங்கியல் எனினுமொக்கும். பரிமாற்றமாவது, பொருள் கொடுத்துப் பொருள் கொள்வதாகக் கூறுதல்; பரிவர்த்தனை எனினும் பரிமாற்றம் எனினுமொக்கும். ஆசி என்னும் அலங்காரம் ஆசீர் வசனஞ் சொல்லுதலாம் (எ-று.)

வரலாறு:—

'பூக்கால் புனைந்த புனைவர் மடமக
ளேக்கார நோக் குண்டாரை நோவதெவன்—நோக்காதே
கள்ள நிறையுங் கருங்கண்ணுற் கட்டழித்தா
ளுள்ள நிறையோ டொருங்கு.'

இது [வினை] புணர் நிலை.

'பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே
நீங்காத வெம்மைவாய் நீண்டனவாற்—றூங்காதல்
வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி
யுய்க்குந் தமியா ருயிர்.'

இது பண்பு புணர் நிலை.

'காமனை வென்றான் சடைமதியுங் கங்கையுந்
தாம நிழலொன்று தாங்கொடுத்து—நாமப்
பருவா ளரவின் பணமணிக டோறு
முருவா யிரம்பெற் றுள.'

* 'சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து.'

இவை பரிமாற்றம்.

'மிகைசேர்ந்த நாகமும் வெண்மதியுந் தம்மிற்
பகைதீர்ந்த மால்சடையோன் காப்ப—முகைமலரக்
கோழி யனுபமனன் கோரம் புலிவாழி
வாழிய மண்டலத்து வான்.'

இது ஆசி மொழி. வாழ்த்து எனினும் அமையும். (௩௩)

* திருக்குறள், 1183.

174. விராவு, பாவிகம் என்னும் அலங்காரங்கள்

பண்பு தரும்பல் லலங்காரஞ் சேர்ந்து பயிலுவது
நண்பு தரும்விரா வாம்;பா விகமது நற்கவியின்
ஒண்பொரு ளின்றொடர் காப்பிய முற்றி னுரைபெறுமால்;
வீண்புடை நின்றிடை யைச்சீ றியமுலை மெல்லியலே!

(இ-ள்.) விராவலங்காரம், பல அலங்காரங்கூடி நிற்பது. பாவிகமென்பது, முழுக்காப்பியமும் ஒருங்கு பொருந்திய குணமாம் (எ-று.)

வரலாறு:—

'தண்டுறைநீர் நின்ற தவத்தா வளிமருவு
புண்டரிக நின்வதனம் போன்றதா—லுண்டோ
பயின்று ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேன்
முயன்றுன் முடியாப் பொருள்.'

இது *பல அலங்காரமும் மருவி நின்றமையால், விராவலங்காரமாம். விராவெனினும், விரவியல் எனினும், சங்கீரணம் எனினும் ஒக்கும். பாவிகம் காப்பியத் தன்மையாதலின், தனிச் செய்யுளால் எடுத்துக்காட்டு அமைவதன்று.

175. மேல் கூறிய அலங்காரங்களின் புறநடை

ஈண்டிய முற்றேக தேச வுவமை யுருவகமென்
றீண்டொரு மூன்று வுருவக மோதுவர்; காரணமுந்
தூண்டு மகார ணமுமா மிகைமொழி சொல்வர்;எல்லாம்
வேண்டிய வேண்டிய வாறு விகற்பிப்ப மெல்லியலே!

மேல் வகுத்த அலங்காரமனைத்திற்கும் ஆவதோர் புறநடை கூறுகின்றான்.

(இ-ள்) முற்றுருவகம், ஏகதேசவுருவகம், உவமையுருவகம் என உருவகத்தை மூன்றாகவும்; அகாரண மிகைமொழி, காரண மிகைமொழி என மிகைமொழியை இரண்டாகவும் விகற்பிப்பர்; ஏனைய அலங்காரங்களையும் வேண்டிய வேண்டியபடிக்கெல்லாம் விகற்பிப்பர் (எ-று.)

---

* "இதில் தற்குறிப்பேற்றம் கருமகாரகவேது, சிலேடை, உவமை, வேற்றுப்பொருள் வைப்பு, சுவை முதலிய பலவும் விரவியமை காண்க," என்பது பழைய குறிப்பு.

சூத்திரத்தில் 'உவமையுருவகம்' என்றாலும், மொழி மாற்றி 'உருவகவுவமை' என்று கொள்க.

'மின்னிருக்கச் சாடி விழுத்துவலை மும்மதமா
முன்னுருமிக் கோசை முழக்காகப்—பெண்ணுருவ
வார்மென் முலையார் மனக்கோட்டை மேல்வருமே
கார்மேக மென்னுங் களிறு.'

இது முற்றுருவகம்.

1 'இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும் போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில்.'

இது ஏகதேச உருவகம்.

2 'வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.'

இது வில்லினை ஏராகவுடைய உழவரென்றும், சொல்லினை ஏராகவுடைய உழவரென்றும் உருவகமாக்கி, இருவரையும் பொருட்டெளிவால் உவமித்தலினால் உருவகவுவமை.

'பைத்த லைப்பண நாக மழன்றிட
மொய்த்த லைக்கிளை முன்னிய போரெனக்
கைத்த லத்து முகிழ்த்தது கார்முக
மெத்த லைச்சிலம் பாயர வெய்துமே.'

இது காரண மிகைமொழி. அகாரண மிகைமொழி வந்தவழிக் காண்க.

176. பாட்டுக்களின் வகை

யாப்பை யியம்பிடின் முத்தக மோடு குளகந்தொகை
காப்பிய மாம்;முத் தகந்தன் பொருளோர் கவியின்முற்றும்;
வாய்ப்பிற் குளகம் பலபாட் டொருவினை; மன்னுதொகை
கோப்பிற் பொருளன; காப்பிய மாநூல் கோடியிடையே!

(இ-ள்.) செய்யுள் முத்தகமும், குளகமும், தொகைநிலையும், காப்பியமும் என நால்வகைப்படும்; முத்தகமாவது, ஒரு கவியிலே வினை முடிவது; குளகமாவது, பல கவி ஒரு வினையால் முடிவது.

---

1. யா. வி. சூ. 75, மேற்கோள்
2. திருக்குறள், 872

தொகை நிலையாவது, பொருள், இடம், காலம், தொழில் ஆதிய வற்றிற் பல பாட்டொருங்கு தொகுத்தது. காப்பியமாவது, பெரு நூலாம் (எ-று.)

பொருளாற்றொகுத்தது புறநானூறு. இடத்தாற்றொகுத்தது களவழி நாற்பது. காலத்தாற்றொகுத்தது கார் நாற்பது. தொழிலாற்றொகுத்தது ஐந்திணை. பாட்டாற்றொகுத்தது கலித்தொகை. அளவாற்றொகுத்தது குறுந்தொகை.

177. சொல்லணியாமாறு :

ஆதியு மீறு மிடையு மடியொன்றி லேமடக்கும்
ஓதிய பாதங்க ளொன்கினு மாம்;ஒரு பாதமுற்றுந்
தீதிய லாமை மடக்கலு முண்டு; தெரிந்தவற்றைக்
கோதிய லாமை விகற்பத் தினிலறி சொல்வளையே!

(இ-ள்.) ஓரடியின்கண்ணே தலைமடக்காய் வருதல், இடை மடக்காய் வருதல், கடைமடக்காய் வருதல், மடக்கலங்காரமாம்; உம்மையான் மூன்றிடத்தும் இரண்டிடத்தும் மடக்குதலுமுண்டு. பலபாதத்தின் முதலிடை கடை மடக்கி வருதலும் மூன்றிடத்தும் மடக்கி வருதலும் உண்டு. பாதமுற்றும் மடக்கியும் வரும் (எ-று.)

'ஒத்த வெழுத்திற் பொருள்வே றாக
வைத்துமொழி மடக்கினது மடக்கெனப் படுமே.'

எனக் கொள்க.

'பண்ணைக்கு நன்மருங்கிற் பரிசித்துப் பாட்டயரும்
பண்ணைக் குவளையங்கட் பான்மொழியார்—பண்ணைக்
கொடியா வியர்மாடக் குன்றினவே யென்றிக்
கொடியா வியர்மாடக் குன்று.'

இது முதன்மடக்கு. இடை மடக்கினவு மீறு மடக்கினவும் வந்த வழிக் கண்டுகொள்க. மடக்கெனினும் யமகம் எனினும் ஒக்கும்.

'மணிமருங் குடையன வயிரக் கோட்டன
வணிமருங் கருவிய வாலு வாயின
மணிமருங் குடையன வயிரக் கோட்டன
வணிமருங் கருவிய வரச வேழமே.'

இஃது அடிமடக்கு. பிறவும் அன்ன.

178. பிறர் கோள் கூறல்

தந்திர வுத்தி குணமத மேயுரை தர்க்கந்தன்னில்
வந்திய லெண்கோண் முதலா யுளமாலை மாற்றுமுன்னு
வந்தியல் சித்திர மேன்றின் னவுமலங் காரமேன்றே
தந்திய லச்சிலர் சோன்னு ரவற்றையுஞ் சார்ந்தறியே.

(இ-ள்.) தந்திரவுத்தியும், தந்திர குணமும், ஆசிரிய மதமும், தந்திரவுரையும், தர்க்க நூலிற்சொன்ன எண்கோளும், ஏதுவும், எடுத்துக் காட்டும், பிரமாணமும் முதலியனவும், மாலை மாற்று முதலிய சித்திரச் செய்யுளும் அலங்காரம் என்பாருமுளர். அவையெல்லா மாராய்ந்தறிக.

'முதலாயுள' என்றதனால் நிரனிறை முதலிய பொருள்கோளணியும், அந்தாதி, முரண் முதலிய தொடையணியும், மோனை முதலிய யாப்படியணியும், தொடர்நிலைச் செய்யுட்கு வல்லோர் வகுத்த மெய்ம்மகிழ்வாகிய செய்யுளினணியுமறிந்துகொள்க (எ-று.)

தந்திரவுத்தியாவன :—நுதலிப்புகுதல், ஒத்துமுறை வைத்தல், தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல், முடித்துக் காட்டல், முடிவிடங் கூறல், தானெடுத்து மொழிதல், பிறன்கோட் கூறல், சொற்பொருள் விரித்தல், தொடர்ச்சொற் புணர்த்தல், இரட்டுற மொழிதல், ஏதுவின் முடித்தல், ஒப்பின் முடித்தல், மாட்டெறிந்தொழுகல், ஒழிந்தது விலக்கல், எதிரது போற்றல், முன்மொழிந்து கோடல், பின்னது நிறுத்தல், விகற்பத்தின் முடித்தல், முடிந்தது முடித்தல், உரைத்துமென்றல், உரைத்தாமென்றல், ஒருதலை துணிதல், எடுத்துக் காட்டல், எடுத்த மொழியினெய்த வைத்தல், அன்னதல்லதிது வென மொழிதல், எஞ்சியசொல்லி னெய்தக்கூறல், பிறநூன் முடிந்தது தானுடன்படுதல், தன்குறி வழக்கமிக வெடுத்துரைத்தல், சொல்லின் முடிவினப்பொருண் முடித்தல், ஒன்றின்முடித்தல் தன்னின் முடித்தல், உய்த்துணரவைத்தல் என முப்பத்திரண்டாம்.

தந்திர குணமாவன:—சுருங்க வைத்தல், விளங்கச் சொல்லல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைமை, உலக மலையாமை, முறையின் வைத்தல், விழுமியது பயத்தல், விளங்குதாரணந்தரல் எனப் பத்தாம் என்க.

ஆசிரிய மதமாவன :—மறுத்தல், உடன்படுதல், பிறர்தம் மதமேற்கொண்டு களைதல், தா அனுட்டித் தனஅது நிறுத்தல், இருவர்

மாறுகொளொருதலைதுணிவு, பிறநூற்குற்றங் காட்டல், பிறிதொடு படாஅன் தன்மதம் வருத்தல் என ஏழும் எனக்கொள்க.

தந்திர வுரையாவன:—சூத்திரந்தோற்றல், சொல் வகுத்தல், சொற்பொரு ளுணர்த்தல், வினாதல், விடுத்தல், விசேடங் காட்டல், உதாரணங் காட்டல், ஆசிரிய வசனங் காட்டல், அதிகார வசனங் காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனொடு புணர்த்தல், கருத்துரைத்தல் எனப் பதினான்கு என்ப. இவற்றுட் சில வருமாறு:—

1 'நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.'

இஃது இரட்டுற மொழிதல்.

2 'இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.'

இது ஏதுவின் முடித்தல்.

3 'தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.'

இது மறுத்தல்.

4 'அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.'

இஃது இன்னதல்லதிதுவென மொழிதல்.

5 'மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.'

இது மாட்டெறிந்தொழுகல்.

6 'பிரிவுரைக்கும் வன்கண்ண ராகி லரிதவர்
நல்குவ ரென்னு நசை.'

இது எதிர் மறுத்தல்.

7 'அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.'

இது தொகுத்துக் காட்டல்.

8 'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.'

இது விளங்கச் சொல்லுதல்.

1.	திருக்குறள்,	324.	5.	திருக்குறள்,	941.
2.	,,	270.	6.	,,	1156.
3.	,,	327.	7.	,,	321.
4.	,,	241.	8.	,,	108.

1 'அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.'

இது நவின்றோர்க்கினிமை.

2 'வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.'

இது உய்த்துணர வைத்தல்.

3 'யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.'

இது வினாதல்.

4 'எப்பொரு ளெத்தன்மைத் தாகினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.'

இது விழுமியது பயத்தல்.

5 'தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.'

6 'அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கு.'

இவை தர்க்கத்தில் எடுத்துக்காட்டுப் போல.

7 'கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.'

இது காண்டல்.

8 'சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.'

இஃது அனுமானம்.

9 'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.'

இது பிறநூன் முடிந்தது தானுடன்படுதல். இனிச் கவியாமாறு சொல்லுகின்றான்.

1.	திருக்குறள்,	443.	6.	திருக்குறள்,	247.
2.	,,	38.	7.	,,	496.
3.	,,	397.	8.	,,	660.
4.	,,	356.	9.	,,	319.
5.	,,	208.			

179. சித்திரக் கவி

ஏறிய மாலைமாற் றேசக் கரமினத் தாலெழுத்தாற்
கூறிய பாட்டு வினுவுத் தரமேக பாதமன்றித்
தேறிய காதை கரப்புச் சுழிகுளஞ் சித்திரப்பா
வீறியல் கோமூத் திரியும் பிறவும் விரித்துரையே.

(இ-ள்.) மாலை மாற்று முதற் கோமூத்திரியீறாகக் கூறிய அனைத்துஞ் சித்திரக்கவியாம் (எ-று.)

மாலை மாற்றுவது, மீள வாசித்தாலும் அதுவேயாவது.

சக்கரமாவது, நான்காரைச் சக்கரம் ஆறாரைச் சக்கரம் எட்டாரைச் சக்கரமுதலிய சக்கரமாக வாசிக்கலாவது.

இனத்தாலும் எழுத்தாலுங் கூறிய பாட்டாவன, வல்லினம் மெல்லினம் இடையினத்தொன்றாலே வருதல் செய்யின் ஓரினப் பாட்டாம்.

ஒரெழுத்தாலே முற்றும்-வருவன ஒரெழுத்துப்பாட்டாம்.

வினுவுத்தரமாவது, வினுவினுக்குச் சொன்ன உத்தரமெல்லா மொன்றாகத் தொகுக்க ஓர் பொருள் பயப்பது.

ஏகபாதம், நாற்காலுச்சரிக்கப் பொருள் வேறுவது.

வருமாறு:—

'காணிமா பூவரே ரேவபூ மாணிகா.'

'நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ.'

இவை இறுதி முதலாக வாசித்தாலும் அவையேயாதலான் மாலை மாற்றும்.

சக்கரக்கவி வருமாறு:—

'மாதவா போதி வரதா வருளமலா
பாதமே யோது சுரரைநீ—தீதகல
மாயா நெறியளிப்பாய் வாரன் பகலாச்சீர்த்
தாயா வலகிலரு டான்.'

இது ஆர்தோறு நான்கெழுத்து நின்று கொப்பூழில் ரகாரம் பெற்று, குறட்டின் வசுதாரை என்னும் பெயர் வந்து, சக்கரத்தில் இருபத்தெட்டெழுத்தாய் முடிந்த நான்காரைச்சக்கரம்.

'தண்மலர் வில்லிதன் போரா னமக்குத் தயையளித்த
கண்மலர்க் காவிக் கெதிரா வனவன்று கைப்பொலிந்த
பண்மலர் யாழ்பயில் வாரார்வு சேர்பதி நாகைமிக்க
தண்மை யகத்துப் பதுமத்த மாதர் தடங்கண்களே.'

இஃது ஆர்தோறும் ஒன்பது எழுத்து நின்று, கொப்பூழின் கண் ரகரவாகாரம் பெற்று, குறட்டிற் போதிவானவர் என்று வந்து, சக்கரத்தில் இருபத்துநான்கெழுத்தாய் முடிந்த ஆருரைச் சக்கரம்.

* மாலவனமுதலியவிமைய(வாதிபவானவ) (பதிபகவான புமி) (பதிபவானபுமி) ரெவணமிககால[னெழி](னலல) (லவ) (லல) னகாரியலஙகிதனவெசெடனினனுருவாநதெவாகாஙகதுவா (ண) (ன) (ன) ஙகமிகாலசிலரெனறபொனறிவுளனெதிரிபவனமகாமுர ணவா சொனனமனகா(லனும) (லுனு) (லனு)னறுவெதவாலென (ஞன) (ருன) (ஞன) கழகுநாடனமிலகனறுனனியவெனறுகநது சொரி (யிரெயிலெப) (யமிரெயிலெய) (யயிரெயிலெய) தாயயொ விஞெஙகூரநதமரொஙகூழவாமமா [வு] ணடாரநதவிரைககொலப பூணமாலெ [ச] சார (பி) (பி) (ம) னமகிமடி (ததொ) (கதொ) (ததொ) னறியசசடையெதபூணடினியுயிரமெறபொறபொடெண ணியலாரநனனெடு (மாலெயிடததி) (யிடககினு) (யிடககினு) னுய் ததமாலகொளாயவிணணினினலலார (மணந) (மனன) (மனன) லலாரவிழததனரசிற [ர] பபூககூரு [விச] [விசி] பணஞெகரொ

---

* 'இக்கவியும், இதன்கீழ் உரைத்த சித்திரத்தொகுதியும் பெரும் பான்மையும் பிரதிகளிலில்லை. உள்ள பிரதிகளிலும் காலாந்தரத்திற் கரலிகித வழுக்களான் மிக மாறுபட்டுக் கிடக்கின்றன. கவியின் பிரத்தார இலக்கணத்தால் அஃதோர் பேரருஞ்செய்யுள் என்று தோன்றுவதானும், எதாவதொருவகையாய் நாம் அதனைத் திருத்தி அச்சிடுவது தகுதியன்றாதலானும், அதன் நிச்சயரூபங் கண்டு சக்கரத்தமைத்துக் காட்டவல்ல சித்திரக்கவிகள் எவ்விடத்தாயினும் இருத்தல் கூடுமாதலானும், சித்திரக்கவிகளுள் தனக்கிணையில்லாத பேராற்றலுடையதோர் நூதனக் கவியை இறந்துபோக விட மனமொவ்வாமையானும் தென்னாட்டிலும் யாழ்ப்பாணத்திலுஞ் சென்னையிலுந் தமிழில் மிகப் பிரபல வித்துவான்களாயிருந்தோர் மூவருடைய பிரதிகளிற் கண்ட ரூபமாக இதனை இவ்விடம் பதிப்பித்திருக்கின்றோம். பிரதியில் ஒன்றற்கொன்று பேதப்பட்டனவற்றை இருதலைப்பிறையினுள்ளும், அதிகப்பட்டனவற்றை இருதலைப்பகரத்தினுள்ளுங் காட்டியிருக்கின்றோம்' என்பது பழைய குறிப்பு.

(ப) (ம) (ப) பெணணூரநது (நித்தனு) (நிககனு) (நிககனு) வாயத தாரஙகொளகையினையதிரததாரலி (லி) (வி) (வி) லொ,யயென வெத (து) (த) (து)து(நி) (னி) (னி)னை[யா] வெலகெனறுவளவன பாரமிகுசிரெ.

இது எட்டாரைச் சக்கரம்.

இதற்குப் பிரத்தார இலக்கணமாவது:—

எட்டாராய் நேமி பதினேழாய் ஆர்தோறும்
பட்ட பதினே ழெழுத்தாயச்—சுட்டிய
கொப்பூழி னீற்றெழுத்தாய்க் கொண்டபுறத் துண்டத்துத்
தப்பா விருபத் திரண்டெழுத்தாய்த்—துப்பேற
வீரெட் டடியு மெழிற்சக் கரக்கவியை
நேரிட் டெழுதி நிறுத்துங்காற்—சீரிட்ட
நவ்வு மனநடையி னன்கண்ணி ஞைத்தியலுஞ்
செவ்விதனை யீங்கியலச் செப்பிடுவெ—னெவ்வாயு
மொன்றுவிட் டொன்று மொளிநேமி யெட்டின்க
ணின்றபுகழ் வீரன் றிருநாமம்—பின்றுமை
மன்னியவோ ரெட்டாகு மாலைமாற் றுமதுவு
முன்னு சுழிகுளமு மோரடியாங்—துன்னிய
வீரடியுங் கோமூத் திரியாந் தமிழ்க்கூட்டுக்
கூரிய கூட சதுக்கமாஞ்—சீரிய
விற்பூட்டு மேது வெனுமிவையா மிந்நூலிற்
கற்பார் கருத்தாக் கவையுரைத்த—பொற்பார்
கவியென்றும் வள்ளுவன்பா மூன்றினு மூன்று
செவியென்றும் வந்து சிறக்கும்—புவியின்க
ணொன்றுக்கொன் றுள்ளாப் பதினெட்டு வட்டமிட
நின்றபதி னேழு நிலத்து.

ஒன்றுக்கொன்றுள்ளாகப் பதினெட்டு வட்டங் கீறப் பதினேழு நேமியுளவாம். அதன் கண் இச்சக்கரக் கவியைப் புறத்து நின்றும் வலமாகக் கடலாகவும் எழுதிப் போதவும் எழுதி இவ்வண்ணம் முறையானே எட்டடியும் எழுதுவது. எட்டாமடியினிறுதி தொடங்கிப் புறநேமித் துண்டம் எட்டினு மொருதுண்டத்துக் கோரடியாக எழுதுவது. இவ்வண்ணம் எழுத முன்பிலெட்டடியின் துண்டவெழுத்துப் பின்பிலெட்டடிக்கு ஈற்றெழுத்தாம். இதன்கண் இரண்டா நேமியில் கயிலகுலகரனும் நான்கா நேமியில் காவேரி வல்லவனும், ஆறுநேமியில் கண்ணுமுனறிவானும் எட்டா

நேமியில் கரிகாலகன்னனும், பத்தாநேமியில் விக்கிரம சோழனும், பன்னிரண்டா நேமியில் வளவநாராயணனும், பதினுலா நேமியில் வீரராசேந்திரனும், பதினுறுநேமியில் பரகிருபகாலனும் என எட்டுப் பெயரும் புலப்படும்.

இதன்கண்,

'வினைதேர் வீர சோழ
னலர்வனம் வானரி மார னிலையோ
மணிவீர நாராயண னேவது,'

என்னும் தமிழ்க்கூட சதுக்கமும்,

'வீரத்தால் விண்ணுதல் மெய்த்தவத்தால் வீடாத
லாரத்தா லாள்வதெவர் தாடேறச்—சீரொத்த
மின்னுர் படைத்தடக்கை வீரரா சேந்திரனுக்
கொன்னுராய் வாழ்வ துறின்,'

'விண்கூ டலசங்க மத்துடைந்த வேல்வடுக
ரெண்கூ டலறு மிருங்கானிற்—கண்கூடப்
பண்ணினன் றன்னுடைய பாதம் பணியாமைக்
கெண்ணினுர் சேரு மிடம்.'

'எண்டுறல் கண்டா னெழின்மாலைக் கூற்றத்துப்
பூண்டபுகட் பொன்பற்றி காவலனே—மூண்டவரை
வெல்லும் படைத்தடக்கை வெற்றிபுனை மாறன்றன்
சொல்லின் படியே தொகுத்து,'

'மின்னுர் வடிவேற்கை வீரரா சேந்திரன்றன்
பொன்னுர் பதயுகளம் போற்றுது—கன்னுடர்
புன்கூ டலசங்க மத்திறெடும் போருடைந்தார்
நன்கூ டலசங்க மத்து,'

என்னும் வெண்பாக்களுங் காதை கரப்பாய் வந்தன. இவற்றினிறுதி வெண்பாவின் நாலாமடிக்கு எழுத்து முன்னின்ற மூன்றடியும் பெருக்கிக் கொள்ள வந்தமையால், கூடசதுக்கமுமாயிற்று. மாலை மாற்றின் முன்பு சொன்னதும் இதனுள் அடங்கியதெனக் காண்க.

'கய(லி)(லி)(லி)யலகொவளவன் றனைச(ச)(ச)(சா)ததிரம.'

இது ஏக பாதம். இதனை நாற்காலுச்சரித்துப் பொருளை வேறுபடுக்கிக் கண்டுகொள்க.

பாரினனகுடையினகணடங்கவெ
சிரி(நிர)(னிக)(னிர)தறகிருக(த)(த)(தி)மா(வி)(ர)(ர)னெ.'

இது இருபாதம். இதனை யிருகாலுச்சரித்துப் பொருள் வேறுக் கக கண்டுகொள்க.

'கொவனமாலை (ம)(ப)(ப) ராவாரொ(க)(ர)(க)
தாவாரமாலை (வ)(ம)(ம) ரனமாச்சு.'

இதனை இரண்டு வரியாக எழுதிக் கோமூத்திரியாக வாசித்துக் கொள்க.

'காதமதநிநிடதுலககணணினமாணபெகது
மானிதாதுமாணடதனதுகுறுகுமாரி.

இதனை ஒட்டெழுத்தியன்ற நாலு வரியாக எழுதிச் சுழி குளமாக வாசித்துக் கொள்க. இதனையே சதுரங்கவறையின்கண் தலைதடுமாறுகத் திரட்டி யெழுதித் துவாசியாய் வருமாறு கண்டு கொள்க.

'புவிதானிடதுலவிணடா(ர)(க)(ர)ரடடயதுகாடா
[ர]ளர[னி]கிமுடடவிராசெகதிரகி.'

இதனை முன்பிற் காதை கரப்பிற் சுழிகுளம் ஆக வாசிக்க. இச்சொன்ன சித்திரக் கவிகளோடுங் கூடத் 'தானந் தவமிரண்டும்' 'செவிக்குணவும்,' உப்பமைந் 'தற்றாற் புலவியும்' என்னுங் குறள் மூன்றும் எட்டறைச் சதுக்கத்துட் காதை கரப்பாய் வந்தன. பிறவும் என்றதனால்,

'மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுள
மேக பாத மெழுகூற் றிருக்கை
காதை கரப்பே கரந்துறை பாட்டே
தூசங் கொளலே வாவன் ஞாற்றுக்
கூட சதுக்கங் கோமூத் திரியே
யோரெழுத் தினத்தா லுயர்ந்த பாட்டே
பாத மயக்கே பாவிற் புணர்ப்பே
யொற்றுப் பெயர்த்த லொருபொருட் பாட்டே
சித்திரப் பாவே விசித்திரப் பாவே
விகற்ப நடையே வினாவுத் தரமே
சருப்பதோ பத்திரஞ் சார்ந்த வெழுத்து
வருத்தனை மற்றும் வடநூற் கடலு

ளொருங்குடன் வைத்த வுதாரண நோக்கி
விரித்து முடிக்கு மிறைக்கவிப் பாட்டே
யுருவக மாதி விராவிய லீறாய்
வருமலங் காரமும் வாழ்த்தும் வசையுங்
கவியே கமகன் வாதி வாக்கியென்
றவர்க டம்மையு மவையி னமைதியும்
பாடுதன் மரபுந் தாரணைப் பகுதியு
மானந்த முதலிய வூனமுஞ் செய்யுளும்
விளம்பின தியற்கையு நரம்பு விகற்பமும்
பண்ணுந் திறனும் பாலையுங் கூட்டமு
மெண்ணிய திணையு மிருதுவுங் காலமு
மெண்வகை மணமு மெழுத்துஞ் சொல்லுஞ்
செந்துறை மார்க்கமும் வெண்டுறை மார்க்கமுந்
தந்திர வுத்தியுந் தருக்க முட்டியு
முந்துநூன் முடிந்த முறைமையின் வழாமை
வந்தன பிறவும் வகுத்தினத் துரைப்பா
னந்தமில் கேள்வி யாசிரி யன்னே."

என்று அமிர்த சாகரனார் கூறியன கொள்க.

எழுகூற்றிருக்கையாவது, ஏழு வரி மூன்றறைமுதல் ஒன்றற் கொன்றுஇரண்டறை மேற்பட முறையாகக் கீறி முறையே மக்கள் போக்கும், போந்து மீள்வும் ஆடும் பெற்றியின் வழுவாமல் ஒன்று முதலாகப் பாடுவது.

கரந்துறை பாட்டாவது, ஒரு பாட்டைச் செவ்வே எழுதினால், ஒற்று மொழிக்கு முதலாம் எழுத்துத் தொடங்கி ஒன்று விட்டு வாசிக்க மற்றொரு பாட்டாவது.

நாகங்கோளாவது, ஒருவன் ஒரு வெண்பாச் சொன்னால், அதனீறே முதல் எழுத்தாக மற்றொரு வெண்பாப் பாடுவது.

வாவன் ஞாற்றுவது, முந்துறக் கொடுத்த எழுத்துக்கு ஈறு பாடிப் பின்னைக்கொடுத்த எழுத்துக்கு ஈற்றயலடி பாடி, அதன் பின்பு கொடுத்த எழுத்துக்கு இரண்டாமடி பாடி, அதன் பின்பு கொடுத்த எழுத்திற் பாடி முடிப்பது.

பூதமயக்கமாவது, மூவர் மூன்று ஆசிரியவடி சொன்னால், தாமோரடி சொல்லிக் கிரியை கொளுத்துவது.

பாவிற் புணர்ப்பாவது, நால்வர் நான்கடிக்கு ஈற்றுரை சொன்னால், இவன் நாலடிக்கு முதல் பாடிப் பொருண் முடிப்பது.

ஒற்றுப் பெயர்த்தல் என்பது, ஒரு மொழியைப் பாடி நிறுத்தி வைத்துப் பிறிதொரு பொருள்படப் பாடுவதும் பல பெயர் கூட்ட ஒரு பொருள் வரப் பாடுவதும் என இரண்டு வகைப்படும்.

ஒரு பொருட்பாட்டாவது, ஒன்றினையே துணித்துப் பாடுவது.

சித்திரப்பாவாவது, நான்கு கூடினவெல்லாம் பத்தாகவும், மூன்று கூடினவெல்லாம் பதினைந்தாகவும், பிறவாற்றானும் எண் வழுவாமற் பாடுவது.

'இருவ ரெழுநாள் மாறமர்ந்தான் கோயி
லொருவனை யெட்டா வுவந்தேன்—பொருவிலா
நந்தியான் முக்கண்ணா னற்கதி யொன்பானே
டைந்துகலை தந்தா னறி.'

இதனை ஒன்பதறையாகக் கீறிக் கண்டுகொள்க.

இனி விசித்திரப் பாவாவது, எங்கும் ஏழறையாகக் கீறி, மேலொழுகு நுண்மொழி முதலாகிய எழுத்து ஒரு பொருள் பயக்க நிறுவி, அவ்வெழுத்துக்களே எங்கும் ஒழுகுங் கண்ணறையும் பாடமுற நிறுவி, ஒரெழுத்துக்கு ஓரடி வரப் பாடுவது.

விகற்ப நடையாவது, வேறுபட்ட நடையுடைத்தாவது.

சருப்பதோபத்திரமாவது, எட்டெட்டெழுத்தின் அறை அறுபத்து நான்குவரக் கீறி, அவை மாலைமாற்றும் சுழிகுளமுமாய் வரப் பாடுவது. ஒரெழுத்து முதலாக ஒவ்வொன்று கலை சிறந்தேறிய எழுத்தின் முறையே பிறிது பொருள் பயக்கப் பாடுவது எழுத்து வருத்தனை.

'மரத்தினை யோரெழுத்துச் சொல்லுமற் றென்று
நிரப்பிட நீரிற்பூ வொன்று—நிரப்பிய
வேறோ ரெழுத்துய்க்க வீரரா சேந்திரன்
டாரு மெனவுரைக்க லாம்.'

மெய் வாழ்த்தும் இருபுற வாழ்த்தும் என வாழ்த்து இரண்டு வகைப்படும். மெய் வசையும் இருபுற வசையும் என வசையும் இரண்டு வகைப்படும்.

ஆசு கவியும், மதுர கவியும், சித்திர கவியும், வித்தார கவியும் எனக் கவிகள் நால்வகையாராவர். கடுங்கவி, இன்பகவி, அருங்கவி, பெருங்கவி எனவுமமையும்.

கமகனாவான், வல்ல நூலறிவினாலும், மதியினது பெருமையாலும், கல்லாத நூல்களையும் கற்றோர் வியப்பத் தந்துரைக்கும் புலவன் எனக் கொள்க.

வாதியாவான், காரணமும் மேற்கோளும் எடுத்துக் காட்டிப் பிறன் கோள் மறுத்துத் தன்மத நிறுத்திப் பாடுவோன்.

வாக்கியாவான், அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கையும் விரித்துச் சொல்லும் ஆசிரியன்.

அவையினமைதியாவது, நல்லோரிருந்த நல்லவையுந் தீயோரிருந்த தீயவையுமெனக் கொள்க. பாடுதன் மரபும், தாரணைப் பகுதியும் வன்ன மரபுள்ளும் தாரணை நாலுள்ளுங் கண்டு கொள்க.

* ஆனந்த முதலிய ஊனம் செய்யுளின் குற்றமாம் எனக் கொள்க. செய்யுளாவன, தனிநிலைச் செய்யுளும், தொடர்நிலைச் செய்யுளும், தனிப்பாதச் செய்யுளும் எனக்கொள்க.

'விளம்பின தியற்கை விரிக்குங் காலை
யாரியந் தமிழினொடு நேரிதி னடக்கி
யுலகின் றோற்றமு மூழியி னிறுதியு
மலகி றெண்ணுற் றறுவ தியற்கையும்
வேத நாலும் வேதிய ரொழுக்கமு
மாதி காலத் தரசுசெ யியற்கையு
மப்பா லுட்டா ரறியும் வகையா
லாடியும் பாடியு மமைவரக் கிளத்தல்.'

நரம்பாவன,

'குரலே துத்தங் கைக்கிளை யுழையிளி
விளரி தாரமென வேழு நரம்பே.'

பண்ணாவன, பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழெனு நான்கு.

---

* 'ஆனந்தம் எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் எனப் பாட்டுடைத் தலைவனைப்பற்றி வரும். முதலிய என்றதனால், ஒன்பது வழுவும் ஆறு மலைவுங் கொள்க' என்பது பழைய குறிப்பு.

திறனாவன,

"அராகம் நேர்திறம் உறுப்புக் குறுங்கலி
யாக நான்கும் பாலையாட் டிறனே
நைவளங் காந்தாரம் பஞ்சுரம் படுமலை
மருளொடு செந்திறங் குறிஞ்சியாட் டிறனே,"

"நவிரே வடுகு குறிஞ்சியே திறமென்
றிவைநான் காகு மருதயாட் டிறனே
நேர்திறம் பியாதிறம் யாமயாழ் சாதாரி
யென்றிவை நான்குசெவ் வழியாட் டிறனே."

பாலையாவன, செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கொட்டிப்பாலை, இளப்பாலை, விளரிப்பாலை என வேழும் என்ப.

கூட்டமாவன, எழுவகை யகத்திற் கண்டுகொள்க.

திணையாவன, அகமே, அகப்புறமே, புறமே, புறப்புறமே என நான்கென்ப.

திணையின் பகுதியாவும் பொருளதிகாரத்திற் கண்டுகொள்க.

இருதுவாவன,

"காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனி லொடுமுது வேனில்,"

எனவாறும்.

காலமாவன, நற்காலமும் தீக்காலமும் என்பன.

மணமெட்டாவன:

"ஒப்பானுக் கொப்பாளோர் பூப்பு நிகழ்ந்தபி
னிப்பான் மதிதோன்று வெல்லைக்க—ணப்பாற்
றருமமே போற்றீமுன் றக்கானுக் கீதல்
பிரமமே யென்ப பெயர்,"

என்பதனாற் பிரம மறிக.

"கொடுப்பான் கொடுத்துழிக் கொண்ட பொழுது
மடுப்பாங் கடுத்தற் கமைந்தார்—மடுப்பா
னிரண்டா மடங்குபே தித்தலே மாய
னிரண்டா மணத்தி னியல்பு,"

என்றமையாற் பிரசாபத்திய மறிக.

"இற்குரம்போ லொப்பவருக் கொப்பவ ரென்றொட்டாப்
பொற்குளம்பி னூடு புனலினிடை—முற்கொணர்ந்து
வாரொரடுங்கு மென்முலையை வாழ்க்கைக் கமைப்பரே
லாரிடம்பே ராகு மதற்கு"

என்றமையால் ஆரிட மறிக.

"தெய்வந் தொழுதுபெற்ற சேயிழையை யொப்புமையா
னெய்வந்த தீமுன்று நேர்வதூஉங்—கைவந்த
வேள்வி யகத்து வினையான் விழைபொருளா
யாள்வதூஉந் தெய்வமண மாம்"

இதனால் தெய்வமண மறிக.

"முன்னை வினையின் முறையாற் களவியலாற்
கன்னியைக் கண்டடன் காதலித்துப்—பின்ன
ருளசிக ழார்வ முரைத்தொத் துறுதல்
வளமிகுகாந் தர்ப்ப மணம்"

என்றமையாற் காந்தர்வமண மறிக.

"வில்லேற்றல் வேழமட றன்மெய் மதவலியாற்
கொல்லேற்றை நண்ணியே கொள்ளுதல்பொன்—னல்லாட்
கரியன வீத லசுர மசுர
ரரியன வாற்று மணம்"

என்றமையால் அசுரமண மறிக.

"பூந்துகிலான் வன்மைமே விட்டுப் புதவடைந்து
பாய்ந்து வலித்துக்கைப் பற்றிக்கொண்—டேந்திழையை
யெய்தப் படுதெ விராக்கதமா மென்பரே
மைதீர்ந்தார் சொன்ன மணம்"

என்றமையால் இராக்கதமண மறிக.

"மஞ்சிற் களித்தல் மயங்குதல் மாழாத்த
வஞ்ச லறிவிழத்தல் சாவுதலிற்—றுஞ்சின
மின்னை மறத்தால் விழைந்தகடு செய்வதே
பின்னைப் பிசாச மணம்"

என்பதனாற் பிசாசமண மறிக.

எழுத்தும் சொல்லும் அவ்வதிகாரங்களாலறிக. செந்துறை மார்க்கமும், வெண்டுறை மார்க்கமுமாவன:

"நாற்பெரும் பண்ணு மதினெழு திறனுந்
தோற்றிய வின்னிசை செந்துறை யாகும்
ஏனைய வெல்லாம் வெண்டுறையாகும்."

என்பதனுலறிக.

தந்திரவுத்தி, முன்பே சொல்லியன.

தருக்கமாவது, நியாயசூடாமணி, புதியாநுட்பம் ஆதியவற்றாட் கண்டுகொள்க.

180. விரவியல், மணிப்பிரவாளம், கிளவிக்கவி, துறைக்கவி, பிரளிகை முதலிய விணுவிக் கவிகள்.

இடையே வடவெழுத் தெய்தில் விரவிய லீண்டேதுகை
நடையேது மில்லா மணிப்பிர வாளநற் றெய்வச்சொல்லின்
இடையே முடியும் பதமுடைத் தாங்கிள விக்கவியின்
தொடையே துறைநற் பிரளிகை யாதி துணிந்தறியே.

(இ-ள்.) வடவெழுத்து விரவுவது விரவியலாம்; வடமொழி விரவின் மணிப்பிரவாளமாம்; அதற்கெதுகையில்லை. கிளவிக்கவியும், துறைக்கவியும், பிரளிகை முதலிய விணுவிக்கவியும் அறிக. (எ-று.) (சo)

181. துறைக்கவியும், கிளவிக்கவியும் ஆமாறும், செய்யுளின் பயனும்.

மறங்களி தாது வயிரபஞ் சம்பிர தந்தவசுக்
குறங்கணி கம்முத லாந்துறை யாகுங் குவலயத்தே
திறம்பல போக்குங் கிளவிக் கவிசெய் யுளின்பயனே
அறம்பொரு ளின்ப மோடுவீ டெனவறி ஆரணங்கே!

(இ-ள்.) மறம், களி, தாது, வயிரபம், சம்பிரதம், தவசு, குறம், கணிகம் முதலான எல்லாந் துறைக்கவியாம்; திறம் பல போக்குங் கிளவிக்கவி; செய்யுளின் பயன் தர்மார்த்த காமமோக்ஷம் என்ப. (எ-று.) (சக)

அலங்கார முற்றும்.

அந்தச் சிறப்பு

தடமார் தருபொழிற் பொன்பற்றி காவலன் றன்மொழிந்த
படிவீர சோழியக் காரிகை நூற்றெண் பஃதொடொன்றின்
திடமார் பொழிப்புரை யைப்பெருந் தேவன் செகம்பழிச்சக்
கடனுக வேநவின் றன்றமிழ் காதலிற் கற்பவர்க்கே.

நேரிசை வெண்பா

ஓரா தெழுதினே ளேருரையை யொண்பொருளை
யாராய்ந்து கொள்வ தறிவுடைமை—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

குறிப்புரை

பாயிரம்

பாயிரப்பாட்டுக்களுக்கு உரையாசிரியரால் உரை எழுதப் பெருமையின் ஈண்டு அவற்றிற்கு உரை எழுதப் பெற்றது.

1. (**இதன் பொருள்**) 'விண்ணுலகினும் மண்ணுலகினும் உள்ள யாவரினும் மேலானவனும், அரசமரத்தினது நீழலிலே மேன்மையும் தகுதியும் வாய்ந்து வீற்றிருந்தவனும், தொகுதி யான உண்மையாகிய தவத்திறைற் கூடப் பெற்றவனும், எவ் வளவு சிறந்த ஞானிகளாலும் இத்தன்மையை உடையன் என மனத்தினால் கருதவும் மொழியினுற் சொல்லவும் எட்டாதவ னும், இயல்பாகவே மும்மலங்களினின்று நீங்கி இருப்பவன் ஆதலின் தூயன் என்று சொல்லத்தக்கவனுமாகிய புத்த தேவனுடைய திருவடிகளாகிய மலர்களைத் தலையிலே அழ காகச் சூடிக்கொண்டு தமிழ் இலக்கண நூலைக் கூறப்புக் கவன் யார்?' எனில், பசுமையாகிய சோலைகளாற் சூழப்பட்ட பொன் பற்றி என்னும் ஊருக்குத் தலைவனுகிய புத்தமித்திரன் ஆவன் (எ-று.)

2. (**இ-ள்.**) 'எல்லோராலும் ஆராய்ந்து அறிதற்குரிய சிறந்த குணங்களை உடைய அவலோகிதரிடத்து அகத்திய மகா முனிவர் தமிழ் இலக்கணங் கேட்டு அத்தமிழ் இலக்கணத் திற்குரிய தமிழ்மொழி வழங்கும் இந்நாட்டில் உள்ளாருக்காக அவர் இயற்றிய குளிர்ந்த தமிழ் இலக்கணத்தின் பொருளை வேறொரு நூலாகச் சுருக்கிக் கூற (அந்நூலைக் கற்றறிந்தோர் பலர் உள்ள இந்நாட்டின்கண் புன் புலமையுடையவனுகிய) நீயும் இருக்கின்றாயோ?' என்று (ஏந்திய ஆபரணங்களை உடை யாள்) கேட்பாளாயின், (பறவைகளுக்குட் சிறந்த) கருடன் பறக்கும் பெரிய ஆகாயத்தில் (மிகச் சிறிய) ஈக்களும் பறவா நிற்கின்றன; (இதனைக் குற்றமாகக் கொள்வாருளரோ?

என்று நான் மறித்துக் கேட்பின்) இதற்கு ஏந்திழை என்ன மறுமொழி கூறுவாள் ? (எ-று.)

அவலோகிதர் பௌத்த மதப் பெரியார்களுள் ஒருவர். வருவிக்கப்பட்ட சொற்கள் இசையெச்சங்கள். இச்சொற்கள் இச்செய்யுளிற் கூறப்பட்ட உபமானத்துக்கு ஏற்ப வருவித் துரைக்கப்பட்டன. 'கொல், ஓ' என்பன அசைகள்.

'பறவைகளுட் சிறந்த கருடன் பறக்கும் பெரிய ஆகாயத்தில் மிகச் சிறிய ஈக்களும் பறத்தல் போல, அறிஞர்களுள் சிறந்தவராகிய அகத்திய மகா முனிவர் இலக்கணம் இயற்றிய பெரும்பொருட் பரப்பினையுடைய தமிழ்மொழியிலே சிற்றறிவினனாகிய யானும் இலக்கணம் இயற்றினேன்; இதில் யாது குற்றம் ?' என்பது கருத்துப் பொருள்.

தமிழ் என்றது, தமிழ் மொழியை உணர்த்தி நின்றது. ஈண்டு அஃது அதன் இலக்கணத்தை உணர்த்தியது; இது பொருளாகு பெயர்.

3. (இ-ள்.) சான்றோர்களின் பாக்களிற் பொருந்தி வரும் இன்பத்தைக் கொண்டுள்ள சிறந்தனவாகிய எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணி இலக்கணம் என்னும் ஐந்து இலக்கணங்களையும் கூறும் பரவிய ஐந்து அதிகாரங்களையும் சுருக்கி அவற்றுடன் இடையிடையே வடநூன் மரபையும் புகன்றுகொண்டு தேனனது பொருந்திய வெற்றி மாலையையும் தேர்ச் சேனையையும் உடைய வீரசோழனுடைய திருப்பெயராலே இத்தமிழ் உலகின்கண் ஒரு நூலாக இயற்றுவேன் (எ-று.)

'பாமேவு, நாமேவு, நல்' என்பனவற்றைப் 'பஞ்ச அதிகாரம்' என்பதனோடு இயைக்க. ஈண்டு 'அதிகாரம்' என்றது பல இயல்களின் தொகுதியைக் குறித்து நின்றது என்க. சேனாவரையர் தொல்காப்பியம், சொல்லதிகாரத்தின் முதற் சூத்திரத்து விசேட உரையில் 'அதிகாரம் என்னுஞ் சொற்குப் பொருள் பலவுளவேனும், ஈண்டு அதிகாரம் என்றது ஒரு பொருணுதலி வரும் பலவோத்தினது தொகுதியை என்க,' என்றதனை ஈண்டு நோக்குக. இவ்விலக்கணம் மிகுதி பற்றியதாம் என்க. என்னெனின், சில நூற்களுள் ஓவ்வோரியலே ஓவ்வோரதிகாரமாக அமைதலும் உளது ஆகலின் என்க.

நூல்

2. சொல்லதிகாரம்

க. வேற்றுமைப் படலம்

இப்படலத்தில், பெயர்ச்சொற்கள் வேற்றுமைகளை ஏற்கும் வகை கூறப்படுகின்றது.

இப்படலத்திற் பெயர்ச்சொற்களுக்குக் கூறப்பெற்றுள்ள இலக்கணத்தை நாம் முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும். இன்றேல் இப்படலத்திற் கூறப்படும் மற்றை இலக்கணங்கள் விளங்கா.

இப்படலத்திற் பெயர்ச் சொற்களுக்குக் கூறப்பட்ட இலக்கணங்களாவன; 'பெயர்ச்சொற்கள் முதல் வேற்றுமையை ஏற்ற பிறகே பொருளை உணர்த்தும்: முதல் வேற்றுமையை ஏற்காதபோது பொருளை உணர்த்தா; அந்த நிலையில் அவை பிரகிருதிகள் எனப்படும்,' என்பனவும், 'இரண்டு முதலிய வேற்றுமைகளுக்கு உருபிருத்தல் போல முதல் வேற்றுமைக்கும் உருபுகளுண்டு; அவை, சு, அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்னும் ஏழுமாம்,' என்பனவுமாகும்.

அவற்றை இப்படலத்தில் "ஒருவ னொருத்தி" என வரும் இரண்டாம் பாட்டின் உரையில், 'ஒருவனைக் கருதின சொல்லும், ஒருத்தியைக் கருதின சொல்லும், பலரைக் கருதின சொல்லும், ஒன்றைக் கருதின சொல்லும், பலவைக் கருதின சொல்லும், ஒருவனைச் சிறப்பித்த சொல்லும், ஒருத்தியைச் சிறப்பித்த சொல்லும், ஒன்றைச் சிறப்பித்த சொல்லும் எனப் பெயர்ச் சொல்லெல்லாம் எட்டு வகைப்பட்ட பிரகிருதியாம்,' எனவும், ஐந்தாம் பாட்டின் உரையில், 'முன் சொல்லப்பட்ட எட்டுப் பிரகிருதிக்கும் பின்னுக்ச் சொல்லின் பொருண்மாத்திரத்தை விளக்குதற் பொருட்டாகச், சு, அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்று சொல்லப்பட்ட ஏழுவாய் வேற்றுமைப் பிரத்தியம் ஏழும் வரும்; வருமிடத்து ஒருவனைக் கருதின சொல்லின் பின்னும், ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்னும், ஒன்றைக் கருதின சொல்லின் பின்னும், சு என்னும் பிரத்தியம் ஒன்றே வரும்: பலவைக் கருதின சொல்லின் பின்பு சு, கள் என்னும் பிரத்திய

பிரண்டும் வரும். எல்லாவிடத்தும் சு என்னும் பிரத்தியமழிந்து வரும்.

'எல்லாவிடத்தும் அழியுமாயின் வருதற்குக் காரணமென்னெனின், வடமொழியான் வாரி யென்னுஞ் சொல்லை வை, முதல் வேற்றுமை ஏக வசனத்தைப் பொருள் விளக்குதற் பொருட்டு எவ்வண்ணம் இட்டழித்தான், இவனும் அது போல ஆக்கி அழித்தாலல்லது பதமாகாதென்று இட்டழித்தான் என்க. ஒருவனைச் சிறப்பித்த சொல்லின் பின்பும், ஒருத்தியைச் சிறப்பித்த சொல்லின் பின்பும், ஒன்றைச் சிறப்பித்த சொல்லின் பின்பும் அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்னும் ஆறு பிரத்தியமும் வரும். இவை எல்லா விடத்தும் ஆவனவல்ல. பலரைக் கருதின சொல்லின் பின்பு ஆறு பிரத்தியமுமாம்,' எனவும்; 'சாத்தன், கொற்றன் என ஒருவனைக் கருதின சொல்லின் பின்பும், சாத்தி, கொற்றி என ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்பும், யானை குதிரை என ஒன்றைக் கருதின சொல்லின் பின்பும் சு என்னும் எழுவாய் வேற்றுமைப் பிரத்தியம் நிறுத்துக. நிறுத்தவே சொல்லின் பொருண்மாத்திரத்தை விளக்கிற்றும். சொல்லாவது, சாத்தனென்றுச்சரிக்கப்படாநின்ற சொல். அதன் பொருளாவது, கரசரணாதியவயவங்களை உடையதொரு பிண்டமாய், 'சாத்தனுவான் எவன்?' என்று வினாவினார்க்கு 'இவன்' என நின்றுற் சொல்லப்படுகின்றான் யாவன், அவன் எனக் கொள்க. 'எங்குமழியு மேறியசு' என்பதனால், அச்சொற்களின் பின்பு நின்ற சுவ்வை உலோபித்துச் சாத்தன், கொற்றனென்று உச்சரித்துக் கொள்க,' எனவுங் கூறியவற்றாலும்; முற்குறித்த இரண்டாம் ஐந்தாம் பாட்டுக்களாலும் உணர்க.

பிரயோக விவேகத்திலே பிறர் மதங் கூறலாகக் கூறப்பட்ட 'பன்னும் பகாப்பதம்' என்னும் ஏழாம் பாட்டின் விசேட உரையில், "இறை, உமை, தையல், கோ, வேள், பெண்டு, நாய், நரி, நிலம், நீர் என்னும் பெயர்ப் பகாப்பதங்களைப் பிராதிபதிகமென்றும்; அவை பிராதிபதிகமாவதன்றி முதல் வேற்றுமை உருபு பேற்றனவல்லவென்றும்; அவை எழுவாயாகாவென்றும்; பின்னர் அன், அர், ஆள், ஆர், கள் என்னும் பிரதமா விபத்தியாகிய முதல் வேற்றுமை உருபோடு புணர்ந்து இறைவன், இறைவர்,

உமையாள், தையலாள், தையலார் என நிற்குமென்றும்; இறை கடியன், இறை காக்கும், உமை அமர்ந்து விளங்கும், தையல் வரும் என அன்னீறும் ஆளீறும் பெருது நின்றவற்றை அன் னீறும், ஆளீறும் என்னுஞ் சுப்பிரத்தியய முதலாயின வந்து லோபமாயின என்றும் கூறுவர். அன்றியும், கோ, வேள், பெண்டு என்னும் உயர்திணை இயற்பெயரும்; நாய், நரி முத லிய அஃறிணை இயற்பெயரும்; அவன், அவர், அவள், அது, அவை என்பன போல ஒருமை ஈறும் பன்மை ஈறும் காட் டாது நின்று, பின் கள் ஈறு பெற்று, கோக்கள், வேள்கள், பெண்டுகள், நாய்கள், நரிகள் என வெகு வசனமாறுற்போல வென்று கூறுவர்," என்று கூறியவற்றை ஈண்டு நோக்குக.

"'சாத்தன் என்பது ஒருவனைக் கருதின சொல்,' என்பதன் கருத்து, சாத்தன் என்னும் ஓராடவனுகிய பொருளை உணர்த்தி நின்ற சொல் என்பதன்ருே?" எனின், சாத்தன் என்னும் பிர கிருதி ஆண்பால் என்னும் பாலைக் குறித்து நின்றதேயன்றி, அப்பெயரையுடைய ஓராடவனுகிய பொருளை உணர்த்தி நின்ற தன்று என்பதே இந்நூலாசிரியர் போன்ருர் கருத்தாகும்.

இது வடமொழிக்குரிய இலக்கணமானுலும், தமிழ் மொழிக்கும் உரியதாம் என்பதே இவர்கள் கருத்தாகும். இன் ஞேர் முதல் வேற்றுமையுருபுகள் என்று கூறியனவற்றுள் சு என்பது ஒழிந்த அர், ஆர் முதலியன தமிழ் இலக்கண நூற் களில் இறுதி நிலைகள், அல்லது விகுதிகள் எனப்படும்.

'சாத்தன் முதலிய பிரகிருதிகள் சு முதலிய முதல் வேற றுமை உருபுகளோடு சேர்ந்த பின்பே பொருளை உணர்த்தும்; சேராத போது உணர்த்தா,' என்னும் இந்நூலாசிரியருடைய கொள்கை, அஃது, 'அன் முதலிய இறுதிநிலை உயர்திணை ஆண் பாலை உணர்த்துவனவாயிருப்பினும், பொன் என்பது முத லிய முதனிலையோடு சேர்ந்த பிறகே ஆடவன் முதலிய பொருள் உணர்த்தும் ; அவை அம்முதனிலைகளோடு சேராத போது ஆடவன் முதலிய பொருளை உணர்த்தா,' என்று கொள்ளும் தமிழ் இலக்கண நூற்கொள்கையைப் போன்றதாகும். 'அன் முதலிய இறுதிநிலைகள் பொன் முதலிய முதனிலையோடு சேர்ந்த பின்பே ஆடவன் முதலிய பொருள்களை உணர்த்தும் என்பது தமிழ் இலக்கண நூற்கொள்கை என்பதை எதனுற் பெறுத

லாம் ?' எனின், தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையிய லின் முதற்சூத்திரமாகிய

'இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே,'

என வருஞ்சூத்திரத்தாற் பெறுதலாகும், இறுதி நிலைகளும் இடைச்சொற்களாதலின். ஒருவனைக் கருதின சொல்லின் பின் பும், ஒருத்தியைக் கருதின சொல்லின் பின்பும், ஒன்றனைக் கருதின சொல்லின் பின்பும் சு என்னும் எழுவாய் வேற்றுமை உருபு வரும் என்றும்; அஃது அழிந்து சாத்தன், சாத்தி, குதிரை என்பன சாத்தன், சாத்தி, குதிரை என்றே நிற்கும் என்றும்; பலவற்றினைக் கருதின சொல்லின் பின்பு சுவ்வும் கள்ளுமாம் இரண்டு எழுவாய் வேற்றுமை உருபுகளில் ஒன்று வரும் என்றும்; பலவற்றில் கள் என்னும் உருபுவரின், மரம் என்பது மரங்கள் என்றாய், 'மரங்கள் நின்ற' என வரும் என் றும்; சு என்னும் உருபு வரின், அஃது அழிந்து மரம் என்பது மரம் என்றே நின்று, 'மரம் நின்ற' என வரும் என்றும்; பல ரைக் கருதின சொல்லின் பின்பும், ஒருவனைச் சிறப்பித்த சொல், ஒருத்தியைச் சிறப்பித்த சொல், ஒன்றனைச் சிறப்பித்த சொல் என்னு மூன்று சிறப்புச் சொற்களின் பின்பும் அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்னும் முதல் வேற்றுமை உருபுகள் ஆறும் வரும் என்றுங் கொள்க.

'இனி, ஒருவனைக் கருதின சொல், ஒருத்தியைக் கருதின சொல், ஒன்றனைக் கருதின சொல், பலவற்றைக் கருதின சொல், பலரைக் கருதின சொல் என்னும் ஐம்பால்களைக் கருதின சொற்களோடு கூட்டிக் கூறப்பட்ட ஒருவனைச் சிறப்பித்த சொல், ஒருத்தியைச் சிறப்பித்த சொல், ஒன்றனைச் சிறப்பித்த சொல் என்பன யாவை?' எனின், சாத்தன், கொற்றன் என்பன முதலிய ஒருவனைக் கருதின சொற்களும், சாத்தி, கொற்றி என் பன முதலிய ஒருத்தியைக் கருதின சொற்களும்; நரி, நாரை முத லிய ஒன்றனைக் கருதின சொற்களுமாகிய இம்மூவகைச் சொற்க ளோடும் பலரைக் கருதின சொற்களுக்குரிய அர் முதலிய முதல் வேற்றுமை உருபுகள் கூடி, சாத்தனார், கொற்றனார் எனவும்; சாத்தியார், கொற்றியார் எனவும்; நரியனார், நாரையார் எனவும் வருவனவாகும் என்று கொள்க.

இப்படலத்தின் ஐந்தாம் பாட்டின் உரையில், 'ஒருவனைச் சிறப்பித்த சொல்லின் பின்பும், ஒருத்தியைச் சிறப்பித்த சொல் லின் பின்பும், ஒன்றைச் சிறப்பித்த சொல்லின் பின்பும் அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்னும் ஆறு பிரத்தியமும் வரும்; (இவை எல்லாவிடத்தும் ஆவன அல்ல;) பலரைக் கருதின சொல்லின் பின்பு ஆறு பிரத்தியமுமாம்,' என்று உரை யாசிரியர் கூறியவற்றை ஈண்டு நோக்குக.

மேற்குறித்த பாட்டில்,

'சிறப் புப்பல ரிற்கள் ளொழிந் தனவே'

என்று பாடங் காணப்படுகின்றது. வேறோர் ஏட்டில்,

'சிறப் புப்பலாசுவ மொழிந் தனவே'

என்னும் பிழையான பாடங் காணப்படுகின்றது. இப்பாடத் தையும், இப்படலத்தின் ஐந்தாம் பாட்டின் உரையில் உரை யாசிரியர், 'ஒருவனைச் சிறப்பித்த சொல்லின் பின்பும், ஒருத்தி யைச் சிறப்பித்த சொல்லின் பின்பும், ஒன்றைச் சிறப்பித்த சொல்லின் பின்பும் அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என் னும் ஆறு பிரத்தியமும் வரும். பலரைக் கருதின சொல்லின் பின்பு ஆறு பிரத்தியமுமாம்,' என்று கூறியதையும் நோக்கின்,

'சிறப் புப்பல ரிற்சுவ் வொழிந் தனவே'

என்று அப்பாட்டின் அப்பாடம் இருத்தல் வேண்டும் என்பது விளங்குகின்றது. பழைய பதிப்புக்களில்,

'சிறப் புப்பல ரிற்கள் ளொழிந் தனவே'

என்னும் பாடமே காணப்படுகின்றது. இவற்றை ஆய்ந்து ஏற்புடையதைக் கொள்க.

இப்படலத்தின் ஐந்தாம் பாட்டின் உரையின் ஈற் றிலே 'விழுமியான், விழுமியாள், விழுமியோர் என்றாகலு முண்டு,' என்றது, முதற்பாட்டிற் கூறப்பட்ட முதல் வேற் றுமை உருபுகளோடு ஆன், ஆள், ஓர் என்பன விதந்து கூறப் படாமையின், இவற்றையும் முதல்வேற்றுமை உருபுகள் என்று கொள்க என்றற்குக் கூறப்பட்டதாம் என்று கொள்க. இவற்றுள் ஓர் என்பது ஆர் என்பதன் திரிபாகும்.

பிரயோக விவேக நூலார் பிறர் மதமாகக் கூறிய 'பன் னும் பகாப்பதம்' என்று தொடங்கும் பாட்டின் உரையில், இவற்றையும் முதல் வேற்றுமை உருபுகளாகக் கூறியிருத்தலை

ஈண்டு நோக்குக. இஃது இக்குறிப்புரையில் முன்னர் எடுத்துக் குறிக்கப்பெற்றுளது.

தமிழ் இலக்கண நூலார் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், கள் முதலியவற்றை இறுதிநிலைகளாக (விகுதிகளாக)க் கொள்வதன்றி முதல் வேற்றுமையுருபுகளாகக் கொள்ளார் என்பதனைக் கருதிப் பிரயோக விவேக நூலார், தம்மதமாகக் கூறிய 'தேற்றுந் தமிழுக்கு' என்று தொடங்கும் 7-ஆம் பாட்டில்,

'தேற்றுந் தமிழுக் கெழுவாய் விபத்தி திரிபில்பெயர்'

என்று கூறி, அக்கருத்து நன்கு விளங்க உரையும் எழுதினர். அஃது இந்நூலின் 30-ஆம் பக்கத்தில் அடிக்குறிப்பாகக் காட்டப்பெற்றிருக்கின்றது.

இப்படலத்தில் 6-ஆம் பாட்டின் உரையில், 'வேளாளரை, நாட்டாரை, வேளாளர்களை, நாட்டார்களை, தவசிகளை, நம்பிமாரை என்புழி இரண்டாம் வேற்றுமையின் முன்பு எழுவாய் வேற்றுமையின் உருபுகள் வந்தவாறு காண்க,' என்றதை நோக்குக.

மேற்காட்டப்பட்ட உதாரணங்களில் இரண்டாம் வேற்றுமையின் உருபாகிய ஐ என்பதற்கு முன் அர், ஆர், அர்கள், ஆர்கள், கள், மார் என்னும் முதல் வேற்றுமையின் உருபுகள் வந்திருத்தலை அவற்றைப் பிரித்தறிக. இவற்றிற்கு முன்னே சாத்தனை அழைத்தான், கொற்றியைக் கொடுத்தான், கடலை நீந்தினன் எனக் காட்டப்பட்ட உதாரணங்களுள் இரண்டன் உருபுக்கு முன் இம்முதல் வேற்றுமை உருபுகள் வந்திலாமையையும் இவற்றுள் அவை வந்திருத்தலையும் ஆய்ந்தறிக. இங்ஙனமே எட்டாம் வேற்றுமை ஒழிந்த மற்ற மூன்று முதலிய வேற்றுமை உருபுகள் தமக்குமுன் இம்முதல் வேற்றுமை உருபுகளைப் பெறுமலும் பெற்றும் வருதலை அந்த அந்த வேற்றுமைகளுக்குக் காட்டப்படும் உதாரணங்களை நோக்கி அறிக.

இனி இப்படலத்தின் 9-ஆம் பாட்டினும், அதன் உரையினும் தன்மைப் பெயர்க்கும், முன்னிலைப் பெயர்க்கும், வினாப் பெயர்க்கும், தன் என்னும் பெயர்க்குங் கூறப்பெற்ற விதிகளை நன்காய்ந்து அறிந்துகொள்க.

வேற்றுமைப் படலத்தின் குறிப்புரை முற்றிற்று.

உ. உபகாரகப் படலம்

முன் அமைந்த வேற்றுமைப் படலத்தின் முதற்பாட்டிலே 'பெயர் வேற்றுமை எழுவாய் முதல் எட்டாம்' எனவும், 'காரகம் கட்டார் கருத்தா முதல் ஆறுளவாம்' எனவும் கூறி வைத்து, அம்முறைப்படி முன்னே கூறிய எட்டு வேற்றுமையின் உருபுகளையும், அவற்றின் பொருள்களையும் அப்படலத்திற் கூறினர். இப்படலத்திலே பிற்கூறிய காரகங்கள் ஆறும் இவையாம் என்பதும், அவை இருபத்து மூன்ருதலும், இருபத்துமூன்று காரக பதங்களில் வேற்றுமைப் பிரத்தியங்கள் (வேற்றுமை உருபுகள்) மயங்கி வருதலுங் கூறுகின்றார்.

இருபத்து மூன்று காரக பதங்களின் வகை

கருத்தாக் காரகம்	5
அவதிக் காரகம்	2
கரணக் காரகம்	2
கோளிக் காரகம்	3
கருமக் காரகம்	7
ஆதாரக் காரகம்	4
	23

இப்படலத்தில் காரகங்களுக்கு உதாரணங் கூறிய இரண்டாம் பாட்டின் உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்ட 'இந்திரன்' என்று தொடங்கும் பாட்டு, பிரயோக விவேகத்தின் பத்தாம் பாட்டாகக் காணப்படுகின்றது. ஆனால், இங்குக் காட்டப்பட்ட பாட்டின் மூன்ரும் அடியின் ஈற்று இரண்டு சீர்கள் 'வகுத்த வழிமுறையே' என்றிருக்கின்றன. பிரயோக விவேகம் பத்தாம் பாட்டின் மூன்ரும் அடியின் ஈற்று இரண்டு சீர்கள் 'பிறக்குமோர் வாக்கியத்துள்' என்றிருக்கின்றன. ஆதலின், இம்மேற்கோட் செய்யுள் வேறு பழைய நூலொன்றின் செய்யுளா, பிரயோக விவேகத்தின் செய்யுளா என்பன ஆய்தற்குரியன. பிரயோக விவேகச் செய்யுளாயின், இந்நூலின் உரையாசிரியர் காலத்திற்குப் பிரயோக விவேக நூலாசிரியரது காலம் பிற்பட்டதாகலின், அஃது அவ்வுரையாசிரியர் காட்டின மேற்கோட்செய்யுள் என்று கொள்ளுதற்குரியதாகாது. அம்

மேற்கோட்செய்யுள் உள்ள 41-ஆம் பக்கத்தினது அடிக்குறிப்பையும் ஈண்டு நோக்குக.

கருத்தாக் காரகம் ஐந்தனுள் தான் தெரி கருத்தாவுக்கு

'விழுமியோராற் செய்யப்படாநின்றது நன்மை.

'சாத்தனால் எறியப்பட்டது கல்.'

'கொற்றனால் கொள்ளப்பட்டது வீடு.'

என்பன உதாரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

தான்தெரியாக் கருத்தாவினுக்குத்

'தேவதத்தன் சோற்றை அடுகின்றான்.'

என்பது உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

தான் தெரி கருத்தாவினுக்குக் காட்டப்பட்ட உதாரணங்களிலே கருத்தாப் பொருளைக் காட்டுதற்குரியதாகிய ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு இருக்கின்றது. ஆதலின், அவற்றுள் கருத்தாப் பொருள்கள் மற்றொன்றின் துணையானன்றித் தாமே அறியத்தக்கனவாயிருத்தலின், அவை தான் தெரி கருத்தாவாயின. தான் தெரி கருத்தாவாவது, மற்றொன்றன் உதவியினாலன்றித் தானே விளங்கி நிற்கும் கருத்தாவாம் என்று கொள்க. தான் தெரியாக் கருத்தாவினுக்குக் காட்டப்பட்ட உதாரணத்தில் அவ்விதக் குறி ஒன்றும் இன்மையால், அதில் உள்ள கருத்தாப்பொருள் 'சோற்றை' என்னும் செயப்படுபொருளும், 'அடுகின்றான்' என்னும் வினையுமாகிய இவற்றின் உதவியினால் அறியத்தக்கதாயிருத்தலின், தான் தெரியாக் கருத்தாவாயிற்று. தான் தெரியாக் கருத்தாவாவது, மற்றொன்றன் உதவியால் விளங்குவதன்றித் தானே விளங்கி நிற்காத கருத்தாவாம் என்க.

தான் தெரி கருமம், தான் தெரியாக் கருமம் என்பனவற்றிற்கும் இங்ஙனமே பொருள் கொள்க. தான் தெரி கருமத்திற்குக் காட்டப்பட்ட 'வீட்டை எடுத்தான் தச்சன்' என்னும் உதாரணத்தையும், தான் தெரியாக் கருமத்தினுக்குக் காட்டப்பட்ட 'வீடு தச்சன் கட்டினான்' என்னும் உதாரணத்தையும் ஈண்டு நோக்குக.

அவதி - ஐந்தாம் வேற்றுமை நீக்கப்பொருள். அசையாப் பொருள், நீக்கப் பொருளில் வரின், அசலம் என்னும் அவதியாம்; அசலம் - அசையாப்பொருள்.

'ஊரினின்றும் போனான் தேவதத்தன்.'
'மலையினின்றிழிந்தார் முனிவர்.'

என்னும் இந்த உதாரணங்களில் நீக்கப்பொருளாய் வந்துள்ள ஊர், மலை என்பன அசையாப் பொருள்களாதலின், அசலம் என்னும் அவதி எனப்பட்டன. அசையும் பொருள், நீக்கப் பொருளில் வரின், சலம் என்னும் அவதியாம்.

'குதிரையினின்று விழுந்தான் சாத்தன்.'
'யானையினின்று இறங்கினான் கொற்றன்.'

என்னும் இவ்வுதாரணங்களில் நீக்கப் பொருள்களாய் வந்துள்ள குதிரை, யானை என்பன அசையும் பொருள்களாதலின், சலம் என்னும் அவதி எனப்பட்டன.

ஏழாம் வேற்றுமைப் பொருள்களுள் புலன் அல்லது விடயம் என்பது உரிமையாகும்.

பிரயோக விவேகம் 13-ஆம் பாட்டின் உரையில்,

'விடய முரிமை விளம்புங் காலே.'

என்றார் பிரயோக விவேக நூலாசிரியர். இஃது உரைச் சூத்திரம்.

'காட்டின்கண் புலி நின்றது.'
'கடலின்கண் மீன் திரிகின்றது.'

என்னும் இவ்வுதாரணங்களில் உள்ள காடும், கடலும் முறையே புலிக்கும், மீனுக்கும் வசித்தற்கு உரிமை உடையன வாதலின், இவை விடயஆதாரம் எனப்பட்டன. புலன், விடயம், உரிமை என்பன ஒரு பொருளன. ஆதாரம்—இடப்பொருள். பிரயோக விவேகத்து அப்பாட்டின் உரையில் காட்டப்பட்ட

'கடலுள் மீன் திரிகின்றது.'
'காட்டுள் நரி திரிகின்றது.'
'நெடும்புனலுள் வெல்லு முதலை.'
'பகல்வெல்லும் கூகையைக் காக்கை.'

என்னும் இவ்வுதாரணங்களையும் ஈண்டு நோக்குக.

அயலாதாரமாவது, உரிமையல்லாதது (அயலானது) ஆதாரமாயிருப்பது.

'ஆலின்கண் பசுக் கிடந்தது.'
'யாழின்கண் ஓசை நின்றது.'

என்னும் இவ்வுதாரணங்களில் உள்ள புலிக்குக் காடும், மீனுக்குக் கடலும் உரிமையுடையனவாயிருத்தல் போல முறையே ஆலும் யாழும், பசுவுக்கும் ஓசைக்கும் உரிமை உடையன அல்ல ; ஆதலின், இவை, அயலாதாரம் எனப்பட்டன.

உபகாரகப் படலத்தின் குறிப்புரை முற்றிற்று.

---

௬. தொகைப் படலம்

தொகையை வடமொழிப் புலவர் **சமாசம்** என்பர். தொகைக்கிலக்கணம் கூறும் ஆசிரியர் இரு திறத்தாராவர். அவருள் ஒரு திறத்தார், 'வேற்றுமை உருபும், உவமவுருபும், உம்மையும், வினைச்சொல்லீறும், பண்புச்சொல்லீறும் தொகுதலால், தொகையாயின,' என்பர்.

இக்கொள்கையின்படி தொகை என்பதற்கு உருபு முதலியன மறைதல் என்பது பொருளாம்.

மற்றொரு திறத்தார், 'அந்த அந்தப் பொருளின்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப் படத் தொகுதலால், தொகையாயின,' என்பர். இக்கொள்கையின்படி தொகை என்பதற்குச் சொற்கள் ஒன்றோடொன்று அவ்வப்பொருண்மேல் ஒற்றுமைப்படக் கூடுதல் என்பது பொருளாம்.

இவற்றுள், வடமொழியாளர் பிற்கூறியதையே தொகை இலக்கணமாகக் கூறுவர். ஆதலின், இந்நூலாரும் பிரயோக விவேக நூலாரும் அக்கொள்கையே உடையவராவர். இவர்கள் அக்கொள்கையே உடையவர்கள் என்பதை இந்நூலாசிரியர், இப்படலத்தின் முதற்பாட்டில்,

"நாமங்க ளிற்பொருந் தும்பொருள் நற்றொகை,"

என்றதனாலும்; உரையாசிரியர் அதற்கு 'ஒரு பொருளை விளக்கி நிற்கும் பெயர்ச்சொற்கள் இரண்டு சொல்லாயும், பல சொல்லாயும் பொருந்திய பொருளால் ஒரு சொல்லாய்த் தொகும்,' என்று கூறிய உரையாலும்; பிரயோக விவேக நூலாசிரியர், பிரயோக விவேகம், சமாசப்படலம், இரண்டாம் பாட்டில்,

'ஆக்கிய சொற்கள் தகுதி, அவாய்நிலை, அண்மைநிலை
நோக்கிய மூன்றும் பெறச்சேர் வதுதொகை'

என்று கூறி, அதற்குத் 'தனிநிலைச் சொற்கள், தகுதி முதலிய மூன்றுந் தோன்ற அல்வழியாக வேற்றுமையாக அவ்வப் பொருண்மேற் பிளவுபட்டிசையாது, தம்முட்கூடுவது தொகைநிலையாம்; பிளவுபட்டு விரிந்தது தொகாநிலை,' என்று கூறிய உரையினாலும், பிறவற்றாலும் அறிதலாம்.

தமிழ்மொழியாளருள் ஒரு திறத்தார் பிற்கூறிய கொள்கையையும், ஒரு திறத்தார் முற்கூறிய கொள்கையையும் உடையராவர். தமிழ் மொழியாளருள் சேனாவரையர் கொள்கை பிற்கூறியதே. அதனைத் தொல்காப்பியம், சொல் அதிகாரம், எச்சவியல், 16-ஆம் சூத்திரத்தின் விசேட உரையில், 'வேற்றுமை உருபும், உவம உருபும், உம்மையும், வினைச்சொல்லீறும், பண்புச்சொல்லீறும் தொகுதலின், தொகையாயின என்பாரும்; அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முள் இயைதலின், தொகையாயின என்பாரும் என இருதிறத்தார் ஆசிரியர். 'செய்தான் பொருள்' 'இருந்தான் மாடத்து' என உருபு தொக்கு ஒரு சொல் நீர்மைப்படாதனவும் தொகையாவான் சேறலின், அவற்றை நீக்குதற்கும்; வேழக்கரும்பு, கேழற்பன்றி என்புழித் தொக்கன இல்லை எனினும் தொகை என வேண்டப்படுமாகலின், அவற்றைத் தழுவுதற்கும்; உருபு முதலாயின தொகுதலின் தொகை என்பார்க்கும் ஒட்டி ஒரு சொல் நீர்மைப்படுதலும் தொகை இலக்கணம் எனல் வேண்டும். அதனான், உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினும் செல்லாமையான், எல்லாத் தொகைக்கண்ணும் செல்லுமாறு ஒட்டி ஒரு சொல்லாதல் தொகை இலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரியருக்கு இதுவே துணிவெனப்படும் என்பது' என அவர் கூறியதனாலறிக. இலக்கண விளக்க ஆசிரியரும் இக்கருத்து உடையவரே. அவர் கருத்தும் இதுவேயாம் என்பதனை இலக்கண விளக்கம் 334-ஆம் சூத்திரத்தானும் அதன் உரையானும் அறிக. மயிலைநாதர், சங்கர நமச்சிவாயப் புலவர், சிவஞான முனிவர், இராமானுசக் கவிராயர் முதலியோர் முற்கூறிய கொள்கையினை உடையராவர்.

இந்நூலின் இப்படலத்தின் முதற்பாட்டின் உரையிலே, 'அவ்வாறு தொகுமிடத்து வேற்றுமை அழிந்தும், ஒரோ

விடத்து வேற்றுமையும் வேற்றுமைச் சார்வாகிய சொற்களும் அழிந்தும் தொகும்,' என்றது, முறையே வேற்றுமை உருபு தொக்க தொகையையும், வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையையுமாம் என்றுணர்க.

முதல் வேற்றுமையின் தொகைக்குக் காட்டப்பட்ட உதாரணமாகிய

'மார்கழி திங்கள்—மார்கழித் திங்கள்'

என்பது 'சு' என்னும் முதல் வேற்றுமை உருபு (முதல் வேற்றுமைப் பிரத்தியம்) அழிந்து தொக்கதாம் என்று கொள்க.

மேற்படி பாட்டின் உரையில் உரையாசிரியர் முதல் வேற்றுமை முதலிய ஏழு வேற்றுமைகளின் உருபு தொக்க தொகைக்கு உதாரணங் காட்டிப் பின்பு, உருபும் பயனும் உடன் தொக்க தொகைக்கு,

'தயிரினுற் குழைத்த சோறு—தயிர்ச்சோறு'

'மருந்துகளாலாக்கப்பட்டஎண்ணெய்-மருத்தெண்ணெய்'

'சங்கரனுக்கு மகனுயுள்ள சாத்தன்—சங்கரன் சாத்தன்'

என்பவற்றை உதாரணமாகக் காட்டிப் பிறகு, "இனி, 'இடைச்சொல் அழிதொகை' என்பதும் ஒன்று உண்டு" என்று கூறி, அதற்கு,

'இருப்பைப் பாலாற் கொள்ளப்பட்ட நெய்-இருப்பை நெய்'

'பாண்டிநாட்டுக் கடலின் கரை—பாண்டிக் கரை'

என்பவற்றை உதாரணமாகக் காட்டி, "இதனை வடமொழிப் புலவர் 'மத்திம பத லோபம்' என்பர்" என்றூர்.

இடைச்சொல் அழிதொகையாவது, முதன் மொழிக்கும் ஈற்று மொழிக்கும் இடையிலுள்ள சில சொற்கள் அழிந்து அவ்விருமொழியும் தொகப்பெறுவதாம் என்க.

'ஆயின், உருபும் பயனும் உடன் தொக்க தொகைக்கும் இடைச்சொல் அழிதொகைக்கும் வேற்றுமையாதோ?' எனின், உருபும் பயனும் உடன் தொக்க தொகையாவது, நிலைமொழியின்கண் அமைந்து இருத்தற்குரிய வேற்றுமை உருபும் அதன் பயனிலையாகிய வினைச்சொல்லும் அழிந்து நிற்க, நிலைமொழி வருமொழியுடன் கூடுவதாகும். இடைச்சொல் அழிதொகையாவது, முன்னிற்கு மொழிக்கும் ஈற்று மொழிக்கும் இடையில் வேற்றுமை உருபும் பயனுமாகிய இவற்றுடன் வேறு சில சொற்கள் அழிந்து நிற்க, அவ்விருமொழியும் கூடுவதாகும்,

'மருந்துகளாலாக்கப்பட்ட நெய்-மருத்து நெய்'
எனற்பாலதை
'மருந்துகளாலாக்கப்பட்டஎண்ணெய்-மருத்தெண்ணெய்'
என்றது உலக வழக்கு நோக்கியது போலும்!

3-ஆம் பாட்டு:

தற்புருட சமாசமும், துவிகு சமாசமும்:

தற்புருடனுவது, வேற்றுமைத் தொகை.

வடமொழியாளர் படர்க்கை இடத்தைப் **பிரதமா புருடன்** எனவும், தன்மை இடத்தை **உத்தம புருடன்** எனவும், முன்னிலை இடத்தை **மத்திமபுருடன்** எனவுங் கூறுவர். **தற்புருடன்** என்பது, அவற்றின் வேருனதாம் என்றுணர்க.

துவிகு ஆவது, எண்ணேடு பொருள் புணர்ந்த எண் தொகையாகும். தற்புருடன் முதலிய ஆறு தொகைகளின் தமிழ்ப் பெயர்கள் இந்நூலின் 49-ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பில் குறிக்கப்பட்டிருக்கின்றன. அங்குத் துவிகு என்பது எண்ணேடு புணர்ந்த எண்தொகை எனத் தவருகக் குறிக்கப்பட்டுவிட்டது. அதனை இங்குக் குறித்தபடி திருத்திக்கொள்க. துவிகுத் தொகையில் 'முன்மொழி எண்ணுகியும் பின்மொழி தத்திதார்த்தமாகியும் வரும்" என்ருர் பிரயோக விவேக நூலாசிரியர். அவர் அங்ஙனங் கூறியதனைப், பிரயோக விவேகம், சமாசப்படலம், நாலாம் பாட்டையும் அதன் உரையையும் நோக்கி அறிக. துவிகுத் தொகையின் வகை [இரண்டனுள் ஒருமையொப்புத் துவிகுத் தொகையாவது,] ஒருமைப்பாலாகக் கொள்ளும்படி நிற்பது.

'ஆயிரந்தளி கூடின இடம்—ஆயிரத்தளி'
'பன்னிரு படலம் கூடினது—பன்னிரு படலம்'
என்பன ஒருமைப் பாலாகக் கொள்ளும்படி நிற்றலை அறிக.

பன்மையொப்புத் துவிகுத் தொகையாவது, பன்மைப் பாலாகக் கொள்ளும்படி நிற்பது.

'மூவர் கோக்கள்—முக்கோக்கள்'
என்பது பன்மைப் பாலாகக் கொள்ளும்படி நிற்றலை அறிக.

பிரயோக விவேக நூலாசிரியர் ஒருமை ஒப்புத் துவிகுத் தொகையை ஏகவற்பாவி என்றும், பன்மை ஒப்புத் துவிகுத் தொகையை அநேகவற்பாவி என்றுங் கூறுவர்.

இந்நூலிற் காணப்படும் வடமொழிப் பெயர்களுக்குத் தமிழ்ப் பெயர்கள் பிரயோக விவேகத்தினும், பிரயோக விவேகத்திற் காணப்படும் வடமொழிப் பெயர்களுக்குத் தமிழ்ப் பெயர்கள் இந்நூலினுங் காணப்படுகின்றன.

4-ஆம் பாட்டு

வெகுவிரீகி சமாசம்

வெகுவிரீகி சமாசமாவது, அன்மொழித் தொகை.

உரையாசிரியர் அன்மொழித்தொகை ஏழனுள் சகமுன் மொழித் தொகைக்கு இலக்கணம் கூறுமிடத்து, 'சகமுன் மொழித் தொகையாவது, வடமொழியில் முப்பத்திரண்டாம் வியஞ்சனத்தையும் முப்பத்து மூன்றும் வியஞ்சனத்தையும் உடைய சொல் முன்னுகப் பெற்று, ஒரு மெய்ச்சொல் பின்னுகத் தொகுவதாம்' என்றூர். அங்ஙனம் முன்னுக வரும் அம் மொழி 'ஸஹ' என்பது. இதில் முதல் எழுத்து, வடமொழியின் மெய் எழுத்துக்கள் முப்பத்தேழனுள், முப்பத்திரண்டாம் மெய் யாம்; இரண்டாவது, முப்பத்து மூன்றும் மெய்யாம். இது தமிழில் 'சக' எனத் திரியும்.

'அது தொகுமிடத்து முன்னின்ற மொழியில் இரண்டாம் எழுத்து அழிந்தல்லது தொகாது,' என்றூர். அதற்குதாரணமாகக் காட்டிய 'சநீதி' (சக + நீதி = சநீதி). என்னுந் தொகையில் அங்ஙனம் முன்மொழியின் இரண்டாம் எழுத்து அழிந்து நிற்றலே அறிக. வியஞ்சனம்—மெய்.

இங்கு 'ஒரு மெய்ச்சொல்' என்றதற்குக் காட்டப்பெற்றுள்ள முன்னை அடிக் குறிப்பையும் நோக்குக.

அதில் குறிக்கப்பெற்ற 'சாசுவன்' என்பது 'சக + அசுவன் = சாசுவன்' என்றுனது போலும்!

5-ஆம் பாட்டு

கன்மதாரய சமாசம்

கன்மதாரய சமாசமாவது, பண்புத்தொகையாம்.

இத்தொகையைக் கூறும் பாட்டின் உரையில், 'பின் மொழிப் பண்புத்தொகை' என்றிருப்பதை 'இருமொழிப் பண்புத்தொகை' எனத் திருத்திக்கொள்க. என்னெனின், இத் தொகையைக் கூறும் பாட்டில் இருமொழிப் பண்புத்தொகை

என்றே இருத்தலாலும், உரையாசிரியர் உதாரணங் காட்டிய விடத்து 'இருமொழிப் பண்பு' என்றே கூறியிருத்தலாலும் என்க.

பிரயோக விவேகத்தில் கன்மதாரய சமாசத்தைக் கூறும் இருபத்திரண்டாம் பாட்டில்,

'முன்மொழிப் பண்பிரு பண்பு'

என்றதையும், அதன் உரையில் 'முன்மொழிப்பண்பு, இருமொழிப் பண்பு' என்றிருப்பதையும் ஈண்டு நோக்குக. முற்பதிப்பின்கண் உரையில் 'பின்மொழிப் பண்பு' என்றே குறிக்கப் பெற்றிருந்தது. அது கைத்தவறாக நேர்ந்த பிழையேயாம் என்க.

உரையாசிரியர் இருமொழிப் பண்புக்கு, 'குறுவும் அதுவே, மையும் அதுவே எனக் குறுமை ஆயிற்று. இது பண்பு மொழியே முன்னும் பின்னும் நிற்றலால் இருமொழிப் பண்புத்தொகை' என உதாரணங்காட்டி, விளக்கமும் கூறினர். முற்பதிப்புக்காரரா அதனைக் காரணங் காட்டி மறுத்து,

'கருமையும் அதுவே, செம்மையும் அதுவே - கருஞ்சிவப்பு; சிறுமையும் அதுவே வெம்மையும் அதுவே - சிறு வெம்மை' என உதாரணங் காட்டினர். பிரயோக விவேக நூலாசிரியர், மேற்கண்ட இருபத்திரண்டாம் பாட்டின் உரையில் "பெருவெள்ளை,' சிறுவெள்ளை, 'இன்பத்துன்பம்' எனவும்; வடமொழியில், 'சீதோட்டணம், 'சுகதுக்கம்' எனவும் இருமொழிப் பண்பென்னும் விசேடணோபய பதகருமதாரயன் வரும்" என்றதையும் ஈண்டு நோக்குக.

6-ஆம் பாட்டு

அவ்வியபாவ சமாசமும், துவந்துவ சமாசமும்

'அவ்வியபாவ சமாசமாவது, முன்னும் பின்னும் மொழி அடுத்து வரும் இடைச்சொற்றொகை; துவந்துவ சமாசமாவது, உம்மைத் தொகை.

அவ்வியத்தொகை இரண்டனுள் முன்மொழி அவ்வியத் தொகையாவது, முன்மொழி இடைச்சொல்லாக நிற்பதாம்.

'உப கும்பம்' என்னும் தொடரில் 'உப' என்னும் இடைச்சொல் முன்னும், 'கும்பம்' என்னும் பெயர்ச்சொல் பின்னுமாக நிற்றலை அறிக.

பிரயோக விவேக நூலாசிரியர் இதற்கு 'மற்றையாடை', 'கொன்னூசி' என்பவற்றை உதாரணமாகக் காட்டினர். (பிர. 23-ஆம் பாட்டின் உரை.)

பெயர் முன் மொழித்தொகையாவது, பெயர் முன் நிற்க இடைச்சொல் பின்னே நிற்பதாம்.

'சாகப்பிரதி' என்னுந் தொடரில் 'சாகம்' என்னும் பெயர்ச் சொல் முன்னும், 'பிரதி' என்னும் இடைச்சொல் பின்னுமாக நிற்றலை அறிக.

பிரயோக விவேக நூலாசிரியர் இதற்கு 'வாண்மன்,' 'அதுமன்' என்பவற்றை உதாரணமாகக் காட்டினர். (பிர-ஷை)

உம்மைத்தொகை இரண்டனுள், இதரேதரத் தொகையாவது, உயர்திணைப் பன்மையீறாய் நிற்கும் உம்மைத்தொகையாம்.

'கபிலபரணர் தங்களிலே வாது செய்தார்கள்'

என்பதில் கபிலபரணர் என்பது இதரேதரத் தொகையாம்; அது உயர்திணைப் பன்மை ஈறாய் நிற்றலை அறிக.

பிரயோக விவேக நூலாசிரியர் இதற்கு,

'கபிலபரணர்'
'சேர சோழ பாண்டியர்'
'இராம லட்சுமணர்'

என உதாரணங் காட்டினர். (பிர-ஷை)

சமாகாரத் தொகையாவது, அஃறிணை உம்மைத்தொகையாம்.

'உவாவும் பதினான்கும்-உவாப் பதினான்கு'
'நெய்யும் எண்ணெயும் - நெய்யெண்ணெய்'
'நாளும் பக்கமும் - நாட்பக்கம்'

என்னுஞ் சமாகார உம்மைத்தொகைகள் அஃறிணையாய் நிற்றலை அறிக.

பிரயோக விவேக நூலாசிரியர் இதற்கு,

'அறம் பொருள்'
'புலிவிற் கெண்டை'

எனத் தமிழ்த் தொடரையும், 'சங்கபடகம்' என்னும் வடமொழித் தொடரையும் உதாரணங் காட்டினர்.

59-ஆம் பக்கம்

ஏகாந்தித்து - ஒன்று சேர்ந்து. துவாந்தம் - துவா என்பதை ஈற்றிலுடையது.

சந்திராந்தம் இன்னது என்பதனை 74-ஆம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பைக் கண்டறிக.

தொகைப் படலத்தின் குறிப்புரை முற்றிற்று.

௪. தத்திதப் படலம்

தத்திதாந்தச் சொல்லாவது, தமிழில் கூறும் குறிப்புவினையாலணையும் பெயரேயாம் என்றுணர்க. தத்திதாந்தச் சொல் என்பது அன்னதாம் என்பதனைப் பிரயோக விவேக நூலாசிரியர் தத்திதப் படலத்திற் கூறிய முதற்பாட்டையும், அதன் உரையில், "முற்சொற்றன்னைத் துன்னும் தொடர்மொழி எல்லாம் ஒழித்துப் போய்ச் சேரும் பிரத்தியயத்தை உடைய சொல்லே தத்திதாந்தத்தை உடைய சொல்லாம். அதனை விரித்து உதாரணங் காட்டும் பொழுது,

'வலையான் முயன்றுண்பவன்-வலையன்'

என்னும் பகுபதக் குறிப்புப் பெயராம்" என்றதையும், விசேட உரையில், "பொதுப்பட, 'முற்சொற்றன்னை' என்றதனாலே தனிச் சொல்லும், தொகைச் சொல்லும் கொள்க. ஆதலின், தொகையுள்ளும் முன்னின்ற மொழியை விட்டுப் பின்னின்ற மொழியைக் கெடுத்துப் பிரத்தியயத்தைக் கூட்டி முடித்தலும், பின்னின்ற மொழியைக் கெடாது முற்றும் முன்னின்ற மொழியாக நிறுத்திப் பிரத்தியயங் கூட்டி முடித்தலுமாம்" என்றதையும், அவர் இரண்டாம் பாட்டின் உரையில் தத்திதச் சொற்களுக்குக் காட்டிய உதாரணங்களையுங் கண்டறிக.

இப்படலத்தில் உள்ள 'உண்ணுமிதனால்' என்பது முதலிய இரண்டு பாட்டுக்களிற் கூறப்பட்ட பொருள்கள் :

(1) இதனால் உண்ணும், (2) இதனை உரைக்கும், (3) இஃது உடையன், (4) இதனைப் பண்ணும், (5) இதிற் பயிலும், (6) இதனாற் பயன் கொள்ளும், (7) இதனை எண்ணும், (8) இதனுக்கு நாயகன், (9) ஈங்கிருக்கும், (10) இதனை நண்ணும், (11) இதனை ஒக்கும், (12) இங்குளான், (13) இவ

னுக்கு மகன், (14) இவனுக்கு மகன், (15) இந்த வர்க்கத்தான் இவன், (16) இவனைத் தெய்வமாக உடையான் இவன் என்னும் இப்பொருள்களின்கண்ணும், பிற பொருள்களின் கண்ணும் தத்திதங்கள் நிகழும்; இவற்றை விளக்கி உரைக்கும் போது 'இதனால் உண்பான் யாவன்? இதனை உரைப்பான் யாவன்?' என 'யாவன்' என்னும் வினாச்சொல்லான் வினவி, அதன் விடையாக வருவதனைத் தத்திதச் சொல்லாம் என்று கொள்ளுதல் வேண்டும் என்றுணர்க.

மூன்றாம் பாட்டின் மூன்றாம் அடியில் புகண்மலி என்பதில் ழ், ண் ஆகத்திரிந்தது எனக் கொள்க.

இப்பொருள்கள் சிலவற்றிற்கு ஈண்டு உரையில் உதாரணங்கள் காணப்படவில்லை. வேறு பிரதியில் இங்குக் குறித்த பொருள்கள் யாவற்றிற்கும் உதாரணங்கள் காணப்படுகின்றன. அவற்றை அடியிற் காண்க:

1. இதனால் உண்ணும்

வலை' என்று வைத்து இதனால் உண்பான் யாவன் எனக் கருதினபொழுது அன் என்னும் பிரத்தியத்தை வைத்து 'வலையன்' என முடிக்க.

2. இதனை உரைக்கும்

'வேதம்' என்னும் சொல்லை வைத்து, இதனை உரைப்பான் யாவன் எனக் கருதின பொழுது இயன் என்னும் பிரத்தியத்தை அம் பின் வைத்து, அம் என்னுங் கடைச்சொல்லைக் குறைத்து, 'வேதியன்' என முடிக்க. பிரயோக விவேக நூலாசிரியர் இதற்கு, 'இதனை உரைத்தலாவது, 'வைதிகன்', 'பௌராணிகன்', 'கவிஞன்' என்று உதாரணங் காட்டினர். (பிர—32-ஆம் பாட்டின் உரை.)

3. இஃது உடையன்

'கொந்தம்' என்று வைத்து, அன் என்னும் பிரத்தியம் பின் வைத்து, ஈறழித்துக் 'கொந்தவன்' என முடிக்க. இவ்வண்ணம் ஈறழியாது, 'வெற்பன்', 'சிலம்பன்' என்றான தறிக.

4. இதனைப் பண்ணும்

'மருந்து' என்று வைத்து, இதனைப் பண்ணுவான் யாவன் எனக் கருதின பொழுது வன் என்னும் பிரத்தியத்தை வைத்

துக் குற்றியலுகரத்து மெல்லொற்றை வல்லொற்றாக்கி 'மருத்துவன்' என முடிக்க.

5. இதிற் பயிலும்

'கூத்து' என்னும் சொல்லை வைத்து, இதிற் பயில்வான் யாவன் என்று கருதின பொழுது அன் என்னும் பிரத்தியத்தை வைத்துக் 'கூத்தன்' என்று முடிக்க.

'மஞ்சள் தோட்டம்', 'இஞ்சித் தோட்டம்' என்பவற்றைச் சுப்பிரத்தியத்தால் முடிக்க. இவையும் பயிலுதலால் பெற்றன.

6. இதனாற் பயன் கொள்ளும்

'வில்' என்று வைத்து, இதனாற் பயன்கொள்வான் யாவன் எனக் கருதின பொழுது இகரப் பிரத்தியம் வைத்து 'வில்லி' என்று முடிக்க.

7. இதனை எண்ணும்

'சோதிடம்' என்று வைத்து, இதனை எண்ணுவான் யாவன் எனக் கருதினபொழுது வன் என்னும் பிரத்தியம் வைத்துக் கடைகுறைத்துச் 'சோதிடவன்' என்று முடிக்க.

8. இதனுக்கு நாயகன்

'மலை' என்று வைத்து, இதனுக்கு நாயகன் யாவன் எனக் கருதின பொழுது அன் என்னும் பிரத்தியம் வைத்து 'மலையன்' என முடிக்க. பிரயோக விவேக நூலாசிரியர், 'இதனுக்கு நாயகனுவது, 'வைதர்ப்பன்', 'நைடதன்', 'கௌசலன்', 'வைகைத் துறைவன்', 'குமரிச்சேர்ப்பன்', 'மலையமான்,' 'புனனுடன்', 'தமிழ் நாடன்', 'புலியூரன்' என உதாரணங் காட்டினர். (பிர-தத்தித-ப-31-ஆம்-பா-உரை.)

9. அங்கிருக்கும்

'பட்டினம்' என்று வைத்து, அங்கிருப்பான் யாவன் எனக் கருதினபொழுது வன் என்னும் பிரத்தியம் வைத்துக் கடைகுறைத்துப் 'பட்டினவன்' என முடிக்க.

ஈண்டு உரையாசிரியர், 'பட்டினத்திலிருப்பார் மற்றில்லையோவெனில்' என்று கூறி, அதனைச் சாதித்தற்குச் சில வாக்கியங்களைக் கூறியிருக்கின்றார். அவ்வாக்கியங்கள் பெரிதும் பிறழ்ந்திருத்தலின், ஈண்டு எடுத்துக் குறிக்காமல் விடுக்கப்

பட்டின. ஆயினும், அவற்றுள் சில வாக்கியங்கள் பெரிதும் பிறழாமல் இருக்கின்றன. அவை: 'சேற்றில் தோன்றுவன..... குவளையும் ஆம்பலும் முதலாக மற்றும் பல உளவேயாகிலும், பங்கத்திற் சனித்தலால் 'பங்கசம்' என்று தாமரைக்குப் பெயராயிற்று; அதுபோல, மற்றுமுளராகிலும், இவனைப் 'பட்டினவன்' என்று சொன்னார். பங்கசம் என்பது தாமரைக்கே பெயர் என்பது மரபு பட்டு வாராநின்றது என்பாயாகில், அது போல இவனுக்கும் அப்பெயர் மரபு பட்டு வாராநின்றது எனக்கொள்க,' என்பன.

10. இதனை நண்ணும்

'சித்தி' என்று வைத்து, இதனை நண்ணுவான் யாவன் எனக் கருதின பொழுது அன் என்னும் பிரத்தியம் வைத்துக் கடைகுறைத்துச் 'சித்தன்' என்று முடிக்க.

இவ்விடத்து நண்ணினான், நண்ணுகின்றான், நண்ணுவான் என மூன்று காலத்தையும் குறித்தது என்பது.

11. இதனை ஒக்கும்

'சிங்கம்' என்று வைத்து, இதனோடொப்பான் யாவன் எனக் கருதின பொழுது சுப்பிரத்தியம் வைத்துச் 'சிங்கம்' என முடிக்க. இவ்வண்ணம் 'நூல்' என்றும், 'பாவை' என்றும் முடிக்க.

பிரயோக விவேக நூலாசிரியர் இதற்கு 'உதனோடொத்தலாவது, 'பொன்னன்னான்', 'மயிலன்னாள்', "கனக சதிர்சன்', 'இருடி துல்லியன்' என உதாரணங் காட்டினர். (பிர-31-ஆம்-பா-உரை.)

12. இங்குளான்

'பாண்டி நாடு' என்று வைத்து, இங்குள்ளான் யாவன் எனக் கருதின பொழுது அன் என்னும் பிரத்தியத்தாற் 'பாண்டி நாடன்' என முடிக்க.

இவ்வண்ணம் 'சோழ நாடன்', 'தொண்டை நாடன்', 'வடுக நாடன்' என முடிக்க.

13. இவனுக்கு மகன்

'பாண்டு' என்று வைத்து, இவனுக்கு மகன் யாவன் எனக் கருதின பொழுது வன் என்னும் பிரத்தியத்தான் இறுதி

உகரத்திற்கு அகரம் ஆதேசமாக்கிப் 'பாண்டவன்' என முடிக்க.

'அத்தி' என்று வைத்து, அன் என்னும் பிரத்தியத்தாற் கடை குறைத்து, ஒரு தகர வொற்றை ஆகமமாக்கி, முதற்கண் நின்ற அகரத்தினுக்கு விருத்தியாக்கி, 'ஆதித்தன்' என்றலுமாம்.

'தனு' என்று வைத்து, இவன் மகன் யாவன் எனக் கருதின பொழுது வன் என்னும் பிரத்தியத்தால் இறுதி உகரத்தை அகரமாக்கி, முன்பு நின்ற அகரத்தினுக்கு விருத்தியாக்கித் 'தானவன்' என்று முடிக்க.

இவ்வண்ணம் 'மனு' என்று வைத்து, இவன் மகன் 'மானவன்' என்று முடிக்க.

'சிபி' என்று வைத்து, இவன் மகன் யாவன் எனக் கருதின பொழுது அன் என்னும் பிரத்தியத்தால் மகரவொற்றை நடு ஆகமமாக்கி, முதல் இகரத்திற்குக் குணமாக்கிக் குறுக்கிச் 'செம்பியன்' என முடிக்க. (குணமாக்குதல்—குணசந்தியாக்குதல், சி என்பதனைக் குணமாக்கினுல் சே என்றும். ஆதலின், 'குணமாக்கிக் குறுக்கி' என்றுர்.)

14. இவளுக்கு மகன்

'விநதை' என்று வைத்து, இயனப் பிரத்தியத்தால்(இயன் என்னும் பிரத்தியத்தால்) கடை குறைத்து, முதற்கண் நின்ற விகரத்தினுக்கு விருத்தியாக்கி 'வைநதேயன்' என முடிக்க.

முன்பு நின்ற விகரத்தினுக்கு வயினனென்பது ஆதேசமாக்கி (இங்கு வயின என்பதை ஆதேசமாக்கி என்றிருத்தல் வேண்டும் போலும்!) 'வயினதேயன்' என்று மற்று முடிப்பாரு முளர். அவனுவான் கருடன் என்றறிக.

'தாரை' என்று வைத்து, இவள் மகன் யாவன் எனக் கருதின பொழுது ஏயனப் பிரத்தியத்தால் கடை குறைத்துத் 'தாரேயன்' என முடிக்க. அவனுவான் அங்கதன்.

இவ்வண்ணம் 'கங்கை' என்று வைத்துக் 'காங்கேயன்' என்று முடிக்க.

'திதி' என்று வைத்து, இவள் மகன் யாவன் எனக் கருதின பொழுது அன் என்னும் பிரத்தியத்தால் முன்பில் தகாரத்திற்கு விருத்தியாக்கி, ஒரு தகாரவொற்றுக் கொடுத்துத் 'தைத்தியன்' என்று முடிக்க.

15. இந்த வர்க்கத்தான்

'குரு' என்று வைத்து, அவன் வர்க்கத்தார் யாவர் எனக் கருதின பொழுது முதல் உகரத்திற்கு விருத்தி ஆக்கி, அனப்பிரத்தியத்தால் கௌரவர் என முடிக்க. இஃது ஆய்தற் குரியது.

16. இவனைத் தெய்வமாக உடையான்

'சிவன்' என்று வைத்து, இவனைத் தெய்வமாகக் கொள்வான் யாவன் எனக் கருதின பொழுது 'சு'ப்பிரத்தியத் தால் ஆதிவிருத்தி ஆக்கிச் 'சைவன்' என முடிக்க.

இவ்விலக்கணத்தால் 'பசுபதி' என்றலும் அமையும்.

7ஆம் பாட்டு

இப்படலத்தின் ஏழாம் பாட்டின் உரையில் 'வடமொழி யின் எழுத்தடைவில் கவ்வென்னு முதல் வியஞ்சனம், முப்பத் தொன்ரும் மெய் தனக்கு முன்னே வரின், இரட்டித்துத் 'தமி ழில் இல்லன போம்' என்னும் இலக்கணத்தால் மேலிட்ட முப்பத்தோராமெய் அழியும்' என்றூர். அதற்குதாரணம்:

பரிஷ்காரம் - பரிக்காரம்

பரிஷ்காரம் என்னும் சொல்லில் வடமொழியின் முப்பத்தொன்ரும் மெய்யாகிய ஷகரம் முதல் மெய்யாகிய ககரத்திற்கு முன் வந்தமையின், அது கெட்டு முதல் மெய் இரட்டித்துப் 'பரிக்காரம்' என்ருயிற்று எனக்கொள்க.

'வடமொழியில் எழுத்தடைவில் கவ்வென்னு முதல் வியஞ் சனம் முப்பத்தொன்ரும் மெய் தனக்குப் பின்னே வந்து முப்பத்தைந்தாய் நிற்பின், 'தமிழில் இல்லன போம்' என்னும் இலக்கணத்தால் மேலிட்ட முப்பத்தோராமெய் அழியும்' என்றூர். அதற்குதாரணம் :

தக்ஷன் - தக்கன்

வடமொழியின் முப்பத்தைந்தா மெய்யாகிய க்ஷகரம், முதன்மெய்யாகிய ககரத்தின் பின்னே முப்பத்தோரா மெய்யா கிய ஷகரம் வந்து அதனுடன் சேர உண்டாகும் எழுத்தாகும்; ஆதலின், தக்ஷன் என்பது, அதில் உள்ள முப்பத்தோரா மெய்யாகிய ஷகரம் கெட்டு, முதன் மெய்யாகிய ககரம் இரட் டித்துத் 'தக்கன்' என்ருயிற்று எனக்கொள்க.

அப்பாட்டின் உரையில் பக்கம், தக்கன், இயக்கன் என்னும் உதாரணங்கள் முன்னும்; பரிக்காரம், நிக்காரம் என்னும் உதாரணங்கள் பின்னுமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனல், அப்பாட்டின் உரையிற் கூறப்பட்ட விதிகளின் முறையின்படி பரிக்காரம், நிக்காரம் என்னும் உதாரணங்களை முன்னும், பக்கம், தக்கன், இயக்கன் என்னும் உதாரணங்களைப் பின்னுமாகக் கொள்ளுதல் வேண்டும் என்றறிக.

முப்பதாம் மெய் ஶ;
முப்பத்திரண்டாம் மெய் ஸ;
முப்பத்து மூன்றும் மெய் ஹ ஆகும்.

தத்திதப் படலத்தின் குறிப்புரை முற்றிற்று.

ரு. தாதுப் படலம்

இவர் 'தாது' என்றது தெரிநிலை வினைப்பகுதியை என்றறிக. இது வடமொழியாளர்களின் கொள்கையாகும். இப்பகுதிகளை ஏவல் ஒருமை வினைமுற்றுப் போலத் தோற்றுவித்துக் கொள்ளவேண்டும் என்பது இந்நூலாசிரியர் கருத்து. அங்ஙனம் கொள்ளவேண்டும் என்பது இந்நூலாசிரியர் கருத்தாம் என்பதனையும், அது வடமொழியாளர் கொள்கையாம் என்பதனையும், இப்படலத்தின் முதற்சூத்திரத்தையும், அதற்கு உரையாசிரியர் கூறிய உரையையும், விசேட உரையையும் கண்டறிக.

பிரயோக விவேக நூலாசிரியர் திங்குப் படலம், முதற் பாட்டில்,

'முன்னிலை யேவ லொருமைச்சொற் போலு முதனிலைகள்
இன்னிலைத் தாது பகுதியென் றாகும்'

என்றதனையும, அதற்கு அவர் கூறிய உரையையும் ஈண்டு நோக்குக.

தமிழ் நூலாசிரியர்களின் கருத்துமிதுவே. தமிழ் நூலாசிரியர்களின் கருத்துமிதுவே என்பதனை, நன்னூலாசிரியர், பதவியலிற் பத்தாஞ் சூத்திரத்தின் ஈற்றில்,

'செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே'

என்றதனுலும் அதன் உரைகளாலும் அறிக.

இனி, இந்நூலின் உரையாசிரியர், அம்முதற்பாட்டின் விசேட உரையில் "சர' என்னும் தாதுவின் பொருட்போலி யும், 'பச' என்னுந் தாதுவின் பொருட்போலியும் போல, நட என்பதும், அடு என்பதுமாம். அப்பரிசே கிடந்தன எண்ணி றந்த தாதுக்கள் உளவாதலால், தமிழினுக்கும் நட, அடு என் னும் இவை முதலாகிய தாதுவாய், அவை முன்னிலையிடனில் ஏவற்பொருளில் ஒருமைப்பொருட்போலி போன்றன. நட என் பது ஒருவனை நட என்றும், அடு என்றது ஒருவனை அடு என் றும் ஏவினாற் போன்றது. அதற்குக் காரணம் என்னை எனின், சுவ்வென்னும் பிரத்தியத்தான் முடிந்தாலல்லது நடப்பது அடுவதான பொருள்களைப் பயவா; அப்பொருள் போன்றிருப் பது மாத்திரமே என்க' என்றதன் கருத்து, அங்கிலையில் அப் பகுதிகளுக்குப் பொருள்களின் புடை பெயர்ச்சியை உணர்த் தும் தன்மை இன்று என்பதேயாகும்.

இந்நூலின் உரையாசிரியர், அங்கிலையில் அப்பகுதிகள் நால்வகைச் சொற்களில் இன்ன சொல்லாகக் கொள்ளற் குரியனவாம் என்பதனைக் கூறிற்றிலர். சேனாவரையர் அப் பகுதிகளைப் பெயர்ச்சொல்லாகக் கொண்டனர். அவர் அவற்றைப் பெயர்ச்சொல்லாகக் கொண்டனர் என்பதனைத் தொல்காப்பியம், சொல்லதிகாரத்தின், —

'வினையின் றொகுதி காலத் தியலும்'

என்னும் (415-ஆம்) சூத்திரத்தின் விசேட உரையில், 'கால முணர்த்தாது வினைமாத்திரமுணர்த்தும் பெயர், நிலப்பெயர் முதலாகிய பெயரொடு தொக்குழிக் காலமுணர்த்தியவாறு கண்டுகொள்க' என்றதனாலறிக. காலமுணர்த்தாது வினை மாத்திரம் உணர்த்தும் பெயர் தொழிற்பெயராம் எனக் கொள்க. அவற்றை வினையாலணையும் பெயரெனின், வினையா லணையும் பெயர் காலமும் உணர்த்துமாகலானும், பகுதியள வாய் நிற்பனவல்லவாகலானும் வினையாலணையும் பெய ரென்னலாகாதென்க.

சிவஞான முனிவர் எல்லா வினையடிகளும் பிறத்தற்கு மூலமாகிய பொது முதனிலையை முதனிலைத் தனிவினைப் பெயர் என்பர். அதனை, நன்னூல், பதவியல், 'நடவா மடிசீ' என்று தொடங்கும் (10-ஆம்) சூத்திரத்தின் விசேட உரையில்

'இங்ஙன முதனிலை புடைபெயர்தலே வினையாதலின், எல்லா வினைச்சொற்களும் பிறத்தற்கு மூலமாகிய பொது, முதனிலைத் தனி வினைப் பெயரென்றே கொள்க. அதனைப் படுத்தலோசையாற் கூறிக் காண்க' என்று கூறியதனுலறிக.

இலக்கணவிளக்க நூலாசிரியரும் அவற்றைப் பெயராகவே கொண்டனர். அதனை இலக்கண விளக்கம், பதவியல் 'நடவா மடிசீ' என்னும் ஆரும் சூத்திரத்தின் விசேட உரையில் 'இயல்பு, உயிரும் ஒற்றும் குற்றுகரமுமாகிய இருபத்து மூன்றீற்றவாகிப் படுத்தலோசையான் அச்செய்கைமேற் பெயர்த்தன்மைப்பட்டு வினைமாத்திரையே உணர்த்தி நிற்குந் தன்மை' என்றதனுலறிக.

இனிச் சேனுவரையர் தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமை இயலின்,

'பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய வப்பா லான.'

என்னும் ஆரும் சூத்திர உரையில், பெயரும் பெயருந தொக்கு எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கோடற்குக் காட்டிய 'யானைக் கோடு கிடந்தது', 'மதிமுகம் வியர்த்தது' என்பன முதலிய உதாரணங்களோடு 'கொல்யானை நின்றது' என்பதனையும் உதாரணமாகக் காட்டியிருத்தலையும்; பிரயோக விவேக நூலாசிரியர், பிரயோக விவேகம், திங்குப்படலம், முதற் பாட்டின் உரையில், 'முன்னிலை ஏவல் ஒருமைச் சொற்போலும் நட, வா, மடி, சீ என்று நன்னூலிற் கூறிய முதனிலைத் தொழிற் பெயர்கள், தாது எனவும், பிரகிருதி எனவும் பெயர் பெறும்,' என்றதையும்; விசேட உரையில்; 'முன்னிலை யேவலொருமைச் சொல்லாகும்,'என்னுது, 'போலும்' என்றது, முதனிலை என்னுந் தாதுக்களும் வேறே; முன்னிலை ஏவலொருமைச் சொற்களும் வேறே என்பது அறிவித்தற்கு என்க. 'என்னையோ?' எனின், நட, வா முதலிய தாதுக்கள் நடத்தல், வருதல் எனப் பொருள் பட்டு, ஐம்பால் மூன்றிடத்திற்கும் பொதுவான தொழிற்பெயராய் நின்று, பின் காலங் காட்டும் இடைநிலை எழுத்துக்களோடு வரும் விகுதிகளை அடைந்து, நடந்தேன், நடந்தாய், நடந்தான் என வரும்' என்றதையும் ஈண்டு நோக்குக.

இந்நூலாசிரியர் இப்படலத்தின் இரண்டாம் பாட்டில் சில பகுதிகளைக் கூறி,

'இவ்வண்ணம் மற்றுமியற் றிக்கொள்ளே'

என்றார்.

நன்னூலாசிரியர், பகுதிகளின் ஈற்றை நோக்கி எல்லாப் பகுதிகளையும் இருபத்து மூன்று கூறுபாட்டில் அடக்கினார். அதனை, நன்னூல், பதவியலில்,

'நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்
றெய்திய இருபான் மூன்றா மீற்றவும்
செய்யென் னேவல் வினைப்பகாப் பதமே.'

எனவரும் 10-ஆம் சூத்திரத்தாலும், அதன் உரைகளாலும் அறிக. இப்படலத்தின் இரண்டாம் பாட்டின் விசேட உரையில், உரையாசிரியர், 'அவற்றுள் கருமத்தை நீங்காத தாது, கருமத்தை நீங்கின தாது எனத் தாது இருவகையாம். வடமொழிப் புலவரும் சகருமகம், அகருமகம் என வழங்குவர்' என்று கூறியவற்றைத் தமிழ் நூலார் முறையே செயப்படு பொருள் குன்றாவினை, செயப்படுபொருள் குன்றியவினை எனக் கூறுவர் என்றறிக. இப்படலத்தின் ஆறாம் பாட்டில் நூலாசிரியர்,

'ஆட்டாற்று தீற்றாதி தாதுக் களையடற் காரிதமென்று,
ஓட்டா அறிக'

என்றதற்கு உரையாசிரியர், 'ஆட்டு, ஆற்று, தீற்று முதலிய காரிதத் தாதுக்களாம். 'முன்பிற்கேவலத் தாதுவோடு இவற்றிற்கு வேறு பாடென்?' எனின், ஆடு என்பது கேவலத் தாதுவாய், அத்தொழிலையே மற்றொருவனைச் செய்வி என்னும் பொருண்மேல் வினைக் குறிப்பிலே பிரத்தியம் பண்ணி, ஆட்டு எனவும்; இவ்வண்ணம், ஆறு ஆற்று, தின் தீற்று எனவும் வந்து வேறு பட்டன' எனக் கூறிய உரையில் கேவலத் தாது என்றது தன்வினைப்பகுதியை எனவும், காரிதத் தாது என்றது பிறவினைப் பகுதியை எனவும் அறிக.

தன்வினைப்பகுதிகளின் ஒற்று இரட்டுதலாலும், இடையில் உள்ள மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதலாலும், தன்வினைப்பகுதிகளோடு வி, பி என்பனவும், கு, சு, டு, து, பு, று என்பனவும் சேர்தலாலும் தன்வினைப்பகுதிகள் பிறவினைப்

பகுதிகளாகும். அவற்றுள், இங்குக் காட்டியவை ஒற்று இரட்டு தலாலும், கு, சு, டு முதலியவற்றின் ஒன்று சேர்தலாலும் தன் வினைப்பகுதிகள் பிறவினைப்பகுதிகளானவை. 'உறங்கு, உறக்கு', 'திரும்பு, திருப்பு' என்பன இடையில் உள்ள மெல் ஒற்று வல்லொற்றானவை. 'வா, வருவி', 'நட, நடப்பி' என்பவை வி, பி சேர்தலால் பிறவினை ஆனவை. அவற்றுள், இந்நூலாசிரியர் ஒற்று இரட்டுதலாலும், கு, சு, டு முதலியவற்றில் ஒன்று சேர்தலாலும் தன்வினை பிறவினையாதலைக் கூறினர்.

நன்னூலாசிரியர், வி, பி சேர்தலால் தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாதலைக் கூறினர். அதனை,

'செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வியென் னேவல்'

என்றதனால் அறிக. இவ்விரண்டு நூலினும், தன்வினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாதற்குரிய மற்று வகைகள் 'உரையிற்கோடல்' என்னும் உத்தியாற் கொள்ளப்படும் என்றறிக.

இவை இயல்பாகிய ஏவலின்மேல் ஓரேவல் வந்தவை என்றறிக.

'ஆடு' 'தின்' என்பன இயல்பாகிய ஏவற்பொருளில் வந்த பகுதிகள்; ஆட்டு, தீற்று என்பன. இயல்பாகிய ஏவலின் மேல் ஓரேவலாகிய பொருளில் வந்த பகுதிகள் எனக் கொள்க.

நூலாசிரியர், அதன் பின்,

'உரையின் படியோப்பில் விப்பிபின்பு
மூட்டா வறிகா ரிதக்கா ரிதம்.'

என்றார். உரையாசிரியர், "'ஆடினான்' கேவலத்தாது; 'ஆட்டினான்' காரிதத்தாது. இவற்றின் பின்பு வி, பி என்னும் பிரத்தியங்கள் வந்தால், அவை, காரிதக் காரிதத் தாதுவாய், 'ஆட்டுவி', 'ஆற்றுவி', 'தீற்றுவி', 'கேட்பிப்பி', 'வார்ப்பிப்பி', 'உண்பிப்பி', 'தின்பிப்பி' என வரும்' என்றார். நன்னூலார் இதனை 'இணையினீ ரேவல்' என்றார். (நன்-ப. சூ. 11.)

சங்கர நமச்சிவாயப் புலவர் இச்சூத்திரத்தின் விசேட உரையில் "செய் என்னும் வாய்பாடுகள், ஏவல் வினைமுதல் ஒன்றையும், இயற்றும் வினை முதல் ஒன்றையும், இருவருள் ஒரு

வர்க்கு ஒரு கருத்தனையும்; செய்வி என்னும் வாய்பாடுகள், ஏவல் வினை முதல் இரண்டையும், இயற்றும் வினைமுதல் இரண்டையும், மூவருள் இருவர்க்கு ஒரு கருத்தனையும்; செய்விப்பி என்னும் வாய்பாடுகள், ஏவல் வினைமுதல் மூன்றையும், இயற்றும் வினை முதல் மூன்றையும், நால்வருள் மூவர்க்கு ஒரு கருத்தனையும் தரும் என்பார் 'ஈரேவல்' என்றுங் கூறினர்" என்றதை ஈண்டு நோக்குக.

"சாத்தன் பொன்னனை நோக்கி, 'பொன்ன ஆடு' எனப் பொன்னன் ஆடினன்" என்பது தோன்றும். இதில் சாத்தன் பொன்னனை ஆடும்படி ஏவினவனுதலின், சாத்தன் ஏவுதற் கருத்தா ; பொன்னன் ஆடுதல் தொழிலைச் செய்தவனுதலின்; இயற்றுதற் கருத்தா; ஆதலின், செய்யென்னேவலில் இரு வருள் ஒருவர்க்கு ஒரு கருத்தன் உளனுதலை அறிக. 'சாத் தன் கொற்றனல் பொன்னனை ஆடுவித்தான்' என்பதில் சாத்தன் 'பொன்னனை ஆட்டு' எனக் கொற்றனை ஏவக் கொற்றன் பொன்னனை 'ஆடு' என ஏவப் பொன்னன் ஆடினன் என்பது தோன்றும். இதில் சாத்தன் கொற்றனை ஏவக் கொற்றன் பொன்னனை ஏவினன் ஆதலின், ஏவும் வினைமுதல் இரண்டாயின எனவும்; சாத்தன் பொன்னனை ஆட்டு எனக் கொற்றனை ஏவக் கொற்றன் பொன்னனை ஏவுதலாகிய தொழிலை இயற்றினன்; பிறகு கொற்றனது ஏவுத லால் பொன்னன் ஆடுதலாகிய தொழிலை இயற்றினன்; ஆத லின், இதில் இயற்றும் வினைமுதலும் இரண்டாயின எனவும்; இதிற் குறித்த ஆட்டு என்ற செய்வி என்னும் வினையின்கண் அமைந்த இயற்கை வினைப்பகுதியாகிய ஆடு என்பதனுற் குறிக் கப்பட்ட ஆடுதலாகிய தொழிலைச் செய்தவன் பொன்ன னுதலின், மூவருள் இருவருக்கு ஒரு கருத்தனுயினன் எனவும் அறிந்துகொள்க. இங்ஙனமே செய்விப்பி என வரும் வாய் பாட்டு வினைகளின் கருத்தாக்களையும் ஆய்ந்து கொள்க.

இவை யாவும் ஒருமை ஏவல் வினைக்கும் பொருந்து மாயினும், ஈண்டு இவை பகுதிகளைக் குறித்துக் கூறியனவாம் எனக் கொள்க.

நன்னூலார் இங்ஙனம் வரும் பகுதிகளை, 'செய்யென் வினைவழி விப்பித் தனிவரின்' என்னுஞ் சூத்திரத்தானும்,

மற்றை வினைகளில் இங்ஙனம் வரும் பகுதிகளை 'விளம்பிய பகுதிவே றுதலும் விதிமேல்' என்னுஞ் சூத்திரத்தானுங் கூறினார். இந்நூலாசிரியர் அவ்விரு பகுதிகளையும் ஒன்றாகவே கொண்டு கூறினார்.

இந்நூலாசிரியர் 'காரிதம்' என்றது இயல்பாகிய ஏவலின் மேல் ஓரேவல் வருவனவற்றை; 'காரிதக் காரிதம்' என்றது அவ்வியல்பாகிய ஏவலின்மேல் இரண்டு ஏவல் வருவனவற்றை என்றறிக.

பின் உரையாசிரியர் 'ஒரு சார் கருத்தாவையும், கருமத்தையும் வேறு படுக்குமிடத்தும் கேவலக் கருத்தா, காரிதக் கருத்தா, காரிதக் காரிதக் கருத்தா எனவும்; கேவலக் கருமம், காரிதக் கருமம், காரிதக் காரிதக் கருமம் எனவும் வரும்' என்று கூறி, **உதாரணம்:**—'உண்டனன், ஊட்டினன், ஊட்டுவித்தனன் எனவும், உண்டது சோறு, ஊட்டினது சோறு, ஊட்டுவித்தது சோறு எனவும் கொள்க' என்றார்.

இவற்றுள், முதலில் உள்ளவற்றோடு கருத்தாவைக் கூட்டி, உண்டனன் என்பது முதலிய மூன்றும் மேற்கூறிய மூவகைக் கருத்தாக்களை அறிவித்தற்குக் காட்டிய உதாரணங்களாம் எனவும், உண்டது சோறு என்பது முதலிய மூன்றும் மூவகைக் கருமங்களை அறிவித்தற்குக் காட்டிய உதாரணங்களாம் எனவும் உணர்க. மூவகைக் கருமங்களை அறிவித்தற்குக் காட்டிய உதாரணங்களைச் செயப்படுபொருள் சேர்த்துக் காட்டினார். மூவகைக் கருத்தாக்களை அறிவித்தற்குக் காட்டிய உதாரணங்களைக் கருத்தாக்களைச் சேர்க்காமல் காட்டினார்; ஆதலின், அவற்றோடு அம்மூவகைக் கருத்தாக்களையுஞ் சேர்த்துக்கொள்க.

'பொன்னன் உண்டனன்' என்றால், இதில் பொன்னன் கேவலக் கருத்தா எனவும்; 'கொற்றன் பொன்னனை ஊட்டினன்' என்றால், இதில் பொன்னன் கேவலக் கருத்தா; கொற்றன் காரிதக் கருத்தா எனவும்; 'சாத்தன் கொற்றனால் பொன்னனை ஊட்டுவித்தனன்' என்றால், இதில் பொன்னன் கேவலக் கருத்தா, கொற்றன் காரிதக் கருத்தா, சாத்தன் காரிதக் காரிதக் கருத்தா எனவும் அறிக.

பின்பு நூலாசிரியர்,

> 'முன்பிற் றுதுவின்கட்
> காட்டா வழியவை காரிதக் காரிதக் காரிதமே'

என்றார்.

அதற்கு உரையாசிரியர் உரையில் 'முன்பு சொல்லிப் போந்த காரிதக் காரிதத் தாதுவின்மேல் பின் சொன்ன வி, பி என்னும் பிரத்தியங்கள் சேர்ந்து காரிதக் காரிதக் காரிதமாம். **உதாரணம்**:—ஆட்டுவிப்பி, ஊட்டுவிப்பி என வரும். கருத்தா கருமங்களும் அவ்வாறே கொள்க' என்றார். இவை இயற்கை ஏவலின்மேல் மூன்று ஏவல் வந்தனவாம். இங்ஙனம் தமிழில் வருதல் அரிது; வடமொழியில் உள்ளனவாயின், கண்டு கொள்க.

இப்படலம், எட்டாம் பாட்டின் உரையில் துமந்தப்பிரத்தியங்களுள் 'பொருட்டு' என்பது நீங்கலாக, மற்றவற்றிற்குக் காட்டிய உதாரணங்களை நோக்கின், கு, அ என்னும் விகுதிகளையுடைய வினையெச்சங்களிலும், வான், பான் என்னும் விகுதிகளையுடைய வினையெச்சங்களிலும் அடங்குவனவாயிருக்கின்றன. 'பொருட்டு' என்னும் பிரத்தியத்திற்குக் காட்டிய உதாரணம் நான்காம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரெனக் கொள்ளுதற்குரியதாகும். உரையாசிரியர் விசேட உரையில், 'துமந்தமாவது நாலாம் வேற்றுமையின் அல்லது வாராமையின், அதனையும் இதனோடு ஒப்பித்தே முடிக்க' என்றதையும் ஈண்டு நோக்குக.

இப்படலத்தின் 9-ஆம் பாட்டில் நூலாசிரியரும், அதன் உரையில் உரையாசிரியரும் ஒரு கருத்தாவை உடையனவாய் இரண்டு தாதுக்கள் வரின், அவற்றுள், முன்பு நின்ற தாதுவின்கண் ஆ, இட்டு, து, உ, இ என்னும் ஐந்து பிரத்தியமும் வரும். அவை துவாந்தப்பிரத்தியம் எனப்படும் என்றனர். உரையாசிரியர் அவற்றிற்கு 'உண்ணுப் போனன்' என்பது முதலிய உதாரணங்களைக் காட்டினர். அவற்றுள், உண்ணுப் போனன் என்றதனோடு பொன்னன் என்பதைச் சேர்த்து, 'பொன்னன் உண்ணுப் போனன்' என்று கொண்டு, இதில் உண்ணு என்னும் வினையெச்சத்தில் உண் என்பதும், போனன் என்னும் வினைமுற்றில் போ என்பதுமாகிய இரண்டு தாதுக்

களும் பொன்னன் என்னும் ஒரு கருத்தாவை உடையனவாய் வந்தன எனவும்; முன்னுள்ள உண் என்னும் தாதுவின்கண் ஆ என்னும் துவாந்தப்பிரத்தியம் வந்தது எனவும் கண்டு கொள்க. மற்ற உதாரணங்களோடும் இங்ஙனமே தனித்தனி ஒவ்வொரு கருத்தாவைச் சேர்த்து அவை அங்ஙனம் வருதலை அறிந்துகொள்க.

உரையாசிரியர் பின்னர்ப் 'பல தாது வரும்போது பின்பிலதனைக் குறித்து முன்பிலதனுக்கு ஆக்குக' என்று கூறி, அதற்கு 'உண்டு தின்று உலாவி இருந்து போனான்' என உதாரணங் காட்டினர்.

இதில், 'உண்டு' என்பதனை நோக்கத் 'தின்று' என்பது பின்பிலது எனவும்; 'தின்று' என்பதனை நோக்க 'உலாவி' என்பது பின்பிலது எனவும்; 'தின்று' என்பதனை நோக்க 'உண்டு' என்பது முன்பிலது எனவும்; 'உலாவி' என்பதனை நோக்கத் 'தின்று' என்பது முன்பிலது எனவும் கொள்க. இங்ஙனமே மற்றவற்றையும் அறிந்துகொள்க.

நூலாசிரியர் இப்படலத்தின் 11-ஆம் பாட்டில், ஆன் முதலிய பன்னிரண்டு பிரத்தியங்கள், பகுதிகளில் தடைப்பொருளில் வரும் என்றார்.

உரையாசிரியர், இவற்றைத் 'தடைப்பொருள் விளக்குந் தாதுவின்பின், முன் நாம் சொன்ன மரபே வரும்' என்றார். தடைப்பொருள் விளக்கும் தாது இன்மையின், அது பொருந் தாது என்க.

நூலாசிரியர் அங்ஙனங் கூறியிருத்தலை,

'ஆனுளா ரார்களோ டாதா விலன்மற் றிலளிலரும்
தானு மிலர்க ளிலதில தாதுத் தடைப்பொருட்கண்
மேனு முரைத்த மரபே வரும்,'

என்றதனாலறிக. இது வடநூலைப் பின் பற்றிய இலக்கண மாகும்.

உரையாசிரியர் அவற்றிற்கு நடவான் முதலியவற்றை உதாரணமாகக் காட்டினர். அவற்றிற்குத், தமிழ் நூன்மரபின் படி இலக்கணங் கூறின், அவற்றுள், நடவான், நடவாள், நடவார், நடவார்கள் என்பனவற்றில் எதிர்மறை ஆகாரம் புணர்ந்து கெட்டது எனவும்; ஆன் முதலியன அவற்றின் விகுதிகள் எனவுங் கூறப்படும். நடவாது என்பதில் ஆ எதிர்

மறைப் பொருளது எனவும்; து ஒன்றன் படர்க்கை விகுதி எனவும்; நடவா என்பதில் ஆவே எதிர்மறைப் பொருளதாகி யும் விகுதியாகியும் வந்தது எனவும் கூறப்படும்.

நடவான் என்பது முதலிய நான்கினும் ஆன், ஆள், ஆர், ஆர்கள் என்பனவே எதிர்மறைப் பொருளைத் தருவனவாயின், நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தார்கள் என்பவற்றினும் அவை எதிர்மறைப் பொருளைத் தருதல் வேண்டும். 'நடந்தான் என்பது முதலியவற்றுள் காலமுணர்த்தும் எழுத்து உண்மை யின் எதிர்மறைப் பொருள் நீங்கிற்று' எனின், நடந்திலன், நடந்திலள் என்பன முதலியவற்றினும் எதிர்மறைப் பொருள் நீங்குதல் வேண்டும், அவற்றினும் காலமுணர்த்தும் எழுத்து உண்மையின் என்க. நடந்திலன், நடந்திலள் என்பன நடந்தி லான், நடந்திலாள் எனவும் வரும் என்பதையும் நோக்குக. நடந்திலர் என்பது நடந்திலர்கள் முதலிய மற்றவற்றினும் இங் ஙனம் வருவனவற்றை அறிந்துகொள்க. இனி நடந்திலன் என் பது முதலியவற்றுள், இல் எதிர்மறைப் பொருளது எனவும், அன் முதலியன விகுதிகள் எனவும் கூறப்படும் என்றறிக.

தாதுப்படலக் குறிப்புரை முற்றிற்று.

௬. கிரியா பதப் படலம்

இந்நூலாசிரியர் இப்படலத்தின் முதற்பாட்டில், 'படர்க் கையில் ஆண், பெண், பலர், ஒன்று, பல, சிறப்பு என்பன வற்றை அமைத்து, அவற்றை முக்காலங்களாற் பெருக்கின், படர்க்கை வினைமுற்றுக்கள் பதினெட்டாம்' எனவும்; இரண் டாம் பாட்டில், 'தன்மை வினைமுற்றிலும் முன்னிலை வினை முற் றிலும் ஒருமை, பன்மை, சிறப்பு என்பனவற்றை அமைத்து, அவற்றை முக்காலங்களாற் பெருக்கின், தன்மை வினைமுற்று ஒன்பதும், முன்னிலை வினைமுற்று ஒன்பதுமாகி, அவ்விரு திறமுங் கூடிப் பதினெட்டாம்' எனவும்; 'அம்முத்திறமுங் கூட வினைமுற்றுக்கள் முப்பத்தாறும்' எனவுங் கூறினர்.

நன்னூலாசிரியர், நன்னூல் வினையியல் ஐந்தாஞ் சூத்தி ரத்தில் படர்க்கை இடத்தில் ஐந்து பால்களையும், தன்மை முன்னிலை இடங்களில் ஒருமை பன்மைகளையும் அமைத்து

அவற்றை மூன்று காலங்களாற் பெருக்கின், தெரிநிலை வினை முற்றுப்பதம் ஒன்றே இருபத்தேழாம்' எனக் கூறினர். நன்னூலாசிரியர் கூறிய வினை முற்றுக்களின் தொகையின் இந்நூலாசிரியர் கூறிய வினைமுற்றுக்களின் தொகையில் ஒன்பது அதிகமாயிருத்தல் எதனால் எனின், படர்க்கையின் ஐந்து பால்களோடும், தன்மை முன்னிலைகளின் ஒருமை பன்மை என்பவற்றோடும் சிறப்பு என்பதனைச் சேர்த்து, அதனையும் மூன்றிடத்தினும் முக்காலங்களினாற் பெருக்கினமையால் மும்மூன்று ஒன்பது வினைமுற்று அதிகமாயின என்றறிக.

இனி நூலாசிரியர் மூன்றும் பாட்டில் படர்க்கை இறந்தகால வினைகளில் பிரத்தியங்கள் வருமாறு கூறினர். உரையாசிரியர் அதன் உரையில் 'தான், ஆன், தாள், ஆள், தார், ஆர், தார்கள், ஆர்கள், தது, அது, தன, அன என்று சொல்லப்பட்ட இவை பன்னிரண்டு பிரத்தியமும் இறந்த காலப் படர்க்கைக் கிரியாபதம் ஆறிற்கும் ஒன்றிற்கு இரண்டாக வரும்' என்றார்.

இதிற் படர்க்கைக் கிரியாபதம் ஆறு என்றது, படர்க்கை ஆண், பெண், பலர், ஒன்று, பல, சிறப்பு என்னும் ஆறன் வினைகளை என்றறிக.

பன்னிரண்டு பிரத்தியமும் அக்கிரியா பதங்கள் ஆறிற்கும் ஒன்றிற்கு இரண்டாய் வரும் என்றது ஆண்பாலுக்குத் தான் ஆன் என்பனவும், பெண்பாலுக்குத் தாள் ஆள் என்பனவுமாக இங்ஙனம் வருதலை.

உண்டான் முதலிய உதாரணங்களுள், உண்டான் என்பதில் தான் என்னும் பிரத்தியமும், உறக்கினான் என்பதில் ஆன் என்னும் பிரத்தியமும் வந்தன எனக் கொள்க. இங்ஙனமே உண்டாள், உறங்கினாள் என்பன முதலியவற்றினுங் கொள்க.

தமிழ் இலக்கண முறைப்படி உண்டான் என்பதில் ட் இறந்தகால இடைநிலை, ஆன் விகுதி எனக் கொள்ளப்படும். உண்டாள், உண்டார், உண்டார்கள் என்பனவற்றினும் ட் இடைநிலை எனவும், ஆள் முதலியன விகுதிகள் எனவுங் கொள்ளப்படும்.

உண்டது என்பதில் ட்-இடைநிலை, அ-சாரியை, து-ஒன்றன் படர்க்கை விகுதி எனக் கொள்ளப்படும். உண்டன என்

பதில் ட்-இடைநிலை, அன்-சாரியை, அ-பலவின் படர்க்கை விகுதி எனக் கொள்ளப்படும்.

உறங்கினான் என்பதில் இன்-இறந்தகால இடைநிலை, ஆன்-விகுதி எனக் கொள்ளப்படும். இங்ஙனமே உறங்கினாள், உறங்கினார், உறங்கினார்கள் என்பவற்றினும் இன்-இடைநிலை எனவும்; ஆள் முதலியன விகுதிகள் எனவுங் கொள்ளப்படும்.

உறங்கியது என்பதில் இன்-இடைநிலை எனவும், அதில் னகரமெய் கெட்டது கடைக்குறை எனவும், ய்-உடம்படுமெய் எனவும், அ-சாரியை எனவும், து-ஒன்றன் படர்க்கை விகுதி எனவுங் கொள்ளப்படும். உறங்கியன என்பதில் இன்-இறந்த கால இடைநிலை; இதில் ஈற்று னகரமெய் கெட்டது கடைக்குறை; ய் - உடம்படுமெய்; அன் - சாரியை; அ - பலவின் படர்க்கை விகுதி என்று கொள்ளப்படும்.

இந்நூலாசிரியர் இப்படலத்தின் மூன்றாவது முதலிய மூன்று பாட்டுக்களில் படர்க்கை வினைமுற்றுக்கள் பதினெட்டுக்கும் ஒன்றுக்கு இரண்டாக முப்பத்தாறு பிரத்தியங்களும், ஆறாவது முதலிய மூன்று பாட்டுக்களில் தன்மை, முன்னிலை வினைமுற்றுக்கள் பதினெட்டிற்கும் ஒன்றுக்கு இரண்டாக முப்பத்தாறு பிரத்தியங்களும் கூறினர், பின்னர், 9-ஆம் பாட்டில் ஏவல் முற்றுக்களில் வரும் பிரத்தியங்கள் கூறினர். அதில் இசைவுப் பொருள், பரோக்கப் பொருள் என இரண்டு பொருள்கள் கூறப்பெற்றுள்ளன. உரையாசிரியர் அவற்றுள் இசைவுப் பொருளுக்கு, 'அவனென் செய்க, இவளென் செய்க' என்பன முதலியவற்றை உதாரணமாகக் காட்டினர்.

வேறோர் பிரதியில் 'செய்க என்பதன் பொருள் செய்ய விசைந்தோம் என்றவாறு' என்றதனால், அவற்றுள், செய்க என்பது செய்ய இசைந்துள்ளோம் என்னுங் கருத்தை உட்கொண்டது என்பது தெரிகின்றது. எனவே, 'அவனென் செய்க' 'இவளென் செய்க' என்பவற்றிற்கு 'நாங்கள் செய்ய இசைந்துள்ளோம்; எங்களில் அவனென் செய்க? இவளென் செய்க?' என்பன பொருளாம் என்பது விளங்குதலறிக.

'பரோக்கம்' என்பதற்குப் பொருளை உரையிற் காண்க. இப்படலத்தின் மற்றைப் பொருள்கள் வெளிப்படையானவை.

கிரியா பதப் படலக் குறிப்புரை முற்றிற்று.

மூன்றாவது பொருளதிகாரம்

இதற்கு அடிக்குறிப்பில் எழுதப்பட்ட பொருளில் 'படலம்' என்றிருப்பதை 'அதிகாரம்' என்று திருத்திக்கொள்க

பொருட்படலம்

இந்நூலாசிரியர் இப்படலத்தின் முதற்பாட்டில் பொருள்களை 'அகம், புறம், அகப்புறம், புறப்புறம்' என நான்காக வகுத்துக் கூறிப் பின் இரண்டாம், பாட்டிலும், மூன்றாம் பாட்டிலும் முல்லை முதல் உழிஞை வரையிலும் இருபத்தைந்து நிலங்களைக் கூறி, 'இவ்விருபத்தைந்து நிலனும் மேற்சொன்ன நான்கு பொருளில் அடங்கும்; பாடாண் பாட்டும், பொதுவியல் முதலாயுள்ளவும் ஆய்ந்து அடக்கிக்கொள்க,' என்றார். இவர் அங்ஙனம் கூறியதனை,

'முல்லை குறிஞ்சி......உழிஞை எனப்பகர்ந்த
மற்றிவை யையைந்து மாம்பொருள் நான்கினும் வண்புகட்சி
பற்றிய பாடாண் பொதுவிய லாதியும் பார்த்தறியே.'

என அவ்விரு பாட்டுக்களிற் கூறியவற்றை நோக்கி அறிக. இப்படலத்தின் நான்கும், பன்னிரண்டும், பதின்மூன்றுமாகிய இப்பாட்டுக்களை நோக்கினும், நூலாசிரியர் கருத்து இதுவேயாம் என்பது புலனும். ஆனால், இந்நூலின் உரையாசிரியர், 'முல்லை குறிஞ்சி ....உழிஞை எனச் சொன்ன இருபத்தைந்து நிலத்தினும் முன் சொன்ன நான்கு பொருளும் அடங்கும்,' என்றார். இப்பொருள் நூலாசிரியர் கருத்தோடு மாறுபடுவதேயன்றி மற்றை நூலாசிரியர் கருத்துக்கும் மாறானதேயாகும்.

அகம்

'களவுங் கற்புங் கைகோ ளாக
அளவி லன்பின தகமெனப் படுமே.'

அகப்புறம்

'ஆய வகப்புற மையிரண்டு மாயுங்கால்
காந்த ளமர்த்தவீ ரைந்துமகத் தின்புறமே.'

'பெருந்திணைப் பொருளே பொருந்தக் கூறின்
அறத்தி னியன்ற வகத்தோடு புணராத்
திறத்த தென்ப திறனறிந் தோரே.'

'நிலையா வன்பி னீடா வின்பத்
துலகமலை வெல்லாம் பெருந்திணை யகப்புறம்.'
(யாப்-வி-பக்கம், 529)

புறம்

'வெட்சி முதலாத் தும்பை யீருச்
செப்பிய வேழும் புறப்பொரு ளாகும்.'
(யாப்-வி-பக்கம், 530)

'வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குடை யுழிஞை நொச்சி தும்பையென்
றித்திற மேழும் புறமென மொழிப.'

புறப்புறம்

'வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புற மாகும்.'

இவை புறப்பொருள் வெண்பா மாலையின் ஈற்று மேற்கோட் சூத்திரங்கள். இச்சூத்திரங்களையும் ஈண்டு நோக்குக.

நான்காம் பாட்டில், 'முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்னும் ஐந்து நிலனும் அகப்பொருளாம்,' என்று கூறி, 'இவற்றிற்குச் சட்டக முதலிய இருபத்தேழுரை உள,' என்று உரைத்து, 'அகப்புற முதலிய மற்றைப் பொருள்களின் நிகழும் உரையையும் அறிந்துகொள்க,' என்றார். பின்பு ஐந்தும் ஆறுமாகிய இரண்டு பாட்டுக்களில் சட்டகமுதலிய இருபத்தேழு உரைகளையும் கூறினர். உரையாசிரியர், சட்டகமுதல் இவ்விருபத்தேழுரைகளையும் தம்முரையினாலும், மேற்கோட்சூத்திரங்களாலும் விளக்கிச் செல்கின்றார்.

அங்ஙனம் உரையாசிரியர் அவற்றை விளக்கிச் செல்கையில் அவற்றுள், இரண்டாம் உரையாகிய திணையை விளக்குகையில் 'திணையாவது, 'எந்நிலம் பற்றி வந்தது?' என்றால், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து நிலத்தில் இஃதிந்நிலம் பற்றி வந்தது என்று சொல்வது,' என்று கூறி, ஐந்து திணைக்கும் உரிய முதல், கரு, உரிப்பொருள் உணர்த்தற்கு நூலாசிரியராற் கூறப்பட்ட ஏழு முதல் பதினொன்று

வரையினும் உள்ள ஐந்து பாட்டுக்களை அதன்கீழ் வைத்து, 'இவற்றால் இன்ன திணையென்றறிக,' என்றார்.

நான்காம் உரையாகிய நடையை விளக்குமிடத்து, 'நடையாவது, ஒழுக்கம். 'இப்பாட்டு எந்நடை பற்றி வந்தது?' என்றால் இந்நிலத்தின் ஒழுக்கம் பற்றி வந்தது என்றறிவது. அஃதாமாறு ;' என்று கூறி, ஐந்து சூத்திரங்களை மேற்கோளாகக் காட்டுகின்றார். அவ்வைந்து சூத்திரங்களும் அவ்வந்நிலத்தின் ஒழுக்கங்களின் துறைகளைத் தனித்தனி தொகுத்துக் கூறுகின்றனவாயிருக்கின்றன. ஆதலின், அவை நன்கு கவனித்தற்குரியனவாகும்.

அவ்விருபத்தேழுரைகளுக்கு உரையாசிரியராற் கூறப்படும் விளக்கங்களும், அவராற் காட்டப்படும் மேற்கோட் சூத்திரங்களும் பொருளிலக்கண அமைதிகள் பலவற்றை நன்கு விளக்குவனவாயிருக்கின்றன. ஆதலின், அவை நன்கு கவனித்து நோக்கற்குரியனவாகும்.

பின்பு பன்னிரண்டாம் பாட்டில் அகப்புறப் பொருள்களைக் கூறினர். அவை, (1) முதுபாலை, (2) பாசறை முல்லை, (3) வள்ளி, (4) சுரநடை, (5) இல்லவண் முல்லை, (6) காந்தள், (7) குறுங்கலி, (8) தாபதம், (9) குற்றிசை, (10) தபுதாரம், (11) கைக்கிளை, (12) பெருந்திணை என்னும் பன்னிரண்டாம். அவற்றுள், கைக்கிளையும் பெருந்திணையும் நீங்கிய மற்றைப் பத்து நிலங்களையும் விளக்குதற்பொருட்டு உரையாசிரியராற் காட்டப்பட்ட 'ஆய்ந்த அகம்புற மையிரண்டும் ஆயுங்கால்' என்று தொடங்கும் மேற்கோட்சூத்திரம் நன்கு கவனித்தற்குரியதாகும்.

பிறகு பதின்மூன்றும் பாட்டில் புறப்பொருளையும், புறப்புறப் பொருளையும் கூறினர். பின்பு பதினான்காம் பாட்டு முதல் இருபத்திரண்டாம் பாட்டு வரையினும் உள்ள ஏழு பாட்டுக்களில் வெட்சி முதலிய புறப்பொருள்களின் வகைகளையும், வாகை முதலிய புறப்புறப்பொருள்களின் வகைகளையும் தனித்தனி ஒவ்வொரு பாட்டாற் கூறுகின்றார். ஈண்டு வகை என்றது துறைகளை என்று கொள்க. உரையாசிரியர் அவற்றுள், வெட்சித்திணை நீங்கிய மற்றைத் திணை

களின் வகைகளை நன்கு விளக்கிக் கூறினர்; வெட்சித் திணையின் வகைகளை விளக்கிக் கூறிற்றிலர்.

நூலாசிரியர், புறப்பொருளின் திணைகள் ஏழனுள், வெட்சித் திணையின் வகைகளையும், புறப்பொருளின் திணைகள் மூன்றனுள் பொது வியற்றிணையின் வகைகளையும் கூறிற்றிலர்.

புறப்பொருளின் திணைகளுள் ஈற்றதாகிய தும்பைத் திணைக்கு முன் புறப்புறப் பொருளின் திணைகளுள் ஒன்றாகிய வாகைத்திணை அமைந்திருக்கின்றது. இங்ஙனம் அமைந்திருப்பதை நோக்கின், 'இவற்றை நூலாசிரியரே அமைத்தனரோ? அன்றிப் பிற்காலத்து ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழையோ?' என்னும் ஐயம் தோன்றுகின்றது.

உரையாசிரியர், இப்படலத்தின்கண் உள்ள பாட்டுக்களின் உரைகளையும் விளக்கவுரைகளையுங் கூறி முடித்துப் பின்பு, 'இனி ஒரு சார் ஆசிரியர் சொல்லுமாறு :—அறமும் அறக்காரணமும், பொருளும் பொருட்காரணமும், இன்பமும் இன்பக்காரணமும் என்றிவ்வகைப்படுத்தும்; அகப்பொருளும், புறப்பொருளும், அகப்புறப் பொருளும் என மூன்று வகைப்படுத்தும் மொழிவர்' என்று கூறி, அவற்றிற்கு,

'அறம்பொரு ளின்ப மறனே காரணம்
அகமும் புறமு மகப்புற முமெனா
விலக்கி லின்னவாகும் பொருட்டெரி வகையே'

என்றாராகலின்' என்றுரைத்தார். பின்பு, 'அறன் முதலாகிய மூன்று பொருளும் அகவுரையிற் கொள்க' என்று கூறி, பின் அகப்பொருளையும் புறப்பொருளையுந் தெரிவிக்கச் சில மேற்கோட் சூத்திரங் காட்டி, பின்பு அகப்புறப் பொருளைத் தெரிவிக்க,

'அறனும் வாட்கையும் ஒருதலைக் காமமும்
பொதுவியல் பாடாண் நயனிலைப் படலமென்
றிவைகள் அனைத்து மகப்புறம் ஆகும்.'

என்னுஞ் சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டி, அதில் உள்ள ஆறு பொருள்களில் அறம் முதலாகிய ஐந்து பொருள்களை விளக்கிப் பின் ஆறுவதாகிய நயனிலைப் படலத்தை விளக்குகையில், "நயனிலைப் படலமாவது, நாடகம்; கூத்த மார்க்கம்

என்பதுமது. அது பெரியோரைத் தலைமக்கள் மேவச் செய்யப் பட்ட மெய்ப்பொருள் பற்றி வருதல். சிறியோரைத் தலைமக்க ளாக்கி (1) ஒளியும், (2) விருத்தியும், (3) சாதியும், (4) சந்தி யும், (5) சுவையு முதலாகப் பல விகற்பத்தானும் வரும்,'' என்று கூறி, அதிலுரைத்த ஒளி முதலாகிய ஐந்தினையும் விளக் குவாராய், அதன் மூலமாக நாடக இலக்கணங்களைக் கூறி ஈற் றில் அகப்பொருள் முதலிய நான்கு பொருள்களையும் விளக்கும் சில சூத்திரங்களைக் காட்டினர்.

பொருளதிகாரக் குறிப்புரை முற்றிற்று.

நான்காவது யாப்பதிகாரம்

ய யாப்புப்படலம்

இந்நூலாசிரியர் யாப்புக்களின் உறுப்புக்கள் ஆறனுள், அசையும், சீரும், அடியும், தொடையுமாகிய நான்குறுப்பே கூறினர். எழுத்து, தளை என்னும் மற்றை இரண்டுறுப்புக் களைக் கூறிற்றிலர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்விரண் டுறுப்புக்களையும் தனியாக விதந்து கூறிற்றிலர்.

பொருளதிகாரம், செய்யுளியல் முதற்சூத்திரத்தின் உரை யில் பேராசிரியர், ஆசிரியர் தொல்காப்பியனாரால் தளை தனியா கக் கொள்ளப்படாமைக்குப் பல காரணங்களைக் கூறிப் பின் னர்த் 'தளைவேண்டினார், பிற்காலத்தோர் ஆசிரியரென்பது,' என்றார். அவர் கூறிய அக்காரணங்களை அச்சூத்திர உரையிற் காண்க. ஆயினும் அவ்வியலில்,

'வெண்டளை விரவியு மாசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப'

எனவும்,

'அறுசீ ரடியே யாசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே.'

எனவும் வரும் தொண்ணூற்று மூன்று, தொண்ணூற்று நான் காஞ் சூத்திரங்களை நோக்கின், ஆசிரியர் தொல்காப்பியனார் தளையையும் தழுவிக்கொண்டார் என்பது பெறப்படும்.

எழுத்ததிகாரத்திற் கூறிய எழுத்துக்களே யாப்புக்குரிய எழுத்தென்னும் உறுப்பாய் வருதல் நோக்கி, ஆசிரியர் தொல்

காப்பியனார் யாப்பின் உறுப்பாகிய எழுத்தை விதந்து கூறிற்றிலரெனினும், எழுத்ததிகாரத்திற் கூறப்பட்ட எழுத்தியல் வகைக்கும், யாப்பின் உறுப்பாகக் கொள்ளப்படும் எழுத்தியல் வகைக்கும் வேறுபாடுண்மை கருதி எழுத்துறுப்பையும்,

'அவற்றுள்

மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்,'

என வரும் இரண்டாஞ் சூத்திரத்தில் 'அன்ன' என்றதனால் நேர்ந்தார் என்றறிக. அதனை அச்சூத்திரத்திற்குப் பேராசிரியர் கூறிய உரையினால் அறிக.

யாப்பருங்கல முதலிய மற்ற நூல்களில் அவ்வுறுப்புக்கள் ஆறுங் கூறப்பெற்றுள்ளன.

இந்நூலாசிரியர் இப்படலத்தின் முதற்பாட்டில் அசைகளையும், சீர்களையுங் கூறினர். இவர் நேரசை, நிரையசை என்னும் அசைகள் இரண்டையும் கூறினரேனும், ஓரசைச் சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என்னும் நால்வகைச் சீர்களுள், ஈரசைச்சீரும், மூவசைச் சீருமாகிய இரண்டு சீர்களையே கூறினார். மற்ற இரண்டு சீர்களைக் கூறிற்றிலர். அவற்றுள், ஈரசைச்சீர்கள் நான்கினையும் **முதற்சீர்கள்** என்றும், மூவசைச் சீர்கள் எட்டினுள் காய்ச்சீர்கள் நான்கினையும் **இடைச்சீர்கள்** என்றும், கனிச்சீர்கள் நான்கினையும் **கடைச்சீர்கள்** என்றும் கூறினர். இவர் சீர்களுக்குக் கூறிய இப்பெயர்களைக் கொண்டு ஏழாம் பாட்டில் வெண்பாவிற்கு இலக்கணங் கூறுகின்றார். அதன் விளக்கம் ஆண்டு எழுதப்படும்.

பின் இரண்டாம் பாட்டில் அச்சீர்களின் உதாரண வாய்பாடுகளைக் கூறி, மூன்றும் பாட்டில் அச்சீர்களாலான இருசீரடி முதலிய ஐவகை அடிகளைக் கூறி, அவற்றிற்கு முறையே தம் கோளாக ஐவகைப் பெயரும், பிறன்கோளாக ஐவகைப் பெயருங் கூறினர். அவற்றுள், இவர் தங்கோளாகக் கூறிய பெயர்கள் வேறு தமிழ் நூல்கள் எவற்றினுங் காணப்படாதனவாயிருக்கின்றன. அவை ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் என்பன. பிறன் கோளாகக் கூறிய பெயர்கள் குறள், சிந்து, அளவு, நெடில், கழிநெடில் என்பன. இவை மற்றைத் தமிழ் நூற்கள் எல்லாவற்றினுங் காணப்படுவனவே.

இந்நூலாசிரியர், மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் ஐவகைத் தொடைகளுள் இப்படலத்தின் மூன்றாம் பாட்டினால், மோனையையும், ஐந்தாம் பாட்டினால் எதுகையையுங் கூறினர். மற்றை மூன்று தொடைகளையுங் கூறிற்றிலர். அன்றியும்; அவ்வைவகைத் தொடைகள் ஒவ்வொன்றினும் அவற்றின் வகைகளாய் வரும் அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்பவற்றையுங் கூறிற்றிலர்; அந்தாதித்தொடை, செந்தொடை, இரட்டைத்தொடை என்பவற்றையும் உரைத்திலர்.

இவை யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலிய நூற்களில் விளங்கக் கூறப்பெற்றன. யாப்பருங்கலம், உறுப்பியல், தொடையோத்தில்,

'மோனை யெதுகை முரணியை பளபெடை
பாத மிணையே பொழிப்போ டொரூஉத்தொடை
கூழை கதுவாய் மிசையதூஉங் கீழதூஉம்
சீரிய முற்றொடு சிவணுமா ரவையே.'

என வரும் முப்பத்துநான்காஞ் சூத்திரத்தினால் மோனை முதலிய ஐந்து தொடைகளையும், அவற்றின் வகைகளையுங்கூறி, முப்பத்தைந்தாஞ் சூத்திர முதல் நாற்பத்தெட்டாஞ் சூத்திரம் வரையினும் உள்ள பதினான்கு சூத்திரங்களால் அவற்றின் இலக்கணங்களைக் கூறினர்; பிறகு,

'செந்தொடை யிரட்டையோ டந்தாதி யெனவும்
வந்த வகையான் வழங்குமன் பெயரே.'

என வரும் நாற்பத்தொன்பதாஞ் சூத்திரத்தால் செந்தொடை, இரட்டைத்தொடை, அந்தாதித்தொடை என்னும் மூன்று தொடைகளைக் கூறி, அதனை அடுத்துள்ள மூன்று சூத்திரங்களான் அவற்றின் இலக்கணங்களைக் கூறியுள்ளார். இங்ஙனமே யாப்பருங்கலக்காரிகையினும் அவை கூறப்பெற்றிருத்தலை அந்நூலின் உறுப்பியலை நோக்கி அறிக.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார், தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுள் இயலில்,

'மோனை யெதுகை முரணே யியைபென
நானெறி மரபின தொடைவகை யென்ப.'

எனவும்,

'அளபெடை தலைப்பெய வைந்து மாகும்.'

எனவும் வரும் எண்பத்தெட்டும் எண்பத்தொன்பதுமாகிய இரண்டு சூத்திரங்களான் மோனை முதலிய ஐந்து தொடைகளையுங் கூறினர். ஆயினும், அவற்றை எவ்வெட்டு வகையாகப் பகுத்திலர். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய அத்தொடைகள் அடிமோனையும், அடியெதுகையும், அடி முரணும், அடியியைபும், அடி அளபெடையுமாகக் கொள்ளற்குரியவாகும்.

ஆனால், ஆசிரியர் தொல்காப்பியனார், ஒருசீர் இடை இட்டு வரும் பொழிப்பு எதுகையையும், இருசீர் இடை இட்டு வரும் ஒரூஉ எதுகையையும் மேற்கூறிய தொடைகளுக்கு வேறாய் வரும் தொடைகளாகக் கொண்டு, அவற்றைச் செந்தொடை, நிரனிறுத்தமைத்தல், இரட்டைத்தொடை என்பவற்றோடு சேர்த்துக் கூறியிருக்கின்றனர்.

மோனை

இந்நூலாசிரியர் இப்படலத்தின் நாலாம் பாட்டில் மோனையைக் கூறத் தொடங்கி, மோனை என்பது இன்னது எனக் கூறாமல், அதன்கண் ஒன்றுக்கொன்று மயங்கி வரும் எழுத்துக்களைக் கூறினர்.

அப்பாட்டில் 'முன்னிரண்டாவியும்' என்றது அகர ஆகாரங்களை; 'ஈறும்' என்றது ஈற்றுயிராகிய ஔகாரத்தை; 'முன்னவற்றின் பின்னிரண்டாவியும் ஏழும் எட்டும்' என்றது முன் சொன்ன அகர ஆகாரங்களுக்குப் பின்னுள்ள இகர ஈகாரமும், ஏழாமுயிரும் எட்டாமுயிருமாகிய எகர ஏகாரங்களுமாகிய இவற்றை; 'ஆறும் ஐந்தும்' என்றது ஐந்தாம் உயிரும் ஆறும் உயிருமாகிய உகர ஊகாரங்களை; 'ஆறும் ஐந்தும்' என்றதை 'ஐந்தும் ஆறும்' என இயைக்க. 'பன்னிரண்டாமுயிர் முன்னிரண்டும்' என்றது, பன்னிரண்டாம் உயிராகிய ஔகாரத்துக்கு முன்னுள்ள ஒகர ஓகாரங்களை என்றறிக.

உயிர்களுள்,

அ, ஆ, ஐ, ஔ என்பன நான்கும் ஒன்றிற்கொன்று மோனையாம்;

இ, ஈ, எ, ஏ என்பன நான்கும் ஒன்றிற்கொன்று மோனையாம்;

உ, ஊ, ஒ, ஓ என்பன நான்கும் ஒன்றிற்கொன்று மோனையாம்;

மெய்களுள்,

த, ச என்பன இரண்டும் ஒன்றிற்கொன்று மோனையாம்;
ஞ, ந என்பன இரண்டும் ஒன்றிற்கொன்று மோனையாம்;
ம, வ என்பன இரண்டும் ஒன்றிற்கொன்று மோனையாம் என அறிக.

சில இடங்களில் இ, ஈ, எ, ஏ என்னும் உயிர்களுக்கு யகரம் மோனையாய் வருதலுமுண்டு. இஃது இந்நூலிற் கூறப்பட்டதன்று.

உதாரணம்:

'தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத்தெண் ணீரருவி
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானா நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்
ஆனா வறிவி னவர்கட்கென் னாங்கொலென் னாதரவே.'

என வரும் யாப்பருங்கலக்காரிகை இரண்டாம் பாட்டின் மூன்றாமடியில் ஏகாரத்திற்கு யகரம் மோனையாய் வந்திருத்தலையும்,

'வேங்கட மாலை யவியா மதிவிளக் கேற்றியங்கம்
ஆங்கட மாலய மாக்கிவைத் தோமவன் சேவடிக்கே
தீங்கட மாலைக் கவிபுனைந் தோமிதிற் சீரியதே
யாங்கட மாலையி ராவத மேறி யிருக்குமதே.'

என வரும் திருவேங்கடத்தந்தாதி மூன்றாம் பாட்டின் நான்காம் அடியில் இகர ஏகாரங்களுக்கு யகரமோனையாய் வந்திருத்தலையும் அறிக.

இங்ஙனம் வரும் மோனைகளை அநுமோனை என்பர். அதனை யாப்பருங்கலக்காரிகை ஒழிபியலில் 'வருக்க நெடிலினம்' என்று தொடங்கும் ஆறாம் பாட்டின் உரையில் வந்துள்ள

'அகரமோ டாகார மைகார மௌவாம்
இகரமோ டீகாரம் எஏ-உகரமோ
டூகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத வல்ல வரு,'

என்னு மேற்கோளாலும் அறிக.

மேற்கண்ட நாலாம் பாட்டின் உரையில் உரையாசிரியர் 'இவற்றுள், ஒற்றெழுத்து மோனையும், உயிரெழுத்து மோனையும் மரபு பிழையாமல் வரவேண்டும்' என்றார். அவற்றை எங்ஙனம் அறிந்துகொள்வது எனின், த, தா, தை, தௌ என்பனவற்றிற்குச் ச, சா, சை, சௌ என்பன மோனையாய் வரின், ஒற்றும், உயிருமாகிய இரண்டினும் வந்த அநுமோனையாம் எனவும்; க, கா, கை, கௌ என்பன ஒன்றுக்கொன்று மோனையாய் வரின், உயிரின் மாத்திரம் வந்த அநுமோனையாம் எனவும் அறிந்துகொள்க. இவற்றுள் முற்கூறியவற்றின்கண் அ, ஆ, ஐ, ஔ என்னும் உயிர்கள் ஒன்றுக்கொன்று மோனையாய் மயங்கி வந்ததேயன்றித் தகர சகர ஒற்றுக்களும் ஒன்றுக்கொன்று மோனையாய் மயங்கி வந்தன; பிற்கூறிய வற்றில் ஒற்றுக்கள் ஒன்றுக்கொன்று மயங்காமல் உயிர்கள் மாத்திரம் மயங்கி வந்தன. மற்றவற்றினும் இங்ஙனமே அநுமோனைகளை அறிந்துகொள்க. ஈண்டு உயிரும் ஒற்றும் மயங்குதல் என்றது, ஒருயிருக்குப் பிறிதோருயிரும், ஓரொற்றுக்குப் பிறிதோரொற்றும் வந்து மோனையாதலை என்றறிக.

அங்ஙனமாயின், மோனையாவது யாதெனின், அடியினும் சீரினும் முதலெழுத்து ஒன்றி வருவதேயாம்.

உதாரணம்:

'**மா**வும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடா
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே.'

இங்ஙனம் வருவதே மோனையாம் என்பதனைத் தொல்காப்பியம், பொருள், செய்யுளியலில்,

'அடிதோறுந் தலையெழுத் தொப்பது மோனை.'

என வரும் தொண்ணூற்றிரண்டாஞ் சூத்திரத்தானும் அதன் உரைகளானும், உதாரணங்களானும் அறிக.

எதுகை

இந்நூலாசிரியர், ஐந்தாம் பாட்டில் எதுகை என்பது இன்னதென அதன் இலக்கணங்கூறிப் பின் மூன்றும் எழுத்து

ஒன்றிவரும் எதுகை, இரண்டடி எதுகை, சீர் முழுதும் ஒன்றி வரும் எதுகை, வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையின எதுகை, இரண்டாம் எழுத்தின் ஒற்று ஒவ்வாமல் உயிர் ஒத்து வரும் உயிரெதுகை, ஆசிடையிட்ட எதுகை என வேறு வகையாக வரும் எதுகைகளைக் கூறினர்.

உரையாசிரியர், 'எதுகை எனினும் தொடையெனினும் ஒக்கும்' என்றார். இதனால், 'தொடை என்பது எதுகையே என்பது இவர் கொள்கையாம் என்பது விளங்குகின்றது. ஆனால், இந்நூலாசிரியர் இதனைப் பற்றி யாதுங் கூறிற்றிலர்.

ஆசிரியர் தொல்காப்பியனார் முதலிய மற்றையாசிரியர்கள் மோனை முதலிய ஐந்தையும் தொடை என்று கொண்டார்கள்.

'ஆசிரியர் தொல்காப்பியர் முதலியவர்கள் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் ஐந்தினையும் தொடை என்று கொண்டார்கள் என்பதை எவற்றாற் பெறுதும்?' எனின் தொல்காப்பியம், பொருள், செய்யுள் இயலில்,

'மோனை யெதுகை முரணே யியைபென
நானெறி மரபின தொடைவகை யென்ப.'

எனவும்,

'அளபெடை தலைப்பெய வைந்து மாகும்.'

எனவும் வரும் தொண்ணூற்றெட்டு, தொண்ணூற்றொன்பதாஞ் சூத்திரங்களானும், யாப்பருங்கலம், உறுப்பியல், தொடையோத்தில்,

'தொடையே அடியிரண் டியையத் தோன்றும்.'

எனவும்,

'மோனை யெதுகை முரணியை பளபெடை
பாத மிணையே பொழிப்பே ஒரூஉத்தொடை
கூழை கதுவாய் மிசையதூஉங் கீழதூஉம்
சீரிய முற்றொடு சிவணுமா ரவையே.'

எனவும் வரும் முதலிரண்டு சூத்திரங்களானும் பிறவற்றானும் பெறுதும் என்பது.

இந்நூலாசிரியர் ஆறும் பாட்டில், 'செய்யுள், பத்தியம், கத்தியம் என இரண்டு வகைப்படும்,' என்றார். இவர் அங்ஙனம் கூறியிருத்தலை அப்பாட்டில்,

'பத்தியங் கத்திய மென்றிரண் டாஞ்செய்யுள்.'

என்றதனுலறிக.

பின்பு அப்பாட்டில் பத்தியமாவன இவை எனவும், கத்தியமாவன இவை எனவும் கூறிப் பின் பத்தியங்களைக் கூறத் தொடங்கி ஏழாம் பாட்டில் வெண்பாவின் இலக்கணங் கூறினார்.

யாப்பருங்கல நூலாசிரியர் முதலானவர்கள் வெண்பாவிற்குரிய இலக்கணங்களுள் தளைகளைக் கொண்டு கூறிய இலக்கணத்தை இந்நூலாசிரியர் சீர்களானே கூறினர். இவர் அங்ஙனங் கூறிய இலக்கணமாவது:

'ஒன்றும் இடைச்சீர் வருஞ்சீ ரோடு;முதற் சீர்கள்தெற்றும்.'

என்பது.

(இ - ள்.) இடைச்சீர்களாகிய காய்ச்சீரின் முன் வருஞ்சீரின் முதலசை, நேரசையாய் வந்து ஒன்றும்; முதற்சீர்களாகிய ஈரசைச் சீர்களுள் மாச்சீர்களின் முன் வருஞ்சீரின் முதலசை நிரையசையாகவும், விளச்சீர்களின் முன்வருஞ் சீர்களின் முதலசை நேரசையாகவும் விகற்பித்து வரும் என்பது.

'மற்றைய நூலாசிரியர்கள் கூறிய இலக்கணமும் இதுவே அன்றோ?' எனின், அன்று; வெண்சீரொன்றி வருவது வெண்சீர் வெண்டளை; இயற்சீர் விகற்பம் இயற்சீர் வெண்டளை; இவ்விரு தளைகளான் வெண்பா வரும் என்பது மற்றையோர் கூறிய இலக்கணமாகும்.

இந்நூலாசிரியர், ஈரசைச்சீர் நான்கினையும் முதற்சீர்என்றும், மூவசைச்சீர் எட்டனுள் காய்ச்சீர் நான்கினையும் இடைச்சீர் என்றும், கனிச்சீர் நான்கினையும் கடைச்சீர் என்றுங்கொண்டனர் என்பது முன்னே கூறப்பட்டது. இவ்வாசிரியர் இனி வெண்பாவிற்குக் கூறிய மற்றை இலக்கணங்களாவன,

'ஈற்றடியும்,
நன்று மலர்காசு நாள்பிறப் பென்றிற்ற சிந்தடியே;
துன்றுங் கடைச்சீர் புகாவேன்பர் வெள்ளையில்'

என்பன: இவற்றின் பொருளை அப்பாட்டின் உரையிற் காண்க.

'இவ்வாசிரியர் ஓரசைச்சீர் கூறிற்றிலராதலின், ஈண்டுக் கூறிய நாள், மலர் என்பன அசைகளாகக் கொள்ளற்குரி யனவோ? ஓரசைச்சீர்களாகக் கொள்ளற்குரியனவோ?' எனின், ஈண்டு,

'ஈற்றடியும்,
நன்று மலர்காசு நாள்பிறப் பென்றிற்ற சிந்தடியே'

என்றமையானும், 'முச்சீரடி சிந்தடி' என்றமையானும், ஓரசைச்சீர்களாகக் கொள்ளற்குரியனவேயாகும் என்க.

நாள், மலர் என்பன ஓரசைச்சீர்களாய் அடங்குமேனும், காசு, பிறப்பு என்பன ஓரசைச்சீர்களாய் அடங்குமோ?' எனின், அடங்கா. அசைக்கு இந்நூலாசிரியர் கூறிய இலக்கணத்தின்படியும், யாப்பருங்கலத்தினும், யாப்பருங்கலக் காரிகை முதலியவற்றினும் கூறிய இலக்கணத்தின்படியும் வெண்பாவின் ஈற்றில் உகரம் பெற்று வந்த ஈரசைச் சீர்களாகவே கொள்ளப்படும்.

அவை அங்ஙனம் கொள்ளுவதற்குரியனவாம் என்பதனை, யாப்பருங்கலக்காரிகைச் செய்யுளியல், ஐந்தாம் பாட்டின் உரையில் உரையாசிரியர், 'ஒளிசேர் பிறப்பொண் காசும்' என்று சிறப்பித்தது, காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றிய லுகரம் ஈருகிய நேரீற்றியற்சீர் இறுதியாகிய முச்சீரடியானும் இறுவனவுமுள ஒருசார் வெண்பா என்பது அறிவித்தற்கு எனக்கொள்க,' எனவும்;

'மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறுவா
யோவா தளபெடுத் தூஉவுங் கெழூஉவு முதாரணமாய்
நாவார் பெரும்புகழ் நத்தத்தர் யாப்பி னடந்ததுபோல்
தேய்வா முகரம்வந் தாலியற் சீரிங்குச் செப்பியவே.'

இக்காரிகைச் சூத்திரத்துள் எனனும ஒசையூட்டுதற் கருத் தாவது 'மாவாழ்சுரம், புலிவாழ்சுரம்' என்னும் வஞ்சி உரிச்சீர் இரண்டும் உளவாக வைத்து, ஒரு பயன் நோக்கித் 'தூஉமணி, கெழூஉ மணி' என்றளபெடுத்து நேர் நடுவாகிய வஞ்சியுரிச்

சீர்க்கு உதாரணம் எடுத்துக் காட்டினார் நத்தத்தனார் முதலாகிய ஒரு சாராசிரியர். அதுபோலவே இந்நூலுடையாரும் 'தேமா, புளிமா' என்னும் இரண்டு நேரீற்றியற்சீரும் உளவாக, வெண்பாவின் இறுதிச் சீர்க்கு உதாரண வாய்பாட்டான் ஓசையூட்டுதற் பொருட்டாகக் குற்றியலுகரம் ஈறாகிய காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டு நேரீற்றியற்சீராக வேறுதாரணம் எடுத்தோதினார் எனக் கொள்க' எனவும் கூறியவற்றான் அறிந்துகொள்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் அசைக்குக்கூறிய இலக்கணத்தின்படி அவை, 'நேர்பு,' 'நிரைபு' என்னும் ஓரசைச் சீர்களாய் அடங்கும் என்க.

நூலாசிரியர், எட்டாம் பாட்டில் வெண்பாவின் வகைகளைக் கூறுகின்றார். அதில், 'நான்கடி நேரிசை' என்று கூறி, 'இதன் நேரிசையே நீண்டிசையாங் கலி' என்றார். இவற்றினுக்கு உரையாசிரியர், 'நான்கடியால் வருவது நேரிசை வெண்பாவாம்' எனவும், 'நேரிசை வெண்பாப் போன்று அதனின் நீண்டு வருவது கலிவெண்பாவாம்' எனவும் பொருள் கூறினார்.

சிந்தியல் வெண்பாவை நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச்சிந்தியல்வெண்பா என இரண்டாகவகைப்படுத்திக் கூறாமல், 'மூன்றடியால் வருவது சிந்தியல் வெண்பாவாம்' என்றார். இவர் அங்ஙனம் கூறியதனை, அப்பாட்டில் 'மிக்க மூவடியால் தூண்டிய சிந்தியல்' என்றதனாலறிக. உரையாசிரியர் 'மூவடியால் வருவது சிந்தியல் வெண்பாவாம்' என்று கூறிய உரையையும் நோக்குக. 'நேரிசை வெண்பாவின் விகற்பித்து வருவது இன்னிசை வெண்பாவாம்' என்றார். அங்ஙனம் இவர் கூறியதனை, அப்பாட்டில் 'நேரிசை பேதிக்கில் இன்னிசையே,' என்றதனால் அறிக. அதற்கு உரையாசிரியர் கூறிய உரையையும் நோக்குக.

ஆசிரியர் தொல்காப்பியனார், 'வெள்ளடியால் ஒரு பொருள் நுதலி வருவது கலிவெண்பாவாம்' என்றார். அதனை,

'ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலால்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே.'

எனவரும் தொ-பொ-செ. 52-ஆம் சூத்திரத்தாலறிக.

தரவு

இப்படலத்தின் கலிப்பாவின் வகையைக் கூறும் பத்தாம் பாட்டின் விசேட உரையில்'அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப் பாவிற்கும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் உறுப்பா கிய தரவு அளவடியால் வரும்' என்றார். இதில் 'அளவடி யால்' என்பது ஆறடியால் என்றிருத்தல் வேண்டும் எனக் கொள்க, என்னெனின், அவ்விரு கலிப்பாக்களுக்கும் தரவு ஆறடியால் வருதல் வேண்டும் என்பது விதியாகலின் என்க. அவ்விதியை யாப்பருங்கலம்-செய்யுள் இயல்-இருபத்தொன்ப தாஞ் சூத்திரத்தின் விசேட உரையில் 'நிகழ்வது' என்று விதந்த அதனால் அம்போதரங்கமும், வண்ணகமும் 'இரு மூன்றடியே தரவின் பெருமை' என்றதனாலும், யாப்பருங்கலக் காரிகையின் ஒழிபியல், ஏழாம் பாட்டில்,

'இரு மூன்றடியே
தரங்கக்கும் வண்ணகக் குந்தர வாவது.'

என்றதனாலும்; அதன் உரையில் உரையாசிரியர், 'அம்போ தரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் பெருக்கம் சுருக்கம் இல்லை; ஆறடியே தரவா வது' என்றதனாலும் அறிக.

வெண்டுறை

இந்நூலின் பதினைந்தாம் பாட்டின் முன்னுள்ள குறிப் பின் ஈற்றில் 'வெண்டாழிசை' என்றிருப்பதை **வெண்டுறை** எனத் திருத்திக்கொள்க.

அப்பாட்டின் உரையில், 'அல்லாமலும், மூன்றடிச் சிறுமை ஏழடிப் பெருமையாய்ப் பின்பிற் சிலவடி சீர் குறைந்து வரு வனவும் வெண்டாழிசை எனக் கொள்க,' என்றதில், 'வெண்டா ழிசை' என்றிருப்பதையும் **வெண்டுறை** எனத் திருத்திக் கொள்க. என்னெனின், இவ்விலக்கணம் பெற்று வருவன வெண்டுறையேயாதலின் என்க. அதன் மூலத்தில்

'மூன் றிழிவே ழடிபோருந்தி,
ஆன்றவந் தங்குறை யின்வெண் டுறையேன்பர்'

என்றதையும், அதற்குக் காட்டிய உதாரணச் செய்யுட்களின் அடியில் அவற்றின் பெயர் வெண்டுறை என்று குறிக்கப்பெற்றிருத்தலையும் ஈண்டு நோக்குக. அது முற்பதிப்பில் வெண்டாழிசை என்றே இருக்கின்றது. அப்பாட்டில், வெண்டுறைக்குக் கூறிய மூல விதியினோடு உரையாசிரியர் கூறிய உரை பொருந்தியதன்று.அம்மூலம் மேலே குறிக்கப்பட்டிருக்கின்றது.அதற்கு உரையாசிரியர் முன்னே 'நேரிசை வெண்பா ஓசை கெடில் வெண்டுறையாம்'. என்று கூறிப் பின் 'அல்லாமலும் மூன்றடிச் சிறுமை ஏழடிப் பெருமையாய்ப் பின்பிற் சில அடிசீர் குறைந்து வருவனவும் வெண்டுறை எனக் கொள்க' என்று கூறினர்.

இவ்வுரை வெண்டுறைக்கு முற்கூறியதே இலக்கணமாம் எனவும், பிற்கூறியது அதனோடு தழுவிக் கொள்ளப்பட்டது எனவும் கொள்ளும்படி இருக்கின்றது.

இதில் அவர் பிற்கூறிய இலக்கணமே வெண்டுறையினது இலக்கணமாகும். முற்கூறிய இலக்கணம் அதனோடு தழுவிக் கொள்ளப்பட்டதாகும். அன்றியும்அவர் முற்கூறியதற்கு மூலத்திற் சொற்கள் இல்லை. ஆதலின், அவர் கூறிய உரை பொருந்தியதன்றென்பதை உணர்க.

அதற்குப் பொருந்திய உரை யாதெனின், 'மூன்றடிச் சிறுமை ஏழடிப் பெருமையாய்ப் பின்பிற் சில அடி சீர் குறைந்து வருவது வெண்டுறையாம். 'ஆன்ற' என்ற மிகை மொழியால் நேரிசை வெண்பா ஓசை கெடில் அதுவும் வெண்டுறை என்று கொள்ளப்படும் எனக் கொள்க' என்பதே அதற்குப் பொருந்திய பொருளாகும். இதுவே பொருந்திய பொருளாதலை, யாப்பருங்கலக் காரிகைச் செய்யுளியல் மூன்றுங் காரிகை உரையின் ஈற்றிலுள்ள விசேட உரையையும், ஏழாங் காரிகையில்,

'மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே'

என்றதையும், அதன் உரையையும் நோக்கி அறிக.

ஆசிரியத்துறை

நூலாசிரியர் பதினொரும் பாட்டின்கண்,

'நான்காய்க் கடையயற்கண்
ஏன்றடி நைந்தும் இடைமடக் காயு மிடையிடையே
தோன்றடி குன்றியு மாகுந் துறை.'

என்று ஆசிரியத்துறைக்கு இலக்கணங் கூறினர்.

உரையாசிரியர் அதற்கு [1]'நான்கடியாய் ஈற்றயல் குறைந்து வருவதுவும், [2]இடை மடக்காய் வருவதுவும், [3]இடை குறைந்து வருவதுவும் என இவை ஆசிரியத்துறையாம்; உம்மையால், [4]இடையடி இரண்டு மிக்கு வருவதுவும், [5]இடையிடை இரண்டு குறைந்து வருவதுவும், [6]முதலடி குறைந்து வருவது வும், [7]கழிநெடிலடியாய் வருவதுவும், [8]பலவிகற்பத்தான் வருவது வும் கொள்க' என்றார். அங்ஙனம் வரும் ஆசிரியத்துறை களுக்கு அவர் பல உதாரணங் காட்டினர். அவற்றுள்,

'பாடகஞ்சேர் காலொருபாற் பைம்பொற் கழலொருபால் தேன்றுளி
நீடு குழலொருபால் நீண்ட சடையொருபால்
வீடியமா னதளொருபால் மேகலைசேர்ந்
தாடு துகிலொருபா லவ்வுரு வாண்பெண்ணென் றறிவார்யாரே.'

என்னும் பாட்டைக் காட்டி, 'இஃது இடையிடை குறைந்து வந்தது' என்று கூறிப் பிறகு,

'வரிகொ ளரவு மதியும்
புரிவுள சடையும்
புரிவுள சடைமேற் புனலும் பிறழுமே.'

என்னும் மூனறடியுடைய பாட்டைக் காட்டி, 'இதுவும் அவ்வாறே குறைந்து இடையடி மடக்கி வந்தது' என்றார். இங்ஙனம் மூன்றடியினால் ஆசிரியத்துறை வருதற்கு விதி யின்மையின், இது ஆய்தற்குரியதாம்.

ஈண்டு ஆசிரியத்துறைக்குக் காட்டப்பட்ட உதாரணங் களுள், மேற்காட்டிய 'பாடகஞ்சேர்' என்னும் பாட்டு, முதலடி ஐந்து சீராகவும், இரண்டாம் அடி நான்கு சீராகவும், மூன்றும் அடி மூன்று சீராகவும், நான்காம் அடி ஆறுசீராகவும் முற் பதிப்பிலே பிரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இப்பதிப்பிலும் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுவிட்டது. ஈற்றடி மிக்கு வருதல்

கலித்தாழிசையின் இலக்கணமாதலின், அப்பாட்டின் ஈற்றடியை அறு சீராகப் பிரித்தது பிழையாகும்.

பாக்கள்

இந்நூலாசிரியர், ஏழாம் பாட்டு முதல் பதின்மூன்றாம் பாட்டு வரையிலுமுள்ள ஏழு பாட்டுக்களில் வெண்பா முதலிய நான்கு பாக்களுக்கும், மருட்பாவுக்கும் இலக்கணங் கூறிப் பின் பதினான்காம் பாட்டு முதல் பத்தொன்பதாம் பாட்டு வரையிலுமுள்ள ஆறு பாட்டுக்களில் அந்நான்கு பாக்களின் இனங்களாகிய தாழிசை, துறை, விருத்தம் என்பவற்றிற்கு இலக்கணங் கூறி, அவற்றிற்குப் பின், இருபதாம் பாட்டில் பாக்களைக் குறள், சிந்து, திரிபாதி, வெண்பா, விருத்தம், சவலை என ஏழாக வகுத்துக் கூறி, அவற்றின் இலக்கணங்களை இருபத்தோராம் பாட்டு முதல் இருபத்துநான்காம் பாட்டு வரையினுமுள்ள நான்கு பாட்டுக்களிற் கூறினார்.

இந்நூலாசிரியர் பாக்களைப் பா ஐந்தும், இனம் மூன்றுமாக வகுத்துக் கூறியவிடத்தும், குறள், சிந்து, திரிபாதி முதலிய ஏழாக வகுத்துக் கூறியவிடத்தும் இவ்விரு வகையுள் தம்மதம் இது, பிறர் மதம் இது என்பது தோன்றும்படி ஒன்றுங் கூறிற்றிலர் எனினும், பாக்களை பா ஐந்தும், இனம் மூன்றுமாக வகுத்த வகுப்பை முற்கூறியதனால், அஃது அவருக்குத் தம் மதம் என்றும், குறள், சிந்து, திரிபாதி முதலியவாக வகுத்த வகுப்பைப் பிற்கூறியதனால் அது பிறர் மதம் என்றும் கொள்ளற் குரியனவாயிருக்கின்றன. அங்ஙனமாகவும், உரையாசிரியர், 'ஒன்று மிடைச்சீர் வருஞ்சீ ரோடு' என்னுஞ் சூத்திரமுதலாக 'துன்னுங் குறளடி நான்கு' என்னுஞ் சூத்திர மீறாய்க் கிடந்த சூத்திரம் எல்லாம் ஒரு சாராசிரியர் மதமெனக் கொண்டு, இவையிற்றுக்குக் குற்றங் காட்டுதற்கு எடுத்தோதினான் என்க' என்று கூறித் தாமே சில குற்றங்களைக் கூறுகின்றார். இவர், 'ஒன்று.........ஒருசாராசிரியர் மதமெனக் கொண்டு இவையிற்றுக்குக் குற்றங் காட்டுதற்கு எடுத்தோதினான்' என்றதற்கேற்ப நூலாசிரியர் அவற்றிற்குக் குற்றம் கூறிற்றிலர். உரையாசிரியர் இங்ஙனங் கொண்டது தவறு என்பதே இந்நூலின் முற்பதிப்பாசிரியர் ராவ்பகதூர் சி. வை.

தாமோதரம் பிள்ளை அவர்கள் கருத்துமாகும். அதனை, 'கலித் துறை, கட்டளைக் கலித்துறை எனவும், காப்பியக் கலித்துறை எனவும் இரு வகைப்படும். அவற்றுள் கட்டளைக் கலித்துறை கோவைக் கலித்துறை எனவும், திலதக் கலித்துறை என வும் இரண்டு வகையாம். இவை தம்முள் பேதமறியாது பெரும்பாலோர் ஒன்றை ஒன்றாக்கி மயங்குப. இவற்றை வேறு படுத்துவான் தொடங்கி நூலாசிரியர், 'நெடிலடி' (125) என முன்னர்ப் போந்த சூத்திரத்தால், கோவைக் கலித்துறையை யும், இச்சூத்திரத்தால் (128) திலதக் கலித்துறையையும் உணர்த்தியும் உரையாசிரியர் அவருடைய கருத்துத் தெரியாது ஆண்டுக் குற்றங் காட்டுதற்கு எடுத்தோதினர் என மயங்கி 'நெடிலடி' என்னுஞ் சூத்திரத்தையே 'கோவைக் கலித் துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க' என்றார்' என்று அவர் கூறியதனாலறிக. (இஃது இந்நூலின் 174-ஆம் பக்கத்து அடிக் குறிப்பிலுள்ளது.)

இவ்வுரையாசிரியர் கூறிய குற்றங்கள் :

1, "நாலு பாக்களுக்கு நால் ஓசை என்று கூறுபடுத்து, வெண்பாக்களுக்குச் செப்பலோசையென்றாக்கி, அதனை அல கிட்டு ஓசை ஊட்டுக' என்று இலக்கணஞ் சொன்னார். ஓசையா வது, செவிப்புலனே கருவியாக அறிவது என்பது எல்லார்க்கும் உடம்பாடாதலாம். அதனை அறியும் இடத்து,

1. 'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.'

2. 'கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.'

3. 'உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.'

என்று இத்தொடக்கத்தனவற்றைச் செவிப்புலனே கருவியாக ஆராய்ந்த பொழுது ஓசை இனியவாய் இருக்கும்; அலகிட்டு ஓசை ஊட்டில் அவை ஓசையுண்ணா என்றால், அற்றன்று; இவற்றின்கண் அளபெடை உண்டாகவே ஓசையுண்ணும் எனில்; அளபெடையின்றியேயும் ஓசை இனியனவாக இருந் தன என்க.

இதில் 'ஓசையாவது, செவிப்புலனே கருவியாக அறிவது,' என்றது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததேயாம். ஆயின், ஓசை என்பது கடலொலி, இடியொலி, சங்கொலி, இசை ஒலி, எழுத்தொலி,சொல்லொலி, பாட்டொலி என்னும் பலவகை ஒலிகளையும் பொதுவிற் குறிப்பதாமன்றே? அங்ஙனமிருக்க,'அஃதறியும் இடத்து' என்று தொடங்கி, 'கற்றதனாலாய' என்பது முதலிய மூன்று குறட்பாக்களைக் காட்டி, 'என்று இத்தொடக்கத்தனவற்றைச் செவிப்புலனே கருவியாக ஆராய்ந்த பொழுது ஓசை இனியவாய் இருக்கும்,' என்றார். 'இதில் 'அஃது' என்னும் சுட்டு மேற்காட்டிய ஒலிகளில் எவ்வொலியைக் குறித்து நின்றது?' என்னும் வினாப்போதரும். இடம் நோக்கிப் பாட்டொலி என உய்த்துணர்ந்துகொள்ளுதும் எனின், 'பாட்டின் நுண்பொருள்களை விளக்கியுரைக்க வந்த உரையாசிரியர், தம் உரையில் இங்ஙனம் இடர்ப்பட்டு உய்த்துணர்ந்துகொள்ளும்படி சொற்களை அமைத்தற்கு ஏது என்?' என்னும் வினாப் போதரும். சில உரையாசிரியர்கள் சில பொருள்களை உய்த்துணர்ந்துகொள்ளும்படி வைத்தலும் உண்டு ; ஆதலின், இவ்வுரையாசிரியரும் உய்த்துணரும்படி வைத்தது மாறன்று; எனின், பாட்டொலி செவி கருவியாகவன்றி. வேறு வகையான் உணர்தற்குரியதாம் என்பார் ஒருவரும் இன்மையின் இவர் கூறியது யாரை மறுத்தற்கு? பாட்டின் ஓசையைச் செப்பலோசை முதலாக நான்காக வகுத்தவர்களை மறுத்தற்கு எனின், அந்நான்கோசைகளும் செவி கருவியாக உணரப்படுவனவேயாதலின், இவர் கூறிய இது அவற்றை வகுத்தவர்களை எங்ஙனம் மறுத்தல் கூடும்? பின் இவர் 'தேமா' முதலிய வாய்பாடுகளால் ஓசை கொள்ளுதலை மறுத்தலின், அங்ஙனம் 'தேமா' முதலிய வாய்பாடுகளால் ஓசை கொள்ளுதலை இவர் உரைத்த இது மறுக்கும் எனின், ஒருவன் ஒரு வெண்கலக் கிண்ணம் விற்கக் கொண்டு வந்தான்; அதனை வாங்க விரும்பிய மற்றொருவன், அது வெண்கலக் கிண்ணமாயிருக்குமா என்று ஐயுறவு கொண்டு முன்னே தன்னிடத்திலிருந்த வெண்கலக் கிண்ணத்தை எடுத்து அதனைத் தட்டி ஒலி எழுப்பிப் பின்பு விலைக்கு வந்த கிண்ணத்தையும் தட்டி ஒலி எழுப்பி, அவ்விரண்டு கிண்ணங்களின் ஒலியும் ஒன்றாயிருத்தலைக் கண்டு,

விலைக்கு வந்த கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டான். அது போலப் பாட்டிலுள்ள சீர்களின் ஓசையைத் 'தேமா' முதலிய வாய்பாடுகளின் ஓசைகளால் ஓசையொப்புக் காண்டல் செவி கருவியாக ஓசை அறிதலேயன்றி வேருகாமையின், அதனை இவர் கூறிய இது எவ்வண்ணம் மறுத்தல் கூடும் என மறுக்க. ஆயின், ஓசையூட்டுதல் என்பதற்குப் பொருள் யாதெனில், ஓசை ஒப்புக்காண்டல் என்பதே பொருளாம் என்று கொள்க. இது தோழி முதலாயினர் உண்மை கூறுதலை அறத்தொடு நிற்றல் என்று கூறுவது போன்றதொரு மரபு எனக் கொள்க.

2. பின்பு இவர், 'அன்றியும், தேமா முதலாகிய உதாரணங்களால் ஓசையூட்டில், அவ்வோசை வெண்பாவின் ஓசை அன்று; அது உதாரணத்தில் ஓசை என்று கொள்க. 'வெண்பாவின் ஓசையும் உண்டே?' எனில் இரண்டோசை ஓரிடத்தில் நில்லா என்க. வெண்பாவின் ஓசை அங்கிருப்பதாகில் வெண்பாத் தன்கண் ஓசை இன்றியிருக்கும். அப்பாலது வெண்பாவின் கண்ணும் கண்டோம். ஆதலால், உதாரணத்தால் ஓசையூட்டும் பொழுது உதாரணத்திலோசை என்று கொள்க,' என்றுர். ஒருவன் அளவுகோலால் நிலத்தை அளந்தால், நிலத்தின் அளவு அறியப்படுகின்றதேயன்றி, அளவு கோலின் அளவு நிலத்திற்போய்ச் சேருவதில்லை. அதுபோலத் 'தேமா' முதலிய வாய்பாடுகளால் வெண்பா முதலிய பாட்டுக்களின் ஓசையொப்புக்காணின் அப்பாட்டுக்களின் ஓசையியல்பு விளங்குவதன்றித் 'தேமா' முதலிய உதாரண வாய்பாடுகளின் ஓசை அப்பாட்டுக்களிற் போய்ச் சேராது; ஆதலின், இவர் 'தேமா முதலாகிய உதாரணங்களால் ஓசையூட்டில், அவ்வோசை வெண்பாவின் ஓசை அன்று; அது உதாரணத்தில் ஓசை என்று கொள்க, என்று தொடங்கிக் கூறியவை ஏற்புடையன வாகா என விடுக்க.

3. 'அன்றியும் இவர்,

> 'கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
> உகாஅமை வல்லதே யொற்று.'

இதனை எப்படி ஓசையூட்டுவது? எனில் குற்றியலிகரமென்று ஒற்றுக்கி, அதனை,

'சீருந் தளையுஞ் சிதையிற் சிறியஇ உஅளபோ
டாரு மறிவ ரலகு பெறுமை.'

என்று உகரம் அலகு பெறுதாக்கி ஓசையூட்டுக என்பர். அதுவும் பிழை என்க. இகரம் குற்றெழுத்தாய் நின்று அலகு காரியம் பெறுவதல்லது ஒற்றெழுத்தேபோல் அரை மாத்திரை உடைத்தாயினும் அலகு காரியம் பெருதொழிதற்குக் காரணம் இன்மையால் என்க' என்றார்.

குற்றியலிகரம் முதலியன அலகு காரியம் பெருமற்போதற்குச் 'சீரும் தளையுஞ்' சிதைதல் காரணம் என்று கூறியிருப்பவும், அக்காரணத்தினை மறுக்காமல், 'இகரம்......அரை மாத்திரை உடைத்தாயினும், அலகு காரியம் பெருது ஒழிதற்குக் காரணம் இன்மையால் என்க,' என்றது முன் பின்னேக்காமல் கூறியதேயாம் என்க.

பிறகு, 'அன்றியும், அலகு காரியம் பெறுவிடில், எல்லாவிடத்தும் பெருதொழிய வேண்டும் என்க,' என்றார். அங்ஙனமாயின், உயிர்மெய்யை ஓரிடத்தில் ஒரெழுத்தாகவும், ஓரிடத்தில் இரண்டெழுத்தாகவும் கொள்ளுதலும் கூடாதாம் என்க. நெடிற்றொடர்க் குற்றுகரத்தில் உயிர்மெய் நெட்டெழுத்தை ஒரெழுத்தாகவும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தில் உயிர்மெய்யை இரண்டெழுத்தாகவும் கொள்ளுதலையும், மணி என்னும் மொழியின் முதலிலுள்ள மகரமாகிய உயிர்மெய்யினின்றும் ம் என்னும் மெய்யைப் பிரித்து அதனை மொழிக்கு முதலில் வந்தது எனவும், ஈற்றிலுள்ள ணி என்னும் உயிர்மெய்யினின்றும் இகரத்தைப் பிரித்து அதனை மொழிக்கு ஈற்றில் வந்தது எனவுங் கொள்ளுதலையும் நோக்குக.

பின்பு, 'அன்றியுங் குற்றியலிகரம் அரை மாத்திரையாய் முற்றியலிகரம் ஒரு மாத்திரையானமை ஓர் உச்சாரணையினால் வேறுபடுத்திக் காட்டவொண்ணு என்க,' என்றார். அங்ஙனமாயின், இந்நூலாசிரியர், எழுத்ததிகாரம், மூன்றும் பாட்டில்,

'இகரங் குறுகி வருங்குற் றுகரம்பின் யவ்வரினே.'

எனக் குற்றியலிகரத்திற்கு இலக்கணங் கூறிய இடத்தும், ஐந்தாம் பாட்டில் குற்றியலிகரத்துக்கு மாத்திரை அரை என்று கூறிய இடத்தும் அதனை மறுக்காமல் விட்டதென் ?

'குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.'

இதில் வந்துள்ள 'தியா' என்பதிலுள்ள இகரத்தின் ஒலி குறைந்திருத்தலும், 'லினி', 'ழினி' என்பவற்றிலுள்ள இகரம் குறையாதிருத்தலும் செவிப்புலனுக்கு நன்கு விளங்குவனவா யிருக்கவும், அது கொண்டே ஆசிரியர் தொல்காப்பியனார் முதலிய பண்டைச் சான்றோர் குற்றியலிகரம் அரை மாத்திரை யும், அல்லாத இகரம் ஒரு மாத்திரையும் பெறுமெனச் சூத்திரஞ் செய்திருப்பவும், இவர், 'குற்றியலிகரம் அரை மாத் திரையாய், முற்றியலிகரம் ஒரு மாத்திரையானமை ஓர் உச்சா ரணையினால் வேறுபடுத்திக் காட்டவொண்ணு என்க,' என்றது காண்டலளவையின் மாறும், உலகமலைவுமாம் என விடுக்க.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூன்மரபில்,

'அவைதாம்,
குற்றிய லிகரங் குற்றிய லுகரம்
ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.'

எனவும்,

'அவற்றுள், அ இ உ
எ ஒ என்னும் அப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.'

எனவும்,

'மெய்யி னளவே அரையென மொழிப'.

எனவும்,

'அவ்விய னிலையு மேனை மூன்றே.'

எனவும் வருஞ் சூத்திரங்களையும்,

'யகர முதல்வரி னுகர மொழிய
இகரங் குறுகு மென்மனார் புலவர்.'

(யா, வி. பக்கம்-27.)

என வரும் பல்காயனார் சூத்திரத்தையும்,

'வல்லெழுத் தாறே டெழுவகை யிடத்தும்
உகர மரையாம் யகரமோ டியையின்
இகரமுங் குறுகும் என்மனார் புலவர்'. (யா, வி. பக்கம்-27.)

என வரும் அவிநயனுர் சூத்திரத்தையும்; நேமிநாதம், நன்னூல் முதலிய நூற்களில் குற்றியலிகரத்தைக் குறித்துக் கூறுஞ் சூத்திரங்களையும் ஈண்டு நோக்குக.

இனி, அடி வகுத்தலைப் பற்றிச் சில குற்றங்களைக் கூறுகின்றார். ஆண்டு இவர் கூறுவன எந்நூற்கண் உள்ளவற்றை நோக்கிக் கூறுகின்றார் என்பது விளங்கவில்லை; 'யானைத் தொழில் முதலாகிய செய்யுள்' என்றும், 'திருமன்னி வளரும் இருநில மடந்தையும்', 'போர்ச் செய்ய பாவையும்', 'சீர்த் தனிச் செல்வியும்' என்றுங் கூறிய செய்யுட்களும் இவை என விளங்கிற்றில; ஆதலின், அவற்றிற்கு யான் மறுப்புக் கூறிற்றிலன். ஆண்டு அடியைப் பற்றிக் கூறுதற்கு முன், (வட நூற் புலவர்க்கு ஓசையூட்டுக..................என்பதில்லை எனக் கொள்க.)............அவர், பயில்வார்க்கு அரிதாக நூலைப் பெருக்குவதுஞ் செய்து, அப்பெருமையில் வாய்ப்புக்களை அடக்கமாட்டாதே மிக்கும் குறைந்தும் வரினும், ஒரு புடை ஒப்பு நோக்கி ஒழிந்தவும் கொளல் என்று சூத்திரமுஞ் செய்தமையாலே அடங்கவுஞ் செய்திற்றிலர். பயில்வார்க்கு எளிதாகச் சுருங்கவுஞ் செய்திற்றிலர். 'யாப்பதிகாரத்தினுல் பயனும் செய்யுளுக்கு ஒரு பெரிய ஏதுவே ஆதலால், குற்றமே என்க' என்றார்.

இலக்கணமியற்றும் ஆசிரியர்கள், அவ்வம்மொழியிலுள்ள இலக்கியங்கண்டு அதற்கு ஏற்ப இலக்கணம் இயற்றுவார்களேயன்றி, 'அரிதாகச் செய்தல் வேண்டும், எளிதாகச் செய்தல் வேண்டும், இடைத்தரமாகச் செய்தல் வேண்டும்' என்று கருதி இலக்கணம் இயற்றப் புகார். ஒப்பு நோக்கி, ஒன்றின்பின் ஒன்றை அடக்குதல் சொல்லிலக்கண முதலிய மற்ற இலக்கணங்களினும் உண்டு என்பது இலக்கணங் கற்றறிந்தார் யாவரும் அறிந்ததே.

'யாப்பதிகாரத்தினுற் பயனும் செய்யுளுக்கு ஒரு பெரிய ஏதுவே ஆதலால், குற்றமே என்க' என்றார். சொல்லதிகாரம், அணி அதிகாரம் முதலியவற்றின் பயனும் அவற்றிற்கு ஒரு பெரிய ஏதுவே ஆதலால், அவற்றை அரிதாகப் பெருக்கியும், எளிதாகச் சுருக்கியும் இயற்றுதலும் குற்றமேயாம்.

அங்ஙனங் கொள்ளின், தொல்லாசிரியர்களாகிய தொல்காப்பியர் முதலியோர் இயற்றிய தொல்காப்பிய முதலிய நூற்

களும குற்றமுடையன என்று கூறற்குரியனவாகும் அன்றே? அங்ஙனங் கூறுதல் ஏற்புடையதென்று அறிஞர்களுள் எவரே னும் கொள்வரோ என்று அதனை மறுக்க.

பாக்களின் வேறு வகையான வகுப்புக்கள்

இனி இந்நூலாசிரியர், இருபதாம் பாட்டில் பாக்களைக் குற ளும், சிந்தும், திரிபாதியும், வெண்பாவும், திலதமும், விருத்த மும், சவலையும் அவற்றின் போலியும் என வேறு வகையாக வகுத்துக் கூறி இருபத்தொன்று முதல் இருபத்துநான்கு வரை யினும் உள்ள நான்கு பாட்டுக்களில் அவற்றின் இலக்கணங் களைக் கூறினர். ஆன்றோர்களால் இயற்றப்பெற்ற ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா என்னும் பாக்களின் வகைகள் அவர் கூறிய அவ்வேழு வகைப் பாக்களில் அடங்கா. உரையாசிரியர் ஆசிரியம் முதலிய அப்பாக்களைப் பின் குறள் முதலாகக் கூறப் பட்ட பாக்களின் போலியுள் அடக்குவர் போலும்! இந்நூலாசிரி யர் செய்யுள் வகையைக் கூறிய ஆறும் பாட்டின் உரையில் உரையாசிரியர், "ஒரு போகு முதலியனவெல்லாம் செய்யுட் போலி என்பனவாம்; ஒருசாரார் அவையிற்றையும் பாதத்தான் நடைபெற்றனவாக வழங்கிப் பெயர் வேறு பகுப்பர்," என்று கூறியது அக்கருத்தினை வலியுறுத்துகின்றது.

இனி இந்நூலாசிரியர், இருபத்தைந்துமுதல் முப்பத் தைந்து வரையினும் உள்ள பதினொரு பாட்டுக்களில் (வட மொழி) விருத்தங்களையும், தாண்டகங்களையுங் கூறினர். அவற்றை நோக்கி அறிக. முப்பத்தாறும் பாட்டில் வண்ணங் களைக் கூறினர். அவற்றின் விளக்கத்தைத் தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை முதலியவற்றிற் கண்டுணர்க. வடமொழி விருத்தங்கள் வேறு தமிழ் விருத்தங் கள் வேறு என்றறிக. இரண்டினுக்குமுள்ள ஒற்றுமை வேற் றுமைகளை ஆய்ந்துணர்க.

யாப்பதிகாரக் குறிப்புரை முற்றிற்று.

ஐந்தாவது அலங்காரம்

இந்நூலாசிரியர் இப்படலத்தின் முதற்பாட்டில் 'தண்டி யார் சொன்னபடி அலங்காரங்களைக் கூறுவேன்,' என்று கூறினர்; அதனை,

'தரைமலி மானிடர் தம்மலங் காரங்கள் தண்டிசொன்ன
கரைமலி நூலின் படியே யுரைப்பன் கனங்குழையே!'

என்றதனால் உணர்க. தண்டியாசிரியர் செறிவு, வலி, சமநிலை, சமாதி, ஒழுகிசை, காந்தம், உதாரதை, உய்த்தலில் பொருண்மை, பொருட்டெளிவு, இன்பம் என்னும் பத்தையும் உயிராகக் கொள்வது **வைதர்ப்பர் நெறி** என்றும், இவற்றைச் சிறிது வேறுபட வேண்டுவது **கௌடர் நெறி** என்றுங் கூறிய முகத்தாற் செய்யுட்கு இவை பத்தும் உயிர் எனக் கூறினர். ஆனால், இந்நூலாசிரியர் இம்முதற்பாட்டினும், ஏழாம் பாட்டினும் பொருளை உயிராகக் கூறினர். அதனை,

'உரையுட லாக வுயிர்பொரு ளாக வுரைத்தவண்ணம்
நிரைநிற மாநடை யேசெல வாநின்ற செய்யுட்கள்'

என்று முதற்பாட்டினும்,

'ஒப்பார் பொருளே யுயிரா னமையின்'

என்று ஏழாம் பாட்டினும் கூறியவற்றான் அறிக.

இவர் 'தண்டியார் சொன்னபடி சொல்வன்' என்றதனோடு இது மாறுமன்றோ? எனின், உரையாசிரியர் மாறுகாது எனக் காரணங்காட்டிக் கூறியிருக்கின்றனர். அதனை, ஏழாம் பாட்டின் உரையில், 'பொருளையே பிராணனுகக் கொண்டார் ஆகலின், மேற்சொல்லப்பட்ட பிராணன்களையே அலங்காரம் என்பது இந்நூலுடையார்க்குத் துணிவு. இது 'தண்டியார் சொன்னபடியே சொல்லுவன்' என்று எடுத்துக்கொண்ட மேற்கோளோடு மாறுகொள்ளும் எனில், அலங்காரங்களை அல்லாது பிராணன்களை அவர் சொன்னபடி சொல்லுவன் என்னுமையான், மாறுகொள்ளாது என மறுக்க,' என அவர் கூறியதனால் அறிக.

செய்யுட்குப் பொருளை உயிர் என்றல் தமிழ் நூல் வழக்காகும். அதனைத் தொல் - பொருள் - செய்யுளியலின்

'எழுத்து முதலா வீண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்'

என்னும் எழுபத்தெட்டாஞ் சூத்திரத்தானும், நன்னூல்-சொல்-பெயரியலின்

'பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்.'

என்னும் பதினோராஞ் சூத்திரத்தானும் அறிக.

ஆறும்பாட்டில் 'விதர்ப்பப்புலவர் (1)சிலீட்டம், (2) உதாரதை, (3) காந்தி, (4) புலன், (5) சமதை, (6) சமாதி, (7) பொருட்டெளிவு, (8) ஓகம், (9) சுகுமாரதை, (10) இன்பம் என்னும் இப்பத்தையும் உயிர் என்பர்' என்றும், 'கவுடப் புலவர் இவற்றை மாறுக வேண்டுவர்' என்றும் கூறினர். தண்டி அலங்காரத்தில் இவை பத்தும் உயிர் என்று கூறப்பட்டன என்பது முன்னே கூறப்பட்டது. அதனைத் தண்டியலங்காரத்தின்

'மெய்பெறு மரபின் விரித்த செய்யுட்கு
வைதருப் பம்மே கௌட மென்றாங்
கெய்திய நெறிதா மிருவகைப் படுமே.'

எனவும்,

'செறிவே தெளிவே சமநிலை யின்பம்
ஒழுகிசை யுதார முய்த்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி யென்றாங்
காய்ந்த வீரைங் குணனு முயிரா
வாய்ந்த வென்ப வைதருப் பம்மே.'

எனவும் வரும் பதின்மூன்றும், பதினான்காஞ் சூத்திரங்களான் அறிக. திரு. தி. ஈ. ஸ்ரீநிவாசராகவாசாரியார் தாம் எழுதிய தண்டியலங்காரசாரம், நெறியியலின்கண், 'நெறியாவது கவியமைப்பு வகை' என்றார். இவற்றைக் **குணவலங்காரம்** என்றும் கூறுவர்.

இந்நூலிற் கூறப்பட்ட அப்பத்து உயிர்களில் 'சிலீட்டம்' என்பது 'தெளிவு' எனவும், 'ஓகம்' என்பது 'வலி' எனவும், 'சமதை' என்பது 'சமநிலை' எனவும், 'சுகுமாரதை' என்பது 'ஒழு

கிசை' எனவும், 'காந்தி' என்பது 'காந்தம்' எனவும்,'புலன்' என்பது 'உய்த்தலில் பொருண்மை' எனவும் தண்டியலங்காரத்திற் கூறப்பட்டுள்ளன. மேற் கூறப்பட்ட பத்து உயிர்களுள், சிலீட்டம், காந்தி,சமதை, சமாதி, ஓகம், சுகுமாரதை என்னும் ஆறு உயிர்களுக்கு நூலாசிரியர் இலக்கணம் கூறினர். அவற்றை எட்டாம், ஒன்பதாம் பாட்டுக்களிற் காண்க. மற்றை நான்கிற்கும் உரையாசிரியர் இலக்கணம் கூறினர். இப்பத்தினுக்கும் உரையாசிரியரால் உதாரணங்கள் காட்டப் பெற்றுள்ளன.

அவற்றின் பின் தன்மை முதலிய பொருளணிகள் கூறப்பட்டுள்ளன. இனி அவற்றின் உதாரணச் செய்யுள்கட்கு ஈண்டுக் குறிப்புரை எழுதப்படும் :

1. தன்மை அணி

(க) திரப்பியத்தன்மை

திரப்பியம்—பொருள்

பக்கம்-206. 'கறைமிடற்றர்' என்னுஞ் செய்யுள்.

கறை-விடம், மிடறு-கழுத்து, பொறி-படப்புள்ளி, பரசு-வணங்கு.

(உ) சாதித்தன்மை

பக்கம்-207. 'துண்டஞ் சிவந்திறகும்' என்னுஞ் செய்யுள்.

('கிளி துண்டஞ் சிவந்து இறகும் பச்சையாய்த் தொன்மைத்தார்கண்டம் பொலியக் கவின் பெற்றன,' என இயைக்க.)

துண்டம்—மூக்கு

(ந) தொழிற்றன்மை

பக்கம்-207. 'முற்குளம்பி னுற்கிளறி' என்னுஞ் செய்யுள்.

('பால் நிறத்த மால் வெண்பரி, முற்குளம்பினுற்கிளறி, மோந்து, அங்கு ஓர் முக்காலும் பொற்சுண்ணம் ஆடிப் புரண்டு எழுந்து, நல்சென்னி நேர் நிறுத்திக் கங்கை நீர் உண்டன,' என இயைக்க.)

மால் வெண் பரி-மேன்மையாகிய வெள்ளிய குதிரை.

(ச) குணத்தன்மை

பக்கம்-207. 'எனைத்தொன்று' என்னுஞ் செய்யுள்.

தாம் வீழ்வார்—தம்மால் விரும்பப்படுவாரை, நினைப்ப-(பிரிவின்கண்) நினைத்தால், (அந்நினைவார்க்கு) வருவது ஒன்று உண்டு-வருவதோர் (இன்பம்) உண்டு. (அதனால்) காமம்-, எனைத்து-எவ்வளவாயினும், இனிது ஒன்றே காண்-இன்பந் தருவதொன்றே காண்.

புணர்ந்த போதும், பிரிந்த போதும் ஒப்ப இனிது என்பார், 'எனைத்தும் இனிது,' என்றார். 'எனைத்தும்' எனற்பாலது சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு 'எனைத்து' என நின்றது. 'இல்' என்னும்பாடத்திற்குத் (துன்பம்) இல்லை என்க.

இது தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது; தலைமகளைப் பிரிந்திருந்த போது தான் ஆற்றியிருந்த வகையைத் தலைமகன் கூறியது.

2. உவமை

பக்கம்-208. 'கடலன்ன காமம்' என்னுஞ் செய்யுள்.

கடல் அன்ன-கடல் போலக் கரை அற்ற, காமம் உழந்தும்-காம நோயை அனுபவித்தும், மடல் ஏறுப் பெண்ணின்-மடல் ஏறாது ஆற்றி இருக்கும் பெண் பிறப்புப் போல, பெருந் தக்கது-மிக்க தகுதியினையுடைய பிறப்பு, இல்-(உலகத்தில்) இல்லை.

இது, 'நின் பேதையின் காரணமாக என் கண் துயிலுதலைப்பெறு' என்பதுபற்றி அறிவிலராய மகளிரினும், அஃது உடையராய ஆடவரன்றே ஆற்றற்பாலர் என்றாட்குத் தலைமகன் சொல்லியது.

3. உருவகம்

பக்கம்-208. 'பிறவிப் பெருங்கடல்' என்னுஞ் செய்யுள்.

('இறைவனடி (சேர்ந்தார்) பிறவிப்பெருங்கடல் நீந்துவர்; சேராதவர் நீந்தார்,' என இயைக்க.)

இறைவன் அடி (சேர்ந்தார்)-இறைவனடி (என்னும் புணையைச் சேர்ந்தவர்), பிறவிப் பெருங்கடல்-பிறவியாகிய

பெரிய கடலை, நீந்துவர்-கடப்பர், சேராதார்—(அப்புணையைச்) சேராதவர், நீந்தார்-கடக்கமாட்டார் (அப்பிறவியாகிய கடலுள் அழுந்துவர்.)

'சேர்ந்தார் என்பது சொல் எச்சம்,' என்றார் பரிமேலழகர். ஒரு சாராசிரியர் சொல் என்னுஞ் சொல் மறைந்து நிற்பதைச் சொல் எச்சம் எனவும், மற்றைச் சொற்களில் ஒன்றும் பலவும் மறைந்து நிற்பனவற்றை இசை எச்சம் எனவுங் கொள்ளுவர். ஒரு சாராசிரியர் யாதாயினும் ஒரு சொல் மறைந்து நிற்பதைச் சொல்லெச்சம் எனவும், ஒன்றின் மிக்க சொற்கள் மறைந்து நிற்பனவற்றை இசையெச்சம் எனவுங் கொள்ளுவர். அவ்விரு கொள்கையுள் பரிமேலழகர் பிற்கூறிய கொள்கையை யுடையவர் எனக்கொள்க.

உலகத்தின் இயல்புகளை நினையாமல், இறைவன் அடியையே நினைப்பார்க்குப் பிறவி அறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்குப் பிறவி அறுமையும் ஆகிய இரண்டும் இக்குறளாற் கூறப்பட்டன.

4. விளக்கு

(இறுதி விளக்கு)

பக்கம்-208. 'துறந்தார்க்கும்' என்னுஞ் செய்யுள்.

துறந்தார்க்கும்-(களைகணானவர்களால்) துறக்கப்பட்டவர்களுக்கும், துவ்வாதவர்க்கும்-நல்கூர்ந்தவர்களுக்கும், இறந்தார்க்கும்—(ஆதரவின்றித் தன்பால் வந்து) இறந்தவர்களுக்கும், இல்வாழ்வான் என்பான் துணை-இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான் துணை.

5. மீட்சி

இதனைப் 'பின்வருநிலை அணி' என்றார் தண்டியலங்கார ஆசிரியர்.

(க) பொருள் மீட்சி

பக்கம்-209. 'தொல்காப் பியப்புலவர்' என்னுஞ் செய்யுள.

('காக்கைபாடினியார் தம் நூலில் தொகுத்துச் சொற்றார்,' என இயைக்க.

நல் யாப்புக் கற்றார்—சிறந்த யாப்பிலக்கணத்தைக் கற்றறிந்தவர்கள்.

(உ) பத மீட்சி

பக்கம்-209. 'இந்திர னேற' என்னுஞ் செய்யுள்.

('பழையாறை நகர்ச் சுந்தரச் சோழர், சிவனூர் மணத்து இந்திரன் ஏறக் கரி அளித்தார்; செந்திரு மேனித் தினகரற்கு ஏழ்பரி அளித்தார்; பைந்துகில் ஏறப் பல்லக்கு அளித்தார்' என இயைக்க.)

பக்கம்-209. 'வீரர் களிறேற' என்னுஞ் செய்யுள்,

('வீரர் களிறு ஏற, வேல் வேந்தர் தேர் ஏற, போர்கெழு வெஞ்சிலை நாண் பூட்டு ஏற, வார் முரசம் ஆர்ப்பு ஏற, வேல் இளைஞர் மா ஏற, வாள் கூர்ப்பு ஏற, வெஞ்சுடர் குன்று ஏறினன்,' என இயைக்க.)

வெஞ்சுடர்-வெப்பமாகிய சுடரை உடையவன்; சூரியன்; அன்மொழி. வெஞ்சிலை நாண் பூட்டு ஏற-கொடிய விற்கள் நாண்கள் பூட்டுதலைப் பெற, ஆர்ப்பு ஏற-ஒலி மிக, மா ஏற-குதிரைகளின்மீது ஏற, 'மா' என்னும் பல பொருள் ஒரு சொல் ஈண்டுக் களிறு, தேர், வேலிளைஞர் என்னும் இனத்தினல் 'குதிரை' என்னும் பொருளைத் தந்தது. வாள் கூர்ப்புஏற-வாள் கூர்மை மிக.

6. பிற பொருள் வைப்பு

இது தண்டி அலங்காரத்தில் 'வேற்றுப் பொருள் வைப்பு' எனக் கூறப்பட்டுள்ளது.

பக்கம்-210. 'மன்னன் றசரதற்கு' என்னுஞ் செய்யுள்.

('என்றால் ஈங்குத் துன்பு உறூர் ஆர்?' என இயைக்க.)

பொன் மாது—திருமகள்.

7. தடை மொழி

(இது தண்டி அலங்காரத்தில் 'விலக்கு அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.)

பக்கம்-210. 'செல்லாமை' என்னுஞ் செய்யுள்.

செல்லாமை உண்டேல் - நீ எம்மைப் பிரியாமை உண்டாயின், எனக்கு உரை-அதனை எனக்குச் சொல், மற்று நின்

வல் வரவு-அஃதொழியப் பிரிந்து போய் விரைந்து வருதலைச் சொல்வையாயின், வாழ்வார்க்கு உரை-அதனை அப்பொழுது உயிர் வாழ்வார்க்குச் சொல்.

இது, 'பிரிந்து கடிதின் வருவேன்,' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது. இதனைத் தலைமகள் கூற்றென்பாரும் உண்டு.

தனக்கும் தலைமகளுக்கும் தான் அவள் என்னும் வேற்றுமை இன்மையின், தலைமகளை ஒழித்து, 'எனக்கு' என்றாள். 'எங்கள் தோழி நீ பிரிந்து மீண்டு வருங்காலம் அளவும் ஆற்றியிருக்கும் வல்லமை உடையாள் அல்லள்; நீ பிரிந்த பொழுதே இறந்துபடுவள்,' என்பது கருத்து. தலைவன் செலவை அழுங்குவித்தல் இதன் பயன்.

இது தலைவன் செலவைத் தடுத்தமையால், தடை மொழியாயிற்று.

8. விதிரேகம் (வேற்றுமை அணி)

இதற்கு உதாரணங் காணப்படவில்லை.

9. விபாவனை

பக்கம்-211. 'புணர்ந்தகன்றார்' என்னுஞ் செய்யுள்.

('புணர்ந்து அகன்றார் பொன்னிறம் பூத்தற்குத் தந்து துணர்ந்து அகன்ற கொன்றையே! ஒருவர் உணர்ந்து வாட்டா நெடுஞ் சுடரேந்து மலர்த்தோன்றி, காதலர்க்குக் கார் காட்டாவோ? சொல்லாய்,' என இயைக்க.)

துணர்ந்து-பூங்கொத்துக்களைக் கொண்டு.

இந்நூலாசிரியர் 'தேறும் விபாவனை ஏதுவின்மை' என்றார். இந்நூலின் உரையாசிரியர், 'யாதானுமாக ஒன்று, வந்த காரணம் இன்றியே நிகழ்வதெனின், அது விபாவனையாம்; இதனை வெளிப்பாட்டு நிலை என்பாருமுளர்,' என்றார். தண்டியலங்கார ஆசிரியர்,

'உலகறி காரண மொழித்தோன் றுரைப்புழி
வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்,'

என்றார். அதன் உரையாசிரியர், 'ஒன்றன் வினை உரைக்குங்கால் அவ்வினைக்குப் பலரும் அறியுங் காரணம் ஒழித்துப் பிறிதொரு காரணமாக இயல்பாகக் குறிப்பின் வெளிப்பட உரைப்பது விபாவனை என்னும் அலங்காரமாம்?' என்றார். இவற்றை ஈண்டு நோக்குக,

10. சுருக்கு

இது, 'தொகை மொழி' என்றுங் கூறப்படும். இது தண்டியலங்காரத்தில்'ஒட்டணி'என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-211. 'வேட்டொழிவ தல்லால்' என்னுஞ் செய்யுள்.

'வினைஞர் வினை வயலுள் தோட்ட கடைஞர் சுடுநந்து, மோட்டாமை வன்புறத்து மீது உடைக்கும் வச்சத்து இளங் கோவை யாம் வேட்டொழிவது அல்லால் இன்புறுத்த வல்லாமோ ?' என இயைக்க.

தோட்ட-கூட்டமாகிய, கடைஞர்-உழவர், புறம்-முதுகு, வல்லாமோ - வல்லமை உடையமோ ?

'உழவர்கள் ஊனின் சிறப்பில்லாத நத்தையை ஊனின் சிறப்பினையுடைய ஆமையின் முதுகில் உடைத்து உண்பர்,' என உவமையைக் கூறி, அதனால் தலைவன் சிறந்த குணங்களையுடைய தலைவியைப் பிரிந்து அவள் வருந்தும்படி விட்டுக் குணச்சிறப்பில்லாத பரத்தையரிடஞ் சென்று ஒழுகுதலாகிய உபமேயத்தைப் பெற வைத்தமையால், இஃது ஒட்டணி எனப்படும்.

11. பெருக்கு

இது தண்டியலங்காரத்தில் 'அதிசய அணி' எனக் கூறப்பட்டிருக்கின்றது. இது 'மிகைமொழி'எனவும்,'உயர்வு நவிற்சி' எனவுங் கூறப்படும்.

பக்கம்-211. 'பேணு குமுதம்' என்னுஞ் செய்யுள்.

('பூண் முலையார் பண்கள் அகத்து ஓதா மாளிகைமேல் வெண்களபத்தால் பெரும்பகலே பேணு குமுதம் மலரும்படி வாணிலவு அது ஆகிப் பரந்தெழுந்து விரிந்து மலியும்,' என இயைக்க.

பூண் முலையார் - ஆபரணங்களை அணிந்த மாதர்கள், வெண்களபம் - வெண்மையாகிய சுண்ணம், வாள் நிலவு அது ஆகி - ஒளி பொருந்திய நிலவு உண்டாகி (இதில் 'அது' பகுதிப் பொருள் விகுதி.)

12. நோக்கு

இது தண்டியலங்காரத்தில் 'தற்குறிப்பேற்றம்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-212. 'குலவார் மருங்கோர்' என்னுஞ் செய்யுள்.

(' ஆர்முகன் புலவு நாறு வேல் வேந்தன் ஆசரிதன் இகல் நாறும் செம்பொன் நீள் முடிமேல் இன்று நிலவு ஆர் மதி குலவு ஆர் மருங்கு ஓர் கொலை உருவங்கொண்டு நேர் நிழற்றும்' என இயைக்க.)

ஆர் முகன் புலவு நாறும் வேல்—(கூர்மை) பொருந்திய தன்னிடம் புலால் மணம் வீசப்பெற்ற வேல், ஆசரிதன் என்பது தலைவன் சிறப்புப் பெயர்போலும். இகல் நாறும் - வலிமைக்கு அறிகுறியாகத் தோன்றும், 'இகல் நாறும் செம்பொன் முடி' என்க. நிலவு ஆர் மதி - நிலவு நிறைந்த சந்திரன் (பூரண சந்திரன்.)

இயல்பாக வானத்தின்கண் உறையுமதியை ஆசரிதனுக்குக் குடையாக விருந்து நிழலைச் செய்வதாகக் கவிஞன் தன் கருத்தேற்றிச் சொன்னமையால் இது தற்குறிப்பேற்றமாயிற்று.

13. ஏது

பக்கம்-212. 'சூழ்வார் கண்ணுக' என்னுஞ் செய்யுள்.

சூழ்வார்-மந்திரிகளை, கண் ஆக-கண்ணுகக்கொண்டு, ஒழுகலால் - (தன்பாரம்) நடத்தலால், மன்னவன் - அரசன், சூழ்வாரை - அத்தன்மையராகிய மந்திரிகளை, சூழ்ந்து-ஆராய்ந்து, கொளல் - (தனக்குத் துணையாகக்) கொள்ளக்கடவன்.

'மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்துகொளவேண்டும்' என்பதற்குச் 'சூழ்வார் கண்ணுக ஒழுகலான்' என ஏது காட்டினமையின் இஃது ஏதுவாயிற்று என அறிக.

14. நுணுக்கம்

இது தண்டியலங்காரத்தில் 'நுட்ப அணி' என்றுகூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-212. 'கணவர்க்கு வந்தெய்தும்' என்னுஞ் செய்யுள்.

(வாளார் திரு நெடுங்கண் மாது, அலா முன் வந்தெய்தும் காலம் கணவர்க்கு உணர்வு செயமாட்டாது உணர்ந்து, துணர் மலிந்த தாளார் முளரித் தடமலரைக் கூப்பினாள்,' என இயைக்க.)

(கணவன் வரவேண்டிய காலத்திற்கு முற்காலத்தில்) கணவர்க்கு - தன் நாயகருக்கு, வந்து எய்தும் காலம் - அவர் வந்து தன்னைச் சேர்தற்குரிய காலத்தை, உணர்வு செயமாட்டாது உணர்ந்து - வேறுவகையினால் அறிவிக்கமுடியாமையை அறிந்து, தடமுளரி மலரைக் கூப்பினாள் - பெரிய தாமரை மலரைக் கூம்பும்படி செய்தாள்.

தாமரை மலரைக் கூப்பியது இரவுக் குறிக்கண் வருக எனக் குறிப்பித்தவாறும். தலைவி, தாமரை மலரைக் குவித்த குறிப்பினாலே இரவுக் குறியைத் தலைவனுக்குத் தெரிவித்தமையால் 'இது' நுட்பம்' என்னும் அணியாயிற்று.

'தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்
அரிதுணர் வினைத்திறம் நுட்ப மாகும்.'

என வரும் தண்டியலங்காரத்தின் அறுபத்து நான்காஞ் சூத்திரத்தை ஈண்டு நோக்குக. இதன் பொருள் 'தெரிந்துகொண்டு வேறாகக் கூறாமல், குறிப்பினாலாயினும், தொழிலினாலாயினும் (தெரிவித்தலின்) அரிதாக உணரும் வினையின் தன்மையினை உடையது ' **நுட்பம்** ' என்னும் அணியாம்,' என்பது.

15. இலேசு

பக்கம்-213. 'உன்னுயி ரோம்பு' என்னும் செய்யுள்.

('அளி ஆற்றும் தண் தாரான் உன் உயிர் ஓம்பு புளகத்தால் ஓங்கு அரசர் 'கன்னிமேல் காதல் உளன்' என்னாமல் 'முன் நீர் குளிர் காற்று வந்து அசைப்பக் கூசினான்' என்றார்,' என இயைக்க.)

(தோழியே, தன்பால் உளதாகிய தேனாலே) வண்டுகளின் பசியைத் தணிக்கும் குளிர்ந்த மலர் மாலையை அணிந்த தலைவன் உன்னுயிரைத் தன் அன்பினால் பாதுகாக்கும் மகிழ்ச்சியினாற் (புளகங்கொள்ள, அப்புளகத்தால் ஓங்கரசர் கன்னியாகிய நின்பால் காதல் கொண்டுளன் என்பதைப் பிறர் அறியாதிருக்கும்பொருட்டு) உயர்ந்த அரசர்களின் கன்னியினிடம் காதல் கொண்டிருக்கின்றான் என்று கூறாமல், (யாவராலும்) கருதப்படும் கடல் நீரைக் கொண்ட குளிர்ந்த காற்று வீசுதலால் கூச்சம் உற்றான் என்று கூறினர். (அவன் பாங்காயினார்)

தலைவனுக்கு ஓங்கரசர் கன்னியின் காதலால் புளகமுண்டாயிற்றாக அதனை மறைத்து, குளிர்காற்று வீசுதலால் புளகம் உண்டாயிற்று என்று கூறினமையின், இலேசு ஆயிற்று.

இஃது ஒன்றான் உடலின்கண் தோன்றும் சத்துவ குணங்களை வேறொன்றான் உண்டாயின எனக் கூறுதலாம். சத்துவ குணங்களாவன: சுவைக்கப்படு பொருளும், சுவைக்கும் பொறியும் கூடிய வழி மனத்தின்கண் தோன்றும் குறிப்பால் உடலின்கண் தோன்றும் மெய்ம்மயிர் சிலிர்த்தல், வெயர்வரும்பல், மெய்ந் நடுக்கமுதலாயின. வேம்பாகிய சுவைக்கப்படும் பொருள், நாவாகிய பொறியின்கண் சேரின், மனத்தின்கண் அருவருப்புத் தோன்றும். அங்ஙனம் மனத்தின்கண் தோன்றும் அருவருப்பு, 'குறிப்பு' எனப்படும். அக்குறிப்பான் உடலின்கண் ஒருவகை நடுக்கமுளதாகும். அங்ஙனம் உடலின்கண் தோன்றும் நடுக்கமே 'சத்துவம்' எனப்படுவதாகும். இது 'விறல்' என்றுங் கூறப்படும்.

தண்டியலங்காரத்தின்

'குறிப்புவெளிப் படுக்குஞ் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாடல் இலேச மாகும்.'

என வரும் அறுபத்தைந்தாஞ் சூத்திரத்தையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

16. அடைவு

இது, தண்டி அலங்காரத்தில் 'நிரனிறை அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 213. 'செவ்வாய் புகர்புந்தி' என்னுஞ் செய்யுள்.

'நிலத்து நீடு ஆய்ந்து சொன்னூர்' என இயைக்க.

17. மகிழ்ச்சி

இது தண்டியலங்காரத்தில் 'ஆர்வ மொழி' என்று கூறப் பட்டிருக்கின்றது.

பக்கம் - 214. 'தம்மி லிருந்து' என்னுஞ் செய்யுள்.

அம் மா அரிவை முயக்கு—அழகிய மாமை நிறத்தை உடைய மங்கையின் புணர்ச்சியானது (இன்பந்தருதலில்), தம் இல் இருந்து—தமக்குரிய மனையிலிருந்து, தமது—(உலகோர்) தமது (முயற்சியால் வந்த) பொருளை, பாத்து—(தென்புலத் தார் தெய்வம் விருந்து சுற்றத்தார் என்னும் இவர்களுக்குப்) பகுத்துக் கொடுத்து, உண்டற்று—(தமது பாகத்தை) உண் டாற்போலும்.

இது,'இவளை நீ வரைந்துகொண்டு, இருந்து தமது பொரு ளைப் பகுத்துண்ணும் இல்லறத்தோடு பொருந்தல் வேண்டும்,' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

18. சுவை

(க) சிருங்காரம்

பக்கம்-214. 'ஊடுக' என்னுஞ் செய்யுள்.

'ஒளி இழை ஊடுக மன்,' என இயைக்க.

ஒளி இழை- விளங்கும் அணிகளையுடையாள், ஊடுக மன்- (இன்னும் எம்மோடு) பிணங்குவாளாக, யாம் இரப்ப - (அவ் வாறு அவள் பிணங்கி நிற்றற்கும் அப்பிணக்கினைத் தீர்த்தற் பொருட்டு) நாம் இரந்து நிற்றற்கும், இரா - இவ்விரவு, நீடுக மன் - (விடியாது) நிற்றல் வேண்டும்.

இது தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் மிக்க மகிழ்ச்சியுடையவனாய்த் தன்னுட் கூறியது.

(உ) வீரம்

பக்கம்-214 'கைவேல்' என்னுஞ் செய்யுள்.

கைவேல் - (தன்) கைப்படையாகிய வேலை, களிற்றொடு - (தன்மேல் வந்த) யானையோடு, போக்கி - எறிந்துவிட்டு, வரு

பவன் - (வருகின்ற யானைக்கு வேல் தேடித்) திரிபவன், மெய் வேல்-தன் மார்பில் நுழைந்திருந்த வேலை(க்கண்டு), பறியா - பிடுங்கி, நகும் - மகிழ்வான்.

களிற்றொடு போக்கல் - களிற்றினுயிரைக் கொண்டு போம்படி வேலை எறிதல், மகிழ்ச்சி - தேடிய வேலை அடைந்தால் உண்டான களிப்பு.

(ஙு) விகாரம்

(ஈண்டு அடிக் குறிப்பை நோக்குக.)

பக்கம்-214. 'கலைகா னெகிழ்ந்து' என்னுஞ் செய்யுள்.

'போலால்' என்றிருப்பதைப் 'போலாள்' என்று திருத்திக் கொள்க.

இவள் ஆடை காலில் வந்து விழுந்து, கூந்தலும் சோர்ந்து, வளைகள் கழன்று விழத் தனங்களின் அடிப்புறம் பசப்பு நிறம் அடைந்து இருத்தலின், முன் போன்றிருந்திலாள். ஆதலின், இவ்வாய்ந்த அணியினையுடையாள், போர்க்களத்தில் தன் பருத்த கைகளால் வில்லின் காலைப் பற்றி அதனை வளையச் செய்த மாறனுடைய பகையரசர்கள் போலச் செவ்வேள் உறைதற்கிடமான மலை தரும் அருவி சென்று ஆடினளோ?

மற்று—அசை.

19. ஊக்கம்

இது தண்டியலங்காரத்தில் 'தன் மேம்பாட்டுரை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 215. 'மலைகரந்து போகாதோ' என்னுஞ்செய்யுள்.

('பாய்நீர் குரு குலத்தார் போர் வேந்தே, யான் முனிந்த போது மலை கரந்து போகாதோ? பௌவம் வற்றாதோ? அலர் கதிரோன் அஞ்சி (ப்பௌவம்) வீழாதோ? நிலை எனக்குப் பார் வேந்தர் ஒப்பரோ?' என இயைக்க.)

நிலை எனக்கு—போரில் பகைவருக்குப் பின்னிடாது நிலையாக நிற்றலை உடைய எனக்கு.

20. பரியாய மொழி

பக்கம்-215. 'இவ்வயிற் கேட்டதோர்' என்னுஞ் செய்யுள்.

பசுங்கதிர்த் திங்கள் நாடிய செல்வன் - குளிர்ந்த கிரணங்களை உடைய சந்திரனைக் காணச் செல்வேன்.

வத்தவனை வணங்கும்படி செய்த வீரர்களின் அரசன் மதிக்குலத்தில் தோன்றியவன் ஆதலின், 'சந்திரனைக் காணச் செல்வேன்' என்றது, 'அம்மன்னன் யாருஞ் சென்று காணற் குரிய வீரத்தின் மேன்மையை உடையவன்; அரசர்காள், அவனைச் சென்று காணுங்கள்' என்னும் பொருளைத் தோற்று வித்து நின்றது.

21. துணைப்பேறு

இது தண்டியலங்காரத்தில் 'சமாயித அணி' என்று கூறப்பட்டிருக்கிறது.

பக்கம்-215. 'வான்குணைத் தெம்பிக்கு' என்னுஞ் செய்யுள்.

('கரும்பு ஏறு நாட்டார்தம் காவலன் தேவி, வான் குணைத்து எம்பிக்கு 'மன்னு பெருஞ்செல்வம் யான் கொடுப் பேற்கு எங்கோனும் மிக்களித்தான்; நான் போய்த் தரும் பேறு மற்று உண்டோ? சாற்று,' என இயைக்க.)

கொடுப்பேற்கு-கொடுக்க இருந்த எனக்கு.

22. உதாத்தம்

(க) இட வகையைப் புகழ்ந்த உதாத்தம்

பக்கம்-216. 'திருக்கிளர் தாமரையின்' என்னுஞ் செய்யுள்.

('இருக்கு என்னும் நாமாலை இட்டு நலங்கிளர் தார் மூவேந்தர் பாமாலை இட்டார் பதி, திருக்கிளர் தாமரையின் தேன் ஒழுகச் சாலி பருக்கும் இலங்கைப் பதியே,' என இயைக்க.)

பக்கம்-116—'தென்ற லுலவ' என்னுஞ் செய்யுள்.

('கொன்றையின் இன் மட்டு ஆடுந் தொங்கலினார் வந்து மணஞ் செய்யப்பட்டாரை இட்டார் பதி, தென்றல் உலவச் சிலை மாரன் போர் செய்ய மன்றல் கமழும் மருதூரே,' என இயைக்க.)

(உ) செல்வத்தைப் புகழ்ந்த உதாத்தம்

பக்கம்-216. 'அருமொழிதன் கோயில்' என்னுஞ் செய்யுள்.

கொடிகள் தேய்த்த பருமணிகள்-கொடிகள் தேய்த்ததனால் உதிர்ந்த பருத்த மணிகள், ஓதத்து அமுது அனையார்-திருப் பாற்கடலிற்றோன்றிய அமுதம் போல இனியவர்களாகிய, ஒள் நுதலார் - பிரகாசமாகிய நெற்றியினையுடைய நங்கையர் கள் (நடைக்கையில் அவர்களுடைய), மெல்மலர் ஆம்-மென்

மையாகிய மலரைப் போன்ற,பாதத்தின் ஊன்றும் பரல்-பாதத்தில் ஊன்றுகின்ற பரற்கற்களைப் போலக் (கோயிலின் எங்கும்) சிந்திக் கிடக்கும்.

23. அவநுதி

பக்கம்-216. 'மாலைநீ அல்லை' என்னுஞ் செய்யுள்.

('பொழுது, நீ மாலை அல்லை; மணந்தார் உயிர் உண்ணும் வேலை, நீ வாழி,' என இயைக்க.)

பொழுது-மாலைப் பொழுதே, நீ மாலை அல்லை-நீ மாலைக் காலம் அல்லை; மணந்தார்-தன்னிடஞ் சார்ந்தவர்களின், உயிர் உண்ணும்-உயிரைப் போக்கும், வேலை நீ-கடல் நீ, வாழி-(நீ) வாழக்கடவாய்.

'வாழி' என்பது 'நீ அழிக,' என்னும் பொருளது; இது குறிப்பு.

இதனால், மாலைப் பொழுதினது இன்பஞ் செய்யுந் தன்மை மாற்றி, அதன்கண் கொல்லுந் தன்மை ஏற்றிக் கூறப்பட்டது.

24. சிலேடை

பக்கம்-216. 'செம்மை யுடையார்' என்னுஞ் செய்யுள். இதன் பொருளை ஆய்ந்து கொள்க.

25. சிறப்பு

இது தண்டியலங்காரத்தில் 'விசேட அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-217. 'கரும்பேதன் கைச்சிலையும்' என்னுஞ் செய்யுள்.

('கைச்சிலையும் கரும்பே, காமர் கணையும் அரும்பே, நாண் சுரும்பே, (அங்ஙனமாகவும் மாரன் வந்து) நன்றால் பெரும் பேய்க் கணத்தானைப் போர் வென்று காரிகையாரோடும் மணத் தானம் ஏற்றுவித்தான்,' என இயைக்க.)

நன்றால்-நன்மையாகிய தன் வன்மையினால், பெரும்பேய்க் கணத்தானை-பெரிய பேய்களின் கூட்டத்தினையுடைய சிவ பிரானை, போர் வென்று-போரிலே வெற்றி கொண்டு, காரிகை

யாரோடு மணத்தானம் ஏற்றுவித்தான்-தவத்தினை விட்டுப் பெண்களோடு கூடியிருக்கும் நிலையிற் சேர்ப்பித்தான்.

வில் முதலியன மெல்லிய கரும்பு முதலியனவாயிருக்கவும், பெரும்பேய்க்கணத்தானைப் போர் வென்று தான் கருதியதனை முடித்தனன் என்றமையான், இது பொருட்குறை விசேடமாகும்.

26. உடனிலைக் கூட்டம்

இது தண்டியலங்காரத்தில் 'ஒப்புமைக் கூட்ட அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-217. 'உள்ளிய' என்னும் செய்யுள்.

('உள்ளிய உள்ளியாங்கு ஈயும் உயர்விற்று ஆம் கள் அவிழ் பூஞ்சோலைக் கற்பகமும், வள்ளல் வளை ஆய் புனல் நாடன் மான வேலும் நின்று உளவாக உலகு வாடாது,' என இயைக்க.)

'நின்றும்' என்பதில் உள்ள உம்மையைப் பிரித்து 'வேல்' என்பதனோடு கூட்டுக. வளை ஆய் - சங்குகளைத் தேர்ந்து எடுக்கின்ற, 'வள்ளல் புனல் நாடன்' என இயைக்க; 'வள்ளலாகிய புனல் நாடன்' என்பது அதன் பொருள். புனல் நாடு-சோழ நாடு. நின்று-நிலையாய், 'கற்பகமும், புனல் நாடன் வேலும் உளவாக உலகு வாடாது,' என இயைக்க. உயர்ந்த கற்பகத்தோடு புனல் நாடன் வேலைக் கூட்டிப் புகழ்ந்தமையால் இது 'புகழொப்புமைக் கூட்டம்' ஆகும்.

27. முரண்

இது தண்டியலங்காரத்தில் 'விரோத அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 217. 'நல்லா றெனினும்' என்னுஞ் செய்யுள்.

கொளல்-(பிறர்கொடுத்தலை) வாங்கிக் கொள்ளுதல், நல் ஆறு எனினும்-(வீட்டுலகை அடைதற்கு) நல்ல வழி என்பவர் இருப்பாராயினும், தீது- குற்றமாம், (கொடுத்தவர்க்கு மேலுலகத்தை அடைதல்), இல் எனினும்-இல்லையென்பவர் இருப்பாராயினும், ஈதலே-கொடுத்தலே, நன்று-நல்லது.

இது, நீது என்பதும் நன்று என்பதும் வரப் பெற்றமை யின் 'முரண்' ஆயிற்று.

28. நுவலாச் சொல்

இது தண்டி அலங்காரத்தில் 'புகழாப் புகழ்ச்சி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-218. 'தொடலைக் குறுந்தொடி' என்னுஞ் செய்யுள்.

மாலை உழக்கும் துயர்-மாலைக் காலத்தில் அநுபவிக்கும் துன்பத்தையும், மடலொடு-(அதற்கு மருந்தாகிய) மடன் மாவையும், தொடலைக் குறுந்தொடி-மாலைபோலத் தொடர்ந்த சிறிய வளையை உடையவள், தந்தாள்-கொடுத்தாள்.

காமம் மற்றைப்பொழுதுகளினும் உளதாயினும் மாலைப் பொழுதில் மலர்தலுடைமையால் 'மாலை உழக்குந்துயர்' என் றும், மடலும் அதுபற்றி வந்ததாகலின்'மடல் தந்தாள்' என் றும், அவள்தான் நீ சொல்லியதே சொல்லும் இளமையள் என் பது தோன்றத் 'தொடலைக் குறுந்தொடி' என்றுங் கூறினர்.

இஃது, 'இவ்வாற்றாமையும், மடலும் உமக்கு எவ்வாறு வந்தன?' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

தலைமகன் தலைமகளைப் பழித்தாற்போலக் கூறினனாயினும் அதனால், 'யான் நாணைத் துறந்து மடலேறத்துணியவும் செய்த பேரழகினை உடையாள்' என்று தலைவியைப் புகழ்ந்தவாறா யிற்று.

உரையாசிரியர் இவ்வணிக்கு இம்மேற்கோட்செய்யுளின் பின் கூறிய இலக்கணம், நூலாசிரியர் இவ்வணிக்குக் கூறிய இலக்கணத்தோடும், அதற்கு இவ்வுரையாசிரியர் கூறிய உரை யோடும் மாறுபடுகின்றது. அதனை, இந்நூல் 172-ஆம் பாட்டில்

'மாறி யிகழ்மொழி வண்புக ழாய்நுவ லாச்சொல்வரும்'

என்றதனாலும், அதன் உரையினாலும் அறிக.

தண்டி அலங்காரத்தில்,

'பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.'

என வரும் 84-ஆம் சூத்திரத்தையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

29. தெளிவில் புகழ்ச்சி

இது, 154-ஆம் பாட்டில் '**புரிவில் புகழ்ச்சி**' எனவும், அதன் உரையில் '**தெரிவில் புகழ்ச்சி**' எனவும் கூறப்பட்டிருக்கின்றது; இதன் இலக்கணங் கூறிய 172-ஆம் பாட்டினும் 'தெரிவில் புகழ்ச்சி' என்றே கூறப்பட்டிருக்கின்றது; தண்டி அலங்காரத்தில் 'மாறுபடு புகழ் நிலை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 218. 'மன்னிய பெண்ணை' என்னுஞ் செய்யுள். இதன் பொருளை ஆய்ந்து கொள்க.

உரையாசிரியர் இம்மேற்கோட் செய்யுளின் பின் இவ்வணிக்குக் கூறிய இலக்கணம், நூலாசிரியர் கூறிய இலக்கணத்தோடும் அதற்கு இவ்வுரையாசிரியர்கூறிய உரையோடும் மாறுபடுகின்றது. அதனை இந்நூலின் 172-ஆம் பாட்டில்,

'தேறுந் தெரிவில் புகழ்ச்சியோன் றைப்பழிக் கப்பிறிது
கூறிப் புகழ்தல்'

என்றதனாலும், அதன் உரையினாலும் அறிக. தண்டியலங்காரத்தின்

'கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.'

எனவரும் 83-ஆம் சூத்திரத்தையும் அதன் உரையையும் ஈண்டு நோக்குக.

30. சுட்டு

இது தண்டியலங்காரத்தில் 'நிதரிசன அணி' எனக் கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 218. 'அண்ட முதற்பரிதி' என்னுஞ் செய்யுள். இதன் பொருளை ஆராய்ந்து கொள்க.

இவ்வணிக்கு இம்மேற்கோட்செய்யுளின் பின் கூறப்பட்ட இலக்கணத்திற்கும், 172-ஆம் பாட்டில் கூறிய இலக்கணத்திற்கும் வேற்றுமை காணப்படுகின்றது. அதனை அப்பாட்டில்

'சுட்டா நிகழ்பயன் கோள்போருளில்
வேறு படாநன்மை தீமை வெளிப்படல்'

என்றதனையும் அதன் உரையையும் நோக்கி அறிக.

31. ஒருங்கியல்

இது தண்டியலங்காரத்தில் 'புணர் நிலை அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 219. 'பூக்கால் புனைந்த' என்னுஞ் செய்யுள்.

('பூக்கால் புனைந்த புனவர் மடமகள் கள்ளம் நிறையும் கருங்கண்ணால் உள்ளம் நிறையோடு ஒருங்கு கட்டழித்தாள்; (அதனை) நோக்காது, அம்மடமகளுடைய அந்நோக்கால் நோக்குண்டாரை நோவது என்' என இயைக்க.)

பூக்கால் புனைந்த - பூவை அளவாகக் கூந்தலிற் சூடிய, புனவர் மடமகள் - குறிஞ்சி நிலத்தவர்களின் இளமையை உடைய பெண், கள்ளம் நிறையும் - கள்ளத்தன்மை நிறைந்த, கருங்கண்ணால் கரிய கண்களால், உள்ளம்-(தலைவர்) மனத்தை, நிறையோடு ஒருங்கு-நிறையுடனே ஒன்றாக, கட்டு அழித்தாள்-உறுதி கெடச் செய்தாள், நோக்காது-அதனை எண்ணாமல், நோக்கால் (அவள் நோக்க,) அந்நோக்கால், நோக்குண்டாரை நோவது என்-நோக்குண்ட தலைவர் செயலுக்காக வருந்துதலால் யாது பயன்?

'நோக்குண்டார்' என்றது தலைவரை. ஈண்டு அது பொருளாகு பெயராய் அவர் செயலை உணர்த்தி நின்றது.

32. பரிமாற்றம்

இதற்கு 'மாறுட்டு' என்னும் பெயரும் உண்டு.

இது, தண்டியலங்காரத்தில் 'பரிவருத்தனை அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-219. 'சாயலும்' என்னுஞ் செய்யுள்.

கைம்மாறு ஆ (க) - (பிரிகின்ற பொழுதே அவ்விரண்டினுக்கும்) தலைமாறாக, நோயும் பசலையும்-(எனக்கு) இக்காம நோயையும் பசலையையும், தந்து-தந்து, சாயலும் நாணும்-

(என்மேனி) அழகையும் நாணத்தையும், அவர் - அத்தலைவர், கொண்டார்-கொண்டு போயினர்.

'அவ்விரண்டினுக்கும்' என்றது சாயலுக்கும் நாணத்திற்கும் என்று கொள்க. இஃது எதிர் நிரனிறைப் பொருள்கோள், சாயலுக்குப் பசலையும், நாணுக்கு நோயும் கைம்மாருகக் கோடலின்.

இஃது, 'அழகும் நாணமும் அழியாமல் நீ பொறுத்தல் வேண்டும்,' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

'கைம்மாறு ஆக நோயும் பசலையுந் தந்து, சாயலும், நாணும் அவர் கொண்டார்,' என்றமையின், பரிமாற்றமாயிற்று.

33. ஆசி

இது, தண்டி அலங்காரத்தில் 'வாழ்த்தணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-219. 'மிகைசேர்ந்த நாகமும்' என்னுஞ் செய்யுள்.

மிகை சேர்ந்த-(வலிமையின்) மிகுதி பொருந்திய, பகை தீர்ந்த மூரல் சடையோன்-பகை தீர்தற்குக் காரணமாகிய பெருமையை உடைய சடையை உடையவன்; முகை மலர் அக்கோழி-அரும்புகள் மலரப்பெற்ற அந்த உறையூர், கோரம்-சேர்மூர்களுடைய குதிரை, புலி—புலிக்கொடி (சேர்மூர்களுடைய கொடி), மண் தலத்து வான் வாழி-பூமியில் முகில் மழை பொழிவதாக.

34. விராவியல்

இது, தண்டி அலங்காரத்தில் 'சங்கிரண அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-220 'வெய்ய சுடரானும்' என்னுஞ் செய்யுள்.

வெய்ய சுடரானும்-சூரியனும், வீரை வெருதானும்-சோழனும், (கடலை வெறுக்காதவன் என்பது, கடலிலும் நாவாய்களைச் செலுத்திப் போர் புரியும் வலிமையன் என்பதாம்.), செய்ய ஒளியர்—(ஆகிய இருவரும்) செம்மையாகிய ஒளியினை உடையவர், (இதனைச் செம்மையாகிய மேனியின் நிறத்தை உடையவன் எனச்சூரியனுக்கும், செம்மையாகிய புகழை உடை

யவன்எனச் சோழனுக்கும் சிலேடையாகப் பொருள்கொள்க.) திறல் உடையர் - வலிமையினையுடையவர் (இதனையும் இருளைப்போக்கும் வலிமையை உடையவன் எனச் சூரியனுக்கும், பகைவர்களை அழிக்கும் வலிமை உடையவன் எனச்சோழனுக்கும் சிலேடையாகப் பொருள் கொள்க.), வெய்ய சுடராழியான்-வெப்பமாகிய ஒளியையும் ஒற்றைச் சக்கரத்தை உடைய் தேரையும் உடையவனாகிய சூரியன், கங்குல் விளக்கான்-(தன் கிரணங்களால்) இராப்போதினை விளங்கச் செய்யான் (பகற் போதினை மாத்திரமே விளங்கச் செய்வன்), கோழியன் கூடலார் கோ-உறையூரையுடையவனும்கூடற்பதியில்உள்ளார்க்குத் தலைவனுமாகிய சோழன், அனையனோ-அத்தன்மையனோ? அல்லன்; (தன் ஆணையால் பகற்போதினையும் இராப்போதினையும் விளங்கச் செய்பவன் என்க.)

'ஓ' எதிர்மறைப் பொருளது.

இதில் 'வெய்ய சுடரானும் வீரை வெருதானும்', என்றது ஒப்புமைக்கூட்டம்.

'செய்ய வொளியர் திறலுடையர்' என்றது சிலேடை.

'வெய்ய சுடராழியான் கங்குல் விளக்கான்; கோழியன் கூடலார் கோ அனையனோ' என்றது வேற்றுமை அணி.

இஃது இங்ஙனம் பல அணிகளுங் கலந்து வரப்பெற்றமையின் விரவியலாயிற்று.

35. பாவிகம்

பாவிகமாவது, பொருட்டொடர்நிலைச் செய்யுளை இயற்றும் புலவனாற் கருதியமைக்கப்படுவதோர் குணம். அது பொருட்டொடர்நிலைச் செய்யுள் முழுவதினும் பரவியிருப்பதாகும். பொருட்டொடர்நிலைச் செய்யுள் 'காவியம்' என்றுங் கூறப்படும்.

இந்நூலின் அலங்கார அதிகாரத்திற்கும், தண்டி அலங்காரத்திற்கும் வடமொழியில் தண்டி ஆசிரியராற் செய்யப்பட்ட 'காவியாதர்சமே' முதனூலாயினும், இதிற்கூறப்பட்ட பொருளணிகளுள் பல அணிகளின் பெயர்களும், தண்டி அலங்காரத்திற் கூறப்பட்ட பொருளணிகளுள் பல அணிகளின் பெயர்

களும் வெவ்வேரு யிருக்கின்றன. இந்நூலில் பொருளணி களின் இலக்கணங் கூறும் செய்யுட்களின் உரையில் உரையா சிரியர், 'இவ்வணி இப்பெயரையும் பெறும்' என்று கூறுவதனுல் அங்ஙனம் இதில் வேருகக் கூறப்பட்ட பொருளணிகளின் பெயர்களுக்குத் தண்டி அலங்காரத்திற் கூறப்பட்ட பெயர்கள் விளங்குகின்றன. அவற்றை அங்குக் காண்க.

'திரப்பியம் சாதி' என்று தொடங்கும் பாட்டுமுதல் 'ஆக்கு மொருங்கியல்' என்று தொடங்கும் பாட்டு வரையினுமுள்ள நான்கு பாட்டுக்களில் பொருளணிகள் முப்பத்தைந்தையும் தொகுத்துக் கூறிப் 'புகழ்ச்சி பழிப்பு' என்னும் பாட்டிலிருந்து அவற்றின் இலக்கணங்களையும் வகைகளையும் கூறுகின்ருர்.

உவமை அணியின் வகை

1. புகழ்ச்சியுவமை

பக்கம்-221. 'நான்முகன் ருேன்றிய' என்னுஞ் செய்யுள்.

இதில் தாமரை மலராகிய உவமை 'நான்முகன் ருேன்றிய' என்றதனுல் புகழப்பட்டது என அறிக.

2. பழிப்புவமை

பக்கம்-221 'அறுவாய் நிறைந்த' என்னுஞ் செய்யுள்.

'அகல் மதிக்கு அறுவாய் நிறைந்த (மறுப்போல) மாதர் முகத்து மறு உண்டோ?' என இயைக்க.

அகல் மதிக்கு - நிறைமதியின்கண், அறுவாய் - வெட்டு வாய்போன்ற இடத்தில், நிறைந்த (மறுப்போல) - நிறைந் துள்ள மறுவைப்போல, மாதர் முகத்து - இந்நங்கையின் முகத் தின்கண், மறு உண்டோ - மறு உளதோ?

உவமையாகிய மதியை மறு உடைய்து என்றமையாற் பழித்தமை காண்க.

3. விரோத உவமை

பக்கம் - 221. 'நின்முகம் பங்கயம்' என்னுஞ் செய்யுள்.

தம்மில் மறுதலிக்கும் - தம்முள் ஒன்ருேடொன்று மாறு பட்டிருக்கும்.

4. கருத்துவமை

பக்கம் - 221. 'நின்முகம் திங்கள்' என்னுஞ் செய்யுள். இதன் பொருள் வெளிப்படை.

5. இசையுவமை

பக்கம்-221. 'மான்விழி நின்முகத்த' என்னுஞ் செய்யுள்.

'மான், நின் முகத்த விழி; வான் மதியின்கண்ணது மான்; ஆகிலும்,(மதி நின் முகத்தை)அமர்ந்து ஒக்கும்' என இயைக்க.

மான் - பெண்ணே, நின் முகத்த - நின் முகத்திலிருப்பன, விழி - கண்களாகும்; மதியின்கண்ணது - சந்திரனிடத்திலிருப்பது, மான் - மானுகும், ஆகிலும் - அப்படியானுலும், அமர்ந்து - (மதி நின்முகத்திற்கு உவமையாதற்குரிய தன்மை) அமைந்து, ஒக்கும் - நின் முகத்தை ஒக்கும்,

6. உண்மையுவமை

பக்கம்-222. 'பங்கய மன்று' என்னுஞ் செய்யுள்.

('இது பங்கயம் அன்று முகமே; இவையும் வண்டு அல்ல, வாட்கண்களே,' என இயைக்க.)

6. ஐய உவமை

பக்கம்-222. 'அணங்குகொல்' என்னுஞ் செய்யுள்.

கனங்குழை - இக்கனமாகிய குழையையுடையவள், அணங்குகொல் - (இச்சோலையில் வசிப்பவளாகிய) தெய்வப் பெண்ணே! (அல்லாமல்), ஆய் மயில் கொல் - ஒரு மயில் விசேடமோ! (அல்லாமல்), மாதர்கொல் - (ஒரு) மானுட மாதரோ! என் நெஞ்சு - என் மனம், மாலும் - (இவளை இன்னள் என்று துணியமாட்டாமல்) மயங்கும்.

இது, தலைமகளது உருவு முதலியன முன் கண்டறிவனவல்லாமல் சிறந்திருத்தலால், அவளைத் தலைமகன் ஐயுற்றது.

7. இகழ்ச்சியுவமை

பக்கம்-222. 'திங்களிற்றோன்றிய' என்னும் செய்யுள்.

(நின்சீர் முகத்துநின்று எழுந்த வெவ்வுரைக்குத் திங்களில் தான்றிய நஞ்சே நேர், என இயைக்க.)

நின் சீர் முகத்துநின்று - உன்னுடைய அழகின் பொலி னை உடைய முகத்தினின்று, எழுந்த - உண்டான, வெவ் ரைக்கு - கடுஞ்சொற்களுக்கு, திங்களில் தோன்றிய நஞ்சே - ந்திரனிடத்தினின்று உண்டான விடமே, நேர் - ஒப்பதாகும்.

8. எதிர்ப்பொருளுவமை

பக்கம்-222. 'நின்னொக்கு மன்னர்' என்னுஞ் செய்யுள்.

('கற்பகந்தன் ஒக்கும் பாதவமும் இல்; நின் ஒக்கும் மன்ன ும் உளர் அல்லர்' என இயைக்க.)

பாதவம் - மரம், 'பாதவமும்' என்பதன்கண் உள்ள உம் மமையை 'மன்னர்' என்பதனோடுங் கூட்டுக.

9. அற்புத உவமை

பக்கம்-222. 'வாட்டடங் கண்ணும்' என்னுஞ் செய்யுள்.

('மின் முகத்தைக் காட்டி விளங்கும் நுடங்கு இடையாய்', ாள் தடங்கண்ணும் வளைந்த புருவமும் தாள் தாமரையில் ல சிறப்பின் நின் முகத்திற்கு ஒப்பாகும் நேர் (என) நாட்ட ாம்,' என இயைக்க.)

மின் + முகத்தைக் காட்டி விளங்கும் - ஒளியினை உடைய நகத்தைக்காட்டிப் பிரகாசிக்கும், நுடங்கு இடையாய்-தளரும் இடையை உடைய மாதே, வாள் தடங்கண்ணும் - வாளைப் 'பான்ற விசாலமான கண்களும், வளைந்த புருவமும்-, தாள் தாமரையில் - நாளத்தினை உடைய தாமரை மலரின்கண், தலை சிறப்பின்-மிகவும் சிறந்து விளங்குவனவாயின், நின் முகத்திற்கு ஒப்பாகும் நேர் - அத்தாமரை மலரை உன் முகத்திற்கு ஒப் ாகும் உவமை (என்று), நாட்டலாம் - உறுதியுறக் கூறுத ாகும்.

'விளங்கும் இடையாய்,' என இயைக்க.

10. நோக்குவமை

பக்கம்-223. 'நானே' என்னுஞ் செய்யுள்.

'நன்மதியும், 'இவள் முகத்துக்கு நான் ஒப்போ?' எனும்; கான் மலி பங்கயமும் (நான் இவள் முகத்துக்கு ஒப்போ எனும்)' என இயைக்க.

நல் மதியும்-சிறந்த சந்திரனும் (பூரண சந்திரனும்)-நான, (களங்கமுடைய) நான், இவள் முகத்துக்கு - (களங்கமில்லாத) இவளுடைய முகத்துக்கு, ஒப்போ - ஒப்பாவேனோ (ஒப்பாகேன்), எனும் - என்று உரைக்கும்; கான் மலி-வாசனை மிக்க, பங்கயமும் - செந்தாமரை மலரும், நான் - (மாலைப்போதில் வாடிவிடும்) நான், இவள் முகத்துக்கு - (மாலைப்போதினும் வாடாமலிருப்பதாகிய) இவளுடைய முகத்துக்கு, ஒப்போ - ஒப்பாவேனோ, எனும் - என்று உரைக்கும்,

'நானோ' என்பதன் ஓகாரத்தை ஒப்பு என்பதனோடும் 'நான் ஒப்போ' என்பதனை 'கான் மலி பங்கயம்' என்பதனோடும் இயைக்க. பங்கயம், முதலாகு பெயராய் அதன் மலரை உணர்த்திற்று. 'மதியும்' என்றதன் உம்மை எச்சப்பொருட்டு.

11. இதரேதர உவமை

பக்கம்-223. 'பங்கயத்தோ டொக்குநின்' என்னுஞ் செய்யுள்.

பங்கயம் - தாமரை மலர்; முதலாகு பெயர். 'பங்கயத்தை நின் கை ஒக்கும், நின் கையைப் பங்கயம் ஒக்கும்' என்றமையான், இது இதரேதர உவமையாயிற்று. இதனைத் தொல்காப்பியனார் 'தடுமாறுவமம்' என்பர்.

12. மிகையுவமை

இது தண்டி அலங்காரத்தில் 'அதிசய உவமை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-223. 'நின்முகங் கண்டதுவும்' என்னுஞ் செய்யுள். ('நின்முகங் கண்டதுவும் நின்கண்ணே; மிக்குத் திங்களையும் கண்டதுவும் விண்மிசையே' என இயைக்க.)

(நங்காய்,) உன் முகத்தைப் பார்த்ததுவும் உன்னிடத்திலேயே; மிகுதியாகச் சந்திரனைப் பார்த்ததுவும் விண்ணிடத்திலேயே.

'சந்திரனுக்கும், உன் முகத்துக்கும் சார்ந்திருக்கும் இடத்தால் வேற்றுமை அன்றி வேறு வேற்றுமை கண்டிலேன்,' என்பது கருத்து.

'நின்னுழையே நின்முகங் காண்கு நெடுந்தடந்
தன்னுழையே தன்னையுங் காண்குவம்—என்னும்
இதுவொன்று மேயன்றி வேற்றுமை யுண்டோ
மதுவொன்று சேந்தா மரைக்கு.

என அதிசய உவமைக்குத் தண்டியலங்காரத்திற் காட்டப்பட்ட மேற்கோட்செய்யுளையும் ஈண்டு நோக்குக.

13. பண்புவமை

பக்கம்-223. 'தாமரையே போற்செய்ய' என்னுஞ் செய்யுள்.

('தாமக் கருங்குழலி, கா மருவு நின்கைத்தலம், தாமரையே போற்செய்ய,' என இயைக்க.)

மலர்மாலையை அணிந்த கரிய கூந்தலை உடையாய், அன்பு பொருந்திய உன்னுடைய கைகள் செந்தாமரை மலரையே ஒப்பச் செந்நிறத்தினை உடையனவாகும்.

தாமரை - செந்தாமரை மலர்; முதலாகுபெயர். செய்ய-பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று. 'காமம்' என்பது கடை குறைந்து 'காம்' என நின்றது.

செந்தாமரை மலரின் நிறம் கையின் நிறத்திற்கு ஒப்பாகக் கூறப்பட்டமையின், இது பண்புவமையாயிற்று.

14. உயர்புவமை

இது தண்டியலங்காரத்தில் 'பொது நீங்குவமை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-223. 'நின்முகந் திங்களையும்' என்னுஞ் செய்யுள்.

'தன்னையே தான் ஒத்தது' என இயைக்க. கடந்து-வென்று.

'நின் முகத்துக்கு நின் முகத்தையன்றி வேறு உவமை இன்று,' என்பது கருத்து.

15. நியம உவமை

பக்கம் - 224. 'மதியேநின் வாண்முகத்திற்கு' என்னுஞ் செய்யுள்.

('நின்வாள் முகத்திற்கு ஒப்பது மதியே; இதனுல், மற்றொன்று உண்டு என்கை மயக்கு,' என இயைக்க.)

'இதற்கு இதுவே உவமை' என்று நிச்சயித்துக் கூறுவது நியம உவமையாகும்.

(நங்காய்,) உன்னுடைய ஒளியினையுடைய முகத்திற்கு ஒப்பாவது சந்திரனே; ஆதலின், உன் முகத்திற்கு ஒப்பானது வேறொன்று உண்டு என்று சொல்லுதல் மயக்கமேயாகும்.

16. அநியம உவமை

பக்கம்-224 'தாமரைக் கொப்பாநின்' என்னுஞ் செய்யுள்.

இதில் 'தாமரைக்கு ஒப்பாம் நின் வாள்முகம்' என்றதனை 'நின் வாள் முகத்துக்குத் தாமரை ஒப்பாம்' என உருபைப் பிரித்துக் கூட்டுக.

('நின்வாள் முகத்துக்குத் தாமரை ஒப்பாம்; ஆங்கு மற்றொன்று உண்டாயின் நின் கரத்துக்கு ஒப்பாம்,' என இயைக்க.)

உன்னுடைய ஒளியினை உடைய முகத்துக்குத் தாமரை மலர் ஒப்பாகும்; அதுபோல மற்றொன்று உண்டானல் உன் கைகளுக்கு ஒப்பாகும்.

17. தடையுவமை

இது தண்டியலங்காரத்தில் 'விலக்குவமை' என்று கூறப் பட்டிருக்கின்றது.

பக்கம்-224 'ஏடலர்தார்' என்னுஞ் செய்யுள்.

இதழ்கள் விரியப்பெற்ற மாலையை அணிந்த சந்திரன் என்பவனுடைய மிக்க கொடைக்கு நெடியனவாகிய மேகங்களை ஒப்பென்று சொல்லப்புகுந்தால், முதிர்வேனிற் பருவத்தின் காற்றுத் தடுக்குங்காலத்தினும், கொடிய கிரகங்கள்

தோன்றிய காலத்தினும், தாமே பெய்யாமல் (உலகை) வருத்துங் காலத்தினும் ஒப்பாகமாட்டா.

18. தெற்றுவமை

பக்கம்-224 'நின்முகம் போல' என்னுஞ் செய்யுள்.

('அன்னமே, அரவிந்தம் நின் முகம் போல மலர்ந்தது; அது பாராய்,' என இயைக்க.)

உரையாசிரியர் இதனடியில்,'இஃது தெற்ற உவமித்தலால், தெற்றுவமை' என்றார். இதில் 'தெற்ற' என்பதற்கு 'தெளிய' என்பது பொருள் எனக் கொள்க,

19. சிலேடை உவமை

பக்கம்-224 'திருமேவிக் கடிகமழ்ந்து' என்னுஞ் செய்யுள்,

('நின் ஒளி முகம், திருமேவிக் கடிகமழ்ந்து திங்களொடும் பகைத்தமையால், உருமேவுந் தாமரையோடு ஒக்கும்,' என இயைக்க.)

முகத்துக்கு: திரு மேவி-அழகினைக்கொண்டு, கடிகமழ்ந்து-புதுமை அமைந்து, திங்களொடும் பகைத்தமையால்-(தன்னொளி முதலியவற்றால்) சந்திரனோடு பகை கொண்டமையால் எனவும்,

தாமரைக்கு : திருமேவி-திருமகள் தன்னிடம் பொருந்தப் பெற்று, கடி கமழ்ந்து-வாசனை வீசி, திங்களொடும் பகைத்தமையால்-சந்திரனோடு பகை கொண்டமையால் எனவும் பொருள் கொள்க.

'நின் ஒளி முகம் உரு மேவுந் தாமரையோடு ஒக்கும்,' என இயைக்க.

20. துணிவுவமை

பக்கம்-225. 'திங்க ளனையதால்' என்னுஞ் செய்யுள்

('திங்கள் அனையது திங்களை அஞ்சுவிக்கும் தங்கு செயல் தாமரைக்கண் உண்டு என்னுங் கருத்தால் உணர்ந்து செங்கண் கருங்குழலி வாள் முகமே என்று ஒருங்கு அறியலாகும்,' என இயைக்க.)

திங்கள் அனையது - (இவ்வுரு) சந்திரனைப் போன்றிருக்கின்றது; (ஆனால்) திங்களை அஞ்சுவிக்குந் தங்குசெயல்-சந்திரனை அஞ்சுவித்தல் பொருந்திய செயல், தாமரைக்கண் உண்டு என்னும் கருத்தால்-தாமரை மலரிடத்து உண்டு என்னும் கருத்தினால், உணர்ந்து-(தாமரை மலர்போல் சந்திரனை அஞ்சுவித்தல்இவ்வுருவின்கண் இன்மையை) ஆய்ந்து,செங்கண் கருங்குழலி-செவ்வரியினை உடைய கண்களையும் கரிய கூந்தலினையும் உடையாளுடைய, வாள் முகமே என்று-ஒளியினைஉடைய முகமே என்று, ஒருங்கு அறியலாகும்-நன்கு அறிதலாகும்.

'அஞ்சுவிக்கும்' என்றது 'அஞ்சுவித்தல்' என்னும் பொருளதாய் நின்றது. 'செங்கண்' என்பதில் 'செம்மை' ஈண்டுச் செவ்வரியை உணர்த்தி நின்றது.

'இது, 'திங்கள் அன்று; முகமே,'எனக் காரணம் காட்டித் துணிந்தமையின் துணிவுவமையாயிற்று.

21. உம்மை உவமை

இது தண்டியலங்காரத்தில் 'சமுச்சய உவமை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 225 'செம்மையினாற் செந்தாமரை' என்னுஞ் செய்யுள்.

('நின் முகந்தனக்குச் செந்தாமரை, செம்மையினால் ஒக்கும், தண்மையினாலும் ஒக்கும்' என இயைக்க),

'உன் முகத்துக்குச் செந்தாமரை மலர் செந்நிறத்தினால் ஒப்பதே அன்றிக் குளிர்ந்த தன்மையினாலும் ஒக்கும்' என்க.

இஃது, 'அதனானேயன்றி இதனானும் ஒக்கும்' என்றமையின், உம்மை உவமையாயிற்று என்க.

22. பொருளுவமை

பக்கம்-225. 'தாமரை போலுநின்' என்னுஞ் செய்யுள்.

('நின் வாள்முகம் தாமரை போலும்; நின் கண் இணைகள் நீலோற்பலத்துக்கு நேர்,' என இயைக்க.)

காரணமின்றி உவமையை உரைப்பது பொருளுவமை யாம்.

23. ஒப்புமைக்கூட்ட உவமை

பக்கம்-225. 'மண்ணுடு காத்தற்கு' என்னுஞ் செய்யுள்.

('அநுபமனு' நீ மண்ணுடு காத்தற்கு உறங்காய், வானவர் கோன் விண்ணுடு காத்தற்கு மேல் உறங்கான்; நீ நண்ணு தார் ஆனவரை (த்தடிந்து) கொன்ருய்; அவனுந் தானவரைத் தடிந்து கொன்ருன்,' என இயைக்க,)

இது ஒப்புடைப் பொருள்களைக் கூட்டி உவமைப் பொருள் தோன்றச் சொன்னமையான், ஒப்புமைக்கூட்ட உவமையாயிற்று.

'உபமேயமாகிய சோழனது தன்மையைக் கூறுமிடத்து உபமானமாகிய இந்திரனது தன்மையையுங் கூட்டி ஒக்க உரைத்தமையால் ஒப்புமைக்கூட்ட உவமையாயிற்று,' என்ருர் திரு. சடகோபராமாநுஜாசாரியார். அவர் பதிப்பித்த தண்டி யலங்காரத்தில் ஒப்புமைக்கூட்ட உவமைக்கு அவர் எழுதிய குறிப்புரையை நோக்குக.

'ஒப்புமைக்கூட்ட உவமையாவது, இரண்டு வாக்கியப் பொருளுக்கும் ஓரொப்புமை வெவ்வேறு சொல்லாற் கூறுவது' என்ருர் திரு. தி. ஈ. ஸ்ரீநிவாசராகவாசாரியார். (தண்டியலங்கார ஸாரம்.)

24. அபூத உவமை

பக்கம்-226. 'வலியி னிலைமையான்' என்னுஞ் செய்யுள்.

வலி-(மனத்தைத் தன் வயப்படுத்தி அடக்கும்) வல் லமை, இல்-இல்லாத, நிலைமையான் - இயல்பினை உடையவன், வல்லுருவம்-(மனத்தைத் தம் வயப்படுத்தி அடக்கும்) வல்ல மையை உடையவரது தவவேடத்தை(க்கொண்டு தான் அம் மனம் போனவழியிற் போதல்), பெற்றம்-பசுவானது, புலியின் தோல்-(காவற்காரர் துரத்தாதிருக்கும்படி) புலியினது தோலை, போர்த்து-போர்த்துக்கொண்டு, மேய்ந்தற்று-(பயிரை) மேய்ந் தாற்போலும்.

25. வாக்கியப் பொருளுவமை

பக்கம் - 226 'வெண்ணிலவுந் தண்ணளியும்' என்னுஞ் செய்யுள்.

('அண்ணலது வெண்குடை, வெள் நிலவும் தண் அளியும் மென்மையும் சேரும்,' என இயைக்க.) ஆல்-அசை.

'பழுதி லுவமைப் பலபதஞ் சேர்மொழிப்
பொருளில் விளக்கம் புணர்ப்பது வாக்கியம்.'

என்பது உரையாசிரியர் காட்டிய மேற்கோட் சூத்திரம்.

26. கோவை உவமை

இது தண்டி அலங்காரத்தில் 'மாலை உவமை' என்று கூறப் பட்டிருக்கின்றது.

பக்கம்-226 'வேலொப் பனவெம்' என்னுஞ் செய்யுள்.

('சேயரிக்கண், வேல் ஒப்பன; வெங்கணை ஒப்பன; தடஞ் சேல் ஒப்பன.' என இயைக்க.)

செவ்வரிகளை உடைய கண்கள், வேலை ஒப்பனவாம்; கொடிய கணைகளை ஒப்பனவாம்; குளத்தில் உள்ள சேல் மீன் களை ஒப்பனவாம்.

'மாலை உவமை என்பது ஒரு பொருட்குப் பல உவமை வந்தால் அவை ஒன்றினொன்று இடைவிடாது தொடர்ச்சி யுடையவாகப் புணர்த்துக் கடைக்கட் பொருள் கூட்டி முடிப் பது' எனத் தண்டி அலங்கார உரையிற் கூறியதனை ஈண்டு நோக்குக,

27. ஏது உவமை

பக்கம் - 226 'வீரியத்தால் வெய்யோன்' என்னுஞ் செய்யுள்.

(இவன்) வீரியத்தால் வெய்யோன்; வெகுளியான் ஊழித்தீ; காரியத்தால் சாணக்கியன்' என இயைக்க.)

(இவன்) வீரியத்தால்- (பகைவரை அழிக்கும்) வீரத்தினாலே, வெய்யோன்-(இருளை அழிக்கும்) வெப்பமான கிரணங்களை யுடைய சூரியனைப் போன்றவன்; வெகுளியான்-(எவரையும்

அஞ்சச் செய்யும்) கோபத்தினலே, ஊழித்தீ-(யாவரும் அஞ்சும்படி) யுகாந்த காலத்தில் உண்டாகுந்தீயைப் போன்றவன்; காரியத்தால்-தான் தொடங்கிய (காரியங்களை உபாயங்களினற்) செய்து முடிக்குந் திறத்தினல், சாணக்கியன்-(உபாயங்களிற் சிறந்தவனுகிய) சாணக்கியனைப் போன்றவன்.

28. மயக்க உவமை

பக்கம்-226. 'மதியும்' என்னுஞ் செய்யுள்.

(மீன், பதியில் மதியும் மடந்தை முகனும் அறியாக் கலங்கிய,' என இயைக்க.)

மீன்கள் (தம்மிடமாகிய) நீரில் இருந்தும், சந்திரனுக்கும் மடந்தையின் முகத்திற்கும் வேற்றுமை அறியாமல் கலங்கின.

29. பலவியலுவமை

இது தண்டியலங்காரத்தில் 'பல பொருளுவமை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-227. 'காவி' என்னுஞ் செய்யுள்.

('நின் வாள் விழிக்குக் காவி, கணை, செங்கயல், கதிர்வாள் இவை ஒப்புரைக்கலாம்,' என இயைக்க.)

இவை-ஆகிய இவற்றை

30. விக்கிரிய உவமை

பக்கம்-227. 'சந்திரனிற் றேன்றிற்று' என்னும் செய்யுள்.

('தண் தாமரையின் வந்தது போலும் நின் வாள் முகம், சந்திரனில் தோன்றிற்றுப் போலும்,' என இயைக்க.)

குளிர்ந்த தாமரை மலரினின்று வந்தது போன்ற உன்னுடைய ஒளி பொருந்திய முகம், சந்திரனிடத்தினின்று உண்டானது போலும்.

'இத்துணைப் பொருவில்வந் தெதிர்ந்தது பொருளென
அத்துணை மொழிவரி னதுவிக் கிரியம்.'

இஃது உரையாசிரியராற் காட்டப்பட்ட மேற்கோட் சூத்திரம்.

31. சந்தான உவமை

பக்கம்-227. 'கோபத்தின் மிக்கு' என்னுஞ் செய்யுள்.

அணிவாய்-அழகிய வாயை உடைய, அணி மயிலே-அழகிய மயில் போன்ற தோழியே, கோபத்தின் மிக்கு -கோபத்தில் மிகுந்து (மிக்க கோபத்தைக் கொண்டு), குவிகோல்-வளைந்த மரமாகிய வில்லிலே, அம்பு எய்துவிடின்-அம்பை(த்தொடுத்து) எய்துவிட்டால், ஆபத்தைச் செய்யும்-ஆபத்தை உண்டாக்கும், அனங்கன் போல்-மன்மதனைப் போல, கோபத்தின் மிக்கு-இந்திரகோபத்தினும் செந்நிறம் மிக, குவி கோலம் பெய்துவிடின்-மிக்க தொய்யிலை எழுதிவிட்டால், ஆபத்தைச் செய்யும்-(அக் கோலம் எனக்கு) ஆபத்தை உண்டாக்கும்,

இந்நூல் உரையாசிரியர் ஈண்டுச் 'சந்தான உவமையாவது, உவமையும் பொருளுந் தொடர்ந்து சொற்சலிப்பது' என்றதை நன்கு நோக்குக. இவ்வுதாரணச் செய்யுட்கண் அங்ஙனம் சொற்கள் தொடர்ந்து சலித்தலைக் காண்க.

தண்டியலங்காரத்தில் சந்தான உவமைக்குக் கூறிய லக்கணங்களையும் நோக்குக.

புகழ்தலுவமை

பக்கம்-228. 'மலர்காணின்' என்னுஞ் செய்யுள்.

('நெஞ்சே, இவள் கண் பலர் காணும் பூ ஒக்கும் என்று மலர் காணின் மையாத்தி,' என இயைக்க.)

நெஞ்சே-மனமே, இவள் கண்-(யானே காணப்பெற்ற) இவள் கண்களை, பலர் காணும்-பலராலுங்காணப்படும், பூ ஒக்கும் என்று-மலர்கள் ஒக்கும் என்று, மலர் காணின்-(தாமரை குவளை நீல முதலிய) மலர்களைக் கண்டால், மையாத்தி-மயங்கா நின்றாய் (உன்னறிவு இருந்தவாறு என்)!

'அம்மலர்கள் இவள் கண்களுக்கு ஒப்பாகா,' என்பது கருத்து. இதிற் 'பலராற் காணப்படும்' என்றது புகழ்தலாம் என்க. இது தலைமகன் இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது.

பழித்தலுவமை

பக்கம்-228. 'அறைபறை' என்னுஞ் செய்யுள்.

('தாம் கேட்ட மறை உய்த்துப் பிறர்க்கு உரைக்கலான், கயவர் அறை பறை அன்னர்,' என இயைக்க.)

தாம் கேட்ட-, மறை-இரகசியங்களை, உய்த்து-(இடந்தோறும்) தாங்கிக்கொண்டு சென்று, பிறர்க்கு-, உரைக்கலான்-சொல்லுதலால், கயவர்-கீழ் மக்கள், அறைபறை அன்னர்-அடிக்கப்படும் பறையினை ஒப்பாவர்.

இதில் 'அறை பறை' என்றது பழித்தலாம் என்க.

பண்புவமை

பக்கம்-228. 'பாலொடு' என்னுஞ் செய்யுள்.

('பணி மொழி வால் எயிறு ஊறிய நீர் பாலோடு தேன் கலந்தற்று,' என இயைக்க.)

பணிமொழி-இம்மெல்லிய சொல்லினை உடையவளது, வால் எயிறு-தூய்மையாகிய பல்லில், ஊறிய நீர்-ஊறிய நீரானது, பாலொடு தேன் கலந்தற்று-பாலுடனே தேனைக் கலந்த கலவை போலும்.

இதிற் பண்பாவது சுவைப்பண்பாம் என்க.

பயனுவமை

பக்கம்-228. 'ஊருணி' என்னுஞ் செய்யுள்.

('உலகு அவாம் பேரறிவாளன் திரு, ஊருணி நீர் நிறைந்தற்று' என இயைக்க.)

உலகு-உலக நடையை, அவாம் - விரும்பிச் செய்யும், பேரறிவாளன் திரு-பெரிய அறிவினை உடையவனது செல்வமானது, ஊருணி - ஊரார் தண்ணீர் உண்ணுங்குளம், நீர் நிறைந்தற்று-நீர் நிறைந்தாற்போலும்.

பேரறிவாளன் திருவும் நீர்நிறைந்த ஊருணியும் எல்லாருக்கும் பயன்படுதலின் இது பயனுவமையாயிற்று.

வடிவு உவமை

பக்கம்-228. 'மலரன்ன' என்னுஞ் செய்யுள்.

மலர் அன்ன கண்ணாள்-மலர் போலும் கண்களை உடையவளது, அருமை- (அடைதற்கு) அருமையை, அறியாது-அறியாமல் (அவளை எளியவளாக்கி), இவ்வூர்-, அலர் - (அவளோடு) அலர் கூறலை, எமக்கு-, ஈந்தது-உபகரித்தது.

இஃது இரவுக்குறி தவறிய மறு நாள் வந்த தலைமகனை நோக்கித் தோழி அலர் கூறி வரைவு கடாவியவிடத்து அவளுக்கு அவன் சொல்லியது.

ஊர் அலர் கூறுதல் தலைமகளைத் தானடைதற்குப் பற்றுக் கோடாயிருத்தலின், தலைமகன், 'இவ்வூர் எமக்கு அலர் ஈந்தது,' என்றான் என்பது.

கண்ணுக்கு மலர் வடிவான் உவமையாதலின், இது வடிவு உவமையாயிற்று.

ஒப்பிலுவமை

இது தண்டியலங்காரத்தில் 'பொது நீங்குவமை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-229. 'செங்குவளை' என்னுஞ் செய்யுள்.

('தண் செங்குவளை மலரே நாறுந்தமனியப் பூங்கோதாய்' நின் கருநிறத்த சேயரிக்கண்ணைச் செங்குவளை போலா; ஆங்கு அம் குவளைக் காரிதழும் ஒவ்வா; நின்கண் மலரேபோலும் உன் கண்,' என இயைக்க.)

தண் செங்குவளை மலரே நாறும் தமனியப் பூங்கோதாய்-குளிர்ந்த செங்குவளை மலரே மணம் வீசப்பெற்ற பொன்னாலாகிய அணிகளை அணிந்த அழகிய கூந்தலையுடைய நல்லாய், (நின்) கரு நிறத்த சேயரிக்கண் - உன்னுடைய (கருவிழியாகிய) கருநிறத்தினையும் செவ்வரியினையும் உடைய கண்களை, செங்குவளை போலா-(செந்நிறத்தினை மாத்திரம் உடைய) செங்குவளை மலர்கள் ஒப்பாகா; ஆங்கு-அவற்றைப் போலவே, அம் குவளை-(கருநிறத்தினை மாத்திரம் உடைய) அழகிய கருங்குவளை மலர்களும், ஒவ்வா- ஒப்பாகா; (ஆதலின்,) உன் கண்-

உன்னுடைய கண்கள், நின் கண் மலரே போலும்-உன்னுடைய கண் மலர்களையே ஒப்பாவனவாம்.

7. இழிவுயர்புப் புகழ்ச்சி உவமை

பக்கம்-229. 'உருவுகண்டு' என்னுஞ் செய்யுள்.

(உலகம்) 'உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து; (ஆகலான்,) உருவு கண்டு எள்ளாமை வேண்டும்,' என இயைக்க.

(உலகம்) 'உருள்-உருளாநின்ற, பெருந்தேர்க்கு-பெரிய தேர்க்கு, அச்சு ஆணி அன்னார்-அச்சினிடத்து ஆணி போலத் தொழிலினிடத்து வலிமையுடையாரை, உடைத்து-உடையது' (அதனால்,) உருவு கண்டு-(அவரை)வடிவினது சிறுமை நோக்கி, எள்ளாமை வேண்டும்-இகழ்தலொழிக.

தலைப்பெயன்மரபிற் சார்ந்து வரும் உவமை

பக்கம்-229. 'தாமருவு கின்றார்' என்னுஞ் செய்யுள்.

('காமரு பூந்தாது உதிர்க்குங் காரெருமை அருகே தாம் இருந்து பொன் உரை கல் போல் தோன்றும் பூம் புனல் நீர்நாடு என்பேர் உரைகற்பார்போல் இருந்து இப்பைங்கிளியார் தாம் மருவுகின்றார்,' என இயைக்க.)

சோலைகளால் பூந்தாதுக்கள் தம்மீது உதிர்க்கப்பெற்ற கரிய எருமைகள் அருகிருந்து பொன்னுரைக்கப் பெற்ற கல்லைப்போலத் தோன்றும் பூம்புனல் நாட்டின்கண் என் பேருரை கற்பார்போல (என்பால்) இருந்து மருவுகின்றார்.

'தாம்' என்பன மூன்றும் அசைகள்.

கூற்றுவமை

பக்கம் - 230. 'செங்கோல னெங்கோன்' என்னுஞ் செய்யுள்.

இதன் பொருளை ஆய்ந்துணர்க.

உறழ்ந்து வரலுவமை

பக்கம்-230 'அன்ன நடை பயின்றாய்' என்னுஞ் செய்யுள்.

('ஆயிழை, நீ அன்ன நடை பயின்றாய; அனனமும் நின் நடையே பயின்று நின் ஒக்கும்; நின்னை உழைக்கண்ணார் மான் பிணை ஒப்பார்; மழைக்கண்ணாய் நின் போன்ற மான் இது என்ன,' என இயைக்க.)

இதில் மூன்றாம் அடியில் 'ஒப்பார்' என்பது 'ஒப்பாய்' என்றிருப்பின் பொருள் பொருந்தும். ஒப்பார் என்னும் பாடத்துக்குப் பொருள் பொருந்தவில்லை.

ஒருவழி ஒப்பின் ஒருபொருள் மொழிதலுவமை

பக்கம்-230 'எழிறரு ஞாயிற்று' என்னுஞ் செய்யுள்

('தார் வேந்தன் சேந்தன் பாட்டு, எழில் தரு ஞாயிற்று எழில் போல் நிறைந்து பொழிதரு வான் திங்களே போல முழு உலகும் தன் புகழினால் நிறைந்த; இனிப் புகழ்தல் ஆவது என்,' என இயைக்க.)

(வெற்றி) மாலையை அணிந்த வேந்தனாகிய சேந்தன் பாட்டுக்கள், (உலகத்துப் பொருள்களுக்கெல்லாம்) அழகைத் தரும் சூரியனது அழகைப் போல (சொற்பொருள்களின்) அழகு நிறைந்து, (குளிர்ச்சியாகிய நிலவைச்) சொரியும் வானத் தின்கண்ணதாகிய சந்திரனுடைய குளிர்ந்த கதிர்களைப் போலத் தம்முடைய புகழினால் உலகமுழுதும் நிறைந்திருக் கின்றன. அவன் பாட்டைப் புகழ்தலாவது இதன்மேல் யாது ளது?

'தன்' என்பது பன்மையில் ஒருமை வந்த வழுவமைதி. இச்செய்யுளுக்கு வேறு பொருள் கொள்ளக்கூடுமாயின் கொள்க.

முதல் சினை ஒப்புவமை

பக்கம்-230. 'அன்னமே யென்ன' என்னுஞ் செய்யுள.

('எங்கோமான் வளவஞ்சி மகள், அன்னமே (ஆம்) என்ன, அணிமயிலே ஆம் என்ன, மன்னு மடமான்பிணை (ஆம்) என்ன, மின்னும் இள்வஞ்சி (ஆம்) என்ன வரும்' என இயைக்க.)

இதன் பொருள் வெளிப்படை. இதில் அன்னம் என்பதற்கு அதன் நடையையும், மயில் என்பதற்கு அதன் சாயலையும், மான் பிணை என்பதற்கு அதன் கண்களையும் கொண்டு, 'எங்கோமான் வளவஞ்சி மன்னன் மகள், நடையால் அன்ன நடையையும், சாயலால் மயிலின் சாயலையும், கண்களால் மானின் கண்களையும், மேனியால் வஞ்சிக்கொடியையும் ஒக்க வரும்,' என இச்செய்யுட்குப் பொருள் கொள்க.

இதில் அன்னம், மயில், மான் பிணை என்னும் முதற் பொருள்களைக் கூறி, நடை, சாயல், கண்கள் என்னும் அவற்றின் சினைகளை உவமையாகக் கோடலின், இது முதல் சினை ஒப்புவமை எனப்பட்டது போலும். !

ஒப்பு மறைவுவமை

பக்கம்-230. 'காலம் வரைந்திடும்' என்னுஞ் செய்யுள். இச்செய்யுளின் பொருளை ஆய்ந்துகொள்க.

கால வார்த்தை

பக்கம்-231. 'வேலை மடற்றாழை' என்னுஞ் செய்யுள்.

('மாலையில் வேலை மடல்தாழையின் வெள் தோட்டிடைக் கிடந்து துயின்ற மணி வண்டு, காலையில் (மலர்களினின்று) துளிக்கின்ற நறவத்தையும், (மலர்களின்) தாதுக்களையும் எதிரும்படி காமர்த் தெளி நிற வெங்கதிரோனது தேர் தோன்றிற்று,' என இயைக்க.

இட வார்த்தை

பக்கம் - 231. 'மழலைக் கனிவாய்' என்னும் செய்யுள்.

('மணி வண்டு அருகு (இருந்து) வருடிப் பாராட்டவும், செங்நெற்கதிர் என்னுங் கவரி வீசவும், அரவிந்த அமளியிற் (அரவிந்தமாகிய அமளியிற்) சேர்ந்த இள அன்னம், கண்படுக்கும் பழனக் குவளை நீர் நாட, பாவை வார்த்தை பகர்வுற்றாள் என இயைக்க,)

இதன் பொருள் வெளிப்படை.

அந்நிய உவமை நிலை

பக்கம் - 231. 'மதிபோன் மறுவில்லை' என்னுஞ் செய்யுளும், 'கற்பகம்போ லோக்கும்' என்னுஞ் செய்யுளும்.

இவற்றின் பொருளை ஆய்ந்து கொள்க.

எழுத்து வழி நிலை

பக்கம்-232. 'தவளை யுகளும்' என்னுஞ் செய்யுள்.

('தவளை உகளுந் தடம் புனல் நீர் நாடன் இவளை (இவளுடைய) வளை கரந்தான் என்றால், அத்தவளத் தனிக்காவல் வெள் குடையான் தண் அளியும் அஃதே ; எமக்கு இனிக் காவலாமோ?' என இயைக்க.)

இதில் ' இவளை 'எனவும் 'வளை' எனவும் வந்தவற்றை நோக்குக.

மொழி வழி நிலை

பக்கம் - 232. 'மாதராள் மாதர்' என்னுஞ் செய்யுள்.

இதன்கண் 'மாதரான்' என்றிருப்பதை 'மாதராள்' எனத் திருத்திக்கொள்க.

('மாதராள் மாதர் நோக்கு உண்ட மடநெஞ்சம், காதலார் காதன்மை காணாதே, ஏதிலார் வன்சொல்லான் வன்பொறை சொல்லில் எழில் மான் நோக்கி இன் சொல்லால் இங்கு இன்புறுமோ ?' என இயைக்க.)

இதில் முதலடியில் 'மாதராள்' என்வும், 'மாதர்' எனவும்; இரண்டாம் அடியில் 'காதலார்' எனவும், 'காதல்' எனவும் சொற்கள் அடுத்து வந்திருத்தலை நோக்குக.

உயர்பு

பக்கம் - 232. 'விண்ணிடை யிழிந்து' என்னுஞ் செய்யுள்.

இச்செய்யுள் சூளாமணியில் அடியில் வருமாறு இருக்கின்றது.

'விண்ணிடை யிழிந்து வந்த விண்ணவர் கிழவ னைப்பாய்
மண்ணிடை யென்னை யிங்கோர் பொருளென மதித்து வந்த
தெண்ணிடை யுணரு மாந்தர்க் கிடைதெரி வரிய
தொன்றால்
கண்ணிடை யுமிழுஞ் செந்தீக் கடாக்களிற் றழுவ வென்றான்.'

இதுவே சரியான பாடமாகும்.

('கண்ணிடை உமிழுஞ் செந்தீக் கடாக்களிற்றுழவ! விண்ணிடை இழிந்து வந்த விண்ணவர் கிழவன் ஒப்பாய்! மண்ணிடை என்னை இங்கோர் பொருள் என மதித்து வந்தது எண்ணிடை உணரும் மாந்தர்க்கிடை தெரிவரியது ஒன்று என்முன்' என இயைக்க.) ஆல் - அசை.

இதன் பொருள் வெளிப்படை.

அருங்கல உயர்வு

பக்கம்-232. 'மன்ன ரொளிமுடிமேல்' என்னுஞ் செய்யுள்.

('அவிர் ஒள் கொடி மலர்வேய் நீள்முடி எங்கோ, மன்னர் ஒளிமுடிமேல் மாணிக்கம் கால் சாய்த்து மின்னி விரிந்த வெயில் கதிர்கள் துன்னி அடிமலர்மேல் சென்று எறிப்ப நின்றான்' என இயைக்க.)

'விளங்கும் ஒளியினை உடைய கொடியையும், வழிவழியின் நெடிது காலமாக வரும் முடியினையும் உடைய எம்மரசன், (மற்ற) மன்னர்களின் ஒளியினையுடைய முடியின்கண் (நடுவில்) அமைந்த மாணிக்கங்கள், பல கால்கள் விட்டு மின்னிப் பரவிய சூரியனுடைய கதிர்கள் போன்ற கதிர்களைக் கொண்டு தன்னுடைய அடிகளாகிய மலர்மீது வந்து பொருந்தி ஒளிவீசும்படி நின்றான்' என்க.)

உவமை உருவகம்

பக்கம்-232. 'செந்தா மரையாள்' என்னுஞ் செய்யுள்.

('இலை ஆர் கொந்து அம் தாது உறைக்கும் இன்பொதியில் கோமான் மலை ஆரம் மலைத்த மார்பு, மங்கையர்க்குச் செந்தாமரையாள் அமர்ந்து ஆடும் செய்குன்றம்; மந்தாரப் பூஞ்சோலை' என இயைக்க.)

இலைகளுக்கு இடையிடையே அமைந்த பூங்கொத்துக்களில் பொருந்திய அழகிய மகரந்தப் பொடிகள் மிகுதியும் (சிந்தப்பெற்று) இருக்கும் இனிய பொதிய மலையினை உடைய அரசனுடைய (அப்பொதிய) மலையின்கண் உண்டாகுஞ் சந்தனக் குழம்பு பூசப்பெற்ற மார்பு, பெண்களுக்குச் செந்தாமரை

யின்கண் வீற்றிருக்கும் வெற்றித்திரு பொருந்தி விளையாடும் செய்குன்றமாகும்; மந்தாரப் பூஞ்சோலையுமாகும்

ஒற்றுமை மொழிதல்

பக்கம்-233. 'அருங்கல முலகின்' என்னுஞ் செய்யுள்.

இதில் அடியிற் பெரிய எழுத்திற் காட்டப்பட்ட சொற்கள் பாடபேதமுள்ளவை,

'அருங்கல முலகின் மிக்க வரசர்க்கே யுரிய வன்றிப்
பெருங்கல முடைய ரேனும் பிறர்க்கவை **பேணலாகா**
இருங்கலி முழவுத் தோளாய் எரிமணிப் பலகை மேலோர்
நெருங்**கொளி** யுருவங் **கொண்டு** நின்னையா னினைந்துவந்தேன்.

உருவக அணியின் வகை

1. தெற்றுருவகம்

பக்கம்-234. 'தாமரையைக் குவியாது' என்னுஞ் செய்யுள்.

('உன் திருமுகமாம் திங்கள், தாமரையைக் குவியாது; தாள் குமுதம் மலர்த்தாது; என் உயிர்க்குத் தீமை செயும்' என இயைக்க.)

இதன் பொருள் வெளிப்படை.

2. தொகை உருவகம்

பக்கம்-234 'பிறவிப் பெருங்கடல்' என்னுஞ் செய்யுள்.

('இறைவன் அடி (ஆகிய மரக்கலத்தைச் சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; (அதனைச் சேராதார்) நீந்தார்' என இயைக்க.)

இறைவன் அடி—இறைவன் திருவடியாகிய மரக்கலத்தைச் சேர்ந்தவர்கள், பிறவிப் பெருங்கடல் - பிறவியாகிய பெரிய கடலை, நீந்துவர் - கடப்பார்கள், சேராதார் -(அதனைச்) சேராதவர்கள், நீந்தார் - கடக்க மாட்டாதவராய் அதனுள் அழுந்துவார்கள்.

இதனுள் "பிறவிப் பெருங்கடல்' என்றதில் 'ஆகிய' என்னும் உருபு தொக்கு நிற்றலின் இது தொகை உருவுமாகியிற்று. 'என்னும்' என்பதும் உருவக உருபாகும்.

3. அவ்விய உருவகம்

பக்கம்-234 'காலன் மதத்தால்' என்னுஞ் செய்யுள்.

காலன் மதத்தால்-காலனுடைய வலிமையினாலே, சிவந்த கபோலத்து அழகு கோலி - சிவந்த கன்னத்தினது அழகை அமைத்து, குனித்த புருவம்-வளைவாக அமைத்த புருவத்தினை யும், கொடி இடையாய்-கொடிபோன்ற இடையையும் உடைய பெண்ணே, காமன் - மன்மதன், சீலம் மலி-அழகு மிக்க, நின் முகம் என்னும் திங்களால் - உன்னுடைய முகமாகிய சந்திர னால், நால் உலகும் - நான்கு நிலத்துள்ள ஆடவரையும், நலி யக் கெடுக்கலுற்றான் - வருந்தும்படி அழிக்கின்றான்.

'நால் உலகம்' என்றது ஈண்டு 'நானிலம்' என்னும் பொரு ளதாய் நின்றது.

4. ஏது உருவகம்

பக்கம்-234 'ஆழ முடைமையினால்' என்னுஞ் செய்யுள்.

('செந்தாமரைக் கண் பைந்தெரியல் மாயோன் பதி, ஆழம் உடைமையினால் ஆழியாம்; அந்தரத்து வாழ நிமிர்தலான் மந் தரமாம்; ஏழுலகும் தந்து அளிக்கும் வண்ணத்தால் தாயாம்,' என இயைக்க.)

செந்தாமரைக் கண் - செந்தாமரை மலர் போன்ற கண் களையும், பைந்தெரியல் - பசுமையாகிய மாலைகளையும் உடைய, மாயோன் பதி - திருமாலின் பதியாகிய திருப்பாற்கடல், ஆழம் உடைமையினால் - ஆழம் உடையதாயிருப்பதனால், ஆழியாம்- கடல் ஆகும்; அந்தரத்து வாழ நிமிர்தலான்-(தன் அலைகளால்) வானத்திற் பொருந்த நிமிர்தலால், மந்தரமாம் - மந்தர மலை யாகும்; ஏழுலகும் தந்து அளிக்கும் வண்ணத்தால் - ஏழுலகங் களையும் படைத்துக் காக்கின்ற தன்மையினால், தாய் ஆம் - அன்னையாகும்.

இச்செய்யுளுக்கு வேறு பொருள் கொள்ளக்கூடுமெனிற் கொள்க.

5. பண்புருவகம்

பக்கம்-235. 'தலையிலமர் கங்கை' என்னுஞ் செய்யுள்.

('தலையில் அமர் கங்கைத் துகில் உடையான், தங்கு ஐச் சிலையின் அமர் செங்கண் மால் பாகன், வானவர் எல்லாம் மதிக்கத் தான் தனியே வந்து, நிலையின் அமர் தானவரைக் கொன்று விழவு கெடுத்தான்,' என இயைக்க.)

தங்கு ஐச்சிலையின் அமர் செங்கண் மால் - (தன்கையிலே) தங்கிய அழகிய (மேருமலையாகிய) வில்லின்கண் (பாணமாக) அமர்ந்த செங்கண்மால். 'தன்கைச் சிலை' என்பது 'தங்கைச் சிலை' எனப் பாடம் பிறழ்ந்தது போலும்!

6. விரியுருவகம்

பக்கம்-235. 'பிறப்பென்னும் பேதைமை' என்னுஞ் செய்யுள்.

பிறப்பு என்னும் - பிறப்பிற்கு முதற்காரணமாகிய, பேதைமை - அஞ்ஞானமானது, நீங்க - கெட, சிறப்பு என்னும்-முத்திக்கு நிமித்த காரணமாகிய, செம்பொருள் - செவ்விய பொருளை, காண்பது - காண்பதே, அறிவு-(ஒருவனுக்கு) மெய்யுணர்வாம்.

7. உவமை உருவகம்

பக்கம்-235. 'மதர்த்துச் சிவந்த' என்னுஞ் செய்யுள்.

('பாரின் மதர்த்துச் சிவந்த நின் வாள் முகத் திங்கள் பதத்தில் எழும் செம்மை வளம் என் உடல் வெந்து மத ராகம் மிகுக்க ஒளி மாறுய்த் தந்து வதைத்து மிகைத்து இயலும்,' என இயைக்க)

பாரின் அழகுற்றுச் சிவந்த உன்னுடைய ஒளியினை உடைய முகமாகிய சந்திரன் என்னும் இடத்தினின்று எழும் செவ்விய அழகானது என் உடலை வேகுவித்து, (எனக்குக்) காம நோயை மிகுவிக்கும்படி திங்களோடு மாறுகிய ஒளியைத் தந்து, வதைத்துப் பெருமிதமுற்றுப் பொருந்தியிருக்கின்றது.

'வெந்து' என்பது 'வேகுவித்து' என்னும் பிறவினைப் பொருளது. தான் அசை.

இவ்வுருவகத்திற்கு இலக்கணமாக உரையாசிரியர் காட்டிய மேற்கோட்சூத்திரத்தை அடியிற்காண்க:

'ஒண்டரு பொருளை யுருவக மாக்குதல்
உண்டேனி னுவமை யுருவக மாகும்.'

உவமை யுருவகத்திற்குத் தண்டியலங்காரத்தில் 38-ஆம் சூத்திரத்தின் அடியிற் காட்டிய உதாரணச் செய்யுளை அடியிற்காண்க:

'மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய மதியமே யொக்கு—மதிதளர்வேன்
வெம்மை தணிய மதராக மேமிகுக்கும்
செம்மை யொளியாற் றிகழ்ந்து.'

8. சிலேடையுருவகம்

பக்கம்-235. 'சோதி மேவிய' என்னுஞ் செய்யுள்.

இது திங்களுக்கும் மாதர் முகத்துக்குஞ் சிலேடை.

மாதர் முகத்துக்கு: சோதி மேவிய - ஒளி பொருந்திய, கரத்தொடு தோன்றிய - கைகளுடன் தோன்றிய (மாதராயினோர் வாள்முகம்) எனவும்,

திங்களுக்கு: சோதி மேவிய - சூரியனுடைய கிரணங்கள் போன்ற வெப்பமாகிய, கரத்தொடு தோன்றிய - கிரணங்களோடு தோன்றிய (திங்கள்) எனவும் பொருள் கொள்க.

மாதர் வாள் முகமாகிய திங்களே - நங்கையரின் ஒளியினையுடைய முகமாகிய சந்திரனே.

9. சகல உருவகம்

பக்கம்-235. 'பெண்ணைப் பறவை' என்னுஞ் செய்யுள்.

-'அந்தி என்னும் நின்ற யோகினி, மதி புலியூர் அண்ணல் சிவன் கொன்றை அம் தார் நினைந்த என் ஆருயிரை உண்ண, பெண்ணைப் பறவைக் குரல் முழக்காக(க்கொண்டு) பிறையாகிய வாளை உருவி, வண்ணம் கருங்கடல் வட்டத்தை ஏந்தித் திரிதரும்,' என இயைக்க.)

மாலைப்பொழுதாகிய யோகினி யாவராலும் மதிக்கப்படும் புலியூரின்கண் வீற்றிருக்கும் மேன்மையை உடைய சிவபிரானது அழகிய கொன்றை மலர் மாலையை விரும்பிய என்னுடைய அரிய உயிரைப் போக்கும்பொருட்டுப் பனை மரத்தின்கண் உறையும் அன்றிற்பறவையின் குரல் ஒலியாகிய முரசின் ஒலியைக்கொண்டு, பிறைச்சந்திரனாகிய வாளையுருவி, கரிய நிறத்தினைஉடைய கடலாகிய கேடயத்தை ஏந்தித் திரிகின்றாள்.

பெண்ணைப் பறவை என்றது, பனை மரத்தில் உறைவதாகிய அன்றிற் பறவையை. அன்றில் பனை மரத்தில் உறைவது என்பதனைச் சடகோபரந்தாதியில்,

'தினையோன் றியகுற்ற மற்றுணர்ந் தோர்மகி ழின்றிறத்தின்
மனையோன் றியகோடி யாடுயின் றுலுந்தன் வாயடங்கா
வினையோன் றியவன்றி லுக்கிடங் காட்ட விரிதலைய
பனையன் றியுமுள தோதமி யேற்குப் பழம்பகையே.'

என வரும் எண்பத்தொன்பதாம் கவியாலறிக.

10. இயைபுருவகம்

பக்கம்-236. 'காமக் கடும்புனல்' என்னும் செய்யுள்.

நாணொடு நல் ஆண்மை என்னும் புணை-நாணமும் நல் ஆண்மையுமாகிய புணைகளை (என்னிற்பிரித்து), காமக் கடும்புனல் - காமமாகிய கடிய புனல், உய்க்கும் - கொண்டு போகாநின்றது.

இது, 'நாணும் நல்லாண்மையும் காம வெள்ளத்திற்குப் புணையாகலின், அக்காம வெள்ளத்தினால் அவை நீங்குவன அல்லவே!' என்ற தோழிக்குத் தலைவன் சொல்லியது.

இதில், நாணும் நல்லாண்மையும் தம்முள் இயைபுடையன ஆகலின், இஃது இயைபுருவகமாயிற்று.

இதில் 'காமக் கடும்புனல்' என உருபு தொக்கும், 'நாணொடு நல்லாண்மை **என்னும்** புணை' என உருபு விரிந்தும் வந்தமையின் இது தொகைவிரியுருவகத்திற்கும் உதாரணமாம் எனக் கொள்க.

இயைபுருவகத்திற்குத் தண்டியலங்காரத்தில் காட்டப்பட்ட உதாரணச் செய்யுளை அடியிற்காண்க:

'சேவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரும்
மைவா ரளக மதுகரமும்—செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
துடைத்தாரே யன்றோ துயர்.'

'இதனுள், தளிரும், முகிழும், மலரும், மதுகரமும் தம்முளியையுடைமையின் அப்பெயர்த்தாயிற்று,' என்றார் அதன் உரையாசிரியர்.

11. முற்றுருவகம்

பக்கம்-236. 'விழியே களிவண்டு' என்னுஞ் செய்யுள்.

('என் உள்ளத்தடத்துப் பொழிகின்ற தேமருவு கோதைத் தெரிவை விழியே களிவண்டு; மெல் நகையே தாது; மொழியே முருகு உலாந்தேறல்; திருமுகமே தாமரை,' என இயைக்க.)

பொழிகின்ற தே மருவு கோதைத் தெரிவை திருமுகமே-சொரிகின்ற தேன் பொருந்திய கூந்தலை உடைய தெரிவையின் திருமுகமே.

'தேன்மொழி...மென்மை, மேவி னிறுதி அழிவும்' என்றதனால், 'தேன் மருவு' என்பது ஈறு கெட்டுத் 'தேமருவு' என்றாயிற்று.

12. அவயவியுருவகம்

பக்கம்-236. 'மாதராய் நின்றன்' என்னுஞ் செய்யுள்.

நல்லாய், உன்னுடைய முகமாகிய செந்தாமரை மலருள் வளைந்துள்ள குற்றம் அற்ற புருவமும், வளைவாகிய நெற்றியும், தீதில் உருக்குறி ஒப்பும், திரும்பி வந்து ஓடி இமைக்கின்ற செவ்வரி பரவிய கண்களும் எனக்குக் காமமாகிய நோயை உண்டாக்கின.

கூன் நுதல்-வளைவாகிய நெற்றி; 'தீதில் உருக்குறி ஒப்பும்' என்றதற்கு, குற்றமில்லாத புருவமும், நெற்றியுமாகிய அவ்வுருவங்களுக்குக் குறிக்கப்பட்ட உவமையாகிய வில்லும் பிறைச் சந்திரனும் என்பது பொருள்போலும்! (இதில் வில் என்றது மன்மதன் வில் என்று கொள்க. என்னெனின், காமநோய் செய்வது அவ்வில்லேயாகலின் என்க.)

இதில், முகம் அவயவி யாகும். புருவம், நுதல், கண் என்பன அவயவங்களாகும். இவற்றுள் அவயவியாகிய முகத்தைச் செந்தாமரை மலராக உருவகஞ் செய்து, புருவமுதலிய அவயவங்களை உருவகஞ் செய்யாமையின் இஃது அவ்யவி உருவகமாயிற்று.

இதற்குத் தண்டி அலங்காரத்திற் காட்டப்பட்ட உதாரணச் செய்யுளையும் ஈண்டு நோக்குக.

13. உறுப்புருவகம்

பக்கம்-237. 'புருவச் சிலை' என்னுஞ் செய்யுள்.

("அருவி பொரும் கல் சிலம்பில் ஒருவர், புனை அல்குல்தேர் மேல் மருங்குல் கொடி நுடங்க வந்து, புருவச்சிலை குனித்துக் கண் அம்பு என் உள்ளம் உருவத் துரந்தார்,' என இயைக்க.)

அருவியினால் மோதப்படும் கற்களை உடைய மலையின் கண் ஒருவர், அழகு செய்யப்பட்ட அல்குலாகிய தேரின்மேல் மருங்குலாகிய கொடியானது துவள வந்து, புருவமாகிய வில்லை வளைத்துக் கண்ணாகிய அம்பை (த்தொடுத்து) என் மனத்திற் புதையும்படி செலுத்தினார்.

இது, 'நின் வாட்டத்திற்குக் காரணம் யாது?' என்று வினவிய பாங்கற்குத் தலைவன் கூறியதாகும்.

இதில் அவயவியை உருவகஞ் செய்யாது ஒருவர் எனக் கூறிப் புருவம், கண், அல்குல், மருங்குல் என்னும் உறுப்புக்களை முறையே வில்லாகவும், அம்பாகவும், தேராகவும், கொடியாகவும் உருவகஞ் செய்தமையின், இஃது 'உறுப்புருவகம்' ஆயிற்று.

தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

14. தத்துவாபன உருவகம்

இது தண்டியலங்காரத்தில் 'அவநுதி உருவகம்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-237. 'பொங்களக மல்ல,' என்னுஞ் செய்யுள்.

('மங்கை, இவை நின் பொங்கு அளகம் அல்ல, புயலே; இவையும் இணைக் கொங்கை அல்ல, கோங்கு அரும்பே; இவை மைஅரிக்கண் அல்ல, மதர் வண்டே; இவையும் கை அல்ல, காந்தள் மலரே,' என இயைக்க.)

பொங்கு அளகம் - பொலிவுற்ற கூந்தல், புயல் - மேகம், கோங்கு அரும்பு - கோங்க மரத்தினது அரும்பு, மை அரிக்கண்-மையுண்ட செவ்வரி பரந்துள்ள கண்கள், மதர் வண்டு-களிப்பினையுடைய வண்டு.

தண்டியலங்காரத்தினும் இச்செய்யுளே இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

15. இயைபிலியுருவகம்

பக்கம்-237. 'தேனக் கலர்கொன்றை' என்னுஞ் செய்யுள்.

('புழை ஆர் தடக்கைப் பொருப்பு, தேன் நக்கு அலர் கொன்றையே பொன் ஆக, செஞ்சடையே கூன் நல் பவளக் கொடி ஆக, தானமே மழை ஆக, கோடே மதி ஆகத் தோன்றும்,' என இயைக்க.)

'செஞ்சடையே' என்பதில் உள்ள ஏகாரத்தைக் கொன்றை, தானம், கோடு என்பவற்றோடும் கூட்டுக.

துளையினைக்கொண்ட விசாலமாகிய துதிக்கையை உடைய (விநாயகராகிய) மலை, தேனைக் கான்று மலரும் கொன்றை மலர்களையே பொன்னாகவும், சிவந்த சடையையே வளைவினை யுடைய நல்ல பவளக் கொடியாகவும், மதத்தையே மழையாக வும், மருப்பையே (தந்தத்தையே) பிறைச்சந்திரனாகவும் (கொண்டு) தோன்றுகின்றது.

இதில் உருவகமாகிய பொன், பவளக்கொடி, தானம், மதி என்பன ஒன்றோடொன்று இயைபுடையன அல்லவாக லின், இஃது இயைபிலியுருவகமாயிற்று.

16. சமாதான உருவகம்

பக்கம்-237. 'கார்குழை சேர்ந்த' என்னுஞ் செய்யுள்,

('கார் குழை சேர்ந்த வாள் கதிர் மதி முகமும், ஏர் கெழு தென்றலும், என்னிடைச் சேரத் துயர் விளைப்ப வாயினும்,

தீ வினையால் வந்த (என்று நினைப்பதன்றி) மற்று நினைப்பது ஆம் அளவோ? மயல்,' என இயைக்க.)

இந்நங்கையின் (கூந்தலாகிய) மேகமும் குண்டலமும் கூடியுள்ள ஒளியினைக் கொண்ட (குளிர்ந்த) கிரணங்களை யுடைய சந்திரனைப் போன்ற முகமும், உயர்வு பொருந்திய தென்றற்காற்றும் என்பால் ஒன்றாய்ச் (சேர்ந்து) துன்பங் களை விளைப்பனவானால் (அத்துன்பங்கள்) முன் செய்த தீய வினையினால் வந்தவை (என்று நினைப்பதல்லாமல்) வேறாக நினைக்கும் அளவினவாமோ? (வேறாக நினைக்கின் அந்நினைவு) மயக்க நினைவாகும்.

இதில் 'துயர்' என்றது காரியவாகுபெயராய் அதற்குக் காரணமாகிய துன்பங்களையுணர்த்தியது.

இச்செய்யுளில் இன்பஞ் செய்தற்குரியனவாகிய முக மும், தென்றலும் துன்பஞ் செய்தற்குக் காரணம் முன் செய்த தீவினை எனச் சமாதானங் கூறப்பட்டதாயினும், அம் முகமும் தென்றலும் உருவகஞ் செய்யப்படவில்லை; ஆயினும், உரையாசிரியர் இதனைச் சமாதான உருவகத்திற்கு உதா ரணமாகக் காட்டி, இது, 'எல்லாருக்கும் இனிய நின்முகமும், இளந்தென்றலும் எனக்குத் துயர்விளைப்ப' என்று கூறிப் பின்னர்ச் சமாதானங் கற்பித்தமையால், சமாதான உருவக மாயிற்று, என்றார்.

இதுவும் அது.

பக்கம்-238. 'கைகாந்தள்' என்னும் செய்யுள்.

('கைகாந்தள் வாய்குமுதங் கண்ணெய்தல் காரிகையே மெய் வார் தளிர் கொங்கை மெல் கோங்கம் இவ்வனைத்தும் வன்மை சேர்ந்து ஆவி வருத்துவது மாதவம் ஒன்றின்மையே அன்றோ எமக்கு?' என இயைக்க.)

தண்டியலங்காரத்திலும் இச்செய்யுளே இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதில் கையும், வாயும், கண்ணும், மெய்யும், கொங்கை யும் ஆகிய இவற்றை முறையே காந்தள் மலரும், குமுதமல

ரும், நெய்தல் மலரும், தளிரும், கோங்கரும்புமாக உருவகஞ் செய்து, 'எனக்கு இன்பஞ் செய்தற்குரிய மென்மைத் தன்மையையுடைய இவை அனைத்தும் வன்மையுற்றுத் துன்பஞ் செய்தற்குக் காரணம் மாதவம் இன்மையே,' எனச் சமாதானங் கூறப்பட்டிருத்தலை நோக்குக.

17. விதிரேக உருவகம்

இது தண்டியலங்காரத்தில் 'வேற்றுமை உருவகம்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-238. 'வையம் புரக்குமால்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இச்செய்யுளே இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதில் 'கையிரண்டும்' என்றதற்குப் பதிலாக, அதில் 'கைக்காரும்' என்றிருக்கின்றது. பின் 'கையாம் இருகார்க்கு' என்றலின், 'கைக்காரும்' என்பதே சரியான பாடமாகும்.

('மன்னவ, நின் கைக்காரும், பொய் இன்றி வான் நீர் பொழி காரும் வையம் புரக்கும்; (ஆயின்) கை ஆம் இரு கார்க்குப் பருவம் இல்லை; இடிக்கும் ஒரு கார் பருவம் உடைத்து,' என இயைக்க.)

மன்னவ - அரசனே, நின் கைக் காரும் - நின்கைகளாகிய மேகமும், பொய் இன்றி வான் நீர் பொழி காரும்-காலந்தவறாமல் ஆகாயத்தின்கணின்று நீரைச் சொரியும் மேகமும்.

கைஆம் இரு கார்க்குப் பருவம் இல்லை என்றது கைகள் காலவரையறையின்றிப் பொருள் சொரிவன என்னும் பொருட்டு. 'இடிக்கும் ஒரு கார்' என்றது வானீர் பொழிகாரை. 'இடிக்கும்' என்னும் அடைமொழி கையாகிய காரினின்று வானீர் பொழி காரைப் பிரித்துநின்றது. 'ஆல்'என்பது அசை.

18. தடைமொழி உருவகம்

இது தண்டியலங்காரத்தில் 'விலக்குருவகம்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-238. 'மாதரா யுன்றனது' என்னுஞ் செய்யுள்.

('மாதராய், ஓதில் உன்றனது வாள்முகமாம் திங்களுக்கும் (உன்றனது) தீது இலாத் திருவிழியாம் மானுக்கும்

இருங் காதல் உளாரைக் கடுந்துயரம் செய்வது பரிசு பாதி அமையும்,' என் இயைக்க.)

மாதராய், சொல்லுமிடத்து உனது ஒளியினையுடைய முகமாகிய திங்களுக்கும், (உன்னுடைய)குற்றமில்லாத அழகிய விழிகளாகிய மானுக்கும் மிக்க அன்புடையவர்களை மிகவும் வருத்துதலாகிய செயலுண்மையால், அவை, (அச்செயலில்லாதனவாகிய வானிற்றோன்றும் திங்களையும், காட்டில் வாழும் மான்களையும்) பாதி ஒப்பனவாகும்; (பாதி ஒவ்வா.)

இதிற் 'பாதி ஒவ்வா' எனத் தடுக்கப்பட்டமை காண்க.

இவ்வணிக்குத் தண்டியலங்காரத்திற் காட்டப்பட்ட உதாரணச் செய்யுள் வருமாறு:—

'வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
இல்லை யுளதே லிரவன்றி—எல்லை
விளக்கு மொளிவளர்த்து வெம்மையா லெம்மைத்
துளக்கு மியல்புளதோ சோல்.'

19. உருவக உருவகம்

பக்கம்-238. 'அத்தகு நின்றன்' என்னுஞ் செய்யுள்.

('அவனி எல்லாம் கோடல் புரிந்தான் உறந்தைக்கோ, ஓங்கும் வித்தகஞ்சேர் அத்தகு நின்றன் முகக்கமலமாகிய வாள் அரங்கில் ஒத்த புருவக்கொடி முன் (நின்று) ஆடல் புரிந்தாள் என்று உரைத்தான்,' என்றியைக்க.)

'நுங்காய், அவனி முற்றும் வென்றுகொண்டவனும், உறந்தைக்கு அரசனுமாகிய சோழன், மேன்மேலும் வளரும் நன்மை சேர்தற்குக் காரணமாகிய அவ்விதத் தகுதிவாய்ந்த உன்னுடைய முகக்கமலமாகிய ஒளியை உடைய சபையின்கண் புருவமாகிய கொடியானவள் முன்னே நின்று ஆடினாள்,' என்று சொன்னான்.

'புருவக்கொடி ஓங்கும் வித்தகஞ்சேர் அத்தகு ஆடல் புரிந்தாள்' என இயைப்பினுமாம்.

இதற்குப் 'புருவக்கொடியானவள் மிக்க வியப்பமைந்த அவ்விதத் தகுதி வாய்ந்த ஆடலைப் புரிந்தாள்' என்று பொருள் கொள்க.

இதில் முன்னே முகத்தைக் கமலமாக உருவகப்படுத்திப் பிறகு அதனையே சபையாக உருவகப்படுத்தினமையால், இஃது 'உருவக உருவகம்' ஆயிற்று.

20. ஏகாங்க உருவகம்

பக்கம்-239. 'காலன்' என்னுஞ் செய்யுள்,

('காலன் மதத்தால் சிவந்து கயல் போன்ற விழியாகிய நீலோற்பலமும் உடைய நின் கோலமுகத்து ஆடவர்கள் ஊடல் எளிது அன்று என்று உணர்ந்து சால அருந்துயரம் எய்துவர்,' என இயைக்க.)

எமனைப் போல (இளமையின்) செருக்கோடு சிவந்து கயல் மீனைப் போன்ற விழியாகிய நீலோற்பல மலரையுமுடைய உன்னுடைய அழகிய முகத்தினால் ஆடவர்கள், உனக்கு ஊடல் உண்டாயின் அஃது எளியதாகாது (விழிகளாகிய நீலோற்பலங்களையுமுடைய நின்முகம் மிகவும் வருத்தும்) என்றறிந்து மிகவும் அரிய துயரத்தை அடைவார்கள்.

21. ஏகதேச உருவகம்

பக்கம்-239. 'இரங்கு குயில்' என்னுஞ் செய்யுள்.

('இரங்கு குயில் முழவு ஆ(க), தேன் இன் இசை யாழ் ஆ(க), அணிபொழில் அரங்கு ஆ(க) இளவேனில் ஆடும் போலும்; அணி பொழில் அரங்கு ஆ(க) ஆடுமாயின் அவ்விள வேனில் செய்தது என்? மணந்து அகன்றார் நெஞ்சம் மரங் கொல்!' என இயைக்க.)

மணந்தகன்ற தலைவர் சென்ற இடத்து இனிமையாகக் கூவுங்குயிலை முழவாகவும், வண்டை இனிய இசையை உடைய யாழாகவும், அழகிய சோலையைச் சபையாகவும் (கொண்டு) இளவேனில் ஆடும் போலும்; அவர் சென்ற இடத்து அழகிய சோலையைச் சபையாகக்கொண்டு ஆடுமாயின் (மணந்து அகன்றாரை இங்கு வருவித்திலதே! அவ்வாடலால்) அது செய்த நன்மை யாது? அவர் மனம் மரம்போலும்.

பிற பொருள் வைப்பணியின் வகை

இந்நூலில் இதன் வகைகள் கூறப்பட்டனவேயன்றி, இதன் இலக்கணங் கூறப்படவில்லை.

தண்டியலங்காரத்திற் கூறப்பட்ட இதன் இலக்கணத்தை அடியிற் காண்க:

'முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளி னுலகறி பெற்றியின்
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.'

(தண்டி. சூ. 47.)

1. பொதுப் பிற பொருள் வைப்பு

பக்கம்-240. 'விண்ணவரின் மிக்கு' என்னுஞ் செய்யுள்.

இது தண்டியலங்காரத்தில் 'முழுவதுஞ் சேறல்' என்று கூறப்பட்டிருக்கிறது. இந்நூலின் 239-ஆம் பக்கத்து அடிக் குறிப்பையுங் காண்க.

('விண்ணவரின் மிக்கு, விளங்கு ஒளியால் மேம்பட்டு, மண்ணவர்க்குக் கண் ஆய வான் கதிர்கள், கண் எதிர் பாரில் இருள் அடைந்து பந்திக்கும் என்றால் ஆன வினைப் பந்தத்தைக் கடப்பார் யாவர்?' என இயைக்க.)

'பந்தித்து இருள் அடையும்' என்றதனை 'இருள் அடைந்து பந்திக்கும்' என விகுதி பிரித்துக் கூட்டுக.

தேவர்களிலே சிறந்து, விளங்கும் ஒளியாலே மேன்மை யடைந்து, மாந்தர்களுக்குக் கண்கள் போன்றனவாகிய வானின் கண் தோன்றும் மதிபரிதிகளுக்கு முன்னே பூமியில் இருள் வந்து அவற்றின் ஒளியை மறைக்கும் என்றால் முற்பிறப்புக் களிற் செய்துள்ளனவாகிய வினைகளின் பயனாகிய தளையைக் கடக்க வல்லார் எவர் உளர் ?

'ஆன வினைப்பந்தத்தை யாவர் கடப்பார்' என்றது யாவர்க்கும் பொதுவாதலின், 'பொதுப் பிற பொருள் வைப்பு' ஆயிற்று.

2. சிறப்பு நிலைப் பிற பொருள் வைப்பு

பக்கம்-240. 'எண்ணும் பயன்' என்னுஞ் செய்யுள்.

இது தண்டியலங்காரத்தில் 'ஒருவழிச் சேறல்' என்று கூறப்பட்டிருக்கின்றது. 239-ஆம் பக்கத்து அடிக்குறிப்பையும் காண்க.

('தண் நறுந்தேன் பூத்து அளிக்கும் தாராய், வாமன், எண்ணும் பயன் தூக்காது, யார்க்கும் வரையாது, மண் உலகில் அருள் வளர்க்கும்; புகழாளர்க்குக் கடன் எவ்வுயிருங் காத்து அளிக்கை அன்றோ?' என இயைக்க.)

குளிர்ந்த நல்ல தேனை மலர்ந்து அளிக்கின்ற மாலையை அணிந்தவனே, வாமன் (தன் பொருட்டாகக்) கருதப்படும் பயனொன்றையும் கருதாமலும், யாருக்கும் வரையறை இல்லாமலும் அருளை வளர்ப்பன்; புகழை ஆளுதலுடையார்க்குக் கடமையாவது எல்லா உயிர்களையுங் காத்தளிப்பதன்றோ?

வாமன், அருகன், சிவன், மன்மதன்; ஈண்டு அருகனைக் கொள்ளுதல் வேண்டும் போலும்!

தண்டியலங்காரத்திலும் இச்செய்யுளே இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது.

3. சிலேடைப் பிற பொருள் வைப்பு

பக்கம்-240. 'எற்றே கொடிமுல்லை' என்னுஞ் செய்யுள்.

இச்செய்யுளே இவ்வணிக்குத் தண்டியலங்காரத்திலும் உதாரணமாகக் காட்டப்பட்டது. இதில், 'முற்றிழையாள் பாட' என்றிருப்பது தண்டியலங்காரத்தில் 'முற்றிழையாள் வாட' என்றிருக்கின்றது. தண்டியலங்காரத்துப் பாடமே சரியானது.

('முல்லைக்கொடி தன்னை வளர்த்தெடுத்த முற்று இழையாள் வாட முறுவலிக்கும்; எற்றே! பரவை என்றும் முற்ற முடிய முழங்கு உலகத்துக் கொடியார்க்கும் குணம் உண்டோ?' என இயைக்க.)

முல்லைக் கொடியானது, தன்னை வளர்த்து எடுத்த (தொழில்) முற்றிய அணிகளை அணிந்த தலைவியானவள் வாட (அதனைக் கண்டு தான் வருந்தாமல்) சிரிக்கும்; இஃதென்ன வியப்பு! கடலானது எப்பொழுதும் இடைவிடாமல் முழங்கா நிற்கும் இவ்வுலகின்கண் கொடியார்க்கும் நற்குணம் உளதாமோ?

முல்லை முறுவலித்தலாவது, அஃது அரும்புகளை விடல். 'கொடியார்' என்பது சிலேடைப் பொருளது. இதற்கு 'முல்லைக் கொடிகள்' எனவும், 'கொடியவர்கள்' எனவும் பொருள் கொள்க.

4. முரண் பிற பொருள் வைப்பு

பக்கம் - 240. 'காதன் மதியம்' என்னுஞ் செய்யுள்.

('காதல் மதியம் களங்கம் உடைத்து ஆனாலும், பூதலத்தை எல்லாம் பொலிவிக்கும்; குவலயத்து நல்தகையார், ஓது சில குற்றம் உடையார் எனினும் நல்லர் என்றே நாடு,' என இயைக்க.)

யாவராலும் விரும்பப்படுஞ் சந்திரன் களங்கத்தை உடையதாயிருப்பினும், உலக முழுதையும் அழகுறும்படி செய்யும்; பூமியில் நல்ல தன்மையை உடையவர்கள், பிறரால் சொல்லப் படும் சில பிழைகளை உடையவர்களாய் இருப்பினும் அவர்களை நல்லவர்கள் என்றே எண்.

பக்கம்-240. 'வெய்ய குரற்றோன்றி' என்னுஞ் செய்யுள்.

இச்செய்யுளும் மேற்குறித்த அணிக்குக் காட்டப்பட்ட உதாரணமே. தண்டியலங்காரத்தினும் இச்செய்யுள் இவ் வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

('வையத்து வெய்ய குரல் தோன்றி வெஞ்சினம் ஏறு உட்கொளினும் பெய்யும் முகில் தன்னைப் பேணுவர்; யார்க்கும் புகழ், இருள் பொழியுங் குற்றம் பல வரினும் பொருள் பொழிவார் மேற்றே,' என இயைக்க.)

(உலகத்தில்) கொடிய (இடியின்) ஒலியைத் தோற்றுவித்து (அவ்வொலிக்குக் காரணமாகிய) மிக்க சினத்தினையுடைய இடியைத் தன்னுள்ளே கொண்டிருப்பினும், (மழையைச்) சொரியும் மேகத்தை எல்லோரும் விரும்புவர்; யாவர்க்கும் புகழும் விருப்பம் உளதாதல், இருளின் தன்மை மிக்க பல குற்றங்கள் உண்டாயிருப்பினும் (வரையாமல்) பொருளைச் சொரிகின்றவர்கள் மேலதேயாம்.

ஈண்டுத் 'தோன்றி' என்னும் தன்வினை, 'தோற்றுவித்து' என்னும் பிறவினைப் பொருளதாய் நின்றது.

5. விரவியற் பிற பொருள் வைப்பு

இது தண்டியலங்காரத்தில் 'இருமையியற்கை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 240. 'அத்தகு திங்கள்' என்னுஞ் செய்யுள்.

('அத்தகு திங்கள் முகம் மயம் ஆனாலும் எத்தனையும்வான் யரம் எய்துவிக்கும்; நல்லோர் யாவர்க்கும் எய்தாதுபோல் வேருகாது வெய்து ஆவது' என இயைக்க.)

அத்தகுதி வாய்ந்த சந்திரன் (இத்தலைவியின்) முகத்தின் ன்மையதாயினும், எவ்வகையாலும் (இத்தலைவிக்கு) மிக்க யரை உண்டாக்கும்.

நல்லோர் யாவருக்கும் (வெய்யதுன்பம்) அவரை நெருங்கி ண்டாகாததுபோல் தோன்றி (அதின்) வேருகிய் நன்மை ண்டாகாமல் வெய்ய துன்பம் உண்டாவதாம்.

'அவரை' என்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது. தான், து என்பன அசைகள்.

இச்செய்யுளுக்கு வேறு பொருள் கொள்ளக் கூடுமாயி னுங் கொள்க.

நல்லோர்க்குத் துன்பம் உண்டாகாததுபோல் தோன்று ல் இயல்பும், துன்பமுண்டாதல் இயல்பிலியும் போலும்!

6. கூடாவியற்கைப் பிற பொருள் வைப்பு

இஃது 'இயைபிலிப் பிற பொருள் வைப்பு' என்றுங் டறப்படும்.

பக்கம்-241. 'ஆர வடமும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே தாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(குளிர்ச்சியாகிய) முத்து மாலையும், மிக்க குளிர்ச்சியினை டைய சந்தனமும், குளிர்ச்சியாகிய நிலவும் (பிரிந்தார்க்கு) நருப்பின் தன்மை மிக்குத் தோன்றும்; உலகின்கண் புகழின் கைகளாற் சிறந்த அனுபவப் பொருள்களும் அவரவர்களின் ழின் வகையினுலே மாறுபடும்.

இதில், குளிர்ந்த தன்மையை உடைய முத்துமாலை முதலி வை மிக்க வெப்பந் தருகின்றன என்றது கூடாவியற்கையாம்.

7. கூடும் இயற்கைப் பிற பொருள் வைப்பு

பக்கம்-241. 'பொய்யுரையா' என்னுஞ் செய்யுள்

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே தாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதில் 'நண்டா' என்றிருப்பதை 'நண்பர்' என்று திருத்திக்கொள்க. இதில் 'மெய் வெதுப்புப்' பூத்தகையிற் காந்தட் பொலங்கிரியை நீத்தகன்றார்' என்றிருப்பது, தண்டியில், 'மெய் வெதும்பப், பூத்தகையுஞ் செங்காந்தள் பொங்கெரிவீழ் ஞாலத்து' என்றும், இதில் 'தீத்தகையார்க் (கஃதே செயல்' என்றிருப்பது, தண்டியில் 'தீத்தகையார்க்) கிதே செயல்' என்றும் இருக்கின்றன.

எப்பொழுதும் பொய் பேசாத அன்பரது தேர் வரும் வழியைப் பார்த்துக்கொண்டு கையினின்று வளைகள் கழன்று வீழ உயிர் கரைந்து வருந்துகின்ற பெண்களின் உடல் வெதும்பும்படி செங்காந்தள் மலர் வருத்தாநிற்கும். மிக்க ஒலியினை உடைய கடலாற் சூழப்பட்ட பூமியில் தீக்குணம் உடையவர்களுக்கு இதுதான் செயல்.

தீத்தகையார்-தீமையாகிய குணம் உடையவர்கள்; தீயைப் போன்ற நிறத்தினை உடைய காந்தள் மலர்கள்.

தீத்தகையார்க்குப் பிறரை வருத்துதல் கூடும் இயற்கையாதல் அறிக.

8. விபரீதப் பிற பொருள் வைப்பு

பக்கம்-241. 'தலையிழந்தா னெவ்வுயிரும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதில் 'குற்றங்கடிந்தான்' என்றிருப்பது, தண்டியில் 'குற்றங் கடிந்தான்' என்றிருக்கின்றது.

('எவ்வுயிரும் தந்தான் தலையிழந்தான்' என இயைக்க.)

எல்லா உயிர்களையும் படைத்தவனாகிய பிரமன் தலையை இழந்தனன்; பிதாவைக் கொன்றவனாகிய சண்டேசன் அக்குற்றத்தை ஒழிந்தனன். உலகின்கண் ஒப்பற்ற முதன்மையைப் பெற்று உயர்ந்தவர்கள் விரும்புவார்களாயின் தீவினையின் பயனும் (நல்வினையின் பயனும்) மாறுபடும்.

விபரீதம்-மாறுபாடு. ஈண்டுத் 'தப்பாம் வினை' என்றது காரணவாகு பெயராய் அதன் பயனை உணர்த்திற்று. 'தப்பாம்

வினைப்பயனும்' என்பதில் உள்ள இழிவு சிறப்போடு கூடிய எச்ச உம்மையான் 'நல்வினைப் பயனும்' என்பது வருவித் துரைக்கப்பட்டது.

9. இருமை இயற்கைப் பிற பொருள் வைப்பு

பக்கம்-241. 'கோவலர்வாய் வேய்ங்குழலே' என்னும் செய்யுள்.

பாவாய்! ஆயர்கள் வாயின் (வைத்தூதும்) புல்லாங் குழலேயல்லாமல் ஒலிக்கின்ற கடலும் இரைந்து, தம்முடைய தலைவர்களைப் பிரிந்திருக்கின்ற மங்கையர்களை உயிர் போகும் படி வருத்தாநிற்கின்றது. சிறியவர்கள் செய்யுந் தீங்கினைப் பெருந்தன்மையினை யுடையவர்களும் 'தக்கது இன்னது, தகாதது இன்னது' என ஆராயாமற் செய்வார்கள் போலும்!

இதில் சிறியோர் பிறர்க்குத் தீங்கு இயற்றுதலாகிய கூடும் இயற்கையும், பெரியோர் ஆராயாமற் பிறர்க்குத் தீங்கு இயற்றுதலாகிய கூடாவியற்கையும் ஒருங்கு வந்திருத்தலை நோக்குக. முன்னே காட்டப்பட்ட விரவியற் பிற பொருள் வைப்பும் இதில் அடங்குதற்கு உரியதேயாகும்.

நூலாசிரியர் கூடாவியற்கைப் பிற பொருள் வைப்பும் கூடுமியற்கைப் பிற பொருள் வைப்புங்கூறிப் பின் விரவியற் பிற பொருள் வைப்பைக் கூறினர். அதனை இவற்றிற்கு இலக்கணங் கூறிய மேற் செய்யுளிற் காண்க. உரையாசிரியரும் அப்பாட்டின் உரையில் அவற்றை அவ்வாறே கூறினர்; பின்னர் உதாரணங்காட்டு கையில் விரவியற் பிற பொருள் வைப்புக்கு முன்னே உதார ணங்காட்டிப் பின் கூடாவியற்கைப் பிற பொருள் வைப்புக்கும் கூடுமியற்கைப் பிறபொருள் வைப்புக்கும் உதாரணங்காட்டிப் பிறகு விபரீதப் பிற பொருள் வைப்புக்கும் இருமை இயற் கைப் பிற பொருள் வைப்புக்கும் உதாரணங் காட்டினார். இவற்றை நோக்கின் உரையாசிரியரும் விரவியற் பிற பொருள் வைப்பையும், இருமை இயற்கைப் பிற பொருள் வைப்பையும் ஒன்றெனக் கொண்டவரே என்பது புலனாம். விபரீதப் பிற பொருள்வைப்பு, நூலாசிரியராற் கூறப்படாததாகும். விரவியற் பிற பொருள் வைப்பும், இருமையியற்கைப் பிற பொருள் வைப்பும் வேறு வேறெனக் கொள்ளின், இருமையியற்கைப் பிற பொருள் வைப்பும் நூலாசிரியராற் கூறப்படாததேயாகும்.

தடைமொழி அணியின் வகை

இது தண்டியலங்காரத்தில் 'முன்ன விலக்கு அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

இதற்கு இந்நூலாசிரியர் இலக்கணங் கூறிற்றிலர். தண்டியலங்காரத்தில் இதற்குக் கூறிய இலக்கணம் வருமாறு :

'முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே
மூவகைக் காலமு மேவிய தாகும்.' (தண்டி. சூ. 43)

1. ஆசித் தடை மொழி

இது தண்டியலங்காரத்து 'வாழ்த்து விலக்கு' என்று கூறப்பட்டிருக்கிறது.

பக்கம்-242. 'ஏகுக வன்பர்' என்னுஞ் செய்யுள்.

('அன்பர் செல்நெறிக்கண் எளிதாக ஏகுக; யானும் ஈண்டு இனிது இருக்க,' என இயைக்க.)

இதில் 'யானும் ஈண்டு இனிது இருக்க,' என்றது யான் ஈண்டு இனிது இருக்க முடியாது என்னும் பொருளது. இங்ஙனம் ஆசி கூறித் தலைமகன் செலவைத் தடுத்தலின், இஃது ஆசித் தடைமொழி ஆயிற்று. இதற்குத் தண்டியலங்காரத்திற் காட்டிய உதாரணச் செய்யுள் வருமாறு.

'செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க—வெல்லும்
அடற்றேர் விடலை யகன்றுறைவ தாங்கோர்
இடத்தே பிறக்க வியாம்.'

2. அனுதாரத் தடை மொழி

இது தண்டியலங்காரத்தில் 'இகழ்ச்சி விலக்கு' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-242. 'ஆசை பொருட்கில்லை' என்னுஞ் செய்யுள்.

('அன்பர்க்கு ஆசை பொருட்கு; என்பக்கல் இல்லை; (ஆதலின் அவர்) இனி ஏகுக நிற்க,' என இயைக்க.)

என்பால் அன்பு கொண்டிருந்தவராகிய தலைவர்க்கு (இப்பொழுது) ஆசை பொருட்கண்ணதாயிற்று ; என்கண் இல்லை. ஆதலின், அவர் தாம் விரும்பிய பொருள் கருதிச் செல்லினும் செல்லட்டும் ; (அன்றிச் செல்லாமல் நிற்பினும்) நிற்கட்டும். (எனக்கு இரண்டும் ஒன்றே.)

இஃது ஆதரவின்மை காட்டித் தடுத்தமையின், அனு தரத் தடைமொழி ஆயிற்று. 'ஆதரவு' என்னும் பலபொரு ளொரு சொல் ஈண்டு 'அன்பு' என்னும் பொருளதாய் நின்றது.

3. காரணத் தடை மொழி

பக்கம்-242. 'கண்விற் புருவத்தான்' என்னுஞ் செய்யுள்.

(நல்லாய்!) 'கண்ணுல் புருவத்தால்' எனவும், 'இது பிறர் அறிந்து' எனவும், 'என் பக்கல் பண்ணிய குற்றம் ஒன்று இன்மையால்' எனவும், இயைக்க.)

கண்களாலும் வில்லைப் போன்ற புருவங்களினாலும் எதி ருற நீ சீறுதலால் என்ன தீங்குளதாம்? (உன் தோழிமார் முத லிய) பிறர் அறிந்தால்தான் என்ன தீங்கு உளதாம்? என்னி டம் நான் செய்த குற்றஞ் சிறிதும் இல்லாமையால் (வாளைப் போலக்) கூர்மை கொண்டு (நெஞ்சை) அறுக்கும் அச்சம் எனக்கு இல்லை.

அச்சத்திற்குக் காரணமான குற்றம் தன்பால் இன்மை யைக் கூறி அச்சத்தை விலக்கினமையின், இது காரணத்தடை மொழியாயிற்று.

4. காரியத் தடை மொழி

பக்கம்-242. 'அன்ப ரகன்றார்' என்னுஞ் செய்யுள்.

('அன்பர்; அகன்றார், அவர் குறித்த கார்ப்பருவம் வந்தது; மாது உயிர்த்திலள்,' என இயைக்க.)

உயிர்த்திலள் - மூச்சு விட்டிலள் (மூர்ச்சை அடைந்திருக் கின்றாள்.) எனவே 'இறந்து பட்டாளல்லள்' என்று கூறிய வாறாயிற்று.

'நாம் இறக்கின் தலைவர் இறந்துபடுவர்' என்னுங் கருத் தான் தலைவி இறந்துபட்டிலள் எனக் கொள்க.

சாதற்குக் காரணமாகிய கார்ப்பருவம் வந்தும் சாதலா கிய காரியம் நிகழாமையைக் கூறினமையின், இது காரியத் தடை மொழியாயிற்று.

5. ஐயத் தடை மொழி

பக்கம்-243. 'மின்னே பொழிலின்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதில் 'பொன்னே வென் னுஞ்சுணங்கில்' என்றிருப்பது, தண்டியில் 'பொன்னே

வெனுஞ்சுணங்கில்' என்றும், இதில் 'தோளின்' என்றிருப்பது அதன்கண் 'தோளும்' என்றும், இதில் 'தாங்குவதோ' என்றிருப்பது அதன்கண் 'தாங்குமோ?' என்றும் பாடங் காணப்படுகின்றன.

('பொழிலின் விளையாடும் இவ்வுருவம், மின்னே! பொன்னே எனுஞ் சுணங்கின் பூங்கொடியோ! என்னே! மின், திசை உலவும் கண்ணும், திரள் முலையும், தோளும், மிசை இருளும் தாங்குமோ!' என இயைக்க.)

இச்சோலையின்கண் விளையாடும் இவ்வுருவம், மின்னினுருவமோ? (அன்றிப்) பொன்னேவென்று ஐயுறுதற்குரிய தேமலைக் கொண்ட பூங்கொடிபோல்வாளொரு பெண்ணினுருவமோ! இவ்விரண்டின் எவ்வுருவமோ! (மனமே, ஆராய்தலின்றி ஐயுறுகின்றாய்;) மின், நான்கு திசையினும் உலவாநிற்கும் கண்களையும், திரண்ட தனங்களையும், தோள்களையும், அத்தோள்களின்மீது கூந்தலாகிய இருட்டையும் தாங்கியிருக்குமோ? (நீ சொல்.)

'ஆதலின், இது மின்னலினுருவமன்று; பெண்ணின் உருவமே,' என்றான் என்பது.

இது தலைமகன் நெஞ்சொடு கூறியது. இது 'காட்சி' என்னுந் துறையாகும்.

இதில் 'இவ்வுருவம் மின்னே! பெண்ணே!' என்றையுற்று மின்னுருவம் அன்றெனை விலக்கலின், இஃது ஐயத்தடைமொழியாயிற்று.

6. ஏதுத் தடைமொழி

பக்கம்-243. 'எம்மி திதுவென்பு...' என்னும் செய்யுள்.

('இரப்பவரில் எம்மிது இது என்று கொள்ளுதலால் நீ செம்மை மலி வள்ளல் என்று செப்பத்தகாய்,' என இயைக்க.)

யாசிப்பவர்கள் தங்களுக்குள் 'எம்முடையது இது (எம்முடையது இது') என்று சொல்லி (உன்னுடைய பொருளைத்) தாங்களே கொள்ளுதலால் நீ செம்மை மிக்க வள்ளல் என்று சொல்லத் தகுதியை உடையையல்லை.

ஏதுக்காட்டி, 'நீ செம்மை மலி வள்ளல் அல்லே,' என்று கூறினமையின், இஃது ஏதுத் தடைமொழியாயிற்று. ஈண்டுத் தடுக்கப்பட்டது வள்ளன்மை என்க.

7. உபாயத் தடைமொழி

பக்கம்-243. 'காலனெனைக் காணு' என்னுஞ் செய்யுள்.

இவ்வுலகின்கண் காலன் என்னைக் காணுமற் போதற்குரிய விதத்தைத் தெரிவித்துச் செல்வையாயின், யான் நின் பிரிவை ஆற்றியிருப்பேன்.

அதற்கு - அதனை (பிரிவை.)

'காலன் என்னைக் காணுத உபாயங் கூறிச் செல்க,' எனத் தலைமகன் செலவைத் தடுத்தமையின், இது உபாயத் தடைமொழியாயிற்று.

8. சிலேடைத் தடைமொழி

பக்கம்-243. 'மன்னுதனுச் சோதி' என்னுஞ் செய்யுள்.

(இது தலைவி முகத்துக்கும் சந்திரனுக்குஞ் சிலேடை. முகத்திற்குச் செல்லுங்கால் 'சோதி மகரம்' எனச் சோதி என்பதனை மகரத்திற்கு அடையாக்குக. சந்திரனுக்குச் செல்லுங் கால் 'மன்னுதனு, மகரம், மீனம், செவ்வாய், சோதி (ஆகிய) பன்னும் இவற்ருேடு ஒன்றி' என இயைக்க.)

தன்கண் மன்னிய விற்கள் போன்ற புருவங்களும், ஒளியினை உடைய மகர குண்டலம் அணிந்த காதுகளும் மீன் போன்ற கண்களும், அழகிய சிவந்த வாயும் ஆகிய (யாவராலும்) புகழ்ந்து கூறப்படும் இவற்றுடன் கூடிப் பாரின்கண் விளங்குகின்ற வளர்தலும் தேய்தலுமாகிய குற்றமில்லாத ஒளியினையுடைய உன் முகமாகிய மதி ஒன்று இருக்க வேறு மதியினுல் இங்குளதாகும் பயன் யாது?

'திகழ்ந்த' என்னும் 'செய்த' என்னும் பெயரெச்சம், ஈண்டுத் 'திகழ்கின்ற' என்னும் நிகழ்காலப் பெயரெச்சப் பொருளதாய் நின்றது. 'திகழ்ந்த முகம்' என இயைக்க.

சந்திரனுக்கு ஆக்குங்கால் 'தனுசு, மகரம், மீனம் என்னும் இராசிகளும், செவ்வாய், சூரியன் என்னும் கிரகங்களுமாகிய பன்னும் இவற்ருேடு ஒன்றி' என்று பொருள்கொள்க. சோதி-சூரியன்.

9. முயற்சித் தடை மொழி

பக்கம்-243. 'ஏகென்று சொல்ல' என்னுஞ் செய்யுள்.

(அன்பரே,) யான் முயலுவது ஏகு என்று சொல்ல; என் வாய் சொல்வது ஏகல் என்று ஆகும்,' என இயைக்க.)

(அன்பரே) யான் முயல்வது (நீர் விழைந்த பொருண் மேற்) செல்வீர் என்று சொல்லுதற்காகும்; என் வாய் சொல்வது செல்லன்மின் என்பது ஆகும்.

இதில் 'என்று' என்னும் எச்சத்தை 'என்பது' என்னும் வினையாலணையும் பெயராக்குக.

இதில் தோழி தன் முயற்சியைக் கூறித் தலைமகன் செலவைத் தடுத்தமையின், இது முயற்சித் தடை மொழியாயிற்று.

10. பிற பொருள் வைப்புத் தடை மொழி

பக்கம்-243. 'நூலெலாங் கற்றவனே' என்னுஞ் செய்யுள்.

('வாலிய நின் காதல் மாவியப்பே! (நீ) நூல் எலாம் கற்றவனே ஆனாலும் (நின்) நோக்கு அறு; மால்கடலுக்கு ஆறெலாம் எந்நாளும் தீராது சென்று சாலவும் பாய்ந்தாலும் ஆராது' என இயைக்க.)

இளம்பருவத்தினையுடைய அன்பரே, உம்முடைய காதல் மிக்க வியப்பினதே! நீர் நூற்களையெல்லாங் கற்றவரே! ஆனாலும், (உம்மைப் பிரியின் ஆற்றாத தன்மையினையுடைய எம்முடைய தலைவியைப் பிரிந்து பொருண்மேற்செல்ல நீர் கொண்ட) கருத்து (உம்மை விட்டு) நீங்காது; பெரிய கடலின் கண் ஆறுகள் யாவும் எந்நாளும் இடைவிடாமற் சென்று மிகுதியாகப் பாய்ந்தாலும் நிறையாது.

'அறுது' என்பது 'அறு' என ஈறு தொகுத்தலாயிற்று. கடலுக்கு - கடலின்கண், ஏழனுருபில் நான்கனுருபு வந்து மயங்கியது.

இதிற் பிற பொருளை வைத்துக் கூறித் தலைமகன் செலவைத் தடுத்தமையின், இது பிற பொருள் வைப்புத் தடை மொழியாயிற்று. இதில் வைத்த பிற பொருளாவது: 'மால் கடலுக்கு ஆறெலாம் எந்நாளும் தீராது சென்று சாலவும் பாய்ந்தாலும் (கடல்) ஆராது' என்பது.

11. கருணைத் தடை மொழி

பக்கம்-243. 'இரியன் மகளிர்' என்னுஞ் செய்யுள்.

('செம்பியன்தன் நாமம் பாராட்டாதார் நாடு இரியல் மகளிர் இலம் ஞமலி ஈன்ற வரிவிரவு செங்கால் குழவி ஊமன் அருகு இருந்து பாராட்ட உறங்கும்,' என இயைக்க.)

சோழ வேந்தனுடைய பெயரைப் பாராட்டாதவருடைய நாட்டின்கண் (காதலர் பிரிவால்) உயிர் நீங்கப்பெற்ற மங்கையரின் இல்லத்தின்கண் மயில் பெற்ற கீற்றுக்கள் அமைந்த செந்நிறமாகிய கால்களையுடைய பார்ப்புக்கள், கூகைகள் அருகில் இருந்து பாராட்ட உறங்கும்.

அங்கு, ஏ என்பன அசைகள்.

இதில் 'காதலர் பிரிவால் உயிர் நீங்கப்பெற்ற மங்கையரின் இல்லத்தின்கண் மயில் ஈன்ற பார்ப்புக்கள் கூகை பாராட்ட உறங்கும்' எனக் கருணை தோன்றக் கூறித் தலைமகனது பொருண்மேற் செலவைத் தடுத்தமையின், இது கருணைத் தடை மொழி ஆயிற்று.

இவ்வணிக்குத் தண்டியலங்காரத்திற் காட்டப்பட்ட உதாரணச் செய்யுள் வருமாறு:

'ஊசல் தொழிலிழக்கும் ஒப்பு மயிலிழக்கும்
வாசம் சுனையிழக்கும் வள்ளலே—தேசு
பொழிலிழக்கும் நாளையெம் பூங்குழலி நீங்க
எழிலிழக்கும் அந்தோ! இவண்.'

(இவண் - இவ்விடம்)

12. நட்புத் தடைமொழி

பக்கம்-244. 'ஏகுக வேகுதியேல்' என்னுஞ் செய்யுள்.

('ஏகுதியேல் ஏரா உரை பிறக்குங் காலத்தின் முன்னே ஏகுக,' என இயைக்க.)

(அன்புடையீர், நீர்) பொருள்மேற் செல்ல விரும்புவீராயின், நும்மைப் பிரிந்து சிறிதும் ஆற்றுதாள், நும் பிரிவால் இறந்துபட, அதனுல், நுமக்கு அழகாகாத மொழி (பழிமொழி) உண்டாகுங் காலத்திற்கு முன்னே செல்வீராக.

இதில் தோழி தலைமகனுக்கு நட்புத் தோன்றக் கூறுவாள் போலக் கூறி அவன் செலவைத் தடுத்தமையின் இது நட்புத் தடைமொழி யாயிற்று.

13. கருமத் தடை மொழி

பக்கம்-244. 'குடைநின்றது' என்னுஞ் செய்யுள்.

('இராசகண்டீரவ, செம்மை குடைநின்றது; கோமனு வின் நடைகோலொடு சென்றது; ஞாலங் கலி நின்றது; நன்மை கடந்தது; அன்றி இடைநின்றது ஒன்று உண்டு, (அஃது) யாதெனின், நின் தொடை நின்ற தார் புனைவார் (ஆகிய) மட வார் படும் துன்புறவே' என இயைக்க.)

இதன் பொருள் வெளிப்படை.

14. இகழ்ச்சித் தடை மொழி

தண்டியலங்காரத்தில் இது, 'இகழ்ச்சி விலக்கு' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-244. 'ஆசை பெரிதுடையேம்' என்னுஞ் செய் யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதில் 'வள்ளால்' என்றிருப்பது தண்டியில் 'அண்ணல்' என்றிருக்கின்றது.

(அடைந்தார் வேண்டினதைக்) கொடுக்கும் குணம் உடையவரே, (நாங்கள் எங்களுடைய) அருமையாகிய உயிர் மேல் மிக்க ஆசையினை உடையோம். (நீர் எங்களைப் பிரிந்து செல்லுதற்குக் காரணமாகிய) அப்பொருள்மீது சிறிதும் ஆசை உடையோம் அல்லோம்; ஆதலின், இனி (நீர்) புகழ் கெடாமைக் குக் காரணமாகிய அறவழியின்கண் வரும் பொருண்மேற் செல் வீராயினுமாம்; செல்லாதிருப்பீராயினுமாம். (எங்கட்கு அவ்விரண்டும் ஒன்றே.)

15. வன்சொல் தடை மொழி

இது தண்டியலங்காரத்தில் 'வன்சொல் விலக்கு', என்று கூறப்பட்டிருக்கிறது.

பக்கம்-244. 'மெய்யே பொருண்மேல்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(நெய் இலை வேல் வள்ளல், கூற்று, பிரிவற்றம் பார்த்து, எங்கள் வாழ்நாளைக் கொள்ள உழலும்; (ஆதலின்), மெய்யே பொருண்மேற் பிரிதியேல், நினக்கு வேறொரு தையலார் நாட்டம் தகும்,' என இயைக்க.)

நெய்யைத் தடவிய அச்சவடிவமான வேலை ஏந்திய வள்ளலே, கூற்று, நீ எங்களைப் பிரியுஞ் சமயத்தை எதிர் நோக்கி, (நீ பிரிந்த பொழுதே) எங்கள் வாழ்நாளைக் கொள்ளும்பொருட்டுத் திரியாநிற்கின்றது; ஆதலின், நிச்சயமாகப் பொருண் மேல் (விருப்பங்கொண்டு எங்களைப்) பிரிந்து செல்வையாயின் உனக்கு வேறொரு மனையாளைத் தேடுதல் தகுதியாம்.

'வேறொரு தையலை நாடத்தகும்' என்பது தண்டியின் பாடம். 'உழலுமாம்' என்பதில் 'ஆம்' என்பது அசை.

16. இரக்கத் தடை மொழி

பக்கம்-244. 'ஊச றொழிலிழக்கும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'நாளையே' என்றிருப்பது, தண்டியில் 'நாளையெம்' என்றும், இதன்கண் 'இதண்' என்பது, தண்டியில் 'இவண்' என்றும் இருக்கின்றன. இது கற்பியலது ஆதலின், 'இதண்' என்னும் பாடம் ஏற்புடையதன்று.

('வள்ளலே, நாளை எம் பூங்குழலி நீங்க, ஊசல் தொழில் இழக்கும்; மயில் ஒப்பு இழக்கும்; சுனை வாசம் இழக்கும்; பொழில் தேசு இழக்கும்; அந்தோ! இவண் எழில் இழக்கும்' என இயைக்க).

ஈகைக் குணமுடையீர், (உம்முடைய பிரிவால்) நாளை எம்முடைய பூங்குழலையுடைய தலைவி உயிர் நீங்குதலால், ஊசல், (ஆடுதலாகிய) தொழிலை இழக்கும்; மயில் உவமையை இழக்கும்; சுனை வாசனையை இழக்கும்; சோலை ஒளியை இழக்கும்; இவ்விடம் ஒளியை இழக்கும்.

இப்பாடமே சரியானது. இதன்படி ஈண்டுப் பொருள் எழுதப்படும்.

(அன்பரே,) பொருண்மேற் செல்ல உமக்குத் திருவுள்ள மாயின், (அதன் பின்னர் நடக்குஞ் செயலை) யானறியேன்; எங்கள் தோழி உம்முடைய மணங்கமழும் மாலை அணிந்த வளப்பமாகிய மார்பின்கண் தங்கும் தன்னுடைய அழகிய விழிகளின் பார்வையை மென்மையாகிய இமைகள் விலக்கினு லும் வருந்துவாள்; ஆதலின், (அவள் நும்பால் கொண்ட) காதலைப் போக்கிவிட்டுப் பொருண்மேற் செல்வீராக.

23. குணத் தடை மொழி

பக்கம்-245. 'மாதர் துவரிதழ்வாய்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இச்செய்யுளே இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'மைந்த ருயிர்கவரும்' என்றிருப்பது, தண்டியில் 'வந்தென் னுயிர் கவரும்' என்றும், இதன்கண் 'சீத முறுவல் செயலழிக் கும்' என்றிருப்பது, தண்டியில் 'சீத முறுவ லறிவழிக்கும்' என்றும், இதன்கண் 'மீதுலவா' என்றிருப்பது, தண்டியில் 'மீதுலவி' என்றும், இதன்கண் 'மதர்விழிகள்' என்றிருப்பது, தண்டியில் 'மதர்விழியென்' என்றும் பாடம் இருக்கின்றன. தண்டியலங்காரத்துப் பாடமே ஏற்புடையதாயிருக்கின்றது. ஆதலின் அப்பாடமே கொள்க.

(இந்நங்கையர்தம்) அழகிய பவழம் போன்ற இதழ்களை யுடைய வாயானது வந்து என் உயிரைக் கவராநிற்கின்றது; குளிர்ந்த நகையானது (வந்து) என் அறிவை அழியாநிற்கின் றது; நீண்ட அழகிய விழிகள் (காதுகளின்மீது) உலவி (வந்து) என் நெஞ்சைப் பிளந்து உலவாநிற்கின்றன; இத் தகைய வாய் முதலிய உறுப்புக்களை உடைய இவர்க்கு மென்மை எங்குள்ளதோ? (நெஞ்சே, சொல்வாயாக).

24. உடன்பாட்டுத் தடை மொழி

பக்கம்-245. 'அப்போ தடுப்பது' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண்

'இசைகின்றுள்' என்றிருப்பது தண்டியில் 'இயைகின்றுள்' என்றிருக்கின்றது. இவை இரண்டும் ஒரு பொருளனவே.

குற்றமில்லாத பொருளேயும் புகழையும் உண்டாக்குதற்கு மேல் இவளேப் பிரிந்து போக விரும்பி இருப்பவரே, (நீர் தெரிவித்த பிரிவுக்கு) இப்போது இவளும் உடன்படாநின்றுள்; நீர் பிரிந்த அப்பொழுது இவளுக்கு என்ன அடுக்கும் என்பதனை யானறியேன்; மாலைப் பொழுதின்கண் இருளும் நிலவும் வரும். (அதனை நீர் அறிவீர்).

ஓகாரங்கள் எண்ணும் பொருளன.

'வெண்ணெயோ விதுரனிட்ட விருந்தையோ வேலை சூழ்ந்த
மண்ணையோ வுண்டு முன்னுள் வருபசி தீர்ந்த மாயோன்.'

(நன். இடையியல் சூ. 4. இ. கவிராயர் உரை மேற்கோள்)

என்றதன்கண்ணும் ஓகாரம் எண்ணுப் பொருளில் வந்திருத்தலை நோக்குக. இது 'புதியன புகுதல்' என்றறிக.

25. பொருள் தடை மொழி

பக்கம்-246. 'கண்ணு மனமும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'எண்ணலருளும்' என்றிருப்பது தண்டியில் 'அண்ணலருளும்' என்றும், இதன்கண் 'கொண்டுசுழல்' என்றிருப்பது, தண்டியில் 'கொண்டுலவும்' என்றும் இருக்கின்றன. 'அண்ணலருளும்' என்னும் பாடம் மோனையும் பொருட்சிறப்பும் உடையதாயிருக்கின்றது.

நம்முடைய தலைவன், தன்னுடைய கண்களையும், மனத்தையும் கவர்ந்துகொண்ட நங்கையர் விளையாடும் இடம் என்று கூறி அருளிய அடையாளத்தினை உடைய இச்சோலையின்கண் குளிர்ந்த நிழலினையுடைய சூழலிடத்தைக் கைக்கொண்டு உலவித் திரியாநிற்கும் ஒளியுருவின் கூட்டம் காணப்படுகின்றதேயன்றி நாம் காணக் கருதி வந்த அந்நங்கையரது வடிவம் காணப்படவில்லை.

இதன்கண் சோதித்திரளாகிய பண்பு காணப்படுகின்றதேயன்றி அப்பண்பினையுடைய பண்பியாகிய வடிவப் பொருள் காணப்படவில்லை எனப் பொருளை விலக்கினமையாற் பொருள் தடை மொழியாயிற்று.

26. வாழ்த்துத் தடை மொழி

பக்கம்-246. 'செல்லு நெறியனைத்தும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இச்செய்யுளே இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'அகன் றுறையி னுங்கோர்' என்றிருப்பது, தண்டியில் 'அகன்றுறைவ தாங்கோர்' என்றிருக்கின்றது. 'அகன்றுறைவதாங்கோர்' என்னும் பாடம் பொருட் சிறப்புடையதாம்.

('வெல்லும் அடல் தேர் விடலாய், நீ) செல்லும் நெறி அனைத்தும் சேம நெறி ஆக; நிதியம் மல்க; வளம் சிறக்க; யாம் (நீ) அகன்று உறைவது ஆங்கு ஓர் இடத்துப் பிறக்க,' என இயைக்க.)

பகைவரை வெல்லுகின்ற வலிமையினை உடைய தேர்ச் சேனையை உடைய வீரனே, நீ பொருள் கருதி எங்களைப் பிரிந்து செல்லும் வழி முழுதும் காவலாகிய வழியாகுக! உனக் குச் செல்வம் பெருகுவதாக! (உன் இளமையின்) அழகு சிறப்ப தாக; நீ எங்களைப் பிரிந்து உறைவதாகிய அங்கு ஓரிடத்தில் நாங்கள் பிறப்போமாக!

27. துணை செயல் தடை மொழி

பக்கம்-246. 'விளைபொருண்மேல்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'முன் னம்' என்றிருப்பது தண்டியில் 'முன்னே' என்றும், இதன்கண் 'தோன்றுமுன்' என்றிருப்பது தண்டியில் 'வாராமல்' என்றும் இருக்கின்றன. தண்டியலங்காரத்துப் பாடத்தைக் கொள்க.

('விளைதேன் புடை ஊறு பூந்தார்ப் புனைகழலாய், அண் ணல், விளைபொருண்மேல் விரும்பினையேல் ஈண்டு எம் கிளை அழுகை கேட்பதற்கு முன்னம் போக்கிற்கு இடையூறு வாராமல் ஏகு' என இயைக்க.)

மேன்மேற் பெருகும் தேன் பக்கங்களிற் சுரந்து பாயும் பூமாலையினையும், அலங்கரிக்கப்பட்ட வீரக்கழலினையும் உடைய மேலோனே, நன்மை உண்டாதற்குக் காரணமாகிய பொருண் மேற் (செல்ல) நீ விரும்பினையாகில், இவ்விடத்து (உன்னு

டைய பிரிவை ஆற்றுமல் எம்முடைய தோழி இறத்தலைக் கண்டு) எம்முடைய சுற்றத்தவர் அழும் அழுகை கேட்பதற்கு முன் உன்னுடைய செலவிற்கு இடையூறு வாராமல் செல்க.

28. இறந்தகாலத் தடை மொழி

பக்கம்-246. 'பாலன் றனதுருவாய்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'நீ துயின்றாய்' என்றிருப்பது, தண்டியில் 'கண்டுயின்றாய்' என்றும், இதன்கண் 'வேலைசேர் நீரதோ' என்றிருப்பது தண்டியில் 'வேலைநீ ருள்ளதோ' என்றும் இருக்கின்றன.

சோலைகளாற் சூழப்பட்ட (கோவர்த்தன) மலையை எடுத்தவனே, நீ ஏழுலகையும் உண்டு,பாலன் உருவத்தைக்கொண்டு, ஆலிலையின்மீது துயின்றாய் என்பது உலகினர் மெய் என்று சொல்வர். அன்று அந்த ஆலிலை கடல் நீரிலிருந்ததோ? விண்ணுலகில் இருந்ததோ ? மண்ணுலகில் இருந்ததோ ? சொல்.

உலகங்கள் உண்ணப்பட்ட காலத்தில் ஆலிலை ஒன்று தனியாக இருந்தது என்பது பொருந்தாது என்று அது குறிப்பினால் விலக்கப்பட்டது. இது முன் பிரளயத்தில் நிகழ்ந்த செய்தியை விலக்கலின் இறந்த காலத் தடை மொழியாயிற்று. இதனால் அவ்வாறு உலகமுழுதும் உட்கொண்ட காலத்தில் ஆலிலை ஒன்று தனியாக இருந்தது என்பது பொருந்தாது என்று அதனை விலக்கிச் 'சோலை சூழ் குன்று எடுத்தாய்' என்றதனால் இங்ஙனமாகிய அற்புதச் செயலைச் செய்ய வல்லார்க்கு அதுவுமாம் என்று இறைவனது ஆற்றலின் மேன்மை விளக்கப்பட்டது என்றறிக.

29. நிகழ்காலத் தடை மொழி

பக்கம்-246. 'நகையு முவகையும்' என்னுஞ் செய்யுள்.

(துறந்தார்க்கு அருளினால் உண்டாகிய) நகையும் - (முகத்தின்கண்) நகையையும், உவகையும் - (மனத்தின்கண்) மகிழ்ச்சியையும், கொல்லும் - கொன்றுகொண்டு எழுகின்ற, சினத்தின் - கோபத்தைவிட, பிற - வேறாகிய, பகையும் உளவோ - பகைகளும் இருக்கின்றனவோ? (இல்லை.)

டைய பிரிவை ஆற்ருமல் எம்முடைய தோழி இறத்தலைக் கண்டு) எம்முடைய சுற்றத்தவர் அழும் அழுகை கேட்பதற்கு முன் உன்னுடைய செலவிற்கு இடையூறு வாராமல் செல்க.

28. இறந்தகாலத் தடை மொழி

✓ பக்கம்-246. 'பாலன் றனதுருவாய்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'நீ துயின்ருய்' என்றிருப்பது, தண்டியில் 'கண்டுயின்ருய்' என்றும், இதன்கண் 'வேலைசேர் நீரதோ' என்றிருப்பது தண்டியில் 'வேலைநீ ருள்ளதோ' என்றும் இருக்கின்றன.

சோலைகளாற் சூழப்பட்ட (கோவர்த்தன) மலையை எடுத்தவனே, நீ ஏழுலகையும் உண்டு,பாலன் உருவத்தைக்கொண்டு, ஆலிலையின்மீது துயின்ருய் என்பது உலகினர் மெய் என்று சொல்வர். அன்று அந்த ஆலிலை கடல் நீரிலிருந்ததோ? விண்ணுலகில் இருந்ததோ? மண்ணுலகில் இருந்ததோ? சொல்.

உலகங்கள் உண்ணப்பட்ட காலத்தில் ஆலிலை ஒன்று தனியாக இருந்தது என்பது பொருந்தாது என்று அது குறிப்பினுல் விலக்கப்பட்டது. இது முன் பிரளயத்தில் நிகழ்ந்த செய்தியை விலக்கலின் இறந்த காலத் தடை மொழியாயிற்று. இதனுல் அவ்வாறு உலகமுழுதும் உட்கொண்ட காலத்தில் ஆலிலை ஒன்று தனியாக இருந்தது என்பது பொருந்தாது என்று அதனை விலக்கிச் 'சோலை சூழ் குன்று எடுத்தாய்' என்றதனுல் இங்ஙனமாகிய அற்புதச் செயலைச் செய்ய வல்லார்க்கு அதுவுமாம் என்று இறைவனது ஆற்றலின் மேன்மை விளக்கப்பட்டது என்றறிக.

29. நிகழ்காலத் தடை மொழி

✓ பக்கம்-246. 'நகையு முவகையும்' என்னுஞ் செய்யுள்.

(துறந்தார்க்கு அருளினுல் உண்டாகிய) நகையும் - (முகத்தின்கண்) நகையையும், உவகையும் - (மனத்தின்கண்) மகிழ்ச்சியையும், கொல்லும் - கொன்றுகொண்டு எழுகின்ற, சினத்தின் — கோபத்தைவிட, பிற - வேருகிய, பகையும் உளவோ - பகைகளும் இருக்கின்றனவோ? (இல்லை.)

போ யருநிதியம்' என்றிருப்பது, தண்டியில் 'சூழ்போ யரும் பொருள்' என்றும், இதன்கண் 'இனைத்தளவே யென்றற் கரிதாய்' என்றிருப்பது, தண்டியில் 'இனைத்தளவைத் தென்றற் கரிதாம்' என்றும் இருக்கின்றன.

'அனைத்துலகும்' என்றதனை 'உலகு அனைத்தும்' என இயைக்க.

மன்னவனே, உலக முழுவதையுஞ் சூழ்ந்து அரிய பொருள்களைத் தன்பாற்கொண்டு இவ்வளவினையுடையது என்று அறிவதற்கு அரியதாயுள்ள குளிர்ச்சியை உடைய கடலானது, (பகை வேந்தர்களின்) நாடுகள் முழுவதையுஞ் சூழ்ந்துகொண்டு அந்நாடுகளில் உள்ள அரிய பொருள்களையெல்லாங் கைக்கொண்டு, இவ்வளவினை உடையது என்று அறிவதற்கு அரிதாகிய நின்னுடைய சேனையைப் போன்றிருக்கின்றது; (ஆயின்,) அது நீர் வடிவினது என்று சொல்லப்படும் இக்குணம் ஒன்றே அதன்கண் வேறுபட்டிருக்கின்றது.

இதில் 'போலும்' என்ற செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று, 'செய்யுமென்.........முற்றேல். உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே' (நன்னூல் சூ. 341.) என்ற விதிப்படி ஈற்றுயிர் கெட்டு, 'ல ள... ...இருவழியானும், மெலிமேவின் னணவும்' என்ற விதிப்படி மகரம் வர, லகர மெய் னகர மெய்யாகத் திரிந்து 'போன்ம்' என்றாயிற்று. அங்ஙனமாகிய மகர மெய் வருமொழி முதலில் மெல்லினம் வரக்கெட்டது.

இதில் கடல், சேனை என்னும் இரு பொருளுக்கு ஒப்புமை கூறி, அவற்றுள் கடலாகிய ஒரு பொருளுக்கு 'நீர் வடிவிற்று' என்னும் வேறுபாடு கூறினமையின், இஃது ஒருமை விதிரேகமாயிற்று,

2. இருமை விதிரேகம்

பக்கம்-247. 'வேங்கைவன நாடன்' என்னுஞ் செய்யுள்.

அழகிய வேங்கை நாடனும், விசயனும், வாடைக்கு அதிபனுமாகிய உயர்ந்த புகழினையுடைய உதயாதித்தனுக்கு அவனைப்போல(உலகினைக்)காக்கும் கடலானது(உலகினைக் காத்தல் முதலிய பல குணங்களால்) ஒப்பாகும் என்றாலும், அவன்

செந்நிறத்தினை உடையவன்; அக்கடலானது கருநிறத்தினை உடையது.

3. சிலேடை விதிரேகம்

பக்கம்-248. 'ஏறடர்த்து' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

ஏழு எருதுகளைத் தழுவி, வில்லை முறித்து (திருவடிகளால் அளந்து) எல்லா உலகங்களையுங் கைக்கொண்டு, பகைவர்களை அழித்த சக்கரத்தினை வலப்புத்துக் கரத்தில் ஏந்திய (இகல் நெடுமாலை) வணங்காதார் உலகில் இல்லை என்றாலும், இகல் நெடுமால் மாயனுவன் (வஞ்சிப்பவன், மாயன் என்னும் பெயரை யுடையவன்); பாண்டியருடைய சுறவேற்றுக் கொடியை அழித்து, (சேரர்களுடைய) விற்கொடியைச் சிதைத்து எல்லா நாடுகளையுங் கைக்கொண்டு தன்னை ஒப்பான வேந்தர்கள் இல்லை எனச்செய்து, (உலக முழுதினும்) தன் ஆஞ்ஞாச் சக்கரத்தைச் செலுத்தலில் வல்லவனுகிய சோழன் வஞ்சியான் (வஞ்சனை செய்யாதவன், கருவூரை உடையவன்).

இகல் நெடுமால் ஏறு தழுவியது கிருஷ்ணவதாரத்தில், வில்லை முறித்தது இராமாவதராத்தில், எல்லா உலகங்களையுங் கைக்கொண்டது திரிவிக்கிரமாவதராத்தில் என்க. ஏற்றுக்கொடி-காடவர்கோன் கொடி என்றலுமாமென்பர். 'எவ்வுலகும்' என்றதனைச் சோழனுக்குக் கொள்ளும்போது உலகு என்பதற்கு 'நாடு' என்று பொருள் கொள்க.

[இதிற் சிலேடையினுல் இகல் நெடுமாலுக்கும் சோழனுக்கும் ஒப்புமையும் வேற்றுமையுந் தோன்றக் கூறப்பட்டிருத்தலை நன்கு நோக்குக.]

4. உயர்பு விதிரேகம்

தண்டியலங்காரத்தில் இஃது 'உயர்ச்சி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-248. 'மலிதேரான் கச்சியும்' என்னுஞ் செய்யுள்.

மிக்க தேர்ச் சேனையினையுடையனுகிய (எங்கள்) மன்னனது கச்சிப்பதியும் பெரிய கடலும் ஒலியினுலும் பெருமையி

ணுலும் தம்முள் ஒப்பனவாம் ; (ஆயினும்) மிக்க தேர்ச்சேனை யினையுடையனுகிய (எங்கள்) மன்னனது கச்சிப் பதியின்கண் கிடைப்பனவெல்லாம் கடலின்கண் கிடையா ; கடலின்கண் கிடைப்பனவெல்லாங் கச்சிப்பதியின்கண் கிடைக்கும்.

5. காரகவேது விதிரேகம்

பக்கம்-248 'வன்மை யுயர்பு' என்னுஞ் செய்யுள்.

(கடல், அலையின்வாய் மாசு ஒன்றலால், அது காசினியைச் சூழ்ந்தும் மன்னவரை நேரமாட்டாது,' என இயைக்க.)

வலிமையும், மேன்மையும், ஒழுங்கினது முறைமை என்னுஞ் செல்வமும், உயர்ந்த புகழும் என்னும் (இவற்றின்) பொருத்தத்தினுல் (மன்னவர்க்கும், கடலுக்கும் ஒப்புமை) உண்டாயினும் கடலானது தன் அலைகளில் மாசு படியப் பெற்றிருத்தலால் அஃது உலகினைச் சூழ்ந்திருந்தாலும், அரசர்களை ஒப்பாகாது.

6. ஞாபகவேது விதிரேகம்

பக்கம் - 248. 'உளதென்,' என்னுஞ் செய்யுள்.

இதன் பொருளை ஆய்ந்து கொள்க.

7. சாதி விதிரேகம்

பக்கம் - 248. 'கல்லாதார் வாயில்' என்னுஞ் செய்யுள்.

கல்வி யறிவில்லாதவர்களுடைய வாயினின்று உண்டாகும் கடுஞ்சொற்களாகிய கரும்பாம்பு சென்று நற்குணமுடையவர்களை மிகவுங் கடித்து வருத்தும்; அதன் நஞ்சினைப் போக்குதற்குச் சொற்களாற் சொல்லப்படும் மந்திரம் ஒன்றுமில்லை; அதின் வேருகிய உபாயமும் ஒன்றுமில்லை; இதுவே அதன் குணமாகும்.

8. ஒப்பு விதிரேகம்

பக்கம் - 248. 'மாதராய் நின்வதனம்' என்னுஞ் செய்யுள்.

அழகுடைய பெண்ணே, நின்முகமும் செந்தாமரை மலரும் என்று சொல்லப்பட்ட இவ்விரண்டின் மேன்மையாகிய தகுதி யான வேற்றுமையைக் கூறின், நின்முகம் நின்னிடத்துள்ளது; செந்தாமரை மலர் மிக்க நீரினிடத்துள்ளது. (இதுவன்றி வேறு வேற்றுமை இன்று என்பது.)

இங்ஙனம் கூறிய வேற்றுமையினால் முகமும் கமலமு மாகிய இரண்டற்கும் ஒப்புமை தோன்றுதல் காண்க.

விபாவனை அணியின் வகை

இது தமிழில் **'பிறிதாராய்ச்சி அணி'** என்றும், **'வெளிப் பாட்டு நிலை அணி'** என்றுங் கூறப்படும்.

1. இயல்பு விபாவனை

பக்கம் - 249. 'தீயின்றி வேந்தமியோர்' என்னுஞ் செய்யுள்.

தலைவர்களைப் பிரிந்திருக்கும் மாதர்களின் மனம் நெருப் பில்லாமலே வேகும்; மயில்கள் வளப்பமாகிய தேனை வாயிற் கொள்ளாமலே களிப்புற்று ஆடும்; சில மாதர் ஊடல்தீர்ப்பார் இல்லாமலே ஊடல் தீர்ந்தார்; மேகம் போரில்லாமலே கோபித்து வில்லை வளைக்கும்.

தண்டி அலங்காரத்தில் இச்செய்யுளில் கார்காலம் ஊகித் துக் கொள்ளப்பட்டதாகக் கொண்டு இஃது அயற்காரண விபாவனை என்று கூறப்பட்டிருக்கின்றது.

2. குறிப்பு விபாவனை

பக்கம் - 249. 'கடையாமே கூர்த்த' என்னுஞ் செய் யுள்.

(சித்திரித்த பாவைபோன்ற அழகிய) பெண்ணே, உன் னுடைய கரிய நெடிய கண்கள் கடையாமலே கூர்மை கொண் டன; உன்னுடைய தனங்கள் ஆய்ந்து அமைக்காமலே நன்கு அமைந்தன; உன்னுடைய புருவங்கள் கடைப்பக்கம் அழுங் கும்படி வளைக்கப்படாமலே வளைந்தன; உன்னுடைய பாதங் கள் சாதிலிங்கக் குழம்பு பூசப்படாமலே சிவந்தன.

தண்டியலங்காரத்தில் இஃது இயல்பு விபாவனைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

விபாவனை அணிக்குத் தண்டியலங்காரத்திற் கூறிய இலக்கணம் இந்நூலிற் கூறிய இலக்கணத்தின் வேறாயிருக்கின்றது:

அஃது

'உலகறி காரண மொழித்தோன் றுரைப்புழி
வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்.'

என்பது. இதற்கு அந்நூலின் உரையாசிரியர் கூறிய உரை, 'ஒன்றன் வினை உரைக்குங்கால் அவ்வினைக்குப் பலரும் அறியவரும் காரணத்தை ஒழித்துப் பிறிதொரு காரணமாக இயல்பாகக் குறிப்பின் வெளிப்பட உரைப்பது விபாவனை என்னும் அலங்காரமாம் என்பது.

ஈண்டுப் 'பிறிதொரு காரணமாக இயல்பாகக் குறிப்பின் வெளிப்பட' என்பதன் கருத்து, 'அவ்வினை பிறிதொரு காரணத்தால் அன்றி இயல்பாக உளதாயிற்று என்பது குறிப்பினால் வெளிப்படும்படி' என்பதாகும்.

இதன்படி 'தீயின்றிவேம்' என்பதனை அயற்காரண விபாவனை என்றும், 'கடையாமே கூர்த்த' என்பதனை 'இயல்பு விபாவனை' என்றுமே கூறுதல் வேண்டும்.

திரு. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார் பதிப்பித்த தண்டியலங்காரத்தில் இவ்விரு மேற்கோட் செய்யுட்களின் கீழ் அவர் எழுதிய குறிப்புரையில்,

'வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது'

என்பதற்குப் 'பிறிதொரு காரணம் இயல்பினாலாவது, குறிப்பினாலாவது வெளிப்படும்படி சொல்வது' என்று உரைத்து, 'தீயின்றி' என்ற செய்யுளை இயல்புகாரண விபாவனை என்றும், 'கடையாமே' என்ற செய்யுளைக் குறிப்புக் காரண விபாவனை என்றும் காட்டுவாரும் உளர்; அது முதனூற் கொள்கைக்கும், மற்றை அணிநூல்களின் போக்குக்கும், உதாரணச் செய்யுள்களின் பொருளமைதிக்கும் பொருந்தாதென உணர்க' என்றதனை ஈண்டு நோக்குக.

அவர் ஈண்டுப் பிறன் கோட் கூறலாகக் கூறிய உரையிற் காணும் இலக்கணம் இவ்வணிக்கு இந்நூலாசிரியர் கூறிய இலக்கணத்தை ஒத்திருத்தலையும் நோக்குக.

3. காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்தும் விபாவனை

பக்கம்-249. 'பூட்டாத விற்குனித்து' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தில் இது 'வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்துவது' என்று கூறப்பட்டிருக்கின்றது. அதில் இச்செய்யுளே இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப் பட்டிருக்கிறது.

இதில் 'பொங்கு முகிலோங்கும்' என்றிருப்பது தண்டியில் 'பொங்கு முகிலெங்கும்' என்றிருக்கிறது.

பரவி எழுந்த மேகங்கள் நாணி பூட்டாத வில்லை வளைத்து, தீட்டாத அம்பை எங்கும் பொழிகின்றன; மயில்கள் கூட்டமாய்க் காணாத கண்களைப் பரப்புகின்றன; (இத்தன்மைத் தான கார்ப்பருவத்தில் யாம் இறந்துபடுவதனலாகும்) கொடிய பழிக்கு நம்முடைய தலைவர் நாணுதலின்றி நம்மை மறந்துவிட்டனர்.

பூட்டாத வில் - இந்திர வில், தீட்டாத அம்பு - நீர், காணாத கண் - மயிற் பீலியின் கண்கள், தோகை-மயில், சினை யாகுபெயர்.

இதிற் பூட்டாத வில், தீட்டாத அம்பு, காணாதகண் என்பன பிற குறிப்பு.

விபாவனையின்பாற்படும் வேறு சில செய்யுட்கள்

பக்கம்-250. 'காரண மின்றி' என்னுஞ் செய்யுள்.

பொதிகை மலையினின்று வருந் தென்றற்காற்றானது காரணம் யாதுமின்றி வெப்பஞ் செய்கின்றது; (இயல்பிற்) குளிர்ச்சியையுடைய சந்திரன் வெப்பத்தினைச் செய்தற்குக் காரணம் யாது? யாம் தளரும்படி இவ்வழகிய மாதர்க்குத்

கண்கள் காரணமின்றி இயல்பாக நீண்டிருக்கின்றன ; (இவருடைய) தனங்களும், காரணமின்றி இயல்பாகத் தாமே திரண்டிருக்கின்றன.

தண்டியலங்காரத்தில் இச்செய்யுள் பொது வகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்துவதற்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 250. 'பாயாத வேங்கை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இச்செய்யுள் மேற்காட்டிய செய்யுளின் கீழ்க் குறிக்கப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'என்றெண்ணி' என்றிருப்பது தண்டியில் 'என்றஞ்சி' என்றும், இதன்கண் 'நின்றுறங்கும்' என்றிருப்பது தண்டியில் 'மாறதிரும்' என்றும், இதன்கண் 'வரல்' என்றிருப்பது தண்டியில் 'வரவு' என்றும் இருக்கின்றன.

கூர்மையைக் கொண்ட வேலை ஏந்தியவரே, பாயாத வேங்கை மலர, அதனைக் கண்டு மலராத புண்டரிகம் என்று எண்ணி அச்சமுற்றுத் தம்மிடம் வரும் பெண் யானைகளை ஆண் யானைகள் தழுவிக்கொண்டு (அம்மலராத புண்டரிகத்திற்கு) மாறுகப் பிளிறும் காட்டில் (நீர்) தனியாக வருதல் தவறும்.

இதிற் பாயாத வேங்கை-வேங்கைமரம், (பாயும் வேங்கை-புலி), பூவாத புண்டரிகம்-புலி (பூக்கும் புண்டரிகம் - தாமரைக் கொடி.)

பாயாத வேங்கை, பூவாத புண்டரிகம் என்பனவும் பிற குறிப்பேயாம்.

சுருக்கு அணியின் வகை

இது, தண்டியலங்காரத்தில் 'ஒட்டணி' என்று கூறப்பட்டிருக்கின்றது. இது 'பிறிது மொழிதல்' எனவும், 'நுவலா நுவற்சி' எனவும், 'தொகை மொழி' எனவுங் கூறப்படும். உவமப் போலி எனப்படும் உள்ளுறையுவமமும் ஒரு வகையான் இதன்பாற்படும்.

1. அடையும் பொருளும் அயல்பட மொழிதல்

பக்கம்-250, 'வெறிகொளினச்சுரும்பு' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'காவில்' என்றிருப்பது தண்டியில் 'காவி' என்றிருக்கின்றது.

(தான் 'சேர்ந்து நிறைமது உண்டு ஆடுதற்கு உரியதும், தன் முகத்துச் செவ்வி உடையதுமாகிய ஓர் வள் தாமரை பிரிந்த வண்டு, வெறி கொள் இனச் சுரும்பு மேய்ந்தது ஓர் காவிக் குறைபடு தேனும் வேட்டுக் குறுகும்' என இயைக்க.)

தான் சேர்ந்து நிறைந்த தேனை உண்டு விளையாடுதற்கு உரியதும், தன்கண் செவ்வியினை உடையதுமாகிய ஒப்பற்ற வளப்பமாகிய தாமரையைப் பிரிந்த வண்டானது, களிப்பினைக் கொண்ட பல வண்டுகள் உண்டு வெறுத்துவிட்டதாகிய ஒரு காவி மலரின்கண் உள்ள (பல வண்டுகள் உண்டதனால்) குறைந்திருப்பதாகிய தேனையும் (உண்ண) விரும்பி அக்காவி மலரைச் சாரும்.

இதில் கவிஞரால் கருதப்பட்ட பொருள், தலைமகன் தலைவியைப் பிரிந்து பரத்தையைச் சேர்தல்; அதனை மறைத்து அது புலப்படுதற்குச் சொன்ன பொருள், வண்டு தாமரையைப் பிரிந்து காவி மலரைச் சேர்தல்.

'நிறை மது' என்றது, தலைவி கற்புடையளாதலின், அவள் மாட்டெய்தும் குறைபடுதல் இல்லாத இன்பத்தினை என்றும், 'வெறிகொள் இனச் சுரும்பு மேய்ந்ததோர் காவிக் குறைபடு தேன்' என்றது 'பலரும் கூடுதலின், பரத்தையின்மாட்டெய்தும் குறைப்பட்டுள்ள இன்பத்தினை' என்றுங் கொள்க.

ஈண்டுப் பொருள் என்றது அடைகொளியை; அதாவது, அவ்வடையைக் கொண்ட பொருளை. 'அடை' என்பது 'விசேடணம்' எனவும், 'அடைகொளி' என்பது, 'விசேடியம்' எனவும் வடமொழியிற் கூறப்படும். 'விசேடியம்' என்பதற்கு 'விசேடணத்தால் விசேடிக்கப்பட்ட பொருள்' என்பது பொருளாகும்.

அடையும் பொருளும் அயல்பட மொழிதலாவது, அடையும் (விசேடணமும்), அடைகொளியும் (விசேடியமும்) மறைத்த பொருளினின்று வேறுபட்டிருக்கக் கூறுவது என்றுணர்க.

2. அடை பொதுவாக்கிப்பொருள்வேறுபட மொழிதல்

பக்கம்-250. 'உண்ணிலவு நீர்மைத்தாய்' என்னும்செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'நின்றெமக்கிங் கோங்கிய' என்றிருப்பது தண்டியில் 'நின்றெமக்கே ஓங்கிய' என்றிருக்கின்றது.

'மனத்துள்ளே உண்டாகிய குணங்களை உடையதாய்ப் பயர்க்கும் நீங்காமல் உதவியை அளித்துத் தண் அளி உடைய தாகிய மலர்ந்த முகத்தையும் கண்ணோட்டத்தையும் உடைய தாய்ப் பிரிதற்கரிய மென்மையோடு கூடி நிற்பது தன்னை அடையும் எம் பொருட்டு' என ஒரு வள்ளல்மேலும்,

'நடுவிற் பொருந்திய நீரையும் மேகம் போன்ற நிறத்தை யுடைய இருளையும் உடையதாய் மாறுமல் பல வளங்களைக் கொடுத்துக் குளிர்ச்சியையும் வண்டுகளையும் கொண்ட மலர்க ளைத் தன்பாற்கொண்டு தேனைச் சொரிந்துவிட்டு நீங்குதற்கு அரிய நிழலை உடையதாய்த் தன்னிடத்தில் வரும் எம்பொருட்டு ஓங்கி நிற்பது' எனச் சோலையின் மேலும் பொருள் கொள்க.

வள்ளல்மேற்செல்லுங்கால்:—உள் - மனம், நிலவு - உண் டாகும், நீர் - குணம், பயன் - உதவி, சுரந்து - அளித்து, தண் அளி - குளிர்ந்த அருள், கண்ணெகிழ்ந்து - கண்ணோட்ட முடையதாய், நிழல் - மென்மை எனவும்,

சோலையின்மேற்செல்லுங்கால்:—உள் - சோலையின் நடு, நிலவு - பொருந்திய, நீர் - புனல், மைத்து - மேகம்போன்ற நிறத்தினை உடையது; இருள், பயன் - பழம், சுரந்து - கொடுத்து, தண் அளி - குளர்ச்சியும் வண்டும், மலர் - பூ, கள் நெகிழ்ந்து-தேனைச் சொரிந்து எனவுஞ் சொற்பொருள் கொள்க.

இதிற் கவியிறுற் கருதப்பட்ட பொருள் வள்ளல்; அப் பொருளை மறைத்து அது புலப்படுதற்காகச் சொன்ன பொருள் சோலை. 'உள் நிலவு நீர்மைத்தாய்' என்பது முதலியன அவ் விரண்டற்கும் பொதுவாகிய அடைமொழிகளாகும்.

3. அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்

/ பக்கம்-250. 'தண்ணளிசேர்ந் தின்சொல்' என்னுஞ் செய் யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

முற்பிறப்பிற் செய்த தவமானது, தண் அளி சேர்ந்து, இன்சொல் மருவும் தகைமைத்து ஆய், மண்ணுலகில் பிறந்து நமக்கு எண்ணிய எப்பொருளும் எந்நாளும் அளித்து வாழும் ஒரு முகிலைத் தந்தது என இயைக்க.

இதிற் கவியிறுற் கருதப்பட்ட பொருள் வள்ளல்; அதனை மறைத்து அது புலப்படுதற்காகக் கூறிய பொருள் மேகம.

இதில் 'தண் அளி சேர்ந்து இன்சொல் மருவும் தகைமத் தாய்' என்பது வள்ளலுக்கும் முகிலுக்கும் பொதுவாகியும், 'எண்ணிய எப்பொருளும் மண்ணுலகில் வந்து நமக்கு அளித்து வாழும்' என்னும் அடைமொழிகள் மேகத்தின்மேற் செல்லாமல் வள்ளலுக்குச் சிறப்பாகியும் நிற்றலின், இதன் கண் அடை விரவின வாம் என்று கொள்க. 'இன்சொல் வள்ளலுக்குச் சிறப்பு; பிற பொது' என்றார், திரு. அ. குமார சுவாமிப் புலவர் அவர்கள். இதனை அவர் புதுக்கிப் பதிப்பித்த தண்டியலங்காரத்திற் காண்க.

வள்ளல்மேற் செல்லுங்கால்:— தண் அளி - குளிர்ந்த அருள், இன்சொல் - இனிய சொற்கள், மருவும் - பொருந்தும், தகைமை - மேன்மையாகிய குணம் எனவும்,

மேகத்தின்மேற் செல்லுங்கால்:— தண் அளி - குளிர்ந்த நீரைச் சொரிதல், இன்சொல் - இனிய புகழ், மருவும் - உண்டாகும், தகைமை - தன்மை எனவும் பொருள் கொள்க.

4. அடை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்

பக்கம்-250. 'கடைபோ லுலகியற்கை' என்னுஞ் செய்யுள்.

மிகவும் தாழ்வுடையது போலும் உலகத்தின் இயல்பு; தன்னை அடைபவர்க்கு அருமையுடையதாயிராமல், நல்ல தேன் போன்ற இனிதாகிய சுவையையுடையதாய்க் கருமையைக் கலவாத கடலானது, காலத்தின் தீமையாலே முற்றும் வறுமை யுடையதாயிற்று.

இதிற் கவியினுற் கருதப்பட்ட பொருள் வள்ளல். அதனை மறைத்து அது புலப்படுவதற்காகச் சொன்ன பொருள் கடல்.

அடைபவர்க்கு எளிமையும், தேன்போலும் இனிமையும், தன்கண் கருமை கலவாமையும் கடற்பாலில்லை; வள்ளலிடத் துண்டு; ஆதலின், இது அடை விபரீதப்பட்டதாயிற்று.

கருமை என்பது வள்ளல்மேற் செல்லுங்கால் 'கோபம்' எனவும், கடன்மேற் செல்லுங்கால் 'கருநிறம்' எனவும் பொருள் கொள்க.

வள்ளலிடத்துக் கருமை (கோபம்) இன்று எனவும், கட லிடத்துக் கருமை (கருநிறம்) உண்டு எனவும் கொள்க.

அடையும பொருளும் அயல்பட மொழிதல் முதலிய நான்கிற்கும் திரு. அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் புதுக்கிப் பதிப்பித்த தண்டியலங்காரத்தில் அவர் எழுதிய விளக்க உரையையும் நோக்குக.

அதிசய அணியின் வகை

இதனைத் தமிழில் 'உயர்வு நவிற்சி' எனவும், 'பெருக்கு' எனவும், 'மிகை மொழி' எனவும் கூறுவர். இந்நூலாசிரியர், (பக்கம்-251.)

'அருளு மதிசய மான்றோர் வியப்ப துலகிறவா'

என்றார். இதற்கு இந்நூலின் உரையாசிரியர், 'அதிசயமாவது, ஆன்றோர்க்கு வியப்புடைத்தாக வருவது; அது உலக நடை இறவாது,' என்று பொருள் கூறினார்.

தண்டி அலங்காரத்தினும் அதிசயவணிக்கு இங்ஙனமே இலக்கணங் கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:

'மனப்படு மொருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்.'

இதற்குத் தண்டி அலங்கார உரையாசிரியர், 'கவி தான் கருதிய பொருளினது வனப்பை உவந்து சொல்லுங்கால் உலக நடை இறவாத தன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்புறத் தோன்றுவது அதிசயம் என்னும் அலங்காரமாம்,' என்று உரை கூறினர்.

திரு. அ. குமாரசாமிப் புலவர் அவர்களும், திரு. வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் அவர்களும் 'உலகநடை இறவாத' என்பது 'உலகநடை இறந்த' என்றிருத்தல்வேண்டும் எனவும், அதுவே முதனூற்கருத்துக்கு ஏற்றது எனவும் கூறினர். அவர்கள் பதிப்பித்த தண்டியலங்காரப் பதிப்புக்களில் இச்சூத்திரத்திற்கு அவர்கள் எழுதிய விசேட உரையையும் குறிப்புரையையும் நோக்குக. இந்நூலின் உரையாசிரியர், 'கூறும் பிற பொருள்' (பக்கம் 210) என்னும் பாட்டின்கீழ் அதிற்கூறிய அணிகளுக்கு உதாரணங் காட்டும் இடத்து, 'பெருக்காவது உலகத்தார்க்கு ஏற்றிரா வண்ணம் மிகச் சொல்லுதல்,' என்றதையும் ஈண்டு நோக்குக.

1. பொருள் அதிசயம்

பக்கம் - 251. 'பண்டு புரமெரித்த' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'தீயே' என்றிருப்பது தண்டியில் 'தீமேல்' என்றிருக்கின்றது.

'நுதல் மேல் விழி புரம் எரித்த தீ படர்ந்து இன்றும் அண்டமுகடு நெருப்பறுது' என முடிக்க.

புரம் எரித்த தீ - புரத்தை எரித்ததனுல் உண்டாகிய தீ.

ஒளியினை உடைய தளிர் போன்ற கையினை உடைய கொடி போன்ற பார்வதி தழுவுதலாற் குழைந்தவரும் வடக்கின்கண் உள்ளதாகிய மேருமலையாகிய வில்லையுடையவருமான முக்கண்ணரது நுதலின்மீது உள்ள விழியானது முற்காலத்தில் திரிபுரங்களை எரித்ததனுல் உளதாகிய தீ மேலே பரவி ஓடுதலால், இப்போதும் அண்டத்து உச்சியின்கண் நெருப்பு நீங்காமல் இருக்கின்றது.

இதன்கண், 'தீ' என்னும் பொருள் அதிசயந் தோன்றக் கூறப்பட்டமை காண்க. இதன்கண் அதிசயம் யாதெனின், 'புரமெரித்த தீ மேற்படர்ந்து இன்றும் அண்ட முகடு நெருப்பறுது' என்றது என்க.

2. குண அதிசயம்

பக்கம்-251. 'மாலை நிலவொளிப்ப' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(இவள்) ஆசையினுல் அணிந்துகொண்ட அணிகளில் உள்ள நீலமணிகளானவை, மாலைக் காலத்தில் தோன்றிய நில வொளி மறையும்படி (நீலமாகிய) ஒளியை உமிழ்தலால், இவள் மிகுதியாகக் காதலித்துச் செல்லுதற்குரிய (தன் மனத்தின் கண்)குறித்த செல்வனிடஞ் செல்வதற்குத் தெருக்கள் செறிந்த இருட்டை உடையனவாகின்றன.

இதன்கண் ஒரு பெண் அணிந்துள்ள அணிகளில் உள்ள நீலமணிகளின் ஒளியாகிய பண்பு அதிசயந் தோன்றக் கூறப்பட்டமை காண்க. இதன்கண் அதிசயம் யாதெனின், 'நீலமணிகளின் ஒளியினுல் தெருக்கள் செறிந்த இருட்டை உடையனவாகின்றன' என்றது என்க.

3. ஐய அதிசயம்

பக்கம்-251. 'உள்ளம் புகுந்தே' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

('ஒள் இழை நின் கள்ளம் பெருகும் விழிகள், ஒரு கால் என் உள்ளம் புகுந்து உலாவும், ஒரு கால் என் உள்ளமுழுதும் உடன் பருகும்; (ஆதலின், நின் விழிகள்) பெரியவோ ? கவல்வேன் உள்ளம் பெரிதோ ? உரை,' என இயைக்க.)

ஒள்ளிய அணிகளை அணிந்த பெண்ணே! உன்னுடைய கள்ளத்தன்மை மிக்க கண்கள் ஒருமுறை எனது மனத்தினுட் புகுந்து உலவும்; ஒரு முறை எனது மனம் முழுதையும் ஒருங்கே பருகும்; (ஆதலின், உன்னுடைய கண்கள்) பெரியனவோ? (அக்கண்களின் செயலால்) கவலையை அடையா நிற்பவனாகிய எனது மனம் பெரியதோ? கூறு.

இதன்கண் கண்களின் பெருமையானது, ஐயத்தினால் மிக்குத் தோன்றக் கூறப்பட்டமை காண்க. இதன்கண் ஐயமாவது 'கண்கள் பெரியவோ?' 'மனம் பெரிதோ ?' என்றது;

கண்கள் மனத்துட் புகுந்து உலாவுகையில் கண்கள் சிறியனவாகவும் மனம் பெரிதாகவும், அவை மனத்தை முழுதும் பருகுகையில் அவை பெரியனவாகவும் மனம் சிறிதாகவும் தோன்றலின் இங்ஙனம் ஐயந்தோன்றுவதாயிற்று. கண்களின் இங்ஙனமாகிய தோற்றமே அதிசயமாம் என்று கொள்க.

4. துணிவதிசயம்

பக்கம்-252. 'ஆளுங் கரியும்' என்னும் செய்யுள்.

தண்டியலங்காரத்தில் இச்செய்யுள் தொழில் அதிசயத்திற்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'சுளித்தெறிந்து' என்பது தண்டியின்கண் 'சுழித்தெறிந்து' என்றிருக்கின்றது.

காலாள் வீரர்களும், குதிரைகளும், யானைகளும் சொரிகின்ற குருதி வெள்ளமானது, தோள்களையும் தலைகளையும் சுழித்து எறிந்து, நீண்ட குடைகளையும், வளவிய வாரினால் இறுக்கிக் கட்டப்பட்ட பேரிகைகளையும் மடங்குகின்ற அலைகளையுடைய கடலின்மீது அடித்துக்கொண்டு போகும்படி அரசன் வெண்மையாகிய வாளை உறையினின்று நீக்கினான்.

'சுளித்து எறிந்து' என்னும் பாடம் பொருத்தம் உடையது அன்று. அரசன் உறையினின்று வாளைக் கழித்தமையான் குருதி வெள்ளமானது தோள்கள் முதலியவற்றை அடித்துக்

கொண்டு கடலின்மீது செல்லுதல் உறுதி என்னும் நோக்கத்தினால் இதனைத் 'துணிவதிசயம்' என்றனர் போலும்!

5. திரிபதிசயம்

பக்கம்-252. 'திங்கள் சொரிநிலவு' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

சந்திரன் சொரியும் நிலவு சேர்ந்த வெள்ளிக் கிண்ணத்தில் (அந்நிலவைப்) பால் என்று எண்ணிப் பசுமையாகிய கிளிகள் வாய் மடுக்க, அங்கு ஒரு பக்கத்தில் தங்கள் கொழுநர்களின் முயக்கம் நீங்கினவர்களாகிய ஏந்திழையார் (அந்நிலவைத் தங்கள்) துகில் என்று கருதிக் கையை வீணாக நீட்டுவர்.

நிலவைப் பைங்கிளிகள் 'பால்' எனவும், ஏந்திழையார் 'துகில்' எனவும் மயங்குதலாகிய திரிபுணர்ச்சியினால் நிலவின் மேன்மை மிக்குத் தோன்றுதல் காண்க. இத் திரிபுணர்ச்சிக்குக் காரணமாய் நின்ற நிலவின் தோற்றமே திரிபதிசயமா மென்க.

நோக்கு அணியின் வகை

இது தண்டியலங்காரத்தில் 'தற்குறிப் பேற்ற அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு இந்நூலில் இலக்கணங் கூறப்படவில்லை. இதற்குத் தண்டியலங்காரத்திற் கூறப்பட்ட இலக்கணம் வருமாறு:

'பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி யயலோன்று
தான்குறித் தேற்றுத றற்குறிப் பேற்றம்'

இதற்கு அந்நூல் உரையாசிரியர் கூறிய உரையாவது, 'பெயரும் பொருளும், பெயராத பொருளும் என்னும் இரண்டு பொருளின்கண்ணும், இயல்பாக நிகழுந் தன்மை ஒழியக் கவி தான் கருதிய வேறு ஒன்றினை அவற்றின்கண் ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரமாம்,' என்பது.

1. இயங்கு பொருள் நோக்கு

பக்கம்-252. 'மண்படுதோட் கிள்ளி' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'விண்டொடர்ந்து' என்றிருப்பது, தண்டியில் 'விண்படர்ந்து'

என்றும், இதன்கண், 'பனிமதியுந் தன்னுருவம்' என்றிருப்பது, தண்டியில் 'பனிமதியம் போல்வதூஉம்' என்றும் இருக்கின்றன.

'பூமி தம்பாற் பொருந்தப் பெற்ற தோள்களையுடைய சோழனுடைய மத யானை பகையரசர்களுடைய வெண்குடைகளைத் தேய்த்த கோபத்தினால், அது விண்ணின்கண்ணும் வந்து நம்மீதும் பாயுமோ?' எனக் குளிர்ந்த சந்திரன் என்று சொல்லப் படுவதும் தெளிந்த விசும்பின்கண் இருந்து தேயாநிற்கும்.

இதன்கண் பெயரும் பொருள் சந்திரன்; இது பூமியைச் சுற்றிவருங் கிரகமாதலின், பெயரும் பொருள் எனப்பட்டது. சந்திரனைத் 'தேவன்' எனக் கொள்வராகலின், பெயரும் பொருள் எனப்பட்டது என்றலுமாம். சந்திரன் தேய்தல் அதன்கண் 'இயல்பின் விளைதிறன்' ஆம். அஃதொழியச் 'சோழனுடைய யானைக்கு அஞ்சி அது தேய்வதாயிற்று' எனக் கவி தான் கருதிய வேறொன்றினை அதன்கண் ஏற்றிக் கூறினமை காண்க.

2. இயங்காப் பொருள் நோக்கு

பக்கம் - 252. 'வேனில் வெயிற்குடைந்த' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதன்கண் 'வளமருளும்' என்றிருப்பது தண்டியில் 'வளஞ்சுரந்த' என்றும், இதன்கண் 'தானுமெதிர்' என்றிருப்பது தண்டியில் 'தானுடைய' என்றும், இதன்கண் 'தடஞ்சினைக்கை' என்றிருப்பது தண்டியில் 'தடஞ்சினையால்' என்றும் இருக்கின்றன.

வேனிற்காலத்தில் (சூரியனுடைய) வெயிலுக்காற்றாது உலர்ந்த தம்முடைய மெய்யின் வறுமையை (நீர்வற்றிய தன்மையைக்) கண்டு இரக்கமுற்று வானின்கண் இருந்து மழையாகிய வளத்தினைப் பொழிந்த வண்மையினையுடைய மேகத்திற்குச் சோலைகளானவை தம்முடைய விசாலமாகிய கிளைகளாகிய கைகளால் மேதக்க தாதுக்களையும், மதுவையும், மலர்களையும் மேல் நோக்கித் தாங்காநிற்கும்.

சோலை இயங்காப் பொருள். அதன்கண் மரங்களின் கிளைகளில் தாது முதலியவை பொருந்தி இருத்தல் 'இயல்பின் விளை

திறன்' ஆம். அஃதொழியத் 'தமக்கு உதவி செய்த மேகத்தின் பொருட்டுச் சோலைகள் கிளைகளால் தாது முதலியவற்றை மேல் நோக்கித் தாங்காநிற்கும்' எனக் கவி தான் கருதிய வேறொன்றினை அதன்கண் ஏற்றிக் கூறினமை காண்க.

ஏது அணியின் வகை

1. காரக ஏது

பக்கம் - 253. 'மலையி லலைகடலில்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'மலையி லலைகடலில்' என்றிருப்பது தண்டியில் 'மலையி னலைகடலில்' என்றும், இதன்கண்,

'பொன்மாது புல்லுபுகழ்ச் சோழன் புயம்புணர
என்மா தவத்தோ மியாம்'

என்றிருப்பது தண்டியில்,

'அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்'

என்றும் இருக்கின்றன. 'மலையில் அலைகடலில் வாளரவின் வெய்ய, தலையிற் பயின்ற தவத்தால்' என்றதனோடு 'பொன் மாது புல்லும்' என்பது பொருளிற் பொருந்தாமையின் தண்டியில் காட்டிய பின்னிரண்டடிகளின் பாடமே கொள்ளற் குரியதாகும்,

மலையினும், அலைகடலினும், வாளரவின் வெய்ய தலையினும் இருந்து தவஞ் செய்ததனாலே தலைமை பெற்றவர்களாகிய சயமகள், திருமகள், புவிமகள் என்னும் மூவராலும் தழுவப்பட்ட அபயனுடைய தோள்களைப் புணர யாங்கள் எவ்வகைச் சிறந்த தவத்தினைச் செய்தோம்.

தலைமைசேர் சயமகள் முதலிய மூவராலே தழுவப்பட்ட அபயன் தோள்கள் பிறமாதர்களால் தழுவப்படுதற்கு அரியனவாகும்; அத்தகைய தோள்களை யாம் தழுவப் பெற்றதற்குக் காரணம் சிறந்த தவஞ்செய்தமையே எனத் தவமாகிய செயலை ஏதுவாகக் கூறினமையின், இது 'காரக ஏது' ஆயிற்று.

2. ஞாபக ஏது

பக்கம் - 253. 'காதலன்மே லூடல்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(இம்மாதருடைய நெற்றி வியர்க்கவும், வாய் துடிக்கவும், பக்கங்கள் வளைந்த புருவங்களாகிய விற்கள் மேலே நெறிக்கவும், வாள்கள் தோற்கும்படி (கூர்மை கொண்டு) நீண்ட நீலோற்பல மலர்போன்ற கண்கள் சிவந்ததன் குறிப்பு, இவர் தம்முடைய காதலன்மீது கொண்ட ஊடல் அளவிறந்து மிகுதலை உணர்த்தும்.)

'வில்மீது முரிய' என இயைக்க.

நுதல் வியர்த்தல் முதலிய காரியங்களால் ஊடலாகிய காரணம் அறிவிக்கப்பட்டமையின், இது ஞாபக ஏதுவாயிற்று. ஞாபகம் - அறிவிப்பது.

நுதல் வியர்த்தல் முதலியவற்றிற்கு ஊடல் ஏது (காரணம்) ஆம் என அறிக.

3. உள்ளதன் அபாவம்

பக்கம் - 253. 'கரவோடு நின்றார்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

பாம்பையும் பெரிய ஆமை ஓட்டையும் அணியாகக் கொண்ட முதல்வனுகிய சிவபெருமானை முற்பிறப்பிலே வணங்கமாட்டாமையைக் கொண்ட மனமானது, எம்மை (இரப்பவர்க்கு அஞ்சித் தம் பொருளை) மறைத்துக்கொண்டிருப்பவர்களுடைய காவலையுடைய வீட்டிற் சென்று, யாசித்தலோடு நிற்கும்படி செய்தது.

'வணங்கமாட்டாமை பூண்ட மனம், எம்மை இரவோடு நிற்பித்தது,' என முடிக்க.

'உள்ளதனபாவம்' என்பது மாறனலங்காரத்தின்கண் 'உள்ளதனின்மை' என்று கூறப்பட்டிருக்கின்றது. அதற்கு அதன் உரையாசிரியர் 'ஓரிடத்தும் ஒரு காலத்தும் உள்ள பொருள் பிறிதோரிடத்தும் பிறிதோர் காலத்தும் இன்மை' என்று பொருள் கூறினர். அப்பொருளை ஈண்டு நோக்குக.

இச்செய்யுளில் 'முன் வணங்கமாட்டாமை பூண்ட' என்றதனுல் முற்பிறப்பில் என்பதும், அப்பிறப்பின் காலமாகிய முற்-

காலம் என்பதும், அவற்றின்கண் வணங்கமாட்டாமை இருந்தது என்பதும், இப்பிறப்பில் இக்காலத்தில் வணங்குதல் உள்ளது என்பதும் பெறப்படுதல் காண்க.

இப்பிறப்பில் இக்காலத்துள்ள வணங்குதல் முற்பிறப்பில் முற்காலத்தின்மை, 'கரவொடு நின்றார் கடிமனையிற் சென்று' இரத்தற்கு ஏதுவானமை அறிக.

4. ஒன்றினொன்று அபாவம்

பக்கம் - 253. 'பொய்ம்மை யுடன்புணரார்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(உலகின்கண்) மேன்மையாகிய அறிவினை உடையவர் பொய்யினோடு கூடுவாரல்லர்; பொய்யும் மெய்ம்மையினால் தழுவப்பட்ட அம்மேன்மையாகியஅறிவுடையவரைச்சேராது; இம்முறையினால், போதுகள் மலர்ந்த மாலையை அணிந்த தலைவர்கள் பிரிந்தால், பொன்னாலாகிய குழையினை அணிந்த இல்லக்கிழத்தியர்க்குக் காவற்கடன் பூண்ட அத்தலைமக்கள் சொன்ன சொல்லைப் போற்றி அவர்கள் குறித்துச் சொன்ன பருவத்தின் காறும் ஆற்றியிருத்தல் கடமையாகும்.

'இல்லக் கிழத்தியர்க்குக் கடமையாகும்' என்க.

ஒன்றின் ஒன்று அபாவமாவது, ஒன்றன்கண் ஒன்று இல்லாமை. பொய்ம்மையை மேலோர் சேராமையும் மேலோரைப் பொய் சேராமையும் ஒன்றின் ஒன்று இன்மையாம் ; அது, பொலங்குழையார் தம் தலைவர்கள் சொல்லைப் போற்றுதற்கு ஏதுவானமை அறிக.

5. அழிவுபாட்டபாவம்

பக்கம்-253. 'கழிந்த திளமை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக்காட்டப்பட்டிருக்கின்றது.

('இளமை கழிந்தது; களி மயக்கந் தீர்ந்தது; காதல்மேல் ஊக்கம் ஒழிந்தது; சுழிந்து நெறியுங் கருங்கூந்தலார் காதல் நோய் தீர்ந்தது; உளம் ஒரே நெறி சேர்ந்தது,' என இயைக்க.)

களி மயக்கம்—(செல்வக்) களிப்பால் வரும் மயக்கம். சுழிந்து நெறியும் கருங்கூந்தலார் காதல் நோய்-சுருண்டு நெறிப்பை உடைத்தாகிய கரிய கூந்தலை உடைய மாதர்மேல் வைத்த காதலாகிய நோயும்; உள்ளம் ஒரே நெறி சேர்ந்தது-(பல வழிகளில் அலைந்து திரிந்துகொண்டிருந்த) மனம் ஒரே வழியிற் சேர்ந்தது.

அழிவுபாட்டு அபாவமாவது, முன்பு உள்ளது அழிந்து இலதாதல். முன்பிருந்த இளமை முதலியன கழிந்து இல்லையா யினமை அழிவுபாட்டபாவமாம்; அது மனம் ஒரு வழிப்படு தற்கு ஏதுவானமை அறிக.

6. என்றும் அபாவம்

பக்கம் - 253. 'யாண்டு மொழிதிறம்பார்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

('காலையே, மயில்கள் ஈண்டு எம்மருங்கும் இனம் இனமாய் மூண்டு எழுந்த ; கார் முழங்கும் என்று அயரேல் ; சான்றவர் யாண்டும் மொழி திறம்பார்; காதலர் தேர் மாலையே நம்பால் வரும்' என இயைக்க.)

(இன்று) காலையிலேயே எல்லாப் பக்கத்திலும் மயில்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடி எழுந்தன; ஆதலின், இனி மேகங்கள் முழங்காநிற்கும் என்று வருந்தற்க; அறிவால் நிறைந்தோர்கள் எப்பொழுதும் சொன்ன சொல்லினின்று பிழையார்கள்; (ஆதலால், அத்தகையினராகிய நம்முடைய) காதலரது தேரானது (இன்று) மாலையிலேயே நம்மிடத்து வரும்.

இதில் 'சான்றவர் என்றும் மொழி திறம்பார்' என்றது என்றும் அபாவம்; அது பிரிந்து சென்ற தலைவரது வருகை தவறாமைக்கு ஏதுவானமை அறிக.

7. இன்மை அபாவம்

பக்கம்-253. 'காரார் கொடிமுல்லை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'வாளை யோர்' என்றிருப்பது தண்டியில் 'வாளையேய்' என்றிருக்கிறது.

வாள்போன்ற கண்களையுடைய தோழியே, கார்காலத்துச் (செழித்தல்) அமைந்த கொடிமுல்லையின் மலர்களை நின் குழலின்மீது சூடி அலங்கரிக்க வெற்றியை உடைய வேந்தர் வாராமை இல்லை; (வாராமலிரார்); ஆதலால், நமக்கு நெற்றியின்கண் வரும் பசலை நாளைத்தினமே நீங்கிவிடும்.

இன்மை அபாவமாவது, இல்லாமையினது இல்லாமையாம். இதில் 'வாராமை' என்றது, வருதலின் இன்மையை; 'இல்லை' என்றது அவ்வின்மையது இன்மையை; ஆதலின், 'வாராமை இல்லை' என்றது இன்மை அபாவமாயிற்று; அது நுதலின்கண் வரும் பசலை நீங்குதற்கு ஏதுவானமை அறிக.

'வாளை ஏர்' என்னும் பாடத்துக்கு (அழகினுல்) வாளை வென்ற என்று பொருள் கொள்க. ஏர்-உயர்தல் (ஈண்டு அது 'வெல்லுதல்' என்னும் பொருள் தந்து நின்றது.)

'வாராமை' இல்லை, என்னும் இரண்டு எதிர்மறைகள் கூடி 'வருவர்' என்னும் ஓர் உடன்பாட்டு வினைப்பொருளை உணர்த்தி நின்றன என்க.

8. ஒருங்குடன் தோற்றம்

பக்கம் - 254. 'விரிந்த மதிநிலவின்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(தலைவரைப் பிரிந்த மாதரார்) உயிராகிய பாரத்தைத் தாங்கமாட்டாமைக்குக் காரணமாகிய புன்கண்மையை உடைய மாலைப் பொழுதில் முழுமதியினது மேம்பாடும், வேட்கையைத் தோற்றுவித்த வில்லினை உடைய மன்மதனது போரும், பிரிந்தோர் நிறை தளர்வும் ஒக்க நிகழ்ந்தன.

இதில் விரிந்த மதி நிலவின் மேம்பாடும், மதவேள் போருமாகிய காரணமும், அவற்றுலாகும் பிரிந்தோர் நிறை தளர்வாகிய காரியமும் ஒன்றுய் நிகழ்ந்தமையின், இஃது ஒருங்குடன் தோற்றமாயிற்று.

பிரிந்தோர் நிறை தளர்வுக்கு விரிந்த மதி நிலவின் மேம்பாடும், மதவேள் போரும் ஏது என்று அறிக.

9. யுத்தம்

பக்கம்-254. 'பொன்னி வளநாடன்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

தனக்கு நேர் நின்று பொர வந்த வேந்தர்களின் புனைந்த கடகங்களையுடைய சிவந்த கைகளாகிய நூறுயிரம் தாமரை மலர்கள் பொன்னியினுலாகிய வளத்தினையுடைய நாட்டின் தலைவனுகிய சோழனுடைய கையின்கண் உள்ள வேல் சொரிந்த நிலவினுற் குவிந்தன.

'முகுளிக்கும்' என்னும் நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் உரிய முற்று, ஈண்டு இறந்த காலமுணர்த்தி நின்றது. இஃது இயல்பின் வந்த கால வழுவமைதி. 'முகுளிக்கும்' என்பதனைப் பெயரெச்சமாகக் கொண்டு, 'உள' என்னும் சொல்லை ஈற்றிற்பெய்து, 'வேல்பொழி நிலவால் முகுளிக்கும் அரவிந்தங்கள் நூறுயிரம் உள,' என்று முடித்தலும் ஆம்.

யுத்தம்-பொருத்தம். 'யுக்தம்' என்னும் வடசொல் 'யுத்தம்' எனத் திரிந்து நின்றது.

யுத்தமாவது, காரணத்திற்குப் பொருத்தமான காரியம் உளதாதல். இதில் செங்கைகளாகிய அரவிந்தங்கள் குவிதற்கு வேல் பொழி நிலவு ஏதுவாயிற்று. அரவிந்தங் குவிதற்கு நிலவு பொருத்தமான ஏதுவாதலறிக.

10. அயுத்தம்

பக்கம்-254. 'இகன்மதமால் யானை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'இணைவரா' என்றிருப்பது தண்டியில் 'அநபாயன்' என்றிருக்கின்றது.

வெற்றியையும் மதத்தினையும் உடைய அநபாயனுகிய எங்கள் அரசனுடைய முகமாகிய (நிறை) மதியின்கண் உண்டாகிய முறுவலின் நிலவினுல் செவ்வரியினையுடைய கயல் போன்ற கண்களை உடைய அழகு பொருந்திய ஒளியினை உடைய முகமாகிய மிகப் பலவாகிய தாமரை மலர்கள் விளங்க மலர்வனவாயின.

மூரல்-பற்கள், நக—விளங்க, அயுத்தம்-பொருத்தமின்மை.

அயுத்தமாவது காரணத்திற்குப் பொருத்தமில்லாத காரியம் உளதாதல்,

இதிற் பங்கயங்கள் மலர்வதற்கு நிலவு ஏதுவாயிற்று. அவை மலர்வதற்கு நிலவு பொருத்தமில்லாத ஏதுவாதலறிக.

நுணுக்க அணியின் வகை

இது தண்டியலங்காரத்திலே 'நுட்ப அணி' என்று கூறப் பட்டிருக்கின்றது. இதற்குத் தண்டியலங்காரத்திற் கூறப் பட்ட இலக்கணம் வருமாறு:

"தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்
அரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்"

இதற்கு அந்நூல் உரையாசிரியர் கூறிய உரையாவது: 'தெரிந்துகொண்டு வேறுபட மொழியாது குறிப்பினுனுதல்; தொழிலினுனுதல் அரிதாக நோக்கி உணருந் தொழிற்றன்மை நுட்பமென்னும் அலங்காரமாம்' என்பது. இவற்றோடு இவ் வணிக்கு இந்நூலாசிரியர் கூறிய இலக்கணத்தையும், அதன் உரையையும் நன்கு நோக்குக.

1. குறிப்பு நுணுக்கம்

பக்கம் - 255. 'காதலன் மெல்லுயிர்க்கு' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

மடப்பத்தினை உடைய தோழியர்களைப் பிரியாத (தோழியர்களாற் சூழப்பட்ட) இத்தலைவியார் (உலகிற்) பரவாநிற்கும் இருளை அடியோடு அழிக்கும் சூரியனைப் பார்த்து மேற்குத் திக்கை நோக்கிய குறிப்பானது அவருடைய காதலனது மென்மையாகிய உயிருக்குக் காவலை உண் டாக்கியது.

தோழியர் கூட்டத்தினிடை நிற்குந் தலைவி சிறைப்புறத்தா னாகிய தலைவனுக்குத் தன் கருத்தை வெளிப்படக் கூற இய லாமையால், சூரியனை நோக்கி மேற்றிசையை நோக்கிய குறிப் பால் மாலைப்போதின் வருக எனத் தெரிவித்தமையின், இது குறிப்பு நுணுக்கமாயிற்று.

2. தொழில் நுணுக்கம்

பக்கம்-255. 'பாடல் பயிலும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'மெல் விரல்' என்றிருப்பது, தண்டியில் 'மெல்லவே' என்றிருக்கின்றது.

பாடுதல் தொழிலைப் புரிந்துகொண்டிருக்கும் மென்மையாகிய மொழியினை உடையாள் தன் மூங்கிலைப் போன்ற தோளினுலே தன் நாயகனைத் தழுவவேண்டும் என்னும் ஆவலாலே, மென்மையாகிய இனிய நரம்புகளையுடைய யாழின்கண் இனிய குறிஞ்சிப் பண்ணை முறையாக உண்டாக்கித் தன் தலைவனுக்குத் தன் கருத்தைத் தெரிவித்தாள்.

தோழியரிடையிலிருந்து பாடிக்கொண்டிருந்த தலைவி, தன் தலைவன் சிறைப்புறத்தானுயிருத்தலை அறிந்து தன் கருத்தை வெளிப்படையாகக் கூற இயலாமையால், இடையாமத்திற்குரிய குறிஞ்சிப் பண்ணை இசைத்து, 'இடையாமத்து வருக!' எனத் தன் கருத்தைத் தலைவனுக்குத் தெரிவித்தாள் என்றுணர்க.

தலைவி குறிஞ்சிப் பண்ணைப் பாடுதல் தொழிலால் தலைவனுக்குத் தன் கருத்தைத் தெரிவித்தலின் இதுதொழில் நுணுக்கமாயிற்று.

இலேச அணியின் வகை

பக்கம்-255. 'கல்லுயர்தோட் கிள்ளி' என்னுஞ் செய்யுளும், 'மதுப்பொழிதார் மன்னவனை' என்னும் செய்யுளும்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுட்களே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

முதற்செய்யுளில் இதன்கண் 'பரப்பி' என்றிருப்பது தண்டியில் 'பரப்ப' என்றிருக்கின்றது.

இரண்டாஞ் செய்யுளில் இதன்கண் 'கண்டு, விதிர்ப்ப மயிரரும்ப மெய்யில்' என்றிருப்பது, தண்டியில் 'கண்ட, விதிர்ப்பு மயிரரும்பு மெய்யும்' என்றும், இதன்கண் 'வண்டிவலை வாய்ந்த' என்றிருப்பது, தண்டியில்' வண்டுவலை தோய்ந்த' என்றும் இருக்கின்றன.

முதற் செய்யுள்

மலைபோன்ற பெரிய தோள்களை உடைய சோழனது குதிரையைத் தொழுததனால் கண்ணீர் வரப்பெற்ற மென்மைத்தன்மையை உடைய மாதர் தோழியர்களிடத்தில் 'சினங் கொள்ளுஞ் சேனைகள் பரவிச் செல்லுதலால் மீது எழுந்த தூளிகள் சேர்தலால், எங்களுடைய கண்களினின்று நீர் வார்ந்தது,' என்று வேறொன்று சொல்லுவர்.

இதன்கண், பெண்கள் சோழனைக் கண்டு அவனை விரும்பியதனால் உளதான கண்ணீர் வார்தலாகிய சத்துவத்தைப் 'படை பரவுதலால் எழுந்த தூளிகள் சேர்தலால், கண்களினின்று நீர் வார்ந்தது' என்று மறைத்துக் கூறினமை காண்க.

இரண்டாஞ் செய்யுள்

('மயிரரும்பு மெய்யும்' என்றதனை 'மெய்ம்மயிரரும்பும்' என்றியைக்க.)

தேனைச் சொரியும் மாலையை உடைய சோழனைக் களிற்றின்மேல் வரக் கண்டதனாலாகிய தன் மெய்ந்நடுக்கத்தையும், மெய்ம்மயிரரும்பலையும் (அவன் ஏறி வந்த) வளப்பத்தினை உடைய நீண்ட துதிக்கையினின்றுண்டாகிய வளவிய நீர்த் திவலைகளைக் கொண்டு வந்த இளவாடை மிக்கு வீசியதனால், என் மெய்யின்கண் நடுக்கமும் மயிரரும்பலும் உண்டாயின,' என்று நிகழ்ந்தது மறைத்து வேறொன்று கூறினாள்.

இதன்கண் மால் கரிமேல் மன்னவனைக்கண்டதனால் உண்டாகிய மெய்ந்நடுக்கமும் மயிரரும்பலுமாகிய சத்துவங்கள், 'அவன் ஏறி வந்த யானையின் துதிக்கையினின்றுண்டாகிய நீர்த்திவலையோடு கூடி வந்த வாடை வீசியதனால் உண்டாயின,' என நிகழ்ந்தது மறைத்து வேறொன்று கூறினமை காண்க. புதைத்தாள் - மறைத்தாள் (நிகழ்ந்ததை மறைத்து வேறொன்று கூறினாள்.)

புகழாப் புகழ்ச்சி

இது தண்டியலங்காரத்தில் 'பழிப்பது போலப் புகழ்தல்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்—255. 'ஆடன் மயிலியலி' என்னுஞ் செய்யுளும், 'மன்னிய பெண்ணை' என்னுஞ் செய்யுளும்.

தண்டியலங்காரத்தில் இவ்விரண்டு செய்யுட்களில் முதற் செய்யுள் இவ்வணிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'யாண்டும்' என்றிருப்பது, 'தண்டியில்' 'யார்க்கும்' என்றிருக்கின்றது.

ஆடுதலையுடைய மயில் போன்ற சாயலை உடையாய்! நம் மீது அன்பு கொண்ட தலைவன் தன்னுடைய அலங்கரிக்கப் பட்ட மார்பை யாம் கூடுகையில் எம்மெல்லென்ற நலத்தினைப் பாராட்ட அறியான் ஆதலானும், ஊடற்கண் தனக்குத் தகாதனவாகிய செய்கைகளைச் செய்து இரக்கும் இரவாளன் ஆதலானும், யாவர்க்கும் வெறுக்கத்தக்க ஆசைப்பாடு உடையன் அல்லன் ஆதலானும் (இகழ்தற்கு உரியவனுவன்.)

'இகழ்தற்கு உரியவன் ஆவன்' என்பது இசையெச்சம். 'யாண்டும்' என்பதைப் பாடமாகக் கொள்ளின், 'யாரிடத்தும்' என்று பொருள் கொள்க.

'கூடுங்கால் மெல்லென் குறிப்பறியான்' என்பது முதலியவற்றால் பழிப்பது போலக் கூறினும், அவன் அறிவழியவேண்டிய கலவிக்காலத்தில் அறிவழிந்து நிற்பவன் என்பது பெறப் பட்டமையாற் புகழாயிற்று.

'மன்னிய பெண்ணை' என்னுஞ் செய்யுட் குறிப்பு 363-ஆம் பக்கத்தில் வந்திருக்கின்றது.

புகழ்ந்தாற் போலப் பழித்தல்

பக்கம்—255. 'மேய கலவி' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

செவ்விய ஆபரணங்களை அணிந்த பெண்ணே, எப்பொழுதும் போர்த்தொழிலை விரும்பிய மேன்மையாகிய புகழை உடையவனும் நாம் மாலையிட விரும்பிய தோளையுடையவனுமாகிய விடலை, (நம்மில் அன்பு) பொருந்திய கலவி நிகழுங்காலத்தும் நம்முடைய மென்மை குன்றுதபடி தாங்குவான்.

'மாலையிட விரும்பிய தோள்' என்பதற்கு 'நாம் விரும்பி மாலை இட்ட தோள்' என்பது கருத்தாகும்.

'நம்முடைய தலைவன் கலவிக் காலத்தும் நம்முடைய மென்மை குன்றுதபடி தாங்குவான்' எனப் புகழ்ந்தாற்போலக் கூறினும், 'அவன் அறிவு அழியவேண்டிய காலத்தில் அறிவழியப் பெறுதவன்' என்பது பெறப்பட்டமையால், இது பழிப்பாயிற்று.

ஈண்டு இலேசத்தின்பாற் சார்த்திக் கூறப்பட்ட புகழாப் புகழ்ச்சி, புகழ்ந்தாற்போலப் பழித்தல் என்னும் இவற்றோடு பிற் கூறப்படும் 'நுவலாச் சொல்,' 'தெரிவில் புகழ்ச்சி' என்பவற்றிற்குள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்துணர்க,

நிரனிறை

பக்கம்-256. 'காரிகை மென்மொழியான்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'வையகத்தின்' என்றிருப்பது, தண்டியில் 'வாய்த்தளிரான்' என்றும், இதன்கண் 'தமியேன் மனத்து' என்றிருப்பது, தண்டியில் 'கவிர்மென் மலர்' என்றும் இருக்கின்றன.

அழகிய இம்மாதினுடைய மென்மையாகிய சொல்லினும், விழியினும், ஒளியினையுடைய கொங்கையினும், நீண்ட புருவத்தினும், இடையினும், தளிர்போன்ற வாயினும், கொல்லி என்னும் பண்ணும், கூர்மையாகிய நீண்ட வேலும், கோங்கமரத்தின் அரும்பும், (காமனது) கரும்பு வில்லும், பூங்கொடியும் மென்மையாகிய முருக்க மலரும் அழகு கெட்டன.

('ஏர் தொலைந்த' என்க. 'விற்கரும்பு' என்றதனைக் 'கரும்பு வில்' எனவும், 'கவிர்மென் மலர்' என்றதனை 'மெல் கவிர் மலர்' எனவும் இயைக்க). 'வையகத்தின்' எனவும், 'தமியேன் மனத்து' எனவும் இதன்கண் உள்ள பாடத்துக்கு முறையே பூமியின்கண்' எனவும், 'தனியனாகிய என் மனத்தின்கண்' எனவும் பொருள் கொள்க.

'மொழியாற் கொல்லிப் பண்ணும், நோக்கான் வேலும், முலையாற் கோங்கரும்பும், புருவத்தாற் கரும்பு வில்லும், வாயாற் கவிர் மலரும் ஏர் தொலைந்தன' என முறையே கொள்க.

மகிழ்ச்சி

நிரனிறை முதலிய இவ்வணிகளைக் கூறும் பாட்டின் தலைக்குறிப்பில் நிரனிறை என்பதற்குப் பக்கத்தில் இருக்க வேண்டிய 'மகிழ்ச்சி' என்பது விடுபட்டது. அங்கு அதனைச் சேர்த்துக்கொள்க.

இவ்வணி தண்டியலங்காரத்தில் 'ஆர்வ மொழி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-256. 'சொல்ல மொழிதளர்ந்து' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

அலங்கரிக்கப்பட்ட மாலை அணிந்தோனே, (நீ எம்பால் வந்ததற்குக் கைம்மாறாக நின் முன்னின்று மறு மொழி) சொல்ல முயல்வோமாயின், (எங்கள்) சொற்கள் தடுமாறிச் சோர்வுபடாநிற்கின்றன; நின் மலர் மாலைகளை அணிந்த இரண்டு தோள்களைத் தழுவ முயல்வோமாயின் எங்கள் இரண்டு தோள்களும் புடை பெயரா; நின் சீரை நினைப்போம் என்றால் நெஞ்சின் இடம் போதாது.

இதன்கண் மனத்துத் தோன்றிய மகிழ்ச்சி புலப்படக் கூறப்பட்டிருத்தலின், இது மகிழ்ச்சி (ஆர்வமொழி) ஆயிற்று.

சுவை அணியின் வகை

1. வீரம்

பக்கம்-257. 'சேர்ந்த புறவின்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'வங்கண்' என்றிருப்பது, தண்டியில் 'வன்கண்' என்றும், 'அவன்' என்றிருப்பது தண்டியில் 'சென்னி' என்றும் இருக்கின்றன.

சிபி அடைக்கலம் எனத் தன்னைச் சார்ந்த புறவின் நிறைக்குத் தனது அழகிய உடலின் தசை அறுத்துத் துலையின்கண் வைத்து, அது போதாமையான், தானே அத்துலையின்கண் ஏறினன். இஃது அவனது கொடையினது வீரமோ? மெய்ம்மையாகிய நிறை என்னும் குணங்குன்றாத (போருக்கு) அஞ்சாமையை உடைய அவனது படை வீரமோ? அவை இரண்டும் அல்ல; இது (சென்னியாகிய) அவனது தன்மை.

2. அச்சம்

பக்கம்-257. 'கையில் விரனெரித்து' என்னுஞ் செய்யுள்.

(போர் என்ற துணையானே) கைகளின் விரல்களை நெரித்துக்கொண்டு, கால்கள் சோர்ந்து, வாயின் ஈரம் வற்றி, உடல்

நடுங்கத் (தன்னுயிர்) தப்பும்பொருட்டுக் கால்களில் விழுகின்ற இவனோ மேல் (போர்முனையின்கண்) மதக்களிப்பும் வேகமும் நீங்காத யானைகள் (தலை, துதிக்கை முதலியன அறுபட்டுப் போர்க்களத்திற்) புரளும்படி ஒளியை உடைய வேலைச் செலுத்த வல்லவன் ஆவன்?

3. இழிப்பு

பக்கம்-257.'குடருங் கொழுப்பும்' என்னுஞ் செய்யுள்.

பாட பேதம்: கொழுப்பும் - கொழுவும், உடம்புமா மறறி வற்றால் - வழும்புமா மற்றிவற்றுள்.

குடலும், இரைப்பையும், உதிரமும், எலும்பும், தொடர்ந் துள்ள நரம்புகளோடு மேலே போர்த்த தோலும், எலும்பு நரம்புகளுக்கு நடுவு நடுவே வைத்த இறைச்சியும் ஆகும் உடல்; இழிந்த மக்களே, உங்களால் விரும்பப்பட்ட வாடாத பூமாலையை அணிந்தவள் மேற்கண்ட குடல் முதலியவற்றுள் எக்கூற்றினள்?

4. வியப்பு

பக்கம் - 257. 'முத்தரும்பிச் செம்பொன்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

பொன்னையும் அழகிய மணிகளையும் (அலைகளாற்) கரை யில் கொழிக்கும் அழகிய காவிரி நாட்டையுடைய சோழனுக்கு ஒப்பாக (தன்னை அடைந்தோர் வேண்டியவற்றைச்) சொரியுங் கற்பகத் தருவானது, முத்துக்களாகிய அரும்புகளை அரும்பி, சிவந்த பொன் தளிர்கள் (தன்கண்) செறியப் பெற்று, குளிர்ச் சியாகிய பவழக் கொத்துக்களையுடையதாய்ப் பல ஆபரணங் களாலும் சூழப்பட்டு விளங்கும் கிளைகளின் கூட்டங்களை யுடையதாகும்.

முறி - தளிர், பசுமை - குளிர்ச்சி, துகிர்-பவழம் (பசுமை+ துகிர்=பைந்துகிர்).

இதன்கண் கற்பகத்தரு வியப்புத் தோன்ற வர்ணிக்கப் பட்டமை காண்க.

5. அவலம்

பக்கம் - 257. 'கழல்சேர்ந்த தாள்விடலை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

வீரகண்டை பொருந்திய தாளையுடைய விடலையான வன், (தன்னுடைய) காதலியின் உடலைப்பற்றி எரிக்கும் அழலின் அருகை அடைந்து, (தன்) கூந்தலினிடத்துப் பொருந்திய மாலையைப் பொருமல் தளரும் தளிர்போன்ற (இவள்) மேனியானது ஈமத்து எரியைப் பொறுக்க வல்லதோ!' என்று சொல்லித் தன்னெஞ்சம் வருந்தினன்.

6. உருத்திரம்

பக்கம் - 257. 'கைபிசையா வாய்மடியா' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

'வெவ்விதாகிய போரிலே வெற்றி மாலையை அணிந்த தோள்களை உடையவனுகிய துருபத அரசன் மகளாகிய திரௌபதியைச் சபைக்குக் கொண்டு வருவாயாக' என்று போரில் வல்லவனுகிய துரியோதனன் தூதனிடத்தில் சொன்ன போது (அதனைக் கேட்ட வீமன்) கைகளைப் பிசைந்து, வாயை மடித்துக், கண்கள் சிவந்து, வெப்பமாக மூச்செறிந்து, உடல் நடுக்குற்று, வியர்த்துக் கோபங்கொண்டு (போருக்கு) எழுந்தான்.

7. முறுகிய நகை

பக்கம் - 258. 'பள்ளியுள் வாழும்' என்னுஞ் செய்யுள்.

இதன் பொருளை ஆய்ந்து கொள்க.

8. சாந்தம்

பக்கம்-258. 'தன்னுயிர்க் கின்னுமை' என்னுஞ் செய்யுள்.

திருக்குறள், 318.

ஊக்கம்

இது தண்டியலங்காரத்தில் 'தன் மேம்பாட்டுரை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம் - 258. 'மலைகரந்து போகாதோ' என்னுஞ் செய்யுள்.

இச்செய்யுட் குறிப்பு 358-ஆம் பக்கத்தில் வந்திருக்கின்றது.

பரியாயம்

இது 'பரியாய மொழி' எனவும், 'பிறிதினவிற்சி' எனவுங் கூறப்படும்.

தண்டியலங்காரத்தில் இதற்குக் கூறிய இலக்கணம் வருமாறு:

'கருதியது கிளவா தப்பொரு டோன்றப்
பிறிதொன் றுரைப்பது பரியா யம்மே.'

இதற்கு அந்நூல் உரையாசிரியர் கூறிய உரையாவது, 'தான் கருதியதனைக் கூறாது, அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைக் கூறுவது பரியாயம் என்னும் அலங்காரமாம்,' என்பது.

பக்கம் - 258. 'மின்னிகரா மாதே' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதன்கண் 'மாதவிக் கீழ்' என்றிருப்பது, தண்டியில் 'மாதவிக்கண்' என்றும், இதன்கண் 'தன்னிகராச் செந்தீ' என்றிருப்பது, தண்டியில் 'தன்னிகராஞ் செந்தீ' என்றும் இருக்கின்றன.

மின்னினை ஒப்பாகும் மாதே, மணத்தினையுடைய சந்தன மரத்தைத் தழுவி உனக்கு ஒப்பாயிருக்கின்ற இம்மாதவிக் கொடியின்கீழ் நிற்பாயாக; உனக்குத் தம்மை ஒப்பாயிருக்கும் சிவந்த தீயின் ஒளி தோன்ற மலரும் சிவந்த காந்தள் மலர்களுடன் குவளை மலர்களையும் கொண்டு வருவேன்.

'தன்னிகராச் செந்தீ' என்னும் பாடம்கொள்ளின், 'தன்னை ஒப்பாகாத செந்தீ' என்று பொருள் கொள்க. இது சிறந்த பொருளன்மையின், இப்பாடஞ் சிறந்ததன்று.

இது குறியிடத்துத் தலைவியை விட்டுச் செல்லுந் தோழி கூறியது. இனித் தான் அங்கிருப்பது அவர்களின் இன்ப நுகர்ச்சிக்கு இடையூறுகும் என்று கருதிய தோழி, அது தோன்றாமல் பிறிதொன்று தோன்றக் கூறினமை காண்க.

சமாயிதம்

பக்கம்-259. 'வான்குணத் தெம்பிக்கு' என்னுஞ் செய்யுள். இச்செய்யுள் முன்னே வந்திருக்கின்றது.

தண்டியலங்காரத்தில் இவ்வணிக்குக் காட்டப்பட்ட உதாரணச் செய்யுளையும் ஈண்டு நோக்குக.

உதாரதை அணியின் வகை

இது தண்டியலங்காரத்தில் 'உதாத்த அணி' என்று கூறப் பட்டிருக்கின்றது.

1. செல்வமிகுதி

பக்கம்-259. 'கன்றும் வயவேந்தர்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'வறி யோர்' என்றிருப்பது தண்டியில் 'வறிஞர்' என்றும், இதன்கண் 'சோரி' என்றிருப்பது தண்டியில் 'அம்ம' என்றும் இருக் கின்றன.

கோபிக்கும் வலியினையுடைய அரசர்களுடைய செல்வங் கள் பலவற்றை எப்பொழுதுங் கவர்ந்துகொண்டு வருதலா லும், வறியவர்களின் கூட்டத்தால் எப்பொழுதுங் கவர்ந்து கொள்ளப்படுதலாலும் பகைவர்கள் உடலின் குருதி மிகுந்த கிரணங்களை உடைய வேலை ஏந்திய சோழனுடைய செல்வ மானது சிறிதும் அறிதற்கு அரிதாயிருக்கும் அளவினையுடைய தாகும்.

'அம்ம' என்பதனைப் பாடமாகக் கொள்ளின் 'அம்ம' வியப் பிடைச் சொல் என்க. இதிற் செல்வமிகுதி கூறப்பட்டது.

2. உள்ளமிகுதி

பக்கம்-259. 'மண்ணகன்று தன்கிளையும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'தன் கிளையு நீங்கி வனமடைந்து' என்றிருப்பது, தண்டியில் 'தன் கிளையினீங்கி வனம்புகுந்து' என்றும், இதன்கண் 'தவமுய லும் பார்த்தனுர்-விண்ணிறந்து' என்றிருப்பது, 'தவத்தசைந்த பார்த்தன்ரு-னெண்ணிறந்து' என்றும் இருக்கின்றன.

தன்னரசாட்சியைக் கைவிட்டுத் தன் சுற்றத்தவரினின்று நீங்கிக் காட்டிற்சென்று (தான் செய்த) தவத்திஞற் சோர்வினை யுற்ற பார்த்தனுனவன், தன் கோதண்டத்தையே துணையாகக் கொண்டு, மேன்மையாகிய விண்ணவர்க்குக் கோமானுகிய இந்திரன் நடுங்கும்படியான கொடிய அசுரர்களின் குலத்தை அழித்தான்.

ஈண்டு 'வெய்யோர்' என்றது நிவாதகவசர், காலகேயர் என்பவர்களை. உள்ள மிகுதி-ஊக்கம். இதில் உள்ள மிகுதி கூறப்பட்டது.

அவநுதி அணியின் வகை

இதனை 'ஒழிப்பணி' என்றுங் கூறுப.

இதன் இலக்கணமாவது, சிறப்பினுலும், பொருளினுலும், குணத்திஞலும் ஒன்றன் உண்மைத் தன்மையை மறுத்து வேருெரு தன்மையை அதன்கண் ஏற்றிக் கூறுவதாகும்.

1. சிறப்பவநுதி

பக்கம்-259. 'நறைகமழ்தார் வேட்டார்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'நல நீத்து நாணும்' என்றிருப்பது, தண்டியில் 'நலனணியு நாணும்' என்றிருக்கின்றது.

வெவ்விதாகிய கோபத்தினைக்கொண்ட மேன்மையாகிய யானைச் சேனை உடைய இவ்வேந்தனுனவன், தன் நல்ல மணம் வீசும் மாலையை விரும்பிய மாதர்களின் அழகும் அணியும் நாணமும் மன உறுதியும் தம் நிலையிற்றளராதபடி தாங்கும் அறநெறியினுற் சூழப்பட்ட செங்கோலை உடையன் அல்லன் ; கொடுங்கோலை உடையவன்.

இதன்கண் சிறப்பாவது, 'செங்கோன்மையை உடையனு கிய தன்மை ; வேந்தனிடத்து உள்ள அத்தன்மையை மறுத்துக் கொடுங்கோன்மையுடையனுதலாகிய வேருெரு தன்மையை அவன்கண் ஏற்றிக் கூறப்பட்டமை காண்க.

2. பொருளவநுதி

பக்கம்-260. 'நிலனும் விசும்பாம்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'நிமிர் புனலாம்' என்றிருப்பது, தண்டியில் 'நிமிர்கானீர்' என்றும், இதன்கண் 'ஒருவனுயிர்க்குயிராம்' என்றிருப்பது, தண்டியில் 'ஒருவனிய மானனுமாம்' என்றும் இருக்கின்றன.

மலர்ந்த கொன்றை மலர்களினுலாகிய ஒளியினையும் நறு நாற்றத்தினையும் உடையவனும் ஏகனுமாகிய சிவபெருமான் மண்ணும்; ஆகாயமாம்; மிக்க காற்றும், நீரும், தீயும், வானின்கண் உறையும் பரவிய கதிர்களை உடைய சூரியனும் சந்திரனுமாம்; அன்றியும், ஆன்மாவும் ஆம்; அளவற்றனவா கிய எல்லாப் பொருள்களுமாம்.

இதில் சிவபெருமானுகிய பொருளின்கண் ஏகனுயிருக்குந் தன்மையை மறுத்துப் பல பொருளாம் தன்மையை ஏற்றிக் கூறப்பட்டமை காண்க.

3. குண அவநுதி

பக்கம்-260. 'மனுப்புவிமேல் வாழ' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

மாந்தர்கள் பூமியின்கண் இனிது வாழும் விதம் வேதங் களை வளர்க்கும் ஆத்திப் பூக்களால் ஆகிய குளிர்ச்சியாகிய மாலையினை அணிந்த மன்னர் மன்னனுகிய எம்முடைய சோழ அரசனது ஒப்பற்ற குடையானது தன்னை வணங்கிய மாதர்க் குக் குளிர்ச்சியாகிய நிழலை உடையது அன்று; மிக்க வெப்பமா கிய நிழலை உடையது ஆகும்.

'வெம்மை நிழற்றுய் மிகும்,' என்றதை 'மிக்க வெம்மை நிழற்றும்' என விகுதி பிரித்துக் கூட்டுக.

இதன்கண் 'தண்மை நிழற்று' என்னும் குணத்தின் உண் மையை மறுத்து, 'வெம்மை நிழற்று' என்னும் பிறிதொரு குணம் சோழன் குடையின்மேல் ஏற்றிக் கூறப்பட்டமை காண்க.

4. சிலேடை அவநுதி

பக்கம் - 260. 'நறவேந்து கோதை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

தேனினைக் கொண்ட மாலையை அணிந்த மாதினுடைய அழகைக் கவர்ந்துகொண்டு, மீட்டும் அவட்கு அதனைக் கொடுத் தருளாத கொடுமையினை உடைய அரசன் (பிறரை) வஞ்சி யாதவன் அல்லன் (வஞ்சி என்னும் ஊரை உடைய சோழன் அல்லன்); அரசாட்சித் துறையில் நீங்காமல் நின்று ஐவகை யினை உடையதாகிய பெரிய தமிழ் நாட்டின் குடிகளைக் காக் குந் தொழிலைக் கொண்டு நல்லொழுக்கமுடையவனுயிருக்கும் பாண்டிய வேந்தன் ஆவன்.

இதில் சோழனை 'வஞ்சியானல்லன்' என உண்மையை மறுத்து, 'வியன்றமிழ் நாடைந்தின்குலங்காவல் கொண்டொழு குங் கோ' என்றது அவநுதி; 'வஞ்சியான் அல்லன்' என்றது 'பிறரை வஞ்சிக்காதவன் அல்லன்,' எனவும், 'வஞ்சியூரை உடைய சோழன் அல்லன்,' எனவும் பொருள் படுதலாற் சிலேடை; ஆதலின், இது 'சிலேடை அவநுதி' ஆயிற்று.

சிலேடை அணியின் வகை

1. ஒரு வினைச் சிலேடை

பக்கம் - 260. 'அம்பொற் பணைமுகத்து' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'நாண் மதியுங் கங்கையு நண்ணி' என்றிருப்பது, தண்டியிலே 'வானதியு நாண்மதியு நண்ண' என்றிருக்கின்றது.

இது விநாயகருக்கும் மலைக்குஞ் சிலேடை.

விநாயகர்க்குச் செல்லுங்கால்: 'அழகிய பொலிவு பொருந் திய பருத்த முகத்தில் திண்ணிய தந்தத்தை உடைய அழகிய யானையானது, கச்சோடு கட்டப்பட்டுள்ள பட்டம் விரிந்து விளங்க, முடிமீது புதுமையினை உடைய (யாவராலும்) விரும் பப்படும் பெரிய (கங்கையாகிய) நதியும் பிறைச் சந்திரனும்

(தன்பாற்) பொருந்தியிருக்க வந்து தவம் செய்கின்றவர்களுக்கு வேண்டிய இன்பங் கொடுக்கும் ' எனவும்

மலைக்குச் செல்லுங்கால் : 'அழகிய பொன்னோடு மூங்கில்களையும் உடைய பக்கங்களையும் திண்ணிய சிகரங்களையும் உடைய அழகிய மலையானது மணம் கமழும் ஓடைகளில் மலர்கள் பூத்து விளங்கப் புதுமையினையுடையதாய் (யாவராலும்) விரும்பப்படும் கங்கையும் பிறைச் சந்திரனும் (தனது முடியில்) பொருந்தும்படி (உயர்ந்து தன்கண் இருந்து) தவஞ் செய்பவர்களுக்கு (பலவகைப் பொருள்களினால்) இன்பங் கொடுக்கும்,' எனவும் பொருள் கொள்க.

விநாயகருக்குச் செல்லுங்கால், 'அம்பொற்பணை' என்றதை 'அம் பொற்பு அணை' எனவும், மலைக்குச் செல்லுங்கால், 'அம் பொன் பணை' எனவும் பிரிக்க. இதில் 'தரும்' என ஒரு வினை வந்தமையால், இஃது ஒரு வினைச் சிலேடையாயிற்று.

2. பல வினைச் சிலேடை

பக்கம் - 261. 'தவிர்வில் மதுவுண்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதில் 'தவிர்வில்' என்றிருப்பது, தண்டியில் ' தவிரா ' என்றிருக்கின்றது.

இது குயிலின் குரலுக்கும், பெண்களின் கண்களுக்கும் சிலேடை.

குயில்களின் குரல்களுக்குச் செல்லுங்கால் : ' குயிலினது இசையும் இடைவிடாமல் மதுவை உண்ணுங் களிப்பு வளரும்படி மிகுந்து, செவியினுட் புகுந்து கோடாத நீர்மையைத் தாங்கித் தங்கள் காதலியரை அடையாத ஆடவரின் இனிய உயிர்களை வருத்துகின்றன,' எனவும்,

பெண்களின் கண்களுக்குச் செல்லுங்கால்: ' தங்கள் தலைவர்களுக்கு இனிய உயிராய் விளங்கும் நுண்ணிடையார் கண்களும் விடமுடியாத கள்ளை அருந்திய களிப்பு மேன் மேலும் வளர நீண்டு செவியளவுஞ் சென்று, செந்நிறத்தினையும் குளிர்ச்சியையுந் தாங்கி, புணர்ந்த தம் தலைவர்களின் இனிய உயிரை வருத்துகின்றன,' எனவும் பொருள் கொள்க.

இதில் ' மேவலார் ' என்பதற்குப் பிரிந்தார் எனவும், புணர்ந்தார் எனவும் இரு பொருள் கொள்க.

இதன்கண் 'நீண்டு, மருவி, தாங்கி, ஈர்கின்றன' எனப் பல வினைகள் வந்தமையின், இது பலவினைச் சிலேடையாயிற்று.

3. முரண் வினைச் சிலேடை

பக்கம்-261. 'மாலை மருவி' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'வேலை மேல்' என்றிருப்பது, தண்டியில் 'வேலைமிசை' என்றிருக்கின்றது.

இது புணர்ந்தார்க்கும் பிரிந்தார்க்குஞ் சிலேடை.

'மாலை...கடிய' என்பது, புணர்ந்தார்மேற் செல்லுங்கால்: 'மாலைக்காலம் உண்டாகச் சந்திரன் உலாவச் சிறந்த கூட்டத்தினைச் செய்யுங் காலத்துத் தந்துணைவர்களோடு கூடியிருப்பவர்கள் விளங்கும்படி' என்னும் பொருளதாம் எனவும்,

பிரிந்தார்மேற் செல்லுங்கால் : 'மயக்கத்தைக் கொண்டு, கருத்து மாறுபட மிக்க மணங் கமழுங் காலத்துத் தந்துணைவர்களைப் பிரிந்தவர்கள் அஞ்சும்படி' என்னும் பொருளதாம் எனவும் அறிக. 'வேலைமிசை.........புள்'—கடல் கரையின்மீது சென்று அடங்காது ஆரவாரஞ் செய்யும்; பறவைகள் மேன்மையாகிய சோலைகளுட் சென்று ஒலியடங்கியிருக்கும்.

இஃது இருதிறத்தார்க்கும் பொது. இதன்கண் 'மேவலார்' என்னுஞ் சொல் 'புணர்ந்தார்' எனவும், 'பிரிந்தார்' எனவும் ஒன்றுக்கொன்று முரணுன இருபொருளைத் தந்து நிற்றலின், இது முரண் வினைச் சிலேடையாயிற்று.

இதில் 'ஆர்கலி அடங்காது ஆர்க்கும்,' என்பதும், 'ஆர்கலி அடங்கும்,' என்பதும் ஒன்றுக்கொன்று முரண் வினையாயிருத்தல் காண்க. இவற்றில் 'ஆர்கலி' என்பதற்குக் 'கடல்' எனவும், 'மிக்க ஒலி' எனவும் பொருள்கொள்க. இச்சிலேடைப் பொருள் 'அடங்காது ஆர்க்கும், அடங்கும்' என ஒன்றுக்கொன்று முரணுன வினைகளுக்கு இடனுய் நிற்றலையுணர்க.

4. நியமச் சிலேடை

பக்கம்-261. 'வெண்ணீர்மை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண்

'மென்கோ லியாழே' என்றிருப்பது, தண்டியில் 'மென் கோலி யாழே' என்றும், இதன்கண் 'நிலவும்' என்றிருப்பது, தண்டியில் 'நிலாவும்' என்றும் இருக்கின்றன.

(வெற்றி) வேலை ஏந்திய வேந்தனே, நின் செங்கோல் உலாவும் நிலத்தின்கண் வெண்மையாகிய நிறத்தை உடையன வாயிருப்பன முத்துக்களே; வாசனையையுடையனவாய், தேன்சோர நிற்பன அழகிய சோலைகளே; (இன்னிசையாகிய) ஒலியைச் செய்வன பண் பாடுதற்குரிய நீர்மையையும், மென் மையையும், அழகையும் உடைய யாழே. (மக்களிடம் இவை இல்லை.)

எனவே, அறிவில்லாதவர்களும், வறுமையினுற் கண்ணீர் சொரிகின்றவர்களும், துன்பத்தினுல் புலம்புகின்றவர்களும் அந் நிலத்தில் இல்லை என்பது பெறப்பட்டது.

'மென்கோலியாழ்' என்பதற்கு 'மென்மையாகிய நரம்பினை உடைய யாழ்' எனப் பொருள் கொள்க. கோல் - யாழ் நரம்பு.

'வெண்ணீர்மை' என்பதற்கு 'வெண்ணிறம்' எனவும், 'அறி யாமை' எனவும், 'கண்ணீர்மை' என்பதற்குக் 'கண்ணீர்' என வும், 'தேன் ஆகிய நீர்' எனவும், 'இரங்குதல்' என்பதற்கு 'ஒலித் தல்' எனவும் 'புலம்புதல்' எனவும் சிலேடைப்பொருள் கொள்க.

இங்ஙனம் இரண்டு பொருளுக்குப் பொதுவாகிய தன்மைகளை ஒவ்வொரு பொருளினிடத்திலேயே இருப்பன வாக நிச்சயித்துக் கூறினமையின், இது நியமச்சிலேடை யாயிற்று. நியமித்தல்-நிச்சயித்தல்.

5. அநியமச் சிலேடை

இது தண்டியலங்காரத்தில் 'நியம விலக்குச் சிலேடை' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பக்கம்-261. 'சிறைபயில்வ புட்குலமே' என்னுஞ் செய் யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'சிறை பயில்வ' என்றிருப்பது, தண்டியில் 'சிறைபடுவ' என்றிருக் கின்றது.

அரசனே, (நீ) காத்தளிக்கும் நிலவரைப்பிலே சிறையை யுடையனவாயிருப்பன பறவைகளின் கூட்டமே. இனிய நீர்

நிலைகளும் சிறையை உடையனவே. கொடிகளை உடையன குன்றுகளைப் போன்றனவாகிய மாளிகைகளே; அவை அல்லாமலும், மணங்கமழும் மலர்களையுடைய சோலைகளும் கொடிகளையுடையனவாயிருக்கின்றன.

எனவே, இவன் காக்கின்ற நிலவரைப்பின்கண் சிறைபடுவாரும், கொடியவர்களும் இல்லை என்பது பெறப்பட்டது.

'சிறை' என்பதற்குச் 'சிறகு' எனவும், 'சிறைச்சாலை' எனவும்; 'கொடி' என்பதற்குப் 'பதாகை' எனவும், 'வல்லி' எனவும் சிலேடைப் பொருள் கொள்க. இங்ஙனமாகிய இவற்றுள் ஒவ்வொன்றையும் ஒரு பொருளின்கண் நியமித்து அது மற்றொன்றின்கண்ணும் உண்டு என நியமத்தை விலக்குதலின், இஃது அநியமச்சிலேடையாயிற்று.

6. விரோதச் சிலேடை

பக்கம்-261. 'விச்சா தரனேனும்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்திலும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

விஞ்சையர் ஆகாயத்தின்கண் மேவுவார்; சோழனாகிய எங்கோன் கேட்டின்கண் செல்லான்; திருமால் மாயம் உடையவனாதலால், மாயன் எனப்படுவன்; சோழன் அம்மாயம் இல்லாதவனாதலால், மாயன் எனப்பட்டான்; நாடோறும் நிறைந்த வெண்மை எய்துங் கலைகளை உடையனாகிய சந்திரன் களங்கம் உடையவன்; சோழன் நாடோறும் உயர்வாகிய கலை நூற்களால் நிறையப் பெற்றவனேனும் அகளங்கன் எனப்பட்டான்; முக்கண்ணன் அந்த வெள்ளி மலையை உடையவனாதலால், நகன் எனப்பட்டான்; சோழன் தீவினை இல்லாதவனாதலால் அநகன் எனப்பட்டான்.

'விச்சாதரன்' என்பதற்கு 'விஞ்சையர் என்னுந் தேவசாதியான்' எனவும், 'வித்தையை உடைய சோழன்' எனவும், 'அந்தரம்' என்பதற்கு 'ஆகாயம்' எனவும், 'கேடு' எனவும், 'அச்சுதன்' என்பதற்குத் 'திருமால்' எனவும், 'கேடு இல்லாதவன்' எனவும், 'நிறைவான் கலையான்' என்பதற்கு 'நிறைந்த வெள்ளிய கலைகளையுடைய சந்திரன்' எனவும், 'உயர்வாகிய கல்வி நிறையப்பெற்ற சோழன்' எனவும், 'களங்கம்' என்பதற்கு 'மாசு' எனவும், 'பாவம்' எனவும், 'நீதியிறையான்' என்பதற்கு 'முக்கண்ணன்' எனவும், 'நீதிநெறி

அரசனாகிய சோழன்' எனவும், 'அநகன்' என்பதற்கு 'மலை இல்லாதவன்' எனவும், 'பாவம் இல்லாதவன்' எனவும் பொருள் கொள்க. முக்கண்ணன் மலையை உடையவனாதலின் 'நகன்' எனப்பட்டான் எனக்கொள்க.

முன்னே சிலேடித்த 'விச்சாதரன்' முதலியவற்றிற்குப் பின்னே வந்த 'அந்தரத்து மேவான்' என்பது முதலியவை விரோதப்பட்டுச் சிலேடித்து நிற்றலின் இது விரோதச் சிலேடை ஆயிற்று.

7. அவிரோதச் சிலேடை

பக்கம் 262. 'சோதி யிரவி' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஒளியை உடைய சூரியன் தன் கதிர்களினால் இருளை நீக்குவான்; புகழையுடையவனாகிய இரவி குலத்தில் தோன்றிய இரவி என்னும் பெயரை உடைய சோழன் தன் கைகளாலே பிறருடைய வறுமையை ஒழித்து அவர்களுடைய இரத்தலாகிய தொழிலை நீக்குவான்; உமாதேவியை இடப்பாகத்திலே உடையான், மன்மதனை மாறுக்கி அழிப்பான்; மிக்க திட்பமுடையவனாகிய சோழன், அரசர்களுடைய வலிமை மாறுகொண்டு கெடுப்பான்; ஆகாயத்தில் தோன்றும் குற்றமற்ற சந்திரன் உதித்துக் குமுதங்களை மலர்விக்கும்; (சோழன்) மேன்மையாகிய குற்றமற்ற அறிவு தோன்றப் பெற்றுப் பூமியில் உள்ளார்க்கு மகிழ்ச்சியைக் கொடுப்பான்; 'தனதன்' என்னும் பெயரை உடையவனான குபேரன் இருநிதிக்குத் தலைவனாவான்; சோழன் பிறருக்குப் பொருளை அளித்து மிக்க பொருளுக்கு முதல்வன் எனப்படுவான்.

சோதி என்பதற்கு ஒளி எனவும், புகழ் எனவும்; இரவி என்பதற்குச் சூரியன் எனவும், சோழன் எனவும்; கரம் என்பதற்குக் கதிர்கள் எனவும், கைகள் எனவும்; இரவு என்பதற்கு இருள் எனவும், இரத்தல் எனவும்; மாதிடத்தான் என்பதற்கு முக்கண்ணன் எனவும், மிக்க திட்பத்தை உடைய சோழன் எனவும்; மன்மதன் என்பதற்குக் காமன் எனவும், மன்னர்களில் வலிமையுடையான் எனவும்; மதி என்பதற்குச் சந்திரன் எனவும், அறிவு எனவும்; குமுதம் என்பதற்கு ஆம்பல் எனவும்,

பூமியில் உள்ளவர்களின் மகிழ்ச்சி எனவும்; தனதன் என்பதற்குக் குபேரன் எனவும், பிறர்க்குச் செல்வத்தைக் கொடுக்கும் சோழன் எனவும்; இருநிதி என்பதற்குச் சங்கநிதி பதுமநிதி என்னும் இரண்டு நிதிகள் எனவும்; மிக்க செல்வம் எனவும் பொருள் கொள்க.

முன்னே சிலேடித்த இரவி முதலியவற்றிற்குப் பின்னே வந்த கரத்தான் முதலியவை விரோதப்படாமற் சிலேடித்து நிற்றலின், இஃது அவிரோதச் சிலேடை ஆயிற்று.

8. செம்மொழிச் சிலேடை

பக்கம்-262. 'செங்கரங்க ளாலிரவு' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதன்கண் 'செங்கரங்க ளாலிரவு' என்றிருப்பது, தண்டியில் 'செங்கரங்க ளானிரவு' என்றிருக்கின்றது.

இது சூரியனுக்கும் சோழனுக்குஞ் சிலேடை.

சூரியன்மேற் செல்லுங்கால்: 'சிவந்த கதிர்களினுல் இருளை ஒழிக்கும் வல்லமை கொண்டு செந்தாமரை மலர்கள் காதலிக்கச் செய்யும் அழகு பொருந்தியிருக்க, மேம்பட்டு விளங்கும் தோற்றத்தையும், ஒற்றைச் சக்கரத்தை உடைய தேரையும் உடைய சூரியன் கடலாற்சூழப்பட்ட பூமியின்மீது வானமாகிய வழியிற் செல்வன்,' எனவும்;

சோழன்மேற் செல்லுங்கால்: 'சிவந்த கைகளால் (வறுமையுடையாரது) இரத்தற்றொழிலை நீக்கும் வகையை (ஈகையாற்) செய்து, செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் நல் கண்ணோக்கம் (தன்பால்) மிக்கு விளங்குதலின் மிக்க பொருள் வருவாயோடு தன் ஒப்பற்ற ஆஞ்ஞா சக்கரம் உலக முழுதுஞ் செலுத்தும் யாவராலும் விரும்பப்படும் சோழன், கடலாற் சூழப்பட்ட உலகத்தில் உயர்ந்த அறவழியில் ஒழுகுவன்,' எனவும் பொருள் கொள்க.

சூரியன் மேற்செல்லுங்கால்: கரம் - கதிர், இரவு - இருள், பங்கயம் - தாமரை மலர், மாதர் - காதல், நலம் - அழகு, பயிலல் - பொருந்தியிருத்தல், பொங்குதல் - மேம்படுதல், உதயம் - தோற்றம், ஓராழி - தேரின் ஒற்றைச் சக்கரம்,

வெய்யோன் - சூரியன், உயர்ந்த நெறி - வானமாகிய வழி எனவும்;

சோழன்மேற் செல்லுங்கால்: கரம்-கை, இரவு - இரத்தற்றொழில், நீக்கல்-தீர்த்தல், பங்கயம் மாதர்-திருமகள், நலம்-கண்ணோக்கம், பயிலல் - மிக்கு விளங்கல், பொங்கு-மிக்க, உதயம்-பொருள் வருவாய், ஓராழி - ஒப்பற்ற ஆஞ்ஞா சக்கரம், வெய்யோன் - யாவராலும் விரும்பப்படுஞ் சோழன், உயர்ந்த நெறி - உயர்ந்த அறவழி எனவும் பொருள் கொள்க.

இதிற் சொற்கள் பிரியாமல் நின்று சிலேடைப் பொருள் தருதலின் இது செம்மொழிச் சிலேடையாயிற்று.

9. பிரிமொழிச் சிலேடை

பக்கம் - 262. 'தள்ளா விடத்தேர்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இது சோழன் நண்பருடைய நாட்டிற்கும் அவன் பகைவருடைய நாட்டிற்கும் சிலேடை.

சோழனைப் பகையாதார் நாட்டின்மேற் செல்லுங்கால்: 'எங்கோமானாகிய சோழனுடைய திருவுள்ளஞ் சிறக்குந் தொழில் புரிந்தவர்களுடைய நாடு, (அழகு) கெடாத நிலங்களில் உண்டாகிய உழவெருது பெரிய தாமரை மலரைப் பொருந்தவும், இகழப்படாத நெற்குவியலை உழவர்கள் திரட்டவும், அத்தாமரை மலர் தன்னுள் உண்டாகிய தேனைப் பொழியும் மேன்மையை உடைத்து,' எனவும்;

சோழனுடைய பகைவர் நாட்டின்மேற் செல்லுங்கால்: 'எங்கோனாகிய சோழன் திருவுள்ளம் வேறுபடுந் தொழிலைச் செய்யும் அரசர்களின் நாடு, அசையாத விடத்தேர் என்னும் மரமும் மலைகளைத் தாவும் மரையும் பொருந்தியிருக்கவும், இகழப்படாத சிங்கப் போத்துக்கள் மிக்க துன்பங்களைப் புரியவும், நல்லோர் உள்ளத்தில் பொருந்திய சிறந்த இடங்கள் அழியுந் தன்மையை உடைத்து,' எனவும் பொருள் கொள்க.

சோழனுடைய நண்பர் நாட்டின்மேற் செல்லுங்கால்: தள்ளா இடம் - (அழகு) கெடாத நிலம், ஏ - உழவெருது, தடந்தாமரை - பெரிய தாமரை மலர் (தடத்தாமரை - தடந்தாமரை என மெலித்தலாயிற்று), அடைதல் - பொருந்

துதல், எள்ளாத - இகழப்படாத, அரி - நெற்றுட்குவியல், மானிடர் - உழவர், மிகுதல் - திரட்டல், உள் வாழ் தேம் - உள்ளே உண்டாகிய தேன், சிந்தல் - பொழிதல், தகைமை - மேன்மை, நந்துந்தொழில் - சிறக்குந் தொழில்.

சோழனைப் பகைத்தார் நாட்டின்மேற் செல்லுங்கால்: தள்ளா - அசையாத, விடத்தேர் - ஒருமரம், தடம் - மலை, தாமரை - தாவுமரை, அடைதல் - பொருந்தியிருத்தல், எள்ளா - இகழப்படாத, அரிமான் - ஆண் சிங்கம், இடர் மிகுத்தல் - துன்பமிகச் செய்தல், உள் வாழ் தேம் - (நல்லோர்) மனத்திற் பொருந்திய (சிறந்த) இடங்கள், நந்துந் தொழில் - மாறுபடுந் தொழில், சிந்தல் - அழிதல், தகைமை - தன்மை.

இதில் 'தள்ளாவிடத்தேர்' என்பது, 'தள்ளா இடத்து ஏர்' எனவும், 'தள்ளா விடத்தேர்' எனவும்;

'தாமரை' என்பது 'தாமரை மலர்' எனவும், 'தா (தாவும்) மரை' எனவும்;

'அரி மானிடர்' என்பது 'அரி மானிடர்' எனவும், 'அரிமான் இடர்' எனவும் வெவ்வேறு வகையாகப் பிரிந்து சிலேடைப் பொருள் தருதலின் இது பிரிமொழிச் சிலேடையாயிற்று.

சிறப்பு அணியின் வகை

இது தண்டியலங்காரத்தில் 'விசேட அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

தண்டியலங்காரத்தில் இவ்வணிக்குக் கூறப்பட்ட இலக்கணமாவது :

'குணந்தொழின் முதலிய குறைபடு தன்மையின்,
மேம்பட வொருபொருள் விளம்புதல் விசேடம்.'

என்பது. இதற்கு அதன் உரையாசிரியர் கூறிய உரை வருமாறு :

குணமும், தொழிலும், சாதியும், பொருளும், உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக ஒருபொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேடம் என்னும் அலங்காரமாம்.

1. குணக்குறை விசேடம்

பக்கம் - 263. 'கோட்டந் திருப்புருவம்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஈகைக் குணத்தினை உடைய சோழனுடைய அழகிய புருவங்கள் கோட்டத்தை (வளைவை) அடையவில்லை; அப் பகைவர்களுடைய செங்கோல் கோட்டத்தை அடைந்தன; (கெட்டுப்போயின), சோழனுடைய கண்கள் சிவக்கவில்லை; பகைவர்களுடைய கலிங்கங்கள் சிவந்த நெருப்பு எரித்தலால் சிவந்தன.

'சோழன் நன்றாகக் கோபங்கொள்ளாத முன்பே அவன் பகைவரொடு அவர்கள் நாடுகள் நிலை குலைந்தன,' என்பது கருத்து.

இதில் சோழன் நன்றாகக் கோபம் கொள்ளாமையாகிய குணக் குறைவின் காரணமாக அவனுடைய செயலின் மேன்மை விளங்குதலின், இது குணக்குறை விசேடமாயிற்று.

இந்நூலின் உரையாசிரியர், 'இது குணத்திலே குறைவு கூறிக் காரியத்திலே மேம்பாடு தோன்றச் சொன்னமையால், குணக் குறை விசேடம்,' என்றதையும் ஈண்டு நோக்குக.

'இங்கே சோழனுடைய கோபத்தினைக் காட்டும் புருவங் கோடுதல், கண் சிவத்தல் முதலிய குணங்களின் குறைவுகாரணமாக அவன் செயற்கு விசேடங் கூறியவாறறிக,'என்றார் திரு.அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள். (அவர் புதுக்கிப் பதிப்பித்த தண்டியலங்காரத்தை நோக்குக.)

2. தொழிற்குறை விசேடம்

பக்கம் - 263. 'ஏங்கா முகில்பொழியா' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன்கண் 'மாறெதிர்ந்த தெவ்வர்' என்றிருப்பது, தண்டியில் 'மாறெதிர்ந்தார்க் கந்நாள்' என்றிருக்கின்றது.

மேகம் இடித்து மழை பொழியாத நாளினும் நீர் தேங்கிச் செல்லும் அழகிய காவிரியாற்றையுடைய நாடனுடைய போருக்குரிய மதத்தை உடைய யானைகளின் கால்களில் வீரக் கழல்கள் கழலாமல் வளைத்திடப்பட்டன. உடனே மாறுபட்ட

மன்னர்களின் கால்களாகிய தாமரைகள் தளைப்பட்டன. (கால்கள் விலங்கிடப்பட்டன.)

இதில் யானைகள் கால்களில் வீரக் கழலணிந்து போர் செய்தலாகிய தொழில்களில் கால்களில் வீரக்கழல் அணிதலாகிய தொழிலை மாத்திரம் கூறிப் போர் புரிதலாகிய தொழிலைக் கூருமையாகிய தொழிற்குறைவினுற் காரியத்தில் மேம்பாடு தோன்றச் சொன்னமையால், இது தொழிற்குறை விசேடமாயிற்று.

3. சாதிக்குறை விசேடம்

பக்கம் - 263. 'மேய நிரைபுரந்து' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதில் 'மாறேற்றமார்' என்றிருப்பதை '**மாறேற்றமர்**' எனத் திருத்திக்கொள்க.

பொருந்திய பசுக்களை மேய்த்து வெண்ணெயை எடுத்து உண்ட ஆயராகிய கண்ணபிரானுர், (விண்ணவர்க்கு) மாருக நின்று எதிர்த்துப் போர் செய்தார்; செய்யவே, விண்மேலுள்ள தேவர்களின் அரசனுகிய இந்திரனும்,தேவர்களும் தூய்மையை உடைய மேன்மையாகிய பாரிசாதத் தருவையும் பின்புறத்தையுங் கொடுத்துத் தோற்ருர்கள்.

இதில் 'ஆயனுர்' என்றது சாதியின்கண் குறைவு. 'கண்ணபிரானுர் சாதியில் இடையராயிருந்தும் தேவசாதியினரை வென்ருர்' எனச் சாதியில் குறைவு கூறி, அக்குறைவின் காரணத்தால் காரியத்தில் மேம்பாடு தோன்றச் சொன்னமையால், இது சாதிக்குறை விசேடமாயிற்று.

4. பொருட்குறை விசேடம்

பக்கம் - 263. 'தொல்லை மறைதேர்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதன்கண் 'துணைவன்பா லாண்டுவரை' என்றிருப்பது, தண்டியில் 'துணைவன்பா லியாண்டுவரை' என்றும், இதன்கண் 'கச்சியிடம்' என்றிருப்பது, தண்டியில் 'காஞ்சியிடை' என்றுமிருக்கின்றன.

மிக்க ஒலியினைச் செய்யும் நீர்வளத்தினை உடைய காஞ்சியின்கண் மெல்லிய தன்மையை உடைய ஒரு மாது (அம்பிகை) பழமையாகிய வேதங்களை அறிந்த தன் துணைவனிடத்து இரு நாழி நெல்லைப் பெற்று ஓராண்டின் எல்லை அளவும் (அதனைக் கொண்டே முப்பத்திரண்டு தருமங்களையுஞ் செய்து) உயர்ந்த உலகில் வாழும் உயிர்களை எல்லாம் உண்பிப்பாளாயினாள்.

'இரு நாழிகை நெல்' எனப் பொருளின்கண் குறைவு கூறி அக்குறைவின் காரணத்தால் காரியத்தில் மேம்பாடு தோன்றச் சொன்னமையால், இது பொருட்குறை விசேடமாயிற்று.

5. உறுப்புக் குறை விசேடம்

பக்கம் - 263. 'யானை யிரதம்' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(மன்மதனுக்கு) யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நால்வகைச் சேனைகள் இல்லை ; அவன் தானும் உடம்பு இல்லாதவன் ; வில்லோ, (வன்மை இல்லாத) கரும்பாகும் ; (அவ்வாறிருந்தும்) தேன் நிறைந்த ஐந்து மலர்களாலே மூன்று உலகங்களையும் (ஒருங்கே) வென்று தன் கீழ்ப் படுத்தினான்.

இதில், போருக்குரிய உறுப்புக்களிற் குறைவு கூறி, அக்குறைவின் காரணத்தால் காரியத்தில் மேம்பாடு தோன்றச் சொன்னமையால், இஃது உறுப்புக்குறை விசேடமாயிற்று.

உடனிலை அணியின் வகை

இது தண்டியலங்காரத்தில் 'ஒப்புமைக்கூட்ட அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது.

1. புகழுடனிலை

பக்கம்-264. 'பூண்டாங்கு கொங்கை' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதன்கண் 'சான்ற வருங்காஞ்சி வண்பதியும் உண்மையால்' என்றிருப்பது தண்டியில் 'சான்றவரும் காஞ்சி வளம்பதியில் உண்மையால்' என்றிருக்கின்றது.

(உமாதேவியின்) ஆபரணங்களை அணிந்த கொங்கைகள் அழுந்துதலாலே திருமேனி நெகிழ்ந்த (ஏகாம்பரேச்சுவர ராகிய) மலையும், தூண்ட வேண்டாத தெய்வத் தன்மையினை உடைய (விளக்கொளி எம்பெருமானாகிய) சுடர் விளக்கும், பிறர் நாணங் கொள்ளும்படியான ஈகைக் குணமிக்க பெரியோரும் காஞ்சி என்னும் வளப்பமாகிய பதியின்கண் இருத்தலால், இவ்வுலகம் நிலைபெறுகின்றது.

'சான்ற வருங்காஞ்சி வண்பதியும் உண்மையால்' என்னும் பாடத்திற்குப் 'பெரியோரும் வளப்பமாகிய காஞ்சிப்பதியும் இருத்தலால்' எனப் பொருள் கொள்க.

பெரியோரைக் குழை பொருப்பும், சுடர் விளக்குமாகிய உயர்ந்த பொருள்களோடு வைத்து உயர்த்திக் கூறினமையால், இது 'புகழுடனிலை' ஆயிற்று.

2. பழிப்புடனிலை

பக்கம்-264. 'கொள்பொருள் வெஃகி' என்னுஞ் செய்யுள்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுளே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதன்கண் 'உள்ளது' என்றிருப்பது, தண்டியில் 'உள்பொருள்' என்றிருக்கின்றது.

கொள்ளும் பொருளைக் கைப்பற்ற விரும்பிக் குடிகளை வருத்துகின்ற அரசனும், உள்ள உண்மையைச் சொல்லாமல் (வழக்கில்) பொய் சொல்லுகின்ற மனிதரும், ஒருவனுடைய இல்லக்கிழத்தியாயிருந்து அதற்குரிய வரம்பைக் கடப்பவளும் ஆகிய இம்மூவரும் விரைவில் மழையைக் குறைக்குங் கோள்களாவர்.

இதன்கண் எல்லை கடக்கு மாதினைக் 'குடியலைக்கும்' வேந்தன் முதலிய பழிக்கப்படும் பொருள்களோடு வைத்து இழித்துக் கூறினமையின், இது பழிப்புடனிலையாயிற்று.

முரண்

இது தண்டியலங்காரத்தில் 'விரோத அணி' என்று கூறப்பட்டிருக்கின்றது. இது செய்யுள் இயலில் மோனை முதலிய ஐவகைத் தொடைகளில் ஒன்றாகிய முரண்தொடையாகக் கொள்ளப்படும்.

பக்கம்-264. 'சோலை பயிலும்' என்னுஞ் செய்யுளும், 'காலையு மாலையும்' என்னுஞ் செய்யுளும்.

தண்டியலங்காரத்தினும் இவ்வணிக்கு இச்செய்யுட்களே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இரண்டாம் பாட்டில் இதன்கண் 'காட்டும்' என்றிருப்பது, தண்டியில் 'காயும்' என்றிருக்கின்றது.

'சோலை பயிலும்' என்னுஞ் செய்யுள்.

சோலைகளிற் பொருந்திய குயில்கள் இனிய மென்சொற்களைச் சொல்லாமல் சோர்ந்து அடங்கியிருக்க, ஆடுகின்ற மயில்களின் கூட்டங்கள் ஆரவாரஞ் செய்துகொண்டு எழுந்தன; பூமியின் பகுப்புக்கள் எல்லாம் குளிர்ச்சி அடைந்தன; அக்குளிர்ச்சிக்குக் காரணமாகிய மேகங்கள் கறுத்தன; இந்திரகோபம் என்னும் பூச்சிகள் சிவந்தன; துணைவரைப் பிரிந்தாருடைய மேனிகள் வெளுத்தன.

இது கார்கால வருணனை; இதில் 'அடங்க' 'எழுந்த' என்பவை ஒன்றுக்கொன்று முரண்; 'கறுப்பு' 'சிவப்பு' 'வெளுப்பு' என்பவை ஒன்றுக்கொன்று முரண் என்றறிக.

'விளர்த்த' என்பது எதுகை நோக்கி 'விளர்ந்த' என மெலித்தல் ஆயிற்று.

'காலையு மாலையும்' என்னுஞ் செய்யுள்.

சிதம்பரத்திற்சென்று, அழகிய கரிய யானைத் தோலையும் வெண்மையாகிய விபூதியையும், சிவந்த திருமேனியையும், பசிய (கொன்றைப்பூ) மாலையையும் உடைய பெருமானைக் கைகள் கூப்பித் திருவடிகளைத் தொழுதால், முற்பிறப்பிற் செய்த வினைகள் யாவும் கீழ்மைப்படும்.

இதில், 'காலை மாலை' என்பனவும், 'கை கால்' என்பனவும், 'மேல் கீழ்' என்பனவும், 'கருமை, வெண்மை, செம்மை, பசுமை' என்பனவும் முறையே ஒன்றுக்கொன்று முரணுதல் காண்க.

சிலேடை முரண்

பக்கம்-264. 'இனமா னிகல' என்னுஞ் செய்யுள்.

இது மான்களுக்கும் கண்களுக்குஞ் சிலேடை.

மான்களின்மேற் செல்லுங்கால்: 'கூட்டமாகிய மான்கள் நகைக்கும்படி எளிமையை உடையனவாயினும், காட்டிற் பொருந்திய புலிகளை வருந்தச் செய்யும்; அவை காட்டில்

உறையும் யானைகளின் உருவங்கொண்டுஞ் சிங்கங்கள் சிதறி ஓடும்படி கோபிக்கும்' எனவும்;

கண்களின்மேற் செல்லுங்கால்: 'மலர்ந்த மாலையை அணிந்த மென்மையாகிய கூந்தலை உடையாளாகிய இவளுடைய விழிகள் மான்களின் விழிகளை நிகர்த்தற்கு எளிமையையுடையனவாயிருப்பினும், நீரிற்பொருந்திய கமலமலரை அழகழிக்கும்; அழகு நிறைந்த மையினது கருநிறங்கொண்டு செவ்வரிகள் பரந்திருக்கப் பெற்று, ஆடவர்களின் மனத்தை வருத்தும்,' எனவும் பொருள் கொள்க.

இகலுதல் - பகைத்தல், ஒத்தல். இகலவெளிய - இகல + எளிய, வனம்-காடு, அழகு; கரி - யானை, மை; அரி - சிங்கம், செவ்வரி; சிதறல்-சிதறி ஓடுதல், பரவுதல்; காய்தல்-கோபித்தல்.

இதன்கண் 'மான் புலி' என்பனவும், 'யானை சிங்கம்' என்பனவும் ஒன்றுக்கொன்று முரணுதலை அறிக.

நுவலாச் சொல்

இதன் இலக்கணங் கூறும் 172-ஆம் பாட்டின் தலைக்குறிப்பில் 'நுவலா நுவற்சி' என்று தவருகக் குறிக்கப்பட்டுவிட்டது. அதனை 'நுவலாச் சொல்' எனத் திருத்திக்கொள்க. இது **'புகழாப் புகழ்ச்சி'** என்றுங் கூறப்படும்.

பக்கம்-265. 'நினைவரிய பல்புகழார்' என்னுஞ் செய்யுள்.

மனு நூலின்கண் அமைந்த அற வழியில் நடக்கும் பாண்டியனே, நீ இப்போது கூடியுள்ள விசாலமாகிய செந்தாமரை மலரிலே வீற்றிருக்குந் திருமகள், எண்ணுதற்கரிய (வீரம், கொடை, கல்வி முதலிய) பல வகையினுலான புகழ்கள் நிறையப் பெற்ற நின் குடியிற்றோன்றிய முன்னோர்கள் எல்லோரையும் கூடினவளாவள்.

அ, ஏ - அசைகள்.

